# நல்லைக்குமரன்

SL

## மலர் - 2005




255.32
நல்லை
SL/PR

13

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற
சைவசமய விவகாரக்குழு



# நல்லைக் குமரன் மலர் – 13

# 2005

பதிப்பாசிரியர்

நல்லையா விஜயசுந்தரம் B.A(Spe in. Eco)


சைவசமய விவகாரக் குழு

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின்
# சைவசமய விவகாரக் குழு
## உறுப்பினர்கள் - 2005

| | | |
|---|---|---|
| **தலைவர்** | - | **கலாநிதி க. குணராசா**<br>மாநகர ஆணையாளர்,<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| **கௌரவ செயலாளர்** | - | **திரு. இ. இரத்தினசிங்கம்**<br>நிர்வாக உத்தியோகத்தர்,<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| **கௌரவ பொருளாளர்** | - | **திரு. து. சோமசுந்தரம்**<br>சனசமூகநிலைய மேற்பார்வையாளர்,<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| **நிர்வாகசபை உறுப்பினர்கள்** | - | **திரு. நா. இரகுமார்**<br>பொது சுகாதாரப் பரிசோதகர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| | - | **செல்வி. கு. சிவநந்தினி**<br>எழுதுநர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| | - | **திரு. க. முகுந்தன்**<br>எழுதுநர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| | - | **திரு. து. இராஜன்,**<br>பொறுப்பதிகாரி, மோட்டார் வாகனப்பிரிவு,<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| | | **திரு. ஞா. மோகனசுந்தரம்,**<br>வேலை மேற்பார்வையாளர்,<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| **விளம்பர அனுசரணையாளர்** | - | **திரு. த. கனகசபை**<br>இளைப்பாறிய பிரதம காசாளர்,<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| **கௌரவ பதிப்பாசிரியர்** | - | **திரு. ந. விஜயசுந்தரம்**<br>ஆசிரியர்<br>யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி |



# சமர்ப்பணம்

நல்லூர்க் கந்தனின் திருவருளால் யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழு வெளியிடும் "நல்லைக் குமரன் மலர்" 13 ஆவது மலராக முகிழ்ப்படைந்துள்ளது.

நல்லூப் பதியில் உறைகின்ற கந்தப் பெருமானின் பெருமைகளைப் பேசுகின்ற பல்வேறு நூல்கள் வெளிவந்துள்ள போதிலும் நல்லைக்குமரன் மலரின் வெளி வருகை இன்றைய சூழ் நிலையில் எம்மை ஆற்றுப்படுத்தவதாக அமைந்துள்ளது. "உலகமயமாதல்" என்ற பொருளியல் தருகையும், நவீன தொழில் நுட்பம் என்ற விஞ்ஞானப் பெறுகையும் மனித வாழ்வியலில் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன. நாளுக்கு நாள் விஞ்ஞானம் தரும் விந்தை கண்டு உலகு வியப்படைந்துள்ளது.

அதே நேரம் மறுபுறத்தில் மனித இனத்தை ஆட்டிப்படைக்கும் யுத்தமும், இயற்கைப் பேரழிவும் ஏக காலத்தில் நடந்த வண்ணமே உள்ளன. இத்துணை தூரம் விஞ்ஞானம் வளர்ச்சி கண்டுள்ள போதிலும் யுத்த உணர்வுகளையும் இயற்கை அழிவுகளையும் தடுக்க யாருமே இல்லையா? என்ற கேள்விகள் மனித வாழ்வியலில் மேலோங்கி நிற்கின்றன.

விஞ்ஞானத்தின் கண்டு பிடிப்புக்கள் உன்னதமானவை, அவற்றினால் மனித சமூகம் நன்மையடைகிறது என்ற கருத்துக்கள் அனைத்தும் ஏற்புடையவையே. ஆயினும் வியக்க வைக்கும் கண்டுபிடிப்புக்களைத் தரும் விஞ்ஞானத்தினால் மனிதனை உருவாக்க முடியவில்லை. மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால் அதற்கு மெஞ்ஞானம் அவசியமாகும். இந்த உண்மையை உலகம் உணர்ந்துள்ளது.

உலகம் முழுவதிலும் இன்று நடைபெறுகின்ற யுத்த அழிவுகளுக்கும் இயற்கை அனர்த்தங்களுக்கும் அடிப்படைக்காரணம் "இறை நம்பிக்கை" வலுவிழந்து போனமையாகும்.

முதலாளித்துவ சிந்தனைகள் சுயநலத்தின் பிரசவங்களை நடத்திக் கொண்டிருப்பதன் காரணமாகப் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் உயர்ந்த அறம் முடங்கிப் போய்விட்டது. அதேவேளை மேற்குலக நாடுகளில் நாளுக்கு நாள் சமய அமைப்புக்கள் தோற்றம் பெறுவதும் அவை பிற சமயங்களை இழிவுபடுத்துவதுமான நிந்தனைகள் இடம் பெறுவது மனித அழிவின் அடையாளம் எனலாம்.

புற்றீசல் போல தென்கிழக்காசிய நாடுகளை நோக்கி வரும் மதமாற்றப் படைகளால் சைவ சமயத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைச் சைவமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். குறிப்பாகச் சைவசமயம் சார்ந்த இளைஞர்களிடையே சமய உணர்வுகள் ஏற்படவும், ஏற்படுத்தப்படவும் வேண்டும்.

இளம் சமூகம் விழித்துக் கொள்ளும் போதே அவர்கள் சார்ந்த சமயம் உயர்வு பெறுகின்றது. எனினும் துரதிஷ்ட வசமாக சைவத் தமிழ் இளைஞர்கள் தமது சமயக் கருத்துக்களை - தத்தவங்களைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுகின்றனர். சைவசமய சிந்தனைகள், அவை கூறும் தத்துவக் கருத்துக்கள் லௌகீக வாழ்க்கைக்கு உரியவை அல்ல என்ற மாயைக்குள் இளைஞர்கள் மூழ்கியுள்ளனர். சைவ சமயக் கருத்துக்களை உலகம் ஆராயவும், பின்பற்றவும் முற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் அதன் சொந்தக்காரர்கள் ஆகிய நாம் அதனைக் கைவிட்டுச் செல்வது எந்த வகையிலும் நியாயம் ஆகாது.

எனவே சைவ இளைஞர்கள் தாம் சார்ந்த சமயத்தைப் பாதுகாக்கவும், அதன் ஒழுக்கவியல் கோட்பாடுகளைப் பின்பற்றவும் முன்வரவேண்டும். இதற்காக சைவ சமயத்துக்கான இளம் தலைமைத்தவம் உருவாக்கப்படவேண்டும் என்ற கருத்தை நல்லைக் குமரனின் 13 ஆவது மலரின் கருப் பொருளாகத் தந்து நாட்டில் நிரந்தர சமாதானமும் அமைதியும் ஏற்பட நல்லூர்க் கந்தனை வேண்டி, அவன் பாதங்களில் இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.

மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்

**சைவசமய விவகாரக் குழு,**
**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**

**பதிப்பாசிரியர்,**
**நல்லைக் குமரன் மலர்.**

# குமரன் திருவடிக்கு........


சமர்ப்பணம்

ஆசிச்செய்திகள்

வாழ்த்துச்செய்திகள்

**அப்பனே கந்தா ஞான அமிர்தமும் தருவாய் போற்றி** 3–3
அருட்கவி. சீ. விநாசித்தம்பி

**சுனாமி ஏன் அழித்த தெம்மை?** 4–4
விகடகவி. மு. திருநாவுக்கரசு

**கந்தப்பத்து** 5–6
கவிஞர். சீனாச்சனா

**எனக்கு இது வேண்டும்** 7–7
கலைமாமணி. பொன். தெய்வேந்திரன்

**நல்லை புதுப்புகழ்கள்** 8–8
த. ஜெயசீலன்

**நல்லூர் உறை கந்தா பொன்னார் தமிழ் மன்றா** 9–9
சி. இராஜேந்திரா

**நல்லூர்க் கந்தா முத்தந்தா** 10–11
நயினைக்கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை

**விழி துடைக்கும் துணையாகும் வேல்** 12–12
தாட்சாயணி

**ஏழாவது படை வீடு எங்களின் நல்லூர் தான்** 13–13
வ. யோகானந்தசிவம்

**பிறவா வரமதனைப் பெற்றிடுவோம்** 14–15
திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்

**தமிழின் தலைவன்** 16–16
நயினைக் கவிஞர்

**இந்து சமயத்தில் முருக வழிபாடு** 19–22
சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்

**அப்பர் அடிச்சுவட்டைப் பின்பற்றின் ஈழத்தமிழர் ஈடேற்றம் உறுதி** 23–26
மா.க. ஈழவேந்தன்

**ஸ்ரீ முருக விரதங்கள்** 27–30
சமூகஜோதி.கா. கணேசதாசன்

**அருணகிரிநாதர் போற்றும் அழகன்** 31–32
திரு க. அருமைநாயகம்

**ஆலய வழிபாடும் சுயநலமற்ற சமய சமூகத் தொண்டுகளும்** 33–34
சமூகமணி சி.சி. வரதராசா

**தமிழ் மொழியில் வழிபாடு** 35–38
பண்டிதர் சி. பொன்னம்பலவாணர்

**அறம் வெல்லும்** 39–40
செல்வி கு. சிவநந்தினி

**மாநகரசபையின் சமய பணியில் சொக்கனின் பங்கு** 41–42
திரு இ. இரத்தின சிங்கம்

**வேலின் சிறப்பு** 43–44
சைவப்புலவர் வை.சி. சிவசுப்பிரமணியம்

| | |
|---|---|
| **மன்று(ள்)ளார் அடியார்**<br>திரு வ. கோவிந்தபிள்ளை | 45–49 |
| **ஆண்டவனைப் பற்றினால் ஆனந்தமே**<br>சைவப்புலவர் செ.பரமநாதன் | 50–51 |
| **நால்வர் காட்டிய வழி**<br>திரு த.இராஜன் | 52–53 |
| **பழனி மலை முதல் சுவாமி மலை வரை**<br>திரு எஸ். நடராசா | 54–56 |
| **ஆலயங்களில் அமைதி பேணுவோம்**<br>திரு. இ. இரத்தினசிங்கம் | 57–57 |
| **திருநெல்வேலி**<br>திரு பொ. சிவப்பிரகாசம் | 58–68 |
| **பண்டைத் தமிழரிடையே நிலவிய நீர்வழிபாட்டு மரபுகள்**<br>திரு ஆர்.எஸ்.சந்திரசேகரம் | 69–72 |
| **பதினெண் மேற்கணக்கு இலக்கியங்களில் முருக வழிபாடு**<br>திரு ச.முகுந்தன் | 73–77 |
| **நல்லைக்குமரன் மலரில் இவ்வாண்டு கௌரவம் பெறும் மாவை ஆதீன கர்த்தா** | 78–78 |
| **யாழ் மாநகர ஆலயங்கள்**<br>திரு இ.இரத்தினசிங்கம் | 79–90 |
| **நல்லூர் இராசதானியின் வரலாற்று ஆலயங்கள்**<br>பேராசிரியை கலாநிதி கலைவாணி இராமநாதன் | 93–115 |
| **புலநரிச் சிவன் கோயில்கள்**<br>வெள்ளவத்தை ஸ்ரீ. குலசபாநாதன் | 116–119 |
| **நல்லூர் இராஜதானி**<br>கலாநிதி க. குணராசா | 120–124 |
| **ஈழத்துத் திருப்புகழ் – ஒரு குறிப்புரை**<br>பேராசிரியர் வி. சிவசாமி | 125–129 |
| **சுப்பிரமணிய பராக்கிரமம்**<br>கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் | 130–140 |
| **முருக வழிபாட்டில் மரபுகளும் சம்பிரதாயங்களும்**<br>திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் | 141–144 |
| **நல்லூர் முருகன் அலங்காரச் சித்திரத் தேர்–அமைப்பும்வரலாறும்**<br>திரு. வேலுப்பிள்ளை அம்பிகைபாகன் | 145–147 |
| **முருகன் திருவருளை நிலைநாட்டிக் கந்தசஷ்டி நோற்கும் யாழ்ப்பாணத்துப் பெண்களின்பக்தி மேம்பாடு**<br>வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் | 148–150 |
| **இந்திய நாட்டு தமிழகக் கொடைக்கானலில் சேர் பொன் இராமநாதன் அமைத்த குறிஞ்சி ஆண்டவர் கோயில்**<br>திரு ப.கணேசலிங்கம் | 151–153 |
| **நல்லூர் கந்தசுவாமி உற்சவங்கள்**<br>திரு வை. ஜெகதீஸ்சர்மா | 154–157 |
| **ஓராண்டுப் பயணத்தில். . .**<br>திரு இ.இரத்தினசிங்கம் | 158–159 |
| **நன்றியுரை** | |
| **விளம்பரம்** | |

# நல்லைக்குமரன் மலருக்கான வாழ்த்துரைகள்

- திருவாவடுதுறை ஆதீனம்
- நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்
- இராமகிருஸ்ண மிஷன்
- ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமம்
- மாவை ஆதீனம்
- ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
- இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
- மெய்கண்டார் ஆதீனம்
- மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர்
- மாநகர சபைச் செயலாளர்

உ

சிவமயம்


**திருக்கயிலாய பரம்பரைத்**
**திருவாவடுதுறை ஆதீனம்**

23ஆவது குருமகாசன்னிதானம்
சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
தொலை. பேசி : 04364-232021




நாள் : 02.06.2005

**"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க**
**கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க"**

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி - காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

**- கந்தபுராணம்**

நல்லைக் கந்தப்பெருமான் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு 13வது வெளியீடாக மலர் வெளிவர இருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

சிவபெருமானின் கருணை, மூவுலகங்களையும் சிறப்பான முறையில் ஆட்கொள்ளும் பொருட்டுத் தோன்றிய அவதாரமே முருகக்கடவுள். இதன் காரணமாகவே இப்பெருமான் சுப்பிரமணியன் என்று போற்றப்பெறுகிறார்.

அரிய பல ஆன்மீகச் செய்திகளை ஆண்டுதோறும் மக்களுக்கு வழங்கி உதவும் முறையில் மகோற்சவம் தோறும் மலர் வெளிவருவது பாராட்டுக்குரியது.

முருகக்கடவுளின் பணியில் தம்மை ஆட்படுத்தி வரும் சைவசமய விவகாரக குழுவினருக்கும், துணை நிற்கும் அன்பர்களுக்கும், இம்மை மறுமை வளங்கள் யாவும் இனிதே கைகூடித் திருவருள் தழைத்துச் சிறந்திடவேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங் கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

**சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக**
**பரமாச்சாரிய சுவாமிகள்**
**23 ஆவது குருமகா சன்னிதானம்**

**திருக்கைலாய பரம்பரை**
**திருவாவடுதுறை ஆதீனம்**

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.
குருமஹா சந்நிதானம் ஆதி முதல்வர்.

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

தொலைபேசி: 021 - 222 2870 24/05/2005

## அருளாசிச் செய்தி

அன்புசால் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினால் நல்லைக் கந்தனின் மகோற்சவத்தைச் சிறப்பித்து வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் இவ்வாண்டும் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பழைமையும் பெருமையும் வாய்ந்த யாழ்ப்பாணம் நல்லூரை ஆண்டு கொண்டு இருக்கும் முருகப்பெருமான், உலகத்தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவனாக விளங்குகின்றான். அழகிற்கு அழகும், சிறப்பிற்கு சிறப்பும், அருளுக்கு அருளுமாக விளங்குகின்ற நல்லை முருகனை அழகுபடுத்த நல்லைக்குமரன் மலர் வெளிவருவது சிறப்புடையது. இப்பாரிய பணியை ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாகச் செய்யும், சைவசமய விவகாரக்குழுவின் பணி எல்லோருடைய மனதையும் மகிழ வைக்கிறது. இவ்வருடம் 13 ஆவது மலராக வெளிவரும் நல்லைக்குமரன் மலர் வளர்ந்து வரும் இளம் தலைமுறையினருக்கு உதவும் வகையில் சமய விழுமியங்களையும், பண்பாடுகளையும் கொண்ட கட்டுரைகளைத் தாங்கி வருகிறது. இன்றைய காலநிலையில் சைவமதத்தைச் சார்ந்த மக்கள் சமய நெறி நின்று வாழ்வதற்கு இதில் வரும் கட்டுரைகள் யாவும் வழி காட்டுகின்றன. அனைவரும் படித்துப்பயன் பெறுவோமாக. இந்நூலை வெளியிடும் சைவசமய விவகாரக் குழுவின் பணிகளை இறைவன் ஆசீர்வதிக்கவும், மலர் தொடர்ந்து வெளிவரவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**
**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு, இவ்வாண்டு நடைபெறும் நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு வெளியிடும் " நல்லைக்குமரன் மலர் - 2005" சிறப்பிதழுக்கு எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

கோயில்களும், கோயில் திருவிழாக்களும், சைவமக்களது சமய வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவை. எமது சமயத்தின் பெருமைமிகு ஞானிகளுடைய புனித வாழ்க்கையும், சமய சாதனைகளும் கோயில்களை மையமாகக் கொண்டு அமைந்திருப்பதைக் காணலாம். அவர்களால் அக்கோயில்களும், அவை அமைந்த தலங்களும் மேலும் புனிதம் பெற்றன. இன்றும் அவ்விடங்களைப் பாடல்பெற்ற தலங்கள் எனப் போற்றியும், அவ்விடங்களுக்குச் செல்வதைப் புனித யாத்திரையாகவும் கொள்கின்றோம். அந்தவகையில் நல்லூர் முருகன் கோயிலும் செல்லப்பா சுவாமிகள், யோகர்சுவாமிகள் போன்ற பல சித்தர் பெருமக்கள், வழிபட்டு உய்வடைந்த பெருமைக்குரிய ஆலயம் ஆகும். இன்றும் எண்ணற்ற மக்கள் அந்த நல்லைக்குமரனிடம் தங்கள் தேவையை மன்றாடிப் பிரார்த்தித்துப் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள். நல்லைக்குமரனது பெருமை இன்று கடல் கடந்து நாலாதிசைகளிலும் பரவியுள்ளது. ஆண்டுக்கு ஆண்டு அவனது திருவிழாவில் பங்கேற்கும் பக்தர்களது எண்ணிக்கை வெகுவாகக் கூடிக்கொண்டு வருகிறது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

அத்தகைய பெருமைமிகு நல்லூர்க் கந்தனின் திருவிழா இவ்வாண்டும் வழமைபோல சீரும் சிறப்புடனும் நிறைவேறி, மக்களது உள்ளங்களில் அவனது திருவருள் நிறையப் பிரார்த்திக்கின்றோம்.

சுவாமி ஆத்மகனானந்தா
(சுவாமி ஆத்மகனானந்தா)
10/6/2005

*Sri Ramakrishna Sarada Sevashrama.*
Point - Pedro,
Sri Lanka.

23..5..2005

## பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமிகளின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு தொடர்ந்து வெளியிடும் 13 ஆவது வெளியீடான நல்லைக்குமரன் மலர் மீண்டும் நம்மிடையே ஞான ஒளிப்பரப்பி உள்ளது. இது ஓர் ஆத்மீகப் பணி. மக்கள் இப்போர்ப்பட்ட மலரை மிகவும் ஊக்கத்துடன் வாங்கிப் படிக்க வேண்டும். நல்லூரான் திருவடியை நம்பி வாழும் சகலருக்கும் இது பெரிய வரப்பிரசாதம். முருகன் புகழைப் பாடப் பாட நம் எதிர்காலம் மிகவும் ஒளிமயமாகத் திகழும்.

***சுவாமி சித்ரூபானந்தா***

**நல்லைக் குமரன் திருவடிக்கு அடைக்கலம்**
**அன்னையின் அடியவன்**

**சாரதா சேவாச்சிரமம்**
**பருத்தித்துறை**

உ
குகமயம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்
MAVIDDAPURAM KANTHASWAMY TEMPLE

மஹாராஜஸ்ரீ
ச.து. ஷண்முகநாதக் குருக்கள்
ஆதீன கர்த்தா - பிரதமகுரு,
மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

T.P:021 222 5799

Maharajasri:
S.D.Shanmuganatha Kurukkal
Governing Authority & Chief High priest
Mavai Aadheenam.
Maviddapuram. Sri Lanka.
TELLIPPALAI..........

# மாவை ஆதீனகர்த்தாவின் ஆசியுரை

பிரபஞ்ச சிருஷ்டியில் முதன் முதலாக மாயையினின்றும் தோன்றியதே நாதம். நாத தத்துவம் ஒலி வடிவானது. இதன் பின்னர் தான் விந்து முதல் மண்ணீறாகவுள்ள பிரபஞ்சப் பொருட்கள் தோன்றின. இந்த நாத தத்துவத்தையே முருகப்பெருமான் சேவற்கொடியாக உயர்த்தி விளக்குகிறார். அதிகாலை அமைதியான வேளையில் பிரபஞ்ச சம்ஸ்காரங்களை ஆரம்பிக்க சேவற்கோழி தான் உயர்ந்த நிலையிலிருந்து கூவி நாததத்துவ ஒலிகளை எழுப்புகிறது. இதனை உணர்த்துவதற்கே சேவற்கொடியும் முருகனது கையில் இணைந்தது. மாயையிலிருந்து பிரிந்த நாததத்துவத்தை விளக்கவே கந்தப்பெருமானது கந்தபுராணமும் எழுந்தது. மாயருபமான சூரபத்மனை முருகப்பெருமானின் ஞானவேலினால் பிளக்க அவனது உடல் ஒருபாகம் மாயா மயிலாகவும் மற்றைய பாகம் நாத சேவலாகவும் தோன்றிற்று. எனவே தான் முருகப்பெருமானை வேலுடனும் சேவற்கொடியுடனும் இணைத்து வழிபடல் வேண்டுமெனக் குமார தந்திரம் அறியத் தருகிறது.

முருகப்பெருமான் கலியுகவரதன். சிற்றணுமுதல் பேரண்டமீறாகச் சஞ்சரிக்கும் ஜீவன்களை அவர்கள் ஆற்றும் புண்ணிய பாவங்களையும் எதிர்கொள்ளும் கஷ்ட நஷ்டங்களையும் இன்ப துன்பங்களையும் அவர்களது கன்மவினைக்கேற்ப சமநிலைப்படுத்திப் பக்குவ சீலர்களாகத் தக்கவைத்து தன்னையுணர்ந்து மனதால் வழிபடுவோருக்கு வேண்டிய விரததாபங்களை அருள் மூலம் கந்தவேள் பெருமான் சகாயங்களை இணைத்து விடுகிறார். இத்தகைய அருளாற்றலால் ஞானசக்தி அரும்பும். உயர்ந்த அறிவும், ஆழ்ந்த சிந்தனாசக்தியும், விரிந்த மனப்பான்மையும் இணைந்ததே மேலான ஞானமென அறியப்படுகிறது. ஞானமடையும் போது புலன்கள் யாவும் ஒன்றாகச் சங்கமித்து மனிதனை ஆழ்ந்து அகன்று அறிவாற்றல்களால் தன்னையே உணரும்போது அவன் முருக தத்துவத்திலேயே சங்கமித்து இறைபதவி பெறுகிறான். இவை சித்தர்கள் கண்ட உண்மை. இதனையே மணிவாசகப்பெருமான், முருகனை நினைந்து

**"வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற**
**நுண்ணியனே"** எனப் போற்றியுள்ளார்.

வேல் என்ற சொல்லிற்கு இலட்சக்கணக்கான உயிர்ச்சத்துக்கள் நிறைந்த கருத்துக்கள் அடக்கம் கொள்கின்றன. அதனது பிரகாசம், பிரம்பு, அமைவு, அதில் நிறைந்துள்ள யந்ரரேகைகள், ஒளி, அசையும்போது எழும் ஒலி, தீபாராதனைக ளின்போது ஒளியை வேல் ஈர்த்தெடுத்து பின் வெளியே கதிர்கள் மூலம் வீசும் ஒளி, வேலன் அடிப்பாகம் பிரபஞ்சத்தோடு ஈர்ப்புக் கொண்டும் அந்தத்தில் அணுசக்தி மூலம் விண்ணை ஊடுருவியும், எண் திசைகளிலும் எழும் உயிர் சக்திகளை ஒன்றாகத் தன்னகத்தே ஈர்த்துக் கொண்டும், முருகன் வேறு தான் வேறு என்ற வேறுபாடின்றி முருகனது கையில் எப்போதுமே வீற்றிருக்கும் இந்த சக்திவேல்.

இதனை வீரவாகுதேவர்

**"அந்தமில்லொளியின் சீரா லறுமுகம் படைத்த பண்பால்**
**எந்தை கண்ணின்றும் வந்த வியற்கையாற் சக்தியாம்போ**
**தந்திடும் பஞவல் பெற்ற தன்மை யாற்றனிவேற் பெம்மான்**
**கந்தனே யென்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தோம்"**

எனப் பிரார்த்தித்தார்.

எவ்வாறு வேற்படை பகைவரை அழித்து விடுகிறதோ அதே போன்று மனிதனது கன்ம வினைகளின் ஏவுதலால் ஏற்படும் உட்பகையாகிய காமம், குரோதம், லோபம், மோகம், மதமாச்சர்யம் எனும் பகைஞர்களையும் அழித்து விடும். முருகப்பெருமான் அயில் வேலையும் தாங்கி, இச்சா சக்தி கிரியா சக்திகளான வள்ளி தெய்வானை அம்மையாரோடும் சேவற்கொடியோடும் எப்போதும் எம்மையெல்லாம் யாம் ஏது செய்கிறோமென கண்காணிக்கின்றார். ஈர்க்கும் சக்திகளால் தமது பக்தர்களை தத்தமது ஆலயங்கட்கு வரவழைத்துப் பக்தர்களது ஞானவுணர்வை நிலைப்படுத்த பல்வேறு உற்சவங்கள் மூலம் காட்சிகளையும் தருகிறார். இத்தகைய வாய்ப்பு சைவசமய கலாசார பண்பாடுகளிற்றான் உண்டு. முருக பக்தர்கள் முருகப்பெருமானை உற்றுநோக்கி வணங்கி ஆராதிப்பார்களாயின் அதுவே ஒரு பேரின்ப உணர்வை உருவாக்கும். முருகப்பெருமானது சன்னதியில் ஏற்புடையதோர் திருப்புகழையாவது கற்பூரம் ஏற்றி ஓதி வணங்கினால் அந்த நிமிடமே ஒரு திருவருட்சக்தி உடலினுள் உறையும். இவ்வாறு ஆயிரம் திருவருட் சக்திகள் ஊடுருவும்போது ஆத்மசக்தி மூலம் தெய்வீக உணர்வுகளுடன் கூடிய ஞானசக்தி இணையும். இலட்ச உருவேற்றிய ஞானசக்தி மூலம் எம்பெருமானது அருங்காட்சியையும் காணமுடியும். இதுதான் தவமும் தவபலனுமாகும்.

இவ்வாறு அருங்காட்சிகளைத் தந்துனின்ற எமது ஆலயங்களை பறங்கியர் அடித்து, நொருக்கி, அழித்து இன்னும் செய்யக்கூடாத மிலேச்சத் தனங்களைப் புரிந்தும் சிவபக்தர்களது மனதை உடைக்க முடியாது நடுங்கினர். சைவர்கட்கு தீராத தொல்லைகளையும் பஞ்சமா பாதகச் செயல்களைச் செய்தும் பறங்கியர்களது எண்ணம் நிறைவேறவில்லை. பக்தர்களது மௌனாஞ்சலியின் பேறால் பறங்கிகள் நாட்டை விட்டு ஓட்டமெடுத்தனர். மீண்டும் முருகன் ஆலயங்கள் தோற்றம் பெற்றன. நல்லூர் கந்தன் ஆலயமும் மீண்டும் நல்லருட்காட்சிகளை இன்றும் தந்துநிற்கின்றது இதுவும் முருக பக்தர்களது தவப்பயனே தான்.

யாழ் மாநகராட்சி மன்றம் சைவ சமய விவகார அலுவல்கள் பிரிவொன்றை நடாத்தி இச்சிவபூமியின் மேன்மைக்காக சேவையாற்ற வழி செய்ததும் இறைவன் கொடுத்த வரப்பிரசாதமாகும். பக்தி மார்க்கத்தில் பக்தர்களை ஈர்த்தெடுத்து அதன்மூலம் இவ் ஈழ வளநாட்டைச் சிவபூமியாக அமைக்க வேண்டுமென்ற ஆவல்கூட இறைவனது ஆஞ்ஞையாகும். இவர்களது தர்மச் சேவைகள், செயற்பாடுகள் எண்ணங்கள் யாவும் புனிதங் கொண்டு வளர்ச்சி பெறுகிறதை இந்நாடு நன்கறியும். இவர்களது ஊக்கம், துடிதுடிப்பு, ஆர்வம், இறைவனையே நேரிற்றரிசனம் செய்ய வேண்டுமென்ற ஆவல் யாவும் சைவ மக்களால் வரவேற்கப்படுகின்றது. எனினும் இத்தகைய செயற்பாடு களைத் தணிப்பதற்கும் மிகமிக இரகசியமாக பறங்கி கலாசார பிரகிருதி ஆயாதிகள் இலை மறை காய் போல்நின்று பதுங்கிப் பதுங்கிச் சூழ்ச்சி கையாள்வது விரிவடைகிறது. இது அவதானிக்கப்படல் வேண்டும்.

சைவ முருகப்பெருமானது துணைகள் யாழ் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரத்துறையினருக்கு என்றுமிருக்கும். இதற்காக யானும் மாவைக்கந்தனை நினைத்துப் பிரார்த்திக்கின்றேன். நல்லறமாற்றும் யாழ் மாநகராட்சி மன்றமும் அதனைச் சார்ந்தோரும் உயர்வு கொண்டு இனிதே வாழவேண்டுமெனவும் ஆசீர்வதிக்கின்றேன்.

**மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதகுருக்கள்**
**மாவையாதீன கர்த்தா ~ பிரதம குரு**

உ



**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை, இலங்கை.**
**Sri Durgadevi Devasthanam**
**Tellippalai, SriLanka.**

தலைவர்:
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி,
**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.**
**President:**
Durgaduranthari, Sivathamilselvi,
**Dr. Miss. Thangamma Appacuddy, J.P.**

## சிவத்தமிழ் அன்னையின் வாழ்த்துரை

ஆண்டு தோறும் நடைபெறும் நல்லைக் கந்தனுடைய பெருவிழா நாட்களிலே மேற்படி மலரை வெளியிட்டுப் பெருமையடைகிறது யாழ் மாநகராட்சி மன்றம். இம்மன்றத்தில் சைவ சமய விவகாரங்களுக்காக ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாளும் பொழுதும் "நல்லைக் கந்தா சரணம், சரணம்" என்று ஓலமிட்டுத் தம்மை ஒப்படைக்கிறவர்கள் பலர். அழகனாகவும், அற்புதனாகவும், இளைஞனாகவும் காட்சி கொடுத்து வழிபடுவோர் குரலை ஏற்றுக் கொள்பவனாகவும் விளங்குபவன் நல்லைக் கந்தனாவான். அழகு ஒழுகும் அற்புதக் காட்சியை பெருமானுடைய திருக்கோயில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இத்தகைய சிறப்புகளுக்கெல்லாம் யாழ் மாநகரசபையின் ஈடுபாடும் ஒரு காரணமாகும். மகோற்சவ நாட்களிலே இவர்களால் வெளிக் கொணரப்படும் நல்லைக் குமரன் மலர் படித்துப் படித்து இன்புறுவதற்கு ரியதாகும். எனவே யாழ் மாநகரசபையையும் வாழ்த்தி சைவசமய விவகாரக் குழுவையும் வாழ்த்தி இவர்களின் பணி மேலும் மேலும் நின்று நிலவ வேண்டும் என்று துர்க்கை அம்பாளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி

**செல்வி.கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**

**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா.**

දුරකථන / தொலைபேசி / Telephone

අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director } 552643

සාමාන්‍ය / பொது / General } 552641

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

எனது இல. / My No. }

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

248, 1/1 { ගාලු පාර / காலி வீதி / Galle Road

කොළඹ - 4 / கொழும்பு - 4 / Colombo - 4 } ...............


# பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரின் வெளியீடான நல்லைக்குமரன் மலா் 13 ஆவது வெளியீடு வெளிவர இருப்பதறிந்து மிக்க மகிழ்ச்சிடைகின்றேன்.

குன்று தோறுறையும் குமரன் நல்லையம்பதியிலும் அமா்ந்து அருளாட்சி செய்து வருகின்றான். நல்லூா்க் கந்தன் மகோற்சவ காலத்தில் பல்லாயிரக் கணக்கான பக்தா்கள் கூடி வணங்குவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

அருட்சிறப்பாலும், நிா்வாகச் சிறப்பாலும், ஆன்மீக சைதன்யத்தாலும் உன்னதமாக விளங்கும் நல்லைக் கந்தன் ஆலயம் பற்றிய கட்டுரைகளையும் வரலாற்றுப் பெருமைகளையும் கொண்டதாக நல்லைக்குமரன் மலா் வெளிவருவது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

தொடா்ந்து 13 வெளியீடுகளை சிறப்புற வெளியிட்டு வருகின்ற மலா்க் குழுவினரை மனமாரப் பாராட்டுகின்றேன்.

யாழ். மாநகரத்தின் பல்வேறு பணித்துறைகளை உள்ளடக்கிய மாநகராட்சி மன்றம் சமயத்துறைக்கென ஒரு குழுவையும் அமைத்து அரிய பணிகளை ஆற்றி வருவது காலத்தின் தேவை எனக் கொள்ளலாம்.

இப்பெரும்பணிகளை நிறைவேற்றும் மாநகர ஆணையாளா், மற்றும் குழு உறுப்பினா்கள் அனைவருக்கும் நல்லைக்கந்தனின் எல்லையில்லாக் கருணைப் பேரருள் நிறையப் பிராா்த்திக்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளா்

இந்து சமய கலாசார
அலுவல்கள் திணைக்களம்

திருக்கைலாய பரம்பரை
மெய்கண்டார் ஆதீனம்
3ஆவது குருமகா சன்னிதானம்
சித்தாந்த சிவ வித்தகர்
சிவஸ்ரீ சிவக்கொழுந்து சிவதேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்

கச்சியப்ப கலாசார
சிவஞான பீடம்,
223, தேக்கம் தோட்டம்,
வவுனியா.
தொ. பே. 024 2223155

**"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க"**

**திருக்கைலாய பரம்பரை மெய்கண்டார் ஆதீன குருமுதல்வர் 8ஆம் குருமஹா சந்நிதானத்தின் திருவுளப்பாங்குப்படி
நல்லைக் குமரன் மலர் சிவஞானக் கருவூலங்களுடன்மலர்வதற்காக எழுந்தருளும் அருளாசியுரை**

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவும் ஆய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அந்நியம் இன்மையின் அரன் கழல் தொழும் ஏ
- சிவஞானபோதம் 8ஆம் சூத்திரம்

மூவகை யெனுந்தளை மூழ்கி யுற்றிடும்
ஆவிகள் உலப்பில அநாதி உள்ளன.
தீவினை நல்வினை திறத்தின் வன்மையால்
ஓவற முறைமுறை உதித்து மாயும் ஏ.
- கந்தபுராணம் காசிபர் உபதேசப்படலம்

எண்என்ப ஏனை எழுத்தென்ப - எவ்வுயிர்க்கும்
கண்என்ப வாழும் உயிர்க்கு
திருக்குறள்

வருடாவருடம் தெக்சணாயன முதுவேனிற் காலத்தில் ஆடி மாதம் பூர்வபக்க சஷ்டி திதியில் நல்லூர்க் கந்தசுவாமி திருவுலா வருவது பரசமயிகளும் பரமேஸ்வரரின் அருள் பெற்று மறுபிறவிகளிலாவது பேரின்பம் பெறச் செய்வதற்காவே என்பது ஆகமாந்த உண்மையாகும் என வேத, சிவாகம், சாத்திர, தோத்திர நூல்கள் விளம்புகின்றன. தமிழ், கிரந்த அறிவோ, எழுத்து, சொல், பொருள், எண் பற்றிய அறிவையோ, சிவபெருமான் குருவாகத் தோன்றி அருளாமையால் அவமே சிவ, சிவகுரு. சிவனடியார் நிந்தனையையும், சிவசம வாதத்தையும் புரிந்து தத்தம் உயிர்களை மீளா நரகுக்கு இட்டுச் செல்கின்றனர். காரணம் மும்மலப் பிணியும், சிவகுருமூலம் சிவஞானம் பெறாமையுமாகும். தமிழ், கிரந்த, பஞ்சாங்க, சாத்திர, தோத்திர, உண்மை, ஞான ஒளியைப் பரப்ப வல்ல சற்குருவை பரமசயிகளுக்கு சிவபெருமான் கொடுக்காமையால் ஏற்பட்ட விளைவே கடந்த சுனாமியின் விளைவாகும். கொலை, புலை, பொய் நீக்கி, எழுத்து, சொல், சாத்திர, தோத்திர நிந்தனை புரியாது சிவபெருமானால் கொடுக்கப்பட்ட இம்மானுடப் பிறவியை சிவவழிபாட்டில் ஈடுபடுத்துக. அடுத்து வரும் பிறவிகளை ஏற்காதவராய், மனிதர்கள் தம் வல்லமையால் கல்வி, செல்வம் ஈட்டலாம் என சிவசமவாதம், சமய சமவாதம் புரிந்து வேத, சிவாகம, நிந்தனை புரிந்தோரைத் தேடித்தேடி சுனாமி அழித்தது.

அவர்களது உடமைகளைக் கடல் அள்ளிச் சென்றதுடன் பயிர் செய்த குடிநீருள்ள இடங்களைக் கடல் நீருட்புகச் செய்தன. இவை மட்டுமல்ல இன்னும் எத்தனையோ பல பிறவிகளை எடுத்தே தாம்செய்த பாவங்களைத் துன்பத்துடன் அனுபவித்துக் கழிப்பர். அதற்காகவே இறைவன் 84 லட்சம் யோனி பேதங்கள் ஊடாக எண்ணற்ற பிறவிகளை அவரவர் பாவ புண்ணியங்களுக்குத்தக நன்மை, தீமைகளை அனுபவிக்க எண்ணற்ற இடங்களில் பிறந்துழலச் செய்கிறார். இதன் அடிப்படையிலேயே மாதா, பிதா குருவும் வாய்க்கப் பெறுவர். பிழையான எழுத்து, சொல், இசை, நாடகம், நினைவு, போதனை, சாதனை, சற்குரு நெறிதவறும் போது நாடு நகர் அதர்ம வழிசெல்வது காரணமாக பூமி கடலால், யுத்தத்தால் அழிவுறும். அத்தகைய துன்மார்க்கத்தைத் தடுப்பதற்காகவே சிவபெருமான் வேத சிவாகமங்களைச் சாத்திர, தோத்திரங்களாகிய அருள்நூல்களைத் தந்துள்ளார். தானே குருவாக வருகிறார். ஆணவமுனைப்புடையோரும் சற்குருபோல் தோன்ற, உங்கள் உங்கள் வினைகளை அழிப்பதற்காக சிவபெருமானே அனுப்பி வைக்கிறார். அது உயிர்களின் மேல் வைத்த மறக்கருணையால் நிகழ்வன.

மாயவாழ்வை நிலையென நம்பி மதிகெட்டு அலைந்து விடாது சற்குரு நெறியைப் பின்பற்றி இயம, நியமம் தவறாது எல்லோரும் இன்புற்று வாழ சிவவழிபாடு புரியத் தங்கள் மலர் உதவட்டும். கி.மு 2ம் நூற்றாண்டின் அமைந்திருந்தே சிறப்புடன் திகழ்ந்த யாழ்ப்பாண இராய்ச்சியத்தின் நல்லூர்ச் சிவாலயம் 1621 மாசி மாதம் 10ம் திகதி அந்நியரால் அழிக்கப்பட்டு அவ்விடத்தில் அன்று கிறீஸ்தவ தேவாலயம் அமைக்கப்பட்டது. இன்றும் அது அவ்விடத்தில் உள்ளது.

சற்குரு வழியில் சிவவழிபாடு, சாத்திர, தோத்திர, நெறியில் நிற்பவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள் எண்ணில் அடங்கா. அன்பு, அருள், ஆசாரம் பொருந்தி தர்ம வழிநின்று வெள்ளிநாள் விரதத்தை, 7 வகையான தீக்சைகளை முறையாகப் பெற்றுத் தேசிய உடையணிந்து சிவதோற்றத்துடன் குருவாக்கிய பரிபாலனம் பேணுமாறு குருமுதல்வர் பிரார்த்திக்கின்றார். ஆசையை நீக்கி எல்லோரும் சத், சித், ஆனந்தம் பெறுவீர்களாக. எல்லாம் வல்ல ஆனந்த ஞான மாநடராசர் திருவருள் பெருகி, மலராசிரியரை, திருஞான சம்பந்தர் ஆதீன 2ஆம் குருமஹா சந்நிதானத்தை, மாநகரசபை சைவசமய விவகார குழுவினரை, கோயிற் பரிபாலகர் மாப்பாண முதலியாரை, சிவத்தொண்டர்களை, ஆலய பிரதம குருமார்களை, வேண்டிய சகலவித காம, மோக்ஷ, இஷ்ற்ற, அர்த்த, சித்திகளைப் பெற்றுய்யத் தங்களுக்கு அருள் நல்குமாறு பிரார்த்தித்து ஆசீர்வதித்துள்ளார் என்பதை அறியத் தருகிறோம்.

அவனருள் பெறாது முத்தி அடைந்தனர் இல்லை
அவனரு ளின்றி வாழும் அமரரும் யாரும் இல்லை
அவனருள் எய்தின் எய்தா அறம்பொருள் இல்லை, ஆணை
அவனலது இறைவன் இல்லை அவனை நீ அடைதி என்றான்.

திருச்சிற்றம்பலம்.

- மேலாளர், மெய்கண்டார் ஆதீனம்

**ந. செல்லையா**
**மெய்கண்டார் ஆதீனம் சற்சங்க வியாபகர்**

**சித்தாந்த சிவ வித்தகர்**
**இராசமணி சிவம் அகோர தேசிகர்.**

சிவநெறித் தொண்டர் க.வ 5107 பார்த்திப ஆனி உத்தராட்டாதி 14 (28.06.2005)

# மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரது வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினது பணிகள் மகத்தானவை. நல்லைக்கந்தனின் வருடாந்த உற்சவ காலத்தில் நல்லைக் குமரன் மலரினை தொடர்ச்சியாக வெளியீட்டு வருவது என்பது சாதாரண விடயமல்ல.

இவ்வரிய பணிக்கு மேலாக கல்வியைத் தொடர முடியாத வறிய நிலையிலுள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகக் கல்விசார் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்கிவருவது இக்குழுவினது பணிக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

இவர்களது நற்பணி மென்மேலும் சிறந்தோங்கவேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்

நல்லைக் குமரன் மலர் மாறாமணம் பரப்பும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**வே.பொ.பாலசிங்கம்**
**செயலாளர்**

**மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு**
**வடக்கு கிழக்கு மாகாணம்**
**திருகோணமலை**

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற செயலாளரது வாழ்த்துச் செய்தி

நல்லை நகர் ஆறுமுக நாவலர் காட்டிய நன்நெறி மரபதனைப் பேணிப் போற்றிடும் வகையில் எத்திசை வாழ்ந்திடும் அறிஞர் கல்வி மான்கள். புலவர்களின் ஆக்கங்கள் பல தந்திடும் நல் மலராம் நல்லைக்குமரன் மலர் பதின் மூன்றாவது மலரதற்கு வாழ்த்துக்கூறும் நற்பேறு பெற்றமை மகிழச்சிக்குரியதாகவுள்ளது.

பல வண்ணப்பூக்களால் தொடுக்கப்படும் மாலை எவ்வளவு அழகுடன் ஒளி வீசுகின்றதோ அது போன்றே இம் மலரிலும் சைவமும் தமிழும் வளர்வதற்கென்றே பல அறிவு நிறை பொலிவு ஆக்கக் கட்டுரைகள் வெளிப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. இம் மலர் என்றென்றும் நல்ல மலராய் வாடாது மலர வேண்டுமென்று சிறியேனும் மனப் பூரிப்புடன் வாழ்த்துகின்றேன்.

**திருமதி.ம.வசந்தகுமார்**
**செயலாளர்**

**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்**

# நல்லைக்குமரன் கவிதாஞ்சலி

- அப்பனே கந்தா ஞான அமிர்தமும் தருவாய் போற்றி

  – அருட்கவி. சி. விநாசித்தம்பி

- சுனாமி ஏன் அழித்ததெம்மை?

  – விகடகவி. மு. திருநாவுக்கரசு

- கந்தப்பத்து

  – கவிஞர். சீனாச்சனா

- எனக்கு இது வேண்டும்

  – கலைமாமணி. பொன். தெய்வேந்திரன்

- நல்லைப் புதுப்புகழ்கள்

  – த. ஜெயசீலன்

- நல்லூர் உறை கந்தா,பொன்னார் தமிழ் மன்றா

  – சி. இராஜேந்திரா

- நல்லூர்க் கந்தா முத்தந்தா

  – நல்லைக்கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை

- விழிதுடைக்கும் துணையாகும் வேல்

  – தாட்சாயணி

- ஏழாவது படை வீடு எங்களின் நல்லூர்தான்

  – கவிஞர் வ. யோகானந்த சிவம்

- பிறவா வரமதனைப் பெற்றிடுவோம்

  – திருமதி. சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்

# அப்பனே கந்தா ஞான அமிர்தமும் தருவாய் போற்றி

- அருட்கவி. சீ. விநாசித்தம்பி

கலியுக வரதன் நல்லைக்கந்தனென் றுலகம் போற்றும்
மலையுறை அழகுவேலா வள்ளிகுஞ் சரிமணாளா
கலைமிளிர் தேரில்மேவிக் கருணைமா மாரிபெய்யும்
தலைநடுச் சுடரேநின்றன் தாளிணை போற்றிபோற்றி

சொல்லும்பன் னூற்றாண்டாகத் தொடரினை துவேஷத்தாலே
நல்லசெந் தமிழர்நெஞ்சம் நலிதலைக் கண்டிடாயே
வெல்லும்வேல் பிடித்தநல்லை விமலனே வினைகள்தீர்க்க
வல்லவா நம்பி உன்றன் வாசலில் வந்து நின்றோம்

இடம்பெயர்ந் தலைவோர்தாங்கள் இடங்களுக் கணுகாத்துன்பம்
திடம்பெறு தொழிலில்லாமல் சீவிக்கமுடியாத் துன்பம்
உடம்புறு நோயினாலே ஊறுபட்டேங்கும் துன்பம்
படும்மிடித் துன்பமெல்லாம் பன்னிரு கண்ணாற்பாராய்

ஆழிப்பேர லையினாலே ஆயிரம் லட்சம்மக்கள்
ஏழைகளா னார்,தாரம் இழந்தனர், வீடுசெல்வம்
பாழினில் இழந்தார்,பெற்ற பாலகர் தமைஇழந்தார்
வாழிளம் குழந்தைகள்,தம் மாதா பிதாவிழந்தார்

எத்தனைகாலம் எங்கள் ஈழத்துமக்கள் நித்தம்
நித்திரையின்றிச் சொந்த நிலச்சுதந் திரமுமின்றி
பித்தர் போல நெஞ்சம் பேதலித் தலைவதையா
அத்தனின் குருவே வந்தோர் ஆறுதல்தருவாய் போற்றி

மரகத மயிலா, ஓங்கும் வாரணக் கொடியா, சோதிச்
சரவண பவனேநின்றன் தண்ணடி யார்கள் எல்லாம்
தருசிவ நெறியில் வாழச் சஞ்சலமனைத்தும் நீங்க
குருவடி வாகித்தேர்மேல் குளிர்ந்தமர்ந் தருளுவாயே

பெறறவர், குரு, மூத்தோரைப் பிள்ளைகள் எதிர்காலம்
கற்றவர் தம்மை, தெய்வக் கலைகளை மழுக்கிமேலை
மற்றவர் கலாசாரத்தை வளர்த்துக்கூத் தாடும்காலம்
உற்றவிப் போக்கால்சைவ ஒழுக்கமும் ஒடுங்குதப்பா

சுப்பிரமணியா நின்றன் சுடர்விழிப் பார்வையாலே
தப்பிலாச் சமாதானத்தில் தமிழ்க்கொடி மிளிர வைப்பாய்
ஒப்பிலாத் தமிழ்ப்பண்பாட்டில் உன்மக்கள் வாழவைப்பாய்
அப்பனே கந்தா ஞான அமிர்தம் தருவாய் போற்றி.

# சுனாமி ஏன் அழித்த தெம்மை?

- விகடகவி. மு. திருநாவுக்கரசு

தாயாகி உலகாளும் தயாபரியும் நீ அல்லவோ
வையமதை கடற்கோள் வதைத்திட ஏன்விடுத்தாய்
பொய்யோ புகழுரையோ புனைகதையோ உன்நீதி
ஐய்யோஉன் அருளாட்சியின் அழகும் இதுதானோ?

கையில் மகவேந்திய தாய் கனகமுலை நல்க
பைய மகவு தாயின் முகம்பார்த்து மிகமலர
தையல் முகம் மலர கணவன் தானும் முகமலர
ஐய்யோ இக்குடும்பத்தை அலை கொன்றது தான் முறையோ

எண்பது வயதானவள்தான் ஏரம்பரது மனைவி
எண்ணிரண்டு பதினாறு பேரர்களைக்கண்ட பெரும்பாட்டி
கண்ணிரண்டும் பார்வைகெட்டு கட்டிலிலே கிடக்க
கொன்று விட்டுச் சுருட்டிக்கொண்டு சென்றதிந்தச் சுனாமி.

கையிலொரு மகவோடு கழுத்திலொன்று தொங்க
தையலிவள் கருவிலொரு தளிர்மேனி மிகவளர
பையஇவள் எழுந்தோடிப் பரிதவித்து! அலற
நையப் புடைத்தடித்து கொன்றதிந்த அலையே.

செஞ்சோலை தனில்வளர்ந்த சிறுவர் விளையாட
அஞ்சேல் என உலகோர் ஆசிபல நல்க
வஞ்சமுடன் வந்தபோர் அலைகள் திரண்டொன்றாய்
கெஞ்சிநின்ற குஞ்சுகளைக் கொண்டு சென்றதொன்றாய்

அந்தணர்கள் ஒன்றுகூடி வேதஒலி முழங்க
நொந்தமன தோடு அடியார் நீறணிந்து வேண்ட
வஞ்சமுடன் வந்தபெரு பேர்அலைகள் ஒன்றாய்
இந்துமத ஈசனையும் இழுத்துச் சென்றதொன்றாய்

ஈசன் இவன் இத்தகைய நாசவேலை செய்தால்
ஈசனுண்டு என்பவரை ஏளனமே செய்வார்
ஈசனிவன் பார்த்திருக்க இழந்த உயிர்கோடி
ஈசனையே சென்றடையும் என்பதென்ன நீதி.

பால்பருகும் மகவு முதல் பாட்டி பூட்டியொன்றாய்
பால்சுரக்கும் பசுமந்தை ஆடுகோழி யொன்றாய்
பால்அறுகு பூசை வைத்த பக்தர்குழாம் ஒன்றாய்
பால்சுரந்த அன்னை நீயும் பறித்தெடுத்த தேனோ?

ஐய்யோ இதுபொய்யோ எனப் பிறநாட்டவரும் கேட்டுக்
கையோ தலை மீதுவைத்து கதறிஅழுது நின்றார்
வெய்யோன் ஒளிபரவும் விடிகாலை இந்தநாசம்
மெய்யேஎன அறிந்து மேல்நாட்டவர் அழுதிட்டார்.

இறைவனைக் கோட்டில் ஏற்றும் ஈனர்கள் செயலினாலோ?
மறையவர் மரபுப்பண்பை மறந்திங்கு வாழ்வதாலோ?
கறைமிக படிந்த மாதர் கசிப்பினை வடிப்பதாலே?
குறைவின்றி கொடுவாள் கொண்டு குண்டர்கள் திரிவதாலோ?
சிறையதும் முட்டிச் சீர்குன்றி வளிவதாலே?
முறைகெட்டு அரசின்ஆட்சி முடிவின்றி நடப்பதாலோ?
அலைமகள் இதனைக்கண்டு ஆத்திர முற்றதாலோ?
கொலைமிகு வெறிபிடித்துக் கொன்றனை உலகோர்தம்மை

# கந்தப்பத்து

- கவிஞர். சீராச்சனா

அழகு தமிழ் காக்கும் ஆறுமுக வேலவனின்
பழகு தமிழ் பழகுவோம்

சேவற் கொடியோன் செந்தில் வடி வேலவனை
பாவலர்கள் பாடுங்களே

மயிலேறும் பெருமானுக்கு வாழத்திசைக்க இந்த
குயிலுக்கு ஏது திறன்

கந்தர்சட்டி விரதத்தைக் காதலித்து நாம்பிடிக்க
எந்தவினையும் அணுகாதே

புள்ளி மயிலேறும் வள்ளி மணாளனுக்கு
துள்ளியே தொண்டு செய்வோம்

ஆறுபடை வீடுறையும் ஆறுமுக வேலவனே
கூறுமடியார் வினை தீர்

கார்த்திகைக் குமரனைக் கருணையுடன் நாம்வணங்க
பூர்த்தியாகும் எமதாசை யே

கந்தரனுபூதியைக் கடுகியே நாம் படிக்க
முந்தை வினை போகுமே

பந்த பாசம் களையக் கந்த பெருமானை
சித்தையிலே வைப்போமே

நல்லூரானே நாங்கள் நல்வாழ்வு பெறுவதற்கு
நல்லவராக்கி விடு
தெய்வயானை பாகனே தேவசேனாபதியே
மெய்யடியாரை நீ கா.

# எனக்கு இது வேண்டும்

- கலைமாமணி. பொன். தெய்வேந்திரன்

நல்லூரான் திருவடியை நாட வேண்டும்
எல்லோரும் அவன் புகழைப் பாட வேண்டும்
அன்போடு அவன்பாதம் அணைய வேண்டும்
தென்போடு இங்குநாம் வாழ வேண்டும்

அறுமுகப் பொருளைநீ அருளல் வேண்டும்
ஊறிநின்று உன்பாதம் தொழுதல் வேண்டும்
கோலமயில் வாகனனைத் துதிக்க வேண்டும்
கோழிக்கொடி குமரனைநாம் போற்றிட வேண்டும்

நாட்பொழுதும் அவன்நாமம் பகர வேண்டும்
காலமெல்லாம் அவன்கழலைப் பணிய வேண்டும்
ஏறுமயி லேறியவன் ஆட வேண்டும்
ஆறுமுகத் தண்ணலென அணைந்திட வேண்டும்

முருகன்தமிழ் தெய்வமென முழங்கிட வேண்டும்
அருகிருந்து அவன்காட்சி கண்டிட வேண்டும்
ஆறுபடை வீட்டுமாட்சி அறிந்திடல் வேண்ணடும்
ஆற்றுப்படை தத்தவத்தை உணர்ந்திடல் வேண்டும்

அஞ்சுமுகம் நீக்கவென அறுமுகம் வேண்டும்
துஞ்சுமனத் துயர்நீங்க உன்னருள் வேண்டும்
மஞ்சத்தில் பவனிவரும் அரும்பொருள் வேண்டும்
எஞ்சிவரும் நாட்களுக்கு உன்னருள் வேண்டும்

நல்லைக் குமரனடி வணங்கிடல் வேண்டும்
தொல்லையகல அவன்பாதம் துணைகொள வேண்டும்
கானமிசைத்து அவனையிங்கு அழைத்திட வேண்டும்
ஞானஒளி தருமவனைப் போற்றிடல் வேண்டும்

# நல்லை புதுப்புகழ்கள்

– த. ஜெயசீலன்

அருவமும் ஆகி உருவமும் ஆகி
அசடனும் ஆகி அருளாகி
அழிவதும் ஆகி விளைவதும் ஆகி
அமைதியும் ஆகி அதன்மேலாய்
திருவதும் ஆகி கலைகளும் ஆகி
விறலிலும் வாழும் விதிதேவா!
தெருவினில் வாடி அழும் அடியாரின்
திருவுளம் மீது குடியேறு.
கருவறை நீயே கருவகை நாமே
கருகலையாமல் பொருள் சொல்லு.
கவிதைகள் பாடித் தொழுகின்றோம்... காதல்
கரந்தனைத் தந்து நமை அள்ளு
வெறி மிடி கூடி 'பொறி' பலவாகி
விழுகிறோம், மீட்க வரவேணும்
விதி புதிதென்று எழுதிடு... நல்லை
வெளிதனிற் காட்சி தரவேணும்.

சரியான நேரம் சரியான ஒன்றை
சரியாய் நடத்தும் செயல் வீரா!
சமரான வாழ்வில் தருமங்கள் வாழ
தடை வெட்டுகின்ற அதிதீரா!
புரியாத கோடி பொருள்யாவும்......... நெஞ்சு
புரிந்தேற வைக்கும் பொருளோனே!
புதிரான இந்த எளியோனும் மண்ணில்
பொருள் கொள்ள வைத்த பெருமானே!
பெருவாரியான அடியார் முன் என்னை
பெரிதாக்கி விட்டு ஜெயந்தந்து
பிழையற்ற பாதை தெரிகின்ற ஞான
பிரமத்தைக் காண வழிசெய்து
குருவாகி, தந்தை, மகனாகி, நண்பன்
எனவாகிக் காதலுடன் நின்று
குலையாமல் அன்பைத் தரு........ நல்லைவேலா
குறை தீர்க்க வேறு எவருண்டு?

# நல்லூர் உறை கந்தா பொன்னார் தமிழ் மந்தா

– சி. இராஜேந்திரா

சித்தம் தெளி வித்தை அறியவை
பக்திச் சுவை மெத்தக் கனியவை
முற்றும் அறி முத்துக் குருபரமுதல்வோனே
சின்னத் தனம் கிள்ளி எறியவை
கள்ளத்தனம் கல்லி அழியவை
கொள்ளை அருள் தந்து அருள்குவை குமரேசா
கிள்ளை அனை வள்ளி அணைதரு
புள்ளி மயில் அள்ளி நடமிடும்
வள்ளல் உனை எண்ணி மகிழவும் அருள்வாயே
நல்லூர் உறை கந்தா எனதரு
பொன்னார் தமிழ் மண்தா எனவுனை
இந்நாள் வரை நொந்தேன் உனதுளம் நெகிழாதோ
எடுபேச் செலாம் வெம்பி விழுவதும்
எமதா ருயிர் வெந்து அழிவதும்
முடிவேயிலை என்று நசிவதும் தகுமோ காண்
எழியோ ரெனப் பழிகள் காண்பதும்
கிளி காத்த நல் இலவு ஆவதும்
தெளிவைத்தரும் அருள் வேலா நின் செயல்தானோ
போதும் இனிச் சோதித் தருள்வது
வேதம் 'தனை அப்பர்க் கருளிய
நாதன் எமைப் பார்த்தருள்குவை மகிழ்வோம் யாம்.

# நல்லூர்க் கந்தா முத்தந்தா

நயினைக்கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை

நல்லூர்க் கந்தா முத்தந்தா
நானுனைக் கேட்டேன் நித்தந்தா
செல்வக் குமரா சிரிப்பொடுவா
சேவற் கொடியுடன் செழிப்பாய்த்தா

முத்தப் பருவப் பாடல்பல
முழுதாய் பலபேர் பாடிடினும்
முத்தம் கொடுத்த வரலாறு
முருகா உனக்கு இன்னுமில்லை

ஆசை பாசம் எல்லாமே
அறவே விட்ட ஆண்டியர் நீ
கூசும் மொட்டை அடித்துவிட்டுக்
குன்றாம் பழனிக்(கு) ஏகியதேன்?

ஔவை சுட்ட பழம் பெற்றாள்
அருண கிரிதிருப் புகழ் பெற்றான்
செவ்வை யாகச் செந்தமிழால்
செந்நாப் புலவரைப் பாடவைத்தாய்

காதில் பிரணவ மந்திரத்தைக்
கனிவாய் அப்பனுக்கு ஓதிவைத்தாய்
சோதி வடிவாய் பேருருவாய்த்
தோன்றிச் சூரனுக்கு அருள்சுரந்தாய்

கார்த்திகைப் பெண்கள் ஆறுபேரும்
கட்டி அணைத்துச் சரவணத்தில்
சேர்த்தும் முத்தம் கொடுக்கவிலை
செவ்வேள் என்ன செய்தனைநீ?

அம்மை அப்பன் முத்தமிட்டு
அணைத்த காட்சியும் நான்காணேன்
தம்மை முத்தம் இட்டுநீயும்
தந்த பரிவும் பார்த்துமிலேன்

வள்ளி தெய்வ யானைதனை
வலமிட மாக வைத்திருந்தும்
அள்ளி அவரை முத்தமிட்ட
அருட்பெரும் செய்தியும் அறிந்துமிலேன்

கூறும் அடியார் குறைகேட்டுக
கொடுத்து அருளாற் குணமாக்க
நேரம் போதா(து) என்பதால்
நீயும் கொஞ்ச விலைப்போலும்

தனியாய் ஓடி வந்திடுவாய்
தாங்கும் மயிலை விட்டிடுவாய்
கனிவாய் பதித்து முகர்ந்திடுவா
கருணையின் பூதியைத் தந்திடவா

ஆறு முகமும் ஒன்றாய்வா
ஆறுதல் எனக்குத் தரநீ வா
கூறும் குறைகள் தீர்த்திட
கொஞ்சிக் கொஞ்சிக் குலாவிடவா

வயது முதிர்ந்து கிழமாகி
வாடிப் போனேன் முருகா
தயவு செய்து வந்தெனது
தளர்ச்சி போக்க முத்தம் தா

பேரன் வடிவில் நீவந்தால்
பிரிய மாக நானுன்னைக்
கூரன் பாலே கும்பிடுவேன்
குழகா அழகா முத்தம்தா

முதல்முறை யாக உந்தனிடம்
முத்தம் பெற்ற அடியனெனும்
பதமதைப் பெற்ற பாக்கியத்தை
பரமன் மகனே எனக்குத்தா

வாவா கந்தா வடிவேலா
வாரி எடுப்பேன் வலமாய்வா
தாதா முத்தம் தித்திப்பாய்
தந்தெனைச் சேர்ப்பாய் முத்திக்காய்

# விழி துடைக்கும் துணையாகும் வேல்

- தாட்சாயணி

பலநூறு துன்பங்கள் வரும்போது உடனின்று
பலமாகித் துணை நல்குவாய் !- வரும்
கலகங்கள் தமைப் போக்கிக் கவலைக்குள் எமை வீழ்த்தும்
காலத்தின் பிடிமீதும் நீ கைவைப்பாய்!
சில வேளை வரும் இன்பம் சில்லென்ற நீராக... ! அவ்வேளை
சிரிப்போடு எமை நோக்குவாய் ! - எம்
அலமந்த மனம் தேறி நம்பிக்கை பயிராகும்! வேல்
அருளுக்குத் தினம் நீயும் பொருள் சொல்வாய்!

வாழ்வெந்தத் திசைநோக்கி இனிச் செல்லும் தெரியாது
விடையின்றிப் பயணிக்கின்றோம்! ஏன்
கீழ்மைகள் எமையண்டித் துயர் செய்யும் ! அறியாத
கேள்விக்கள் திண்டாடுறோம்!
சூழ்கின்ற பகைவேலி மீள்கின்ற வழியின்றி
சுடர்வேலை மனங் கொள்கிறோம் ! நீ
வாழ்விப்பாய் என மட்டும் உளமார நினைத்தின்று
வருங்காலப் பயம் வெல்கிறோம்.

விதிபோட்ட பாதை தான் பாதங்கள் நடக்கிறது
விஷமுட்கள் விளையாடலாம்! நீ
மதியாகி வந்தந்த விஷம் நீக்கி வைப்பாய்! நாம்
மலர் தூவ மகிழ்வேற்றுவாய்
சதிராடிப் புவிவாழ்வு எமைத்தீண்ட அதில் எங்கள்
சபலத்தை நீ போக்குவாய் விழி
நதியாகும் சிலவேளை வேல் வந்து அருகானால்
நிலைமைகள் சீராகாலாம்

புகழுக்கும் பொருளுக்கும் அல்லாடுவோம் நாங்கள்
பூவாசத்தோடு நீ தினம் பேசுவாய்
தகனங்கள் ஆக நம் கர்வங்கள் போக உன்
தாளுக்குள் சொர்க்கத்தை நாம் தேடுவோம்
அகந்தைகள் பொடியாக அருள்வேலும் துணையாக
ஓமெனும் இசையாக எமைச்சேருவாய்
அகமெங்கும் குழைவாக நல்லூரா எனும்போது
அல்லல்கள் தமை நீயும் பொடியாக்குவாய்!

# ஏழாவது படை வீடு எங்களின் நல்லூர் தான்

- வ.யோகானந்தசிவம்

ஆறு பொறியாகி
ஆறு முகமாகி
ஆறு படைதன்னில்
ஆட்சி புரிபவன்

தேவர் குறைதீர்த்தவன்
தேவி வள்ளி நாயகன்
தேனும் தினைமாவும்
தேடியுண்டு மகிழ்பவன்

கார்த்திகைப் பெண்களின்
காதலில் வளர்ந்தவன்
கானக் குறவள்ளி ஆனவன்
காதலே கொண்டவன்

பிரமனைச் சிறையிலே
பிடித்துமே அடைத்தவன்
பிதாவாம் சிவனுக்குப்
பிரணவம் உரைத்தவன்

பாட்டியாம் ஔவைக்கு
பழம்நாவல் கொடுத்தவன்
பழம் ஞானம் ஆகியே
பழநியில் நின்றவன்

நக்கீரன் நாவிலே
நாளுமே வாழ்ந்தவன்
நல்லதோர் ஆற்றுப்படை
நவிலவே செய்தவன்

கந்த புராணமும்
கந்த ரனுபூதி
கந்தர் கலிவெண்பா
கண்டுமே மகிழ்ந்தவன்

கந்த சட்டி கவசம்
கந்தன் புகழ் பாடும்
காவடி பிரதிட்டையும்
கந்தன் அருள் கூடும்

அருணகிரி நாதரும்
அருமைத் திருப்புகழிலே
அழகனாம் கந்தனின்
அற்புதம் கூறினார்

மாங்கனி பெற்றிட
மயில்மீது ஏறியே
மகிழ்வுடன் உலகெல்லாம்
மால்மருகன் சுற்றினான்

ஏறுமயில் வாகனன்
எங்களுடன் விளையாடினான்
ஏழாவது படைவீடு
எங்களின் நல்லூர்தான்

செல்லப்பர் யோகரும்
செருக்குடன் கந்தனை
செபித்துமே ஞானத்தை
சேர்த்தனர் வாழ்விலே

தமிழர்கள் என்றுமே
தலைநிமிர்ந்து வாழவே
தமிழரின் தெய்வம்
தாயாகக் காத்திடுவான்

பண்டாரமாகிக் கந்தன்
பழநியில் சென்றவன்
பாவையாம் வள்ளிபங்கன்
பரமனின் பாலனவன்

தமிழர்கள் தெய்வமவன்
தன்கையில் வேலுடனே
தாயாக எமைக்காத்துத்
தருமாட்சி நல்லூரிலே

ஓடோடி வாருங்கள்
ஒருமுறை பாருங்கள்
ஓராறு கருணைமுகம்
ஒளிவீசும் கந்தன்முகம்

அழகா குகா கந்தா
அற்புதங்கள் காட்டரசே
அமுத ஞானத் தேனை
அருந்திடத் தாவரசே

தேன்தமிழ் ஈழத்தின்
தேசியத் தலைவனவன்
தேடரிய சொத்தாகும்
தேவாநீ காத்தருளும்

# பிறவா வரமதனைப் பெற்றிடுவோம்

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்

நல்லூர் நகரின் கோவிலிலே கந்தவேளின் அரசாங்கம்
நாடி ஓடி வருவோரின் குறைகள் யாவும் தீர்த்தீடுவான்.
அடியவர் கூடுமிடம் அன்பரைக் காக்குமிடம்
வினைகளை அறுக்குமிடம் வேலவன் வாழுமிடம்
(நல்லூர்)

காவடி ஆடும் இடம் களிப்பினை அருளுமிடம்
பஜனைகள் பாடுமிடம் பாவங்கள் போக்குமிடம்
வேதனை தீர்க்குமிடம் வெற்றியை அருளுமிடம்
சேவடி போற்றுமிடம் சேவற் கொடியோன் வதியுமிடம்
(நல்லூர்)

மற்று நிகரில்லா வள்ளிபங்கனைக்கண்டு
நெஞ்சுருகி நின்றால் அஞ்சாதே என்பான்
கண்ணீர் மல்கி நின்றாய் கவலையாவும் போக்கிடுவான்
பாமாலை பாடிவிட்டால் தேனாக உருகிடுவான்
(நல்லூர்)

மயில் ஏறும் மாணிக்கத்தின் பாதமலர் பற்றிவிட்டால்
அள்ளி அணைத்தே அருள்மாரி பொழிந்திடுவான்
நல்லூர் வாழ் முருகோனின் நாமத்தை வாழ்த்திடுவோம்
பிறவா வரமதனைப் பெற்று மகிழ்ந்திடுவோம்

**2. இல்லை இனிப் பயம் எனக்கு ஈசன் மகன் துணையிருக்கு**

நாடித் தொழுவேன் நந்த ந்தனன் மருகனை
தேடி உருகுகின்றேன் தெய்வசிகாமணியை
ஓடியே வருவாய் ஓங்காரப் பொருளே
வாடி வருந்தாது வந்தெனைக் காப்பாய்.

தொல்லை வினை களைபவனே தொண்டர்க் கினியவனே
இல்லை இனிபபய மெனக்கு ஈசன் மகன் துணையிருக்கு
எல்லையில்லா ஆனந்தமே ஏங்கி அழைக்கின்றேன்
நல்லைக்குருமணியே பொன் மயிலேறி வருவாயே

சிந்தையில் இனிக்கின்ற சின்னஞ் சிறு பாலகா
முந்தை வினை தீர்த்து முத்தி அருள்வாயே
விந்தை பல புரிந்த வீராதி வீரனே
எந்தை முருகையா என்முன்னே வாராயோ?

### 3 இகபரமிரண்டிற்கும் நின் சிற்றடியே கதி

பூலோக கைலாய நல்லூர்க்கந்தா
உலகாளும் தெய்வமே ஒப்பிலா மணியே
பலகாலம் உனைத்துடி அலைந்தேன்
மலர்ப்பாதம் நல்லையில் கண்டுமகிழ்தேன்

முருகா! நின் அபிஷேக அலங்காரம் கண்டால்
மாறாத பேரின்பமளிக்கும்
தீராததுய ரெல்லாம் தீரும்
ஏழேழு பிறவியும் சிறக்கும்

திருவும் கல்வியும் ஓங்கும்
சீரும் சிறப்பும் பெருகும்
வினையெலாம் பறந்தோடும்
பிறவியின் பயனைப் பெறலாம்.

குறுநகை புரியும் அழகேசனே
குறைவிலா வாழவுதரும் குமரேசனே
ஆடல் வல்லான் அருளிய அருட்கடலே
இகபர மிரண்டிற்கும் முருகையா! நின் சிற்றடியே கதி.

# தமிழின் தலைவன்

- நயினைக் கவிஞர்

ஓமென்ற இயற்கையின் ஒலிதந்த நாதத்தை
ஓங்கார தத்து வத்தைத்(த்)
தாம் நின்று கழகத்து அமர்ந்தாய்ந்த தந்தையின்
தளிர்க்காதில் உரைத் திட்டவன்
நானின்று குற்றத்தை நக்கீரர் சுட்டவே
நல்லாற்றுப் படை கண்டவன்
வானின்று சோதியின் பிழம்பாக வந்தவன்
வடிவேலன் தமிழின் தலைவன்

அண்டத்தின் திசையெல்லாம் ஆறுமுக மாகவே
அவதாரம் பெற் றானவன்
பிண்டத்தில் அச்சரம் பன்னிரண் டாகவே
பேறுதரு கை பெற்றவன்
கண்டத்தில் காத்திட மெய்யுயிர்ப் பெய்தவே
கரத்தான தமிழ் செய்தவன்
ஒன்றுற்று இயலிசை நாடக மெனமிளிர்
ஓங்காரன் தமிழின் தலைவன்

பைந்தமிழ் நிலமெலாம் செந்தமிழ் காத்திடப்
படைவீடு அமைத் தாண்டவன்
வந்தவல் வினையெலாம் வென்றிடக் கையினால்
வடிவேலை எதிர் விட்டவன்
குன்றிலும் மலையிலும் குதித்தாடி தமிழ்ப்புலமை
குதூகலம் கொள நின்றவன்
வென்றிடும் சென்றிடும் விரைந்திடும் என்பவன்
வேலவன் தமிழின் தலைவன்

கனிதந்து செந்தமிழ்ச் சுவைகொண்டு ஔவையைக்
கருத்தொன்று மகிழ் வித்தவன்
இனிதென்று காதலும் கற்புமாய் தமிழ்ப்பண்பில்
இருமாதர் புடை சூழ்ந்தவன்
தனி நின்று தமிழர்க்கு இடர்வந்த போதெல்லாம்
தன்வேலைத் தொழ வைத்தவன்
அணியென்று கவசங்கள் பலதந்து காப்பவன்
ஆறுமுகன் தமிழின் தலைவன்

நன்றி : நல்லைக் குமரன் மலர் 1993

# நல்லைக்குமரன் கட்டுரை மஞ்சரி


- இந்து சமயத்தில் முருக வழிபாடு – சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
- அப்பர் அடிச்சுவட்டைப் பின்பற்றிய ஈழத்தமிழர் ஈடேற்றம் உறுதி
  – மா.க. ஈழவேந்தன்
- ஸ்ரீ முருக விரதங்கள் – சமூகஜோதி கா. கணேசதாசன்
- அருணகிரிநாதர் போற்றும் அழகன் – திரு க.அருமைநாயகம்
- ஆலய வழிபாடும் சுயநலமற்ற சமய சமூகத் தொண்டுகளும்
  – சமூகமணி சி.சி. வரதராசா
- தமிழ் மொழியில் வழிபாடு – பண்டிதர் சி. பொன்னம்பலவாணர்
- அறம் வெல்லும் – செல்வி கு. சிவநந்தினி
- மாநகர சபையின் சமய பணியில் சொக்கனின் பங்கு
  – திரு இ. இரத்தின சிங்கம்
- வேலின் சிறப்பு – சைவப்புலவர் வை.சி. சிவசுப்பிரமணியம்
- மன்று(ஸ்)ளார் அடியார் – திரு வ. கோவிந்தபிள்ளை
- ஆண்டவனைப் பற்றினால் ஆனந்தமே – சைவப்புலவர் செ.பரமநாதன்
- நால்வர் காட்டிய வழி – திரு சு.இராஜன்
- பழனி மலை முதல் சுவாமி மலை வரை – திரு செ. நடராசா
- ஆலயங்களில் அமைதி பேணுவோம் – திரு. இ. இரத்தினசிங்கம்
- திருநெல்வேலி – திரு பொ. சிவப்பிரகாசம்
- பண்டைத் தமிழரிடையே நிலவிய நீர்வழிபாட்டு முறைகள்
  – திரு ஆர்.செ.சந்திரசேகரம்
- பதினெண் மேற்கணக்கு இலக்கியங்களில் முருக வழிபாடு
  – திரு ச.முகுந்தன்

# இந்து சமயத்தில் முருக வழிபாடு

– சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்

இந்து சமயத்தின் அறுவகைச் சமயப் பிரிவு களில் ஒன்றாக கௌமாரம் காணப்படுகின்றது. கௌமாரம் ஆகிய சமயப் பிரிவுக்குரிய முழுமுதற் கடவுளாகப் முருகப் பெருமான் சுட்டப்படுகிறார். அண்டசராசரம் எல்லாம் வியாபித்து நின்று இயங்குகின்ற பரம்பொருளாகிய இறைவனை அப்பனாகவும் அம்மையாகவும் பார்த்தது போல இளவலாகவும் குமரனாகவும் பண்டைய இந்துக் கள் கண்டு போற்றி வழிபட்டு வந்தார்கள். குமரன், கார்த்திகேயன், சுப்பிரமணியன், ஞானபண்டிதன், ஸ்கந்தன் எனப் பல பெயர்களால் அடியார்கள் முருகப் பெருமானைப் போற்றி வழிபட்டனர். 'முருகு' எனில் அழகு எனப் பொருள்படும். முருகு என்பதற்கு இளமை, மென்மை என்ற கருத்துக்களும் கூறப்படுகின்றன. பிரமாவாய் உல கத்தைப் படைத்தும், விஷ்ணுவாய் உலகத்தைக் காத்தும், உருத்திரராய் உலகத்தை அழித்தும் நிற்கின்ற பரசிவசோதிப் பிழம்பே ஆறுமுகப் பெரு மான் என்பது முருக உபாசகர்களின் நம் பிக்கையாகும். கலிகாலப் பாவங்களைப் போக் கவல்லது கலியுக வரதனாகிய கந்தவேட் பெரு மானின் தரிசனமே என வியாச பகவான் தன்னை நாடி வந்த தவசிரேஷ்டர்களுக்குக் கூறினார். தன்னை வழிபடுவோருக்கு எளிதில் கருணைபுரியும் தெய்வம் முருகன் என்பதை **"ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுலாம் கலிகல் மக்ஷ நாசினீம்"** என்ற சுலோகம் குறிப்பிடுகின்றது. பகை வருடைய ஆற்றலை வற்றச் செய்பவன் முருகன் என்றே வடமொழி நிகண்டாகிய அமரகோசம் கூறுகிறது. (சத்ருன் சோஷயதீதி ஸ்கந்த).

### சிவனுடைய மூர்த்தங்களில் சோமஸ்கந்த மூர்த்தங்கள்

சைவ சமயத்தவரின் முழுமுதற் தெய்வமாகிய சிவபெருமான் பல்வேறு மூர்த்தங்களில் காட்சி தருவார் என்றே சிவாகமங்கள் குறிப்பிடுகின்றன. சிவனுடைய இருபத்தைந்து மூர்த்தங்களிலே சிவனும் உமையும் இணைந்திருக்கும் மூர்த்தங்கள் பல உண்டு. உமாமகேஸ்வர மூர்த்தம், கல்யாண சுந்தரர், அர்த்த நாரீஸ்வர வடிவம் என்பன அவற்றில் சிலவாகும். ஆனால் சிவனுடைய வடிவங்களில் சோமஸ்கந்த மூர்த்தமாகக் காட்சி தரும் வடிவத் திலே குழந்தைத் தெய்வமாக முருகப் பெருமான் சிவனுக்கும் உமைக்கும் நடுவிலே காட்சி தருகின் றார். குடும்ப மூர்த்தமாகக் காட்சி தரும் வடிவம் இதுவே ஆகும்.

சிவபெருமானது ஆற்றல் வெளிப்பாடே முருகப் பெருமானின் திரு உருவம் ஆகும். இறைவனுடைய ஐந்து திருமுகங்களுடன் சக்தி சொருபமாகக் கீழ் நோக்கும் அதோ முகமும் சேர்ந்து முருகப் பெருமான் ஆறுமுகத்துடன் உயிர்களுக்குத் தனிப் பெரும் கருணை புரிகின்றார். சிவாலயங்களில் திருத் தேரில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் புரியும் வடிவம் சோமஸ்கந்த மூர்த்தம் ஆகும். சிவனிடம் இருக்கின்ற திருவருள் சக்தி, உமை வடிவில் ஒளிர்கின்றது. அது பின்னும் விரிந்து குழந்தை வடிவில் பாய்கின்றது. அந்தக் குழந்தையே முருக னின் வடிவமாகும். மரம் பூத்துக் கனி குலுங்க நிற்பது போல அருளின் முழுப் பயனையும் அடைய வைக்கும் திருக்கோலம் சோமஸ்கந்த மூர்த்தம் என்பது சைவ சமயத்தவர்களின் நம்பிக்கையாகும்.

### வேதங்களில் முருக வழிபாடு

வேதங்களில் முருகனைச் 'சுப்ரமண்யம்' என வழங்குகின்றனர். சுப்ரமண்யம் என்பதன் பொருள் பிரமஞானத்தில் விருப்பத்தை வளர்ப்பது என்பதா கும். வேத காலத்தில் முனிவர்கள் தங்கள் யாகாதிகளை முடித்த போது சுப்ரமண்யோம், சுப்ர மண்யோம், சுப்ரமண்யோம் என்று மும்முறை கூறுவ தாக தைத்திரீயாரண்யகம் கூறுகிறது. வேதங்க ளில் கூறப்படும் யாகங்களுக்கு இதம் செய்து கொண்டு பிரகாசிக்கின்ற தெய்வம் சுப்ரமண்யம் என்றே கூறப்பட்டுள்ளது.

### ஆகமங்களில் முருக வழிபாடு

சிவாகமங்களில் காமிகம், காரணம், சுப்ரபேதம் முதலியன முருகனின் வரலாற்றுக் குறிப்புக்களைக் கூறுகின்றன. அம்சுமத்பேதம், உத்தரகாமிகம்

முதலியனவும் முருகனைப் பற்றி எடுத்துரைக்கின்றன. உத்தரகாமிகம் முருகனுக்கு தனிக் கோவில் அமைக்கும் முறையையும் அமைக்கக் கூடிய இடங்களையும் கூறுகிறது. மலை, ஆறு, சோலை, காடு, மரத்தடி, தலைநகரம் போன்ற இடங்கள் முருகனுக்குக் கோவில் அமைக்கக்கூடிய சிறப்பான இடங்கள் என்று கூறப்படுகின்றன. குமார தந்திரம் என்னும் நூலில் முழுவதும் முருகனின் வரலாறு, பிரதிட்டைமுறை, விழா, பூசை, விரதம் முதலியன விபரமாகக் கூறப்பட்டுள்ளன. குமார தந்திரம் இருபத்தெட்டு ஆகமங்களின் சாரம் என்றும் அறிஞர் பெருமக்கள் கூறுவர்.

### இதிகாசங்களில் முருக வழிபாடு

முருகப் பெருமானின் மகிமை இதிகாசங்களில் கூறப்படுகின்றது. இராமாயணத்தில் விசுவாமித்திரர் இராம, இலட்சுமணருக்குக் கங்கையின் வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும் போது முருகனைப் பற்றியும் கூறுகிறார். பாரதம் முருகனை யோக புருஷர் எனப் போற்றுகின்றது. குமரனின் பெயர்கள் மகா பாரதத்தில் வனபர்வத்தில் முப்பத்திரண்டாம் அதிகா ரத்தில் தருமரின் வேண்டுகோளிற்கிணங் கத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. முருகன் தேவ சேனாதிபதியாகக் காட்சி தருவதை "**சேனைத் தலை வர்களில் நான் ஸ்கந்தன்**" என்று கீதையில் கிருஷ்ண பரமாத்மாவே குறிப்பிடுகின்றார்.

### புராணங்களில் முருக வழிபாடு

புராணங்களில் முருகனின் பெருமை பேசப் படுகின்றது. கந்தவேள் பெருமானின் திவ்விய சரித்திரத்தை கூறும் ஸ்கந்த புராணத்தைப் பக்திசுவை சொட்டும் பாடல்களாகத் தமிழில் நமக் குத் தந்தவர் கச்சியப்ப மா முனிவர் ஆவார். சிறந்த வேதாகம விற்பன்னராகிய கச்சியப்பர் முருகனே குருவாக உள்நின்று உணர்த்த இந்நூலைப் பாடியருளினார். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகை புருடார்த் தங்களையும் விளக்கி அவற் றைப் பெறும் வழிவகைகளையும் வகுத்துக் காட்டு வது கந்தபுராணம் ஆகும். திராவிடர்களின் சிந்தனையில் தோன்றிய உயர் தத்துவமென அறிஞர்களால் போற்றப்படும் சைவ சித்தாந்த தத்து வத்தின் சிறப்பியல்புகளை எல்லாம் எடுத்து விளக்கும் உயர்ந்த நூலாகக் கந்தபுராணம் திகழ்கிறது. "கந்த புராணத்தில் இல்லாத பொருள் எந்தப் புராணத்திலும் இல்லை" என்றொரு பழமொழி உண்டு. சமய சாஸ்திரக் கருத்துக்கள் எல்லாம் நிரம்பிய பொக்கிஷம் கந்தபுராணம் ஆகும்.

### முருக வழிபாட்டைப் பற்றிய பிற நூல்களும், குறிப்புக்களும்

காளிதாச மகாகவி அருளிய குமாரசம்பவம் என்னும் காவியம் முருகனைப் பற்றியே கூறு கின்றது. பாணினி தனது வியாகரண சூத்திரத்திலும் ஸ்ரீ தத்துவ நீதியிலும் குமாரக் கடவுளின் சிறப்பைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். பதஞ்சலி தமது காலத்தில் சிவன், ஸ்கந்தன், விசாகன் என்ற தெய்வங்களின் வணக்கம் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். குஷாண மன்னனாகிய கனிஷக மன்னனின் நாணயத்தில் கிரேக்க எழுத்தில் ஸ்கந்தோ, விசாகோ என்ற பெயர்களில் முருகப் பெருமானின் திரு உருவங்கள் காணப்படுகின்றன. வேத மாத்திரியின் விரத கண்ட என்ற நூலில் கார்த்திகேயன் என்ற தெய்வத் துக்குரிய புனித கிரியைகள், விரதங்கள் என்பன பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. பழைய காலத்தில் பம்பாய் பிரதேசத்தை ஆண்டு வந்த சாளுக்கிய மன்னர்கள் தங்கள் அரசு தங்களுக்குக் கார்த் திகேயன் திருவருளால் கிடைத்தது என்று கல் வெட்டுக்களில் பொறித்திருந்தனர். சன்மதங்களை மீள வகுத்த சங்கராச்சாரியார் தாம் செய்த "**சுப்ரமணிய புஜங்கம்**" என்னும் தோத்திரப் பாமாலையில் அறியாமை நீங்கி ஞான ஒளி பெறுதலே "**ஸ்கந்த சாயுச்சியம்**" என்று கசிந்துருகிப் பாடியுள்ளார்.

### தமிழகத்தில் முருக வழிபாடு

ஆதித்த நல்லூரில் கண்டுபிடிக்கப்பட்ட பழைய கலாத்து சேவல், மயில் ஆகிய சின்னங்கள் தமிழ் நாட்டில் முருக வழிபாட்டின் தொன்மைக்குச் சான்றாக இருக்கின்றன. உயர்ந்து காணப்படும் மலைக்கு உயர்ந்து விளங்கும் முருகனையே உரிய தெய்வமாகத் தொல்காப்பியம் காட்டுகிறது. "**சேயோன் மேய மைவரை உலகம்**" என்ற வரிகள் இதனை நிரூபிக்கின்றன. சிலப்பதிகாரம் முருக னுக்குத் தமிழ் நாட்டில் கோயில் இருந்ததை, "**அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்**" எனக் குறிப்பிடுகின்றது. புறநானூற்றில் முருகனைத் "**திருத்தகு சேய்**" எனப் புலவர்கள் போற்றினார்கள். முருகனைப் பல்வேறு தமிழிலே தமிழகத்து அடியார்கள் பலரும் பாடிப் பரவினார்கள். சங்கத்தமிழில் முருகனைப் பாடினார் நக்கீரர், புராணத்தமிழில் முருகனைப் பாடினார் கச்சியப்பர், பிள்ளைத்தமிழில் முருகனைப் பாடினார் பக ழிக்கூத்தர், சந்தத்தமிழில் முருகனைப் பாடினார் அருணகிரியார். முருகனிடம் அடியார்களை

ஆற்றுப்படுத்தும் நூல் திருமுருகாற்றுப்படை ஆகும். சிறந்த பக்திப் பிரபந்தமாகிய இந்நூல் திருமுறை வரிசையிலும் தொகுக்கப்பட்டுள்ளது. இதில் முருகனுக்குரிய ஆறு படை வீடுகள் போற்றப் பட்டுள்ளன. கலித்தொகை, அகநானூறு, புறநா னூறு, ஐங்குறுநூறு, குறுந் தொகை, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் எல்லாம் முருக னின் பெருமை பேசப்பட்டுள்ளது.

சங்ககால மக்களால் குறிஞ்சி நிலத்தெய்வ மாக முருகன் போற்றப்பட்டான். சங்க இலக்கி யங்களில் வெற்றித் தெய்வமாகவும் போர்த் தெய்வமாகவும் வருணிக்கப்பட்டுள்ளான். சங்க காலத்தில் முருகவழிபாடு வெறியாட்டுடன் நடை பெற்றது. இவ்வழிபாட்டில் இறைவனுக்கும் மக்க ளுக்கும் தொடர்பு ஏற்படுத்திவைக்கும் பிராம ணருக்கோ அன்றிப் பூசாரிகளுக்கோ இடமில்லை. வழிபடுவோர் தம்மில் முருகன் வந்து வெளிப் படுவான் என்ற நம்பிக்கையுடன் கூத்தாடினர். இளம் பெண்க ளைக் காம நோயால் வருந்தச் செய்பவன் முருகன் என்றே சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

சங்க காலத்தின் பிற்பகுதியில் ஆரிய வழி பாட்டு நெறிகள் தமிழகத்தில் புகுந்து கொண்டன. ஆரியர்களின் சுப்ரமணியன் முருகனோடு இணைக் கப்பட்டான். குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகன் குறிஞ்சி நிலத்தலைமகளாகிய வள்ளியைக் காதலித்து திருமணம் செய்தான் என்றே சங்க இலக்கியங்கள் செப்புகின்றன. ஆரியர்களின் வருகைக்குப் பின்னே இந்திரனின் மகளாகிய தெய்வானையும் முருகனின் சக்தியாகப் போற் றப்பட்டாள். முருகனின் கிரியா சக்தியாகத் தெய் வானையும் இச்சாசக்தியாக வள்ளியும் ஞான சக்தியாகிய வேலும் போற்றப்பட்டு வருகின்றன. சங்கமருவிய காலத்தின் பிற்பகுதியிலும் பல்லவர் காலத்திலும் சோழர் காலத்தின் முற்பகுதியிலும் முருக வணக்கம் தமிழ் நாட்டில் முக்கியத்துவம் இழந்துபோக சிவவணக்கம் சிறப்பாகத் தலை யெடுத்தது.

சங்க காலத்தில் வெறியாட்டுடன் நடந்த முருக வழிபாட்டில் பலியிடுதல், மது அருந்துதல் ஆகிய செயல்கள் நடைபெற்றன. பல்லவர் காலத்தில் சமண பௌத்த மதங்களுக்கு எதிராக சமயப் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நாயன்மார்கள் முருக வழிபாட்டை முதன்மைப்படுத்தினால் தமது வாதம் வலிமை இழந்து விடும் என்ற காரணத் தினால் முதன்மைப்படுத்தாமல் விட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. எனினும் நாயன்மார்கள் திருப்பெருங்குன்றம், திருச்சேய்ஞலூர் ஆகிய முரு கன் தலங்கள் மீது பதிகம் பாடியுள்ளார்கள். சோழர் காலத்திலும் சிவவழிபாடே சிறப்புற்றிருந்தாலும் முருகப் பெருமானின் பெருமை பேசும் கந்தபுராணம் இக் காலத்திலேயே தோற்றம் பெற்றது. நாயக்கர் காலத்தில் முருக வழிபாடு மீண்டும் புத்துயிர் பெற்றது. திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, கந்தரந்தாதி, மயில்விருத்தம் வேல் விருத்தம் ஆகிய பாடல்களை அருணகிரிநாதர் பாடினார். குமரகுருபரர், தேவராயசுவாமிகள், தண்டபாணி சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் ஆகியோரும் முருகன் அருள் பெற்றுய்ந்த அடியார்கள் ஆவார்கள்.

**ஈழத்தில் முருக வழிபாடு**

ஈழத்தில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச் சிகளில் ஈழத்தாழிகள், சேவற்சிலை ஆகியன கண்டெடுக்கப்பட்டன. முருக வழிபாடு ஈழத்தில் மிகத் தொன்மைக் காலம் தொட்டே சிறப்பிடம் பெற்று இருக்கிறது. அசுரர்களோடு போரிட்டுத் தேவர்களைக் காப்பாற்ற வந்த திருமுருகன் கதிர் காமத்திலே பாசறை அமைத்துத் தங்கியிருந்தான் எனவும் கதிர்காமம் ஏமகூடம் என அழைக்கப்பட்ட தாகவும் வரலாறுகள் கூறுகின்றன. இலங்கையின் முதல் சிங்கள மன்னனாகிய விஜயனை அவனு டைய மனைவியாகிய குவேனியைக் கொலை செய்ய முற்பட்டபோது கதிர்காமக் கந்தனே காப்பாற்றினான் என '*இராஜவலிய*' என்ற இலங்கையின் வரலாற்று நூலில் குறிப் பிடப்பட்டுள்ளது. தமிழ் அரசனாகிய எல்லாளனை வெற்றி கொண்ட துட்டகைமுனு தனது நேர்த் திக்கடனை நிறைவேற்றுவதற்காக அந்தணர்களும் பிக்குகளும் புடைசூழக் கதிர்காமம் சென்று வந்தான் எனக் 'கந்த உபத' என்ற சிங்கள நூல் குறிப்பிடுகிறது.

கதிர்காமத்தில் முருகனோடு எழுந்தருளியுள்ள சக்திகளில் ஒருத்தியாகிய வள்ளி என்னும் பெயர் தூய தமிழ்ப் பெயராகும். இதனால் கதிர்காமத் துக்கும் தமிழருக்கும் இடையேயுள்ள பழைமையான தொடர்பு புலனாகின்றது. அருணகிரிநாதப் பெரு மான் கதிர்காமத் தலத்தின் பெருமையை "**இற வாமல் பிறவாமல்**" என்ற பதிகத்தின் ஊடாக வெளிப்படுத்துகிறார். நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் "***அதிரவரு மாணிக்க கங்கை தனில் மூழ்கி***" என்ற பாடலில் கதிர்காமத் தலத்தின் பெருமையைத் தெளிவாகக் காட்டுகிறார். இன்றும் வேட்டுவ பரம்பரையினரான கப்புறாளைகளே கதிர்

காமக் கந்தனின் பூசகராயும் அறங்காவலராயும் விளங் குகிறார்கள்.

ஆகம மரபுக்குட்பட்ட முருக வழிபாடே தமிழ கத்தில் பெரிதும் நிலவி வருகிறது. இங்கு கிராமிய வழிபாட்டுடன் கூடிய பழைய தமிழ் மரபிலும் ஆகம முறைப்படியும் பெரும்பாலும் வழிபாடுகள் நடை பெறுகின்றன. கதிர்ககாமம், செல்வச்சந்நிதி, மண்டூர் ஆகிய முருகன் ஆலயங்களிலெல்லாம் ஆகம மரபுக்கு உட்படாத பூசைகளே நடைபெறுகின்றன. இந்த ஆலயங்களில் பூசை செய்பவர்கள் வாயைத் துணியால் கட்டியே பூசை செய்கிறார்கள். கதிர் காமத்தில் பூசை செய்பவர்கள் வேடர்கள் பரம் பரையில் வந்த கற்புறாளைகள் என்றும் மண்டூர் முருகன் கோயிலில் பூசை செய்பவர்கள் கப்பூகர் என்றும் அழைக்கப்படுகிறார்கள். அன்னதானக் கந்தன் என்று போற்றப்படும் செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் ஈழத்து திருச்செந்தூர் எனப் போற்றப் படுகிறது. பரதவர் குலத்தைச் சேர்ந்த மருதர் கதிர்காமருக்கு முருகப் பெருமானே நேரில் தரிசனம் கொடுத்துக் கையில் வேலைக் கொடுத்து பூசிக்கும் படி கட்டளையிட்டார். கதிர்காமர் வழி வந்தவர்கள் அறுபத்து நான்கு ஆலம் இலையில் அமுது படைத்து இன்றும் கிரியைகளைச் செய்து வருகிறார்கள்.

சோழ இளவரசியாகிய மாருதப்புர வீரவல்லியின் குதிரைமுகம் மாறப்பெற்றமைக்காகச் சோழ மன்னன் மாவிட்டபுரத்தில் சிறந்ததோர் முருகன் ஆலயத் தைக் கட்டுவித்தான். ஆகம முறை தவறாது குமார தந்திரமுறையில் கிரியைகள் இவ் ஆலயத்தில் நடைபெறுகின்றன. புவனேகபாகு மன்னனால் கட்டப்பட்ட நல்லூர் முருகன் ஆலயம் போர்த்துக் கேயரால் இடித்துத் தரைமட்டமாக் கப்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் கந்தபுராண படலம் நடக்கும் வேற் கோட்டமாக ஆரம்பித்த மடாலயமே இன்று நல்லூர்க் கந்தசுவாமி கோவிலாகக் காட்சி தருகின்றது. இப்படியாக ஈழத்திருநாடு முழுவதும் முருகன் ஆலயங்கள் செறிந்து காணப்படுகின்றன. முருக வழிபாட்டை உலகின் பல பாகங்களிலும் பரப்பிய பெருமை நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டிமாரையே சாரும். கொழும்பு மாநகரத்தில் வருடா வருடம் இவர்கள் சிறந்ததோர் வேல் விழாவை மிக விமரிசையாக நடாத்தி வருகிறார்கள்.

**வேல்வழிபாடு**

ஈழநாட்டில் முருகப் பெருமான் எழுந்தருளி யிருக்கும் ஆலயங்கள் பலவற்றில் முருகனை வேலில் ஆவாகனம் செய்து வழிபடும் முறையே இன்றும் இருந்து வருகிறது. சிலப்பதிகாரத்தில் வரும் வேற்கோட்டம் என்னும் தொடர் தமிழ் நாட்டில் வேல், முருகனாக வழிபடப்பட்ட வரலாற்றை நமக்குக் காட்டுகிறது. "வேலும் மயிலும் துணை" என்பதே முருகனடியார்களின் தியான மொழியாகும். முருகனுடைய கையில் இருக்கும் வேலானது உயிர்களின் வினைகளை அகற்றி உண்மையான பக்தி அவர்களிடம் தோன்றுவதற்குக் கருவியாக அமைகிறது. ஞான சக்தியாகிய வேலைத் தாங்கிய முருகவேளை "ஞானத்தானுருவாகிய நாயகன்" எனச் சிங்கமுகாசுரன் போற்றுவதைக் கந்த புராணத்திலே காணலாம். முருகப் பெருமானைப் போற்றித் துதிக்கும் பாடலாகிய "மூவிரு முகங்கள் போற்றி" என்ற பாடலின் இறுதி வரியில் "திருக்கை வேல் போற்றி போற்றி" என்று ஞான சக்தியாகிய வேலிற்கு கச்சியப்ப சிவாச்சாரியார் இரண்டு முறை வணக்கம் தெரிவிக்கின்றார். இருபதாம் நூற்றாண் டின் இணையற்ற கவிஞனாகிய மகாகவி பாரதி யாரும் வேலனைத் துணை கொண்டால் நமது பகையெல்லாம் தூர விலகிடும் என்பதை "வெற்றி வடிவேலன் அவனுடைய வீரத்தினைப் புகழ்வோம், சுற்றி நில்லாதே போ பகையே துள்ளி வருகுது வேல்" என வேலின் பெருமையைப் போற்றித் துதிக்கின்றார்.

வட இந்தியாவைப் பொறுத்த வரையில் புராண காலத்துக்கு முன்னர் முருகப் பெருமானுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமைக்கான ஆதாரங் களைக் காண முடியவில்லை. முருகப் பெருமானை பிரமச் சாரி முருகனாகவே அவர்கள் இன்றும் வழிப டுகிறார்கள். தென் இந்தியாவில், சிறப்பாகத் தமிழ் நாட்டில் முருக வழிபாடு தொன்று தொட்டே நிலவி வருகிறது என்பதனை சங்க இலக்கியங்களில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. இலங்கை யிலும் முருக வழிபாடு தொன்று தொட்டு நிலவி வருகிறது. இந்தியாவிலும் ஈழத்திலும் முருக வழிபாடு மிகப்பழைய காலந்தொட்டே நிலவி வருவதுடன் இன்றும் மிகப்பக்தி பூர்வமாகப் பேணப் பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

# அப்பர் அடிச்சுவட்டைப் பின்பற்றின் ஈழத்தமிழர் ஈடேற்றம் உறுதி

- மா.க. ஈழவேந்தன்

### அப்பரின் வாழ்வு

7ம் நூற்றண்டு எழுச்சி மிக்க காலமாக விளங்கியது. பல்லவர் ஆட்சி தமிழகம் எங்கும் பரவி இருந்தது. தமிழகத்தில் முதன் முதலாக கற்கோயில் கட்டிய பெருமை பல்லவரையே சாரும். ஆனால் இப்பல்லவர் யார் என்பதை எளிதில் விளங்க முடியாதளவிற்கு அவர்கள் எங்கு தோன்றினர்? எங்கிருந்து தோன்றினர்? என்பது வரலாற்றில் கேள்விக்குறியாக விளங்கியது. ஆனால் அவர்கள் சமணத்தையும், புத்தத்தையும் தழுவி அவற்றிற்கு வாழ்வு கொடுத்ததாக அறிகின்றோம். அப்பர் 6ம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றி 7ம் நூற்றாண்டு நடுப்பகுதி வரை வாழ்ந்தார் என்று கருதுவதற்கு சில வரலாற்றுக் குறிப்புக்கள் துணை நிற்கின்றன. இவரும், இவரை விட மிக்க இளையவருமாகிய திருஞான சம்பந்தரும், தமிழகத்தைச் சூழ்ந்திருந்த சமண இருளை அகற்ற ஆற்றிய பணி அளவிடற்கரியது. எனவே தான் நமது சேக்கிழார் தனது செந்தமிழ் காப்பியமாகிய பெரிய புராணத்தில் "சைவத்தின் புண்ணியக் கண்கள் இரண்டு" என்று நாவுக்கரசரையும் ஞானசம்பந்தரையும் நயம்பட வாழ்த்துகின்றார்.

### நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும்

திருஞான சம்பந்தரைப் பற்றிக் குறிப்பிடுகையிலே "திசையனைத்தின் பெருமை எல்லாம் தென்திசையை வென்றேற அசைவில் செழுந்தமிழ் வழக்கே பெருகிட தோன்றிய தோனியுற தோன்றுலார்" என்று ஞானசம்பந்தரை உச்சி மீது வைத்து உவந்து போற்றுகின்றார் சேக்கிழார்.

ஞானசம்பந்தர் பிறப்பால் பார்ப்பனர். ஆனால் தமிழ்ப்பற்று மிக்கவராய் விளங்கியதால், பற்றற்றான் பற்றினைத் தழுவி நின்ற இவர் பைந்தமிழிலே இறைவனின் புகழ் பாடினார். தன்னைத் தமிழ் ஞானசம்பந்தர், தமிழ் ஞான விரையன் என்று 50 இடங்களுக்கு மேல் குறிப்பிடும் இவர், தமிழின் பெருமையை 500 இடங்களுக்கு மேல் வியந்து பேசுகின்றார். இவர் எம் உள்ளத்தை ஈர்க்கின்ற முறையில் ஓர் இடத்தில் "எங்கே தமிழின் நீர்மை, பெருமை பேசப்படுகின்றதோ அங்கே நான் இறைவனைக் காண்கின்றேன்" என்கின்றார்.

### தமிழோடு இசைபாடிய தாண்டக வேந்தர்

நமது நாவுக்கரசரோ இறைவனை எம் மொழியில் வழிபட வேண்டும் என்பதை "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன் உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்" என்று பாடுகின்றார். நாவுக்கு அரசர் தமிழில் இறைவனை வழிபட்டது மட்டுமல்ல, எந்தவித தரகரின் துணை இன்றி தானாகவே இறைவனை வழிபட்டார். "போதொடு நீர் சுமந்து ஏற்றி புகுவார் அவர் பின் புகுவேன்" என்ற அவரின் பாடல் வரி எவரின் துணையுமின்றி இறைவனை நேரில் வழிபட்டதற்குச் சான்று. மற்றும் "நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு புலர்வதன் முன் அலகிட்டு மெழுகிட்டு பூமாலை புனைந்தேற்றி புகழ்ந்து பாடி" இறையருளினை வேண்டி நின்ற வரலாற்றினைக் காண்கின்றோம்.

கடவுளுக்குத் தமிழ் தெரியுமா? என்று கேட்கின்ற படித்த அறிவிலிகளும், மந்திர சக்தி வடமொழிக்குத்தான் உண்டென்று தாமும் மயங்கி, எம்மையும் மயக்குகின்ற ஒரு கும்பல் இம் மண்ணில் தொடர்ந்து வாழ்வது தான் எமக்கு வியப்பினைத் தருகின்றது. 'செந்தமிழ் உடல், சிவநெறி உயிர்' என்று மேடை தோறும் முழுங்கும் இம் மேதாவிகள் கோயில் வழிபாடு என வருகின்றபோது

கோயில் படிக்கட்டின் மேல் நின்று தமிழ் மானத்தை வடிகட்டி வடமொழியை மந்திரம் என்று உவக்கின்ற இவ் அறிவிலிகளை நாம் எப்படி வர்ணிப்பது?

### தமிழ் வழிபாட்டின் தலைமை

முருகனை நாம் குறிப்பிடுகின்றபோது தமிழ் காக்கும் முருகன் என்று ஓங்கி முழங்குகின்றோம். ஆனால் முருகன் வள்ளியை எந்த மொழியில் காதலித்திருக்கவேண்டும் என்ற கேள்வியைக் கேட்டு, அது தமிழிற்றான் இருக்க முடியும் என விடை கூற முயல்கின்ற போது தமிழின் பெருமை பேசும் இத்தமிழ் அறிஞர்கள் அதற்குத் தயக்கம் காட்டுகின்றனர்.

கோயிலுக்குச் செல்கின்ற நாம் காலில் அணிந்துள்ள செருப்பினை, ஓரத்தில் வைத்து விட்டுச் சென்று திரும்பி வந்து பார்க்கின்ற போது, வைத்த இடத்தில் செருப்பு இல்லாவிடில் ஆத்திரப் படுகின்றோம். ஆனால் எம் உயிரனைய மொழி கோயிலுக்குள் போக முடியாது தத்தளிக்கின்ற போது அதனைப் பற்றி எமக்கு கவலை இல்லை. தன் செருப்பைப் பற்றிக் கவலைப்படுகின்ற தமிழன் தன் செந்தமிழ் அழிவைப் பற்றி கவலைப்படுவதில்லை. கடவுளுக்குத் தமிழ் தெரியுமா? என்று சிலர் கேட்பதன் விளைவு தான், கோயிலில் தமிழ் இடம் பெறாதது பற்றி நாம் கவலையற்றிருக்கின்றோம் போல் தோன்றுகின்றது. ஆனால் நாம் கேட்கின்ற கேள்வி, கடவுளுக்கு தமிழ் தெரியாவிட்டால் கடவுளுக்கு தமிழ் நாட்டில் என்ன வேலை? என்பது தான்.

### சிவநெறிக் கோயில்களில் செந்தமிழ் இல்லை. ஆனால் கிறிஸ்தவக் கோயில் களில் தமிழ் கோலோச்சுகின்றது.

கிறித்தவர்கள் குறிப்பாக கத்தோலிக்கர், போர்த்துக்கேயப் படையெடுப்பின் விளைவு என்பதை நாம் மறுக்கவில்லை. இவ் அந்நியப்படை, எம் கோயில்களை அழித்துத் தரைமட்டமாக்கியதை யாம் மறுக்கவில்லை. எம் மதத்தில் சேர்ந்தால் தான் விண்ணுலக வாழ்வு உங்களுக்கு உண்டு. இல்லாவிடின் பாதாளப் படுகுழியில் நீங்கள் வீழ்வீர்கள் என்று எம்மை அவர்கள் அன்று அச்சுறுத்தி யதும் உண்டு. இவற்றுக்கெல்லாம் இன்றைய கிறித்தவர்கள் பொறுப்பல்ல. இவர்கள் முன்னோர் செய்த பாவத்துக்கு இவர்கள் மீது பழிபோடுவது தவறு. அன்று கிறித்தவக் கோயில்களில் இப்று மொழி வழிபாட்டு மொழியாக விளங்கியது. பின்பு இலத்தீன் புகுந்தது. பின்பு ஆங்கிலம் நீண்டகாலம் ஆட்சி செய்தது. பின்பு தமிழ் வழிபாடு தோன்றிய போது 'பரமண்டலத்திலுள்ள பிதாவே, எங்களை இரட்சித் தருளும்' என்ற வடமொழி கலந்த வழிபாடு எங்கும் நிலவியது.

ஆனால் இப்பொழுது என்ன நடக்கின்றது? விண்ணுலகில் வீற்றிருக்கும் இறைவா, எம்மை ஆட்கொண்டருளும் என்ற தூய தமிழ் அல்லவா எங்கும் துலங்குகின்றது. கிறித்தவ சமயப் பெரியார்களை அருட்தந்தை, அருட்செல்வி என்று அழகு தமிழில் அழைக்கையில் எம்மிடையே 'திரு' வையும் நீக்கி, திருநிறைச் செல்வியையும் நீக்கி 'ஸ்ரீ' யும், 'ஸ்ரீமதி', 'ஸ்ரீலஸ்ரீ' என்ற வேண்டாத வட சொற்கள் எம் மொழியில் எப்படிப் புகுந்துள்ளது? எம்மிடம் சொற்கள் இல்லாத போது கடன் வாங்குவது தவறு அல்ல. ஆனால் இருக்கின்ற சொற்களை இழப்பதா?

எம் இஸ்லாமிய உடன் பிறப்புக்கள் என்னதான் குழப்பத்தையும், குத்துக் கரணத்தையும் ஏற்படுத்தினாலும் அவர்கள் விரதம் அனுஷ்டிப்பதில்லை. மாறாக நோன்பு நோற்கின்றார்கள். ஆனால் நாமோ விரதம் அனுஷ்டிப்பதை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டிருக்கின்றோம். இஸ்லாமியர் 'தொழுகையில்' ஈடுபட்டிருக்கையில் நாமோ பிரார்த்தனை தான் வேண்டும் என்று சொல்கின்றோம். எமக்கு குடமுழுக்கு என்றால் புரியாது. எமக்கு கும்பாபிஷேகம்என்றாற்றான் புரியும். நீராடல் தெரியாது. ஆனால் ஸ்நானம செய்யத் தெரியும். இவ்விதம் தன் மொழியைத் தாழ்த்தி இன்பம் கண்ட ஓரினம் உலகத்தில் உண்டோ யாமறியோம்.

### என்கடன் பணி செய்து கிடப்பதே என்று வாழ்ந்தவர்

அப்பரை எண்ணுகின்ற போது அவரின் தமிழ் வழிபாடு மட்டும் எம் நினைவிற்கு வருவதில்லை. மாறாக அவரின் தொண்டுள்ளம் எம்மை அப்படியே ஆட் கொள்கின்றது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே
தன் கடன் அடியேனைத் தாங்குதல்"

என்ற அப்பரின் ஆளுமை மிக்க சொற்

றொடருக்கு ஈடான சொற்றொடர் உலகத்தில் உண்டோ யாமறியோம். வேறு சொற்களில் விளம்பின் தன் கடன் பணி செய்து கிடப்பது என்பதையும், இறைவனின் கடன் தன்னைத் தாங்குவது என்பதையும் எளிமை மிக்க ஏற்றமிக்க சொற்றொடரால் விளக்குகின்றார்.

### உழவாரப் படையாளி

இவருடைய பணியில் கோயிற் பணி மிகப் பெரிதாக அமைந்துள்ளது. வாழ்வு மலர அகத் தூய்மையும், புறத் தூய்மையும் தேவை. கோயில் உள்ளே சென்று இறைவனை தூய உள்ளத்துடன் வழிபடல் வேண்டும். அவ்வுள்ளத் தூய்மைக்கு புறத் தூய்மை துணை நிற்க வேண்டும். எனவே தான் கோவிலில் சுற்றாடலை உழவாரம் கொண்டு செதுக்கித் தூய்மைப்படுத்தினார். எனவே அப்பர் உழவாரப் படையாளி என்ற பெயரையும் பெற்றார்.

### கொஞ்சும், கெஞ்சும், விஞ்சும், உருக்கும் தமிழ் பாடிய நால்வர்.

நற்றமிழுக்கு வாழ்வு கொடுத்தவர் நால்வர். ஞான சம்பந்தர் இறைவனுக்கும் தனக்கும் நெருங் கிய உறவு உண்டு என்ற நிலையில் மிடுக்கோடு 'கொஞ்சும் தமிழ்' பாடினார். ஐயோ! என்னை எந் நிலையிலும் விட்டு விடாதே என்று 'கெஞ்சும் தமிழ்' பாடினார் எம் ஆளுடைய அரசர். நம் ஆளுடைய நம்பி , சுந்தரரோ இறைவனோடு தோழமை கொண்டு 'விஞ்சும் தமிழ்' பாடினார். இறைவனிடம் நெல்லைக் கேட்ட சுந்தரர் அந்நெல்லைக் கொண்டு செல்லக் கூலி கேட்கும் அளவிற்கு இறைவனிடம் உரிமை கொண்டா டுகின்றார். எனவே தான் எவரும் துணியாத அளவிற்கு இறைவனை 'பித்தா' என அழைத்தார். இவர்கள் அனைவரையும் மிஞ்சுகின்ற அளவிற்கு மாணிக்கவாசகரின் திருவாசகம் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவதால் மாணிக்கவாசகரின் தமிழை 'உருக்கும் தமிழ்' எனக்கூறுகிறோம்.

இவ்விதம் நால்வரில் தமிழின் திறன் பற்றி அறிஞர் பலர் சுவைபடக் கூறுவர். அப்பர் பல துறைகளில், பல பண்களில் தேவாரத்தைப் பாடி யுள்ளார். ஆனால் தாண்டகத்துறையில் அவர் பாடிய பாடல்கள் அவருக்கு அழியாப் புகழைத் தந்துள்ள தால், அவரை 'தாண்டக வேந்தர்' என தமிழ் அறிஞர் உலகம் அழைக்கும். நால்வர் தமிழையும் நாம் தனித்து, சுவைக்கின்ற போது தனிச் சுவை யைப் பெறுகின்றோம். ஆனால் அப்பரின் பாடல் அனுபவ ஊற்றாக பட்டுணர்வாக மிளிர்கின்றது.

### நாமார்க்கும் குடியல்லோம் என வாழ்ந்தவர்

80 ஆண்டுகள் நிறைவு வாழ்வு வாழ்ந்த அப்பரின் வாழ்வை நாம் ஆராயப்புகின் அது கட்டுரையாக மாறாது பெரும் நூலாக உரு வெடுத்துவிடும் என அஞ்சி, இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப அவரின் ஒரு பாடலை மட்டும் நினைவு கொண்டு இக் கட்டுரையை நிறைவு செய்யலாம் எனக்கருதுகின்றேன். அப்பர் தம் சைவக் கொள் கையில் இறுக்கமாய் இருந்ததன் விளைவு அன்று மணிமுடி தாங்கிய மகேந்திர பல்லவனின் பகையைத் தேடும் நிலைக்கு ஆளானார். அப்ப ரைச் சோதிக்கின்ற முறையில் அவருக்கு நஞ் சூட்டப்பட்டது. தாங்கமுடியாத வெப்பம் நிறைந்த சுண்ணாம்பு அறையில் பூட்டிவைக்கப்பட்டார். கல் லோடு கட்டி கடலில் வீசப்பட்டார். அப்போதெல்லாம் அப்பர் நிலை தளம்பவில்லை. மாறாக அஞ்சு வதொன்றுமில்லை. அஞ்சவருவதும் ஒன்றுமில்லை என முழங்கிய இவர் 'நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம்......' என்று மணிமுடி தாங்கிய மன்னன் மகேந்திர பல்லவனோடு அறவழியில் முட்டி மோதிய வரலாறு இவர் வாழ்வு.

### அறவழிப் போராட்டத்தில் அண்ணல் காந்திக்கே வழிகாட்டி

20ம் நூற்றாண்டில் வாழ்ந்த அண்ணல் காந்தியுடைய அறவழிப் போராட்டத்தை மிக்க உன்னத நிலையில் வைத்துப் போற்றுகின்றோம். அவருடைய அறவழிப் போராட்டத்தால் பிரித் தானியப் பேரரசு நடுநடுங்கியது என்று நவில் கின்றோம். அண்ணல் காந்தியை எந்நிலையிலும் நாம் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் அண் ணல் தோன்றியது 20ம் நூற்றாண்டு. அப்பர் தோன்றியது 7ம் நூற்றாண்டு அல்லது 6ம் நூற்றாண்டின் இறுதி. வேறு சொற்களில் விளம்பின் காந்தி தோன்றுவதற்கு 13ம் நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய அப்பர் தான் அறவழப் போராட்டத்தின் முன்னோடி என்பதை யாம் மறவாது இருத்தல் நலம். 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற அப்பரின் வீர முழக்கம் தான் 9ம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் 'யாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்' என்ற பாடலில் எதிரொலித்தது என்பதை யாம் ஒப்பு நோக்கி மகிழ்வோமாக.

சுருங்கக் கூறின், அப்பரின் வாழ்வில் இருந்து ஈழத் தமிழர்களாகிய நாம் படிப்பதற்குப் பல உண்டு. அவர் வாழ்வே நாம் பயில்வதற்குரிய பாடம். தாய் மொழியின் அருமை உணர்ந்து உள்ளம் தொடும் தமிழில் வழிபாட்டுக்கு வழி கண்டவர். எந்தத் தரகரின் துணையுமின்றி இறைவனை நேரில் வழிபட்டு இறை இன்பத்தில் மூழ்கியவர்.

**சாதி வெறியைச் சாடியவர்**

தொண்டு இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்கி, 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என வாழ்ந்தவர். சாதி வெறிக்குச் சாவு மணி அடிக்கின்ற முறையில் 'சாத்திரம் பல பேசும் சழுக்கர் கால் கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்' என்று கேட்டு ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே' என்று தமிழ் சமுதாயத்தில் ஊறிக் கிடந்த சாதி வெறியைச் சாகடித்த பெருமையும் அப்பரையே சாரும். இதனை எம்மவர் நினைவு கொள்வாராக.



இவை அனைத்திற்கும் மேலாக இன்று ஈழத் தமிழ் மக்களுக்கு மிக்க தேவையான பண்பு எவருக்கும் அடி பணியாத வீரம் செறிந்த வாழ்வே ஆகும்.'**நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்**' என்ற அப்பரின் பாடலை மிஞ்சுகின்ற அளவிற்கு வீரம் செறிந்த பாடலை நாம் காண் பதரிது. ஆன்மீகத் தலைவராக விளங்கிய அப் பரே இத்தகைய வீர வாழ்வு வாழ்ந் திருக்கையில், மக்களோடு ஒட்டி உறவு கொண்டுள்ள அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகளாகிய நாம் எம்மை நம்பி வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுகின்ற முறையில் வீரம் செறிந்த வாழ் வையன்றோ கடைப்பிடித்தல் வேண்டும். சிக்கல் களிலிருந்து ஒழித்தோடுபவன் கோழை, சிக்கலை எதிர்கொள்பவனே வீரன். உண்மையான ஆன் மீகவாதியும் சரி, அரசியல்வாதியும் சரி பிரச்சி னைகளை எதிர் கொள்ளப்பழகவேண்டும். அப்ப ருடைய வாழ்வு இப்பெருமையை இடித்திடித்து உரைக்கின்றது.

# உளமாரப் பணிந்தோமே வளமான வாழ்வு தாராய்!

– வைசப்புலவர் இராசையா ஸ்ரீதரன்

கந்தனே கடம்பனே கார்மயில் வாகனனே
கானக் குறத்தியின் காதலனே முருகனே!
உந்தனையே நம்பி உச்சியில் கரம் வைத்து
உளமாரப் பணிந்தோமே வளமான வாழ்வு தாராய்!
சிந்தையிலி னித்திடும் தேனே கற்கண்டே
சிங்கார வேலவனே சிரந்தாழ்த்தி வணங்கி
வந்தனை செய்தோமே வழிபட்டு நின்றோமே
வரமது நல்கிடவே வாராய் மயிலேறி!

# ஸ்ரீ முருக விரதங்கள்

- சமூகஜோதி கா. கணேசநாதன்

விரதங்கள், மக்களின் மனவலிமை அதிகரிக்கவும் நம்பிக்கைகளின் அடிப்படையில் அவர்களின் வாழ்வில் வளமும் நலமும் மிகுவதற்குப் பயன்படுகின்றன. விஞ்ஞான முறைப்படி பார்த்தாலும் குடும்ப நலம், உடல் நலம், பரம்பரை விசுவாசம், தன்னம்பிக்கை, துணிவு, பணிவு, பக்தி ஆகியவற்றை அதிகமாக்கி வாழ்வில் ஒழுக்கத்தையும் நேர்மையையும் இவை அதிகரிக்கின்றன.

விரதங்கள் மேற்கொள்வதால் தெய்வ நம்பிக்கை அதிகமாகிறது. ஒழுக்கமும் கட்டுப்பாடும் ஏற்படுகின்றன. உடல் ஆரோக்கியம் பெறுகிறது. ஆயுள் அதிகமாகிறது. பிரச்சினைகள் குறைகின்றன. தனி மனிதனின் நன்மை பெருகுவதால் அவர் குடும்பமும் நன்மை பெறுகிறது.

இரக்க சிந்தனை, தருமம் செய்யும் குணம் ஆகியவை வளருகின்றன. விரதங்கள் நமக்கு ஒருபோதும் விரோதமான நிலையைத் தரவில்லை.

**விரதங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்**

விரதம் இருப்பவர்கள் ஆணாக இருந்தால் முதலில் குடும்பத்தாரின் அனுமதி பெற்றே விரதம் இருக்க வேண்டும். கன்னிப் பெண்ணாயின் பெற்றோரின் அனுமதியுடனும், மணமான பெண்கள் கணவனின் தாயாரான மாமியாரின் அனுமதி பெற்ற பின்பும் விரதம் இருக்கவேண்டும். பிறருக்கு உடன்பாடு இல்லாச் சூழ்நிலையில் இருக்கும் விரதம் முழுப்பயனைத் தராநோயாளிகள், மிகவும் வயதானவர்கள், குழந்தைகள், விரதம் இருக்கவேண்டிய அவசியமில்லை. பெண்கள் வீட்டுக்கு விலக்காகி ஏழு தினங்கள் ஆன பிறகே விரதம் மேற்கொள்ளலாம். குழந்தை பிறந்து 48 தினங்களுக்குப் பிறகே விரதங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் இறந்தால் அவர்கள் இறந்து மூன்று மாதங்களுக்குப் பிறகே விரதங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். விரதமிருக்கும் பெண்கள் அதிகாலை சூரிய உதயத்திற்கு முன்னால் குளித்துச் சுத்தமாக இருக்க வேண்டும். வீடுகளைக் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டும். விரதத்திற்காக சமையல் செய்யும் பாத்திரங்கள் புதிதாகச் கழுவப்பட்டிருக்க வேண்டும். ஏற்கனவே சமைத்ததாகவோ அசைவ உணவுகளைச் சமைத்த பாத்திரமாகவோ இருக்கக் கூடாது. விரதம் இருப்பவர்கள் பிறர் மீது கோபப்படுதல், பிறரைப் பற்றித் தவறாகப் பேசுதல், பிறருடைய மனதைப் புண்படும்படி கேலி செய்தல், பிறரிடம் பேசாதிருத்தல், அதிகமாகப் பேசுதல் ஆகிய எதுவுமே செய்யக்கூடாது.

விரதத்தின் போது அசைவ உணவுகளைச் சாப்பிடுவது மட்டுமல்ல பிறருக்கு சமைத்துக் கொடுப்பது கூடத் தவறாகும். வெற்றிலை, பாக்கு போடுதல், புகைபிடித்தல், மது அருந்துதல் முதலியவையும் கூடாது.

விரதங்களுக்கு தகுந்த படி ஒருவேளை, இரண்டு வேளை, மூன்று வேளையும், உபவாசம் இருத்தல் ஆகிய எதற்கும் தயாராக இருத்தல் வேண்டும். நிபந்தனைகளை அரைகுறை மனத்தோடு இல்லாமல் முழுமனத்தோடு ஏற்றுக்கொள்பவர்களாக இருத்தல் வேண்டும். விரத பூசைகளின் போது ஒவ்வொரு முறையும் விநாயகருக்குப் பூசை செய்த பிறகே விரதத்திற்கான தெய்வங்களுக்குப் பூசை செய்ய வேண்டும்.

விரதம் என்பது இதயபூர்வமாகச் செய்யப்பட வேண்டும். பெண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தங்கள் கணவரின் அனுமதி பெற்றுத்தான் விரதத்தில் ஈடுபடவேண்டும். எந்த விரதத்தினை அனுட்டித்தாலும் முதலில் குளிர்ந்த நீரில் குளித்துச் சந்தியாவந்தனம் போன்ற நித்திய கருமங்களை முடித்துக் கொண்ட பின்னர் பூஜைக்குரிய செப்புப் பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து வர வேண்டும். எந்த விரதத்தை

மேற்கொள்ளப் போகிறோமோ அந்த விரதத்தின் பெயரைக் கூறிச் சங்கற்பம் செய்ய வேண்டும். விரதம் மேற்கொள்ளுகின்ற தினம் முழுவதுமே உணவைத் தவிர்ப்பது சிறப்பாகும். ஒரு வேளை முடியாவிட்டால் பகலில் மட்டும் எதையுமே சாப்பிடாமலிருந்து இரவு வேளையில் சிற்றுண்டியாகப் பலகாரத்தைச் சாப்பிடலாம்.

விரதம் இருப்பவர்கள் உடலுறவிலே - தாம்பத்திய உறவில் ஈடுபடுதல் கூடாது. தவறான உணர்ச் சிகளை உருவாக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தல், அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் கேட்டல் கூடாது. விரதம் என்ற பெயரை வைத்துக் கொண்டு அடிக்கடி நீராகாரம் சாப்பிடக்கூடாது. நாம் விழித் திருந்து இறைவழிபாட்டில் நமது எண்ணங்கள், சிந்தனையைச் செலுத்த வேண்டும்.

தீட்சை பெற்றவர்கள் பூஜைகளைச் செய்யலாம். பெறாதவர்கள் வழிபாடு, தீபாரா தனைகளிலே கலந்து கொண்டு வழிபடலாம். தகைமையே எதற்கும் பிரதானம். பூஜைகள் பூர்வாங்க பூஜை, பிரதான பூஜை, உத்தராங்க பூஜை, புனர் பூஜை என்று நான்கு வகையில் பிரித்துள்ளனர்.

விரத காலங்களில் எதுவுமே அருந்தாமல் நீர் மட்டும் அருந்தி உபவாசம் இருப்பதே முறையான சிறந்த விரத முறையாகும்.

1. ஆடிக் கிருத்திகை முருகப் பெருமானுக்குரிய விரதம்
2. கந்தசஷ்டி (ஐப்பசி மாதம்) முருக விரதம்
3. கார்த்திகை விரதம்

கார்த்திகை விரதத்தின் மகிமையைச் சிவ பெருமான் கார்த்திகைப் பெண்களுக்கு அருளினார். கார்த்திகைப் பெண்கள் அறுவர் ஆவர். இவர்கள் குமாரக் கடவுளை எடுத்து வளர்த்தவர்கள். இதனால் தான் குமரன் ஆறுமுகம் என்று பெயர் பெற்றான். உமாதேவி எடுக்க ஆறுமுகத்துடன் ஒரே குழந்தையான குமரன் கிருத்திகை நட்சத்திரத்தில் விரதமிருந்து வழிபடுவோர், சிவபெருமான் முருகக் கடவுள் ஆகியோரின் அருளைப் பெறுவர்.

### கந்தசஷ்டி விரதம்

ஐப்பசி மாதம் சுக்கில பட்சத்துப் பிரதமை முதல் சஷ்டி வரையிலும் ஆறு நாட்களுக்கு முருகப் பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதமாகும். எல்லாச் சிவாலயங்களிலும் இந்த ஆறு தினங்களும் முருகனுக்கு சஷ்டி உற்சவம் கொண்டாடப் பெறும். ஆறுபடை வீடுகளிலும், பிற முருகன் ஆலயங்களிலும் இத்திருவிழா மிகவும் சிறப்பாக நிகழும்.

### கந்தசஷ்டி விரதமுறை

ஆறு நாட்களும் விரதம் இருப்பவர்கள் தினமும் காலையில் நீராடி உபவாசம் இருத்தல் வேண்டும். கோவிலிலோ அல்லது வீட்டிலோ முருகனை வழிபாடு செய்து பாராயணம் செய்யலாம். இக் காலங்களிலே கந்தபுராணபடனம், திருப்புகழ், கந் தசஷ்டி கவசம், சண்முக கவசம் போன்ற பாக்களைப் பாராயணம் செய்தல் சிறப்பாகும்.

கந்தசஷ்டியின் போது ஆறு தினங்களும் உபவாசமிருந்து ஆறாவது நாள் இரவு பால், பழம் சாப்பிடலாம் என்று சொல்லப்பெறுகிறது. உடல் நிலை இடம் கொடாதவர்கள் தினமும் ஒரு வேளை மதியமோ அல்லது இரவோ பலகாரம் அல்லது பால் பழமோ சாப்பிட்டுக்கொள்ளலாம்.

கந்தபுராணக் கதை சூரபத்மன் என்னும் கொடிய அரக்கன் வாள் சுமந்த தேவர்களை மீன் சுமக்க வைத்தவன். படாத பாடுபடுத்தினான். இந்திரன் மகன் ஜெயந்தனைச் சிறைப்படுத்தினான். சித்திரவதை செய்தான்.

தேவர்களின் வேண்டுகோளுக்காகச் சிவ பெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு பொறிகளாகத் தோன்றியவனே ஆறுமுகனாவான். ஆறுமுகன் சரவணப் பொய்கையில் ஆறு கார்த் திகை மாதர்களிடம் வளர்ந்தான். உமையவள் ஆறு குழந்தைகளையும் எடுத்து ஆறு திருமுகங்கள் உடைய ஒரு குழந்தையாக ஆக்கி சக்தி வேலையும் கொடுத்தாள்.

முருகக் கடவுள் சக்தி வேலால் சூரனைச் சங்காரம் செய்தான். அவனைச் சேவலும் மயிலுமாக ஏற்றுக் கொண்டான். சூரனுக்கும் முருகனுக்கும் போர் நடந்த ஆறு நாட்களே கந்தசஷ்டி தினங் களாகும். இந் நாட்களில் விரதமிருத்தல் மிகச் சிறப்பாகும். இந்த ஆறு நாட்களும் தேவர்களும் முனிவர்களும் முருகப் பெருமானைத் துதித்துக் கொண்டிருந்தனர். இயிதன் பின்னர் அதாவது

கந்தசஷ்டி ஆறு நாட்களின் பின்னரும், மாதந் தோறும் வரும் சுக்கில பட்சத்து சஷ்டியிலே முருகப் பெருமானை வழிபட்டு பாராயணம் செய்தும் பால், பழம் மட்டும் சாப்பிட்டும் விரதம் இருந்தால் முருகப் பெருமானின் அருளைப் பெறலாம்.

**விரதபலன்**

கந்தசஷ்டி விரதத்திற்குக் கணக்கற்ற பலன் களுண்டு "சஷ்டியிலிருந்தால் அகப்பையில் வரும்" என்பது பழமொழியாகும். சஷ்டியில் விரதமிருந்தால் கருப்பையில் குழந்தை உண்டாகும் என்பது இதன் பொருளாகும். (அகப்பை - கருப்பை) இவ்விர தத்தை முசுடுந்தச் சக்கரவர்த்தி முறைப்படி அனுஷ்டித்து எல்லாம் நலன்களும் பெற்றுச் சிறப்படைந்தார் என்று புராண வரலாறு கூறுகிறது. அதுமட்டுமன்றி இன்றும் பல முருகனடியார்கள் தங்களது இஷ்ட தெய்வமான முருகனை வழிபட்டு பேரின்பம் அடைந்ததனைக் கூறி மகிழ்வதையும் காதால் கேட்டுமிருக்கிறோம்.

**தைப்பூசம்**

தைமாதம் வரும் பூசநட்சத்திரத்தில் திருமுருகப் பெருமானுக்குக் கோயில்களிலெல்லாம் விழாக் கொண்டாடப்படுகிறது. செட்டிநாட்டைச் சேர்ந் தவர்கள் கார்த்திகை மாதத்திலிருந்தே ஏற்பாடுகளைச் செய்வார்கள். மார்கழி முதல் தேதி யன்று முதியோர்கள் மூலம் மாலை போட்டுக் கொள்வார்கள். அப்படி மாலை போட்டுக் கொண்டவர்கள் தினமும் இருவேளை குளித்து அருகிலிருக்கும் கோவிலுக்குச் சென்று முருகப் பெருமானின் துதிப்பாடல்களைப் பாடி தூப தீபம் காட்டி முருகக்கடவுளை வணங்கித்தான் தத்தம் அலுவல்களைக் கவனிப்பர். தங்கள் உணவைத் தாமே சமைத்துக்கொள்வதுமுண்டு. மாலை போட் டவர்கள் பழனிக்குச் செல்வார்கள். ஒரு வாரத்திற்கு முன்பு அல்லது பெரியோர்கள் கூடிக்குறிப்பிடும் நாளில் அனைவரும் ஒன்று சேர்வார்கள். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் சேர்ந்து மிகப் பெரியளவில் பூசை செய்வார்கள். பூசை முடிந்ததும் முருகன் திருப்பாடல்களைப் பாடியபடியே நடக் கத்தொடங்குவார்கள். இரவு பகல் பாராமல் சற்று நேரம் ஓய்வெடுப்பதும் நடப்பதுமாக 8 தினங்கள் நடந்து தைப்பூசத்தன்று பழனி முருகன் கோயிலுக்கு வருகிறார்கள். முருகனுக்கு முடிக்காணிக்கை செலுத்துகிறவர்கள் ஏனைய காணிக்கைகள் செலுத்துபவர்கள் அவற்றைச் செலுத்தி வணங்கி விட்டு அவரவர் ஊர்களுக்குத் திரும்புவர். தைப்பூச விரதமிருந்து முருகனை வணங்குவோர் முருகன் அருள் பெற்று வரப்போகும் ஆண்டில் சுபீட்சம் பெற்று மகிழ்ச்சியோடு வாழ்வார்கள் என்பது திடமான நம்பிக்கை. சிலர் முன்பே எதற்காகவாவது முரு கனை நினைத்து வேண்டிக்கொள்வதுண்டு.

**மாசிமகம்**

மாசி மாதம் சந்திரன் சிம்ம ராசியில் மக(ம்) நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் நாளில் முருகன் கோவிலில் விசேடமான பூசைகள், விழாக்கள் நடக்கும். ஒருவாரத்திற்கு முன்பே விரதமிருந்து மாசி மகத்தன்று கோவிலுக்குக் குடும்பத்தோடு வந்து முடிக்காணிக்கை செலுத்தியும் மற்றக் காணிக்கைகள் செலுத்தியும் வழிபாடு செய்வர்.

மாசி மக(ம்) விரதத்தோடு இருப்பவர்களுக்கு மறுபிறவி இல்லை என்று ஜோதி நூல்கள் கூறுகின்றன. மக நட்சத்திர அதிபதி கேது. ஜோதிட முறைப்படி மோட்ஷகாரன். மோட்சம் பெறுப வர்களுக்கு மறுபிறவி இல்லை என்பது இந்து மதத்தவர்களின் நம்பிக்கைகளுள் ஒன்று.

மக(ம்) நட்சத்திரம் சிம்மராசி. சிம்மராசி சூரியனுடைய வீடு. சூரியனுடைய வீட்டில் சந்திரன் வருவதும் கும்ப ராசியில் இருந்த சூரியன் சந் திரனைப் பார்ப்பதும் விசேடமானவை. இதனால் நிறைய அல்லது தேவையான பெண் குழந் தைகளைப் பெற்று விட்டு, ஆண்பிள்ளைகள் இல்லாமல் தவிக்கும் தாய் தந்தையர், மாசி மாதம் விரதமிருந்து அன்னதானம் செய்தால் ஆண் குழந்தை பிறக்கும் என்பார்கள். மாசி மகம் பன் னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணம் ஏகாம்பரேதசுவரர் கோவிலில் "மகாமகம்" என்ற பெயரில் மிகப் பெரிதாகக் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் இலட்சக்கணக்கில் வருகிறார்கள். பன்னிரண்டு

ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் இந்த மகா மகம்(ம்) விழாவில் கலந்து கொண்டவர்களுக்குப் பூர்வ ஜென்ம பாவங்கள் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையுண்டு.

**பங்குனி உத்தரம்**

பங்குனி மாதம் உத்தர நட்சத்திரம் வரும் போது முறைப்படி விரதமிருந்து முருகப் பெருமானை வேண்டினால் பிறவிப் பெரும் பயனை அடைய லாம். 48 ஆண்டுகள் பங்குனி உத்தர விரதம் இருப்பவர்களுக்கு அடுத்த பிறவி அருட் பிறவியாக அமையும். இதில் உலகத்தார் வணங்கும் தெய் வீகத்தன்மை அடைவார்கள். வருடம் முழுவதும் ஒழுக்கக் கேடாக இருந்து விட்டு பங்குனி உத்தரம் விரதம் இருப்பவர்களுக்கு தீய பலன்களே கிடைக்கும். உத்தர நட்சத்திர அதிபதி சூரியன் பாவங்களைச் சுட்டுப் பொசுக்கும் சூரியன் போலித்தனமாக பக்தி வேடமிருப்பவர்களைச் சுட் டெரித்து விடுவான் என்கிறது சூரிய புராணம்.

**வைகாசி விசாகம்**

விசாகன் என்றால் முருகன். விசாக நட்சத்திரம் ஒவ்வொரு மாதமும் வருகிறது. ஆயினும் வைகாசி விசாக நட்சத்திரத்தை விசேடமான விரதமாக அனுஷ்டிக்கிறார்கள் ஏன்? வைகாசி மாதம் சூரியன் இடப ராசியில் இருக்கிறார். அவர் அங்கிருந்து ஏழாம் பார்வையாக விசாக நட்சத்திரத்தைப் பார்க் கிறார். விசாக நட்சத்திரத்தின் அதிபதி குரு என்பது போல் விசாக நட்சத்திரம் மூன்று பாதங்கள் துலா ராசியிலும், நான்காவது பாதம் விருச்சிக ராசியில், விசாக நட்சத்திரத்தின் நான்காவது பாதத்தையே சூரியன் பார்க்கிறார்.

விசாக நட்சத்திரத்தின் அதிபதி குரு என்பது போல் விசாக நட்சத்திர தேவதை குமரன். குமரனை சூரியன் வழிபடுவதாக ஐதிகம். எனவே முருகனை வழிபடும் சூரியனை நாமும் வழிபடுவோம் என்பது கருத்து. வைகாசி விசாக நட்சத்திரத்து அன்று பகல் உணவு அருந்தி மாலையில் குமரன் குடி கொண்ட திருக்கோயிலுக்குச் சென்று அர்ச் சனைகள் செய்து வழிபடுவதால் புத்திர தோஷம், புத்திர சோகம் நீங்கி புத்திர பாக்கியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

வைகாசி மாத விசாக நட்சத்திரத்தில் முருகப் பெருமான் இவ்வுலகிலுள்ளோர் யாவரினதும் உய்விற்காக உதித்தவன் என்பது கந்தபுராணச் செய்தியாகும். வைகாசி விசாக தினத்தை முரு கனின் பிறந்ததினமாக முருகனின் அடியார்கள் ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்வது வழக் கமாகிவிட்டது.

பிறப்பும் இறப்பும் அற்ற இறைவனுக்கு வருடத்தில் ஒரு நாளைப் பிறந்த தினமாக்கிக் கொண்டு அந்நாளில் அவனை நீராட்டி அழகு மிளிர அலங்காரங்கள் செய்து மங்கள வாத்தியங்கள் ஒலிக்க பூம்பல்லக்கில் அமர்த்தி பக்தர்கள் புடை சூழத் திருவிழா நடத்தி அவனின் அளப்பிலா அழகு கண்டு உலப்பிலா ஆனந்தத்தில் அடியார்கள் திளைத்து நிற்கின்றனர்.

முருகனை வணங்குபவர்கள் அழகினை ஆராதிக்கிறார்கள். அழகினை ஆராதிப்பவர்கள் ஒழுங்கினைப் பேணுபவர்கள். செம்மையையும் சீர்மையையும் நேசிப்பவர்கள். நீதியை உபா சிப்பவர்கள். நன்மைகள் புரிபவர்கள். அமைதியை அனுசரிப்பவர்கள். முருகப் பெருமானை வணங்குபவர்கள், வாழ்வில் நன்மையே சிந்தித்து நன்மையே பேசி நன்மையே புரிந்து நீதியின் அடிப்படையில் வாழ வேண்டும். அவ்வாறு வாழா தவர்கள் முருகனை நிந்தனை செய்த குற்றத்திற்கு ஆளாவர்.

வைகாசிப் பூரணையுடன் இணைந்தே பெரும் பாலும் வைகாசி விசாகத் திருநாள் வருகிறது. பூரணை, முழுமதி நாள் பகலிலே சூரியன் ஒளி கொடுக்க அதனைத் தொடர்ந்து பூரணைச் சந்திரன் ஒளி வீசி இருளற்ற முழு நாளுமே இரவில்லாத பகலாக விளங்கும் நாள் பூரணை முழுமதி நந்நாள். இத்தகைய நந்நாளை மக்கள் தூக்கத்திலும் சோம்பலிலும் கழிக்கக் கூடாதென்று உன்னி யவர்கள் நம் முன்னோர்கள். வைகாசி விசாகத் திருநாள் சைவ மக்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த புனித நாளாக விளங்குகின்றது. இப் புண்ணிய தினத்தில் தெய்வ வழிபாட்டிலும் நற்கருமங்களைப் புரிவதிலும், தான தர்மங்களைச் செய்வதிலும் எம்மை ஈடுபடுத்தி நல் வாழ்வு வாழ்வோமாக!

# அருணகிரிநாதர் போற்றும் அழகன்

- திரு க. அருமைநாயகம்

கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் முருகன். மானிடராகப் பிறந்த நாம் இப்பிறப்பின் பயனை அடைய ஆறுமுகப் பெருமானின் துணையையே நாடவேண்டும். முருகப் பெருமானின் பெருமைகளைப் புகழ்ந்துரைப்பதும் அவன் திருவடிகளை உள்ளன்போடு வழிபடுதலுமே நாம் ஈடேற வழியாகும்.

நல்லூர்க் கந்தனின் பெருமைகளை உணர்ந்த ஞானிகள், சித்தர்கள், அறிஞர்கள், பெரியோர்கள் பலர். அவ்வரிசையிலே யோகசுவாமிகள் நல்லூரான் பெருமையை நன்குணர்ந்து பாடிய பாடல் இதுவாகும்.

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமடி

சுவாமிகள் கூறியது போல் படைவந்தது பஞ்சம் வந்தது. அவ்வேளைகளில் எல்லாம் எம் எல்லோரையும் காப்பாற்றியது. நல்லூர் முருகனே. கடந்த காலங்களில் நாம் கண்ட உண்மைச் சம்பவங்கள் இவையாகும். மெய்யன்போடும் முழு நம்பிக்கையோடும் தன்னை வழிபடும் அடியார்களின் துயர்களையோடோடி வருவான் முருகன் என்பது உண்மை என்பதையும் நாம் அறிவோம்.

முருகன் இளமைக் கோலத்துடன் அழகே உருவானவன். அவனுடைய அழகை இருகண்களாலும் பார்க்க முடியாதென்று "செங்கோடனைச் சென்று கண்டுதொழ நாலாயிரம் கண் படைத்திலனே'' என்று பிரம்மனைச் சாடுவார் அருணகிரிசுவாமிகள். இதனால் முருகப் பெருமானிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தவர் இவர். கந்தரலங்காரத்தில் முருகன் அழகை நன்கு அலங்கரிக்கின்றார் அருணகிரிநாதர்.

முருகன் திருவருட் செயல்களுள் முக்கிய இடத்தைப் பெறுவது சூரசம்ஹாரம். இது நடந்தது திருச்செந்தூரிலே சூரசம்ஹாரம் நமக்கு உணர்த்தும் தத்துவமென்ன? மிகவும் உயர்வானதும் எமக்கு உயர்வைத் தருவதுமான ஒன்றையல்லவா இது எடுத்துரைக்கின்றது. அதாவது எமக்குள் இருந்து எம்மைக் கெடுத்துக்கொண்டிருக்கும் அகங்காரம், மமகாரம் அற்றுப்போக வேண்டுமென்றால் அது முருகப் பெருமான் அருளாலேயே கைகூடும் என்பதாகும். முருகனுடைவேல், அந்த வீரவேல், சூரனையா அழித்தது. இல்லை: அது சூரத்துவத்தை அழித்தது: சூரன் மயிலானான். அவன் வண்ண மயிலாகவும் சேவற் கொடியாகவும் முருகனுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறான். முருகப் பெருமான் சூரனுக்குக் கருணை காட்டித் தன்னுடனேயே சேர்த்துக் கொண்ட கருணைக் கடல். சூரன் நற்பேறு பெற்றான். கந்தபுராணத்திலே சூரபன்மன் கூற்றாக இப்பாடலைக் காணலாம்.

அண்ணலார் குமரன் மேனி யடிமுதன்
முடியின் காறு
மெண்ணிலா வூழி கால மெத்திற நோக்கினாலுங்
கண்ணினா லடங்கா துன்னிற் கருத்தினா
லடங்கா தென்பா
னண்ணினா னமருக் கென்கை யருளென நாட்டலாமே.

சூரபன்மன் முருகப் பெருமானை ஒரு சிறுவனாகவே முதலில் கணக்கிட்டான். பின்னர் முருகனின் அழகு, ஆற்றல், தோற்றத்தைக் கண்டான். தான் போட்டது தப்புக் கணக்கென்பதை உணர்ந்தான், முருகனைப் புகழ்ந்தான், பாராட்டினான். என்பதாகக் கீழ்க்காணும் கந்த புராணப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன்
றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட் பரிசிவை யுணர்ந்தி
லேன்யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும்
யார்க்கு
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி
யன்றோ.

துன்பமும் இன்பமும் உள்ளது தான் மனித வாழ்க்கை. துன்பம் எமது கட்டுப்பாட்டை மீறும் போது அல்லது ஆற்ற முடியாத துன்பமேற்படும் போது "எல்லாம் தலையெழுத்து" அல்லது எல்லாம் வினைப் பயன் என்றுகூறி எம்மை நாமே சமாதானப் படுத்திக் கொள்கின்றோம். ஒவ்வொருவரும் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்பப் பிறவி கொடுப் பது பிரம்மன் பணியாகும். பிரம்மனுக்கு நான்கு தலைகள், எட்டுக் கண்கள். இதன் மூலம் திக் கெட்டையும் ஒரே நேரத்தில் பார்ப்பவன் ஆதலால் பிரமனின் கணிப்பில், நிரற்படுத்தலில் பிழையிருக்க இடமிருக்காது. நாம் பிறக்கின்ற போது பிரம்மன் எம் தலையில் எழுதியவாறே எம் வாழ்க்கை அமைகின்றது. இவ்வாறு பிரமன் எழுதிய எழுத்தை அழிக்க முடியாதா என்றால் அதற்கு முடியும் என்று முழங்குகின்றார் அருணகிரியார்.

தஞ்சமென வருவோர்க்கு அஞ்சேலென அருள் கொடுக்கும் வள்ளல் அல்லவா எம் முருகன், செந்தில் முருகன். திருவடிகளை வணங்கித் தலை யெழுத்தை அழித்துக் கொள்ளமுடியும் என்றும் திருச்செந்தூர் முருகன் புகழ்பாடுகிறார் அருணகிரி சுவாமிகள். இதோ அப்பாடல்

**சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில்**
**தேங்கடம்பின்**
**மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம்**
**மாமயிலோன்**
**வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும்**
**வெற்புமவன்**
**கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன்**
**கையெழுத்தே.**

மார்க்கண்டேயருடைய வரலாற்றிலே மார்க் கண்டேயர் இறைவனிடம் சரணடைந்தார். காலன் மார்க்கண்டேயரது உயிரைப் பறிக்க வந்த போது காலனைக் காலால் உதைத்து மாக்கண்டேய ரைக் காப்பாற்றினான் இறைவன். இதே போல் முருகனைச் சரணடைந்தோருக்கு நாள் கோளால் பயமில்லை என்பதைத் தெளிவாகப் பின்வரும் பாடல் மூலம் எடுத்துக் கூறுகிறார் அருணகிரியார்.

**நாளென் செயும்வினை தானென் செயுமெனை**
**நாடிவந்த**
**கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும**
**ரேசரிரு**
**தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ்**
**சண்முகமுந்**
**தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து**
**தோன்றிடினே.**

முருகன் அருள் பெற்று அந்த அருள் வெள் ளத்தில் திளைத்து அருணகிரிநாதரின் முருகன் புகழ்பாடும் மேற்குறிப்பிட்ட சில பாடல்களைப் பார்த்தோம். இவற்றிலிருந்து எமக்குப் புலனாவது ஒன்று. அதாவது முருகப் பெருமானை மெய் யன்போடும் முழு நம்பிக்கையோடும், அகங்கார மமகாரமற்ற நிலையில் வழிபடும் அடியார்க்கு முருகன் எக்குறையும் விடமாட்டான் என்பதாகும்.

அன்பே சிவம். அன்பே அனைவரையும் ஒற் றுமையாக வாழவைக்கும். இறை நம்பிக்கையோடும் அன்போடும் வாழ்ந்து பேரின்பத்தை அடைவோமாக.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

# ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்.

- குறள்

# ஆலய வழிபாடும் சுயநலமற்ற சமய சமூகத் தொண்டுகளும்

- சமூகமணி சி.சி.வரதராசா

"கோயில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம்." "ஒன்றேகுலம் ஒருவனே தேவன்" என்பது முதுமொழி. இறைவன் ஒருவன். அவன் பல ரூபத்தில் எங்கும் வியாபித்திருக்கின்றான். அவன் எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டவன். எம் உடம்பில் இறைவன் ஒன்றாகக் கலந்து நிற்பவன். எமக்குமுன் எத்தனையோ, சித்தர்களும், ஞானியரும் தோன்றிப் பல அற்புதங்களைச் செய்தும் பல உண்மைகளை எடுத்துரைத்தும் எம்மை உண்மையான நல்வழி செல்ல வழி காட்டினர். இக்காலத்திலும் பல ஞானிகளும், சிவநெறிச் செம்மல்களும் நம் மத்தியில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யாவரும் அன்பு இரக்கம் என்ற சொல்லுக்கு பெருமதிப்பளித்துள்ளனர். 'அன்பே சிவம்' 'அன்பே கடவுள்' என்ற உண்மையை நன்கு அறிந்து உள்ளன்போடு தொண்டு செய்து புனிதமாக தெய்வீகத்துடன் செயல்பட்டவர்கள்.

மக்கள் உடல் வளர்ச்சிக்கு உணவு இன்றியமையாததாகும். அது போல் மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆலய வழிபாடு இன்றிமையாததாகும். ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி வடிவான எமது இறைவனை நாம் உள்ளன் போடு வணங்க உகந்த இடமே ஆலயம் ஆகும். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது முதுமொழி. நாம் விரும்பிய தன்மைகளையெல்லாம் இனிது அடைய வேண்டுமெனில் ஆலயத்திற்கு ஒழுங்காகச் செல்ல வேண்டும். நாம் மனதினை ஒரு வழிப்படுத்திக் கடவுளை உள்ளன்போடு புனிதமாக நினைத்துத் தியானிக்கவேண்டும். ஆலயத்தில் நாம் தவறாது கடவுளின். நாமத்தை உச்சரித்தும் பஜனை கூட்டுப் பிரார்த்தனைகள் பாடியும் புனிதமாக உள்ளன்போடு வழிபாடு செய்ய நாம் முன்வர வேண்டும்.

இராமகிஷ்ணரின் முக்கியத்துவம் வாய்ந்த உபதேசத்தில் தொண்டின் சிறப்புகள் விரிவாகக் கூறப்படுகின்றன. உண்மையில் நாம் "ஆலய வழிபாடும் சமய சமூகத் தொண்டுகளும், இறையருள் சுரக்கும் சுயநலமற்ற புனிதமான சகல தொண்டுகளையும் நாம் புனிதமாகவும், உள்ளன் போடும், இறைபக்தியுடனும் செய்து வந்தால் எமக்கு உண்மையான இறை அருள் கிடைத்தே ஆகும்.

நம் உள்ளத்தில் சத்தியத்தோடு சுயநலமற்ற தொண்டும் ஒன்று சேருமானால் மனம் விரைவில் தூய்மையடைந்து உயர்ந்த ஆன்மீக நிலையை அடைகிறது. எங்கும் பரவியுள்ள காற்றுத்தான் நுரையீரல்களுக்குள்ளும் இருக்கிறது. காற்றை இது என்னுடைய காற்று என்று சொல்லிக்கொள்ள முடியுமா? அது போலவே எல்லா இடத்திலும் ஒரே இறைவன் தான் பரவி இருக்கிறார்.

நாம் ஆலயத்தில் அர்ச்சனை செய்து விபூதிப் பிரசாதம் முதலியவற்றை வாங்கிக் கொண்டு வீடு செல்வது தான் ஆலய வழிபாடாகக் கருதக் கூடாது. "எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க" என்று ஆலயக் கூட்டு வழிபாடுகளில் படிப்பது போல் "மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு" என நினைத்து நாம் அனைவரும் ஆலய சமய சமூகத் தொண்டுகளிலும் உள்ளன்போடு ஈடுபட வேண்டும். நாம் பொதுப்பணி, மற்றவர்களுக்குத் தொண்டு செய்யக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தித் திறம்படச் செயற்பட முன்வர வேண்டும்.

"அன்பே சிவம்" என்பதை நாம் மனதார நன்கு உணர வேண்டும். ஒருவன் அன்பை உணர்ந்து விட்டால் எல்லாம் உணர்ந்தவனாகின்றான். 'அ' என்பது தமிழுக்கே முதல் எழுத்து. 'ன்' என்பது வரி வடிவில் கடைசி எழுத்து. 'பு' என்பது நடு எழுத்தாகும். முன்னாகிப் பின்னாகி நடுவாகி எங்கும் பரந்துள்ளது. அன்பு என்னும் சொல் முந்திய முதல் நடு இறுதியுமானாய் என்பதை நினைவூட்டுகின்றது. இறைவன் அன்பு வடிவமானாவன்.

அன்பு பெற்றெடுத்த குழந்தையே அருளாகும். தன்னைப் போல் மற்றவர்களையும் நினைக்கத் தூண்டுவது உண்மையான அன்பாகும். ஆதலால் நாம் அனைவருடனும் அன்புடன் பழக முன் வரவேண்டும். உண்மையில் கஷ்டப்படுகிறவர் களைப் பார்த்தால் நமது மனம் இரங்க வேண்டும். உங்களிடம் இருப்பதை அவர்களுடன் மனமுவந்து பகிர்ந்து கொள்ள வேண்டும். பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றால் பணத்தை மட்டுமல்ல, நாம் பெற்ற கல்வி, நம்முடைய அனுபவங்கள், எமது உள்ளத் தால் உள்ளன்புடன் செய்யும் சகல தொண்டுகள், நற்பணிகள் என்பவற்றை இயன்ற வரையில் நம் சக்திக்கேற்ப மற்றவர்களுக்கு கொடுக்கக் முன்வர வேண்டும்.

இறைவன் படைத்த எல்லா உயிர்களையும் ஒன்றெனக் கண்டு ஆலய , சமய, சமூகப் பணி யாற்ற அத்திவாரமானது அன்பே இதனையே சுப் பிரமணிய பாரதியார்

**"அன்பென்று கொட்டு முரசே மக்கள்**
**அத்தனை பேரும் நிகராம்"** என்றார்.

தமிழ்ப்பாட்டி ஔவையார்

**"ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும்**
**நேசத்தால் நினைத்துக் கொள்"** என்றார்.

இன்றைய நமது கவிஞன்,

**"கருணை நிறைந்த உள்ளம் கடவுள் வாழும் இல்லம்"** என்றார்.

ஆகவே இறைவனிடம் சென்று எனக்கென்று வரம் வேண்டாமல் "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"வென்று நாம் மனதார வேண்டுதல் வேண்டும். இப்படி இறைவனிடம் வேண்டினால் அருள் கிடைக் குமென்பது தவறு. இறைவனுக்கு மனதாரத் தொண்டு செய்து இறைவனுடைய அன்பர்களி டத்து அன்பு கொண்டு அவர்களுக்கு எம்மாலான நற் சேவைகளை உள்ளன்போடு செய்தால் இறை வன் எம்மை ஆட்கொண்டு அருள் சுரப்பான். தன் நலம் கருதாத புனிதமான சேவை, எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமென்ற மனப்பாங்கு எவரிடம் குடி கொள்ளுமோ அவனையே இறைவன் தன்னிடம் அழைத்துவிடுகின்றான்.

எனவே அன்பு, அருள், சகிப்புத் தன்மை, கருணை, பொறுமை, பணிவு நிறைந்த உள்ளத்துடன் ஆலய, சமய சமூகத் தொண்டாற்ற விரும்பாத சுயநலக்காரர்கள் ஆலயம் சென்று வணங்குவதால் எதுவித பயனுமில்லை. பஞ்ச பூதங்களான எம்மிடம் இறைவன் குடிகொண்டி ருக்கின்றான்.

கடவுளுக்கு சாதி இல்லை. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று வேற்றுமை இல்லை. அன்புள்ளம் கொண்டு நல்ல புனிதமான மனதுடன் தொண் டாற்றியோர் அனைவரையும் "ஒன்றே குலம்" என மதித்து அருள்புரிந்தவர். திருவிளையாடற் புரா ணத்தில் இதற்குச் சான்றுகள் உண்டு.

சமய வழி நின்று சீருஞ் சிறப்புடன் வாழ்ந்த எமது சைவ சமய மக்கள் தொடர்ந்தும் புனிதமான பாரம்பரிய சிவ பூமியில் தமது மனத் துயரை அகற்றி ஆத்மீக சாந்தியையும், இறை பக்தியையும், பொதுப் பணிகளையும் ஊக்குவிக்க எதிர்கால சைவ உலகம் இன்றைய சைவ இளைஞர் களுடைய கையிலேதான் உண்டு.

**"சொல்லுதல் யார்க்கும் எளிய – அறிவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்"**

எனவே அலங்காரமான வாய்ப்பேச்சில் ஒரு வித பயனுமில்லை. இன்றைய இளைஞர்கள் உண்மையில் சுயநலம் கருதாப் பரோபகாரி யர்களாக நற்றமிழையும், மெய்ச்சமயமாகிய சைவத் தையும் வளர்க்க இளைஞர்கள் உள்ளங்களிலே தெய்வ உணர்வு, தெய்வ நம்பிக்கை, சத்தியம், நல்லொழுக்கம் ஆகியன சுடர் விட்டெழவும், பொதுப் பணிகளில் ஆர்வமுடன் செயற்பட்டுத் தம்மிடையே முதற்கண் ஒற்றுமையை நிலைநாட்டி ஆவன புரிந்து வருவதை எவரும் உள்ளத்தால் பாராட்டாமல் இருக்கமுடியாது. யதார்த்த நிலையில் இளைஞர்கள் கர்மவீரர்கள் எனின் மிகையாகாது.

பாரம்பரிய சிவபூமியில் யார் ஒருவர் தம்மை அர்ப்பணித்துப் புனிதமாக ஆலய, சமய சுயநல மற்ற தொண்டுகள், பணிகள் செய்து வருகிறார்களோ அவர்களை அந்தந்தப் பொது அமைப்பைச் சேர்ந் தவர்களால் உண்மையில் உள்ளன்போடு உயி ருடன் நற்சேவைகள் செய்பவர்களை நாம் போற்றித் துதித்து, வாழத்த முன்வர வேண்டும். சேவை செய்பவர் இறைவனடி சேர்ந்தபின் நினை வஞ்சலிக்கூட்டம், கௌரவிப்பு வழங்குவதைத் தவிர்த்து உண்மையான ஆலய சமூக சமயப் பணிகள் செய்பவர்களை நாம் உயிருடன் அவர் களின் சேவை நலன்களைப் பாராட்டி அவர்களை மனதாரக் கௌரவிப்பதே சைவ சமயத்தின் உண்மையான பண்பாடு ஆகும்.

**"தேசசேவையே தெய்வத் தொண்டு"**
**"பணிபுரி : பலனை எதிர் பாராதே"**
**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

# தமிழ் மொழியில் வழிபாடு

- பண்டிதர் சி. பொன்னம்பலவாணர்.

சைவத்தமிழ் மக்கள் வணங்கும் ஆலயங்களிலெல்லாம் வடமொழியிலேயே வழிபாடு நிகழ்கின்றது. அதேசமயம் தமிழ்க் கிறிஸ்தவர் வணங்கும் ஆலயங்களிலெல்லாம் தமிழ் மொழியிலேயே வழிபாடு நிகழ்கின்றது. சைவத்தமிழ் ஆலயங்களில் வடமொழியில் வழிபாடு நிகழ்வதைக் குறைகூறுவதால் வடமொழியில் வெறுப்பு என்பதல்ல, தமிழ்மொழியில் தமிழர் விளங்கத்தக்கதாக நிகழவில்லையே என்பது கருத்து என்று சமீபத்தில் ஒரு தமிழறிஞர் பகிரங்க மேடை ஒன்றில் பேசினார். இப்பேரறிஞர் வெகு கவனமாக வடமொழியில் தனக்கு வெறுப்போ புறக்கணிப்போ இல்லை என்பதைத் தெளிவாக்கினார்.

தமிழ்மக்கள் வழிபாடு செய்யும் ஆலயத்தில் தமிழ் மக்கள் விளங்கக்கூடிய மொழி என்பது மட்டுமன்றித் தெய்வீகமான மொழி என்றும் நம்பப்படும் தமிழ் மொழியில் வழிபாடு நடைபெறவில்லையே என ஒருவர் கருதினால் அக்கருத்தை ஆதரவோடு அணுகவேண்டியது அவசியம். வடமொழி தெய்வீகமொழி என்று சொல்லும் நாமே தமிழ் மொழியும் தெய்வீக மொழி என்று நீண்ட காலமாகக் கூறிவருகின்றோம். அப்படியிருக்க ஏன் சைவாலயங்களில் தமிழில் வழிபாடு நடைபெறவில்லை என்ற கேள்வி நியாயமானதே.

இக்காலத்தில் ஆங்கிலம் ஆங்கிலேயருக்கு மட்டும் உள்ள மொழி என்றில்லாமல், உலக மொழி என்ற தகுதியைப் பெற்றிருக்கிறது. இதே போல ஒரு காலத்தில் இமயம் முதல் குமரிவரை - குமரிக்கும் தென்பால் ஈழம் வரையிலும் வடமொழி பொது மொழியாக இருந்திருக்கிறது. இன்று தமிழறிஞர் எவரும் ஆங்கிலத்தை அந்நிய மொழி என்று வெறுக்காதது போல், அக்காலத்தில் எவரும் வடமொழியை வெறுக்காது இருந்திருக்கின்றார்கள். இக்காலத்திலும் சில விஞ்ஞான சட்ட மேலைத்தேய விடயங்களைத் தமிழில் சொல்வதிலும் பார்க்க ஆங்கிலத்தில் சொல்வது எளிது என்ற கருத்து தமிழறிந்த, தமிழறியாத, ஆங்கிலம் அறிந்த தமிழ்மக்கள் மத்தியில் பலர் சமய தத்துவ மந்திர விடயங்களை வடமொழியில் சொல்வது எளிதாக இருக்கின்றது என்று கருதுகின்றார்கள். இக்கருத்தில் ஒருவித நியாயம் இருந்தாலும் கூட தமிழ் மக்கள் தமிழ் மொழியில் வழிபாடு செய்யவில்லை, செய்ய வேண்டும் என்ற கருத்து வலிமையற்றுப் போகாது.

இவ்விடத்தில் திறந்த மனதோடு அணுக வேண்டிய ஓர் உண்மை உள்ளது. ஆலய வழிபாடு செய்யும் தமிழ்மக்கள் பலர் தமிழ் மொழியில் சிறிது அபிமானம் இல்லாமல் இருக்கிறார்கள் என்ற உண்மை தான். இத்துடன் இன்னும் ஒரு கசப்பான உண்மை உள்ளது. நம் சைவ சமய குருமாராக உள்ள அந்தணர்களில் ஒரு சிலர் ஆலய வழிபாட்டில் தமிழ்மொழிக்கு இப்பொழுது உள்ள இடத்தையும் இல்லாமல் செய்ய வேண்டும் என்று கருதிச் செயற்படுகின்றார்கள். இப்படிச் செயற்படுபவர் ஒரு சிலராக இருந்தாலும் அவர்கள் செல்வாக்காலும் செல்வாக்குடைய வழிபடுவோரை தமிழ் மக்களைத் தம் வசப்படுத்தி ஆலய வழிபாட்டில் தமிழ் மொழியைச் சிறுமைப்படுத்த முனைகின்றார்கள் என்பது உண்மை. தமிழ்மொழியில் இடம்பெறும் திருமுறை ஓதும் நிகழ்வை ஒதுக்கிவைக்க விரும்புகின்றாளர் என்பது தான். சிவாகமங்கள் ஆலய வழிபாட்டு முறைகளை வடமொழியில் கூறியிருக்கின்றன. அவை தோத்திரம் செய்யும் சந்தர்ப்பத்தில் வேதத்தாலும் தமிழ்த் திருமுறைகளாலும் தோத்திரம் செய்யும்படி கூறியுள்ளன. இன்று சில குருமாரும் இரு மொழிகளிலும் மதிப்பு இல்லாத ஆலய நிர்வாகிகளும் வேதத்தை அடுத்து திருமுறையைப் பாடுவது வேதத்தை அவமதிப்பது போலிருக்கும், ஆகவே வேதத்தையும் திருமுறையையும் அடுத்து சொல்லவேண்டிய ஆசீர்வாதத்தை வேதத்தை அடுத்துச் சொல்லி அதன்பின் திருமுறை ஓதுக என்கின்றனர். வேறு சிலர் வேதத்தை அடுத்து திருமுறை ஓதாது வேதத்தை அடுத்து, வடமொழித் தோத்திரங்களைக் கூறியபின், திருமுறை ஓத இடம்கொடுக்கின்றனர்.

இப்படிச் செய்யும் போதும் ஒரு தமிழ்மொழி நிந்தனை நிகழ்கின்றது. எப்படிப்படியென்றால் வேதம், வடமொழித் தோத்திரம் என்பவற்றைப் பலகுருமார் நீண்ட நேரம் ஓதுகின்றனர். திருமுறைகளோ மிகக் குறைந்தநேரம் ஓதப்படுகின்றன.

வேதம், வடமொழித் தோத்திரம் - கிரியைகள் என்பன சாதாரணமாக ஒரு மணிநேரம், விசேட காலங்களில் திருவிழாக்களில் ஐந்து ஆறுமணி நேரமும் நம் வழிபாட்டில் வடமொழி இடம்பெற தமிழ்மொழித் தோத்திரங்கள் சிலநிமிடங்கள் மட்டுமே இடம்பெறுகின்றன.

ஆலய வழிபாடு - வழிபாடு போன்ற சந்தர்ப்பங்களில் தமிழ்மக்கள் மத்தியில் தமிழில் நிகழ்வதில்லை என்பது வடமொழி துவேசமாகாது: வேத நிந்தனையாகாது என்பதனை நன்கு கவனிக்கவேண்டும். தமிழ்மக்கள் தமிழ்மொழியில் வழிபாடு செய்யவேண்டும். தமிழ்மக்கள் மத்தியில் நிகழும் செயல்கள் தமிழ் மக்களுக்கு விளங்கக்கூடியதாக இருக்கவேண்டும் என்பது வெறும் போலித் தமிழபிமானத்தினால் எழுந்த கருத்து அன்று. "சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" என்ற மணிவாசகத்தின் தூண்டுதலே. தமிழ்மக்கள் சிலர் தெலுங்குமொழியில் உள்ள இசைப்பாடல்களை விரும்பிப்பாடுவர்: கேட்டு மகிழ்வர். இதுபோல் சுயமொழிக்கு அப்பால் இசையை விரும்பும் தன்மை வடநாட்டிலும் இருந்திருக்கிறது. இவ்விடயம் பற்றி உலகப் பேரறிஞராகிய தாகூர் கருத்துத் தெரிவிக்கும் போது "பிறமொழியில் சங்கீதத்தை இரசிக்க விரும்புகிறவன் தன் காதலியோடு கதைப்பதற்கு வக்கீல் வைப்பவன் போல்வான்" என்று கூறியிருக்கிறார். யாராக இருந்தாலும் தன் சுயமொழியில் இசையை இரசிக்க வேண்டும் என்ற தாகூர் போல சுயமொழியில் வழிபாடு நிகழ வேண்டுமென்று விரும்புவது தவறாகாது.

நோய்க்கு ஒருவன் மருந்து உண்கின்றான். வைத்தியர் கொடுத்த மருந்தை அவன் உண்கின்றானேயன்றி, அந்த மருந்தின் இயல்பு, தன்நோய்க்கு அது நிவாரணமாகும் காரணம் என்பவற்றை அறிந்து நோயாளி மருந்துண்பதில்லை. இதேபோலத் தான் வழிபாட்டின் போது குருமார் வடமொழி மந்திரங்களைப் பயன்படுத்தினால் இறையருள் நமக்குக் கிடைக்கிறது. நமக்கு அது விளங்கவேண்டுமென்றில்லை என்று பலர் தருக்க வாதம் செய்கின்றனர். இது தொடர்பாக எழுத்தாளர் ஜெயகாந்தன் கருத்துத் தெரிவிக்கும் போது மருந்துண்ணும் விடயத்தில் நோயாளிக்கு மருந்தின் தன்மை தெரியாவிட்டாலும் மருந்துவருக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் நம் மத்தியில் வழிபாட்டு விடயத்தில் மருத்துவர் நிலையிலிருக்கும் குருமாருக்கு வடமொழி விளக்கமோ மந்திரங்கள் வேத தோத்திரங்களின் கருத்தோ தெரிந்திருக்கவில்லை என்று கூறுகின்றனர். இக்கருத்து நம் ஆலயவழிபாடு செய்து வைக்கும் குருமார்விடயத்திலும் உண்மை. இங்கு இன்னுமொரு விடயம் கவனிக்கப்படவேண்டும். இக்காலத்தில் நாம் பல பயன்களை விரும்பி வழிபாடு செய்கின்றோமென்றால் நாம் விரும்பும் பயன்களெல்லாம் கிடைப்பதில்லை. இப்படிக் கிடைக்காமைக்கு காரணம் வழிபடுவார் மட்டுமன்றி வழிபாட்டுக்குப் பொறுப்பாக இருந்து பூசை முதலிய செய்யும் குருமார் தமக்கு விளங்காத நிலையில் செயற்படுவதேயாம்.

ஆலய வழிபாட்டில் வடமொழி ஆதிக்கம் வட மொழிக்கு மதிப்பு - வடமொழி அபிமானம் என்பன இவ்வாறிருக்க தமிழ்மொழி வழிபாடு வீழ்ச்சியடைந்ததை நாம் கவனிக்கவேண்டும்.

நம் யாழ்ப்பாணத்துச் சைவசமய ஆலயங்களில் புராணபடனம் என்ற முறையில் தமிழ்மொழியில் சிறந்தவழிபாடு நிகழ்ந்து வந்தது. யாழ்ப்பாணத்தமிழரசர் காலத்தில் இப்புராணபடன முறை ஆரம்பித்திருக்கலாம் என்றும் நாவலர் காலத்தில் இது உச்சம் பெற்றிருந்தது என்று கூறுவர். நாவலர் பெருமான் கந்தபுராணபடனச் சிறப்புப்பற்றிக் கூறும் போது இராசவசியம் நோய் நீக்கும் புத்திரப் பேறு முதலிய பயன்களை தவறாது தரவல்லது. இது பலராலும் அனுபவ மூலம் அறியப்பட்டது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். திருவெம்பாவைக் காலத்தில் திருவாதவூரடிகள் புராணபடனம் நிகழ்ந்து வந்தது. இதன் காரணமாக சிதம்பரத் தலவழிபாட்டில் பங்குபற்றும் சிதம்பர யாத்திரையிலும், சிதரம்பரத்தில் மடங்கள் அமைத்து நீர் வகிப்பதிலும் ஆர்வம் இருந்தது. இவற்றுடன் தமிழ்மொழியில் இயல்பான தேர்ச்சி மொழி சமயம் ஆன்மீகம் பற்றிய விளக்கம் என்பன நம்நாட்டில் சிறப்புற்றிருந்தன. தன்பிள்ளை சாக மருந்து கொடுக்கும் பெற்றோர் போல் புராணபடனம் அருகி ஒழிய நம்நாட்டவரே காரணமாயிருந்திருக்கின்றனர்

என்பதன்றி இதற்கு வேறுயாரையும் குறை கூறுதல் பொருந்தாது விஞ்ஞான முன்னேற்றம், சினிமா, தொலைக்காட்சி என்பவற்றின் வசதி என்பவற்றைக் காரணம் கூறுவது புத்திசாலித்தனமாகாது.

முதன்முதல் நம்நாட்டில் 1958ல் இனக் கலவரம் நிகழ்ந்து தமிழ்மக்கள் துன்புற்றபோது யாழ்ப்பாணத்தில் சிவஞானியாக விளங்கிய யோக சுவாமிகள் கந்தபுராணபடனத்தால் தான் நன்மை யடைய முடியும் என்று பலரைப் பகிரங்கமாக வழி நடத்தியிருக்கின்றார். நாம் யோகசுவாமிக ளையும் தமிழ்மொழியையும் பாராட்டிக் கொண்டே புராணபடன வழிபாட்டைப் புறக்கணித்துள்ளோம். இதனால் தமிழறிவையும் இறையருளையும் இழந் தோம் என்று தான் சொல்ல வேண்டும்.

இன்று பலர் புராணபடனத்தை ஊக்குவிக்க ஆர்வமாக உள்ளபோதும் புராணம் வாசிப்போர் பயன் சொல்வோர் கிடைக்காமல் கவல்கின்றனர். புராணம் வாசிப்பவர் பயன் சொல்பவர்ககளை நாம் தான் நம்முள்ளே தான் உருவாக்கவேண்டுமேய ன்றி யூஎன்எச்சீஆரொ ஜீரீசேற்றே தரமாட்டா.

புராணபடனம் தொடர்பாக சிந்திக்கும் இடங்களில் முறையாகத் தமிழ் படித்த பண்டிதர்மார் குறைந்துவிட்டார்கள். இனியென்ன செய்வது, பண் டிதர்மாரை உருவாக்குவது எப்படி என்று திகைக் கின்றனர். பண்டிதர்மாரை உருக்குவது படிப்படியாக நிகழலாம்:தாமதிக்கலாம். ஆனால் பத்து வருடங் களுக்குமேல் தொடர்ந்து தமிழை ஒரு பாடமாகக் கற்றுத் தேறிய அனைவரும் புராணம் வாசிக்க ஆர்வம் கொண்டால் வாசிக்க இயலாதா? செந் தமிழும் நாப்பழக்கம் அல்லவா? முதல் நாள் வாசிக்கும்போது தடக்குப்படுபவர் நாலாம் நாள் வாசிக்கும்போது திருந்திவிடுவர்.!

பல்கலைக்கழகத்தில் தமிழை ஒரு பாட மாகப் படித்த ஒருவர் ஊக்கத்துடன் முயன்றால் புராணத்துக்குப் பயன் சொல்வது பெரியகாரியம் அல்ல. "சபை நடுவே நீட்டோலை வாசியா நின்றான் நெடுமரம்" என ஒரு தமிழ்ப்பாடல் உண்டு. ஒரு பாட்டைப் படித்துப் பொருள் விளங்குவதும் தான் விளங்கியதை ஒரு ஒழுங்கு முறையில் குறிப்பிட்ட முறையில் எடுத்துச் சொல்வதும் பல்கலைக்கழகப் பட்டதாரியால் இயலாதா? இயலும். இயலும். தேவை ஆர்வமும் ஊக்கமுமே. புராணபடனத்துக்கு பலர் முன்வராததற்கு ஒருகாரணம் உள்ளது. இக்காரணம் பலருக்குத் தெரியாத இரகசியமாகும். இதைத் தெரிந்தவரும் துணிந்துசொல்ல கூச்சப் படுகின்றனர். அந்தக்காரணம் அந்த இரகசியம் என்னவென்றால் புராணத்துக்குப் பயன் சொல்வ தால் வருவாய் கிடைக்காது என்பது தான். இதை வெளிப்படையாகச் சொல்லப் பலர் கூச்சப்படு வதற்கும் ஒரு காரணம் உண்டு. சில வருடங் களுக்கு முன் பொருள் வசதி படைத்த பலர் வருவாயைப் புறக்கணித்து பயன் சொல்லி மகிழ்ந்து தம் பொழுதைத் தவப் பொழுதாகக்கியிருக்கின் றார்கள். இதனால் பயன் சொல்பவர் வருவாயை எதிர்பார்த்தலாகாது என்று சிலர் நம்பினார்கள். இதனால் வந்த கேடு இது.

இன்று பாருங்கள் கொடிறேற்றும் குருக்கள் ஒருவருக்கு, கலியாணச் சடங்கு செய்யும் ஒரு வருக்கு, செத்தவீட்டுக் கிரியை அந்தியேட்டி என்பன செய்பவர்க்கு, அதிகம் போவானேன் குறிப்புப் பார்த்து விவாகப் பொருத்தம் வேறுபலன் சொல்லும் ஒருவருக்கு மணித்தியால அடிப்படையில் வருவாய் கிடைக்கிறது. வருவாய் கிடைப்பதால் இப்படியான செயல்களுக்கு பலர் உருவாகுகின்றனர். புரா ணத்துக்குப் பயன் சொல்வதாயின் அதற்கு ஆயத் தமாகவே ஒருவருக்கு கணிசமான காலம் வேண்டும். பின் பயன்சொல்ல இரண்டு மூன்று மணித்தியாலங் கள் தேவை. இவற்றுக்குக் கிடைக்கும் வருவாயோ மிகச் சொற்பம். சில ஆலயங்களில் கோவிலில் வேலை செய்பவர் இருக்க, உதவியாள் மேளம் முதலியவற்றுக்குத்தான் அதிகம் கொடுக்க வேண் டும். புராணபடனத்துக்கும் அதிகம் கொடுக்க முடியுமா என்ற கருத்து நிலவுகின்றது. இந்த நிலையில் புராணபடனம் செய்ய ஆள் கிடைக்காது என்பது உறுதி. யாராவது தமிழ்ப் பண்டிதர்மார் பயன் சொல்ல வல்லவர் இருந்தாலும் அவர்கள் புராணபடனத்துடன் தொடர்பு கொள்ள முன்வரார். தமக்கு நேரமில்லை வசதியில்லை என்று கூறிதப்பி விடுவர். புராணபடனம் செய்ய வாசிப்பவருக்கும் பயன் சொல்பவர்க்கும் அதிக வெகுமதி கொடுத் தால் தெரியாதவரும் பயின்று வருவர். இன்றைய நிலையில் திருவாதவூரடிகள் புராணத்தை முறையாக வாசிக்கும் ஒரு இளைஞருக்கு 2000 ரூபா சன்மானம், சூரபன்பன் வதைப்படலத்தில் 100 பாடல்களுக்கு அழகாகப் பயன் சொல்லும் இளைஞருக்கு 3000 ரூபா சன்மானம் என்று அறிவித்தால் பலர் இதில் ஈடுபட முன்வருவர். இதற்கு நம் தமிழ்ச் சமுதாயம் சம்மதிக்காது. ஒதுங்கும் நிலை நீடிக்குமாயிருந்தால் தமிழ்மக்கள் மத்தியில் தமிழை ஒதுக்குபவரே மலிவடைவர்.

இன்று தமிழ்மக்கள் தமிழபிமானம், தமிழ் விளக்கம் இல்லாதவர்களாய்க் காணப்படுகின்றனர் என விவரம் தெரிந்த பலர் கவலைப்படுகின்றனர். சீனரும் கிரேக்கரும் விஞ்ஞானத்தில் மிகமுன்னேறிய நிலையிலும் தம் பழைய இலக்கியங்களில் அபிமானமும் பயிற்சியுமுடையவராய் உள்ளனர்.

அமெரிக்காவிலோ இங்கிலாந்திலோ வாழும் குஜராத்தியர் மராட்டியர் பஞ்சாபியர் தெலுங்கர் கன்னடியர் முதலியோர் தம்மவருடன் தாம் உரையாடும் போதும் வீட்டில் மனைவி பிள்ளைகளுடன் தொடர்பு கொள்ளும்போதும் தம் சுயமொழியை பயன்படுத்த அவ்விடத்தில் வாழும் தமிழர் தமிழைப் பயன்படுத்துவதில்லை என்று கண்டு கவலை அடைகின்றனர். இதுபற்றி பாரதியார் குறிப்பிடும் போது நாலு ஐந்து நூற்றாண்டுகளாக அடிமைகளாக வாழ்ந்து தமிழனுக்குச் சுயபுத்தி போய் அடிமைப் புத்தி வந்திருக்கிறது. தமிழனுக்கு அடிமைப்புத்தி இருப்பதால் அவன் மொழியும் நிந்திக்கப்படுகின்றது: உண்மையில் தமிழ் மொழி சிறந்த மொழியே என்கிறார்.

ஆபிரிக்காவில் இருந்து இரு நூற்றாண்டுகளுக்கு முன் அமெரிக்கா சென்று குடியேறிய நீக்ரோக்கள் தங்கள் தாய் மொழியை மறந்து ஆங்கிலத்தில் மூழ்கினர். ஆனால் இன்று அவர்களுள் ஆங்கிலமும் சரியாக வரவில்லை. தங்கள் தாய்மொழியும் அவர்களிடம் இல்லை. அவர்கள் தம் இனத் தனித்துவத்தை இழந்து சிறுமைப்படுகின்றார்கள். இது போன்ற சிறுமைக்கு ஆளாகாமல் தமிழர் விழிப்படைந்தால் மேன்மையுறலாம் என்கின்றனர். விவரம் தெரிந்த அப் பெரியோர் எனவே தமிழர் மத்தியில் தமிழை பிரகாசிக்கச் செய்ய வேண்டும். தமிழ்மொழியில் வழிபட வேண்டும் தமிழ் மொழியின் சிறப்பை அறியவேண்டும். இப்படி பெருமைகளைப் பாதுகாத்த நிலையில் வடமொழியையும் மதிக்கலாம்: கற்கலாம்: கொண்டாடலாம். தமிழ் மொழி அபிமானம், தமிழ்மொழிப் பயிற்சி, தமிழ் மொழி உணர்வு மிகுக. மிகுக. மிகுக.

# உலகு

– இராம ஜெயபாலன்

போர் ஓய்ந்து அமைதி
நிலவுகையில் கந்தைய்யா
பேர் அலைகள் எழுந்து
பெரும்பலி கொண்டதேனைய்யா!
தேர் ஏறிநீ திக்விஜயம்
செய்யுமுன் நல்லைய்யா!
ஊர் உலகு வேண்டி நிற்கும்
பொதுக்கட்டமைப்பைத் தாருமையா!

# அறம் வெல்லும்

- செல்வி கு. சிவநந்தினி

ஆண்டவன் அறம் என்ன வேறுபாடு?

ஆண்டவன் என்று நாம் பேசும் உயர்ந்த பொருள் அறத்தை உணர்த்தவே தோன்றியது. சங்க இலக்கியங்களில் அக இலக்கியங்களிலும் புற இலக்கியங்களிலும் அறம் பேசப்பட்டது. சங்கம் மருவிய கால இலக்கியங்கள் அறத்தையே பாடு பொருளாகக் கொண்டன.

'விதித்தன இயற்றலும் விலக்கின ஒழித்தலும் அறம்' என்று திருக்குறட் பரிமேலழகர் உரை அறத்திற்கு இலக்கணம் கூறுகின்றது. திருக்குறள் முப்பால் நூலாக இருக்கின்றது. இதில் முதலாவது பகுதி அறத்துப் பாலாகும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் ஆஸ்திகன், நாஸ்திகன் என்ற வேறுபாடின்றி ஒழுகவேண்டிய உயர்ந்த நெறி அறம் என்பது மறுகருத்துக்கு இடமற்ற விடயமாகும்.

'அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்" என்கிறது சிலம்பு. ஆண்டி முதல் அரசன் வரை அறநெறியில் ஒழுக வேண்டும் என்றே இதிகாச புராணங்கள் எடுத்தியம்புகின்றன. பல்லவர் கால இலக்கியங்கள் பக்தி இலக்கியங்களாயினும் அறம் போதிப்பனவாயுமுள்ளன. 'பண்டு நால்வருக் கற முரைத் தருளி...' என்பது சம்பந்தர் தேவார அடி. அதுபோல சோழர் கால இலக்கியமாக இராம காதை அறத்தையே அடிப்படையாகக் கொண்டது. 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்பது ராம காதையின் ஊடுபா.

"அன்பு மறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனு மது" என்றும்

"அல்லற் பட்டாற்றா தழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" என்றும் வள்ளுவம் பேசுவது என்றென்றும் மனத்தின்கண் இருத்தப்பட வேண்டியது.

"அன்று கொல் இன்று கொல் என்று கொல்
என்னாது பின்றையே நின்றது கூற்றம்"

என்றெண்ணி அறம் செய்ய வேண்டும் என் கிறது நாலடியார்.

வெறும் புகழுக்காகவோ, யாரினதும் வேண்டுத லுக்காகவோ அன்றி நாமாகவே அறம் செய்ய வேண்டும். அதற்குரிய மனமிருந்தாலே போதும். அதனாற்றான் ஔவையார் 'அறம் செய்ய விரும்பு' என்றார்.

அறத்திற்குச் சார்பானது அன்பு. இந்த அன்பினு டைய ஒரு வெளிப்பாட்டு வடிவம் கருணை. இது அறக்கருணை, மறக்கருணை என்று இரு வடிவம் பெறுகின்றது.

'அறத்திற்கே அன்பு சார்பென்பர் அறியார்
மறத்திற்கும் அஃதே துணை'

என்று பேசும் வள்ளுவம் கவனிக்கத்தக்கது. சூரபன்மனை முருகப் பெருமான் அனுக்கிரம் செய் தமை அறக் கருணையின் பாற்பட்டது. இராவணனை இராமன் வதம் பண்ணியது மறக் கருணையின் பாற்பட்டது.

எந்த இலக்கியமும் எச்செய்தி சொல்லினும் நிறைவில் அறத்தை வலியுறுத்தியே பூர்த்தி பெறும். நன்றி மறவாமையைப் பேசிய கச்சியப்பருடைய கந்தபுராணம்,'நான் மறை அறன்கள் ஓங்க' என்று வாழ்த்திலே குறிப்பிடுகிறது.

பக்தி, தொண்டு, தியாகம் முதலானவற்றைப் பாடிய சேக்கிழாருடைய பெரிய புராணம் திருநகரச் சருக்கத்தில் 'மாநிலங் காவலனாவான்... பயமைந் தும் தீர்த்து அறக்காப்பான் அல்லோன்' என அரசிய லில் அறத்தைக் கூறுகின்றது.

நாயக்கர் கால இலக்கியமாகிய மகாபாரதம் கீதை என்கிற திவ்யப் பனுவலைத் தந்திருக்கிறது. "எப்பொழுதெல்லாம் அறமழிந்து மறம் தோன்றுகின்றதோ அப்பொழுதெல்லாம் நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும்
அறத்தை நிலை நாட்டவும் நான் யுகம் யுகம் தோறும் திருவவதாரம் செய்கிறேன்" என்று கண்ண பரமாத்மா

கீதையிற் கூறுவது மிக முக்கியமாகக் கவனிக் கப்பட வேண்டியது.

அறத்தைக் காத்தவனை அது காக்கும். கொன்றவனை அது கொல்லும். உலகில் அறத் திற்குத் தோல்வியில்லை என்பதனை யாரும் மறுக்க முடியாது. மஹாத்மா காந்தி அற நெறியில் வாழ்ந்தது. ஓர் அயோக்கியன் சுட்டான். போய் விட்டாரே இது அறம் தோற்ற இடமா? இல்லை. காந்தி போய்விட்டார். ஆனால் காந்தியம் இன்றும் வாழ்கிறது. அது என்றும் வாழும்.

சமகாலத்தில் இவற்றைச் சிந்திக்கும் போது பெருஞ் சந்தேகமே தோன்றும். நிலையானதாகிய அறம் நிலையற்ற மனிதனிடம் படும்பாடு சிந்திக்கற்பாலது.

"தர்மத்தின் வாழ்வு தனைச் சூது கௌவும். தர்மம் மறுபடியும் வெல்லும்" என்று பாரத நூல் கூறுவது போல அறமோ தர்மமோ தோற்றதாக வரலாறில்லை. எனவே என்றும் வாழ்வாங்கு வாழும் அறநெறியைக் கடைப்பிடித்து வாக்காலும் வாழ் வாலும் அறத்தைக் கைக்கொண்டு இனிய வாழ்க் கையைப் பெறுவோமாக.

# கும்மியடிப்போம்

– கிருஷ்ணசாமி துர்க்காம்பிகை

நல்லூர்ப் பதிக்கு வாருங்கடி - எங்கள்
நாயகன் முருகனைப் பாருங்கடி
உள்ளம் விரும்பும் தேவனடி அவன்
உயிர்களைக் காக்கும் தெய்வமடி

சிவனுக்கும் சக்திக்கும் மைந்தனடி - அந்த
கணபதிக்கு அவன் தம்பியடி
கன்னியர் எல்லோரும் சேர்ந்திடுவோமடி - கந்தன்
புகழைப் பாடி கும்மியடிப்போமடி.

# மாநகரசபையின் சமயப் பணியில் சொக்கனின் பங்கு

- திரு இ. இரத்தினசிங்கம்

நான் சிறுவனாக இருந்த காலத்தில் நாள் தவறாது நல்லூரானின் உற்சவத்துக்குச் செல்வது வழக்கம். உற்சவ காலங்களில் யாழ்ப்பாண மாநகர சபையினால் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் ரூ.2 ஐச் செலுத்தி வினாப்பத்திரங் களைப் பெற்று ஊரிலுள்ள பண்டிதர்கள், வித்து வான்கள், சமயப் பெரியார்களின் உதவியோடு அவற்றைப் பூர்த்தி செய்து ஒப்படைத்த போதிலும் எக்காலமும் ஒருவித பரிசும் எனக்குக் கிடைக் காமல் போனதே உண்மை. ஆனால் இவ்வாறு போட்டி நடாத்துவது பெருந்தவறு என்பது எனது கருத்தாக இருந்த போதிலும் ஊமை கண்ட கனவு போன்று அதை சம்மந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்க முடியாது போய் விட்டது.

கால ஓட்டத்தில் நான் யாழ்ப்பாண மாநகர சபையில் பணியாற்ற ஆரம்பித்த காலத்தில் நல்லூர் உற்சவ காலத்தில் நடாத்தப்படும் சமய அறிவுப் போட்டிக்கான குழுவில் எனக்கு நியமனம் கிடைத்தது மட்டுமல்லாமல் குழுவின் செயலாளராகவும் நான் தெரிவுசெய்யப்பட்டேன். அதன் பின்னரே ஆரம்பம் முதல் சமய அறிவுப் போட்டியின் பிரதம பரீட்சகர் அமரர் சொக்கன் அவர்களே என்பதை அறிய முடிந்தது. அக்காலம் முதல் இறுதி வரை அவருடன் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்தது.

சமய அறிவுப் போட்டி நடைமுறையை மாற்றி பாடசாலை மாணவர்களின் பாடத் திட்டத்திற்கு அமைவான வினாக்களைக்கொண்ட பரீட்சையாக நடாத்துவதன் மூலமே இளைய தலைமுறையின ரான மாணவர்களுக்கிடையே சமய அறிவினை மேலோங்கச் செய்யலாம் என்ற எனது கருத்து குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அப்போதைய மாநகர ஆணையாளர்களினால் அங்கீகரிக்கப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நான் பிரதம பரீட்சகருடன் உரையாடிய போது என்னை மிகவும் உற்சாகப்படுத்தி, ஆரம்ப முதலே இவ்வாறு செய்திருக்கலாம், காலம் கடந்தாலும் காத்திரமான தொரு செயல் என என்னைப் பாராட்டினார்.

மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழுவினால் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டி, கட்டுரைப் போட்டி, மற்றும் கவிதைப்போட்டி போன்ற சகலவற்றுக்குமான வினாக்கள், தலைப்புக்கள் போன்றவற்றை உரிய நேரத்தில் வழங்கி உதவியதோடு விடைத்தாள்களையும் சிரமம் பாராது மிகுந்த ஆர்வமுடன் மதிப்பீடு செய்துதவியமை நன்றியுடன் நினைவு கூருவது எமது கடமையாகும்.

நல்லூரானின் உற்சவ காலத்தில் வினாப்பத் திரங்களை விற்பனை செய்து நடாத்தப்பட்டு வந்த சமய அறிவுப்போட்டி, காலக் கிரமத்தில் யாழ்ப்பாண குடாநாடு முழுவதும் குறிப்பாக வடமராட்சி, தென் மராட்சி, வலிகாமம், தீவகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய வலயங்களில் நடாத்தப்பட்டு வருவதற்கு சொக்கன் அவர்களது ஆலோசனைகளும், வழி காட்டல்களும் எமக்கு உந்து சக்தியாக விளங்கின.

மாநகரசபையின் சமயப் பணிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து வழிகாட்டியாக விளங் கிய சொக்கன் அவர்களை மாநகரசபை நன்றியுடன் பாராட்டி வாழ்த்திய சம்பவமும் இடம்பெற்றது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். 1990ஆம் ஆண்டு யூன் மாதத்தில் சொக்கனின் வைரவிழா வினை நாவலர் மண்டபத்தில் அப்போதைய மாநகர ஆணையாளரது தலைமையில் கொண்டாடி பொன் னாடை போர்த்து அவரைக் கௌரவித்தனர்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவானது தனது சமயப் பணியை விரிவாக்கும் நோக்கோடு 1993ஆம் ஆண்டில் நல்லைக்குமரன் மலரை வெளியிட்டது. அன்று முதல் சொக்கன் அமரராகும் வரை வருடா வருடம்

எமது குழுவினால் வெளியிடப்படும் ஒவ்வொரு மலருக்கும் உகந்த ஆக்கங்களை, கவிதைகளை வழங்கி வந்துள்ளார். குறிப்பாக ஆண்டு வெளியாகிய நல்லைக்குமரன் மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் அருமை பெருமைகளையும் குறை நிறைகளையும் ஆய்வுசெய்து உரையாற்றியமை ஒரு சிறப்பம்சமாகும்.

மாநகரசபையினால் காலத்துக்குக் காலம் முன்னெடுக்கப்பட்ட சமயம் மற்றும் தமிழ் சார்ந்த விழாக்களின் போது சொக்கனின் பங்கு அளப் பரியது. 1992 மே 24, 25, 26 ஆகிய மூன்று நாட்களும் நாவலர் மண்டபத்தில் மாநகரசபையி னால் நடாத்தப்பட்ட சுவாமி விபுலானந்தர் நூற் றாண்டு விழா கொண்டாட்டத்திற்கு சொக்கன் அவர்கள் பொறுப்பாக இருந்ததோடு இறுதி நாள் நிகழ்வில் தொடக்கவுரை ஆற்றியுமுள்ளார்.யாழ் பொதுசன நூலக ஆலோசனைக் குழு அங்கத் தவராக இருந்த சொக்கன் அவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

சைவசமய விவகாரக் குழுவின் பணி தொடரும் வரை சொக்கன் ஐயாவின் நாமம் வாழும்.

# யாழ்ப்பாணத்து நல்லூர்

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுநமன் விடுதூதும்
போற்றார் நாளுங் கைப்பொரு ளுடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை விழியின ரமுதூறல்

வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நூற்றோய் நூலின் சிற்றிடை யிடர்பட
வாட்டாய் வீசுங் கர்ப்பூர ம்ருதுக மகிலராம்
மாப்பூ ணாரங் கச்சணி முலையினர்
வேட்பூ ணாகங் கெட்டன னுனதுமெய்
வாக்கான் ஞானம் பெற்றினி வழிபட வருன்வாயே

ஆத்தாண் மாறங் கச்சிக னிகையுமை
கூத்தா டானந் தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி திரிலோகம்
ஆக்கா யாவும் பற்றிய பரிபுரை
நோக்கா டேதுஞ் செற்றவ டிருவிளை
யாட்டா லீசன் பக்கம துறைபவள் பெறுசேயே

ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பா ராயுஞ் சொற்றமி ழுருட்ரு முருகோனே
ஏற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வாழும் பொற்பரபை நெடுமதில்
யாழ்ப்பா ணாயன் பட்டின மருவிய பெருமாளே.

# வேலின் சிறப்பு

- சைவப் புலவர் வை.சி. சிவசுப்பிரமணியம்

முருக பக்தர்களின் உபாசனையில் விசேட அம்சம் என்னவென்றால் முருகனைவிட அவனுடைய ஆயுதமாகிய வேலுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. வேல்-வேல் என்னும்போது நாம் அடைகிற பக்தி இன்பம் சொல்லுக்கடங்காததாகும். தெய்வங்கள் தமது திருக்கரங்களில் படைக்கலங்களைக் கொண்டுள்ளமைக்குக் காரணம் அப்படைகளைக் கொண்டு அடியவர்களின் பகைவர்களை அழித்து அன்னார் தமக்கு அருள் தருதற் பொருட்டேயாகும். இம்முறைக்கு இணங்கவே முருகப்பெருமானும் தமது திருக்கரத்தில் இவ்வேற்படையினைத் தாங்கித் தன் அடியவர்களின் பகைவர்களை அதனால் அழித்து அவர்கட்கு இன்னருள் பாலித்து வருகிறார்.

வேல் என்னும் இச்சொல் முதல் நிலை திரிந்த தொழிற் பெயராகும். அதாவது வெல் என்னும் வினைப்பகுதி(முதல்நிலை) வேல் எனத் திரிந்து பெயர்ச் சொல்லாக அமைந்துள்ளது என்பதாம். இதனால் இப்படை ஒன்றே வெல்லும் தன்மையினைப் பெற்றுள்ளது என்பது புலனாகிறது. ஆகவே வெற்றி தருவது வேல். ஏனைய படைகளும் வெல்லுதற்குப் பயன்பட்டாலும் சொல்லும் பொருளும் இயைந்த நிலையில் அப்படைகளின் பெயர் அமையாதிருத்தலை நன்கு உணர்தல் வேண்டும்.

வேல் முருகப் பெருமானின் சிறப்பான ஆயுதம். இப்படையை உடையவராதலால் பெருமான் வேலாயுதன் என்றழைக்கப்படுகிறார். இதன் சிறப்புக் கருதியே மக்களிடையே வெற்றி வேல் சக்திவேல் வடிவேல் தங்கவேல் வச்ர வேல் செல்வவேல் போன்ற பெயர்கள் வழங்கலாயிற்று. தேவர்களைக் காத்து அசுரர்களை அழிப்பதற்காகச் சிவபிரானால் மந்திர சக்தியுடன் ஆக்கப்பெற்று முருகனுக்கு அளிக்கப்பட்டதே இந்த வேலாயுதமாகும்.

வள்ளிப்பிராட்டி - இச்சாசக்தி: தெய்வயானை அம்மையார் - கிரியாசக்தி: வேல் - ஞான சக்தி. இந்த மூன்று சக்திகளையும் உடையவன் முருகன். ஞானமே அஞ்ஞானத்தை வெல்லவல்லது. சத்திதான் யாதோ என்னில் தடையிலா ஞானமாகும் -சிவஞானசித்தியார் ஞானம், அறிவு, வேல், சக்தி என்பவை ஒரு பொருட் கிளவிகள் அறிவு ஆழம், அகலம், கூர்மை என்ற மூன்று இலக்கணங்களையுடையது. வேலின் அடிப்பகுதி ஆழம், இடைப்பகுதி அகலம், நுனிப்பகுதி கூர்மை இந்த மூன்றும் உடையது வேல்.

ஆழ்ந்தகன்ற நுண்ணியனே - சிவபுராணம்

இத்துணை பெருமை வாய்ந்த வேல் அன்பர்களின் பொருட்டு இன்ன இன்ன செய்யவல்லது என்பதை சங்க இலக்கியங்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படையில் காணலாம்.

**குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்**
**அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்**
**கைவிடா நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும்**
**மெய்விடா வீரன் கைவேல்** - நக்கீரர்

வேலின் ஆற்றலுக்கு இணையான ஆயுதம் வேறு எதுவுமில்லை. அதன் ஒளிக்கு நூறு கோடி சூரியர்களும் இணையாகமாட்டார். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களாகிய சூரன், சிங்கன், தாருகன் ஆகிய மூன்று அசுரர்களையும் அழித்து மக்களுக்கும், தேவர்களுக்கும் நலம் பரிந்தது ஞானமாகிய வேலே.

**சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண் குன்றும்**
**ஏரகமும் நீங்கா இறைவன் கை வேல் அன்றே**
**பார் இருள் பவ்வத்தின் உள்புக்குப் பண்டு ஒருநாள்**
**சூர் மா தடிந்த சுடர் இலைய வெள் வேலே**

என்று விதந்து சிலப்பதிகாரத்தில் புகழ்கிறார் இளங்கோ அடிகள்.

அவை தவிர அருண கிரிநாத சுவாமிகளின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்றை இவ்விடத்தில் கூறுதல் பொருத்தமாயிருக்கும். முருகனடியாராகிய அருணகிரிநாதர் உலக வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தமது உயிரை விடத் துணிந்தார். திருவருணைக் கோபுரத்தின் மீது ஏறி அங்கிருந்து கீழே குதித்தார். முருகப்பெருமான் குருவாக வந்து இவரைக் கையில் ஏந்திக் கீழே விழாமல் ஏற்றுக் கொண்டான். முருகப் பெருமான் மயில்மிசை காட்சி தந்து இவரது நாவில் வேலினால் ஓம் என்றெழுதி எம்மீது பாடுக என்று பணித்தார். அருணகிரியார் மெய்சிலிர்த்துச் செய்வதறியாது நிற்கையில் முத்தைத் தரு பத்தித் திருநகை என்ற அடியும் எடுத்துக் கொடுத்தருளினார், அன்று தொடக்கம் முத்து முத்தான சந்தம் மலிந்த திருப்புகழ்ப் பாடல்களை பாடத் தொடங்கினார். இன்னும் கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தர் அனுபூதி, சீர்பாத வகுப்பு, தேவேந்திர சங்க வகுப்பு, வேல் வகுப்பு, வேளைக்காரன் வகுப்பு, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் போன்ற சந்தம் மிகுந்த அருமையான பாடல்களையும் பாடியுள்ளார். சாதாரண மனிதரான அருணகிரியார் புலவர்களையும் விஞ்சும் படியாக சந்தக் கவிகளை பாடியது முருகன் கை வேலின் ஆற்றலுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

முருகன் கை வேலின் ஆற்றலை அருண கிரியார் பல இடங்களில் புகழ்ந்து பாடியுள்ளார். சான்றாக பின்வரும் தொடர்கள் அமைந்துள்ளன.

தேரணி யிட்டுப் புரமெரித்
தான் மகன் செங்கையில் வேல்
கூரணி யிட்டணுவாகிக் கிரௌஞ்சம்
குலைந்து........... (கந்தர் அலங்காரம் 03)
குன்றம் திறக்கத் துளைக்க, வைவேல்
விடுங்கோன் (க.அல.16)
மாமயிலோன் வேல்பட்டழிந்தது வேலையும்
சூரனும் மேருவுமே (க.அல.40)
வேலுக்கணிகலம் வேலையும் சூரனும்
மேருவுமே (க.அல.62)
தனிவழிக்குத்துணை வடிவேலும் செங்
கோடன் மயூரமுமே (க.அல.70)
விக்ரம வேலாயுதம் தொட்ட நிர்ம
லனே (க.அல.88)
வீரா முதுசூர் பட வேல் எறியும்
சூரா (க.அனு.16)
வடிவிக்ரம வேல் மகிபா (க.அனு.23)
வினையோட விடுங் கதிர் வேல் மற
வேள் (க.அனு.40)
மின்னும் கதிர்வேல் விகிர்தா (க.அனு.49)

பழுத்த முது தமிழ்ப் பலகை இருக்கும் ஒரு
கவிப் புலவன் இசைக்குருகி வரைக்குகையை
இடித்து வழிகாணும்

சுரர்க்கும் முனிவர்க்கும் மகபதிக்கும் விதி
தனக்கும் அரிதனக்கும் நரர் தமக்கும் உறும்
இடுக்கண் வினை சாடும்

தனித்து வழி நடக்கும் எனதிடத்தும் ஒரு
வலத்தும் இரு புறத்தும் அருகடுத்து இரவு
பகல் துணையாகும்

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலை
விருத்தன எனது உளத்தில் உறை கருத்தன
மயில் நடத்து குகன் வேலே........ (வேல் வகுப்பு)

முருகன் திருவடிகளைப் பெற விரும்புவீர்களேயானால் அவனை வணங்குவதோடு அவன் கையிலுள்ள ஒளி வீசுகின்ற வேலையும் வணங்குங்கள்.

கைவாய் கதிர்வேல் முருகன் கழல் பெற்று உய்வாய் என்ற தொடர் உய்த்து உணரத்தக்கவை. வேலை வணங்குவதே வேலை என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு முருகனின் வேலை அல்லும் பகலும் வணங்கி இம்மை மறுமைப் பயன்களைப் பெற்று உய்வோமாக.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர் மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை

-நக்கீரர்

# மன்று(ள்)ளார் அடியார்

-திரு வ. கோவிந்தபிள்ளை

சங்க காலம் முதற் சோழர் காலம் வரை எழுந்த காவியங்கள் அனைத்தும் ஒன்பது சுவைகளையே கொண்டிருந்தன. எனினும் சோழர் காலத்திலே எழுந்ததாகக் கருதப்படும் பெரிய புராணம் மட்டும் பத்துச் சுவைகளைக் கொண்ட காவியம் என்பர். இதனாலேயே பெரிய புராணம் பாடிய சேக்கிழார் பற்றிக் கூறும்பொழுது "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவன்" என மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் குறிப்பிடுவத மனங்கொள்ளற் பாலதே.

இறைவன்மாட்டுக் கொண்ட அதீத அன்பினை ஒருநிலைப்பட்டு நின்று வெளிப்படுத்துவதே பத்திச் சுவையாகும். இறைவனது பெருங்கருணைத் திறத்தினைக் கந்தபுராணம், 'திருவிளையாடற் புராணம், திவாதவூரடிகள்புராணம் போன்றவை எடுத்தியம்புவது போன்று, இறைவனையும், இறைவனுடைய பெருங்கருணைத் திறத்தினையும் திருவிளையாடல்களையும் அடியவர்க்கு அடியவராகவும் அடியார்கள் வாயிலாகவும் எடுத்தியம்பும் சிறந்த புராணங்களுட் பெரியபுராணமும் ஒன்றாகும்.

"அறுமுகமுடையவோரமலன் மாக்கதை" (ஆறு திருவதனங்களையுடைய ஒப்பற்ற மலரகிதரா கிய சுப்பிரமணியபொருமானது பெருமை பொருந்திய புராணத்தை) என்று கச்சியப்பர் கூறுவது போன்று சேக்கிழாரும் பெரியபுராணம் பற்றிக் கூறும் பொழுது,

"எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீண்முடி
கடக்க ளிற்றினைக் கருத்துள் இருத்துவாம்" என்று விநாயகப் பெருமானை வேண்டுதல் செய்கிறார்.

இச்செய்யுளில் "மாக்கதை" என்பது பெருமை பொருந்திய இறைவனது திருவிளையாடல்களும் அற்புதங்களும் சேகரித்துத் தொகுக்கப்பட்ட கதைகளே என்பது பொருளாகும். சேக்கிழார், நாயன்மார்கள் பாடியருளிய தேவாரப் பதிகங்களின் அடியொற்றியும் தாம் சேகரித்தவைகளின் துணை கொண்டு பெரியபுராணத்தினைப் பாடிச் சென்றுள்ளார். நூலாசிரியர் இந்நூல் பற்றிக் கூறும்பொழுது

"இங்கிதன் நாமங்கூறின் இவ்வுலகத்து முன்னாள்
தங்கருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புறவிருள் போக்குகின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம்"

என்று கூறுகின்றார். இதில் 'திருத்தொண்டர்' என்பது இறைவன் ஒப்பற்ற தொண்டனாகச் செயற்பட்டமையினாலேயே அவரைத் திருத்தொண்டர் (திருவாகிய தொண்டர்) என்றும் அவர் பற்றிய புராணத்தினைத் "திருத்தொண்டர்புராணம்" என்றும் சேக்கிழார் பாடலாயினார். பின் வந்தவர்களே இந் நூல் அடியார் புகழ் பற்றிக் கூறவெழுந்த நூல் என்று விளக்கம் அளிப்பாராயினர்.

சம்பந்தர் இறைவனைப்பற்றிப் பாடும்பொழுது,

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரியார் ஏறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரியர் ஆரறி வாரவர் பெற்றியே (3) என்றும்,

வரியணி நயனிநன் மலைகள் மறுகிடக்
கரியினை உரிசெய்த கறையணி மிடற்றினன்
பெரியவன் பெண்ணினோ டாணலி யாகிய
எரியவன் உறைவிடம் ஏடகக் கோவிலே
என்றும் பாடுகின்றார். (4)

இப்பதிகப் பாடல்களுட் குறிப்பிடப்படும் பெரியர், பெரியவன் என்ற சொற்களுக்குப் பொருள் கூறும்பொழுது

"ஆயி னும்பெரி யாரவர் என்பது
மேய இவ்வியல் பேயன்றி விண்முதற்

பாய பூதங்கள் பல்லுயிர் அண்டங்கள்
ஏயும் யாவும் இவர்வடி வென்பதாம்." (5) என்பர்.

இதில் சம்பந்தர் "பெரியார்" "பெரியவன்" என இறைவனையே குறிப்பிடுகின்றார் எனச் சேக்கிழார் விளக்குகின்றார்.

எனவே கச்சியப்பர் 'கந்தன்' புகழ் பற்றிப் பாடிய புராணம் கந்தபுராணம் என வழங்கப்பட்டு வருவது போல, பெரியர் அல்லது பெரியவன் புகழ் பற்றிப் பாடிய புராணம் பெரிய எனக் கடைகுறைந்து பெரியபுராணம் வழங்கப்படலாயிற்று, எனவே பெரிய புராணம் என்பதும் திருத்தொண்டர்புராணம் என்பதும் ஒப்பற்ற பொருளான சிவபெருமான் மீது பாடப்பட்ட புராணம் என்பதே பொருந்தும்.

கச்சியப்பர் கந்தபுராணக் கதைகளைப் பற்றி

'பிறையணி சடைமுடிப் பிரான்தன் காதைகள்
இறையுமோர் மறுவில யாவும் மேன்மையே
மறைபல சான்றுள வாய்மையே யவை
அறிஞர்கள் நாடியே யவற்றைக் காண்கவே' (6)

எனக் கூறுவது பெரியபுராணக் கதைகளுக்கும் பொருத்தமாகும். பெரியபுராணச் சம்பவங்களும் அற்புதங்களும் இறைவனால் மட்டும் நடாத்தப்படக்கூடிய செயல்களேயன்றி மானுடர்களாற் செய்யக் கூடியவன்று. சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர்களும் இறைவன் மூலம் தாம்தாம் விரும்பியவற்றைச் சாதித்தார்களே அன்றி, அவர்களாக எந்தச் சாதனைகளையும் நிகழ்த்தவில்லை. நிகழ்த்தியதாகச் சேக்கிழார் எடுத்துக்காட்டவும் இல்லை. சிவனை, ஆதி என்றும் முன்னோன் என்றும் அழைப்பதால் அவன் பற்றிய கதைகளும் பழைமை வாய்ந்தவையே. எனவே புராணப் பண்புடைய கதைகள் தொன்மை வாய்ந்தவையாதலால் 'தொன்மம்' எனவும் வழங்குவர்.

பேராசிரியர் சுப்பிரமணியன் அவர்கள் "நாயன்மார்கள் தொடர்பாக வழங்கிவரும் செய்தி களுட்பல பொதுவாகத் "தொன்மம்" எனப்படும் புராணப்பண்பு வாய்ந்தவை யாகவுள்ளன. இவ் வாறான புராணச் சார்பான பார்வையின்று விலகி வரலாற்று மாந்தர்களாக இவர்களைக் காண வேண்டுமென்ற ஆர்வமேலீட்டால்(7) "நால்வர் வாழ்வும் வாக்கும்" என நூல் ஒன்றை தாம் எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் கூறுவது போன்று புராணச் சார்பான பார்வையினின்று விலகுவதனால் இவர்கள் எவரும் வரலாற்று மாந்தர்களாகி விடமுடியாது. மாவீரன் அலெக்சாந்தர், நெப்போலியன் என்போர் படைபலத்தினால் பல வெற்றிகளையீட்டி வரலாறு படைத்த kht Bhfs ;M th; tuyhW (History) வேறு கட்டுக்கதை அல்லது புனைகதை (Legendary) வேறு மாக்கதை (இறைவனைப் பற்றிய) புராணக்கதை வேறு. சிவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். அவன் அற்புதச் செயல்களும் திருவிளையாடல்களும் பழமை வாய்ந்தவை- தொன்மை வரலாற்றுச் காலத்திற்கு முற்பட்டவை மட்டுமன்றி முக்காலத்திலும் நிகழ்பவை என்பதைப் பேராசிரியர் முதற்கண் நினைவிற்கொள்ளத் தவறியமை பேரிழுக்காகும்.

நாயன்மார் எனப்படுவோர் இறைவனுடன் இரண்டறக் கலந்தவர்களாதலால், அவர்களுடைய வாழ்வியலைப் புராண மரபினின்றும் பிரித் தெடுத்தல் அவர்களின் நாமமே உலகில் இடம் பெறும் வாய்ப்பு அற்றுவிடும் என்பது மறுக்க முடியாததாகும். எனவே பேராசிரியர், சம்பந்தர் பற்றிக் குறிப்பிடுவது பற்றி நோக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

"சைவ வரலாற்று மரபு, சம்பந்தரின் ஆளுமையை மதித்துப் போற்ற முற்பட்ட சூழ்நிலையிலேயே சமய பாரம்பரியத்துக்கு உரியவாறு அவர் புராண நிலைப்பட்ட புனைவுகளுக்கு உட்படுத்தப் பட்டலாயினர்" (8)

இக்கூற்றிலிருந்து புராணம் என்பது புனைந்துரைக்கப்பட்ட சம்பவங்களேயன்றி உண்மைச் சம்பவங்களன்று என்ற இறையனுபவம் ஏதும் அற்ற தான்தோன்றித்தனமான மனநிலையில் எடுத்த முடிவுகளே இவை எனலாம். மேலும்
"பிறந்த சூழலில் அவர் பெற்றிருந்த வாய்ப்புகளால், ஒரு இளம் மேதை என்ற வகையில் அவர் பெற்றிருந்த நுண்ணறிவாற்றலை வியந்த சைவச் சமூகம் அவரை ஒரு ஞானக் குழந்தையாகக் கற்பனை செய்தது. இக்கற்பனையின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக அவர் இறைவியின் ஞானப்பால் பருகியவர் என்ற புனைவு உருவாகியது.

அவருக்குச் சமூகம் கொடுத்த உயர்நிலை உப சாரங்களை - முத்துச்சிவிகை, முத்துக்குடை முதலியவற்றை இறைவனே அவருக்கு அருளியன வாகக் கதைகள் புனையப்படலாயின. இவ்வாறான புராணப்பண்பு வாய்ந்த புனைவுகள் உருவாகிய சமூகத்தளங்களில் நின்று கொண்டே நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் சம்பந்தர் பற்றிய தரிசனத்தை எமக்குத் தருகிறார்கள்."(9)

பேராசிரியர் இவ்வாறு கூறுவதனால் தன்னையும் கைலாசபதியையும் இன்னோரன்ன வேறும் சிலரையும் மட்டும் அளவு கோல்களாகக் கொண்டு, நம்பி யாண்டார் நம்பியையும் சேக்கிழாரையும் புனைந் துரைக்கும் பேர்வழிகளாகக் காட்டுவது சந்ததி. சந்ததி சார்ந்த இறையனுபவம், கல்வியறிவு என்பன கிஞ்சித்துமின்மையையே தெற்றெனக் காட்டுகின் றது எனலாம்.

மேலும் "புராணங்களை எடுத்துரைத்தவர்கள் பரந்த மக்கள் சமூகத்தைத் தமது கேட்போர் கூடமாகக் கொண்டவர்கள் அல்லர். தம்மைச் சூழவுள்ள சில முனிவர்கள் மற்றும் கற்றோர் குழுவையே அவர்கள் தம் கேட்போர் வட்டமாகக் கொண்டி ருந்தனர். நைமிசாரணியம் என்ற வனத்திலே சூதர் என்பவர் தம்மைச் சூழவிருந்த முனிவர் கூட்டத் தினரை நோக்கிப் புராணக் கதைகளை எடுத் துரைத்தார் என்பதே பெரும்பாலான புராணங்களின் முகப்புகளிற் காணப்படும் செய்தி". (10)

இக்கூற்றுக்கு விடையாகக் கந்தபுராணம் பற்றி நூலாசிரியர் கூறும் கருத்து மனங்கொள்ளற்பாலதே.

"ஆற்று மைம்புலத் தாறுசெல் மேலையோர்
போற்று கந்த புராணம்" (11)

என்று கூறுவர். இக்கூற்று கந்தபுராணத்திற்கு மட்டு மன்றி பெரிய புராணம் உட்பட சிவபுராணங்கள் அனைத்திற்கும் பொருந்திடும் கூற்றாகும்.

சங்கப்புலவர்களுக்குத் தலைமைப் புலவராக இருந்தவர் நக்கீரர். தலைமைப் புலவராக இவர் இருந்தபோதிலும், அகத்தியருக்கு இறைவன் தாமா கப் போதித்தமை போன்று நக்கீரருக்கு போதியாது, அகத்தியர் மூலமாகப் போதித்தமையை,

"அருந்த வாவிவற் கியற்றமி ழுமைந்திவ எம்பாற்
தெரிந்த நீயதை யரிறபத் தெருட்டு" (12)

என்று அகத்தியர் மூலமாக நக்கீரருக்கு இயற்றமிழின் பாகுபாடுகளைப் போதித்தமையும் பொதுவாக எத்தகையவர்களுக்குத் தமிழைக் கற்பிப்பது அறமாகும் என்பதனை,

தன்னை நித்தலும் வழிபடும் தகுதியோர் சாலப்
பொன்ன னிர்ஙவர் தொடுத்தமற் சரலாப் புனிதர்
சொன்ன சொற்கட வாதவர் துகள்தவிர் நெஞ்சத்
தின்ன வர்க்கு நூல் கொளுத்துவ தறம் (13)

என்று எம்பெருமான் கூறிய தோடமையாது நக்கீரன் மனநிலையை

"இவனெடுத்த மற்சரத்தினால் யாமுணர்த் தாதித்
தவனை விட்டுணர்த் தினமெனச் சாற்றினான்" (14)

என்று கூறிய வரைவிலக்கணம் இயற்றமிழை, புராணங்களை மட்டுமன்றி, துறைசார்ந்த கலைகள் எவையாயினும் அவற்றைப் பொருத்தமானவர்களுக் குக் கற்பிக்க வேண்டுமேயன்றி எல்லோருக்கும் கற்பித்தல் பொருந்தாது என்பது பண்டு தொட்டுப் பயின்று வரும் மரபாகும்.

மேலும் சூதமகாமுனிவர் கைக்கொண்ட போதனா மரபே அவர்காலம் முதல் இலவசக்கல்வி ஆரம்பித்த காலம் வரை நீடித்திருந்தது எனக் கொள்ளின் மிகையாகாது.

12ம் நூற்றாண்டில் எழுந்த நன்நூல் பாயிரவியல் எத்தகையவர்களை மாணவர்களாகக் கொள்ளக் கூடாது என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறுகின்றது. அப்பட்டியல் வருமாறு:

களி - கள்ளுண்டு களிப்பான்
மடி - சோம்பேறி
மானி - அகங்காரமுடையவன்
காமி - காமமுடையான்
கள்வன் - திருடன்
பிணியன் - நோயாளி
ஏழை - அறிவில்லாதவன்
பிணக்கன் - மாறுபாடுடையவன்
சினத்தன் - கோபமுடையவன்
துயில்வோன் - மிகத்தூங்குவோன்
மந்தன் - புத்திநுட்பமில்லாதவன்
தொன்னூற்கஞ்சித்துடுமாறுளத்தன் - பழைய நூல் களைக் கண்டஞ்சித் தடுமாறுமுள்ளத்தை உடையவன்
தறுகணணன் - அஞ்சத்தக்கவைகளை அஞ்சாதவன்

பாவி - பாவஞ்செய்பவன்
படிறன் - பொய் பேசுவான்
இன்னோர்க்குப் பகரார் நூலே - இப்படிப்பட்ட குற்றங் களையுடையவர்களுக்கு ஆசிரியர் நூலைச் சொல்லார்.

எனவே சூதமகாமுனிவர் தம்மைச் சூழவிருந்த குறுகிய வட்டத்தினரை நோக்கிப் புராணக் கதைகளைக் கூறியமை பொருத்தமே.

சிவபெருமான் கல்லால விருட்சத்தின் கீழிருந்து நால்வருக்கு உபதேசிக்க முடிந்ததேயன்றி ஒரு நாற்பது பேருக்கு கூட உபதேசிக்க முடியவில் லையே.

திருப்பெருந்துறையில் பரமாசாரியாக வீற்றிருந்த சிவபெருமான் ஒருவருக்கு மட்டும் உபதேசிக்க முடிந்ததேயன்றி ஒரு பத்துப் பேருக்குக் கூட அவரால் உபதேசிக்க முடியாது போய்விட்டமைக் குரிய காரணங்களைச் சிந்திப்பின் எதற்காக ஒரு குறுகிய வட்டத்தினருக்கு மட்டுமே உபதேசம் நிகழ்த்தப்பட்டதென்பது தெற்றெனத் தெளிவாகும்.

மேலும் இப்பொழுது கல்லூரிகளிலும் பல்களைக் கழகங்களிலும் கல்வி பயிலும் மாணவவர்களுட் தொண்ணூற்றொன்பது (99) வீதமானோர் பவணந்தி முனிவர் கூறிய பதினைந்து (15) வகைக் குற்றங்க ளையும் ஒருங்கே கொண்டவர்களும் உளர் என்பதில் ஐயமில்லை. இம்மாணவர்களைப் போன்று கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும்

மொழி குணமின்மையும் - பாடஞ் சொல்லும் குணமில்லாமையும்
இழிகுணஇயல்பும் - இழிகுணமாகிய இயற்கையும்,
அழுக்காறு - பிறருக்குவரும் கல்வியைக் குறித்துக் கொள்ளும் பொறாமையும்
அவா- பொருளில் அதிகமாக வைக்கும் ஆசையும்
வஞ்சம் - மெய்ப்பொருளை மறைத்துப் பொய்ப் பொருளைக் காட்டி வஞ்சித்தலையும்
அச்சம் ஆடலும் - கேட்போருக்கு அச்சம் உண் டாகப் பேசுவதையும் கழற்குடம், மடற்பனை, பருத்திக்குண்டிகை, முடத்தெங்கு ஒப்பு என -கழற்குடமும் மடற்பானையும் பருத்திக் குண் டிகையும் முடந்தெங்கும் ஆகிய நான்கினை யும் ஒப்பென்று சொல்,
முரண்கொள் சிந்தனையும் உடையோர் - மாறுபாடு கொண்ட கருத்தையும் தம்மிடையே உடையோர்
ஆசிரியராகுதல் இவர் - கற்பிக்கும் ஆசிரியராகுதல் எஇலராவர். (14)

இத்தகைய பல குணங்களனத்தையும் தம்மக த்தே கொண்டவர்களே கல்லூரிகளில் மட்டுமன்றிப் பல்கலைக்கழகங்களிலும் ஆசிரியர்களாகவுளர் என்பதைப் பேராசிரியர் அனுபவ வாயிலாக அறிந்த தொன்றே. மேற்கூறப்பட்ட வரைவிலக்கணம் கற்பிக் கும் ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி நூலாசிரியர்க ளுக்கும் பொருந்துமென்பதை எவரும் மறுக்க முடியாது. எதை எவ்வாறு கற்றாரோ அதை அவ்வாறே நூல் வடிவாக்குவதே நூலாசிரியரின் நோக்கமாகியது மன வருத்தத்திற்குரியது.

"சம்பந்தருக்குப் படிக்காசு வழங்கியமை பற்றிய விளக்கம் 4ம் 5ம் இயல்புகளில் தரப்பட்டுள்ளது. கோயில்களின் சொத்து அடியவர்களுக்கும் பயன் பட்டதென்பதை அது உணர்த்தியுள்ளது என்பது 5ம் இயலில் தரப்பட்ட விளக்கம் ஆகும்" (17) எனத் திருவீழிமிழலையில் நடந்த சம்பவம் இறை வனின் அருட் செயல் அல்ல என்ற முடிவுக்குப் பேராசிரியர் சுப்பிரமணியன் வருகின்றார்.

பேராசிரியர் சுப்பிரமணியன் கருத்துப்படி சேக்கிழார் நூலாசிரியராகவிருக்கும் தகுதிகள் எதுவும் அற்ற நிலையுடையவர். மெய்ப்பொருளை மறைத்துப் பொய்ப் பொருட்களைக் காட்டி வஞ் சிக்கும் ஆசிரியர் குழாத்துள் இவரும் ஒருவர் என்ற நோக்கிலேயே தமது நூலைப் போராசிரியர் எழுதியுள்ளமை மனவருத்தத்திற்குரியது.

திருவீழிமிழலையில் நடந்த சம்பவம் போன்று இற்றைக்கு நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அடியவர் ஒருவர் தமக்கு முன்பு நிகழ்ந்த சம்பவம் பற்றிக் கூறியதை ஈண்டு நினைவு கூர்தல் நன் றாகும்.

இவ்வடியவர் தமக்கு இருந்த புத்திரிகள் இரு வரையும் உரிய காலத்தில் திருமணம் செய்து கொடுத்தார். தாம் அரசாங்கத்தில் வகித்த சிறு தொழிலையும் தமது தம்பிமாருக்கு மாற்றிக் கொடுக் கலானார். இதன் பின்பு காலம் மாறமாறப் படிப் படியாக வறுமையில் உழன்றார். இவர்கள் தங்கள் புத்திரிகளுடன் செல்லவோ புத்திரிகள் இவர்களிடம்

வந்து போகவோ முடியாத நிலையும் ஏற்படலாயிற்று. இந்நிலையில் கணவன் மனைவி ஆகிய இவர்கள் இருவரும் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் உழன்றனர். இறைவனைத் தவிர இவர்களைக் கவனிப்போர் எவரும் இலராயினர். உணவுமின்றி நீர் அகாரம் இன்றிச் சில நாட்கள் கழிந்த இன் நிலையில், "ஆரும் அற்றவருக்குத் தெய்வம் துணை' என்ற முது மொழிக்கமைய அவரது கனவில் முருகப் பெருமான் தோன்றி, "உனக்கு இன்ன இடத்தில் காசு வைத்திருக்கின்றேன்" எனக் கூறி மறைந்துள்ளார். அந்த இடம் இவரது ஊரிலிருந்து 1/2 மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள குளக்கரையின் பக்கத்தில் நிற்கும் மருத மரத்தடியினையே காண்பிக்கத்தக்கதாகக் கூறினார்.

கனவினைக் கண்டு விழித்த மாத்திரத்தே பகழிக் கூத்தரைப்போல் நோயையும் பொருப்படுத்தாது எழுந்து போர்வையினால் உடலை மூடியவண்ணம் ஒரு கையில் ஊன்று கோலையும், ஒரு கையில் அரிக்கன் லாம்பினையும் எடுத்துக் கொண்டு கனவில் காட்டிய இடத்தினை அடைந்து அந்த இடத்தினை விரல்களினால் கிழறினார். இறைவன் கூறியது போன்று அங்கு ரூபா 2/= இருந்தது. அதனைக் கொண்டு தாம் வழமையாக வியாபாரம் செய்த முஸ்லிம் நண்பனிடம் கொடுத்து 2 புசல் நெல் வாங்கிச் சென்றதாகவும், பின்னர் அதிலிருந்து உயர் நிலையடைந்ததாகவும் இறைவனது பெரும் கருணைத் திறம் பற்றிப் பேசலாயினார்.

எனவே கோயில் சொத்தினை அடியார்களுக்குப் பயன்படுத்தினார் சம்பந்தர் என்று, இப்போது 21ம் நூற்றாண்டில் கோயில்களையும் கோயில் சொத்துக்களையும் விற்று உண்பவர்களுக்கு சமமாகச் சம்பந்தரையும் , நாவுக்கரசரையும் மதிப்பீடு செய்து விற்பனை நோக்கில் நூலை எழுதுவது சிவனடியார் வர்க்கத்தினரை இழிவு செய்யும் நோக்கில் எழுதப்பட்டதே ஆகும்.

சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோருக்கு அவர்கள் வேண்டிய போதெல்லாம் இறைவன் முன்வந்து அவர்களுக்குத் தொண்டுகள் செய்ததை போல இவர்கள் இறைவனுக்குத் தொண்டுகள் புரிந்தார்கள் என்பதற்கில்லை. மானுடர் தமக்குத் தொண்டுகள் செய்ய வேண்டுமென இறைவன் எதிர்பார்ப்பதுமில்லை. இதற்குப் கவிஞன் மில்ரன்னுடைய "God doth not need Eithor man`s work, or His own gifts`` என்ற வரிகள் சான்றாகும்.(18)

சேக்கிழார் நூலைத் தொடங்கும் பொழுது
'உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்" என்றும்
முடிக்கும் போது
"மாற்றுள்ளாரர் அடியார் அவர் வாழ்புகழ
நின்றதெங்கும் நிலவி யுலகெலாம்" (19)

என்றும் கூறுகின்றார். இவ்வாறு கூறுவதிலிருந்து "மன்று(ள்) ளாரே அடியார்" அவர் வான் புகழ் உலகெலாம் நிலவி. நின்றது. நிற்கின்றது நிற்கும் எனக் கொள்ளலே பெருத்தமானதாகும்.

**வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தினை துயர்வு:**

குளத்தில் நீர் உயருமளவுக்குத் தாமரை, அல்லி முதலிய நீர்ப்பூக்களின் செடிகளும் உயரும். நீரின் உயரம் குறையக் குறைய செடிகளின் உயரமும் குறையும். நீரின் உயர்ச்சி எவ்வளவோ அவ்வளவே நீர்ச் செடிகளின் நீளமும். அதேபோலவே மக்களும் ஊக்கம் மிக்கதான வாழ்க்கையில் உயருவர். ஊக்கம் குறைய வாழ்க்கையில் குன்றுவர். வாழ்க்கையின் உயர்ச்சியும் இன்பமும் புகழும் ஊக்கத்தினாலே

# ஆண்டவனைப் பற்றினால் ஆனந்தமே

- சைவப்புலவர் செ. பரமநாதன்

"அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்றார் ஔவையார் "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க் குமோ" என்று ஏங்கினார் தாயுமான சுவாமிகள்.

இம்மானிடப் பிறவி எடுத்த மனிதன் மட்டுமே உலகத்தில் உயரத்தில் வளர்கிறான். ஏனைய விலங்கினங்கள் குறுக்கே வளர்கின்றன. ஆடு, மாடு, யானை, குதிரை போன்ற விலங்கினங்களும் உண்கின்றன, உறங்குகின்றன, இனப்பெருக்கம் புரிகின்றன. அவைக்குப் பகுத்து அறியும் அறிவு இல்லை. ஆகவே மனிதன் உயர்ந்தவன் என்று பேசுகின்றோம். அதற்கேற்ப நடக்கின்றோமா?

மிருகங்கள் காலால் நடக்கின்றன கால்நடை எனப்பெயர் பெறுகின்றன. மனிதன் மனதால் நடக்கிறவன். அந்த நடை நல்ல நடையாக அன்பு நடையாக அருள் நடையாக இருப்பது தானே சிறப்பர்கும்.

சரி, எப்படி அன்புநடை அருள்நடை நடப்பது? ஆன்றோர்கள் சான்றோர்கள் இதை நமக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். எல்லோரையும் எல் லாவற்றையும் படைத்துக் காக்கும் இறைவன் அன்புருவாகவும் அருளுருவாகவும் இருக்கிறான். எல்லா உயிர்களிலும் நீக்கமற நிறைந்து ஆண்ட வன் இருப்பதனால் உயிர்களுக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும். ஆகவே மக்கள் இவ்வாறு நடக்க வேண்டும் என்று வகுத்தார்கள். இதுதான் சமயம்.

பற்பல சமயங்களிலும் பழைமையானது பல்வகையிலும் சிறப்புமிக்கது நமது சைவசம யமாகும். எல்லாச் சமயங்களையும் தனக்கு அங் கமாகக் கொண்டு தாயகமாக விளங்குகின்றது. எந்தச் சமயத்தையும் புறக்கணிக்காமல் தழுவி நிற்கும் சமரசமுடையது. சைவசமயக் கருத்தை பாதி வெண்பாவில் விளக்குகிறார். தாயுமானவர்.

> "ஓதிநூல் கோடியுணர்ந்து உணரார்கள்
> பாதி வெண்பாவில் பகரக் கேள் - ஆதி
> சிவமே பொருள் அதைச் சாரும் நெறியன்பே
> பவமே பகை எதையும் அருளாற் பார்"

இப்படி இருக்கும் மனிதன் புனிதனன்றோ? நமது உடல் எதற்காகும். சிவவாக்கியர் கூறுகின்றார்.

> மண்கலம் கவிழ்ந்தபோது வைத்துவைத்து ஆக்குவார்
> வெண்கலம் கவிழ்ந்தபோது வேணுமென்று பேணுவர்
> நம்கலம் கவிழ்ந்தபோது நாறுமென்று போடுவார்
> எண்கலந்து நின்றமாயம் என்னமாயம் ஈசனே".

இப்படி அழியக்கூடிய யாக்கையைப் பெற்ற நாம் அழியாத புகழுடம்பை அடைய வேண்டும். நிலை பெறுவதற்கு எண்ணுபவர் நிலையான பொருளைப் பற்றிட வேண்டும். யாக்கை, செல்வம் அனைத்தும் அழியக் கூடியவை. அழியாத பொருள் ஆண்டவன். அவனைப் பற்றினால் அழியாவரம் பெறலாம்.

உலகத்தில் அரிய பொருளாகக் கருதப்படும் அனைத்திலும் அரியபொருள் வாழ்நாள் கழிந்து போன ஒரு நிமிடம் கோடி கொடுத்தாலும் திரும்பி வருமா? அத்தகைய அருமையான வாழ்நாளை வீணாக்கலாமா?

> வீணே நாள் போய்விடாமல் ஆறாது
> மீதில்ஞானோபதேசம் அருள்வாயே

என்றார் அருணகிரிநாதர். ஆகவே இந்த வாழ் நாளை வீணாக்காது பிறவியற சிந்திக்க வேண்டும். இறைவனை அடையும் வழியை நாடவேண்டும். எளிய இருவழிகள் பக்தி ஞானம், பக்தி பண்ணி னால் முக்தி கிடைக்கும்.

> "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
> எண்பது கோடி நினைத்து எண்ணுவன்"

ஆனால் பெறற்கரிய மனிதப்பிறவியைப் பெற்றும் பிறவியற நினைக்காமல் எதையெதையோ எண்ணு கிறோமோ என்னே! நம் மதியீனம்!மனம் ஐம் புலன்கள் வழியே சென்று அலைந்து அழியும் இந்த ஆசைகளே துன்பத்திற்குக் காரணமாகும்.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை" என்கின்றது சிவஞானபோதும். மனம் புலன் வழியே சென்று நினைப்பு மறப்புடன் கூடிப் பிறப்பு இறப்பை உண்டு பண்ணுகின்றது. "ஏழ்கடல் மணலை அளவிடின திகம் எனதிடர் பிறவி அவதாரம்" என்றார் அநுபூதிமானாகிய அருணகிரிநாதர்.

ஐம்புலன் வழியே அலைய விடாமல் தடுத்து நல்லவைகளை நாளும் நாடி மனம் உறுதிப்படல் வேண்டும். அதற்கு வழி தியானம். தினம் காலையில் ஐந்து நிமிடம் தியானம் செய்து பின் தனது அலுவல்களைத் தொடர வேண்டும்.

அனைவரும் ஒருவருக்கொருவர் அன்புடனும், பண்புடனும் பழகித் தக்க சமயத்தில் நட்புடன் உதவி செய்யும்பொழுது, உதவி செய்பவரும் பெறு பவரும் உள்ளம் நிறைந்து மகிழ்கிறார்கள். கவலைகள் கரைந்து விடுகின்றன.

மனக்கவலை ஏதுமின்றி அவன் பாதத்தில் பரிபூரண சரணாகதியடைந்து அன்புடன், அருளுடன் வாழ வழி தெரிகிறது. தென்பு பிறக்கிறது, எந்த நிலையிலும் அல்லவை நீக்கி நல்லவை புரியின் ஆண்டவன் காப்பான் என்ற நம்பிக்கை ஒளி பிறக்கின்றது. வாழ்வு வசந்தமாகின்றது. கவலை நோயாக மாறும் நிலை மாறுகின்றது.

ஒரு மீன் குஞ்சு கடலில் நீந்திக் கொண்டிருந்தது. அங்கே ஒரு தவளை வந்து சேர்ந்தது. அப்பப்பா! எவ்வளவு தண்ணீர் காணுமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்றதே! முதலில் ஒரு கிணற்றில் அதுவே நிறையத் தண்ணீர். அதற்குமேல் எங்கே தண்ணீர் இருக்கப்போகிறது என்று பார்த்தேன். மழை பெய்து கிணறு நிறைந்து வாய்க்கால் வழியே சென்றால் பெரிய நதி. இதைவிட பெரிய தண்ணீர் நிலை இருக்க முடியாது என்று நினைத்தேன் நதி வழியே இங்கு வந்து பார்த்தேன் ஏ! அப்பா இவ்வளவு நீர் என்று கூறிக் கொண்டே ஓடிவிட்டது.

தண்ணீரில் நீந்திக் கொண்டிருந்த மீன் குஞ்சு தன் தாயைத் தேடி ஓடியது. "அம்மா!" அம்மா! ஒரு தவளை வந்து தண்ணீர் இவ்வளவு இருக்கிறதே என்று அதிசயித்துச் சென்றது. தண்ணீர் என்றால் என்னம்மா என்று நீந்திக் கொண்டே கேட்டது தெரியவில்லை வா! வேறு யாராவது பெரியவர் களிடம் கேட்கலாம் என்று தாய் மீன் தண்ணீரில் நீந்திக் கொண்டே சொன்னதாம்!.

நாமும் அப்படித்தானே இருக்கின்றோம் எங்கும் நீக்கமற வியாபித்துள்ள அரும் பொருள் ஆண்டவ னின் அருளை, அவனுடைய அருளில் மூழ்கி இருந்து கொண்டே எங்கே இருக்கிறது எப்படி இருக்கிறது என்றெல்லாம் தேடுகின்றோம்.

அறிவால் உணர்வால் தெரிய வேண்டியதை நாளெல்லாம் உரைகூறி விளக்க முடியுமா? ஆகவே தான் சுவையைப் பற்றி கூறிக் கூறி ஆசையைத் தூண்டுவது போல அவன் புகழ்பாடி அவனைக் காணும் அறியும் ஆசையை அனுபவிக்கும் துடிப்பைத் தூண்டுகின்றோம்.

இந்த ஆசை நிலையானது அழியாதது. அந்த நிலை அடைந்து விட்டால் இன்பமே துன்பமில்லை. ஆகவே மனதில் கோபம், பொறாமை நீங்கி அன்பும் அருளும் பெருகும். அவன் உள்ளத்தில் ஈசன் குடிகொள்வான். அந்த நிலையில் மானிடராய் வாழ்வதில் துன்பமில்லை, இன்பமாய் அமையும். மனதில் தைரியம் வருகிறது. குழப்பமும் சந்தேகங் களும் மறைகின்றன. அன்பும் அருளும் எம்வாழ்வில் மலரட்டும்.

**இனிய உளவாக இன்னா கூறல்**
**கனியிருப்பக் காய் கவர்ந்தற்கு**

- குறள்

# நால்வர் காட்டிய வழி

– திரு சு.இராஜன்

"நால்வர் போன வழியில் போங்க" என்று பெரியோர்கள் சொல்வார்கள். அந்த நால்வர் நமது சமயகுரவர்கள். அவர்கள், ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதித் தாம் துன்பங்களை இன்பங்களைச் சுமந்து இவை இரண்டும் இறைவனின் திருவருளால் கிடைத்தது என்ற எண்ணத்தால் வாழ்ந்து காட்டியவர்கள். சமயகுரவர்கள் நால்வரும் இப்பிறப்பைப் போற்றியிருக்கிறார்கள். "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்று அப்பர் ஓங்கி அறைந்து நின்ற உத்தமராக வாழ்ந்து வழி காட்டியுள்ளார். காரணம் நாம் ஏன்தான் பிறந்தோமோ" என்று அலுத்துச் சலித்து நிற்கின்ற சமுதாயத்தில் எதுவாயினும் பிறந்த பிறப்பினை மாற்றிக்கொள்ள முடியாது. இப்பிறப்பினை நல்ல வகையாக மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள் என்பதைக் காட்டினார். வேதனைகளையும் சோதனைகளையும் வென்று சாதனையாகக் காட்டுவதே நமது வாழ்க்கையாக வழிகாட்டினார்கள். மண்ணில் நல்லவண்ணம் வாழலாம். எப்படி என்றால் பெண்ணில் நல்லாளுடன் பெருந்தகையாகிய இறைவன் இருந்து காட்டிய வழியே வாழ்தல் என வழி காட்டினர்.

வாழ்க்கை என்பது வாழ்வதற்கு. கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வாழ்க்கை இனிக்கும் என்று வழிகாட்டினார் சுந்தரர். கணவன், மனைவிக்கிடையே சந்தேகம் வரக் கூடாது அப்படி வருமாயின் வாழ்க்கை பாழாகிவிடும் என்பதை விளக்கி மிக அற்புதமாக

"மாற்றுக் களிறடைந் தாயென்று மதவேழங்ககை எடுத்து
மூற்றித் தழலுமிழ்ந்தும் மதம்பொழிந்தும் முகஞ்சுழியத்
தூற்றத் தறிக்கில்லேனென்று சொல்லிய லறியாத்
தோற்றிச் சென்று பிடிஆடிறுஞ் சீவர்ப்பத மலையே"

என்ற பாடலில் வாழ்க்கை எப்படி அமைந்தால் சிறப்பாக அமையும் என்று வாழ்க்கைக்கு வழிகாட்டியிருக்கிறார்கள். நால்வரின் வாழ்க்கையில் பட்ட அனுபவ வரலாற்றினைக் கண்டு, கேட்டு அதன் வழியில் நின்று பேறு பெற்றவர்கள் பலராகின்றனர்.

நால்வர் பாடல்களைப் படித்து அதன்படி நடந்து தமது வாழ்க்கையை வெற்றிபெறச் செய்தவர்கள் உண்டு. நால்வர்களின் நாமத்தைச் செபித்து தம் வாழ்க்கையில் ஏற்பட்ட கரடுமுரடான பாதையைச் செப்பனிட்டுத் தப்பித்தவர் ஏராளம். தனிமனித ஒழுக்கத்தை ஒரு சமுதாயத்தின் ஒரு ஊரின் ஒரு மாநிலத்தின், ஒரு நாட்டின் ஒழுக்கமாக இருக்கும். எனவே தனிபுனித ஒழுக்கத்தைப் பேணிக் காத்திட நின்று வழிகாட்டியவர்கள் இந்நால்வர்களேயாகும். நாட்டில் நோய், துன்பம், வறட்சி, வெள்ளம் என இயற்கையால் வரும் துன்பங்கள் மக்களை வாட்டக்கூடாது என்று இறைவனின் திருமுன் நின்று பாடி "உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாத தவமே தவம்" என வாழ்ந்து வழிகாட்டியிருக்கிறார்கள். குளிர்சுரம் வந்தபோது "அவ்வினைக் கிவ்வினை" பதிகம் பாடியதும் வறட்சி வந்தபோது "வாசி தீரவே காசு நல்குவீர்" பதிகம் பாடியதும் வெள்ளம் வந்தபோது அந்தநாள் அடைக்கலம் என்ற பதிகம் பாடியதும் மக்களுக்காகவே. இம்மை வாழ்க்கைக்கு உணவு, உடை, இருப்பிடம், பதவி, உயர்வு, குடும்பம், இவைகளும் அம்மை வாழ்க்கைக்கு முத்திப்பேறும் இறைவன் வழிபாட்டால் கிட்டும் எனக் கூறிப் போற்றினர்.

இம்மை தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே"

என்று சுந்தரர் பாடிக்காட்டினார். எனவே வாழ்க்கையில் உண்மை உணர்ந்து அவ்வழி

நடந்தால் அனைத்தும் பெறலாம் என வழிகாட்டிய வர்கள் நால்வர்களாகிய சமயகுரவர்களே. பொய்மை நீங்கி மெய்மை வழி நடக்கக் காட்டியவர்களும் இவர்களே. எனவே தனிமனித ஒழுக்கத்தினையும் அதன் தொடர்பால் நீளும் சமுதாய ஒழுக்கத் தையும் பேணிக்காப்பது நமது கடமை என நால்வர் காட்டிய வழி செம்மாப்புடைய வழி. அதுவே வாழ்வியலைப் புகட்டும் வல்ல வழியாகும். இம்மை யில் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். அம்மையில் சிவலோகம் எய்தலாம் என வாழ்ந்து காட்டியவர்கள் இந்நால்வர்கள்.

இம்மை வாழ்விற்குத் தேவை உணவு, உடை, உறையுள், வீரம், அடுத்தவர்களுக்குக் கொடுத்து வாழ்தல் எல்லோர்க்கும் உதவிசெய்தல், அவர்க ளின் துன்பத்தைக் கண்டு துவளுதல், தன் துன்பத் தினைப் பொறுத்தல், துணிவு, உழைப்பு, தனிமனித ஒழுக்கம், திருநெறிய தமிழ்பற்று, சமயத்தில் உறுதிப்பாடு. தன்வாழ்வியலுக்காக கொண்ட கொள்கையை விட்டுக்கொடுக்காமை, இவைகளெல் லாம் தம் அருள்நூல் பாடல்களால் ஒன்று முதல் எட்டாம் திருமுறைவரை அருளிய நால்வர், தொகுத் தும் விரித்தும் வாழ்ந்தும் வாழவும் வழிகாட்டிகளாக விளக்கியிருக்கிறார்கள். நாமும் நால்வர் காட்டிய வழிநின்று வாழ்வாங்கு வாழ்வோம்.

# அழகனைக் காண நாலாயிரம் கண்

*மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு*
*மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்*
*சேலார் வயற்பொழில் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ*
*நாலா யிரம்கண் படைத்தில னேஅந்த நான் முகனே*

**அழகன் மருகனின் அற்புதக் காட்சியை கண்டு களிக்க அருணகிரியார் அங்கலாய்க்கிறார். அந்தப் பிரமன் தனக்கு நாலாயிரம் கண்களைத் தரவில்லை என்று கவலைப்படுகிறார். பச்சை மயில்வாகனமும் பன்னிரண்டு திண்தோள்களும் அச்சமகற்றும் அயில்வேலும் கச்சை திருவாதிரையும் சிறடியும் செங்கையும் ஈராறு அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் விரிகிரணம் சிந்தப் புனைந்து திருமுடிகள் ஆறும் பரவசமூட்டும் புன்னகையும் வைத்த கண் வாங்காமல் அழகு கொட்டிக் கொண்டே இருக்கின்றன.**

நன்றி: நல்லைக்குமரன் 1993

# பழனி மலை முதல் சுவாமி மலை வரை

- திரு செல். நடராசா

இறைவன் திருவிளையாடல்களில் பொதிந்துள்ள அர்த்தம் அதன் இரகசியத் தன்மை என்பன நமக்குப் புலப்படுத்தும் உண்மைகள் தான் என்ன? சாதாரணமாக எமது எல்லாக் கதைகளுக்கும் கரு ஒன்றாக இருக்கும். ஆனால் இறைவன் திருவிளையாடலில் கதை ஒன்று: அதன் கரு இரண்டாகும். வெளிப்படையான உண்மைக்குள்ளே உண்மை யாய் விளங்கும் உட்பொருள் அதன் வேறுபாட்டை பிரித்தாராய்வு செய்வோமாயின் நமக்குப் புலப்படும்.

எம்பெருமான் சிவனிடம் கிடைத்த மாம்பழத்தை வெட்டாமல் கணபதிக்கு அல்லது முருகப் பெருமானுக்கு கொடுக்க வேண்டுமாம். உம் பெருமான் கையசைத்தால் எத்தனை மாம்பழம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ள முடியும். ஆனாலும் அந்த ஒரு மாம்பழத்துக்குள்ளே திருவிளையாடலைக் காட்ட விழைந்த தத்துவம் தான் என்ன? பழனிமலையின் தோற்றமே அந்தத் திருவிளையாடலின் முடிவில் உதயமானது தான் என்பதை யாவரும் அறிவர்.

முருகனையும் அண்ணன் கணபதியையும் அழைத்தார் தந்தை சிவன், தாயார் பார்வதி தேவியார் வேடிக்கை பார்த்திருக்கப் போட்டியை ஆரம்பித்தார். உங்களில் எவர் உலகத்தை முதலில் வலம் வருகிறீர்களோ அந்தப் பழத்தை பெற்றுக் கொள்ளலாம். அன்னை தந்தையே உலகம். அதை உணர்த்தவே அந்தக் கதை என்பதை இந்துக்கள் அனைவரும் அறிவர். எனவே விநாயகன் அன்னை தந்தையரை சுற்றி வலம் வந்து மாம்பழத்தை பெற்றுக் கொண்டது கதை. ஆயினும் அதற்குள்ளே வேறோர் உட்பொருளும் பொதிந்திருப்பதை அறியப் புகுவோமாயின் விநாயகனிடம் பழம் கொடுத்தது சரி என்று கூறி ஏற்றுக் கொள்வதோடு நின்று விடாது இறைவன் திருவிளையாடலின் உட்பொருள் புலப்படும்.

முருகப் பெருமான் வலம் வந்து நிற்கையில் அவர் கண்ணெதிரே கணபதியிடம் பழம் கொடுத்தது தவறு என்று சுட்டிக் காட்டியே தவக்கோலம் பூண்ட முருகன் தேர்ந்தெடுத்த இடம் தான் பழனி மலை. முருகப் பெருமான் துறவு பூண்டு பழனி மலை நோக்கிச் சென்றபோதிலும், கணபதிக்குக் கொடுத்த பழம் திருவிளையாடலில் முருகப் பெருமானுக்கு மறுத்ததில் தவறுமில்லை. அது முற்றுப்புள்ளி வைக்கவுமில்லை.

அது முருகப் பெருமானைப் பொறுத்த வரையில் தோல்வியே இல்லை. தோற்றவர் பற்று அறுத்தவர், வெல்வது எவ்வாறு என்பதை உணர்த்தும் திருவிளையாடல் தான் அது. கேட்டவரம் எவதுவானாலும் கொடுக்கும் கருணையுள்ளம் கொண்ட எம்பெருமானிடம் ஒருமுறை யார் தலையில் நான் கை வைக்கிறேனோ அவர் அழிந்து போகவேண்டும் என கேட்டவனுக்கு வரம் கொடுத்து பின்னர் தானே தவித்தது கூட நாம் அறிவோம். ஆயினும் தன் மைந்தனுக்கு ஒரு மாம்பழத்தை வைத்து திருவிளையாடல் புரிந்த இரகசியம் தான் என்ன?

சுட்ட பழம் வேண்டுமா என்று கேட்ட ஒளவையின் செருக்கடக்கிய முருகனுக்கு தெரியாமலா போனது தாய் தந்தை தான் உலகம் என்பது. எம்பெருமான் திருவிழியான நெற்றிக் கண்ணின் மீதிருந்து வந்த சுடரான ஞானக் கண் திறந்தமையால் தோன்றியவன் என்பதால் அறிவுக் கடலாக அல்லவா வீற்றிருப்பான்.

தந்தைகூட இந்த திருவிளையாடல் மூலம் தன்னை இழிவுபடுத்துவாரா? ஞானத்தின் ஊற்றே அவரல்லவா? மாம்பழத்தை கணபதிக்கு கொடுத்தமையால் அன்னையின் புத்திரன்மீது கரிசனை காட்டித் தான் தோற்றுவித்த புத்திரன் மீது பரிவு காட்டாமல் விட்டுவிட்டாரே என்ற குற்றச்சாட்டில்

இருந்து மீண்டிருக்க முடியுமா? முருகப்பெருமான் வேண்டிய மாம்பழத்தை கணபதிக்கு கொடுத்து முருகனைச் சீற்றம் கொள்ள வைத்தமையால் முருகனின் தேடல் ஆரம்பமானது. ஒன்றை அடைய வேண்டுமாயின் இன்னொன்றை இழந்து தான் ஆக வேண்டும். வெற்றிடம் ஒன்றை உருவாக்க வேண்டும். அதற்கமையவே பழனிக்குச் சென்ற முருகப் பெருமான் முதலில் களைந்தெறிந்து பூண்டது தவக்கோலம். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று தடுத்த போதிலும் முருகன் தவக்கோலம் கொண்டது தேடலின் ஒரு வெளிப்பாடே.

எல்லையில்லா அழகுக்கு மேலும் அழகு ஏற்றவே தவக்கோலம் பூண்டான் அந்தக் கணபதியின் தம்பி. பாச உணர்வையும் துண்டித்தால் தான் வெற்றிடம் உருவாக முடியும். தம்பிக்காக விட்டுக் கொடுக்க வந்த அந்த தும்பிக்கையன் சொல் கூட எடுபடாமல் போனது முருகனின் கோபத்தைக் காட்டவா? யுத்த காரகன் செவ்வாயினன் அதிபதியென்று காட்டவா? இல்லவே இல்லை. தேடலுக்கு முன்னால் யாவற்றையும் துறக்கும் பக்குவம் வேண்டும் என்பதைக் காட்டவே. இல்லை என்றால் அண்ணன் தானே அழைத்தபோது பாசம் பகிரப்பட்டிருக்கும்.

பிரமதேவனின் உச்சித் தலை எடுத்த அந்த பரம்பொருளுக்கா தாய் தந்தை உலகம் என்பது தெரியாது என்று கூற முடியும். அர்த்தமுள்ள இந்து மதத்தின் ஆணிவேர் வரை சென்றாலும் குற்றம் காணமுடியாது. சாதாரண வாழ்வில் கூட கணவனின் தவறை மறைக்க முற்படுபவள் தான் மனைவி. முருகப்பெருமான் பிரமதேவரின் உச்சித் தலையை எடுத்தபோதும் அவரது தேவியான கல்விக்குரியவள் மௌனமாக இருந்தமை ஓம் என்ற தத்துவம் உலகுக்கு உணர்த்தவே என்றால் மறுப்பதற்கில்லை.

பிரமதேவர் மற்றொரு சந்தர்ப்பத்தில் கூட சரஸ்வதி தேவிக்கு சங்கடம் கொடுத்தார். தாழம்பூவைக் கண்டதாகப் பொய்யுரைத்து வழி பாட்டுத் தலமிழந்து சாபம் பெறறு நின்ற போது ஒரு பொய்தானே என்று பதவியைப் பதிக்காக இழந்திருக்க வேண்டும். ஏனென்றால் ஒரு பொய் கூட கூறாத நாவில் வீற்றிருப்பவளாச்சே அந்த சகலகலாவல்லி. கண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும் விளம்பிலுன் போல் கண்கண்ட தெய்வம் உண்டோ என்ற சொல்லுக்குரியவளும் பிரமதேவரின் உச்சித்தலை எடுத்தபோதும் மௌனம் காத்தாள் என்றால் அந்த ஞானக் குழந்தைக்கா தாய் தந்தை உலகம் என்பதை உணர்த்த வேண்டிய திருவிளையாடல். இந்துமதம் அங்கேயும் தவறைக் காணமுடியாமல் செய்துவிட்டது. அத்தகைய கல்விக்குரியவளை, மும்மூர்த்திகளுள் ஒருவரான எம்பெருமானைக் கூட பிரமதேவரின் உச்சித்தலை எடுத்த சம்பவத்தை தடுத்துவிட முடியாமல் போன சக்தி பொருந்திய முருகப் பெருமானுக்கு ஞானப் பழமான அந்த மாம்பழத்தினை மறுத்த இரகசியம் தான் என்ன?

உச்சிமலை மீது ஏறி இன்னும் செல்ல வேண்டுமென்றால் முடியக்கூடிய காரியமா? உப்புக் கரைசலுக்குள் செறிவு கூடிய பின்னர் மேலும் உப்பைக் கரைக்க முடியமா? அந்த அளவிற்கு அறிவின் எல்லையைத் தொட்ட ஒரே ஒரு கண் கண்ட தெய்வம் நம் முருகப் பெருமான் என்பதைக் காட்டவே இறைவனது திருவிளையாடல் நடாத்தப் பட்டது. நமக்கோ கற்றது கை மண் அளவு கல்லாதது உலகளவு என்பது பொருந்தும் அறிவுக் கடலான எம் பெருமானுக்கு இனி அறிய ஒன்றுமில்லை என்பதை இறைவன் உணர்த்தவே இந்தத் திருவிளையாடல். அதனால் தான் அந்த மாம்பழம் முருகப் பெருமானுக்கு மறுக்கப்பட்டது. விநாயகனைத் தாய் தந்தையைச் சுற்ற வைத்ததும் அவருக்குக் கொடுத்ததும் திருவிளையாடலின் மறுபக்கம். உண்மைக்குள் உண்மையாய் விளங்கும் மற்றைய கருப்பொருள்.

இதனை முடித்து வைக்கும் திருவிளையாடல் தான் சுவாமி மலையில் கூடி நிற்கின்றது. தான் ஞானப் பழத்தைத் தர மறுத்தது தவறில்லை என்பதை உணர்த்தவே சுவாமி மலையில் இறைவன் பரம்பொருள் முருகப்பெருமானிடம் பிரமோபதேசம் பெறுகின்றார். விஞ்ஞான உலகில் நமக்குத் தெரியும் செறிவு கூடிய இடத்தில் இருந்து தான் செறிவு குறைந்த இடத்திற்கு பரவல் நிகழும். அதுபோல அறிவு கூடியவர் தான் குறைந்தவருக்கு குருவாக முடியம். அறிவுக்கடலான எம்பெருமானிடம் ஈசன் உபதேசம் பெற முன்னர் அந்த நூனப் பழத்தைக் கொடுத்திருந்தால் உபதேசம் பெறும் தகுதியை உருவாக்கியிருக்க முடியாது. எந்தநேரத்தில் எது

நடக்கும் என்பதை முற்றுமுழுதாக அறிந்த ஈசன் தான் தோற்றுவித்த முருகப்பெருமானை, அவரது சக்தியை, முன்கூட்டியே திட்டமிட்டதனால் சுவாமி மலை வரை சென்ற வேறோர் திருவிளையாடல் கதை உருவானது. அங்கே தன் திருவிளையா டலை ஈசன் முடித்து வைத்தார். முருகப் பெருமா னின் தோல்வி தோல்வியே அல்ல. அங்கே என் னையே மிஞ்சிய அறிவுள்ள உனக்கு எவ்வாறு நான் தருவது ஞானம் என்னும் அந்த ஞானப் பழத்தை என்பதை ஈசன் கூறாமல் கூறி நிற்பது நமக்கு விளங்கவில்லையா? சுவாமிமலையில் அறி வைப் பெறுபவர் தந்தை. நம் எல்லோரின் தந்தை. அதன் மூலம் நமக்கு ஒன்றை உணர்த்துகின்றார் அறிவைப் பெறுவதற்கு பக்குவம் வேண்டும் என்பதை.

அதேவேளை நமக்கும் இன்னொன்றை ஈசன் உணர்த்தி நிற்கின்றார். என்னதான் வரம் கேட்டபோதும் உள்ளதற்கு மேல் இன்னும் வேண் டுமென்று வரம் கேட்கவே கூடாது. அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமே நஞ்சாகும் போது அதிகம் ஆசைப்பட்டால் இறைவன் தர மறுப்பான். அதிகம் என்பதை உணர்ந்த சுவாமி மலை போல் இறைவன் வர வேண்டிய நியதி உருவாகும். எல்லாமே தந்து எம்மை நடிக்க வைத்து நடத்தும் அவனது நாடகத்தின் திருவிளையாடல் நம்மை பக்குவப் படுத்தவே. நாம் பழனி மலையைப் போல் எல்லாம் துறந்து ஏகாந்த நிலையை அடைந்தால், பற்றற்று இருந்தால் தாமரையிலை தண்ணீராக நாமிருந் தால் முருகப்பெருமானிடம் சென்ற இறைவன் நம்மிட மும் வருவார். அந்தப் பக்குவத்தை ஞானப்பழம் போல் நமக்கு தர மறுக்கும் போது நாம் கல்லுளிப் பட்ட கற்சிலையாகின்றோம். முருகப்பெருமான் போல் துறப்பதற்கு மனப்பக்குவம் நமக்கு இருந்தால் இறைவனை நாம் நம் அருகே காணலாம். அவர் அன்பின் வடிவம். நிச்சயம் வருவார். அருள் பாலிப்பார்.

# அட்ட வீரட்டத் தலங்கள்

| | | |
|---|---|---|
| திருவிற்குடி | - | ஜலத்தரவாதம் |
| திருவதிகை | - | முப்புரமெரித்தல் |
| திருப்பறியலூர் | - | தக்கன் யாகம் அழித்தல் |
| திருக்கண்டியூர் | - | பிரமன் சினம் கொய்தல் |
| திருக்குறுக்கை | - | மன்மதனை எரித்தல் |
| திருவழுவூர் | - | கஜசம்ஹாரம் |
| திருக்கடவூர் | - | எமனை வீழ்த்தியது |
| திருக்கோவிலூர் | - | அந்தகனை அழித்தது |

# ஆலயங்களில் அமைதி பேணுவோம்

- திரு இ.இரத்தினசிங்கம்

ஆணவம் அகன்று ஆன்மீக உணர்வு மேலோங்கி உள்ளத்தில் அமைதி உண்டாக நிலைக்களனாக விளங்குவது ஆலய வழிபாடாகும். இதனால் தான் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என எம் முன்னோர் கூறிப் போந்தனர்.

முன்னைய காலங்களில் ஆலயங்களில் ஆரவாரமின்றி மிக அமைதியாக அனைத்து விழாக்களும் நடைபெற்ற காரணத்தினாலே அக் கால வாழ்வு அமைதியாகவும், அர்த்தமுள்ள தாகவும் நோய், நொடி ஏதுமின்றி ஊர் ஒன்றுபட்டு ஆரோக்கியமாக மக்கள் வாழவழி ஏற்படலாயிற்று.

ஆலயங்களின் தற்கால செயற்பாடுகளை முன்னைய காலப் பாரம்பரியங்களுடன் ஒப்பிடு கையில் ஆலயங்களில் அமைதி பேணப்படுவதை எவரும் கவனத்திற்கொள்ளாது இருப்பது கவலைக் குரியதாகும். ஆலயங்களில் இடம்பெறும் அனைத்து விழாக்களையும் களியாட்டு நிகழ்வாகவே நடாத்தி வருவதனால் எவரும் மன அமைதியுடன் தியானங் களில் ஈடுபடமுடியாதுள்ளது. ஆலய வழிபாட் டினை பக்தி பூர்வமாக மேற்கொள்ளுவது கடின மாகவே உள்ளது.

ஒரு சில ஆலயங்களைத் தவிர ஏனைய அனைத்து ஆயலங்களும் பரிபாலன சபை களினாலேயே பராமரிக்கப்பட்டு வருகின்றன. பரிபாலன சபையினரிடையே ஒற்றுமையின்மை, உட்பூசல், கருத்து முரண்பாடுகள் போன்ற வற்றினால் பெரும்பாலான ஆலயங்கள் நீதிமன் றத்தை நாடியுள்ளன. இதனால் ஊர் இரண்டுபட்டு ஏட்டிக்குப்போட்டியாக திருவிழாக்கள் இடம்பெறு வதனால் உள்ளத்திலோ ஊரிலோ அமைதி நிலவு வது முயற்கொம்பாகவோ உள்ளது.

ஆலயங்களில் இடம்பெறும் விசேட தினங்கள் திருவிழாக்கள் ஆரம்பித்தால் ஊரார் ஒருவரும் அமைதியாக இருக்கமுடியாது. அதிகாலை 5.00 மணிக்கே பாட்டொலி வானைப் பிளக்கும். அருகில் உள்ள வீட்டிலுள்ளோர் ஒருவருடன் ஒருவர் கதைப்பது கூட கடினம். மாணவர்கள் படிப்பதும் கடினம். தெருவோரங் களில் அமைந்திருக்கும் ஆலயங்களின் பாட்டொலி யினால் வீதி விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் மிக அதிகம். இதனால் வயது முதிர்ந்தோர், நோயாளிகள் பெரும் சிரமங்களை தினம் தினம் எதிர்நோக்குகின்றார்கள். திருவிழாக்கள் எப்போது வருமென எதிர்பார்ப்பது, காத்திருப்பது, அந்தக் காலம். திருவிழா ஆரம்பமாகப் போகின்றது என்ற மனப்பயமும், நோயின் எதிர்பார்ப்பும், மன அமைதியின்மையும், நிகழ்வது இந்தக்காலம்.

இந்நிலைமைக்கு மகுடம் வைப்பது போன்று சிவாச்சாரியார்கள் மந்திர உச்சாட னங்களை ஒலிபெருக்கியில் உரக்கச் சொல்வ தாகும். சிவாச்சாரியார்கள் ஆலய வழிபாட்டில் மிக முக்கிய பங்கு வகிப்பவர்கள் ஆவர். நமது வேண்டுதல்களை மிக அமைதியாக ஆற்றுப் படுத்தும் நோக்கில் மந்திர உட்சாடனங்களை மிக அமைதியாகக் கருவறைகள் மற்றும் ஆலய வீதிகளில் கூறி அர்ச்சனை செய்யும்போது மக்க ளது மனமும், அலையாது இறைவனைத் தியானித்து வணங்கும். இதுவே ஆகம வழிபாடாகும். இந்நாட் களில் இவ்வாறான வழிபாட்டுமுறைகள் கைக் கொள்ளப்படுவது கிடையாது. இவ்வாறான நிலை யில் ஆலயங்களில் அமைதி பேணுவது எங்ஙனம்? முன்னைய காலங்களில் ஆலயங்களில் திருவிழாக்கள் இடம்பெறுவதையும் எந்தெந்த பூசை எப்போது நடைபெறுகின்றது என்பதை நாதஸ்வர ஓசை மூலமாகவே ஊரார் உணர்ந்து கோயிலுக்குச் சென்று வழிபட்டு வந்தது இப்போது வரலாறாகி விட்டது.

திருவிழாக் காலங்களில் ஒலிபெருக்கிச் செலவு மற்றெல்லாச் செலவுகளிலும் பார்க்கக் கூடுதலாகவே உள்ளது. இது அவசியம் தானா? வழிபடுவோரது உள்ளத்தில் அமைதி உண்டாக ஆலயத்தில் உள்ளும் புறமும் அமைதி பேணப் படுதல் அவசியமாகும்.

ஆகவே ஆகம விதிமுறைகளை முறை யாகவும், ஒழுங்காகவும், கடைப்பிடித்து திரு விழாக்களைச் செய்வதன் மூலம் ஆலயத்திலும் ஊரிலும் உள்ளத்திலும் அமைதியை ஏற்படுத்த முடியும் என்பதை அனைவரும் நன்குணர்ந்து ஆலயச்சூழலை அமைதியின் உறைவிடம் ஆக்குவோமாக.

# திருநெல்வேலி

–திரு பொ.சிவப்பிரகாசம்

**பண் : சாதாரி**

திருச்சிற்றம்பலம்

வெடிதரு தலையினர் வேனல் வெள் ஏற்றினர்
விரி சடையர்
பொடி அணிமார்பினர் புலிஅதன் ஆடையர்
பொங்கு அரவர்
வடிவு உடைமங்கை ஓர் பங்கினர் மாதரை
மையல் செய்வார்
செடி படு பொழில் அணி திருநெல்வேலி உறை
செல்வர் தாமே.

திருச்சிற்றம்பலம்

– சம்பந்தர் தேவாரம்

**புராண வரலாறு**

திருநெல்வேலி பாண்டிய நாட்டின் சைவத் திருப்பதி. அந்தணரான வேதசர் மாவை வேதப்பட்டர் என்றும் அழைப்பர். வேதப்பட்டர் ஓர் சிவபக்தன். தென்பாண்டி நாடு பெரும் நெற்கழனி. ஆயினும் முன்னொருகால் பஞ்சம் தலைதூக்கியது. இதனால் வேதப்பட்டர் இறைவனுக்கு திருவமுது படைக்கத் தாம் யாசித்து எடுத்து வந்த நெல்லை சிந்துபூத்துறைக்கு கொண்டு சென்று தீர்த்தக் கரையில் உலர வைத்துப் பரம்பொருளை மனதில் இருத்தி நீராடச் சென்றார். அப்போது கடும் காற்று வீசப், பெருமழை பெய்ய அந்த நெல்லை வெள்ளம் அள்ளிச் செல்லா வண்ணம் வேலியிட்டு பரம் பொருள் காப்பாற்றியமையால் இறைவனுக்கு நெல்வேலி நாதர் என்ற பெயர் வந்ததாக தல புராணத்தில் காணமுடிகிறது. இதனால் இத்தலம் திருநெல்வேலியாயிற்று. பண்டுதொட்டு இன்றுவரை இத்திருவூரைச் சுற்றி பெரும் நெல்வயல்கள் வேலியாக அரண் செய்கின்றன.

திருநெல்வேலியில் நடந்த ஞான அற்புதம், வேதங்கள் ஈசனுக்கு தாயாகப் பிறக்க வேண்டும் என்று தவம் இருந்தன. வேதங்கள் வேண்டியபடி வரம் பெற்று ஞானபூமி ஆகிய திருநெல்வேலியில் வேதங்கள் மூங்கில் காடாகத் தவமாக முகிழ்த்தன. அஞ்ஞானத்தை அறுக்க மெய்ஞ்ஞானம் கல்லாகக் குறுக்கிட்டது. திருநெல்வேலியில் மணவையை ஆண்ட அரசன் முழுதுகண்ட இராமன் எனும் வழுதியர்கோன். இந்த அரசனுக்கு பால் தருபவன். இடையன் இராமக்கோன். அரசனுக்குப் பால் கொண்டு வரும் வழியில் நாள் தவறாது கல் ஒன்று தடக்கி பாலைச் சிந்த வேண்டியதாயிற்று. ஒருநாள் தடக்கும் கல்லை நீக்க, இராமக்கோன் கோடரி கொண்டு வெட்ட இரத்தம் அந்தக் கல்லி லிருந்தும் பீறிட, இடையன் அஞ்சி அரசனுக்கு முறையிட, அரசனும் அஞ்சி ஓடோடிச் சென்று, இந்த மூங்கில் வனத்தில் தாமிரபருணி தீர்த்தத்தில் இடறிய கல்லைச் சுற்றியுள்ள நிலத்தை அகழ்ந்த போது, அயனும் அரியும் காணாத பரம்பொருள் சிவலிங்க வடிவில் மனித குலத்திற்கு இடர்வராமல் காக்க, இறைவன் சுயம்புலிங்கமாக வளர்ந்து நின் றார். பாண்டியனும் இடையனும் ஆடினர், பாடினர், நிலமுற வீழ்ந்து வணங்கினர். தேவதேவியரின் தரிசனம் கிடைத்தது. இவ்விடத்திலேயே பாண்டி யன் காடழித்து ஆலயம் அமைத்தான். இந்தப் பாண்டியனே, மூலமகாலிங்கர்க்கு பொற்கோவில் எடுப்பித் தான் எனத் தலபுராணங் கூறுகிறது. சுவாமிக்கு வேணுவனநாதர் எனும் திருநாமமும் வழங்கலாயிற்று. சிவத்தலத்தில் உயர் தலம் திரு நெல்வேலி என்பர். இத்தலத்தில் தர்மதேவதையே ரிஷபமாக நின்றுலாவும் பெருமை பெற்றது.

**அமைவிடம்**

திருநெல்வேலி தமிழ் நாட்டின் தென் பகுதியில் கிழக்குக் கரையோரமாக உள்ள மாவட்டம். திரு நெல்வெலியே, திருநெல்வேலி மாவட்டத்தின் தலை நகரம். தலைநகரம் தாமிரபருணி ஆற்றின் கடற்கரையில் உள்ளது. தாமிரபருணியை பொருநை என்றும் அழைப்பர். இந்த நதிக் கொடியாள் நடந்து வரும் பாதை எங்கும் சைவமும் தமிழும் தழைத்தன. இந்த மாவட்டத்தின் பரப்பளவு 4.337 சதுர மைல், வடக்கில் இராமநாதபுரம் மாவட்டம், கிழக்கில் வங்காள விரிகுடாக் கடல், தென்மேற்கில்

கன்னி யாகுமரி மாவட்டம், மேற்கில் மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதி இத்தன் எல்லைகள். இன்று திருநெல்வேலி மாவட்டம் கட்டப் பொம்மன், வ.உ. சிதம்பரனார் மாவட்டம் என இரண்டாகப் பிரிந் துள்ளது. 130 கிராமங்களைக் கொண்டது, திருநெல் வேலி மாவட்டம். சென்னையிலிருந்து விரைவுப் பேருந்துக்களும் புகைவண்டிகளும் உண்டு. புகைவண்டி நிலையம் பாரிய திருநெல்வேலிச் சந்திப்பாகும். மதுரையிலிருந்தும் பிறவூர்களிருந்தும் மதுரை வழியாகவும், திருநெல்வேலிக்கு அடிக்கடி பேருந்து வசதிகள் உள. புகைவண்டி நிலையத்தி லிருந்து 1/2 மைல் தொலைவில் திருக்கோ விலுள்ளது.

நெல்வேலித்தலம், பொன்திணிந்த புனல் பெருகும் பொருநை நதிக்கரையிலுள்ளது என்று புலவர் பெருமக்கள் பெருமைபடக் கூறுவர். திருநெல்வேலியில் மந்திகள் கொப்பு விட்டு கொப் புத்தாவும் போது மரக்கொப்புக்களில் உள்ள மலர் கள் குலுங்கிச் செந்தேன் துளிக்கும் என்பர். இவ்வளவு வளமான பூமியில் முல்லை, மல்லிகை, இருவாட்சி, செண்பகம், வெட்சி மலர்கள் பூத்துக் குலுங்கும்.

**பொதியமலை**

கொச்சகக் கலிப்பா

திங்கள் முடி சூடுமலை, தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை, தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு அருள்சுரந்து
பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை, பொதியமலை என்மலையே.

- குமரகுருபரர், மீனாட்சியம்மை குறம்

குமரிமுனைக்குத் தெற்கே, பல நூற்றா ண்டு கட்கு முன் நிலப்பரப்பு நிலவியது. அந்தப் பாரிய நிலப்பரப்பு கடற்கோளால் கொள்ளப்பட்டது. எஞ்சிய பகுதியே தென்தமிழ் பாண்டிநாடு அல்லது பொருநை நாடு என்று துணிந்து கூறலாம். குமர குருபரரும் இந்தத் தென்பாண்டிச் சீமையிலே தோன்றியவராவார். மேற்கு மலைத் தொடர்ச்சிப் பகுதிகள் 3000' - 5000' உயரப்பகுதியில் அடர்த்தி யான காடுகளால் மேவியவை. அகத்திய மலை யின் உச்சி 6,200' ஆகும். இங்கு உள்ள மகேந்திரகிரியிலிருந்து தான் அனுமான் இலங் கைக்குத் தாவியதாக கம்ப ராமாயணங் கூறும்.

இம்மாவட்டத்தில் பாயும் ஆறுகள் யாவும், மேற்கு மலைத்தொடரிற் தோன்றி கிழக்கு நோக்கிப் பாய்ந்து, வங்காள விரிகுடாக் கடலில் சங்கமிக் கின்றன. தாமிரபருணி ஆறு மிகப் பிரதானமான ஆறு. தாமிரபருணியைப் பொருநை என்றும் கூறுவர். இது அகத்திய மலையில் தோன்றுகின்றது. மலை ஓரத்தில் மழை அதிகம். மூலிகைகள், வனவிலங் குகள், பறவைகள் மாத்திரமல்ல, தேக்கு, மருது, கோங்கு மரங்களும் வானளாவி வளர்கின்றன. கிழக்கே செல்லச் செல்ல மழை குறைகின்றது. ஐந் திணை நிலங்களும் பொருநை நாட்டில் உண்டு.

(குறிஞ்சி, முல்லை. மருதம், நெய்தல், பாலை) நீர்ப்பாசனத் திட்டங்கள் சிறப்பாக அமைந் துள்ளன. கல்யாணி தீர்த்தம் எனும் நீர் வீழ்ச்சிக்கு மேலே குறுக்கே அணைகட்டி பாபநாசம் எனும் நீர்த்தேக்கம் அமைத்து உள்ளனர். இங்கே தான் நீர் மின்சாரம் உற்பத்தியாகி திருநெல்வேலி மாவட்ட த்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. மணிமுத்தாற்றுக் குக் குறுக்கேயும் பாரிய அணைகட்டி உள்ளனர். திருநெல்வேலி, தூத்துக்குடி, குற்றாலம், திருச்செந்தூர், பாபநாசம் முக்கிய ஊர்களாகும். ஆதிச்ச நல்லூர் வரலாற்றுச் சிறப்புமிக்க இடம். தூத்துக்குடி தமிழ்நாட்டின் பெயர் பெற்ற பாரிய இரண்டாவது துறைமுகம். இம்மாவட்டத்தில் திருநெல்வேலி, தென்காசி, பாபநாசம், திருக்குற் றாலம் ஆகியன சிவத்தலங்களாகும். திருச்செந்தூர் கழுகுமலை முருகத்தலங்கள் ஆகும். பாலர்பள்ளி, உயர்கல்விக் கல்லூரிகள் போன்ற கல்விச் சாலைகள் கணக்கிலடங்கா. திருநெல்வேலி சென் னையிலிருந்து 446 மைல்கள் ஆகும். திருநெல் வேலித் திருப்பதியை நெல்லை, வேணுவனம், நெல்வேலி, நெல்லூர், சாலிவேலி, சாலிவாடி, சாலிநகர், பிரம விருத்தபுரம், தாருகாவனம் எனத் தலபுராணங் கூறுகிறது.

**நெல்லையப்பர் திருக்கோவில்**

குன்றாத மூவுருவா, யருவாய் ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்துமாடி
நின்றாயே மாயையெனுந் திரையை நீக்கி
நின்னையா ரறிய வல்லார்.

- தாயுமான சுவாமிகள்

திக்கெலாம் புகழ் திருநெல்வேலிச் சீமையில், திருச்செந்தூர் எனும் கடலோரச் செவ்வேளின் திருத்தலமும், திருக்குற்றாலம் எனும் சிவத்தலமும் உண்டு. நாம் இறைவனிடத்தில் விரும்புவது, பொன்னும் பொருளும் போகமுமல்ல, மாறாக அன்பும், அருளும் அறவாழ்வுமே ஆகும். திரு நெல்வேலியின் நகர மத்தியில் மதுரையைப் போல், அருள்மிகு நெல்லையப்பர் திருத்தலம் நாலா பக்கமும் பாரிய இராஜகோபுரங்களுடன் அழகுற அமைந்துள்ளது. நெல்லையப்பர் கோவில் இராஜ கோபுரம் கி.பி 1606ல் கட்டப்பட்டது. பாடல் பெற்ற நெல்லை, கடந்த 1300 வருடங்களாக, நெல்லை மக்களாலும், பாண்டிய மன்னராலும் வளர்ச்சி உற்றது. சமயக்குரவர் காலத்திற்கு முன்னரே, தமிழ் நாட்டில் கோவில்கள் இருந்தன. திரு நெல்வேலி மருதளவளநாடு அழகிய நெல் வயல்கள் பச்சைப்பசேலென நகரைச்சுற்றி வேலி யாக அணிசெய்கிறது. திருநெல்வேலியைத் தென் பாண்டிநாடு என்றார் மணிவாசகர். திருநெல் வேலியைச் சார்ந்த கொற்கை, மிகப்பழைய காலந்தொட்டே பாண்டிய இளவரசர்களின் இருக்கையாகவும், துறைமுகம் ஆகவும் இருந்தது. திருநெல்வேலியிலுள்ள சிந்து பூந்துறை சம்பந்தப் பெருமானுக்கு இயற்கை விருந்து படைத்தது. திருநெல்வேலிக்கு சம்பந்தப் பெருமானுடைய திருப்பதிகம் உண்டு. நெல்லையப்பர் மேற்பால் ஞானசம்பந்தப் பெருமானுக்கு கோயில் உண்டு. நெல்லையப்பர் கோவில் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் போல் இரட்டைக் கோயிலாக இருப்பினும் வழக்காற்றில் நெல்லையப்பர் கோவில் என்றே அழைக்கப்படுகிறது. திருநெல்வேலியில் நாளிலும், பொழுதிலும், ஓதுவார் தமிழ்மறை ஓத. அந்தணர் வேதம் ஓத பெண்கள் பரதம் பயின்றாடி மகிழ, திங்கள் தோறும் திருவிழா நடைபெற்று தேரோடும் பெருமை பெற்றது திருநெல்வேலித் திருவீதிகள்.

காமிக ஆகம முறைப்படி 14 ஏக்கர் நிலப் பரப்பில், 7ம் நூற்றாண்டிலிருந்து இத்திருக்கோயில் அமைந்து, வானுற நிமிர்ந்து நிற்கிறது. நெல்லை யப்பர் கோவில் அகல நீளம் 756'x850' ஆகும். 32 தீர்த்தங்கள் நெல்லையப்பர் கோவிலிலுள்ளது. இவற்றுள் தாமிரபருணி ஆறு, சிந்துபூந்துறை, கருமாறி, பொற்றாமரைத் தீர்த்தங்கள் 'விசேட மானவை. கோயிலிலுள்ள பொற்றாமரைத் தீர்த்தம் நாலா பக்கமும் நல்ல படிகள், சுற்றுக்கால் மண்டபத்துடன், அதன் நடுவே நீராழி மண்டபத்துடன் அரன் கோவிலை அழகு செய்கிறது. இந்த பொற் றாமரைத் தீர்த்தத்தில் சிவபெருமான் நீர் வடிவின ராகத் தோன்ற, பிரமன் அதன் மீது பொன்மலராகத் தோன்றியதாக ஐதீகம். சுவாமி அம்பாள் சந்நிதிகள் அருக ருகே கிழக்கு நோக்கி உள்ளன. சுதையாலான பெரியநந்தி சுவாமி சந்நிதியை நோக்கியவாறு அலங்காரமாகவுள்ளது. சுவாமி சந்நிதிக்கு செல்லும் வழியில் இசைத்தூண்கள் இருக்கின்றன. துவார பாலகர்களைக் கடந்து சென்றால், மகாகணபதி முருகப் பெருமானைத் தரிசித்த பின் உட்புகுந்தால், சுவாமி சந்நிதி விசாலமானது. நெல்லையப்பர் சிவலிங்கத் திருமேனிமேல் வெட்டிய அடையாளம் தெரிகின்றது. இறைவனின் ஆக்கச் சக்தியைக் குறிக்கும் அடையாளமே இலிங்கமாகும். இந்த திருவடிவிற்கே சிவபூசை. தற்போது உள்ள ஆவுடையார் 21 ஆவது ஆவுடையாா என்றும் 20 ஆவுடையார்கள் பூமியின் கீழே உள்ளனர் என்பதும் ஐதீகம். இம் மூர்த்தியை "மிருத்யுஞ்சயமூர்த்தி" என்பர். இறைவனை நெல் லையப்பர், வேணுவனநாதர், வேய்முத்தர், நெல் வேலிநாதர், சாலிவாடீசர், வேணுவனேஸ்வரர், வேணுவன மகாலிங்கேஸ்வரர் என்பர். மூலவர் சுயம்புமூர்த்தி, இறைவன் மூங்கிலில் தோன்றின வராகையால் வேய்முத்தரானார். தலமரம் மூங்கில் (வேணு. வேய்)

தான்தோன்றியான நெல்லையப்பர் மூல மகாலிங்கர்க்கு பிற்பட்வராக இருத்தல் வேண்டும். கோவில் பூசைகள் முதலில் மூல மகாலிங்த்திற்குச் செய்த பின்பே நெல்லையப்பருக்கு நடைபெறு கிறது. மூலமகாலிங்கர் கோயில் தரை மட்டத்திற்கு கீழே அமைய வேணுவன நாதர் கோவில் உயரத்தில் அமைத்துள்ளனர். நாள்தோறும் நடைபெறும் உச்சிகாலப் பூசைக்கு மட்டும் காந்திமதி அம்மை ஆகிய இறைவியே நேரில் வந்து சுவாமியை வழிபட்டுச் செல்வதாக ஐதீகம், குறுமுனி ஆகிய அகத்தியற்கு இறைவன் அகத்தியர் வேண்டியபடி தனது திருமணக் காட்சியைக் காட்டி அருளியது தென்பாண்டி நாட்டிலேயே! இஸ்லாமியரான அன்ன வர்க்கான் தனது மனைவியின் நோய் நீங்க நெல் லையப்பரை வேண்ட அவரின் மனைவி நோய் நீங்கியதும் அன்னவர்க்கான் பயபக்தியோடு உபக ரித்த நகைகளும் கருவூலத்தில் உள்ளது. நெல் லையப்பர் கோவிலுக்குள் இருதுர்க்கை சந்நிதிகள் உண்டு. நெல்லையப்பர் கோவிலுக்குள் இரு துர்க்கை சந்நிதிகள் உண்டு. அறுபத்து மூவர் மூலத்திருமேனிகளை அடுத்து கயிலாயபர்வதக் காட்சியையுங் காணலாம். நடராசர் சந்நிதி தனியே உள்ளது. இப்பெருமான் அக்கினி சபாபதி எனப் படுவர். இவர் சிவகாமி உடன் நிற்க, காரைக் கால்அம்மையார் கையில் தாளமிட்டுப் பாட, சிரித்த முகத்துடன் ஆடும் அம்பலக் கூத்தன் அழகைக் காணாத கண் என்ன கண்ணோ?

இத்தலத்திற்கு தலபுராணமுள்ளது. தாரு காவன விசேடங்கள் இங்கே நடைபெற்றதென்பர்.

இலக்கணக்கொத்து ஆசிரியர் இத்தலத்தைச் சிவபுரம் என்றார். பாடல் பெற்ற நெல்லை, கடந்த 1300 வருடங்களாக நெல்லை மக்களாலும் பாண் டிய மன்னராலும் வளர்ச்சி அடைந்தது. திருநெல் வேலி மேலரத வீதியில் திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடம் ஈசான்னிய மடமாகத் திருத்தொண்டு பல செய்து வருகிறது. இந்த மடம் திருக்கோவில்களை நிர்வகிப்பது சைவசித்தாந்த வகுப்பு நடாத்தல், ஓதுவாரைப் பயிற்றல், சைவ நூல்களைப் பதிப்பித்தல், வெளியிடுதல் போன்ற நிர்வாக சேவைகளைச் சிறப்பாக செய்து வருகிறது. நெல்லையில் உள்ள தெருக்கள் தூய தமிழில் பெயரிடப்பட்டுள்ளன. உதாரணமாக சம்பந்தர் தெரு, காசுகடைத்தெரு, சூலக்கடைத்தெரு, கம்பராமா யணத் தெரு, எல்லாம் வல்லான் தெரு போன்றவை.

நெல்லையப்பர் கோவில் நந்தவனத்தில் இருந்து அன்றலர்ந்த மலர் பறித்தல், பூமாலை தொடுத்தல், மங்கள வாத்தியம் வாசித்தல், கோசாலைகள் பராமரித்தல், கோவில் தீர்த்தங்களில் செங்கழுநீர்ச் செடிகளை பராமரித்தல் அன்னதான மடங்களில் அன்னமிடுதல் போன்ற பெரும் சேவை கள் இடம் பெறுகின்றன. கோவிலில் பணிபுரிவோ ருக்கு நிலம், மனைகள் ஒதுக்கப்பட்டன. கோவில் நிலங்கட்கு அதன் எல்லைகளில் திரிசூலக் கற்கள் பதித்திருந்தன. காராண்மை மூலம் நெல், கரும்பு, கதலி, பால், தயிர், நெய் பெறப்பட்டன. திருநெல்வேலித் தேர் 450 தொன் எடை கொண்ட பாரிய தேராகும்.

## காந்திமதி அம்மன்

**பண் சாதாரி**

**திருச்சிற்றம்பலம்**

***பொறி கிளர் அரவமும் போழ்இள மதியமும் கங்கை என்னும்***
***நெறிபடு குழலியைச் சடைமிசைச் சுலவி வெண்ணீறு பூசி***
***கிறிபட நடந்து நல் கிளிமொழியவர் மனம் கவர்வர் போலும்***
***செறி பொழில் தழுவிய திருநெல்வேலி உறை செல்வர் தாமே***

**திருச்சிற்றம்பலம்**

**- சம்பந்தர் தேவாரம்**

திருநெல்வேலியின் இறைவியான காந்திமதி அம்மை, இறைவனான நெல்லையப்பரைத் தவமிருந்தே திருமணஞ் செய்தாள். நெல்லையப்பருக்கும் காந்திமதி அம்மைக்கும் இரட்டைக் கோயிலாக கிழக்கு நோக்கி இருப்பது பார்வைக்கு விருந்தாக அமைந்துள்ளது. இறைவி தலம் ஆகையால் தனிக்கோயிலாக நின்ற நிலையில் அருள் புரிந்து வருகிறாள். காந்திமதி அம்மையை வடிவுடை அம்மை என்றும் அழைப்பர். காந்திமதி அம்மன் திருமணப் பெண்போல முழு அலங்கார பூஷிதையாக அணிகள் பல அணியப்பெற்று சாந்தம் தழுவும் திருமுகத்துடன் உயர்ந்திருக்கும் வலக்கரத்தில் பசுங்கிளி காட்சிதர இடக்கரம் தாழ்த்தி தம்மை தொழுவார்பால் அருட்கருணைப் பார்வையுடன் காட்சி தருகிறாள். முக்கிய சக்திபீடங்கள் அறுபத்து நான்குள் திருநெல்வேலியும் ஒன்றாகும். இறைவன் கோவிலைப் போலவே இங்கும் முகப்பில் அம்பலம் அமைந்துள்ளது. கடந்த 1300 வருடங்களாக காந்திமதி அம்மன் கோவில் திருநெல்வேலியை அழகுக்கு அழகு செய்கிறது. மிகவும் அழகு வாய்ந்த இறைவியின் கீழைக்கோபுரம் கி.பி 1626ல் கட்டப்பட்டது. காந்திமதி அம்மனுக்கு கீழைக் கோபுரம் மட்டுமே உண்டு. காஞ்சியில் காமாட்சிக்கும் மதுரையில் மீனாட்சிக்கும் முக்கியத்துவம் உள்ளது போல் அன்னை காந்திமதி அம்மைக்கும் முதன்மை முக்கியத்துவம் உண்டு.

கீழைக் கோபுரத்தைக் கடந்ததும் ஊஞ்சல் மண்டபம் 96 தூண்களைக் கொண்டது. நந்தியைக் கடந்து கோயிலுட் சென்றால் கொடிமரம், அடுத்து மணி மண்டபம், இதன் வழியாக மகாமண்டபம் அர்த்தமண்டபத்தை அடுத்துக் கருவறையில் தேவியின் எழிலார்ந்த திருக்கோலத்தைத் தரிசிக்கலாம். ஊஞ்சல் மண்டபத்திற்கு வடக்கே ஆயிரங்கால் மண்டபமுள்ளது. இதன் அகலம் நீளம் 63x520 ஆகும். இங்குதான் இறைவிக்கு ஐப்பசி மாதத்தில் திருக்கல்யாணம் நடைபெறும். சிற்பக்கலை வல்லுனர் FERGUSSON என்பார் இப்பெருமன்றை தூண்களலான காடு என்றார். வியாழக்கிழமை தோறும் தேவிக்கு தங்கப்பாவாடை சாத்தப்படும். மகாமண்டபத்திற்கு வடபால் இறைவனும் இறைவியும் அர்த்தயாமப் பூசைக்கென எழுந்தருளும் பள்ளியறை உளது. இறைவன் கோயிலையும் இறைவி கோயிலையும் இணைப்பது சங்கிலி மண்டபம். இதன் அகலம் நீளம் 30x300 உள்ள பெருமன்று. இதனைக் கி.பி 1647ல் கட்டியவர் திருச்செந்தூர் புகழ் வடமலையப்பன் ஆவார். அம்மையின் மேற்பிரகாரத்தில் கருமாரித்தீர்த்தம் உளது. சித்திரை வைகாசியில் இளவேனிற் காலத்தில் இறைவன் இறைவிக்கு வசந்த விழா! மண்டபப் படிகள் இடம்பெறும். ஆடிப்பூரத் திருநாள் அம்பாளுக்கு 10 தினம் உற்சவம் சிறப்பாக நடைபெறும். இறைவன் இங்கிருப்பதும் இறைவி 32 அறங்களைப் புரிந்ததாலும் சிந்துபூந்துறை பொற்றாமரைத் தீர்த்தங்களில் நீராடினவர். இவ்வூரில் வாழ்வோர் வருவோர் அனைவரும் பெரும்பேறடைவர். நெல்லையப்பர் மீதும் அன்னை காந்திமதி மீதும் இது காலவரை 29க்கு மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளது. காந்திமதி அம்மை பிள்ளைத்தமிழ் நூல் இவற்றுள் சிறந்த சுவையான நூலாகும். மேலும் யாழ்ப்பாணம்

வட்டுக்கோட்டை திரு.ஆ. அம்பலவாணப்பிள்ளை என்பவரால் ஸ்ரீவேணுவனலிங்கோற்பவம் என்னும் சிவபக்தி நிரம்பிய நூல் உரை நடையில் செயற் பட்டுள்ளது.

ஞானமும் தவமும் ஒருங்கிணைந்து ஒரு தாயாகத் தோன்றின. மெய்ஞ்ஞானப் பெருவாழ்வு வாழும் வழியை ஏற்றார் அன்னை காந்திமதி. வேதமணம் நிகழ்ந்தது. கணவனை மனைவி உப சரிப்பது போல் இறைவனின் உச்சிக்காலப் பூசைக்கு முன், அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெறும். அடுத்து சங்கிலி மண்டபம் தாண்டி இருக்கும் ஈசனைத் தரிசிக்கப் போகிறாள் அன்னை. அதற்கு முன், அன்னைக்கு ஆராதனை நைவேத்தியம் நடைபெறாது. நைவேத்தியத் தட்டுடன் ஈசனை நோக்கி, சாதம் துவரம் பருப்பு பொரியல், நறுநெய் குழம்பு முதலிய நைவேத்தியப் பொருட்களுடன் சிவாச்சாரியார் அன்னையின் பாவாடையை தோளில் இட்டபடி, அன்னை உருவம் போல் சென்று ஈசனுக்கு அபிடேகம் ஆராதனை படையல் செய்து, தேவி சந்நிதிக்குத் திரும்பி, பரிவார தேவதைகட்கு, நைவேத்தியம் இட்டு, இதன் பின்பே தேவிக்கு ஆராதனை நைவேத்தியம் இடம் பெறும். அறம் எனும் செங்கோலேந்தி அருள் நாயகியாக வீற்றி யிருக்கிறாள் அன்னை காந்திமதி.

திருநெல்வேலியில் தாமிர சபையில் இறைவன் ஆடியது அன்னையின் புன்னகை ஒன்றிற்காகவே! ஆடல் வல்லானை ஆட்டுவித்தவள் அவளே! அவள் மனதை நிறைவிக்க ஆடுகிறான் இறைவன். பிரமாதி தேவர்கள் இசைவாத்தியங்கள் முழங்க, தேவதுந் துபி முழங்க தாம் தை ........... தாம் ஜதிகள் தெய்வீகமாக முழங்குகின்றன. அன்னை அனைவ ருக்கும் நடு நாயகமாக வீற்றிருக்க, அவள் முன் அவளுக்காக அரன் தன் திருப்பாதம் பெயர்த்து ஆட, சடை விரிந்தாட, காதில் குழை அசைந்து ஆட, மானாட, மழுவாட, மதியாட, புனலாட, மறையாட, அரையில் புலித்தோல் அசைந்தாட, வேத ஞானங்களும் விகசித்தாட, ஆனந்தமாய் இறைவன் ஆட, ஆட அந்தத் திருக்கோலங்கண்டு அன்னை திருமுகம் மலர்கிறது அம்பிகையே! இன்னும் யாது வேண்டும்? என இறைவன் வினவ? தேவாதி தேவ இத்திருத் தலத்தில் தினமும் உமது திருநடனம் நடைபெறவேண்டும் என்றாள்.

**பொல்லாப்பிள்ளையார்**

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை

– கபிலதேவநாயனார்

திருநெல்வேலியிலுள்ள பொல்லாப்பிள்ளையார் பொள்ளப்படாத (உளி படாத) தான்தோன்றிய (சுயும்பு) பொல்லாப்பிள்ளையார் எனக் கல்வெட்டி லுள்ளது. கருவறையும் அர்த்த மண்டபமும் கொண்ட சிறிய கோவில் இது. இப்பிள்ளையாருக்கு அட்டமி தோறும் ஆடி அருள நெய் வழங்கப் பசுக்கள், காலைச்சந்தி நிவேதனமாகக் கொழுக் கட்டை படைக்க நிலம் வழங்கப்பட்டுள்ளது. கல் வெட்டு இல. SIIIV 423 ARE 44 OF 1927 மூலம் இவற்றை அறிய முடிகிறது.

**ஆறுமுக நயினார் சந்நிதி**

ஆறுமுகநயினார் சந்நிதி, வெளிப்பிரகாரத்தில் தெற்குச் சுற்று வாயுதிசையில் அமைந்துள்ளது. கி.பி 1642ல் வடமலையப்ப பிள்ளையன் அவர் களால் இத்திருக்கோயில் அமைக்கப்பட்டது. குறித்த பிள்ளையே, திருச்செந்தூரில் பகைவரால் (வெள் ளையரால்) கவர்ந்து, கடத்தி கடலில் இடப்பட்ட முருகப்பெருமானை மீட்டவராவார். ஆறுமுகர் சந்நிதி நெல்லையப்பர் கோவிலில் விசேடமானது. வள்ளி தெய்வானையுடன் ஆறுமுகங்கள் சுற்றிலும் திகழ, ஒவ்வொரு முகத்திற்கும் நேரே இரண்டு திருக் கரங்கள் வீதம் சுற்றியும் திகழ அவற்றிற்குரிய ஆயுதங்களும் கொண்டு மயில் மீது அமர்ந்துள்ள பாங்கு அற்புதமானது.

மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே ஒரு முகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருளை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக்கும் ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவு கொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே
ஒருமுகம்

– திருமுருகாற்றுப்படை

வைகாசி விசாகத்தன்று சங்காஅபிடேகம் ஆறு முகநயினாருக்கு சிறப்புற நடைபெறும். கந்தசஷ்டி ஆறுநாளும் ஆறுமுகசுவாமி சந்நிதியில் பெருவிழா. 7ம் நாள் திருக்கல்யாணம் இடம்பெறும். பாம்பன் சுவாமிகள் பதிகம் சுவரில் பதிக்கப் பெற்றுள்ளது.

**நித்திய பூசைகள்**

நெல்லையப்பர் கோவிலில், ஆறுகாலப் பூசைகள் தவறாது நடைபெறுகின்றன. திருவனந்தல் காலை 6 மணிக்கு ஆரம்பம். பள்ளியறைக் கதவுக்கு

தூபதீபாராதனையின் பின் கதவு மெல்லத் திற படுகிறது. இறைவன் மதுரைச் சொக்க நாதராகவும் இறைவி மதுரை மீனாட்சியாகவும் பள்ளியறையில் அறிதுயில் கொண்டிருக்கும் ஊஞ்சலை சிவாச் சாரியர் மெல்ல மெல்ல அசைப்பர். தூபதீப நைய்வேத்தியத்தை அடுத்து ஓதுவார் மூர்த்திகள் திருப்பள்ளி எழுச்சி பாடியபின் திருப்பாத உருவிலி ருக்கும் மீனாட்சியை இறைவி காந்திமதியம்மை கருவறையில் சேர்ப்பித்து மூலவருடன் ஐக்கிய மானதும் இதன் பின் பாதுகை வடிவிலிருக்கும் இறைவன் சொக்கநாதரைப் பள்ளியறை நீக்கி பல்லக்கில் இருத்தி, இறைவன் கருவறையில் வைத்து அதிலிருந்து ஒரு மலரை எடுத்து மூலவ ரின் ஆவுடையாரில் சேர்ப்பர். காலைச் சந்திப் பூசைக்கு யானை, மேளவாத்தியம் போன்ற பரிவாரத்துடன் தாமிரபருணி ஆற்றினின்றும் திரு மஞ்சன நீர் கொண்டு வந்து இறைவனுக்கு அபிடேகம், பூசைகள் நடைபெறும். மீண்டும் உச்சிக்காலப் பூசைக்கும் இவ்வண்ணமே நடைபெறு கிறது. அர்த்தசாமப்பூசை, பள்ளியறைப் பூசை எனப்படும். இறைவியின் சந்நிதியின்றும் முத்தாளம் முளங்க, இறைவன் கோயிலிற்கு வந்து இறை வியின் கோயிலிற்கு வருமாறு அழைப்பு விடுத்தல், திருப்பாத வடிவிலிருக்கும் சொக்கரைச் சிவிகை யிலேற்றி, இறைவி சந்நிதிக்கு மேளதாளத்துடன் அழைத்து வந்து, பாத பூசைசெய்து பின் தங்க ஊஞ்சலில் சொக்கரை அமர்த்தி இதே போல் மீனாட்சியையும் அழைத்து வந்து பள்ளியறையில், இறைவனின் இடப்பாகத்தில் சேர்த்துப் பால், பழம், அப்பம், வடை, சர்க்கரைப்பொங்கல் நிவேதித்து பள்ளியறையைச் சாத்தி திருமுறை ஓதி, அடியார்க்கு வீபூதிப் பிரசாதம் வழங்குவர். இவ்வண்ணமே நெல் லையப்பருக்கு ஆறுகாலப் பூசை நிறைவு பெறும்.

## திருவிழாக்கள்

ஒருமுறை கண்ணபிரானிடம் முனிவர்களும், வேதவிற்பனர்களும் "தேவரீர் நாளை கலியுகம் பிறக்கின்றதே, கலியின் கொடுமைக்கு நாம் என்ன செய்வது?" என்று வினவ, அப்போது கண்ணபிரான் "நீவீர் வருந்தற்க. அபயம் என்று வந்த சந்திரனை முடியிற் சூடிய சிவபெருமான் பாதங்கள் உண்டு. அந்த பாதங்களை அர்ச்சிக்க மலருண்டு, திருவடிப் பூசைக்கு நீருண்டு, ஜெபிக்க ஐந்தெழுத்துண்டு, ஐந்தெழுத்தைச் சொல்லி பூசிக்கொள்ள திருநீ றுண்டு. இந்த ஐந்தும் உங்களுக்கு என்றும் துணை செய்யும் அஞ்சற்க!" என்றார் கண்ணபிரான்.

திங்களங் கண்ணிப் புத்தேள்
சேவடிக் கமல முண்டு
கொங்கவிழ் மலரு முண்டு
குளிர்தரு புனலுமுண்டு
தங்கும்அஞ் செழுத்து முண்டு
தவளவெண் ணீறு முண்டு
வெங்கலிக் குடைவ தென்னே
வெளிற்றறி வுடைய ரேபோல்.

- கூர்ம புராணம்

இத்தகைய பரம்பொருள் திருநெல்வேலியில் கோயில்கொண்டு உள்ளார். அத்தகைய நெல்லை யப்பர் கோவிலில் வருடம் முழுவதும் ஏதாவது உற்சவம் நடந்த வண்ணமே இருக்கும். சித்திரை - வைகாசியில் வசந்த விழா ஆரம்பமாகி 10 நாள் நடைபெறும். அம்மை அப்பருக்கு ஆனியில் பிரமோற்சவம். இது பெருவிழாவாக 10 நாட்களுக்கு நடை பெறும். மண்டலாபிஷேகத்துடன் நிறைவு பெறும். அடுத்து ஆடி மாதத்தில் அன்னை காந்திமதி அம்மைக்கு ஆடிப்பூரத் திருநாள் 10 நாளும், ஆவணி மூலத் திருநாள் 10 நாளும் புரட்டாதி நவராத்திரி பூசை 10 நாளும் நடைபெற்று ஐப்பசியில் திருக்கல்யாண விழா 12 நாள். அப் போது திருமண நாளில் மேடை தளவாய் வீட்டில் இருந்து பெறப்படும் திருமாங்கல்யம் கூறைச்சேலை கூறைவேட்டி பல்லக்கில் நெல்லை அப்பர் கோவி லுக்கு எடுத்து வரப்படும். கார்த்திகைத் திங்கள் சோம வார தரிசனம் காலை 4 மணிக்கு ஆரம்பம். திருவிளக்குகள் அனைத்தும் பிரகாசிக்கும். கார்த் திகைத் தீபத்திரு விழாவும் சிறப்பாக அமையும் ஆறுமுகநயினார் சந்நிதியில் கந்தசஷ்டி 6ம் நாள் 7ம் நாள் திருக்கல்யாணம். மார்கழித் திருவெம் பாவை திருவாதிரை, தாமிரசபை முன் கூத்தப் பெருமான் சந்நிதியில் இடம்பெறும். ஆருத்திரா அபிடேகம் தனிச்சிறப்பு அடுத்து தைப்பூசத் திரு விழா. 10நாள் மாசியில் மகாசிவாராத்திரி மாசி மகத்தில் அப்பர் தெப்பத் திருவிழாவுண்டு. பங்குனி உத்தரம் விழா 10நாள் செங்கோல் கொடுக்கும் வைபவம் இடம்பெறும்.

## செப்புத் திருமேனிகள்

திருநெல்வேலியிலுள்ள செப்புத் திருமேனிகள் கி.பி 16ம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இத்திருக் கோவிலில் கூத்தப்பெருமானது செப்புத் திருமேனி கள் மூன்று உள. இறைவனான நெல்லையப்பருக்கு இறைவியான காந்திமதி அம்மையை திருமால் தாரைவார்த்துத் தரும் பாத்திரத்துடன் இறைவன் மணந்து கொள்ளும் உற்சவத்திருமேனிகளைக் கண்டு கழிபேருவகை கொள்ள முடியும். தெற்குச் சுற்றில் 63வரது செப்பு படிமங்களைக் காணலாம். காந்திமதியம்மைக்கும் செப்பாலான உற்சவத் திரு மேனி கி.பி 16 - 17ம் நூற்றாண்டில் வார்க்கப்பட்டது.

### தாமிரசபை

திருச்சிற்றம்பலம்

பெருக லாந்தவம் பேதமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோர் ஆனந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

திருச்சிற்றம்பலம்

- அப்பர்

இறைவனுடைய திருவடிக்ளை வாயார வாழ்த்த வேண்டும். தலையார வணங்க வேண்டும். இதுதான் தவம். இத்தவத்தால் பேரானந்தமுண்டாகும். உத்தம மனைவி தங்கமான புத்திரர் நோயற்ற வாழ்வு, திடமான உடம்பு கிடைப்பதற்கு தவமே காரணம். பஞ்ச சபைகளுள் ஒன்றான தாமிரசபை திருநெல்வேலியில் மேற்குப் பிரகாரத்தில் வாயு திக்கில் அமைந்துள்ளது. இங்கே நடராஜப் பெருமானும் சிவகாமி அம்மையும் மிகப்பெரிய உருவினராக விளங்குகின்றனர். இச்சபை தனியே உள்ளது. இங்குள்ள நடராஜர் தாமிர சபாபதி எனப்படுவர். சபைக்கு மேலே செப்புத்தகட்டால் வேயப்பட்டுள்ளது. நடராஜர் சிலாரூபம் சந்தன சபாபதி எனப்படுவர் உள்ளே ருத்திர விஷ்ணு பேதங்கள் ரிஷி உருவங்கள் உள. கீழே மரத்தாலும் மேலே தாமிரத்தாலும் ஆக்கப்பட்ட ஏழு அடுக்குகளைக் கொண்ட இச்சபை சித்திர வேலைப்பாடுகளுடன் காணப்படுகிறது. சபைக்குப் பக்கத்தில் தல மரமான மூங்கில் உள்ளது.

### சோமவார மண்டபம்

நெல்லையப்பர் கோவில் சோமவார மண்டபம் நுழைவாயில் இருமருங்கிலும் தூண்கள் உள்ளது. இத்தூண்கள் கோபுர வடிவில் அமைக்கப்பட்டு சிற்பவேலைகளுடன் காண்போரைக் கவர்கிறது. கீழ்ப்பிரகாரத்தில் வடபால் 78 அழகிய திண்ணிய தூண்களுடன் அமைந்துள்ளது. இந்தத் தூண்களில் கல் உத்தரங்களும் வளைவுகளும் மரத்தாலான உத்தரங்களும் அமைந்துள்ளன. இம்மண்டபத்தில் புரட்டாதியில் நவராத்திரி கார்த்திகைச் சோமவார மண்டபப்படிகளும் இடம்பெறும்.

புராணக்கதைகளின்படி தடாதகைப் பிராட்டியார் பாண்டி நாட்டை ஆண்டு வரும் போது கயிலயங் கிரியையும் முற்றுகையிட்ட போது பூத கணங்களும் அம்மையாரிடம் அடிவணங்கின. இதனால் சிவபெருமான் போர்க்களம் எய்தினார். அங்கே சிங்கேறனைய தேவியையும் அவள் வீரத்தையும் கண்டார். அப்போது பரம்பொருள் தடாதகைப் பிராட்டியாரை உற்றுநோக்கிய வண்ணம் நிற்பதைக் கண்ட எம்பிராட்டி அச்சம் குடிகொள்ள நாணம் உற்று நிலைகுலைந்து தலைகுனிந்து தன் பாதங்களையே பார்த்த வண்ணம் நின்றாள். அக்கணமே சிவபெருமான் அம்மையாரை நோக்கி இன்றிலிருந்து 8வது நாளாகிய சோமவாரத்தில் உனது நகரான பாண்டி நாடு வந்து உன்னை திருமணம் செய்வோம் என்று திருவாய் மலர்ந்து அருளினார். அத்தகைய பெருமை வாய்ந்தது சோமவாரம்.

### பாண்டிய வரலாறு

மாணிக்கவாசக சுவாமிகள "தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே" என்றார். ஆகவே தென்பாண்டி நாடாகிய திருநெல்வேலிக்கு உரியவன் சிவபெருமான். இந்த தென்பாண்டியை பாண்டியர் வாழையடி வாழையாக கி.பி 17ம் நூற்றாண்டு வரை அரசோச்சியதால் சோழர் ஆட்சிக்காலத்தில் பாண்டியர் அடங்கியும் இருந்தனர். நெல்லையப்பர் கோவிலுக்குத் திருப்பணி செய்தவன், நின்ற சீர் நெடுமாறன் அரிகேசரி மாறவர்மனே! இக்கோயிலை மணிமண்டபம் வரை கட்டி முடித்தவன் இவனே என்கிறது தலபுராணம். ஆனால் இந்த திருப்பணிகளை இவன் செய்திருப்பானே ஆகில் சாசனங்களில் கட்டாயம் குறிக்கப்பட்டிருக்கும். மேலும் மணி மண்டபச் சிற்பங்களும் இசைத் தூண்களும் நாயக்கர் காலச் செல்வங்களாகும். எனவே நெல்லையப்பர் கோவிலும் அதனுள்ளே இருக்கும் சிறு கோவில்களும் படிப்படியாகப் பாண்டியப் பேரரசர் காலத்தில் வளர்ச்சியுற்று நாயக்கர் காலத்தில் நிறைவு பெற்றிருக்க வேண்டும். நின்ற சீர் நெடுமாறன் நெல்லையப்பர் ஆலயத் திருப்பணி செய்த போது தச்சர்களை அமர்த்திய இடம்தான் இன்றைய தச்சநல்லூராகும். அண்ணல் நெல்லை அப்பர் - அன்னை காந்திமதி அம்மை ஆலயத்தை இத்துணை கம்பீரமாக அமைத்தவர், சம்பந்தர், அப்பர் காலமான கி.பி 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த மதுரை மன்னன் நின்ற சீர் நெடுமாறன் (கூன்பாண்டியனே)! இவனுக்குப் பின் பாண்டிய நாயக்க மன்னர்களும் மேலும் விரிவும் எழிலும் சேரச் சிறப்பித்தனர்.

### திராவிடக் கலை

திராவிடக் கலையை தமிழகத் தினுடைய கலை என்பர். தமிழகத்தை ஆண்ட அரசர் பரம் பரையைக் கொண்டு பல்லவ மகேந்திரவர்மன் காலந் தொடங்கியதாகக் கொள்வர்.

1. பல்லவர் கலைக்காலம் கி.பி 600 - 850 வரை
2. சோழர் கலைக்காலம் கி.பி 850 - 1100 வரை (விமானங்களின் காலம்)
3. பாண்டியர் கலைக்காலம் கி.பி 1100 - 1350 வரை(கோபுரங்களின் காலம்)
4. விசய நகர கலைக்காலம் கி.பி 1350 - 1565 வரை
5. மதுரை நகர கலைக்காலம் கி.பி 1600-

ஆதியில் செங்கற் கோவில்களிலே அதிகமாக இருந்தன. கி.பி 9ம் நூற்றாண்டிலிருந்து கற்கோவில்கள் பாண்டி நாட்டில் எழுந்தன. இருந்தும் பல்லவர் கலைப்பாணியும் சோழர் கலைப்பாணியும் அறிஞர்களைக் கவர்ந்தது எனலாம். சோழர் கருவறையின் மேல் எழுப்பும் விமானத்திற்கே முக்கியத்துவம் அளித்தனர். தஞ்சைப் பெருவுடையார் கோவில் விமானம் இதற்குச் சான்று. ஆனால் பாண்டியர் துணைக் கோயில்களையும் கோபுரங்களையும் கட்டுவதிலேயே கவனஞ் செலுத்தினர்.

மதுரைக் கட்டடக்கலை, இது விசயநகரக் கலைக்காலத்தின் இறுதி நிலையே என்பர். மதுரைக்கலையை ஓரளவு பாண்டியர் கட்டடக் கலையின் மறுமலர்ச்சி எனலாம். மதுரை நாயக்கர்களே இந்தக் கலையை ஊக்குவித்தனர். இக்கலை 17ம்நூற்றாண்டில் உச்ச நிலையை அடைந்தது. நாயக்கர் தம்கலைச் செல்வங்களை மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், திருச்சி, மாவட்டங்களில் காணலாம். விசயநகரக் கலைப் பாணியில் முக்கிய செயற்பாடாக இருந்தது ஆயிரங் கால் மண்டபம். ஆளுயரத்திற்கும் அதிகமான சிலைகளைத் தூண்களில் (Portrait Sculptures) செதுக்குவது நாயக்கர் கால வழக்கம். இத்தகைய சிலைகளை மதுரை, திருவரங்கம், இராமேஸ்வரம், திருவானைக்கா, திருவாரூர், திருவண்ணாமலை, ஸ்ரீவில்லிபுத்தூரில் காணலாம்.

விசயநகர அரசர்களும், நாயக்க மன்னர்களும், இசைத்தூண்களை எழுப்பிய கலைச்சிற்பிகள். இசைத் தூண்களை மதுரை ஆழ்வார் திருநகரிக் கோவில், சுசீந்திரம், திருவனந்தபுர பத்மநாத சுவாமி கோயில், திருநெல்வேலியிலும் காணலாம். சாமகானத்தில் ஒரு சுலோகத்தையும் வேறு சில பாடல்களையும் இசைத்தூண்களில் எழும்பும் ஒலியை சுரத்தைக் கொண்டு அமைத்து, திருநெல்வேலி வானொலி நிலையத்தில் ஒலி பரப்பினர். ஒரு பெரிய கற்றூண், அதைச் சுற்றிவர 48 சிறிய தூண்கள், இத்தூண்கள் கூரையைத் தாங்குவதுமன்றி, பண்ணிசைக்கும் பாட்டுத் தூண்களாகவும் உள்ளன. இத்தூண்களின் உச்சியில் பதுமபந்தம், கலசம், தாடி, குடம், இதழ், முனை, பலகை, கண்டம், போதிகை, மேலே யாழிகள் கவின்பெற விளங்குகின்றன.

**சிற்பக்கலை**

நெல்லையப்பர் கோவில், சேரன் மாதேவி மணப் படைவீடு ஆகிய இடங்களில் தெய்வ உருவங்களையும் வரலாறு கூறும் உருவங்களையும் குறிப்பாக சுவாமி கோயிலின் தென் பிரகாரத்தில் நாயக்க மன்னர்களின் உருவச் சிலைகளை தூண்களில் அழகாக செதுக்கி வைத்து உள்ளனர்.

அவையாவன :

1. புடைப்புச் சிற்பங்கள் (Bas Reliefs)
2. தூண் சிற்பங்கள் (Portrait Sculptures)
3. மரச் சிற்பங்கள் (Wooden Sculptures)
4. செப்புச் சிற்பங்கள் (Bronzes)

நெல்லையப்பர் கோவிலின் மணிமண்டப நடுவில் ஒரு பெரும் கற்றூண் உள்ளது. அதனைச் சுற்றிலும் உருவிலும் உயரத்திலும் வேறுபட்ட 48 சிறு தூண்கள் உள. இவை ஒவ்வொன்றும் தனித் தனிக் (குரல்) சுரம் எழுப்பும் தன்மையின. அம்பாள் சந்நிதி முன்மண்டபத்திலுள்ள இரு தூண்கள் இசைத்தூண்களாகும். கோவிலின் முன் உள்ள வெள்ளை நந்தி கண்ணைக் கவரும் வனப்பை உடையது. கோயிலிலுள்ள ஊஞ்சல் மண்டபம், திருக்கல்யாண மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், வசந்த மண்டபம், அம்பாள் மண்டபம், அம்பாள் கோயிலையும் சுவாமி கோயிலையும் இணைக்கும் சங்கிலி மண்டபம், சோமாவார மண்டபம், நவக் கிரக மண்டபம், மகா மண்டபம் மிகுந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் தனித்தமிழ் நாகரிகத்தின் சின்னமாக அதை எடுத்து இயம்புகிறது. தெற்குப் பிரகாரத்திலிருந்து வலமாக வந்தால் ஆறுமுக நயினார் முன் மண்டபம், நடுமண்டபம், கருவறை முதலிய வற்றை அடையலாம். கொடிமரத்திற்குப் பின்னால் உள்ள நந்தி மண்டபத்திலுள்ள நான்கு தூண்களும் ஆச்சரியப்படக் கூடிய அலங்காரச் சிற்பங்களைக் கொண்டன. நெல்லையப்பர் கோவிலின் வடக்குக் கோபுரத்தின் சில அடுக்குகள் மரச் சிற்பங்களை உள்ளடக்கியவை. நெல்லை யப்பர் கருவறையின் மேற்புறம் லிங்கோற்பவர் மகர தோரணங்கட்கு இடையே காணலாம். லிங்கோ

த்பவரின் இரு மருங்கும் அரியும் அயனும் கூப்பிய கரங்களுடன் நிற்பது எழிலார்ந்த சிற்பமாகும்.

மணிமண்டபத்தின் வலப்பக்கமாக உள்ள புடைப்புச் சிற்பம் மிக மிக அழகு வாய்ந்தது. இவை பாண்டியர் காலச் சிற்பமாகும். கயிலையைப் பெயர்க்க முயன்ற இலங்கையர்கோனின் முகத்தில் எத்தனை வேதனை? சிவபெருமானோ அமைதி நிலவிய முகத்துடன் காணப்படுகிறார். உமைய வளோ அஞ்சி நடுங்கிய நிலை, ஆனால் சிவபரம் பொருளோ அன்னையை கரத்தால் அணைத்த நிலை, மறுபுறம் அயனும், அரியும் இராவணின் அருகருகே நின்று இறைவனை வணங்க, இறைவன் இருமருங்கிலும் ஆனைமுகனும், ஆறுமுகனும் நிற்க, அடுத்து இரண்டு பூதங்கள் இராவணன் நசியுண்ட வேதனை கண்டு நகைக்க வித்தியா தரர்கள் போற்ற, அமைந்துள்ள இந்தப் புடைப்புச் சிற்பம் கி.பி 8, 9ம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கருதமுடியும்.

கம்பனைப் போல் கல்கியைப் போல் காதல் இலக்கியம் உருவாக்கியது போல, சிற்பக்கலை யிலும் பண்டைய தமிழ்நாட்டுச் சிற்பிகள் கல்லு ளியால் காதலை வடிவமைத்தனர். சிற்றின்ப அடிப்ப டையில் பேரின்பத்தை அடைவது அடைய முடியும் என்பதை அடியார் பாடலிலும் அகப்பாட லிலும் பரக்கக் காணலாம். விசயநகர, நாயக்க அரசர் காலத்தில் மக்கள் மகிழ்வுற்றிருந்தனர். சிருங் கார மரச்சிற்பங்கள் (Wooden Sculptures) பலவ ற்றை இன்றும் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் இறைவன் இறைவி அம்பலத்திலும் வட கோபுர முதல் அடுக்கிலும் காணலாம்.

**கல்வெட்டுக்கள்**

கல்வெட்டுக்கள் செப்பேடுகள் மூலம் தமிழ் நாட்டுத் திருத்தல வரலாறுகளை ஓரளவு ஆய்வா ளர்களால் கண்டறிய முடிகிறது. திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் 10ம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் வட்ட எழுத்துக்களால் ஆனவை. கி.பி 10ம் நூற்றாண்டில் மாமன்னன் இராச ராசசோழன் காலத்தவனாக வாழ்ந்த தலை கொண்ட வீரபாண்டியன் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்களே இங்கு காணப்படும் பழைய கல்வெட்டுக்கள். சோழர் வீழ்ச்சிக்குப் பின் 14ம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டியர் விட்டுச் சென்ற கல்வெட்டுக்கள் ஏராளம். முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் கேரளன், சோழன், கொயசளர்களை வென்று கொண்ட திறையால், மூங்கிலிடைப் பிறந்த வேய் முக்தர் கோயில் உயர்ந்த மதிற்சுவரை எழுப்பிய தாகக் கூறும் கல்வெட்டு இல. SIV 426. இது இரண்டாம் திருச்சுற்றிலுள்ளது. இவனது 27ம் ஆட்சி ஆண்டுக் காலத்து கல்வெட்டு மூலம் நெல்லையப்பர் கோவிலுக்கு அட்டமி தோறும் ஆடி அருள பசுநெய் அளக்க ஒப்புக் கொண்டான் என்பது தெரிய வருகிறது.

மேலும் இத்தலம் கீழ் வேம்பு நாட்டு குலசேகர சதுர்வேதி மங்கலம் என்று வேண்ட வளர்ந்தகோன் கல்வெட்டு இல. IBID 408 இல் காணப்படுகிறது. இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் 11ஆம் ஆட்சி ஆண்டில் திருநெல்வேலியுடைய அழகிய திருச்சிற்றம்பலம் உடையார்க்கு நிவந்தமளித்த செய்திக் கல்வெட்டு இல. IBID 437, 439 இல் காணப்படுகின்றது. நெல்லையப்பர் கோவிலின் கல்வெட்டு இல. S.L.L VoI. V. 417, 423, 425, 427, 433 மூலம் இசைக்கலைஞர் மங்கள வாத் தியம், ஆடலழகியரும் இருந்ததாக அறிய முடிகி றது. பல்லவரும், சோழரும், பாண்டியரும், வேத விற்பனராகிய சிவாச்சாரியார்கட்கு நிலம் வழங்கினர். இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கீழ் வேம்ப நாட்டுத் திருநெல்வேலித் தேவதான குலசேகர சதுர்வேதி மங்கலம் என நிலம் வழங்கப்பட்ட கல்வெட்டு இல. S.I.I.V 449 மூலம் அறிய முடிகிறது.

சோழர் பொற்காலத்தில் சமயக்குரவரால் சைவ சமயம் மேலோங்கியது. கற்கோவில்கள் பெருகின. கி.பி 9ம் நூற்றாண்டில் கோவில்களில் திருப்பதிகங் கள் ஓதும் பணி ஆரம்பமாகின. திருப்பதிகங் கட்கு பண் வகுக்க முதலாம் இராசராசன் ஆரம் பித்த அளப்பரிய சிவப்பணியைக் கல்வெட்டு இல. S.I.I VoI II, III இல. 65. மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. கி.பி 10ம் நூற்றாண்டிலிருந்து சமயக் குரவர் திருமேனிகளைக் கோவில்களில் வைத்துப் பூசிக்க ஆரம்பித்தனர். தமிழகத்தில் 27 கோவில் களில் திருப்பதிகங்களை ஓத நிலங்கள் நிவந்தம் அளிக்கப்பட்டதை கல்வெட்டு இல. 148 உறுதி செய்கிறது.

**தொல்பொருள்**

திருநெல்வேலியில் தொல்பொருள் ஆய்வின் போது நமக்குக் கிடைத்துள்ள மனித குடியிருப்புச் சின்னங்களில் மிகப்பழையன பிற்பட்ட காலத்தைச் சார்ந்தவை. மணல் மேடுகளில் காணப்பட்ட படிகங் கள், சிறுகருவிகள், கூரிய கருவிகள், வெட்டுக்

கருவிகள் கிடைத்துள்ளன. ஆய்வின் போது இவை கி.மு 6,000 முதல் 1,000 ஆண்டுகள் வரை இந்தத் தேரித்தொழில் நடந்து வந்ததாக தெரிய வந்துள்ளது. மேலும் தாமிர பருணி ஆற்றின் தென் கரையிலுள்ள ஆதிச்ச நல்லூரில் கிடைத்த முது மக்கள் தாழிகள் சிறப்பானவை ஆகும். சில தாழிகளில் மனித எலும்புகள் காணப்பட்டன. தாழிகளில் வெண்கலம், தங்க நகைகள், நவரத்தின மணிகள், துணிகள், மரம், நெல் உமி பொதிந்த கலங்கள் மண்ணாலானவை, விளக்குகள், இரும்பாலானவை. இந்தத் தாழிகள் 10 - 15 அடி ஆழத்தில் பாறாங் கற்களால் மூடியிருந்தன. ஆதிச்ச நல்லூரில் வாழ்ந்த மக்களின் இரும்புப் பயன்பாடு பெருங்கல் நாகரிகத்துடன் தொடர்புடையது. ஆதிச்ச நல்லூர், நெல்லை மாவட்டத்தின் திருவை குண்டம் கடந்து திருச்செந்தூர்ப் பாதையில் தாமிரபருணியின் தென்கரையிலுள்ளது. கி.மு 1,000 முதல் கிறிஸ்துவ சகாப்த தொடக்க நூற்றாண்டு வரை, இந்தப் பெருங்கற்கால நாகரிகம் நீடித்தது.

**தொழில் வளம்**

பொதிகை மலையில் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இவர்களை மலைக்குறவர் என்பர். தொழிலால் சிறப்புறும் ஊர் பேட்டை எனப்படும். திருநெல்வேலியில் பெயர்பெற்ற பந்தமடைப் பாய்கள் பின்னப்படுகின்றன. காணியர் கூடை முடைவதில் வல்லுனர். பாலியர் எனப்படுபவர் மலைக்குகைளில் தேன் எடுப்பர். கடலில் முத்துக்குளிப்பு சிறப்பாக நடைபெறுகிறது. மீன்பிடி, சங்கு அறுத்தல், நல்ல வருவாயைத் தருகிறது. உப்பு விளைச்சல் கூட இடம்பெறுகிறது. கைத்தொழிலாக நூல்நூற்றல், நெசவு, கைத்தறி, பஞ்சு ஆலைகள், சர்க்கரை, ஆலைகள், சிமேந்துத் தொழிற்சாலை பருத்தி அரைக்கும் தொழிற்சாலைகளும் உண்டு. குடிசைக் கைத்தொழிலாக பனந்தும்பு, பனை வெல்லம், பனங்கற்கண்டு இடம் பெறுகிறது. மட்பாண்டம் வனைதல், பரக்க காணக் கூடியதாக உள்ளது. இரசாயனத் தொழிற்சாலை, உரவாக்கம், அணுமின் நிலையம் கூட நல்ல நவீன முறையில் அமைந்துள்ளது. நெல் வேளாண்மைதான் திருநெல்வேலி மாவட்டத்தின் முக்கிய தொழிலாகும். நெல்லோடு, கரும்பு, கம்பு, கேழ்வரகு, சோளம், சாமை, வரகு, குரக்கன், எள், வேர்க்கடலை, பருத்தி, வாழை, உழுந்து, பயறு, கொள்ளு, மிளகாய், கடலை, துவரை, வெற்றிலை, வள்ளிக்கிழங்கு, வெண்காயம், காய்கறி வகைகள் யாவும் விளைகிறது. பால் தரும் நல்லினப் பசுக்களுக்குக் குறைவில்லை. அம்பா சமுத்திரத்தில் அரிசி ஆராய்ச்சி நிலையமும், கோவில் பட்டியில் விவசாய ஆராய்ச்சி நிலையமும் இயங்குகிறது.

**ருத்திர கணிகையர்**

சிவாலயங்களில் தொண்டு செய்ய வந்த மகளிர் ருத்திர கணிகையர் எனப்பட்டனர். இவர்கள் பரதம் இசை போன்ற கலைகளில் தேர்ச்சியும், ஈடுபாடும், கொண்டிருந்தனர். வசதியான குடும்பங்களில் இருந்தும் வந்தனர். இவர்கள் தமது வாழ்வை இறைபணிக்கு அர்ப்பணித்தனர். இறைவனுக்கு அடிமையாகையால் தேவடியார் எனப்பட்டனர். அரசரால் போற்றி மதிக்கப்பட்டனர். பல்லவர் காலத்தில் கூத்திகள் எனப்பட்டனர். இராசராச சோழன் காலத்தில் தளிச்சேரிப் பெண்கள் எனப்பட்டனர். கோவிலில் பொட்டுக் கட்டிவிடப்பட்டனர். தஞ்சை பெரிய கோவிலில் 'பதியிலார்' என்ற 400 தளிச்சேரிப் பெண்கள் கோவில் பணிக்காக குடியமைத்துக் கொடுக்கப்பட்டனர். இவர்கள் யாரையும் மணவாததினால் 'பதியிலார்' எனப்பட்டனர். திருநெல்வேலியில் ருத்திர கணிகையர் கோவிலில் திருவலகிடுதல், மெழுகுதல் இறைவன் திருவமுதுக்கான அரிசியை தூய்மை செய்தல், திருப்பதிகம் பாடல் இறைவியை அலங்காரஞ் செய்து கவரி வீசுதல், பள்ளி எழுச்சி பாடுதல், இறைவன் திருமுன் ஆடுதல், பாடுதல், இவர்கள் திருப்பணியாகும். நாயக்கர் காலத்தில் மிகவும் பாதிக்கப்பட்டனர். 20ம் நூற்றாண்டில் இந்திய அர சால் தேவதாசி ஒழிப்புச் சட்டம் வரும் வரை எல்லாக் கோயில்களிலும் இந்த ருத்திர கணிகை யர் எனப்பட்டோர் இருந்தனர். பதியிலார், நெல்லையப்பர், திருவுலா வரும்போது முனைக்கு முனை நின்று அழகாகப் பாடி ஆடினர். இவர்கட்கு 30 கலம் நெல் ஆண்டொன்றுக்கு அளிக்கப்பட்டது. இராஜ ராஜசோழன் கூட தான் நிறுவிய தஞ்சைப் பெரிய கோவிலில் தனது அருமை மகள் குந்தவிக்கு பரதக் கலையைப் பயிற்றுவித்து தஞ்சைப் பெரிய கோவிலில் அரங்கேற்றம் செய்தான்.

**திருநெல்வேலித்தல புராணம்**

பெருத்தலங்கள் அனைத்திற்கும் தலபுராணம் உண்டு. திருநெல்வேலிக்குத் தலபுராணம் பாடியவர் திரு. நெல்லையப்பா பிள்ளை அவர்கள். தல புராணங்கள் பலவற்றுள்ளும் அடங்குபவை :

1. வரலாற்றுக் கதைகள் (Historical Legends)

2. இதிகாசம் (Legends)
3. புராணக் கதைகள் (Myths)
4. தலத்திற்கு உரிய கதைகள் (Folk Tales)
5. தலத்தில் நடந்தேறிய உண்மைக் கதைகள்
6. தலத்தோடு தொடர்பில்லாத பிற.

திருநெல்வேலித் திருத்தல புராண வரலாறு, அதன் அமைவிடம், வளமான பொதியமலை, நெல்லையப்பர் கோவிலின் அமைப்பு, நின்ற நிலையில் அருள்புரியும் காந்திமதி அம்மன், பொல்லாப் பிள்ளையார், ஆறுமுகப்பெருமான் சந்நிதி, நித்திய பூசைகள், மகோற்சவங்கள், செம்பொற்றிரு மேனிகள், பஞ்சசபைகளுள் ஒன்றான தாமிரசபை, சோம வார மண்டபம், பாண்டியர் வரலாறு, திராவிடக் கலை, சிற்பக்கலை, கல்வெட்டுக்கள், தொல்பொருள், தொழில்வளம், ருத்திர கணிகையர், தலபுராணம் சம்பந்தமாக ஓரளவு தொகுத்து விரித்துரைத்தோம்.

**உசாத்துணை நூல்கள்**


1. நடராசப் பெருமான் திருவாவடுதுறை ஆதீன வெளியீடு
2. கலைக்களஞ்சியம் - 06
3. சிவப்பதிகள் வரலாறு - கழக வெளியீடு
4. திருத்தலங்கள் வரலாறு - வித்துவான் சு.பாலசாரநாதன்
5. சிறப்புமிக்க சிவாலயங்கள் - புலவர் சி.முத்துப்பிள்ளை
6. நெல்லையப்பர் கோயில் - டாக்டர்.பு.மா.உமாமகேஸ்வரி
7. சக்தி ஆலயங்கள் - திருமருகல் சிங்கார வேலனார்
8. நெல்லைக்காந்திமதி அம்மை - பொன். பாஸ்கர மாத்தாண்டன்
9. தவம் - திருமுருக கிருபானந்தவாரியார்
10. கபிலர் - புலவர் கோவிந்தன்
11. மீனாட்சி அம்மை குறம் - குமர குருரர்
12. திருமுருகாற்றுப்படை - நக்கீரர்
13. சம்பந்தர் தேவாரம்
14. தாயுமான சுவாமிகள் பாடல்
15. கூர்ம புராணம்
16. அப்பர் தேவாரம்


# நான் யார்?

நீ உடம்பன்று: மனமன்று: புத்தியன்று: சித்தமன்று: நீ ஆத்மா.ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவசித்தாந்தம்.

இந்த உண்மை உன் உள்ளத்தில் நன்றாய்ப் பதியக்கடவது.

ஆனால்,

நீ கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. அதாவது தரும நெறியிற் பிசகாதே எவ்வுயிரும் பெருமான் முன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்.

- யோகர் சுவாமி

# பண்டைத் தமிழரிடையே நிலவிய நீர் வழிபாட்டு மரபுகள்

- திரு ஆர்.லெ.சந்திரசேகர்

இயற்கை வழிபாடு என்பது உலகு தழுவிய பரந்த வழிபாடாகும். வழிபடு தெய்வங்களை நோக்குகையில் சூரியன், சந்திரன், அக்கினி, மலை, காடு, மரம், பாம்பு முதலிய உயிரினங்கள் என இயற்கைத் தெய்வப்பட்டியல் நீண்டு கொண்டு செல்கின்றன. இவ்வழிபாட்டு மரபின் தோற்றுக்கைக்குக் காரணமாக இரண்டு விடயங்களை குறிப்பிடலாம். இயற்கையை மேலான சக்தியாகக் கருதி அது தம்மைச் சீற்றம் கொண்டு தண்டிக்காது இருக்கும் பொருட்டும் அதனிடம் இருந்து பாதுகாப்பு பெறுவதற்காகவும் அதனைத் திருப்தி செய்ய வேண்டும் எனப் பணிந்து போற்றினர். மேலும் அவ் இயற்கையானது தமக்கு நன்மை பயந்தபோது அதற்கு நன்றி செலுத்தும் வகையிலும் வழிபடத் தலைப்பட்டனர். இவற்றின் அடிப்படையில் தோன்றிய இயற்கை வழிபாடு ஒரு இனத்துக்கோ ஒரு தேசத்துக்கோ அன்றி அனைவருக்கும் பொதுவில் பரவலாகியது எனலாம்.

இவ்வான தொடர்பில் நீர் வழிபாடும் தோன்றியிருக்க வேண்டும். மக்களது நாகரிகம் நீர் நிலைகளைச் சார்ந்து தோன்றியதனாலும் அதன் அச்சுறுத்தலுக்கு அடிக்கடி மக்கள் ஆளாக வேண்டி யிருந்ததனாலும் அதன் வளம் வாழ்வியலுக்கு மூலாதாரம் என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்ததனால் நீர் நிலைகளை நயத்தாலும் பயத்தாலும் வழிபடத் தலைப்பட்டனர். இவற்றின் அடிப்படையில் அருவி, சுனை, ஆறு, கடல் என நீர் நிலைகளும் அவற்றிற்கு நீரினை வழங்கும் ஆதி மூலமாக அவர்களால் கருதப்பட்ட மழையும் வழிபடு தெய்வங்களாயின.

இவ்வாறு ஆரம்பத்தில் நீரானது வழிபடுதெய்வமாக அமையக் காலப்போக்கில் அவற்றினை தோற்றுவித்துத் தருபவையாக புதிய தெய்வங்கள் பெயர் சூட்டப்பட்டு வழிபடப்பட்டன. இவற்றினை வலுப்பெற வைப்பதற்கென நீருக்கும் இத்தெய்வங்களுக்கும் இடையில் புதிய கிளைக் கதைகள் தொன்மைப் புராணங்களுடன் இணைத்து உருவாக்கப்பட்டன. இவ்வாறான தொடர்பில் உருவாக்கப் பட்டவர்களே இந்திரன், வருணன் போன்றோராவர். இவ்வாறான கடவுளர்கள் நீரிடக் கடவுளர்களாக வழிபடப்பெற இவற்றுடன் மேலாண்மை பெற்ற தெய்வங்களை நீருடன் தொடர்புபடுத்தி நீருடைய தெய்வங்களாக வழிபாட்டு முறை இன்னோர் பரிணாம வளர்ச்சி அடைவதனையும் அவதானிக்க முடியும். உதாரணமாகப் பாற்கடலுடன் திருமாலும் மானச நதியுடன் பிரமாவும் கங்கையுடன் சிவனும் இணைக்கப்பட்டமையைச் சுட்டலாம்.

புனித நீரிட வழிபாடானது இந்தியாவில் மட்டுமன்றி இத்தாலி, எருசலேம் மெக்கா, மொகஞ்சதாரோ போன்ற பிரதேசங்களிலும் உலகு தழுவிய வழிபாடாக மேற்கொள்ளப்பட்டமையை பண்டைய இலக்கியங்கள், தொல்பொருட் சான்றுகள் போன்ற வற்றிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது. கிறிஸ்தவர்களின் புனித நூலாகக் கொள்ளப்படும் பைபிளின் புதிய ஏற்பாட்டில் புனித நீரிட வழிபாடு பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. எருசலேமில் ஐந்து மண்டபங்களுடன் கூடிய ஆட்டு வாசலில் உள்ள குளம் ஒன்றின் கரையில் அங்கவீனர்கள், நோயாளர்கள் படுத்திருப்பார்கள். தேவதூதனால் குளத்தின் நீர் கலக்கப்படும் போது அதில் முதலில் இறங்குபவன் எவ்வகைக் கொடிய நோயை உடையவனாக இருப்பினும் நோய் நீங்கப் பெற்று நலம் பெறுவான் எனும் குறிப்புக் காணப்படுகிறது. (புதிய ஏற்பாடு, யோவான் எழுதிய சுவிசேம், அதிகாரம் 05, வசனம் 1-9) மொகஞ்சதாரோ புதைவுகளில் காணப்படும் குளியற் குளங்களின் கிழக்கு பக்கம் சுவர்களில் வரிசையாக அறைகள் இருந்தமைக்கான அடையாளங்கள் உள்ளன. இவை நீர் உறை தெய்வங்களுக்கான கோயில்களாக இருந்திருக்கலாம்.

இவ்வாறு உலகு தழுவியதாக அமைத்த நீர் வழிபபாடு பண்டைய தமிழ் மக்கள் மத்தியில்

பெருஞ்செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்துள்ளமையைப் பண்டைய இலக்கியங்கள் பல எடுத்தியம்புகின்றன. நீர் பெறு மூலங்களை அடிப்படையாகக் கொண்டு இவ் வழிபாட்டினை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

1. மழை வழிபாடு
2. ஆற்று நீர் வழிபாடு
3. முந்நீர் (கடல்) வழிபாடு.

**1. மழைநீர் வழிபாடு**

நீர் இன்றி அமையாது உலகு எனின் அந்நீரும் மழை இன்றி அமையாது என்பது உறுதியாக்கப் பட்டது என்கிறார் நீரியல் அறிஞரான டாக்டர். வா.செ.குழந்தைசாமி.[01] ஏனெனில் மழை இல்லை யெனில் வறுமை நிலவும், மழை இன்றேல் உழவு இல்லை, உழவு இல்லையெனில் உணவு இல்லை, உணவு இல்லையெனில் உலகம் இல்லை. இத னால் மாதம் மும்மாரி பொழிந்தால் மாத்திரமே நாடு வளம் பெறமுடியும் எனத் தமிழ் மக்கள் நம்பினர். இதற்கென தொடக்க காலத்தில் மழை யைப் போற்றி வணங்கிய மக்கள் பின்னர் மழையுடன் தொடர்புபடுத்தி மழையைத் தருவோன் ஆக இந்திரனை வழிபடத் தலைப்பட்டனர். இவ்வாறு மழைக்குரிய தெய்வமாக இந்திரன் உருவகிக்கப் பட்டதற்கான காரணங்கள் சிந்திக்கத்தக்கன. இந் திரன் மருத நிலத்துக்குரிய தெய்வம். இதனை தொல்காப்பிய நூற்பா "வேந்தன் மேய புனல் உலகமும்"[02] எனச் சுட்டுகின்றது. மருத நிலம் வளம் மிக்க பிரதேசம் ஆகையால் மகிழ்வுக்குரிய இந்திரன் கடவுள் ஆக்கப்பட்டான் என அறிஞர்கள் கருதுகின்றனர். ஆயினும் இங்கு தொல்காப்பியர், இந்திரன் எனச் சுட்டாது வேந்தன் சுட்டியுள்ளமையும் சிந்திக்கத்தக்கது என "மன்னன் மேற்றே மலர் தலை உலகம்" எனும் கொள்கை வலுப்பெற்ற போது ஒரு பிரதேசத்தில் மும்மாரி மழை பொழிய வேண்டுமெனில் அதற்கு மன்னனே காரணம் எனும் கருதுகோள் பண்டைய தமிழகத்தில் நிலவியுள்ளது. இது "செந்தீ முத..வர்........... வித்து."[03] என திரிகடுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அரச னாகிய வேந்தனை மகிழ்விக்கும் வழிபாடாகத் தொடங்கி பின்னர் ஆரியச் செல்வாக்கால் தேவர்க ளுக்கு அரசனான இந்திரனை மகிழ்விக்கும் வழிபாடாக மாறி இருத்தல் கூடும். இப் பொதுமையை கருத்தில் கொண்டே தொல்காப்பியரும் 'வேந்தன்' எனச் சுட்டியிருக்கலாம். இவ்வாறு மழையை வழிபடும் மரபை புறநானூற்று பாடலில் காண முடிகின்றது.

மலை வான் கொள்க என உயிர்ப்பலி தூஉய்
மாரியான்று மழை மேக்கு உயர்க என,
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல் கண் மாறிய உவகையர் [04]

இப்பாடலில் மழையானது மலையில் இறங்கு வதாக என குறவர் குடிமக்கள் மழைக் கடவுளை போற்றி உயிர்ப்பலி இட்டு வழிபடுவதும் தேவை யான மழை பெய்த பிறகு அதனை மலைக்கு மேலே செல்வதாக வேண்டிக் கொள்வதும் சித்திரிக் கப்பட்டது. சிலப்பதிகார மங்கள வாழ்த்துப் பாடல் களிலும் "மாமழை போற்றுதும் மாமழை போற்று தும்"[05] எனப் பெரிய மழையைப் போற்றி வழிபடு வதை இளங்கோவடிகள் வாழ்த்தாக அமைத்துள் ளார். திருக்குறளிலும் கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து "வான் சிறப்பு" எனும் அதிகாரம் வைக்கப்பட்டுள்ளமையும் மழை வழிபாட்டின் முதன்மை கருதியேயாகும். மேற்போந்த புறநா நூற்றுப்பாடல், சிலப்பதிகாரப் பாடலடிகளை நோக்கு கையில் இவ் வழிபாட்டு முறைகள் அனைத்தும் கூட்டாக நடைபெற்ற கூட்டு வழிபாட்டு முயற்சி யாகவே காணப்படுகின்றது. அனைவரும் ஒன்று கூடி சமூக நல்லிணக்கத்துடன் மழைத் தெய்வத்தை வேண்டும் உளமார்ந்த பக்தி நிலையை அவை உணர்த்தி நிற்கின்றன.

**2. ஆற்றுநீர் வழிபாடு**

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பது ஔவையின் வாக்கு. ஆற்று நீர் வழிபாடானது பண்டு தொட்டுத் தமிழர்கள் மத்தியில் புனித வழிபாடாக நிலவிவருகின்றது. இன்றைய சூழலில் நீர் பெறு மூலங்களாக கடல், மழை போன்றவற் றினை வழிபடுவது அருகிப்போக ஆற்று வழிபாட்டு மரபு நிலைபெற்று விளங்குகின்றமை இவ் வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. காவிரி, வைகை, கல்யாணி, கங்கை. யமுனை போன்ற நதிகள் இன்றும் புனித நதிகளாகப் போற் றப்படுகின்றன. இவற்றில் மூழ்கி எழுந்தால் பாவங் கள் தொலையும் எனும் நம்பிக்கையும் மக்கள் மத்தியில் வேரூன்றியுள்ளது.

அருவி வீழும் மலைக்குகையில் 'வரையாமகள்' எனும் தெய்வம் உறைகின்றாள் என்னும் குறிப்பு அகநானூற்றில் காணப்படுகின்றது. மேலும் அவ் விலக்கியத்திலேயே கொல்லி மலையின் விளங்கும்

அருவி நீரின் கரையில் அழகுத்தெய்வமான கொல்லிப்பாவையின் உருவம் எழுதப்பெற்றிருந்தது என்னும் குறிப்பும் காணப்படுகின்றது.[06]

"கழா அல் பெருந்துறை விழவின் ஆளும்"[07]

"...கழா அர் முன்றுறைக்
கனி கொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த இன்னிசை"[08]

எனும் அடிகள் பெருந்துறை விழாவாகக் காவிரியில் நடைபெற்ற நீராட்டு விழாவினைக் குறிப்பிடுகின்றன. பரிபாடலில் பலபாடல்கள் வையை நதியைப் பெருந் தெய்வமாகக் கொண்டு பாடப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். தைநீராடல் வையை ஆற்றில் நிகழ்ந்தமை பற்றிய குறிப்புகளையும் காண முடிகிறது. இந்த நதியானது இளங்கோவடிகளால் 'பொய்யாய் குலக்கொடி' எனவும் 'வளநாடு மகவாய் வளர்க்கும் தாய்' எனவும் புகழப்பட்டுள்ளமையை சிலப்பதிகாரத்தில் காணலாம். மேலும் 'நடந்தாய் வாழி காவேரி' எனவும்.

'தண்ணறுங் காவிரி தாதுமலி
பெருந்துறைப் புண்ணிய நன்னீர்"[09]

எனவும் காவேரி நதியைப் புண்ணிய நீராகக் காட்டுகின்றார். இங்கு ஆறுகள் அனைத்தும் பெண் தெய்வங்களாகச் சுட்டப்பட்டுள்ளமையும், குறிப்பாகத் தாய்த் தெய்வமாக இனங்காட்ட முற்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. தம்மை வாழ்விக்கும் தன்மை ஆற்றுக்கு உண்டு என நம்பியதில் ஆற்றினைத் தாய்த் தெய்வமாக வழிபட்டிருக்ககூடும். இதன் பின்னணியிலேயே கம்பனும் "சரயு என்பதும் தாய் முதலை அன்னது" எனச் சரயு நதியைப் பாடுகின்றான். இவ்வாறு ஆறுகள் பற்றிய இலக்கிய குறிப்புக்களை நோக்குகையில் அவை மக்களிடத்தே பெற்றிருந்த பெருமதிப்பை நன்குணரக் கூடியனவாய் அமைந்துள்ளன.

### 3. முந்நீர் (கடல்நீர்) வழிபாடு

'முந்நீர்' எனும் சொல் சங்க இலக்கியங்களில் ஏறத்தாழ 24 இடங்களிலும் சங்கமருவிய கால இலக்கியங்களில் 07 இடங்களிலும் பயின்று வந்து கடலைக் குறிப்பனவாக அமைந்துள்ளன. 'முந்நீர்' என்பதற்கு ஆற்று நீர், ஊற்றுநீர், மழைநீர் என மூன்று தன்மையான நீரும் கலக்கும் கடல் எனப் பொருள் கொள்வர். ஆயினும் ஆக்கல், அழித்தல், அளித்தல் எனும் முத்தன்மையும் கடலுக்கு உண்டு எனும் சிறப்புக் கருதி இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனப் பேராசிரியர் வே.அண்ணாமலை குறிப்பிடுகின்றார்.[10] எனவே கடலின் இப்பண்பு நிலை கருதியே கடற்தெய்வமாக வழிபடப்பட்டிருக்கலாம்.

கடற்தெய்வத்தை 'கடல் கெழு செல்வி' என அகநானூ[று] போற்றுகின்றது.[11] மேலும் அவ்விலக்கியத்தில் பாண்டிய நாட்டுப் பழையர் மகளிர் கொற்கைத் துறையில் கடல் வழிபாடு இயற்றிய செய்தியும் காணப்படுகின்றது. இவ்வழிபாடு பகலோன் மறைந்த அந்தி வேளையில் நிறைமதிப் பொழுதில் நிகழ்ந்துள்ளது. "சங்க காலத்தில் கோயில் வழிபாடு வளர்ச்சியடைந்த நிலையில் ஏழு நாட்கள் திருவிழாவும் எட்டாம் நாள் தீர்த் தமாடுதலும் வழக்கமாக இருந்ததை மதுரைக் காஞ்சியில் காணலாம் எனவும் தீர்த்தமாடும் நேரம் மாலை நேரம் எனவும் பொருள் கொள்ளலாம்" என கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் குறிப்பிடுகின்றார். இவ்விழாவானது தீம் நீர்விழவு புதுப்புனல் விழவு எனவும் அழைக்கப்பட்டது. பௌத்தர்கள் கடற்காவற் தெய்வமாக சம்பாதியையும் கடலுக்குரிய தெய்வமாக மணிமேகலையையும் கொண்டிருந்தார்கள் எனும் செய்தியை மணிமேகலையில் காணமுடிகிறது.

சங்க காலத்தில் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி 'முந்நீர்விழிவு' எடுத்தாக முந்நீர் விழாவின் நெடியோன் எனும் குறிப்பு புறநானூற்றில் வருகிறது.[12] சங்க காலத் தொடக்கத்தில் கடலினைத் தெய்வமாகக் கொண்டு வழிபாடு செய்த விழா கடற் தெய்வமாகிய வருணனைப் போற்றி செய்வதாக மாற்றமடைந்து சங்க காலப்பகுதியிலிருந்து இந்திரனைப் போற்றும் இந்திரவிழாவாக மாறியமைகின்றமையையும் அவதானிக்கலாம். வழிபாட்டு மரபில் வருணன் பின்தள்ளப்பட இந்திரன் மேலாதிக்கம் செலுத்தத் தொடங்கியதனாலும் இந்திரனுக்குரிய மழைநீருடன் கடல் நீர்த் தொடர்புசார் அறிவியற் சிந்தனை வலுப்பெற்றதனாலும் மழைநீரின் இன்றியமையாமைக் கருதியும் இவ்வழிபடு தெய்வ மாற்றம் நிகழ்ந்திருக்கலாம்.

இவ்வாறு மழை, ஆறு, கடல்சார் நீரை வணங்கியதால் மக்கள் பெற்ற வழிபாட்டுப் பயன்களும் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. தைத்திங்களில் நீராடியதன் பயனாக விரும்பிய கணவனை

அடைய முடியும் எனவும் பாவங்கள் விலகும் எனவும் நம்பப்பட்டது. இவ்வழிபாட்டில் ஈடுபட்ட கன்னியர்கள் கணவர்களை வேண்ட தாய்மார்கள் நீங்காத தம் கணவன்மாருடன் உடனுறவை வேண்டினர் எனும் குறிப்புகளையும் பரிபாடலில் காணமுடிகிறது. இதற்கென முத்துக்கள், சங்குகளை மகளிர் சொரிந்து வழிபட்டனர். இன்றும் இவ்விழாவின் தொடர்ச்சியை 'ஆடிப்பெருக்கு' எனும் பண்டிகையில் காணலாம். அன்றைய தினம் ஆலயங்களில் புனித நீராடுதலையும் காணலாம். புகழ் பெற்ற ஆலயங்களை நோக்குகையில் அவை நீர்த்துறையை அண்டியனவாக அமைந்திருக்கின்றமையும் ஆலய வீதியில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பதில் தீர்த்தம் குறிப்பிட்டுள்ளமையும் புலப்படுத்துகின்றன.

## அடிக்குறிப்புக்கள்

01) குழந்தைசாமி வா.சே. (1980) வாழும் வள்ளுவம், பாரதிபதிப்பகம், சென்னை, ப. 44

02)தொல்காப்பியம், பொருளதிக்காரம், நச்சினார்க் கினியார் (1948) கணேசையர் பதிப்பு, திருமகள் அச்சகம், சுன்னாகம், சூத்திரம் -06

03) திரிகடுகம், பதினெண்கீழ்கணக்கு, (1959) எஸ்.ராஜம் வெளியீடு, பாடல். 98

04) புறநானூறு(1923) கமர்சியல் அச்சுக்கூடம், சென்னை, பாடல் 143 : 01 - 04

05) சிலப்பதிகாரம், மங்கள வாழ்த்துப்பாடல், (1958) செல்வி பதிப்பகம், காரைக்குடி, பாடலடி 07

06) அகநானூறு, (1943) சைவசித்தாந்த நூற்பதிப் புக்கழகம், திருநெல்வேலி, பாடல் 62: 14-15

07) மேலது - 06 பாடல் 222 : 05

08) மேலது - 06 பாடல் 376 : 04 - 06

09) மேலது - 05 பாடலடிகள் 582 - 583

10) அண்ணாமலை, வே, (2000) சங்க இலக்கியத் தொன்மக்களஞ்சியம் 02, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம் ப - 76

11) மேலது - 06 பாடல் 370 : 12

12) மேலது - 04 பாடல் - 09

13) பரிபாடல், பாடல் 11 : 116 - 121

# பதினெண் மேற்கணக்கு இலக்கியங்களில் முருக வழிபாடு

- திரு ச.முகுந்தன்

சமயம் எவ்வாறு தோன்றியது என்பதற்குப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு தளங்களில் நின்று பலவிதமான கோட்பாடுகளையும் எண்ணக்கருக் களையும் முன் வைத்துள்ளனர். சமூகவியலாளரும், உளவியலாளரும், மானிடவியலாளரும் இனக் குழு நிலையில் வாழ்ந்த மனிதர்களை ஒழுங்கமை விக்கும் நிறுவனமாகவே சமயத்தை நோக்குவர். அந்த வகையில் சமயத்தின் தோற்றம் பற்றி இயற்கை வழிபாட்டுக் கொள்கை (Animism), ஆவி வழிபாட்டுக் கொள்கை (Spiritism), போலிப்பொருள் வழிபாட்டுக் கொள்கை (Fetishim), மூதாதையர் வழிபாட்டுக் கொள்கை (Ancestor- Worship) குலக் குறியம் குலமரபுச் சின்ன வழிபாட்டு முறை (Totemi sm) எனப் பல்வேறு கருதுகோள்கள் முன் வைக் கப்படுகின்றன.

இயற்கை நெறிக் காலமான சங்க காலத்துப் பழந்தமிழர் சமூகத்தில் நிலவிய சமய நெறியானது இயற்கை வழிபாடு, மூதாதையர் வழிபாடு, குலமரபுச் சின்ன வணக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒன்றாகவே விளங்கியது எனலாம். அவற்றுள்ளும் இயற்கை சார்ந்த வழிபாடே முதன்மை பெற்றிருந் தது எனலாம். "ஓங்குயர் வெற்பும் ஓதப் பெருங் கடலும் நிழல்மலி காடும் நீர்கொளுந் துறையும், மரமும் என்றின்ன இயற்கை வடிவின" எல்லாம் தெய்வங்கள் உறையுமிடங்களாகச் சங்க கால மக்கள் கருதினர். வீரம், கோபம், பெருமிதம், காதல், தாய்மை என இயல்பாகவே மனிதர்களிடம் தோன்று கின்ற உணர்வுப் பிரதிபலிப்புக்களைத் தெய்வங்க ளுடனும் தொடர்புபடுத்தினர். தமக்குரிய நிலச் சூழலுக்குப் பொருத்தமான கருப்பொருள்களாகக் கொண்ட தெய்வமே அவ்வந் நிலத்தவரின் வாழ்விய லோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தது.

அந்த வகையிலே தொல்காப்பியர் சுட்டியதைப் போல மாயோனும் சேயோனும், வேந்தனும், (இந்திரன்) வருணனும் சங்க காலத்தில் நானில மக்களும் தத்தம் நில அளவில் வழிபட்ட தெய்வங் களாகும். இத் தெய்வங்களிற்கும் மக்களுக்கும் நெருங்கிய உணர்ச்சித் தொடர்புகள் உண்டு. என் காதற்குத் துணையாக, என் கணவனைக் காக்க, என் மகள் நோய் தணிக்க, மழை பொழிய, பகை அழிக்க, விருந்து தருக என்றெல்லாம் வேண்டுதற் குரியவையாக வீரம் பண்பிற்கும், காதல் வாழ்விற் கும் துணையாகக் கருதப்பட்டன. சிவ வழிபாடு சங்க காலத்தில் நிலவியதா என்பது பற்றிய சர்ச் சைகள் நிலவி வருகின்ற போதும் பதினெண் மேற் கணக்கு இலக்கியங்களில் இடம்பெறும் பல அடைமொழிகள் சிவனைக் குறிப்பதாகவே அமை வது குறிப்பிடத்தக்கது.

ஆயினும் வீரயுகமான சங்க காலத்தில் முருக வழிபாடும், கொற்றவை வழிபாடும், நடுகல் வணக்க முறைமையும் வீரப் பண்புடன் தொடர்புபட்டதாகத் திகழ்ந்ததில் ஐயமில்லை.

அந்த வகையில் சங்க காலப் பதினெண் மேற் கணக்கு நூல்களான எட்டுத் தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்களூடாக சங்க காலத்தில் நிலவிய முருக வழிபாடு பற்றி ஆராய்வதே இக் கட்டுரை யின் நோக்கமாகும். திருமுருகாற்றுப்படை, முல் லைப் பாட்டு, பொருநராற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்துப்பாட்டு இலக் கியங்களிலும் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டுத் தொகை நூல்களிலும் முருகக் கடவுள் பற்றியும், முருக வழிபாடு பற்றியும் இடம் பெற்றுள்ள குறிப்புக்களைத் தொகுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

முருக வழிபாடு பற்றிக் குறிப்பிடும் முதன்மை யான சங்க இலக்கியமாகத் திருமுருகாற்றுப்படை திகழ்கிறது. அரசரைப் பாடும் வழக்கமே நிலவிய அக்கால சமூக அமைப்பில் புறப்பாடலொன்று அதுவும் நெடும் பாடல் தெய்வத்தைப் பற்றியதாக அமைந்தது புதுமையே எனலாம். ஆற்றுப்படை என்ற இலக்கிய வடிவத்தின் புதிய பரிணாமமாக விளங்கும் திருமுருகாற்றுப் படையானது நக்கீரரின் முருக பக்தியின் வெளிப்பாடு எனலாம்.

மண்டமர்க் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேள்
(திருமுரு-ஆ-படை 272- 273)

என வீரமும் கொடையுமுடைய ஓர் அரசனைப் பாடுதல் போன்று பாடாண்திணைப் பண்பு பொருந்தப் பாடிய நக்கீரர் முருகனின் பிறப்பு, திரு உருவப் பொலிவு ஆகியவற்றைப் பௌராணிக மரபை அடி யொற்றி எடுத்தியம்புகின்றார். எடுத்துக்காட்டாக,

நெடும் பெருஞ்சிமயத்து நிலப்பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை யேற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல் கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலை மகள் மகனே
(திரு.மு.ஆற் 253- 257)

என்ற பாடலடிகள் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்த ஞானகுருவான தட்சணாமூர்த்தியினதும் மலையரசன் மகளாகிய உமையவளினதும் மக னாக முருகன் நீலப் பைஞ்சுனையாகிய சரவணப் பொய்கையிலே தீக்கொழுந்தாக உதித்த திவ்விய சரித்திரத்தைப் பேசுகின்றன.

திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்று, திரு வாவினன்குடி, திருவேரகம், திருச்சீரலைவாய் (திருச் செந்தூர்) குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகிய ஆறுபடை வீடுகளைப் பற்றிய செய்திகளும் விர விக்கிடக்கின்றன.

மால்வரை நிவந்த சேணுயர் பரங்குன்றில்

சூர மகளிர் சேவற்கொடியுடைய முருகனின் கீர்த்தி பாடித் துணங்கைக் கூத்தாடுதல் பற்றியும் திருவாவினன் குடியில்,

காம மொடு கடுஞ்சினங் கடிந்த முனிவரும்
யாழிசை வல்ல கந்தர் வரும்

உருத்திரனும், திருமாலும், இந்திரனும் ஏனைத் தலை மைத் தேவரும் முருகனை வழிபடுகின்ற முறைமை பற்றியும் நக்கீரர் குறிப்பிட்டுள்ளார்.

திருவாவினன் குடியில் முனிவர்கள் முருகனை வணங்குதலும், திருவேரகத்தில் மாணவர் நிலையி னரான அந்தணர்கள் முருகனுக்குரிய "சரவணபவ" எனும் ஆறெழுத்து மந்திரமோதி வழிபாடு செய்தலும் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தெய்வமும், தேவரும், முனிவரும், அந்தணரும் இப்படை வீடுகளில் முருகனைத் துதித்து நிற்க ஏனைய இரண்டு படை வீடுகளான குன்றுதோறாடலிலும் பழமுதிர்ச்சோலையிலும் ஆக மம் சாரா வழிபாட்டு முறை மேற்கொள்ளப்படுவதை நக்கீரர் தெளிவுறுத்துகிறார். அந்த வகையில் வேலன் வெறியாட்டும் குரவையாடலும் மறியறுத் தலும், கிடாய்க் குருதியில் தோய்ந்த வெள்ளரி சியும் தினையும் பரப்பலும், மஞ்சல், சந்தனம், தெளித்து நறும்புகை பரப்பலும் என குரவர்களின் குல நம்பிக்கைகளோடு கிளைத்தெழுந்த வழிபாட்டு முறைகளும் திருமுருகாற்றுப்படையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

எனவே முருகனை வேண்டுநர் வேண்டியாங் கெய்தி வழிபடத் தடையில்லை என்பதையும் அவ ரவர் உளப்பக்குவத்தை மதித்து அருள் செய்வான் என்பதையும் குறிப்பால் உணர்த்துகின்ற நக்கீரர்

ஊரூர் கொண்ட சீர் கெழு விழவினும்
ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனும்
காடும் காவும் கவின்பெரு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்

என முருகனை இயற்கை எழில் நிறைந்த எந்த இடத்திலும் இயைந்து குடியிருக்கும் தெய்வ மாகச் சித்திரித்துள்ளார். மேலும் இந்தப் பாடலினூ டாக நக்கீரர் முருக வழிபாட்டில் வைதிக நெறிக் கும் பண்டைத் தமிழர் நெறிக்குமான ஒரு பொது மையை உருவாக்கியுள்ளார் என்றே கூறவேண்டும். கோயில் தெய்வமாகவும் சந்தித் தெய்வமாகவும் முருகன் விளங்குதலைச் சுட்டிக் காட்டி வழிபாட்டு நெறியில் மேலது கீழது இல்லை என்ற பொதுத் தன்மையை வழியுறுத்துகின்றார்.

இத்தகை சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட திருமுருகாற்றுப்படையை யாரேனும் பாராயணம் செய்யும் வேளையில் வள்ளியம்மையினுடைய இனிமையான சொற்களைக் கேட்டலையும் புறக்கணித்துவிட்டு முருகனுடைய பன்னிரண்டு செவிகளும் அதனைக் கேட்டு இன்புறுகின்றனவாம். இது துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் தனது சீர்காளத்திப் புராணத்தில் நக்கீரர் சுருக்கத்தில் கூறியதாகும்.

("பொன்னவிர சுனங்கு பூத்த ........")

பத்துப் பாட்டுக்கள் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படும் பொருநாராற்றுப்படையும் முருகனை வலிமை, சினம், பகைஅழிக்கும் திறன் ஆகியவற்றிற்கு உவமையாக்கிறது. இவ்விலக்கியத்தை இயற்றியவரான முடத்தாமக் கண்ணியார் சோழன் கரிகாற்பெருவளத்தானை முருகனைப் போலும் சீற்றத்தை உடையவனாக வர்ணிக்கிறார்.

"............... வெண்வேல்
உருவப்பஃறேர் இளையோன் சிறுவன்
முருகற் சீற்றத்துருகெழு குருசில்"
(அடி 130)

குறிஞ்சிப்பாட்டும் குறிஞ்சி நிலத் தெய்வமான குமரனைப் போற்றத் தவறவில்லை.

"அறம் புனையாகத் தேற்றித் பிறங்குமலை
மிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு"
(அடி 208-214)

எனத் தொடங்கும் பாடல் மலை உச்சியில் உறையும் முருகனை வாழ்த்திக் கைதொழும். மேலும் மலை மேல் மின்னலுடன் மழை பொழிந்த காட்சியைப் பாடுகின்ற கவிஞர் அம் மின்னலை முருகனின் வேல்படையின் பிரகாசத்துடன் ஒப்பிடுகின்றார்.

"...............................
ஒன்னார்க் கேந்திய இலங்கிலை எஃகின்
மின் மயங்கருவிய கண்மிசைப் பொழிந்தென்"
(அடி 46→53)

தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மாங்குடி மருதனரால் இயற்றப்பட்டது மதுரைக் காஞ்சியாகும். இவ்விலக்கியத்தில்

"விரிகடல் வியன்றானையோடு
முருகுறழப் பகைத்தலைச் சென்று"
( அடி 180 -181)

என கடல் போன்ற படையுடன் முருகன் பகைவர் மேற் செல்லுமாறு போல நெடுஞ்செழியன் வர்ணிக்கப்படுகிறான். மேலும் ஆறுபடை வீடுகளுள் ஒன்றான திருப்பரங்குன்றத்தில் நடைபெறும் திருவிழாவின் ஆரவாரம் பற்றி

"தளிமழை பொழியுந் தன் பரங் குன்றிற்
கலி கொள் சும்மை யொலி கொளாயா"
(அடி 263-264)

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங் கண்ணனார் முருகனுக்கு வெறியாட்டு நிகழ்தல் பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

"செறி தொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க"
(அடி 153- 168)

மேலும்
"மையறு சிறப்பின் தெய்வஞ் சேர்த்திய
-----------------------------"
(அடி 159- 168)

எனத் தொடங்கும் பாடலில் மெழுகிய நிலத்தில் வேலின் கம்பை நட்டு வணங்கும் வழக்கம் இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் தாம் இயற்றிய பெரும்பாணாற்றுப்படையிலும் கொற்றவைத் தெய்வத்தை வர்ணிக்கும் இடத்துக் கடலிலே சூரனைக் கொன்ற முருகனைப் பெற்ற பெருமைமிக்க வயிற்றினைக் கொண்டவளாகக் குறிப்பிடுவார்.

"வெண்டிரைப் பரப்பில் கடுஞ்சூர் கொன்ற
பைம் பூன் சேய்ப் பயந்து
மாமோட்டுத் துணங்கையும் --------"
(அடி 75)

இது போன்றே எட்டுத் தொகை நூல்களிலும் முருகன் பற்றிய அனேக குறிப்புக்கள் விரவிக்கிடக்

கின்றன. அந்த வகையில் நற்றிணையில் அமையப் பெற்ற நானூறு பாடல்களுள் ஐம்பத்திரண்டு பாக்களில் சமயச் சார்பான விடயங்கள் பேசப்பட்டுள்ளன. அவற்றுள் பன்னிரண்டு பாக்கள் முருக வழிபாடு பற்றிப் பேசுகின்றன. குறிஞ்சிக் கடவுளாகிய முருகனுக்குப் பலி கொடுக்கும் வழக்கம் பற்றியும் அவனை இடர் களையும் தெய்வமாகப் போற்றும் தன்மையும் இப் பாடற் குறிப்புக்களால் அறியமுடிகிறது.

"-------------
குன்றி ஏய்க்கும் உடுக்கை குன்றின்
நெஞ்சு பக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப"

"மென்றோள் நெகிழ்ந்த செவ்வல் வேலன்
வென்றி நெடுவேள் என்னும்"

"முருகு அயர்ந்து வந்த முதுவாய் வேல"

போன்ற அடிகள் முருகனே உலகைத் தாங்கி நிற்பவன் என்ற செய்தியையும் முருக வழிபாட்டு நடைமுறையான வேலன் வெறியாடல் நிகழ்வு பற்றியும் பேசுகின்றன. குறுந்தொகை முருகனை ஓரிடத்தில் மூலமுதற் கடவுள் என்னும் பொருளில் 'பெருந் தெய்வம்' எனக் குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கது.

ஐங்குறுநூற்றில் நாற்பத்திரண்டு இடங்களில் சமயம் சார்ந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் பன்னிரண்டு பாடல்கள் முருகக் கடவுளைப் போற்றுகின்றன. அவற்றுள் வெறிப்பத்து முழுமையும் வேலன் வெறியாடல் பற்றிய விவரணமாக அமைகிறது. குறிஞ்சி வாழ் குறவர்கள் முருகனைத் தம் குலமூத்தவனாகவே கருதிப் போற்றுவதை

"மலையுறை கடவுள் குல முதல் வழுத்தி"
(குன் குறவன் பத்து 9)

என்ற பாடல் வரிகள் உறுதி செய்கின்றன.

பதிற்றுப்பத்தில் முப்பத்தைந்து பாடல்களில் சமயச் சார்பான குறிப்புக்களை அடையாளங் காணமுடிகிறது. இவ்விலக்கியத்தின் இரண்டாம் பத்தில் முருகன் மாமரவடிவில் நின்ற சூரனைக் கொன்ற செய்தி விபரிக்கப்பட்டுள்ளது. முருகன் சூரனைக் கொன்ற பின் பிணிமுகம் எனும் யானையின் மீதேறிச் சென்ற புராணச் செய்தியை.

"நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை யவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசை
கடுஞ்சின விறல்வேற் களிநூர்த் தாங்கு"

என்ற பாடல் காட்சிப்படுத்தியுள்ளது.

இருபத்தினான்கு பாடல்களைக் கொண்டு விளங்குகின்ற பரி பாடலில் முருகனுக்குரியதாக எட்டுப் பாடல்கள் அடையாளங் காணப்படுகின்றன. அவற்றுள் முருகனைக் குறித்துக் கடுவன் இளவெயினார் என்ற புலவர் பாடிய,

"வேலனேத்தும் வெறியுமுளவேயவை
வாயு மல்ல பொய்யு மல்ல..........."

எனத் தொடங்குகின்ற பாடலில் இடம் பெற்றுள்ள முருகனின் பிறப்புப் பற்றிய செய்திகள் பௌராணிக மரபை அடியொற்றியதாக விளங்குவதைக் காணலாம். இது நற்றினை, குறுந்தொகை ஆகிய நூல்கள் முருகனைக் குறித்துக் கூறிய விடயத்திற்கு நேர்மாறானதாகும்.

முருகனைக் கொற்றவை வயிற்றிற் பிறந்தவனாகச் சித்திரித்து தாய் வழி மரபினை முதன்மைப்படுத்திய சங்க இலக்கியங்களிலிருந்து பரிபாடல் வேறுபட்டு நின்று முப்புரங்களை எரித்தவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து வந்த பிழம்பில் இருந்து தோன்றியவனாக பௌராணிகச் சார்பு துலங்க முருகனைப் போற்றுகின்றது.

மேலும் பரிபாடல் கிரௌஞ்ச மலையைத் து[illegible]ளத்[illegible] சூரனை அழித்த செய்தியும் கூறப்படுகிறது. பரிபாடலின் இறுதிப்பாடல் செவ்வேள் உறையும் திருப்பரங் குன்றிடத்திலே வாழும் மக்கள் வீடு பேற்றினை அடைவர் எனக் கூறி நிறைவுறுவது கவனிக்கத்தக்கதாகும். கலித் தொகையிலே ஐம்பத்தொன்பது பாடல்களில் சமயச் சார்பான குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள்ளும் ஐந்து பாடல்கள் முருகக் கடவுளைப் பற்றிய செய்திகளைக் கொண்டு விளங்குகின்றன.

"வரையுறை தெய்வம்"
"கொடிச்சியவர் கைத்தொழு குன்றம்"

"வென்வேலான்"
"சூரர் கொன்ற செவ்வேலாற்"

என்ற அடிகள் மலைகளில் உறைகின்ற முருகக் கடவுளின் மகத்துவத்தையும் அவன் திருக்கை வேலின் திவ்விய ஆற்றலையும் போற்றுகின்றன.

அகநானூற்றில் தொண்ணூற்று மூன்று பாடல்களில் சமயக் கருத்துக்கள் உரைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இருபத்தொரு இடங்களில் முருகக் கடவுள் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

"முருகன் நற் போர் நெடு வேளாவி"

"......................தன் மலைத்
தெறலரும் மரபின் கடவுட் பேணிக்"

"சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்"

என்ற அகநானூற்றின் பாலைத்திணைப் பாடல் வரிகளினால் முருகவேள் மலையின் கண் வீற்றிருந்து அடியார்க்கு அருள் செய்வதும் சூரனை அழித்த செய்தியும் அறியக்கிடக்கிறது. மேலும் வெறியாட்டுக்களம் அமைத்து வேலுக்கு மாலை சூட்டி ஆடியும், பாடியும் ஊன்பலி கொடுத்து முருகனை அடியவர் வணங்கிய செய்தி

"களருள் கிழைத்துக் கண்ணிசூட்டி
வளநகர் சிலம்பப்பாடிப் பலிகொடுத்து
துருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள"

என்ற பாடலால் அறியக்கிடக்கிறது.

இவ்வகையில் இயற்கை நெறிக்காலமான சங்க காலமதில் இயற்கையோடியைந்த இன்ப வாழ்க்கை வாழ்ந்த மக்கள் மத்தியில் முருகவழிபாடு பெற்றிருந்த முக்கியத்துவத்தினையும் முருக வழிபாட்டிற்கான சான்றாதாரங்களையும் பதினெண் மேற்கணக்கு இலக்கியங்களூடாக கண்டு தெளியலாம்.

### உசாவியவை


1) பாலசுப்பிரமணியன் கு.வெ:
சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புக்கள்
தமிழ்ப் பல்கலைகழகம், தஞ்சாவூர்.

2) உமாராசன் எஸ்.
சங்ககத்தமிழும் சமயங்களும்
கார்த்திக் பதிப்பகம், சென்னை, 1997

3) பாலசுந்தரன் - ஆதி
சங்க இலக்கியங்கள் புலப்படுத்தும் வழிபாட்டு வரலாறு
மணிமேகலை பிரசுரம், சென்னை, 2002

4) மகாதேவன் ரி.எம்.பி.
இந்து சமய தத்துவம். (தமிழாக்கம் இராஜபகதூர்.ஞா)
குமரன் புத்தக இல்லம் 2001 (மீள் பதிப்பு)

5. பக்தவத்சல பாரதி
பண்பாட்டு மானிடவியல்
மணிவாசகர் பதிப்பகம், சென்னை 1990


## தீபம் ஏற்றும் திசைகளின் பலன்கள்

**கிழக்கு -** **இத்திசையில் தீபம் ஏற்றி வழிபட்டால் துன்பம் ஒழியும். கிரகத்தின் பீடை அகலும்.**

**மேற்கு -** **இத்திசையில் தீபம் ஏற்றி வழிபட்டால் கடன் தொல்லை, சனிப்பீடை, கிரக தோசம் சல்லிய தோசம், பங்காளிப் பகை நீங்கும்.**

**வடக்கு -** **இத்திசையில் தீபமேற்றி வழிபட்டால் திரண்ட செல்வமும் மங்களமும் உண்டாகும். திருமணத் தடை, கல்வித் தடை நீங்கி சர்வ மங்களம் உண்டாகும்.**

**தெற்கு -** **இத்திசையில் தீபமேற்றுதல் கூடாது. பெரும் பாவம், அபசகுனம் ஏற்படும்.**

# நல்லைக் குமரன் மலரில் இவ்வாண்டு கௌரவம் பெறும்

## மாவையாதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ.சு.து.ஷண்முகநாதக் குருக்கள்



ஈழத்தின் புராதன பெருமை வாய்ந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் பிரதம குருவும், ஆதீன அறங்காவலருமான மகாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களது சமய சேவையையும், இறைத்தொண்டையும் பாராட்டி இவ்வாண்டு அவரைக் கௌரவிப்பதில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு ஸெருமிதம் அடைகின்றது.

வரலாற்றுக் காலத்தில் யாழ்ப்பாண இராய்ச்சியத்தின் முதல் மன்னனான உக்கிரசிங்கனின் மனைவி மாருதப்புரவீகவல்லி, மாவிட்டபுரத்தில் அமைத்த கந்தசுவாமி கோயிலின் புகழ்பூத்த அந்தணர் பரம்பரையில் வந்தவர் மகராஜஸ்ரீ சு.து. சண்முகநாதக்குருக்கள் அவர்கள். மாவிட்ட புரத்தில் அமைந்த மாவைக் கந்தனுக்கான ஆலயத்தின் சில விக்கிரகங்கள் தென்னிந் தியாவிலிருந்து அயலிலுள்ள துறைமுகத்தினூடாகக் கொண்டுவரப்பட்டன. காங்கேயேனின் சில விக்கிரகங்கள் அத்துறைமுகம் ஊடாக வந்ததால், காங்கேயன்துறை எனப் பெயர்பெற்றது.

இவற்றோடு ஓர் அந்தணர் குழுவும் யாழ்ப்பாண மண்ணில் காலடி வைத்தது. மாவைக் கந்தனுக்குச் சேவை செய்வதற்காக முதலாவது பிரதம குருவாக தென்னிந்தியாவிலிருந்து வந்தவர் பெரியமனத்துளார் எனும் பிராமணோத்துவராவார். அவருக்குப் பின் சின்னமனத்துளார் என்பவரும், அவர் பரம்பரையில் வந்த மகராஜஸ்ரீ சு.து சண்முகநாதக் குருக்கள் அவர்களும் விளங்குகின்றார்கள். இராணுவ நடவடிக்கையினால் முற்றாகப் பாதிப்படைந்த இவ்வாலயம் தற்போது முன்பிருந்த நிலைக்கு மீள்விக்கப்பட்டுக்கொண்டிருப்பதற்கு இவரது முயற்சியே முழுமுதற் காரணமாகும். மாவை ஆதீனத்தின் இக்குரு முதல்வரை மீண்டும் பாராட்டி வணங்குவதில் யாழ். மாநகரசபை கௌரவம் பெறுகின்றது.

***சைவசமய விவகாரக்குழு,***
***யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.***
29.08.2005

# யாழ்மாநகர ஆலயங்கள்



நல்லூர்க் கந்தசுவாமி கோயில்



1. கைலாசநாதர் சிவன் கோயில்



2. நல்லூர்க் கைலாசபிள்ளையார் கோயில்



3. வெயிலுகந்த பிள்ளையார் கோயில்



4. வீரமாகாளி அம்மன் கோயில்

# யாழ்மாநகர ஆலயங்கள்



5. அரச கேசரி பிள்ளையார் கோயில் (அரசடிப் பிள்ளையார்)



6. சட்டநாதர் கோயில்



7. கொண்டலடி வைரவர் கோயில்



8. பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில்



9. திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோயில்



10. திருநெல்வேலி சிவன் கோயில்

# யாழ்மாநகர ஆலயங்கள்



11. வண்ணை நாச்சிமார் அம்மன் கோயில்



12. கலட்டி கற்பக விநாயகர் கோயில்



13. கலட்டி எச்சாட்டி மகா மாரி அம்மன் கோயில்



14. கலட்டி வீரகத்தி விநாயகர் கோயில்



15. வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் கோயில்



16. வண்ணை சாந்தையர் பிள்ளையார் கோயில்

# யாழ்மாநகர ஆலயங்கள்



17. வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்



18. பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில்



19. வில்லூன்றி வீரகத்தி விநாயகர் கோயில்



20. வண்ணை ஐயனார் கோயில்



21. வண்ணை ஐயனார் கோவிலடி விநாயகர் கோயில்



22. வண்ணை வைத்தீஸ்வரன் காளி கோயில்

# யாழ்மாநகர ஆலயங்கள்



23. நீராவியடி வீரகத்தி விநாயகர் கோயில்



24. வண்ணை கதிரேசன் கோயில்



25. கோட்டை முனியப்பர் கோயில்



26. நல்லூர் ஸ்ரீ பால கதிர்காமம்



27. பூதவராயர் கோயில்



28. நல்லூர் மூத்த விநாயகர் கோயில்

# யாழ்மாநகர ஆலயங்கள்



29. நாச்சியம்மன் கோயில்



30. புவனேஸ்வரி அம்பாள் கோயில்



31. அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில்



32. நாயன்மார்க்கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பேச்சியம்மன் கோயில்



33. வாலையம்மன் கோயில்



34. பேச்சியம்மன் கோயில் (ஆடியபாதம் வீதி)

# யாழ்மாநகர ஆலயங்கள்



35. அரியாலை சித்தி விநாயகர் கோயில்



36. இலந்தைக்குளம் பிள்ளையார் கோயில்



37. பிரப்பங்குளம் மாரியம்மன் கோயில்



38. ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீஞானவைரவர் கோயில்



39. கொய்யாத்தோட்டம் ஸ்ரீ ஞானசெல்வ விநாயகர் கோயில்



40. யாழ் மருதடி விநாயகர் கோயில்

# யாழ்மாநகர ஆலயங்கள்



41. அத்தியடி வீரகத்தி விநாயகர் கோயில்



42. கந்தர் மடம் பழம் வீதி பிள்ளையார் கோயில்



43. நல்லூர் முத்துவிநாயகர் கோயில்



44. நல்லூர் மனோன்மணி அம்மன் கோயில்



45. கொட்டடி மீனாட்சி அம்மன் கோயில்



நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பழைய தோற்றம்

அட்டைப்பட படங்கள் : விஸ்ரா விஷன், யாழ்ப்பாணம். ஏனைய படங்கள் கலாநிதி க. குணராசா

# யாழ் மாநகர ஆலயங்கள்

- திரு இ.இரத்தினசிங்கம்

யாழ்ப்பாண மாநகரசபை ஆள்புலத்தினுள் சைவ மும் தமிழும் செழித்தோங்க வளர்த்திருப்பதிலும், சைவப்பண்பாட்டை கட்டிக்காத்து பேணிவருவதிலும் இந்து ஆலயங்கள் முக்கிய பங்கினை வகித்து வருகின்றன. யாழ் மாநகர ஆள்புலத்தினுள் அமைந் திருக்கின்ற ஆலயங்கள் குறித்து சிறிய ஒரு விளக்கத்தை இவ்வாண்டு நல்லைக் குமரன் மலரில் இணைக்கின்ற பணியை மேற்கொண்டுள்ளோம்.

கந்தபுராணக் கலாசாரத்தைக் கைக்கொண்டு வரும் யாழ்ப்பாணத்தில் இந்து ஆலயங்களின் சமூக, சமய பணி குறித்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்வது அவசியமாகின்றது. இங்கு அமைந் துள்ள ஆலயங்களைப் பல்வேறு தன்மைகளில் வகைப்படுத்தமுடியும்.

**1. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்கள்:**
இவ்வகுதியில் நல்லூர் கந்தசுவாமி கோயில் முதல் இடத்தைப்பெற, அதன் அயற்புற ஆலயங் களான சட்டநாதர் சிவன் கோயில், கைலாசநாதர் சிவன் கோயில், அரசகேசரிப் பிள்ளையார் கோயில், வெயிலுகந்த வீரகத்தி விநாயகர் கோயில் முதலின குறிப்பிடத்தக்கன.

**2. சிவாலயங்கள்:-**
இவ்வகுதியில் நல்லூர் கைலாசநாதர் சிவன் கோயில், சட்டநாதர் சிவன் கோயில், திருநெல் வேலி சிவன் கோயில், வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் என்பன அடங்குகின்றன.

**3. விநாயகர் ஆலயங்கள்:-**
வெயிலுகந்த பிள்ளையார் கோயில், அரசகேசரிப் பிள்ளையார் கோயில், நல்லூர் கைலாய பிள்ளை யார் கோயில், பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில், கலட்டி கற்பக விநாயகர் கோயில், கலட்டி வீரகத்தி விநாயகர் கோயில், வண்ணை சாந்தையர் மடம் பிள்ளையார் கோயில், பன்றிக் கோட்டு பிள்ளையார் கோயில், நீராவியடி வீரகத்தி விநாயகர் கோயில், வில்லூன்றி வீரகத்தி விநாய கர் கோயில், வண்ணை ஐயனார் கோயிலடி பிள்ளையார் கோயில், நல்லூர் மூத்த விநாயகர் கோயில், அரியாலை சித்திவிநாயகர் கோயில், இலந்தைக் குளம் பிள்ளையார் கோயில், ஸ்ரீஞான செல்வ விநாயகர் கோயில், மருதடி விநாயகர் கோயில், அத்தியடி ஸ்ரீ சிதம்பரநடராசர் வீரகத்திப் பிள்ளையார் கோயில், பழம்வீதி பிள்ளையார் கோயில், முத்து விநாயகர் ஆலயம் என்பன அடங்கும்.

**4. அம்மன் ஆலயங்கள்:-**
வீரமாகாளி அம்மன் கோயில், திருநெல்வேலி அருள்மிகு முத்துமாரி அம்மன் கோயில், வண் ணை நாச்சிமார் கோயில், கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் கோயில், வண்ணை வைத்தீஸ் வரன் காளி கோயில், நாச்சியம்மன் கோயில், புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், நாயன்மார் கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பேச்சியம்மன் கோயில், வாலையம்மன் கோயில், பேச்சியம்மன் கோயில், பிரப்பங்குளம் மாரியம்மன் கோயில், மனோன் மணி அம்மன் கோயில், கொட்டடி மீனாட்சி அம்மன் கோயில்.

**5. முருகன் ஆலயங்கள்:-**
நல்லூர் கந்தசுவாமி கோயில், வண்ணார்பண்ணை கதிரேசன் கோயில், ஸ்ரீ பாலகதிர்காமம்

**6. வைரவர் ஆலயங்கள்:-**
கொண்டலடி வைரவர் கோயில், அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில், ஈச்சமோட்டை கலட்டிபுலம் ஸ்ரீ ஞானவைரவர் கோயில், பண்டாரவளவு ஆதிநரசிங்க வைரவர் கோயில்

**7. பெருமாள் ஆலயங்கள்:-**

வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில்

**8. ஐயனார் ஆலயங்கள்:-**

வண்ணை ஐயனார் கோயில்

**நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் (02)**

ஸ்ரீ கைலாசநாத பிள்ளையார் என்ற மறுநாமத்துடன் இலங்கைக்கு மேற்படி ஆலயம் முதலாம் சிங்கை ஆரியசக்கரவர்த்தி காலத்தில் கி.பி. 1260 ஆம் ஆண்டு காலத்தில் முதன்முதலாகக் கட்டப்பட்டது. இக்கோவிலின் வரலாற்றுப்படி சிங்கை ஆரியசக்கரவர்த்தி மதுரையில் உள்ளது போல் சொக்கநாதர் ஆலயம் ஒன்றை அமைக்க விரும்பினார். அன்றிரவு பிரம்ம விஷ்ணுக்களுக்கும் வேதங்களுக்கும் எட்டாத ஸ்ரீ கைலாசநாதப் பெருமான் அரசனின் கனவில் காட்சியளித்து நம் பெயர் கைலாசநாதன், நம்மை மறந்தாயோ என்று கூறி மறைந்தார். எம்பெருமான் திருவருளைப் போற்றி மூர்த்தம் அமைத்து வேதவிதிப்படி கைலாயநாதப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் திருக்கோயில் அமைத்து யாக சாலை, உக்கிரண சாலை, அன்னதானமடம், திருமஞ்சனக்குளம், நந்த வனங்கள் ஒன்று சேர கோயில் அமைத்தான். திருக்கேதாரத்திலிருந்து மன்மதனால் பூஜிக்கப்பட்ட எம்பெருமான் திருவுருவத்தை முறைப்படி கிரியைகள் யாவும் செய்து மகா கும்பாபிஷேகம் செய்வித்தான். திருக்கைலாய மலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கைலாசநாதப் பெருமான் திருநந்திதேவரை நோக்கி இதுவரை இந்தக் கயிலாயமலையும் தென்கயிலை எனப்படும் திருக்காளத்தி மலையும் ஆகிய பெருவியப்போடு உறைந்தோம். இன்று மூன்றாவது கயிலை ஆகிய இந்த ஸ்தலத்திலே மற்ற கயிலைகள் போலவே இங்கும் மாறா மகிழ்வுடன் அமர்ந்து அருளவேண்டும். இக்கணமே நீயும் உன் கணங்களும் அங்கு செல்லப் புறப்படுவாயாக என்று திருவாய் மலர்ந்தருளினார். எம்பெருமான் கைலாயநாயகி சமேதராய் தேவர்கள் புடைசூழ நல்லூர் கையிலையை நாடிவந்து அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகத்திலே எழுந்தருளினார். பிற்காலத்தில் வந்த அன்னியரான போர்த்துக்கீசர், ஒல்லாந்தரால் கோயில் இடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் கோட்டையும், ஊர்காவற்றுறைக் கோட்டையும் கட்டப்பட்டது. பின்னர் வந்த ஆங்கிலேயர் ஆட்சியில் சமய விழிப்புணர்வு ஏற்பட்டு 1890 ஆம் ஆண்டளவில் ஆறுமுகநாவலர் அவர்களின் பெருமுயற்சியாலும், சைவமக்களின் பெரு முயற்சியாலும் திரு. தம்பு கைலாசபிள்ளை சபாபதி முதலியார், சிவஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் மற்றும் எல்லோராலும் மீண்டும் இவ்வாலயம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகின. 1916ம் ஆண்டளவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 1944 ஆம் ஆண்டு மீண்டும் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று மாணிக்கம் அம்மையார், கைலாசபிள்ளை, பொன்னம்பலப்பிள்ளை, சோமசுந்தரம், சுந்தரம் முதலியார் சிவஸ்ரீ குருஸ்வாமிக் குருக்கள் போன்றோரின் அயராத உழைப்பினால் கும்பாபிஷேகம் நிறைவடைந்தது.

சித்திரை மாதத்தில் விநாயகப் பெருமானுக்கும், ஆனி மாதத்தில் கைலாசநாதப் பெருமானுக்கும் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. பரம்பரை பரம்பரையாக சைவக் குருக்களே இவ்வாலயத்தின் அறங்காவலர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

**நாயன்மார்கட்டு ஸ்ரீ வெய்யிலுகந்தப் பிள்ளையார் தேவஸ்தானம் (03)**

சிங்கையாரியச் சக்கரவர்த்தியினால் கி.பி.13 ஆம் நூற்றாண்டளவில் நல்லூர் இராசதானியின் காவற் கோயிலாக அமைக்கப்பெற்ற இவ்வாலயம் வரலாற்றுப்பெருமைமிக்கதாகும்.

பங்குனி உத்தரத்தை நிறைவாகக்கொண்டு 10 தினங்கள் நடைபெறும் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி மணவாளக் கோலம், ஆனி உத்தரம், ஆடிப்பிறப்பு, ஆவணிசதுர்த்தி, நவராத்திரி, மாநோன்பு, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, தைப்பொங்கல், மகாசிவராத்திரி,விநாயகர் சஸ்டி ஆகியன இவ்வாலயத்தில் நிகழும் முக்கிய விழாக்களாகும். திரு.ப.விநாயகமூர்த்தி என்பவரே இவ்வாலயத்தின் தற்போதைய அறங்காவலராவார்.

**நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயம் (5)**

அரசகேசரிப் பிள்ளையார், குளத்தடிப் பிள்ளையார் ஆகிய மறுபெயர்களால் அழைக்கப்படும் மேற்படி ஆலயம் நல்லூரை இராசதானியாகக் கொண்டு அரசாட்சி புரிந்த தமிழ் மன்னனாகிய

சிங்கை ஆரியச்சக்கரவர்த்தியினால் ஸ்தாபிக்கப் பட்டதாகும். மன்னன் இவ்வாலயத்திற்கு முன்னால் ஓர் அழகிய திருக்குளத்தை அமைப்பித்து அதன் நடுவில் ஓர் நீராழி மண்டபமும் விநாயகப் பெருமான் திருக்குளத்தில் நீராடி நீராழி மண்டபத்திலே இளைப்பாறிச் செல்வதற்கு வேண்டிய வசதிகளை யும் செய்வித்தான். அது மட்டுமல்லாது இத்திருக் குளத்திற்கு வடபகுதியில் நாயன்மார்கள் குருபூசை மடம் ஒன்றையும் அமைப்பித்தான். இதற்குச் சான்று கள் குளத்திற்கு வடபால் உள்ள காணியின் பெயர்களே. அத்தோடு இக்குளத்திற்கு வடபால் உள்ள பிரதேசத்தில் சரஸ்வதிமஹால் என்று அழைக்கப்பட்ட ஒரு நூலகமும் காணப்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இவ்வாலயத்திற்கு குளத்தடிப் பிள்ளையார் என்ற பெயரும் அத்துடன் பரராசசேகர மன்னனின் மருமகனாகிய மஹாவித்துவான் அரசசேகரி இக்குளத்தில் நீராடி விநாயகப்பெருமானை வழிபட்டு அவரது ஆசியைப் பெற்று தாமரைக் குளத்திலி ருந்து வரும் இனிய தென்றலை நுகர்ந்த வண்ணம் இரகுவம்சம் என்னும் வடமொழிக் காவியத்தை இனிய தமிழில் பாடியுள்ளார். இதன் காரணமாக அரசகேசரி விநாயகர் என்ற சிறப்புப் பெயரும் பிள்ளையாருக்கு உண்டாயிற்று.

மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பன ஒருங்கே அமையப்பெற்று விளங்குகின்ற ஆலயத் திற்கு நித்திய, நைமித்திய பூஜை வழிபாடுகளை செய்வதற்கென மன்னன் தென்னிந்தியாவில் வேதார ணியம் என்ற இடத்திலிருந்து சைவக்குருமார்கள் பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீமத் கயிலாசநாதக் குருக் கள் குடும்பத்தாரை வரவழைத்துப் பரம்பரையாகப் பரிபாலித்து பூசை செய்து வரும்படி வேண்டிக் கொண்டான். அவர்களது பரம்பரையினரே தற்போ தும் இவ்வாலயத்தைப் பராமரித்து வருகின்றனர். பங்குனி மாதத்தில் 10 தினங்கள் கொடியேற்றத் திருவிழா நடைபெற்று வருகிறது.

### பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலயம் (08)

சங்கிலி மன்னனின் இராசதானியிலே அரசன் பவனிவரும் அரசவீதியில் பண்டாரக்குளக்கரையில் அமைந்திருக்கும் இவ்வாலயம் 1890ஆம் ஆண்டள வில் ஸ்தாபிக்கப்பட்டதாகும். சித்திரை மாதத்தில் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாட்கள் நடைபெற்று வருகின்றது. சித்திரை வருடப்பிறப்புத் தினத்தன்று தேர்த்திருவிழா இடம்பெறும். விநாயகர் இலட்சார்ச்சனை, நவராத் திரி, கஜமுக சங்காரம், திருவெம்பாவை ஆகியன இவ்வாலயத்தில் நிகழும் விசேட திருவிழாக் களாகும். இவ்வாலயம் தற்போது அறங்காவலர் ளகளாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

### கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் (12)

ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் என்ற மறுநாமத்துடன் இருக்கும் மேற்படி ஆலயம் 1889 ஆம் ஆண்ட ளவில் திரு. தாமோதரர் கார்த்திகேசர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று தேர்த் திருவிழா இடம்பெறும் விதத்தில் கொடியேற்றம் ஆரம்பமாகி 10 நாட்கள் திருவிழா நடைபெற்று வருகிறது. விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, திரு வெம்பாவை, விநாயகர் பெருங்கதை ஆகிய முக் கிய விழாக்களும் இங்கு இடம்பெறுகின்றன. அறங்காவலரினாலேயே இவ்வாலயம் தற்போது நிர் வகிக்கப்பட்டு வருகின்றது.

### கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் (14)

1830 ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வாலயத்தின் ஆனி உத்தரத் தினத்தன்று தீர்த்தத் திருவிழா இடம்பெறக் கூடியதாக கொடி யேற்றம் ஆரம்பித்து 10 நாட்கள் திருவிழா நடை பெறுகின்றது. மாதாந்த சதுர்த்தி, பிள்ளையார் கதை, திருவெம்பாவை ஆகிய தினங்களில் விசேட திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றது. இவ் வாலயத்தைப் பரிபாலன சபையே தற்போது பரி பாலித்து வருகின்றது.

### வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயம் (15)

1896 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வாலயத்தில் வருடாந்த அலங்கார உற்சவமும் மணவாளக் கோல விழாவும் இடம்பெற்று வருகின்றன. ஆவணி விநாயக சதுர்த்தித் தினத்திலே அலங்கார உற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறுகின்றன. இவ்வாலயம் அறங்காவலரினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

### பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் (18)

ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோவில் என்ற மறு நாமத்துடன் போர்த்துக்கேயர் காலத்திற்கு முன்னர் அகிலேச ஐயர், கணேச ஐயர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட மேற்படி ஆலயத்தில் நவராத்திரி, கோதார கௌரி, திருவெம்பாவை போன்ற விசேட திருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன.ஆடி மாதத்தில் 10 நாட்கள் அலங்காரத் திருவிழா நடைபெறுகின்றது. இவ்வாலயத்தினை தர்மகர்த்தா சபையினரே நிர்வகித்து வருகின்றனர்.

### வண்ணை ஐயனார் கோவிலடி விநாயகர் ஆலயம் (21)

விசுவேச விநாயகர் என்ற மறுநாமத்துடன் இலங்கும் மேற்படி ஆலயம் 18 ஆம் நூற்றாண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டதாகும். இக்கோவிலில் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்று வருகின்றன. ஆனி பௌர்ணமித் தினத்தன்று தீர்த்தத்திருவிழா இடம்பெறும். சதுர்த்தி, பௌர்ணமி, கார்த்திகை ஆகிய தினங்களில் விசேட விழாக்கள் நடைபெற்று வரும் இவ்வாலயத்தை பரிபாலனசபையே தற்போது பரிபாலித்து வருகின்றது.

### ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (23)

பூதர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட மேற்படி ஆலயத்தின் அலங்காரத் திருவிழா வைகாசி மாத பூச நட்சத்திர தினத்தன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறும். ஆவணி சதுர்த்தி, நவராத்திரி, பிள்ளையார் கதை, திருவெம்பாவை, தைப்பூச மணவாளக் கோலம், சிவராத்திரி ஆகிய முக்கிய திருவிழாக்களும் கொண்டாடப்பட்டு வரும் இவ்வாலயம் அறங்காவலரான திரு.வை.இரகுநாத முதலியாரினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

### நல்லூர் முத்த விநாயகர் ஆலயம் (28)

மூத்த நயினார் என்ற மறுநாமத்தைக் கொண்டிருக்கும் மேற்படி ஆலயம் 1800 ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனி உத்தரத் தினத்தன்று கொடியேற்றத்துடன் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா இடம்பெறுகின்றது. விநாயகர் பெருங்கதை, திருவெம்பாவை, நவராத்திரி, சதுர்த்தி ஆகிய முக்கிய விழாக்களும் இடம்பெற்று வரும் இவ்வாலயம் தர்மகர்த்தா சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

### அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் (35)

ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலத்திற்கு முன்னர் ஸ்ரீமான் விசுவநாதர் காசிப பிள்ளை என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட மேற்படி ஆலயத்தில் விநாயகர் கொடியேற்ற உற்சவமும், சிவன் அலங்கார உற்சவமும் இடம்பெற்று வருகின்றது. இம் மஹோற்சவங்கள் முறையே ஆவணி மற்றும் பங்குனி மாதங்களில் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறுகின்றன.

இவ்வாலயத்தில் தைப்பொங்கல், தைப்பூசம், சித்திரை வருடப்பிறப்பு, இலட்சார்ச்சனை, சங்காபிசேகம், தீபாவளி, சூரன்போர், திருக்கல்யாணம், விளக்கீடு, திருக்கார்த்திகை, கஜமுகன் போர், பெருங்கதை, திருவாதிரை போன்ற முக்கிய விழாக்கள் இடம்பெற்று வருகின்றன. அடியார்களிடையே இருந்து தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையே தற்போது இக்கோவிலை நிர்வகித்து வருகின்றது.

### இலந்தைக்குளம் பிள்ளையார் கோயில் (36)

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட ஸ்ரீ மன்றுள்ளாடும் பெருமான் விநாயகர் தேவஸ்தானம் என்ற மறுபெயருடன் விளங்கும் மேற்படி ஆலயம் நல்லூரில் தமிழ் அரச பரம்பரை கோலோச்சிய காலத்தில் மதுரையில் உள்ள மருங்கூர் எனும் கிராமத்திலிருந்து குடும்பம் குடும்பமாகக் கடல் வழியாக மன்னாரிலுள்ள மாந்தை, விடத்தல் தீவு வழியாக பூநகரியூடாக கொழும்புத்துறைக்கு வந்து குடியமர்ந்த செட்டிமாரே வதிரிபீட விநாயகனை சிறுகுடில் அமைத்து ஆரோகணஞ்செய்து வந்ததாக அறியமுடிகின்றது.

வைகாசிப் பூரணையில் தீர்த்தத் திருவிழா நடைபெறும் விதத்தில் கொடியேற்றம் ஆரம்பமாகி 10 தினங்கள் திருவிழா நடைபெறும். தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, பங்குனித்திங்கள், பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்பு, சித்தரா பூரணை, சித்ரகுப்த விரதம், ஆனி உத்தரம், ஆடிப்பிறப்பு, ஆடிச்செவ்வாய், ஆடிப்பூரம், வரலக்சுமி விரதம், ஆவணி சதுர்த்தி, புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி, சோமவாரம்,

விநாயகர் விரதம், கஜமுக சங்காரம், திருவெம் பாவை ஆகிய தினங்களில் விசேட திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. அறங்காவலரான கந்த சாமி செந்தில்குமரன் என்பவராலேயே இவ்வாலயம் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

**அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராச வீரகத்திப் பிள்ளையார் கோவில் (41)**

அத்தியடிப் பிள்ளையார் என்ற மறு பெயருடன் இயங்கும் இவ்வாலயம் ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்னர் அத்தியடியைச் சேர்ந்த அருணாசலம் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கே சித்தரை மாதத்தில் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்று வருகின்றன. சதுர்த்தி, சங்கடகர சதுர்த்தி, கார்த்திகை போன்ற முக்கிய விழாக் களும் இவ்வாலயத்தில் இடம்பெற்று வருகின்றன. திரு.து.கனகசபை அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாக சபையே தற்போது இக்கோயி லைப் பராமரித்து வருகின்றது.

**ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் (42)**

பழம் வீதிப் பிள்ளையார் என்ற மறு நாமத்துடன் அருள்பாலித்து வரும் மேற்படி விநாய கர் ஆலயம் 1901 ஆம் ஆண்டு முதலியார் இரா மசாமி அவர்களினால் உருவாக்கப்பட்டதாகும். இராமசாமி அவர்கள் தமது காணியில் கிணறு வெட்டும்போது திருவாத்தி வேர் சுற்றப்பட்ட நிலை யில் கல்லொன்று தோன்றியது. அன்று இரவு முதலியாருக்கும் கிணறு வெட்டிய ஆச்சாரியா ருக்கும் கனவில் பிள்ளையார் வடிவில் தோன்றித் தன்னை அதில் வைத்து வணங்கும் வண்ணம் காட்சிகொடுத்தார். அத்துடன் அக்கிணறே கோயி லின் தீர்த்தக் கிணறாகப் பாவிக்கப்பட்டு வருகின் றது. அன்று தொடக்கம் தான்தோன்றி விநாயகராக இவரை ஊர் மக்கள் வணங்கி வருகின்றனர். இக்கல்லு சின்னஞ் சின்னதாக வளர்ந்துகொண்டு வருகின்றது. ஆனி மாதத்தில் அலங்காரத் திரு விழா 12 நாட்கள் நடைபெறுகிறது. சதுர்த்தி, மணவாளக் கோலம், பிள்ளையார் கதை, கந்த ஷஷ்டி ஆகியன இவ்வாலயத்தில் நிகழும் முக்கிய விழாக்களாகும். பரிபாலன சபையினாலேயே இவ்வாலயம் தற்போது பரிபாலிக்கப்பட்டு வரு கின்றது.

**நல்லூர் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயம் (43)**

நல்லூர்க் கந்தன் ஆலய மேற்கு வீதியில் அமைந்துள்ள மேற்படி ஆலயம் 1873 இல் ஸ்தா பிக்கப்பட்டதாகும். ஆனி உத்தரட்டாதி நாளன்று அலங்காரத் திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்று வருகின்றது. மாதாந்த சதுர்த்தி, விநாயகர் விரதம் ஆகிய தினங்களில் விசேட திருவிழாக்கள் இடம்பெறும் இவ்வாலயம் அறங்காவலரினாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின் றது. நல்லூர் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் இவ்வாலய வீதியில் பிரசங்கங்கள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம் (04)**

நல்லூரை அழகுபடுத்திய பரராசசேகர மன்னன் நாற்றிசைகளிலும் காவற் கோயில்களை அமைக்கும் போது மேற்குத் திசையில் 1470 ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்டது தான் மேற்படி ஆலயமாகும். யாழ்ப்பாண வரலாற்றோடு மிக நெருங்கிய தொடர்புடைய இக்கோயிலை அந்நியரான பறங்கியர் அழிக்க முற்பட்ட போது மிகப் பெரிய சிங்கம் ஒன்று சடையை விரித்து உரத்த சத்தத்துடன் கர்ச்சித்ததைக் கேட்டு பறங் கியப் படைகள் அவ்விடத்தை விட்டு ஓடியதாக வரலாறு கூறுகின்றது. சங்கிலி மன்னன் போருக்குப் போகும் போது வீரமாகாளியை வணங்கிச் செல்வது வழக்கம். போர்த்துக்கேயரிமிருந்து சங்கிலி மன்ன னால் கைப்பற்றப்பட்ட வாள் ஆலயத்தில் மிக நீண்ட காலமாக வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இக்கோயிலின் வருடாந்த உற்சவம் வைகாசி மாத தேய்பிறை காலத்து ஆறாம் நாளான ஷஷ்டித் தினத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி 25 நாட்கள் நடைபெறுகின்றது. இவ்வாலயத் தில் சைவக் குருமார்களே பரம்பரையாக பூசை செய்து வருகின்றனர். 75 ஆண்டுகள் பழைமை வாய்ந்த சித்திரத் தேர் ஒன்றும் இங்கு உள்ளது.

**வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம் (11)**

நாச்சிமார் கோவில் எனும் மறுநாமத்தோடு விளங்கும் மேற்படி ஆலயம் கி.பி.1880 இல் காசிநாதர் தம்பர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட தாகவும் விஸ்வகுலதுங்க மேஸ்திரி கந்தர் முகா மையாளராகப் பணியாற்றியதாகவும் வரலாறு

மூலமாக அறிய முடிகின்றது. நாச்சிமார் கோயில் கற்றளியாக 1870 ஆம் ஆண்டளவில் கட்டப் பெற்றதெனவும் அங்கு ஆண்டு தோறும் அலங்கார உற்சவங்கள் நடைபெற்றன என்பதும் அது விஸ்வ பிரம்ம குலத்தவரின் வசமாய் இருந்ததென்பதும் பதிவேடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் தகவலாகும்.

கோயில் மூலஸ்தானமும் அர்த்த மண்டபமும் புதிதாக அமைக்கப்பெற்ற போது காமாட்சியின் விக்கிரமும் தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் 1887 இல் கும்பாபிசேகம் நடைபெற்றது. கி.பி.1893 ஆம் ஆண்டிலே கொக்குவில், நல்லூர், கோப்பாய், அளவெட்டி ஆகிய இடங்களிலிருந்த சில குடிகளைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடி கோயில் பராமரிப்புத் தத்துவ உறுதியொன்றினை எழுதியதோடு அதற்கமைய பஞ்சாயத்து ஒன்றினையும் ஆலய பரிபாலனத்துக்கென அமைத்தார்கள். 05 உறுப்பினர்களைக் கொண்ட பஞ்சாயத்தும் 14 பேர்களைக் கொண்ட நிர்வாக சபையும் உருவாக்கப்பட்ட அக்காலம் முதலாக நாச்சிமார் கோயில் படிப்படியாக விருத்திபெற்றுப் பிரகாசிக்கத் தொடங்கியது.

20 ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் நமசிவாயம் செல்லப்பா என்பவர் இந்தியாவுக்கு தல யாத்திரை போன காலத்தில் சுவாமி மலையிலுள்ள சிற்பாசாரிகளைக் கொண்டு விக்கிரகங்கள் பலவற்றைச் செய்விக்கும் முயற்சியில் ஈடுபட்டார். பூமாதேவி சமேதரான மகா விஷ்ணு, இலக்குமி, வள்ளி, தெய்வஞானை சமேத சுப்பிரமணியர், வைரவர், நவக்கிரகங்கள், சண்டேஸ்வரி ஆகிய விக்கிரகங்களை அவர் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வந்து அவை பிரதிஷ்டை செய்யப்பெற்றுச் சுற்று பிரகார மண்டபம் புதிதாக அமைக்கப்பட்டதோடு, 1926 ஆம் ஆண்டிலே மகா கும்பாபிசேகம் நடைபெற்றது. சைவாகம விதிகளுக்மைய நிர்மாணிக்கப் பட்டுள்ள இக்கோயிலின் இராசகோபுரம் 51.5 அடி உயரமும், 17.5 அடி விட்டமுங் கொண்டது.

தைப்பொங்கல், சிவராத்திரி, மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்பு, விசாகப்பொங்கல், நவராத்திரி, மகாநோன்பு, தீபாவளி, கந்தஷஷ்டி, சோமவாரம், சுமங்கலி பூசை, மகாலட்சுமி பூசை, பிள்ளையார் கதை, திருவெம்பாவை, திருவாதிரை, ஏகாதசி ஆகிய தினங்களிலே சிறப்பு விழாக்கள் நடைபெறுகின்றன. இவற்றோடு சந்தான கோபாலர் உற்சவமும், கேதாரகௌரி விரதமும் இங்கு சிறப்பாக நடைபெறுகிறது. வருடத் திருவிழாக்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 15 நாட்கள் நடைபெறுகின்றன. மகாமாரியம்மன் ஊர்வலத்தோடு திருவிழாக்கள் தொடங்கும். அதற்கடுத்த நாளில் குளிர்த்தி, பிள்ளையார் பூசை, கிராம சாந்தி, கொடியேற்றம் என்பன நிகழும். தேர், தீர்த்தம், பூங்காவனம், சண்டேஸ்வரி பூசை, வைரவர் மடை ஆகியவற்றோடு திருவிழாக்கள் நிறைவுறும். தற்போது 15 பேர் கொண்ட தர்மகத்தா சபையே இக்கோயிலைப் பராமரிக்கிறது.

### கலட்டி எச்சாட்டி மகா மாரி யம்மன் கோவில் (13)

1828 இல் வேப்பமர நிழலில் அம்மனை உருவகித்து வழிபாடு நடக்கிறது. முருகர் மாப்பாணர் என்பவர் கலட்டிச் சந்தியிலிருந்து வந்து கொண்டிருந்த போது வேப்பமரத்தடியில் ஒரு பெண் தலையில் மொட்டாக்கு இட்டபடி நின்று, ஓ....... ஓ......... வெப்பம் தாங்கமுடியவில்லையே என்று சொல்வதைக் கேட்டு நிமிர்ந்தபோது உடனே அவ்வுருவம் மறைந்ததாகவும் அது அம்மனின் திருவிளையாடலெனக் கண்டு அவ்விடத்தில் வழிபாட்டினை ஆரம்பித்ததோடு ஆலயக் கிணறும் வெட்டுவித்தாரென அறியப்படுகிறது. அதன் பின்னர் 1981 இல் ஆலயத்தின் முன் மண்டபங்கள் அமைக்கப் பெற்று பின்னர் படிப்படியாக கோயில் கட்டமைப்பு வளர்ச்சி பெற்றது.

திரு.சி.ஐயாத்துரை குடும்பத்தினர், ஈ.பி.இராசையா குடும்பத்தினர் இதில் முக்கிய பங்கு வகித்துள்ளனர். ஆமரர் வைத்திலிங்கம் தம்பர், வைத்திலிங்கம் அருமைநாயகம், தம்பர் சின்னத்தம்பி ஆகிய மூவரும் 1905 ஆம் ஆண்டு அறங்காவலர்களாக இருந்தனர். இன்று ஒரு மகாசபை, பஞ்சகர்த்தா சபை என்பன ஆலயத்தைப் பரிபாலிக்கின்றன. தலைவராகக் கலாநிதி.க.குணராசா உள்ளார். ஆடி மாதத்தில் 15 தினங்கள் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது.

### நாயன்மார்கட்டு இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் (32)

பேச்சியம்மன் என்ற மறுநாமத்துடன் அருள்பாலித்து வரும் மேற்படி அம்பாளின் ஆலயம் 1932 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டதாகும். திருவுளச்சீட்டு குலுக்கியே ஆரம்பத்தில் பேச்சி அம்பாள் என்ற பெயர் தெரிவுசெய்யப்பட்டு அப்பெயரிலேயே அம்பாளைப் பூஜித்து வரலாயினர்.

ஆறுமுகம் ஐயா என்பவராலேயே ஸ்தாபிக்கப்பட்ட இக்கோயிலில் ஆடிப்பூரத் தினத்தன்று

தீர்த்தோற்சவம் இடம்பெறும் விதத்தில் கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெற்று வருகின்றது. பரிபாலன சபையினாலேயே இவ்வாலயம் தற்போது பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

### நல்லூர் ஸ்ரீ வாலையம்மன் ஆலயம் (33)

வாலா பரமேஸ்வரி எனும் மறுநாமத்தைக் கொண்டுள்ள மேற்படி ஆலயம் 1875 ஆம் ஆண்டு வைத்திய கலாநிதி. ஆறுமுகம் முத்து என்பவரினாலேயே ஸ்தாபிக்கப்பட்டதாகும். மாசி மாதத்தில் வருடாந்த அலங்காரத் திருவிழா 11 நாட்கள் இடம்பெறும். சிவராத்திரி, கௌரி விரதம், ஆடிப் பூரம், வைகாசி விசாகம், நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய தினங்களில் விசேட திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன.

நவராத்திரி விஜயதசமி தினத்தன்று மாலை வரலாற்றுச் சிறப்புமிக்க சட்ட நாதர் சிவன் மேற்படி அம்மன் ஆலயத்திற்கு வருகை தந்து வாழை வெட்டும் வைபவம் வருடா வருடம் நடைபெற்று வருகின்றது. இவ்வாலயம் தற்போது பரிபாலன சபையினாலேயே பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

### ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் (34)

பேச்சி அம்மன், பேத்தி அம்மன் என்ற நாமங்களால் அழைக்கப்படும் மேற்படி ஆலயம் 1855 ஆம் ஆண்டளவில் தில்லையம்பலம் செல்லையா என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். 1931 ஆம் ஆண்டில் சிறிதாகவும், பூசைக்கிரமமின்றியும் இருந்த அம்பாள் ஆலயத்தை ஆகம விதிப்படி கட்டி மூலமூர்த்தி உற்சவ மூர்த்தி ஆகியன பிரதிட்டை செய்யப்பட்டு மகா கும்பாபிசேகம் செய்யப்பட்டு இருகாலப் பூசைகள் நடைபெற்று வர ஆரம்பித்தன. இவரது காலத்திலேயே ஆலயத்தின் சகல மண்டபங்கள், மடப்பள்ளி, வாகனசாலை, தீர்த்தக்கிணறு மற்றும் மணிக்கோபுரம், கோபுர வாசல் முதலியனவற்றையும், வெளிப்புறத்தில் ஏற்கனவே இருந்த கேணியைக் கிணறாகவும் மாற்றி அமைத்தார்.

பங்குனித்திங்கள், ஆடிப்பூரம், கார்த்திகைத் திங்கள், நவராத்திரி, திருவெம்பாவை முதலியன விசேட விழாக்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. மேற்படி ஆலயத்தைப் பரிபாலனம் செய்து வந்த சபாபதிப்பிள்ளையின் புதல்வராகிய சண்முகலிங்கம் என்பவரே இவ்வாலயத்தின் தற்போதைய அறங்காவலராவார்.

### அரியாலை பிரம்பன்குளம் மகாமாரி அம்மன் ஆலயம் (37)

1824 ஆம் ஆண்டு பங்குனி மாதம் பூச நட்சத்திரத்தன்று மேற்படி ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆடிப் பூரத்தினத்தன்று இடம்பெறும் தீர்த்தத் திருவிழாவுக்கு 14 நாட்களுக்கு முன்னர் கொடியேற்றத்துடன் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாட்கள் நடைபெற்று வருகின்றது. பரிபாலன சபை ஒன்றினாலேயே இவ்வாலயம் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

### ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயம் (44)

நல்லூர்க் கந்தனின் தேர் ஓடும் வீதியில் எழுந்தருளி அருள் பாலித்து வருகின்ற மேற்படி அம்மன் ஆலயம் 1883 ஆம் ஆண்டு ஐயாத்துரை ஐயர் என்பவராலேயே ஸ்தாபிக்கப்பட்டது என்பது வரலாறு. இவ்வாலயத்தில் மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், சந்தான கோபாலர், வைரவர், நந்தி, பலிபீடம் என்பன அமைந்துள்ளன. இங்கு 3 காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. விசேட தினங்களாக தைப்பொங்கல், சிவராத்திரி, பங்குனித் திங்கள் ஆகியன இடம்பெற்று வருகின்றன. முன்னர் கும்பாபிசேகம் நடைபெற்ற தினமான ஆனி ரோகினி நட்சத்திரத்தில் காலை சங்காபிசேகமும் மாலையில் அம்பாள் திருவூஞ்சலும் இடம்பெறுவது வழக்கம். ஆடிப்பூரம், திருவிழா உற்சவ காலங்களில் மாலை கதாப்பிரசங்கங்கள் இடம் பெறுகின்றன. பரம்பரைக் கோயிலாகிய இக்கோயிலின் தற்போதைய அறங்காவலர் திரு.இ.சண்முகநாத சர்மா என்பராவார்.

### கொட்டடி மீனாட்சி அம்மன் கோவில் (45)

கி.பி. 1790 ஆம் ஆண்டளவில் வைத்திலிங்கச் செட்டியாரால் பண்ணையில் அமைக்கப்பட்ட மாரியம்மன் கோயில், வைத்தீஸ்வரன் கோயிலின் எல்லைக் கோயிலாக மட்டுமன்றி அங்கிருந்து மக்கள் அனைவரையும் காக்கும் காவல் தெய்வமாகவும் வழிபடப்படுகின்றது. இதனை மீனாட்சி அம்மன் கோயில் என்றும் அழைப்பது வழக்கம்.

எனினும் இங்கு குடிகொண்டிருக்கும் இறைவன் மாரியம்மன் ஆகும். இதனாலேயே பண்ணை முத்துமாரியம்மன் கோயிலெனவும் அழைக்கப்படுவதுண்டு.

சுவாமி கொடியேற்றத்திற்கு முதல் வரும் செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமைகளில் பண்ணை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலில் விசேட அபிசேகம், பூசைகள் இடம்பெறுவதுடன் இங்கு (வைத்தீஸ்வரன் கோவிலில்) எழுந்தருளியுள்ள முத்துமாரி அம்மனுக்கு விசேட உற்சவமும் நடைபெறும். இவை யாவும் இவ்வாலயத்தின் பரிவார தெய்வங்களாக இருந்து இக் கிராமத்தைக் காக்கும் தெய்வங்கள், மகோற்சவ காலத்திலும் இடையூறுகள் இன்றிக் காக்கவேண்டும் என்பதற்கான வழிபாடாகும்.

சித்திரா பௌர்ணமியைத் தீர்த்தத் தினமாகக் கொண்டு 15 தினங்கள் அலங்காரத் திருவிழா நடைபெற்று வரும் இக்கோயிலின் தற்போதைய தர்மகர்த்தா திரு.கந்தப்பச்செட்டியார் வைத்திலிங்கச் செட்டியாராவார்.

**கைலாசநாதர் சிவன் கோயில் (01)**

நல்லூர் பிரதேசத்தில் நல்லை ஆதீனத்திற்கு அருகில் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி கோயில், நல்லூர் சிவன் கோயில், பித்தளைச் சிவன் கோயில் ஆகிய மறுபெயர்களுடன் மிளிரும் மேற்படி ஆலயம் 27.06.1915 ஆம் ஆண்டு திரு.நா.வே.கார்த்திகேயக் குருக்களினால் ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

தைப்பொங்கல், தைப்பூசம், மாசி மகம் மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்பு, ஆனி மூலம், ஆடிப்பூரம், நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய நாட்களில் விசேட திருவிழாக்கள் நடைபெறும். ஐப்பசி மாத்ததில் நிகழும் இயம சங்கார விழா மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இத்தேவஸ்தானத்தின் பரிபாலகராக ஸ்ரீ கிருஸ்ணானந்த சர்மா செயற்பட்டு வருகின்றார்.

**சட்டநாதர் சிவன் கோயில் (06)**

ஸ்ரீமத் நல்லைநாயகி சமேத ஸ்ரீ நல்லைநாத சுவாமி கோயில் என்னும் நாமத்துடன் இயங்கிவரும் இவ்வாலயம் நல்லூர் இராசதானியின் வடக்குத் திசையில் காவல் தெய்வமாக சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியினால் கி.மு.950 ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டு பறங்கியரால் அழிக்கப்பட்ட போதிலும் 1800 ஆம் ஆண்டளவில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மீளவும் குடிசையில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1852 ஆம் ஆண்டளவில் வண். மேற்கு சீனிவாசகம்பிள்ளை தம்பையாபிள்ளை அவர்களினால் தற்போதைய ஆலயம் மீளப் புனரமைக்கப்பட்டது.

பங்குனி உத்தரத் தினத்தன்றும் ஆடிப்பூரத் தினத்தன்றும், தீர்த்தோற்சவங்கள் நடைபெறக் கூடியதாக முறையே சிவன், அம்மன் திருவிழாக்கள் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடை பெற்று வருகின்றன. சிவராத்திரி, நவராத்திரி, கௌரி நோன்பு, கஜமுக சங்காரம், சூரஸம்ஹாரம் ஆகிய விசேட திருவிழாக்களும் இங்கு இடம் பெற்று வருகின்றன.

மாநோன்பு தினத்தன்று சட்டநாதர் சிவன் ஆடியபாத வீதி வழியாக வாலையம்மன் கோயிலுக்கு விஜயம் செய்து வாழைவெட்டும் நிகழ்வும் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. தற்போது இவ்வாலயத்தினைப் பரம்பரை வழிவந்த தர்மகர்த்தாவின் தலைமையிலான அபிவிருத்திச் செயலகமே நிர்வகித்து வருகின்றது.

**வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் (17)**

செட்டியார் சிவன் கோவில், பட்டணத்துச் சிவன் கோயில் எனும் மறுநாமங்களுடன் அருள் பாலித்து வரும் மேற்படி ஆலயம் கி.பி.1790 ஆம் ஆண்டளவில் கோபாலச் செட்டியாரின் மகனான வைத்திலிங்கச் செட்டியாரால் தாபிக்கப்பட்டதாகும். கோபாலச் செட்டியார் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தமது மனைவியாரோடு சோழ நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து, இங்கே குடியிருந்து ஒல்லாந்த அரசினரின் மொழி பெயர்ப்பாளராக இருந்த கொச்சிக்கணேசையர் என்னும் பிராமணரிடம் உத்தியோகம் பார்த்து வந்தார். பின்னர் ஐயருடன் ஏற்பட்ட மனக்கசப்புக் காரணமாக செட்டியர் உத்தியோகத்திலிருந்து விலகிப் பலசரக்கு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

செட்டியாரின் மகனான வைத்திலிங்கம் முத்துக்குளிப்பைக் குத்தகைக்குப் பெற்றும், யானை வர்த்தகத்தின் மூலமும் பெரும் பணம் சம்பாதித்து தமக்கென ஒரு மாளிகையை அமைக்காது கூழங்

கைத் தம்பிரான் செட்டியாரின் ஆலோசனைக்கமை வாக வைத்தியநாதப் பெருமானுக்கும் தையல் நாயகித் தாயாருக்கும் யாழ்ப்பாணத்தில் ஆலயம் அமைத்தார். சைவ ஆலயங்களை இடித்தும் சைவசமயத்தினரைத் துன்புறுத்தியும் தங்கள் சம யத்தைப் பரப்பிய ஒல்லாந்தர் மத்தியில் சைவத் தையும் தமிழையும் வளர்க்க முற்பட்ட வைத்தி லிங்கச் செட்டியார் தனது செல்வாக்கினைப் பயன் படுத்தி வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலைக் கட்டுவதற்கு ஒல்லாந்த அரசிடம் அனுமதியைப் பெற்றார். 1787 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 1790 இல் வேலையினைப் பூர்த்தி செய்து வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரப் பெருமானுக்கான பரிவாரக் கோயில்களையும் அமைத்து அதே ஆண்டில் (1790) கும்பாபிஷேகமும் செய்வித்தார். நித்திய நைமித்தி யங்கள் கிரமமாக நடை பெற்றுவரச் செய்தார்.

நல்லை நகர் ஆறுமுக நாவலர் தமது முதற் பிரசங்கத்தை இவ்வாலய வசந்த மண்டபத் திலேயே செய்துள்ளார். அவருக்குப் பின்னர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை புரா ணப் பிரசங்கம் செய்தார். பின் சங்கரசுப்பையா சுவாமிகள் செய்து வந்தார். நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன நிறுவுநர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் ஸ்வாமிகள் துறவு பூணும் வரை முத் தமிழ்மணி சி.எஸ்.மணிபாகவதர் என்ற பூர்வாஸ்சிரம நாமத்துடன் சமயப் பிரசங்கங்களை இவ்வாலய வசந்த மண்டபத்திலே செய்து வந்தார்கள். வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் வசந்த மண்டபம் சைவத்துக்கும் தமிழுக்கும் நிலைக்கள னாக விளங்கியுள்ளது. கூழங்கைத் தம்பிரான் வைத்தீஸ்வரப் பெருமான் மீது ஒரு தனிக்கவி பாடியுள்ளார். கொச்சிக் கணேசையர் தையல்நாயகி மீது ஊஞ்சலும், அராலி விஸ்வநாத சாஸ்திரியார் வண்ணைக் குறவஞ்சியும், வட்டுக்கோட்டை கணபதி ஐயர் வைத்திலிங்கக் குறவஞ்சியும் பாடியுள்ளார்கள்.

பங்குனி உத்தரத்தில் தீர்த்தத் திருவிழா நடைபெறும் விதத்தில் சிவனது மஹோற்சவமும் ஆடிப்பூரத் தினத்தன்று தீர்த்தத் திருவிழா நடை பெறும் விதத்தில் தேவி மஹோற்சவமும் வருடா வருடம் நடைபெற்றுவரும் இவ்வாலயத்தின் அறங் காவலராக கந்தப்பச் செட்டியர் வைத்திலிங்கச் செட்டியார் உள்ளார்.

**ஸ்ரீ பூதநாத சுவாமி தேவஸ்தானம் (27)**

சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னையின் தந்தையான விதியபண்டாரவின் நினைவாகச் சங்கிலிய மன்னனால் தாபிக்கப்பட்ட மேற்படி தேவஸ்தானத்திற்கு காயாரோகண பூதநாதர், பூத வராயர் கோயில் எனும் மறுநாமங்களும் உள்ளன. தை மாதத்தில் ரேவதி நட்சத்திரத் தினத்தன்று அலங்காரத் திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாட்கள் நடைபெற்று வருகின்றது.

...ழ மன்னன் சங்கிலியனுடனும், நல்லூர் இராஜதானியுடனும் நெருங்கிய தொடர்புடைய கார ணத்தினாலேயே மாநகர சபை எல்லைக்கு வெளியே இவ்வாலயம் அமைந்திருந்த போதிலும் இம்மலரில் இடம் பெற்றுள்ளது. மகாசிவராத்திரி, மாநோன்பு, திருக்கார்த்திகை, திருவாதிரை ஆகியன விசேட திருவிழாக்களாக நடைபெற்று வருகின்றன. சிவஸ்ரீ.ப.இராமலிங்ககுருக்கள் அவர்களே இவ்வா லயத்தின் தற்போதைய அறங்காவலராக உள்ளார்.

**யாழ். கோட்டை முனீஸ்வரன் கோயில் (25)**

முனியப்பர் கோயில் என மறுபெயர் கொண்டுள்ள இவ்வாலயம் 1931 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத் தில் முனியப்பரைக் காவல் தெய்வமாக வழிபட்ட னர். கணபதி கந்தையா என்பவரே இக்கோயிலைத் தாபித்தவராவார். ஆனி மாதத்து புனர் பூச நட்சத் திரத்தன்று அலங்காரத் திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெற்று வருகின்றது. தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரை பெளர்ணமி, நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய முக்கிய திருவிழாக்களும் இங்கு இடம்பெற்று வருகின்றன. மயில்வாகனம் ஞானசேகரம் என்ப வரே இவ்வாலயத்தின் அறங்காவலராவார்.

**ஆனைப்பந்தி ஸ்ரீ சிவகுருநாத சுவாமி கோயில் (48)**

1849 ஆம் ஆண்டளவில் திரு.க.மாரிமுத்து என்பவரால் ஆனைப்பந்தியில் தாபிக்கப்பட்ட மேற் படி ஆலயத்தின் ஆவணி மாதத்தில் அலங்காரத் திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றது. சரஸ்வதி பூஜை, கந்த ஷஷ்டி, திருவெம்பாவை ஆகிய முக்கிய விழாக்க ளும் நடைபெற்று வரும் இவ்வாலயத்தினை தர்ம கர்த்தாக்கள் மூவரே தற்போது நிர்வகித்து வருகின்றனர்.

**செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் (24)**

ஸ்ரீ கதிரேசன் கோயில் எனும் மறு நாமத்தைக் கொண்டியங்கும் மேற்படி ஆலயம்

1855 ஆம் ஆண்டளவில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் தாபிக்கப்பட்டதாகும். பிரதி வெள்ளிக் கிழமைகளிலும், ஒவ்வொரு மாதம் கார்த்திகை விசாகம், ஷஷ்டி முதலிய தினங்களிலும் அபிசேகமும் விசேட பூசைகளும் சுவாமி உள் வீதி உலாவரும் நிகழ்வும் இடம்பெற்று வருகின்றன.

ஒரே சமயத்தில் ஆயிரம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கக்கூடிய இடவசதி கொண்ட அன்னதான மண்டபம் ஒன்று கோயிலின் பின்புறமாக அமைக்கப்பட்டுள்ளது. அறங்காவலர் சபையினாலேயே இவ்வாலயம் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

**ஸ்ரீ பால கதிர்காமம் தேவஸ்தானம் (26)**

1895 ஆம் ஆண்டளவில் தியாகராஜக் குருக்கள் குமாரசாமிக் குருக்களால் உருவாக்கப்பட்ட மேற்படி ஆலயத்தில் கதிர்காமத்தில் மஹோற்சவம் நடைபெறும் நாட்களில் திருவிழா நடைபெற்று வருகின்றது. ஆடிவேல் விழா 3 தினங்கள் நடைபெறுவது சிறப்பானதொரு நிகழ்வாகும். இக்கோயிலில் 11 அடி உயரமுள்ள தேவலோக ஐராவத யானை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு முதல் வருடா வருடம் இடம்பெற்றுவரும் உற்சவங்களின் போது துறை சார்ந்த ஒவ்வொருவருக்கும் பட்டம் வழங்கிக் கௌரவிப்பது வழக்கமாயுள்ளது. சௌபாக்கிய சசிகுமாரக் குருக்கள் என்பவரே இவ்வாலயத்தின் தற்போதைய அறங்காவலராவார்.

**கொண்டலடி வைரவர் கோயில் (07)**

ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்னர் தற்போதைய அறங்காவலரது மூதாதையரினால் தாபிக்கப்பட்ட இவ்வாலயத்தில் பங்குனி மாதத்தில் 10 தினங்கள் அலங்காரத் திருவிழா நடைபெறுகிறது. நல்லூர் சின்னத்தம்பி புலவரால் பாடப்பெற்ற இவ்வாலயம் தற்போது அறங்காவலர்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

**ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம் (38)**

அப்பாக்குட்டி விதானையாரால் 1935 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப் பகுதியில் தாபிக்கப்பட்ட மேற்படி ஆலயத்தில் விசாகப் பொங்கல், திருவெம்பாவை, சிவராத்திரி, நவராத்திரி ஆகிய தினங்களில் விசேட திருவிழாக்கள் நடைபெறுகின்றன. திருவெம்பாவையின் போது திருவாதவூரடிகள் பூராணப் படிப்பு ஆரம்ப காலம் முதல் இன்று வரை நடைபெற்று வருகின்றது. ஆனி மூல நட்சத்திரத் தினத்தன்று அலங்காரத் திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற்று வருகிறது. இத்தேவஸ்தானம் பரிபாலன சபையினாலேயே தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

**பண்டாரமாளிகை ஆதிநரசிங்க ஆதி வைரவர் ஆலயம்(45)**

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சொந்தமானதும், தற்போது யாழ்ப்பாண மாநகர சபையினால் குத்தகைக்குப் பெறப்பட்டு பெரும்பாலான மாநகர சபை அலுவலகங்கள் அமைக்கப்பெற்றிருக்கும் பண்டார மாளிகை வளவினுள் அமைந்திருக்கும் மேற்படி ஆலயம் நல்லூர் இராசதானியின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்ததாகக் கருதப்படுகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாண மன்னரிடம் அடைக்கலம் புகுந்த பண்டாரா என்பவர் நல்லூர் வீரமாகாளியம்மன் ஆலயத்தில் காவற் கடமையில் ஈடுபட்டிருந்த சமயம் அவரது துப்பாக்கி தவறுதலாக வெடித்தமையினால் மரணமடைந்த அவரது பூதவுடல் மேற்படி வளவில் அடக்கம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது, என மூதறிஞர் அமரர் க.சி.குலரத்தினம் அவர்கள் 1990 களில் மேற்படி ஆலயத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் போது குறிப்பிட்டிருந்தார்.

மாநகரசபை உத்தியோகத்தர்களைக் கொண்ட பரிபாலன சபையானது, இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்து பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாநகரசபையின் ஒவ்வொரு பிரிவுகளின் சார்பாகவும் விசேட பூசைகள், வழிபாடுகள் நடாத்தப்பெற்று வருகின்றன.

நவராத்திரி விழாவும், மாநோன்பும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரும் இவ்வாலயத்தின் தற்போதைய பரிபாலனசபைத் தலைவராக நீர்வேலைப் பொறியியலாளரான திரு.ச.ஸ்கந்தராஜேஸ்வர சர்மா அவர்கள் பணியாற்றி வருகிறார்.

**வண்ணை ஐயனார் கோயில் (20)**

கி.பி. 1790 ஆம் ஆண்டளவில் வைத்திலிங்கச் செட்டியாரால், வண்ணார்பண்ணை மேற்கிலுள்ள

ஐயனார் கோவில் ஸ்ரீ பூரணைப் புட்கலை சமேத ஸ்ரீ அரிகரப்புத்திர ஐயனார் என்று அழைக்கப்படும் மேற்படி ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. வத்தீஸ் வரன் கோவிலில் சிவன் மகோற்சவத்தின் போது பூர்வாங்கமான சில கிரியைகள் பரிவாரக் கோவில் களில் இடம் பெறுவது இக்கோவிலின் பாரம்பரிய மாகும். மாசி மாதத்தில் கொடியேற்றம் ஆரம்ப மாகும் முன்னர் வரும் தைபறுவத்திற்கு வைத்தீஸ் வரன் கோவிலில் உள்ள பூரணை புட்கலை சமேத எழுந்தருளும் அரிகரப் புத்திர ஐயனார் சுவாமி யானை வாகனத்தில் ஐயனார் கோவிலுக்குச் சென்று காப்புக் கட்டும் நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கமாகும்.

திரு. கந்தப்பச்செட்டியார் வைத்திலிங்கச் செட்டி யாரே இவ்வாலயத்தின் அறங்காவலராக அதனை நிர்வகித்து வருகிறார்.

**வண்ணை வைத்தீஸ்வரன் காளி கோயில் (22)**

வண்ணை மேற்கில் ஐயனார் கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள பிடாரி அல்லது பத்திரகாளி என்றும் அழைக்கப்படுகின்ற மற்றுமொரு பரிவாரக் கோயிலான இக்காளிகோவில் கி.பி. 1790 ஆம் ஆண்டளவில் கோபாலச் செட்டியார் மகனான வைத்திலிங்கச் செட்டியாரால் ஸ்தாபிக்கப்பட்ட தாகும். சிவன் மகோற்சவத்தின் முன்னர் வரும் மாசிப் பூரணைக்கு சிவன்கோவிலில் இருக்கும் காளியம்பாள் எழுந்தருளி, பரிவாரக் கோயிலான காளி கோவிலுக்கு இடபவாகனத்தில் ஊர்வலமாகச் சென்று காப்புக்கட்டிவரும் நிகழ்ச்சி நடைபெற்று வருவது வழக்கம்.

நவராத்திரி திருவிழாவில் கடைசி நாளான விஜயதசமி அன்று சிவன் கோவிலின் சந்திரசேகர மூர்த்தம் குதிரை வாகனத்தில் பரிவாரக் கோவி லான காளி கோவிலுக்கு வந்து வாழை வெட்டித் திரும்பும் நிகழ்ச்சியும் இங்கு நடைபெற்று வருகி றது. ஆவணி மாதம் அச்சுவினி நட்சத்திரத்தை கடைசி நாளாகக் கொண்டு 15 தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகிறது. தற்போது புனரமைக்கப்பட்டு வரும் இவ்வாலயத் தின் தர்மகர்த்தா வை.கந்தப்பச்செட்டியாராவார்.

**காளியம்பாள் தேவஸ்தானம் (47)**

ஸ்ரீ விஸ்வேஸ்வரி அம்மன் கோயில், ஸ்ரீ காமாட்சி அம்மன் கோயில் ஆகிய நாமங்களுடன் கன்னா திட்டியில் அமைந்திருக்கும் மேற்படி ஆலயம் தாண் டவமூர்த்தி பத்தர், பழனியப்பா பத்தர் என்பவரால் 1800 ஆம் ஆண்டளவில் தாபிக்கப்பட்டது.

மாசி மாதத்தில் கொடியேற்றம் நிகழ்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. நவராத்திரி விழா இங்கே சிறப்பாக நடைபெறுகிறது. விஸ்வ பிரம்ம சுவர்ணரிஷிகோத்ர பண்பாட்டு விழுமியங் களைப் பேணிக் காத்து வருவதோடு சக்தி வழி பாட்டை ஊக்குவித்தும் வரும் இவ்வாலயம் பரி பாலன சபையினாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

**வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம் (15)**

மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள மிகப் பிரபல்யம் வாய்ந்த மேற்படி ஆலயம் 16ஆம் நூற்றாண்டில் பத்மசாலிய வைஸ்ணவ செட்டியாரி னால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். புரட்டாதி மாத பூர்வபக்ஷ பிரதமை அத்த நட்சத்திரத் தினத்தன்று வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தினை ஆதீன மகாசபையே தற் போது நிர்வகித்து வருகின்றது.

**ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்**
**போற்றலுள் எல்லாம் தலை**

- குறள் 891

# யாழ் மாநகர ஆலயங்கள்



பண்டார வளவு ஆதி நரசிங்க வைரவர் ஆலயம்



கன்னாதிட்டி காளிகாம்பாள் கோயில்



குருநாத சுவாமி கோயில்



கடையிற் சுவாமி கோயில்



கடையிற் சுவாமிகள் குருவார அன்னசத்திர சிவன் ஆலயம்



புங்கங்குளம் வில்லையடி ஸ்ரீ நாகபூசணிஅம்பாள்

படங்கள் கலாநிதி க. குணராசா

# நல்லைக்குமரன் ஆய்வியல்


- நல்லூர் இராசதானியின் வரலாற்று ஆலயங்கள்
  – பேராசிரியை கலாநிதி கலைவாணி இராமநாதன்
- புலநிச் சிவன் கோயில்கள் – வெள்ளவத்தை ஸ்ரீ. குலசபாநாதன்
- நல்லூர் இராஜதானி – கலாநிதி க. குணராசா
- ஈழத்துத் திருப்புகழ் – ஒரு குறிப்புரை –பேராசிரியர் வி. சிவசாமி
- சுப்பிரமணிய பராக்கிரமம் – கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
- முருக வழிபாட்டில் மரபுகளும் சம்பிரதாயங்களும்
  – திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
- நல்லூர் முருகன் அலங்காரச் சித்திரத் தேர்–அமைப்பும்வரலாறும்
  – திரு. வேலுப்பிள்ளை அம்பிகைபாகன்
- முருகன் திருவருளை நிலைநாட்டிக் கந்தசஷ்டி நோற்கும் யாழ்ப்பாணத்துப் பெண்களின் பக்தி மேம்பாடு
  – வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
- இந்திய நாட்டு தமிழகக் கொடைக்கானலில் சேர் பொன் இராமநாதன் அமைத்த குறிஞ்சி ஆண்டவர் கோயில்
  –திரு ப.கணேசலிங்கம்
- நல்லூர் கந்தசுவாமி உற்சவங்கள் – திரு வை. ஜெகதீஸ்வரசர்மா

# நல்லூர் இராசதானியின் வரலாற்று ஆலயங்கள்

- பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதன்

கி.பி.13ம் நூற்றாண்டிலிருந்து கி.பி 10ம் நூற்றாண்டு வரை நல்லூர், யாழ்ப்பாண அரசின் இராஜதானியாக விளங்கியது. சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் வரலாற்றுப் பெருமை மிக்க நல்லூர் இராஜதானியின் நினைவுச் சின்னங்கள் முறையாகப் பேணப்படவில்லை. பல நினைவுச் சின்னங்கள் அழிந்து போயின. கி.பி 14ம் நூற்றாண்டிலே யாழ்ப்பாண அரசில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆதிக்கம் மிக உன்னத நிலையில் காணப்பட்டது. அவர்கள் சேதுகாவலர் என்ற பட்டத்தைக் கொண்டிருந்தார்கள். [1]இம் மன்னர்கள் சிவ சின்னமாகிய நந்திகளின் வடிவினைத் தமது அரச சின்னமாகவும், அரச முத்திரைகளுள் ஒன்றாகவும் பயன்படுத்தியமை அவர்களது சைவ கலாசார அபிமானத்துக்குச் சிறந்த உதாரணமாகும். அக்காலம், ஈழத் தமிழர்களின் வாழ்விலே சமயவாழ்வும் ஆலயப் பண்பாடும் சிறப்பிடம் பெற்றிருந்தது. நல்லூர், மாவிட்டபுரம், கீரிமலை, வெருகல், சித்தாண்டி, திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் போன்ற பல ஆலயங்கள் "தேசத்துக் கோயில்கள்" எனக் கொள்ளத்தக்க வகையில் சிறப்படைந்திருந்தன. [2]நல்லூர் இராஜதானியிலும் சிவன், முருகன், அம்மன், வைரவர் முதலிய தெய்வங்களுக்குக் கோயில் நிர்மாணிக்கும் முறையும் ஐயனார், நாகதம்பிரான், கண்ணகி, பூதராயர் முதலிய கடவுள் வழிபாடுகளும் வளர்ந்து வந்துள்ளன.

இவைபற்றிய தொன்மையான வரலாறுகளை அறிவதற்குப் புராதன தொல்லியற் சான்றுகள், வரலாறும் ஐதீகங்களும் கலந்த இலக்கிய வரலாற்று மூலங்கள், செப்பேடுகள் சேது நாணயங்கள், முதுலியன துணை புரிகின்றன. நாயன்மார்கட்டு சாசனம், பதவியா வடமொழி சாசனம், கல்வியங்காடு செப்பேடுகள், இலக்கியங்களில் யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமலை, வையா பாடல், மற்றும் கோகில சந்தேச போன்ற சிங்கள தற்கால வரலாற்றுத்துறை ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளும் பெருமளவில் உறுதுணை செய்கின்றன. சைவத் தமிழ் கலாசாரத்தின் கேடயமாகப் புராதன காலத்தில் விளங்கிய நல்லூர் கி.பி 1620இல் அன்னியரிடம் தனது சுதந்திரத்தை இழந்தது. போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் மாறி மாறி நல்லூரில் அதிகாரம் செலுத்தினர். ஆங்கில அரசின் காலத்தில், தற்போது நாம் காணும் நல்லூர், திருநெல்வேலி, நாயன்மார் கட்டு, வண்ணார்பண்ணை, கல்வியங்காடு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசமாக விளங்கியது. யாழ்ப்பாண அரசின் இராஜதானியாக நல்லூர் விளங்கிய காலத்திலிருந்து வளர்ச்சியடைந்த சைவத்தமிழ்ப் பாரம்பரியம் நல்லூர் இராஜதானியை மையமாகக் கொண்டே வளர்ந்தது. நல்லூர் பழைமை மிக்க இந்துக் கோயில்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சி புரிந்த காலத்தில் நல்லூர் இராஜதானியில் காணப்பட்ட சைவாலயங்கள் பற்றி யாழ்ப்பாண வைபவமாலை பின்வருமாறு கூறுகின்றது.

**தன்னுடன் வந்த காசிப் பிராமணரான கங்காதர ஐயரும் அன்னபூ ரணி அம்பாளான அவரது பத்தினியும் வாசம் செய்ய அக்கிரசாரமும் உண்டாக்கி கீழ்த் திசையில் பாதுகாப்பாக வெயிலுகந்த பிள்ளையாரும் மேற்றிசைக்கு வீரமாகாளி அம்மன் கோயிலையும் வடதிசைக்குச் சட்டநாதேஸ்வரர் கோயிலையும், தையல்நாயகி அம்மன் கோயிலையும், சாலை விநாயகர் கோயில்களையும் கட்டுவித்துத் திலகவதியார் என்னும் தனது பத்தினியுடன் கிரகப் பிரவேசம் செய்து வாழ்ந்திருந்தார் [3]** என்பதாகும்.

இங்கு குறிப்பிடப்படும் கோயில்கள் முதலாம் சிங்கையாரியன் காலத்துக் கோயில்கள் எனப் பேராசிரியர் .சி.பத்மநாதன் குறிப்பிடுவார். [4]இதனைக்

கருத்தில் கொண்டு பல காலம் அரசர் இல்லாது இருந்த யாழ்ப்பாணத்துக்கு பாண்டிமழவன் என்பான் மதுரை சென்று சிங்கையாரியனை அழைத்து வந்தான் என்பதனால், இப்படி அழைத்து வரப்பட்டவனே விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி எனவும் இது 'விஜய காலிகன்' என்பதன் தரிப்பாகும் எனவும் கலாநிதி க.குணராசா, சுவாமி ஞானப்பிரகாசசர், செ.இராசநாயக முதலியார், கலாநிதி.கா.இந்திரபாலா போன்றோரது கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு கூறுவர்[5].

சோழமன்னர்களது ஆவணங்களின் படி வன்னியர் பற்றியும் ஏராளமான குறிப்புக்களைக் கலாநிதி. சி.பத்மநாதனும் எடுத்துக் காட்டுவதனால் வையா பாடல் கூறும் வன்னியர் குடியேற்றம் ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் இப்பகுதியில் ஏற்பட்டிருக்கலாம். யாழ்ப்பாண வைபவ மாலை தரும் பெயர்ப் பட்டியல்களும் பாண்டி நாட்டுப் பிரதானிகள் பெயர்களை ஒத்திருப்பதனால் இப் பிரதானிகளும் பிராமணர்களும் கடல் கடந்து வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறியிருக்கலாம். இவற்றினால் ஒரு கால கட்டத்திலே தமிழகத்து நிலக்கிழார்கள் அரச ஆதிக்கம் விரும்பி வட பகுதி நோக்கித் தமது கவனத்தை திருப்பினார். இந்நிலையில் கி. பி. 12ம் 13ம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாண அரசு துரித கதியில் வளர்ச்சி பெறலாயிற்று.[6] அடுத்து கலிங்க நாட்டு மாகனது வருகையுடன் கி.பி.1215ல் பொலநறுவா அரசு வீழ்ச்சியடைந்தது. ஆகையால் இந் நடவடிக்கைகளால் வடக்கிலே தமிழர் பலம் அதிகரித்தது. அதனால் கி.பி. 1215- 1284 வரை வடபகுதியில் வடபகுதியின் தனித்துவம் வளர்ந்தது. மாகன், பாண்டியர் போன்றோர் வருகையுடன் பிரதானிகளில் ஒருவனை பாண்டிமழவன் சிங்கையாரியனை ஈழத்திற்கு அழைத்து வந்து முடிசூட்டினான். இம் மன்னனது முடிசூட்டு வைபவம் பற்றித் தமிழ் நூல்களும் உறுதி செய்யும்.[7]

எனவே விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி தவிர்ந்த அனைவரும் யாழ்ப்பாணத்தின் சிங்கைநகரைத் தலை நகராகக் கொண்ட மன்னர்கள் ஆவர். இவர்கள் காலம் கி.பி. 13ம் நூற்றாண்டு ஆகும். தென்னாட்டிலே பாண்டியராட்சி நிலைகுன்றியதும் வட பகுதியை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் திறையளிப்பதை நிறுத்தி யாழ்ப்பாண அரசைத் தனியரசாகப் பிரகடனம் செய்தனர். இவ்வம்சமே சிங்கை 'ஆரியச் சக்கரவத்திவம்சம்' எனப்பட்டது.[8] இவ்வாறு கி.பி. 1440ம் வரை இவர்களால் கட்டிக்காத்து வரப்பட்ட சுதந்திரத்தைக் கனசிங்கையாரியன் என்பான் தென்னிலங்கை மக்களிடம் பறிகொடுத்தான்.[9] ஆகையால் விஜயகூழங்கைச் சக்கரவர்த்தியே 'சிங்கையாரியன்' என்ற பெயரில் ஆரம்பத்தில் பூநகரி நல்லூரில் ஆட்சி செய்தவனாவான். காலப் போக்கிலே படையெடுப்புக்களினால் அழிந்த வன்னிப் பிரதேசத்தை விட்டு யாழ் குடாநாட்டுக்கு மாறவிரும்பித் தனது பிரதானி புவனேகபாகு என்பானிடம் கேட்டுக் கொண்டு கி.பி. 1248ல் யாழ்ப்பாண நல்லூரில் இராஜதானி அமைத்துக் கந்தவேட்குக் கோயிலிலும் எடுப்பித்தான். அதன் பின்னரே பலகுடியேற்றங்கள் யாழ்க் குடாநாட்டில் நிகழ்ந்தன எனவும் பாண்டிய மழவனால் அழைத்துவரப்பட்ட சிவன் கங்காதர் ஐயர் என்பவரால் முடிசூடப்பட்டு சிங்கையாரியன் ஆனான் எனவும் வன்னியை விட்டு யாழ்ப்பாணம் வந்து நல்லூரை இராஜதானியாக்கி யாழ்ப்பாண அரசின் நாற்புறமும் கோயில்களையும் அமைத்தான் எனவும் பின்னர் புவனேகபாகு என்பவனை மந்திரியாக்கி நல்லூரில் வசிக்கச் செய்தான் எனவும் ஆய்வாளர் சுட்டுவர்.[10]

**நல்லூர் இராஜதானி:**

யாழ்ப்பாண வைபவ மாலையில் கூறப்படும் செய்திகளில் பல வரலாற்று மயக்கங்கள் உள்ளன என்பது நவீன வரலாற்றாய்வாளர்கள் கருத்தாகும். யாழ்ப்பாண இராஜதானியாகிய நல்லூரை ஸ்ரீ.சங்க போதி புவனேகபாகு கட்டுவித்தான் என்ற யாழ்ப்பாண வைபவமாலையின் கூற்றும் இத்தகைய தொன்றாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுகின்றது. ஏனெனில் விஜய சிங்கையாரியனே யாழ்ப்பாண அரசின் நல்லூரை இராஜதானியாக்கினான் என மேல் வரும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தமிழர்கள் ஈழத்திலே பண்பாடு வளர்ச்சி மிக்கவர்களாக வாழ்ந்தனர் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் இன்று கிடைத்துள்ளன. தென்னாட்டுச் சமயப் பண்பாட்டு நாகரிகத்துக்குச் சமமான வளர்ச்சியும், கலாசாரப் பரம்பல்களும் இங்கும் காணப்பட்டன என்பதற்கு ஆனைக்கோட்டை, கந்தரோடை, வல்லிபுரம் போன்ற பகுதிகளில் பெற்ற அகழ்வாராய்ச்சியின் பெறுபேறுகள் சிறந்த சான்றுகளாகும். கி.பி.13ம் நூற்றாண்டிலிருந்து தமிழ்ச் சைவ மரபுள்ள அரசு யாழ்ப்பாணத்தில் உருவானது. செம்மை வாய்ந்த பண்பாட்டு வளர்ச்சி இவ்வரசின் காலத்தில் சிறப்பான வளர்ச்சி கண்டிருந்தது. நல்லூர் இந்த அரசின் இராஜதானியாக சிறப்புப் பெற்றதுடன் சைவத்தமிழர் பண்பாட்டுச் கலாசார மையமாகவும் திகழ்ந்தது.[11]

கி.பி 16ம் நூற்றாண்டு வரை போர்த்துக்கேயரிடம் யாழ்ப்பாண அரசு வீழ்ச்சி பெற்றதுடன் இந்த இராஜ தானியின் தொன்மைச்சின்னங்களும் அழிந்துபட்டன.

கனகசிங்கையாரியன் என்பான் யாழ்ப்பா ணத்திற்கு மீண்டும் வந்து கி.பி. 1450ல் நல்லூரைத் தலை நகராக்கினான் எனவும் அவனது மகன் பரராஜசேகரன் பின் கி.பி.1478ல் யாழ்ப்பாண அரச னாகி அவனே மேற்குறித்த நான்கு கோயில்களை அமைத்தான்[12] என்ற செ. இராசநாயக முதலியார் கருத்து வரலாற்று அறிஞர் கருத்துக்கு முரண்பட்ட தாகவுள்ளது. இவ்வாறு நல்லூர் இராஜதானி பற்றிப் பல குழப்பங்கள் இருந்தாலும் சிங்கை நகர் அழிந்ததும நல்லூர் இராஜதானியாகக் கொள்ளப் பட்டமையை ஆய்வாளர் பலரும் ஏற்றுக்கொள்வர்.[13] நல்லூர் என்பதன் சிங்கள மொழிப்பெயர்ப்பு யாப்பாபட்டுன என்பர் ஒரு சாரர். எஸ்.பிள்யூ குமாரசாமி, சுவாமி ஞானப்பிரகாசர், கலாநிதி.சி.க. சிற்றம்பலம் போன்றோர் சிங்கள மன்னர்கள் நல்லூருக்கு வைத்த பெயரை 'யாப்பனே"என்பர். மேலும் சிங்கை நகரும், நல்லூரும் ஒன்றெனச் சிலர் கருதுவர். ஆனால் நல்லூரும் சிங்கைநகரும் வெவ்வேறு காலங்களில் தலைநகர்களாக இருந்த தென்ற கருத்தும் காணப்படுகின்றது. கைலாயமாலை 'நல்லை மூதூர்' என அதன் தொன் மைப் பெயரைக் குறிப்பிடும்.[14] யாழ்ப்பாண மன்னர்கள் நல்லூரை இராஜதானியாகக் கொண்டே இப்பிர தேசத்தில் கந்தனாலயம், வீரமாகாளியம்மன், சட்ட நாதர் கோயில், கைலாய பிள்ளையார் கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோயில் என்பவற்றை அதன் எல்லைக் காவற்கோயிலாக அமைத்தனர். மற்றும் நல்லூர் சிவன் கோயில், பாளைவெட்டி நாச்சிமார்கோயில் மற்றும் கிறிஸ்தவ தேவாலயமும் அங்கு காணப்படுகின்றன.

நவீன அறிவியல், எல்லாத் துறைகளையும் போல சமய, பண்பாட்டு வரலாற்றுத்துறையிலும் பல புதுமைகளை அறிமுகப்படுத்தி ஆய்வுகளை நம்பகமும் வேகமும் பெறச் செய்கின்றது. குறிப்பா கத் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் பல உண் மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது இதன் பயனாக 'ஊகம்' என்ற முடிகட்கு இடமளிக் காது உண்மைகள் பல வெளியுலகுகிற்கு எட்டியுள் ளன. ஈழமன்னர்கள் வரலாற்றில் நல்லூர் இராஜ தானியின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. யாழ்ப்பாண அரசின் தலைநகராக கம்பீரத்துடன் பொலிந்த நல்லூர் இராஜதானிபற்றியதும் அதன் பரப்பிடங்கள் பற்றிய எல்லைகளும் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பின் முழுமையான ஒரு சமயப் பண்பாட்டு வரலாறு கட்டியெழுப்பப் படலாம். எனவே புராதன நல்லூர் இராஜதானியின் எல்லைக் கோயிலாக விளங்கிய மேற் குறித்த நான்கு ஆலயங்களும் வரலாற்றுப் போக்கும் அவற்றுக்கெல்லாம் நடுநாயகமாக இருதய ஸ்தான மாக விளங்கும் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் புராதன வரலாறு பற்றியுமே இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

## நல்லூர்க் கந்தசாமி ஆலயம்

இந்துக்களது நாகரிகமும் பண்பாடும் திருத்த முறுவதற்கு ஆலயங்கள் பெருமளவு உறுதுணை யாக விளங்குகின்றன. தமிழகத்திலே வளர்ச்சி கண்ட திருக்கோயிற் பண்பாடு ஈழத்திரு நாட்டிலும் வளர்ச்சிகண்டுள்ளது. ஈழத்திலும் சோழராட்சிக் காலங்களில் சைவாலயங்கள் பல எழுச்சி பெற்றன. கி.பி. 13ம் நூற்றாண்டில் நல்லூர், இராஜதானியாக எழுச்சி பெற்றதுடன் நல்லூர் பிரதேசத்திலும் குறிப் பாக பல ஆலயங்கள் எழுச்சி பெற்றன. இவைபற்றி வையாபாடல், கைலாயமலலை போன்றவை குறிப்பிடும். நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வரலாற்றுப் பின்னணி பற்றித் தற்காலத்தில் கலாநிதி.க.குணராசா அவர்கள் பல அரிய வரலாற் றுத் தகவல்களை வெளிக் கொணர்ந்துள்ளார். அவரது 'நல்லை நகர் நூல்' என்னும் வரலாற்று நூலும், இரண்டாம் உலக இந்து மகாநாட்டின் சிறப்பு மலரிலுள்ள 'நல்லூர் கந்தசுவாமி ஆலயம்' என்னும் நீண்ட ஆய்வுக் கட்டுரையிலும் ஆழமான வரலாற்று ஆவணங்களின் துணையுடன் மிகவும் நுட்பமாக ஆராய்ந்து இவ்வரலாற்றினை எழுதியுள் ளார்.[15] பெரும்பாலும் அந்த ஆய்வுகளின் அடிப்படை களை வைத்தே இப்பகுதி எழுதப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மன்னர்களது வரலாறும் நல்லூர் இராஜதானியும் நல்லைக்கந்தன் ஆலயத்துடன் இரண்டற பின்னிப் பிணைந்திருக்கின்றது. யாழ்ப் பாண இராஜதானியான நல்லூரின் முக்கியமான அம்சங்களில் ஒன்றான நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பற்றியும் பல்வேறு முரண்பாடான தக வல்கள் வரலாற்று நூல்களில் காணப்படுகின்றன. இக் கோயில் கட்டப்பட்ட காலம், கட்டிய மன்னன் பற்றிய செய்திகள் கைலாயமாலையில் வருகின்றன.

**' இலக்கிய சகாப மெண்ணூற் றெழுபதா மாண்ட தெல்லை அலர்பொலி மாலை மார்பனாம் புவனேகபாகு நலமிகும் யாழ்ப்பபாணநகரி கட்டுவித்து நல்லைக் குலவிய கந்தவேட்குக் கோயிலும் புரிவித்தானே"**

என்பது அந்தப் பாடலாகும். இப்பாடலுக்குப் பொருள் காண்பதில் தான் முரண்பட்ட கருத்துக்கள் எழு கின்றன. இப்பாடலில் வரும் 870ம் ஆண்டு என்பது கி.பி 1248ம் ஆண்டைக் குறிக்கும் என வ. குமாரசுவாமி போன்றோரும் கி.பி.948 ஐக் குறிக்கும் என டானியல் ஜோன் என்பாரும் குறிப்பிடுவர். இப்பாடல் குறிப்பிடும் 'புவனேகபாகு' என்பவன் ஆரியச்சக்கரவர்த்தியின் மந்திரி எனவும் அவனே கோயிலைக் கட்டுவித்தான்[16] எனவும் கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்களின் கருத்தாகும். கலாநிதி. க. குணராசா என்பவர் 'புவனேகபாகு' என்ற பெயர் வீரபாகு என்பது போலத் தமிழ்ப் பெயர் எனவும் கி.பி. 948ல் நல்லூர் கோயிலைக் கட்டியவன் புவனேக பாகு என்ற மந்திரியாவான எனவும் கருதுவர். அத்துடன் இவன் சோழ அரசின் பிரதிநிதி அல்லது அமைச்சர் எனக் கொள்வதில் தவறில்லை எனவும் கோயிலானது ஒன்றுக்கு மேற்பட்ட தடவை அழிக்கப்பட்டது என்ற கருத்துமுள்ளது.[17]

'யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்று விளங்கும் நல்லூர் கோயில் கி.பி 15ம் நூற்றாண்டில் அமைக் கப்பட்டது. கைலாயமாலை குறிப்பிடும் புவனேகபாகு என்ற பெயரில் இருவர் பற்றிய செய்திகள், ஐதீகங் கள் உள்ளன. நல்லூர் கந்தனாலயத்தில் இன்றும் மகோற்சவ காலங்களில் படிக்கப்படும் கோயில் கட்டியத்திலே புவனேகபாகு பற்றியும் அவன் சூரியவம்சத்தவன், சிறிசங்கபோதி என்ற பட்டம் பூண்டவன, ஒரு அமைச்சன் எனவும் கைலாயமலை கூறுவதினால் கோயில் கட்டியம் கூறும் புவனே கபாகு இவனல்ல: செண்பகப் பொருமானாகிய புவனேகபாகு' என பேராசிரியர்.சி.பத்மநாதன் கூறு கின்றார்.[18] எனினும் இராசநாயக முதலியார், கைலா யமாலை போன்ற நூல்களின் கருத்து வெறும் கேள்வி ஞானம் எனவும் 1ம் புவனேகபாகு சிங்களப் பிரதிநியாகலாம் ஆகையால் கோயிற் கட்டியம் கூறுவது போல சிறிசங்கபோதி புவனேகபாகுவே கோயிலைக் கட்டியவன் என்பதனையும் மறுக்க முடியாது என்பது பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் என்பாரின் கருத்தாகவுள்ளது.[19] இவ்வாறு ஏராளமான கருத்து முரண்பாடுகள் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வரலாற்றிலே முடிச்சுக்களாகக் காணப் படுகின்றன.

நல்லூர் கந்தசுவாமி கோயில், நயினை நாக பூசணி அம்மன் கோயில், கதிர்காமம் என்னும் கோயில்களின் வரலாற்றுக்களைத் தனித்தனி நூல்களாக எழுதிய குலசபாநாதன், சமகால வழ மைகள், ஐதீகங்கள், இலக்கியச் செய்திகள் என்பவற்றைத் துணைக் கொண்டே எழுதினார். தொல் பொருட்களும் நவீனக் காலத்து ஆவணச் சுவடிகளும் இவருக்குக் கிடைக்கவில்லை. எனினும் அவரின் சாதனைகள் பாராட்டுக்குரியவையாகும். ஏனெனின் அவற்றினை முன்மாதிரியான முயற் சியாகக் கொண்டே காலம் காலமாக ஈழத்து அரசியல், சமய, பண்பாட்டு வரலாறுகள் எழுதப்பட்டு வருகின்றன என்பதனை எவரும் மறுப்பதற்கு இல்லை. ஈழத்து சமயபண்பாட்டு வரலாற்றினை அறிவதில் ஈழத்தமிழருக்கு ஆர்வம் குறைவு என்பதனை வரலாற்று பேராசிரியர் கூறும் போது

> "இலங்கையிலுள்ள இந்துக்கள் கோயில்களின் வரலாற்றுக்கள் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. அத்தகைய சிந்தனைகளைத் தூண்டும் வகையிலே வட இலங்கையிலுள்ள கோயில்களின் தோற்ற அமைப்பும் சின்னங்களும் அமைவதில்லை. புராதனமான ஆலயங்களும் அவற்றுக்கிடையே காணப்பட்ட கலைப் பொருட்களும் போர்த்துக் கேயரினால் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன. ஏறக் குறைய இரு நூற்றாண்டுகளாகக் கோயிலை அமைக் கவோ பொது இடங்களில் வழிபாடு செய்யவோ முடியாத சூழலில் இப் பகுதியிலுள்ள சைவர்கள் வாழ்ந்தனர்"

எனக் குறிப்பிடிருப்பது அனைவராலும் அவசியம் சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

ஆங்கிலேயரது ஆட்சி மீண்டும் ஏற்பட்டதும் எல்லோருக்கும் வழிபாட்டுச் சுதந்திரம் கிடைத்தது. அதனையடுத்து தொன்மையான வழிபாட்டுத் திருத் தலங்கள் பலவும் புனரமைக்கப்பட்டன, திருத்த வேலைகளில் ஈடுபட்டனர். திருப்பணி வேலைகளும் வேகமாக முன்னேறின. இவ்வாறு புனரமைக்கப்பட்ட ஆலயங்கள் பலவும் புராதனமானவையாகும். ஆனால் அவற்றினை அடையாளம் காண்பதுக்குரிய புராதன ஆலய மரபுகள், ஆவணங்களும் அழிந்து பட்டன. பல சம்பிரதாயங்கள் வழக்கற்றும் போயின. இத்தகைய வரலாற்றுப் பின்னணியில் தான் குலச பாநாதன், பொன்னம்பலம்,அருணாசலம், வ. குமரசாமி போன்றோர் இலங்கைத் திருக்கோயில்கள் சில வற்றின் வரலாறுகளை எழுதி வைக்க முற்பட்டனர். இம் முயற்சிகளுமில்லையெனில் ஈழத்து புராதன ஆலயங்களின் வரலாறுகளை ஓரளவேனும் அறிந்து கொள்வதற்கோ, திருத்தி அமைக்கவோ, புதிய வரலாறு எழுதவோ முடியாது போயிருக்கும்.

இத்தகைய சிக்கல் கட்கு மத்தியிலே தான் கலாநிதி க. குணராசா மீண்டும் நல்லூர் கந்தசுவாமி கோயில் பற்றி ஆழமாக சிந்திக்க முற்பட்டமை அன்னாரது ஆய்வுநூல்கள் கட்டுரைகளின் வாயிலாக வெளிவந்தன. அவற்றின் அடிப்படைகளில் நோக்கும் போது யாழ்ப்பாண இராய்ச்சியத்தின் வரலாற்றிலே "புவனேகபாகு" என்ற பெயரில் மூன்று பேரை அவர் இனம் காட்டுவர்.[21] கைலாயமாலை கூறும் சகவருடம் 870ம் ஆண்டு என்பது கி.பி. 1248 ஆம் ஆண்டாகும். எனவே கி.பி. 10ம் நூற்றாண்டில் புவனேகபாகு என்ற அரசனோ அல்லது பிரதானியோ இருந்தனரா? கி.பி.944ல் பராந்த சோழன் படையெடுத்த போது சிங்கைநகர் மன்னனை வென்று ஒரு ராஜப்பிரதானியை நியமித்துச் சென்றான். அவன் பெயர் புவனேகபாகு ஆகலாம். அதே சமயம் வட இலங்கையிலும் புவனேகபாகு என்ற பெயரில் அரசப் பிரதிநிதி இருந்துள்ளான். மாவிட்டபுரம் கந்தசாமிக்குருக்கள் அவருக்கு விருந்து வைத்ததாக வரும் குறிப்புக்களிலிருந்து சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். பார்சியாவின் அரசன் ஒருவன் ஒரு நாள் களபூமி என்னும் ஊராத்துறையில் இறங்கி இருநாள் பயணம் செய்த பாதையில் 'வாகு' என்ற அரசனை வெற்றி கொண்ட குறிப்பினை அதேசி என்ற பாசியன் எழுதியுள்ளதால் பார்சியநூல் குறிப்பிடும் அரசன் அல்லது சிற்றரசன் சோழ பிரதிநிதியான 'புவனேகபாகு' என்பது க.குணராசா கூறும் கருத்தாகும்.[22] எனவே முதலாவது நல்லூர் ஆலயம் சிங்கைநகர் எனப்பட்ட பூநகரி நல்லூரில் அமைந்திருந்தது. அதுவே தமிழரசின் புராதன தலைநகர் என்ற கலாநிதி புஸ்பரட்ணத்தின் ஆய்வு மூலமும் துணியப்படும். எனவே கைலாயமாலை குறிப்பிடும் நல்லூர் கந்தனாலயம் பூநகரி நல்லூராக இருக்கலாம் எனவும் அது பின்னர் அழிந்து விட்டது எனவும் துணியப்படுகின்றது.[23]

2ம் புவனேகபாகு கி.பி.1248ல் வரலாற்றில் இடம் பெறுகின்றான். இவனே கி.பி.124ல் வன்னியில் பூநகரி நல்லூரில் சிங்கை நகரில் ஆண்ட விஜய காலிங்கச் சக்கரவர்த்தியின் மந்திரி அல்லது பிரதானி புவனேகபாகு எனவும், இவனே வன்னியில் சிங்கை நகரை விட்டு யாழ் குடாநாட்டிற்கு அரசை மாற்ற விரும்பி கி.பி. 13ம் நூற்றாண்டில் முதலாவது யாழ்ப்பாண அரசு உருவாக்கி அதன் தலை நகர் நல்லூர் இராஜதானி ஆக்கியதுடன் அக்காலமே கந்தனுக்கு நல்லூரில் கோயில் எடுப்பித்தான் என்று செ. இராசநாயக முதலியார், சுவாமி ஞானப்பிரகாசர் என்பவரை ஆதாரம் காட்டி விளக்கப்பட்டது.[24] இங்கு அவதானிக்க வேண்டிய விடயம் யாதெனில் முதல் முதல் நல்லூர்க் கோயில் கட்டப்பட்டது கி.பி. 948ம் ஆண்டா அல்லது கி.பி. 1248ம் ஆண்டா என்பதனை வரலாற்றாசிரியர்களே முடிவு செய்ய வேண்டும். யாழ்ப்பாண வைபவமாலை கூறும் செய்திகள் குழப்பத்திலிருந்தாலும் சில அடிப்படைகள் உண்டென்பதனை மறுக்கமுடியாது என்றும் இந்நூல் குறிப்பிடும் உக்கிரசிங்கங்கனின் கதை யாழ்ப்பாண அரசின் பரந்த அமைப்பைக் காட்டுவதாகக் கொள்ளலாம். பின்னர் நல்லூர் யாழ்ப்பாணம் அரசின் இராஜதானியாக வளர்ச்சியுற்றபோது பழைய இராஜதானியான சிங்கை நகரி ஞாபகார்த்தமாக அப்பெயர் நல்லூருடன் இணைக்கப்பட்டிருக்கலாம் என்றும் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் என்பாரின் கூற்றும் கலாநிதி க. குணராசாவின் வாதத்தை ஏற்பதாகக் கொள்ளலாம்.[25] எனவே இத்தகைய பல கட்டுக்கதைகள் காணப்பட்டாலும் இவை வட பகுதியில் அக்காலம் நிலைபெற்றிருந்த ஒரு அரசமைப்பினைக் கருவூலமாகக் கொண்டதாக இருக்கின்றது என்ற செ. இராசநாயகம் முதலியாரின் கருத்தும் ஏற்கக்கூடியதாகும்.[26] ஆதலால் க.குணராசா அவர்களின் 1ம் புவனேகபாகு பற்றிய கருதுகோளும் இவ்வண்ணமாக அமையலாம் என்பதும் சிந்திக்க வேண்டியதொரு விடயமாகும்.

யாழ்ப்பாண அரண் அடுத்த வரலாற்றுக் கட்டமாக அமைவது கி.பி. 1450ம் ஆண்டில் நடந்த சப்புமால் குமரய்யா எனப்படும் செண்பகப் பெருமாளின் படையெடுப்பாகும். கோட்டை மன்னன் 6ம் பராக்கிரமபாகு தனது வளர்ப்பு மகன் சப்புமால் குமரய்யாவை யாழ்ப்பாண இராய்ச்சியத்தைக் கைப்பற்ற அனுப்பிய போது நடைபெற்ற போரில் பல கட்டிடங்கள் அழிந்தன. சிதைவுற்றன. அத்துடன் ஆவணங்களும் அழிவுற்றன. அந்தப் போரிலே விஜயகாலிங்கச் சக்கரவர்த்தியின் காலம் நல்லூர் குருக்கள் வளவிலே அமைந்திருந்த கந்தசுவாமி கோயிலும் அழிக்கப்பட்டது. செண்பகப் பெருமாள் என்னும் சேனாதிபதியின் படையெடுப்பால் நல்லூர் கோயில் உட்பட்ட பல நகர அழிவுகள் ஏற்பட்டன. யாழ் அரசின் கோட்டை அரண்களும் கூட அழிந்து போயின என பேராசிரியர்சி.பத்மநாதனும் குறிப்பிட்டுள்ளார்.[27] எனவே கி.பி. 1450ம் ஆண்டிலிருந்து கி.பி.1467 வரை யாழ்ப்பாணத்தை ஆண்ட செண்பகப் பெருமாளே ஸ்ரீசங்க போதி புவனேகபாகு

என்ற பட்டப் பெயருடன் ஆண்டவனாவான். தனது படையெடுப்பினால் கோயிலும் அழிந்ததற்குப் பரிகாரமாகவே நல்லூரிலே இரண்டாவது கோயிலை முத்திரைச் சந்திக்கு அருகிலுள்ள புதியதொரு இடத்தில் அமைத்தான். இவன்தான் இன்னும் நல்லூர் கந்தசாமி கோயிலின் கட்டியத்தில் கூறப்படுபவன் என்பது பிற்கால ஆய்வாளர் கருத்தாகும்.[28] எனவே இரண்டு கோயில்கள் ஒன்று அழிந்த பின் மற்றொன்று ஆக 'புவனேகபாகு' என்ற பட்டப் பெயர் கொண்டவர்களால் கட்டப்பட்டிருக்கலாம்.

கோயில் கட்டியம் கூறுவதன்படியும் பார்த்தால் 'புவனேகபாகு' என்ற பெயருடையவனால் நல்லூர் கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டது என்பதனை யாவரும் மறுக்கவில்லை. கட்டியவரைப் பற்றித்தான் பலவிதமான சர்ச்சைகள் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. இவை பற்றிய விபரங்களை உறுதிப்படுத்தும் செப்பேடுகளோ கல்வெட்டுக்களோ கிடைக்கவில்லை. இலக்கிய ஆதாரங்களும் பதிவேடுகளின் ஆதாரங்களின் படியும் சில செய்திகள் கிடைத்துள்ளன.

**"1882ம் ஆண்டு சைவக் கோயில் பதிவேட்டின் படி நல்லூர்க் கோயில் குருக்கள் வளவு என்ற காணியில் ஆரியச்சக்கரவர்த்தியின் பிரதமமந்திரி புவனேகபாகுவால் 884ம் ஆண்டு கட்டப்பட்டது"[29]** என்ற குறிப்பு காணப்படுகிறது. மேலும் கி.பி. 898 - 914ம் ஆண்டைச் சேர்ந்தாகக் காணப்படும் கடைசிச் சிங்களக் கல்வெட்டின் படியும் கந்தரோடை, மாந்தை என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டின் படி சிங்கள மன்னர்கள் வடபகுதியில் காணப்பட்ட பௌத்த நிறுவனங்களுக்குக் கொடுத்த நிபந்தங்கள் பற்றியும் பேசப்படுள்ளன. அத்துடன் கி.பி.6ம் நூற்றாண்டு வரை தமிழக - ஈழ அரசியல் தொடர்புகளும் செல்வாக்குப் பெற்றுள்ளன. 1ம் பராந்தகனது சோழ படையெடுப்புக்களுடன் சோழராதிக்கம்வடபகுதியில் மேலும் வலுவடைந்தது. இங்குள்ள ஆலயம் ஒன்றிற்கு சோழ மன்னர்கள் நிவேதனம் அளித்தமையும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கு காணப்படும் இடப் பெயரை வாசிப்பது கடினம். எனினும் அவற்றில் 'நல்லூர்' என்ற பெயரை முழுமையாக வாசிக்க முடியும்[30] என்ற கலாநிதி கா.இந்திரபாலா என்பாரின் கருத்திலிருந்து நல்லூர் சோழர் காலத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் செல்வாக்குப் பெற்ற இடங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றமையினை அறியமுடியும். சோழப் பிரதிநிதி 1வது புவனேகபாகுவால் கி.பி. 948ல் கட்டப்பட்ட நல்லூர் கந்தசுவாமி கோயில் கி.பி.13ம் நூற்றாண்டு வரை சிறப்படைந்திருந்தது எனக் கொள்வதில் தவறில்லை எனலாம்.

பின்னர் யாழ்ப்பாணத்தில் ஆரியசக்கரவர்த்திகள் 'சேது காவலர்' நாமம் பூண்டு இடபக் கொடியுடன் ஆண்டு வந்தனர். எனவே விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி முதல் ஆரியச்சக்கரவர்த்திகளால் பாதுகாக்கப்பட்ட சுதந்திரம் கனகசிங்கையாரிய சக்கரவர்த்தி காலத்தில் தென்னிலங்கை மக்களிடம் 1450ல் பறி கொடுக்கப்பட்டது. எனினும் ஸ்ரீசங்க போதி புவனேகபாகு மீண்டும் கோட்டை அரசனானதும் கனக சிங்கையாரியன் மீண்டும் வந்து இழந்த அரசை மீட்டுக் கொண்டான். பின்னர் அவனது மகன் சிங்கை பரராசசேகரன் என்ற பட்டப் பெயருடன் கி.பி. 1478ல் அரசனாகிறான். **"இம்மன்னனே நல்லூர் இராஜதானியை மேலும் வளமூட்டி அழ குறச் செய்து தந்தையிலும் சிறந்தவனாய் நல்லூர் இராஜதானிக்கு நாற்புறமும் நான்கு காவற் கோயில் களாக சட்டநாதர், வெயிலுகந்த பிள்ளையார், கைலாசநாதர் கோயில், வீரமாகாளியம்மன் திருப் பதியையும் கட்டுவித்து இராஜதானியை முன்னிலும் ஒளி பெறச் செய்தான்"[31]** இம்மன்னன் காலம் நடந்த முதலாவது போர்த்துக்கேயர் படையெடுப்பிலே கி.பி 1591ல் இரு படைகளுக்கும் குருக்கள் வளவிலே நடந்த நேரடி மோதலில் தமிழர் படைக்கு உதவிய ஒரு யோகியரும் மாண்டார்[32] என ந. செ.இராசநாயகம் முதலியார் குறிப்பிடுவார்.

போர்த்துக்கேயரின் இறுதிப் படையெடுப்பு கி.பி. 1020ல் நடைபெற்றது. கி.பி. 1621ல் பிலிப்.டி ஒலிவெய்ரா என்ற தளபதியால் முத்திரைச்சந்தியில் கட்டப்பட்ட கந்தனாலயம் சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளின் பின்னர் தரைமட்டமாகியது. அந்த இடத்தில், தற்போதுள்ள கிறிஸ்தவ தேவாலயம் கட்டப்பட்டது. கோயிலின் அழிபாடுகள் கற்களைக் கொண்டு ஒரு கோட்டையும் அமைத்து வீடுகளும் அமைக்கப்பட்டன. அக்காலத்திலே யாழ்ப்பாணத்திலே பல சைவ, வைணவ ஆலயங்கள் இடிக்கப்பட்டன. இதனால் குருக்கள்மாரும் கோயில் அதிகாரிகளும் விக்கிரகங்களைக் கிணற்றில் போட்டுவிட்டுத் தலைமறைவாகினர்.[33] போர்த்துக்கேயரின் சமயவெறி காரணமாக பல சைவாலயங்கள் அழிக்கப்பட்டுக் கிறிஸ்தவ தேவாலயங்கள் கட்டப்பட்டன. பின் கி.பி. 1658ல் ஒல்லாந்தர் வருகையினால் சிறிது மதச் சுதந்திரம் கிடைத்ததும் மக்களும் அந்தக் குருக்களும் மீளவந்து நல்லூரில் அழிக்கப்பட்ட கோயிலை மீளக்கட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். 1749ல் கிருஷ்ணசுப்பையரும், இரகுநாதமாப்பாண முதலியாரும் பலரும் சேர்ந்து மீண்டும்

கோயிலைக் கட்டவிரும்பி விண்ணப்பித்து பழைய இடத்தில் கிறிஸ்தவ தேவாலயம் அமைக்கப் பட்டதால் முன்னைய குருக்கள் வளவுக் காணியில் சிறிய கோயிலாக ஆரம்பித்து வளர்ச்சிகண்டது.[34] எனவே கி.பி. 948ல் கட்டப்பட்ட ஆலயம் மூன்று தடவைகள் அழிக்கப்பட்டு இடம் மாற்றப்பட்டு 1734ல் கந்த மடாலயமாகி பின் மீண்டும் 1739ல் இன்று காணும் குருக்கள் வளவில்[35] யாழ்ப்பாணத் திற்கே அருள் பாலிக்கும் பிரமாண்டமான தேசக் கோயில்களில் ஒன்றாகச் சிறப்படைந்து 1902ம் கும்பாபிஷேகம் நடைபெற்று[36] மிகவும் உன்னதமான நிலையில் யாழ் நகருக்கோர் அற்புதமான திருக்கோயிலாக விளங்குகின்றது.

### கைலாச பிள்ளையார் கோயில்

நல்லூர் இராஜதானியானது கீழ்த் திசையில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலும் மேற்றி சையில் வீரமாகாளியம்மன் கோயிலையும் வட திசையில் சட்டநாதர் கோயிலையும் தென்திசை கண் கைலாசப் பிள்ளையார் கோயிலையும் புராதனகாலம் தொட்டுக் காவல் கோட்டங்களாக கொண்டுள்ளது. இவற்றின் நடுவே மெய்யடியார்க ளும் குடிமக்களும் உய்வடையும் வண்ணம் நல்லூர் கந்தப் பெருமான் எழுந்தருளியிருக்கின்றார். நல்லூர் கந்தனைச் சுற்றி கிழக்குத்திசையில் வெயிலுகந்த பிள்ளையாரும் மேற்றிசையில் வீர மாகாளியம்மனும் அமர்ந்தருள் புரிவது போல தென்கீழ்த்திசையில் நாச்சிமார் கோயிலும் தென்திசையில் கைலாச பிள்ளையாரும் தென் மேற்கில் அத்தியடி விநாயக ரும் வடமேற்றிசையில் கலட்டி மாரியம்மனும் வடதிசையில் தலங்காவற் பிள்ளையாரும் வடகீழ்த் திசையில் சட்டநாதர் கோவிலையும் கொண்டு விளங்குவது நல்லூர்ப் புனித பூமியாகும். இவற றிலே தென்திசையில் எழுந்தருளியிருக்கும் கைலா சப் பிள்ளையார் ஆலயமானது நல்லூர் இராஜ தானியின் காவற் கோயில்களில் ஒன்றாக யாழ்ப் பாண வரலாறு பற்றிக் கூறும் புராதன நூல்களில் இடம் பெற்றுள்ளது.

இக் கோயிலானது அது அமைக்கப்பட்ட காலத்தில் சிவாலயமாக விளங்கியிருக்கலாம் என்ற சந்தேகமும் வரலாற்று ஆசிரியர்களிடையே காணப் படுகின்றது. இப்போது கைலாசப்பிள்ளையார் கோயில் என வழங்குமிடத்திலே "கைலாச நாதர் ஆலயம்" என்றும் பெருங்கோயிலை சிங்கையா ரியன் அமைப்பித்தான். இக்கோயில் அரச குடும்பத் தவரின் வழிபாட்டுத் தலமாகவே அவர்களின் தேவைக்காக அமைக்கப்பட்டது[37] என்ற கருத்துப் பல ஆய்வாளர்களிடமும் பரவலாக காணப்படுவதனால் முன்னைய காலத்தில் இது ஒரு சிவாலயமாக விளங்கியிருக்கலாம எனவும் கருதலாம்.

சிவநெறி ஆனது தொன்நெறி, மெய்ந்நெறி, திருநெறி, நன்நெறி, அருள்நெறி என பல பெயர் கொண்டழைக்கப்பட்டதனைத் தேவார, திருவாசங்க ளில் பரக்கக் காணலாம். இத்தகைய வரலாற்றுப் பெருமைமிக்க சிவநெறித் தலங்களில் கைலாசநாதர் ஆலய வரலாறும் ஒன்றாக அமைந்துள்ளது. நல்லூர் கந்தசாமி கோயிலுக்குத் தெற்கே இன்று காணப் படும் கைலாசபிள்ளையார் கோயிலின் வரலாற்றி லும் பல்வேறு ஐதீகங்களும், அரசியல் அழுத்தங் களும், சமுதாயப் பண்பாட்டுத் தாக்கங்களும் மறைந்து கிடக்கின்றன.

யாழ்ப்பாண அரசு கி.பி 13ம் நூற்றாண்டி லிருந்து க.பி 17ம்நூற்றாண்டு வரை சிறப்புற்று இருந்த காலத்திலே கி.பி 17ம் நூற்றாண்டிலே தொகுக்கப்பட்ட 'கைலாய மாலை' என்னும் நூல் இக்கோவில் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ளது. இது முத்துராசக் கவிராயல் இயற்றப்பட்டது. யாழ்ப் பாண அரச வரலாறு பற்றிய பல தகவல்களை இந்நூல் ஆனது வரிசைப்படுத்திக் கூறும். எனவே இந்த நூலின் தகவற்படி முதலாம் சிங்கை யாரியனால் கைலாயநாதர் கோயில் கட்டப்பட்டது என்பதனை எவரும் மறுப்பதில்லை. கைலாச நாத ருக்கும் உமாதேவியாருக்கும் என இரு வேறான பெருங்கோயில்களும் அவற்றோடு மூன்று சபைகள் பரிவார தெய்வங்களுக்கான சிறுகோயில்கள் தேரோ டும் வீதி, மடங்கள், அன்னசத்திரம், முதலியவற் றையும் மிக சிறப்பான வகையில் சிங்கையாரியன் இக்கோயிலில் அமைப்பித்தான்.[38] எனவே நல்லூர் கைலாசநாதர் ஆலய வராறும் முதலாம் சிங்கை யாரியன் மன்னன் வரலாறும் ஒருங்கே இணைந் திருப்பதனை எளிதில் உணர முடியும். 'கைலா யமாலை' என்ற நூலில் 47 முதல் 212 கண்ணிகள வரையுள்ள பாடல்கள் சிங்கையாரிய மன்னன் வர லாற்றினையும் 213 முதல் 310 வரையுள்ள பாடல் கள் கைலாசநாதர் கோயிலில் அமைப்பு முதல் அதன் குடமுழுக்கு வரையுள்ள செய்திகளை கூறும். குறிப்பாக 266 முதல் 287 வரையுள்ள கண்ணிகள் கைலாசநாதப் பெருமான் புகழ் பாடும் போற்றி யாகவே அமைந்துள்ளன.[39] யாழ்ப்பாண மன்னர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் காணப் பட்டாலும் அவர்களது ஆட்சிக் காலமானது காலவரன் முறைப்படி அமைந்ததென கொள்வதற்கான ஆதா ரங்கள் அவற்றிலே காணப்படவில்லை.

'கைலாய மாலை' என்னும் நூல் கைலாய பிள்ளையால் 1906 ம் ஆண்டில் வெளியடப்பட்டது. மேலும் சிங்கையாரியச் சக்கரவர்த்திகளது கன விலே சச்சிதானந்த சொரூபியான சிவன் ஒரு நாளிரவு எழுந்தருளித் தான் கைலாசநாதன் எனக் கூறி மறைந்தார். இதனால் மன்னன் சிவன் தன்னை இவ்வாறு ஆட்கொண்டான எனத் துணிந்து மந்திரியுடன் நல்லதோர் நாளிலே ஆகம விதிப்படி விசித்திராலங்காரமான சிவலாயம், தேவி கோயிலும், பரிவார தெய்வங்கள் கோட்டங்களும், யாக மண்ட பமும் களஞ்சியம், மடப்பள்ளி, திருக்குளம் முதலிய னவும் சித்திர கோபுரங்கள் மதில்கள் நந்தவனம், அக்கிரகாரம் வேதாத்தியான மண்டபம் தேரோடும் வீதிகளோடும் அமைப்பித்தான். இராமநாத சேதுப திக்கே ஒலை அனுப்பிக் காசிப் பிராமணரான கங்காதர குருக்கள் என்பவரால் பிரதிஷ்டை செய்து பெரும் சிறப்புடன் கும்பாபிஷேகமும் செய்தான் அச்சிறப்புள்ள சிவாலயத்திலே சிவன் கைலாசநாத னாகாவும் நல்லூரை மூன்றாம் கைலாசமாகவும் கொண்டு திருவருள் பாலிப்பாராயினர்[40] என்பது பற்றிய இக்கோவில் பற்றிய செய்திகளை கையால மாலை விரிவாகக் கூறுவதனை வரலாற்று ஆசிரியர் களும் எடுத்துக் காட்டியுள்ளனர். கையாலநாதர் கோயில் பற்றி ஒரு வெளிக்கள ஆய்வும் மேற் கொள்ளப்பட்டது.[41] கி.பி 15ம் நூற்றாண்டிலிருந்து செண்பகப் பெருமான் படைஎடுப்பு வரை ஒன்பது மன்னர்கள் யாழ்ப்பாண அரசை ஆண்டுள்ளனர் என்பது யாழ்ப்பாண வைபவமாலை கூறும் வரலாறாகும். அதன்படி ஜெயசிங்கையாரியன் காலம் நல்லூரை இராஜதானியாகக் கொண்டு அமைக்கப் பட்ட நல்லூரில் கைலாச நாதர் கோயில் அரச குடும்பத்தினரின் தேவைகட்காக அமைக்கப்பட்ட மையை அறிய முடிகின்றது.

மேலும் 1ம் சிங்கையாரியன் காலம் கைலை விநாயகர் கோயில், கைலை நாதன் கோயில், கைலை அம்மன் கோயிலையும் கட்டுவித்தான் என்னும் குறிப்புக்களும் காணப்படுகின்றன. தற்போது காணப்படுகின்ற கைலாசபிள்ளையார் கோயிலின் 3 வாயிலிலுமுள்ள பிள்ளையார், சிவன், அம்மன் என்னும் இவை மூன்றும் முன்னைய மூன்று கருவறைகளாக இருக்கலாமோ என்ற ஐயப்பாடும் எழுவதற்கு இடமாகின்றது. புராதன கைலாச நாதர் கோயில் 'மூன்றாவது கைலையா கும்' என்பது கைலாயமாலையில் காணப்படும் ஒரு கருத்தாகும். ஈழ நாட்டிலே கைலாச பாரம் பரியமொன்று சிறப்பாகப் பேணப்பட்டு வருவதனை இக்கோயில் வரலாறு புலப்படுத்துவதாகவுமுள்ளது. இக்கோயில் வரலாற்றிலே காணப்படும் ஐதீகத்தின் படி "திருக்கைலாச மலையிலிருக்கும் கைலாசநாதர் திருநந்தி தேவரிடம் இதுவரை கைலாச முலையும் தென் கைலாசமாம் திருக்காளத்தியும் மூன்றாவதாக நல்லூரிலே கைலாசநாதர் கோயிலுள்ளது: அங்கே யும் எழுந்தருள வேண்டும்: உன் கணங்களுடன் புறப்படுவாயாக" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.[42] என்றபடி சிவனார் தனது தேவியுடனும் நந்தி கணங் களுடனும் புடை சூழ நல்லூர் கைலையிலும் எழுந்தருளி பிரதிட்டை செய்யப்பட்டார் என்ற ஐதீக மும் இன்று வரை மக்களிடையே பேசப்பட்டு வருகின்றது.

நல்லூர் இராஜதானியாக விளங்கிய காலத் திலே இக்கோவில் அதன் தென்திசையிலே அமைக்கப்பட்டது. பின்னர் போத்துக்கேயர் காலம் இவ்வாலயமும் அழிக்கப்பட்டது. அந்த சமயத்திலே பெருமானராகிய மூலவரையும் அம்பாளையும் மறைத்து வைத்து இரகசியமாகப் பாதுகாத்து ஆலயம் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட போது பெருமா னுடன், அம்பாள், பிள்ளையார், மூவரையும் பிர திட்டை பண்ணி மூன்று மண்டபங்களுடன் கோட்டை வாசலுடன் கூடிய பெரும் கோயிலாகக் கட்டப் பட்டது. அப்போது மூலமூர்த்தியாக விநாயகரும் அத்துடன் ஏனைய பரிவார தெய்வங்களும் பஞ்ச முக விநாயகர், முருகன், வைரவர், நவக்கிரகங்கள், சண்டேஸ்வரர் முதலியனவும் கட்டப்பட்டன.[43] இக் கோயிலைப் புராதன காலம் கட்டுவித்த மன்னன் யார் என்பதில் ஆய்வாளர்களிடையே கருத்து வேறு பாடுகள் காணப்படுகின்றன. கனக சிங்கையாரி யனின் பின்னர் யாழ்ப்பாண அரசினை அவனது மகன் பராராஜசேகரன் ஆண்டான் அவனே நல்லூர் இராஜதானி காவற் கோயில்களையும் அமைத்தான் என[44] செ.இராசநாயகமுதலியார் குறிப்பிடுவதனால் ஜெயசிங்கையாரியனும் பராராஜசேகரனும் ஒருவர் அல்லது வேறா? என்ற குழப்பங்களும் ஏற்படு கின்றன. எப்படி இருந்தாலும் புராதன நல்லூர் இராஜதானியானது மேற்குறித்த ஆலயங்களை எல் லைக் கோயில்களாக கொண்டிருந்தமை புலனாகும்.

கி.பி 13ம் நூற்றாண்டிலே கைலாசநாதர் ஆல யம் கட்டப்பட்டது என்பது இக்கோயிலின் உற்சவ காலத்தில் சுவாமி எழுந்தருளும் போது கூறப்படும் கட்டியத்திலே சிங்கையாரிய சக்கரவர்த்தியின் பெயருடனே கூறப்படுவதும் கவனித்தற்குரியது. கைலாசநாத மானியத்திலும் இக்கோவில் பற்றிய விபரங்கள் இடம்பெற்றுள்ளன.

"கைலாச கணபதிக்கோர் கோபுரம் காணீர்
கைலாச நாதருக்கோர் கோபுரம் காணீர்
கைலாச நாயகிக்கோர் கோபுரம் காணீர்
கைலாச கோபுரமூன்றுள்ள திதுதானே"[45]

என்பதற்கமைய கைலாச பிள்ளையார் கோயில் தனித்தனி மூன்று கோபுரங்களுடனும் மிளிர்கின்றது. இன்று கைலாசபிள்ளையார் என வழங்கப்படும் மூர்த்தி புராதன கைலாச ஆலயத்தின் பரிவார மூர்த்தி ஆவார். கி.பி 16ம் நூற்றாண்டிலே அழிக் கப்பட்டதும் ஒல்லாந்தருக்கு பக்கபலமாக பரரா ஜசிங்க முதலியின் பராமரிப்பிலிருந்த இத்தலத் திற்கு இன்னல் ஏற்படவில்லை எனவும் அவர் இறந்த பின்னரே இவ்வாலயம் அழிவுற்குள்ளானது எனவும் கைலாச மானியம் குறிப்பிடுவதனால் [46] பரராஜசேகரன் இப்பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளானோ என்பதும் தெளிவுபடுத்த வேண்டிய விடயங்களாகும்.

இவ்வாயத்தின் அழிவின்போது கோயில் அர்ச் சகர்களாக இருந்த அந்தணர்கள் அந்நியர் ஆல யத்தைச் சூறையாட வந்த செய்தியறிந்து வண்டி ஒன்றிலே மூலமூர்த்தியையும், பரிவார தெய்வங் களையும் யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்கட்கு எடுத்துச் சென்று மறைத்து வைத்தனர். பிரதம குருக்கள் ஆனவர் மூலமூர்த்தி ஆகிய சிவலிங்க் கத்தை மட்டுவிலுக்கு எடுத்துச் சென்று அங்குள்ள கேணியில் போட்டு வைத்ததாகவும் அங்கிருக் கும்போது அங்குள்ள பெரியார் ஒருவரின் கனவிலே தோன்றி தனது இருப்பிடத்தை காட்டினார் என்றும் ஐதீகக் கதைகளும் உள்ளன. பின்னர் அவ்வூர் மக்களால் அப்பெருமான் கண்டெடுக்கப்பட்டு அங்கு சந்திரளௌீஸ்வரர் சாந்தநாயகி அம்மையாருடன் வழிபடப்பட்டு வருவதனையும் அறிய முடிகின்றது.[47] சில காலம் சென்றதும் நல்லூரிலே மீண்டும் எஞ்சிய கோயில் அழிபாடுகட்கிடையிலே பற்றைக்குள்ளே மறைந்திருந்த கைலாச பிள்ளையார் விக்கிரமும் கண்டெடுத்து அதனை வில்வ மரத்தடியில் மக்கள் வைத்து வழிபட்டு வருவராயினர்.

கி.பி 1850 ஆம் ஆண்டிலே ஆறுமுக நாவலர் அவர்கள் பிள்ளையாருக்கு ஓலையினால் மண்டபம் அமைத்துச் சிறு கோயிலாக்கினார். அதனையடுத்து நாவலரது மருகர் கைலாசபிள்ளை என்பர் ஓலைக் கோயிலைக் கற்கோயிலாக்கினார். இதன் பின்னர் மறு சீரமைப்புப் பெற்ற ஆலயம் 1911ம் ஆண்டு குடமுழுக்குக் கண்டது. தொடர்ந்து அடியார்கள் பலரது பெரும் முயற்சியினால் இவ்வாலயத்துக்குப் புதிதாக ஒரு சிவலிங்கமும் அம்பாள் விக்கிரமும் பிரதிட்டை செய்யப்பட்டு மதுரையப்பா சுந்தரம் என்பவரும் அவரது சகோதாரி மாணிக்க அம்மை யாரும் 1946ம் ஆண்டில் திருப்பணி வேலைகளை யும் பூர்த்தி செய்து கும்பாபிஷேகம் செய்வித்தனர். இது பற்றிய விபரங்களையும் செய்திகளையும் கைலாச மான்மியம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.[48] ஆகம முறைப்படி ஆலயத்திருப்பணிகள் நடை பெற்ற பின்னர் மூலமூர்த்திகட்கும் பரிவாரத் தெய் வங்கட்கும் கும்பாபிசேகம் விதிமுறைகளின் படி நடைபெற்றது.

1963ம் ஆண்டிலே ஆலயத் திருப்பணிகள் நிறைவுற்ற பின்னர் மாணிக்க அம்மையாரின் சகோ தரர் ஒருவரால் சித்திரத்தேர் அமைத்துக் கொடுக் கப்பட்டது. இன்னோர் சகோதரர் சுந்தரலிங்கம் என்ப வரும் பொது மக்களும் இணைந்து தேர்முட்டி மண்டபத்தையும் கட்டி முடித்தனர். இவ்வாலயத்தின் சிறப்புக்களில் ஒன்று ஈழத்திலே முதன்முதல் பஞ்ச முக விநாயகர்கள் எழுந்தருளிய தலமாக மிளிர் வதும் இக் கைலாச நாதர் ஆலயமாகும். மீண்டும் 1970ம் ஆண்டிலும் 1988ம் ஆண்டிலும் இவ்வாலயம் கும்பாபிசேகம் காணப்பெற்று அருட்பொலிவுடன் விளங்கியது. எனவே புராதன கால மன்னர்களால் நிர்மாணிக்கப்பட்ட கைலாசநாதர் ஆலயம் போர்த் துக்கீசரால் அழிக்கப்பட்டு ஆங்கிலேயர் காலம் கிடைக்கப் பெற்ற மதச் சுதந்திரத்தால் படிப்படியாக மீளக் கட்டுமானங்கள் ஆரம்பிக்கப்பட்டு கோயில் திருப்பணிகள் அனைத்தும் நிறைவெய்திக் காட்சிய ளிக்கின்றது.[49] அன்று கைலாசநாதர் ஆலயம் என்ற பெயரில் சிறப்படைந்திருந்த இக் கோயில் இன்று கைலாசபிள்ளையார் ஆலயம் என்னும் திருநாமத் துடன் மூலமூர்த்தியாகப் பிள்ளையார் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஆலயமாக புதுப்பொலிவுடன் விளங்குகின்றது. நாவலர் பெருமானது குடும்பக் கோயிலாகவும் பின்னர் இது பராமரிக்கப்பட்டு பெரும் ஏற்றம் கண்டுள்ள ஒரு ஆலயமாகும்.

### ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் ஆலயம்

கி.பி 13ம் நூற்றாண்டு முதல் கி.பி 16ம் நூற் றாண்டு வரை யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் இராஜதானியாக நல்லூரின் கிழக்குத் திசையிலே காவற்கடவுளாக எழுந்தருளி வித்தனர் என்பது புராதன யாழ்ப்பாண வரலாற்று நூல்களி லிருந்து அறியப்பட்ட செய்தி ஆகும். இன்னும் எல்லைக் கடவுளாக நல்லையின் பதியில் கிழக்குப் புற எல்லையிலே நாயன்மார்கட்டு என்னும் கிராமத் திலே சிறந்து விளங்கும் ஆலயங்களுள் ஒன்றாகச் சைவத்தமிழ் மக்களால் போற்றப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே விநாயகர் வழிபாடு பல நூற்றாண்டுகளாக நிலவி வந்துள்ளது எனலாம். கி.பி 17ம் நூற்றாண்டின் பின்னர் போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் போன்றோரின் படையெடுப்புக்களினாலும் சமய பொறாமையினாலும் சைவ கலாசார அழிவுக் கொள்கை முதலியவற்றினாலும் யாழ்ப்பாணக் குடா நாட்டில் உள்ள சமய நிறுவனங்களும் ஆலயங் களும் முற்றாகவே அழிக்கப்பட்டன. இந்துக்களின் வரலாற்றுணர்வின்மை, சமயப் பற்றின்மை, இந்துக் களே இந்து மதத்ததைத் தூசித்தல், சைவசமய சின்னங்களை இழிவுபடுத்தல், புறக்கணித்தல் போன்ற நடவடிக்கைகளினால் மேலும் சமயமானது புறந்தள்ளப்பட்டுள்ளது.

எனினும் ஒரு சில பழைய சிலைகள் நல்லூர், கந்தரோடை, வல்லிபுரம், பூநகரி போன்ற இடங்க ளிலும் கிடைத்துள்ளன. பூநகரியிலே கலாநிதி ப.புஸ்பரட்ணம் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட விநா யகர் சிலை கி.பி எட்டாம் ஒன்பதாம் நூற்றாண் டைச் சேர்ந்தது எனவும் முற்பட்ட சோழர் கலைப் பாணியை கொண்டதெனவும் கருதப்படும்.[50] சோழராதிக்கத்திற்கு முன்னரே யாழ்ப்பாணத் தீபகற்பத்திலே விநாயகர் வழிபாடு நிலவியிருக் கலாம். அதற்கான சிலைகள் இதுவரை கிடைக்க வில்லை. எனினும் கி.பி 13ம் நூற்றாண்டிலே யாழ்ப்பாண மன்னர்கள் ஆட்சியிலே சைவ கலாசாரம் ஆனது மேலோங்கி இருந்ததற்கு அக் காலத்தில் அமைக்கப்பெற்ற சைவ ஆலயங்கள் சான்றாகவுள்ளன. தமிழ் மன்னர் காலத்திலே யாழ்ப்பாண அரசிலே விநாயக வழிபாடும் பிரபல்யம் அடைந்தே இருந்தது. யாழ்ப்பாண இராய்ச்சிய வர லாற்றிலே மரபு வழியாகவும் ஐதீகங்களாகவும் பேணப்பட்டு வந்த தகவல்களின் அடிப்படையில் தொகுத்து எழுதப்பட்ட மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலில் யாழ்ப்பாண மன்னர்கள் நல்லூரில் தலைநகரை நிறுவிய போது நாற்பு நகர் இராஜதானியின் நாற் புறமும் அமைந்த காவற் கோயில்களில் கிழக் கிலே அமைந்த வெய்யிலுகந்த விநாயகர் ஆலயமும் ஒன்றாக விளங்கியதை ஆய்வாளர் பலரும் இன்று ஏற்றுக் கொள்வர். அத்துடன் நாற்றி சைகளில் மட்டுமன்றித் தலைநகரை அணிசெய்யும் வகையில் சட்டநாதர் கோவில், வீரமாகாளியம்மன், தையல் நாயகியம்மன், கைலாச நாதர், கைலை நாயகி கோயில், காலைவிநாயகர் கோயில்கள் எனப் பல கோயில்களையும் படிப்படியாக நிறுவிச் சைவத் தமிழ் மக்களது சமய கலாசாரங்களைப் பேணி வளர்ப்பதிலும் மன்னர்கள் ஊக்கம் காட்டி வந்தனர். இவ்வாறு நிறுவப்பட்டதாக கூறப்படும் ஆலயங்களில் விநாயகர் ஆலயங்களே அதிகம் எனப் பேராசிரியர் வி.சிவசாமி எடுத்துக்காட்டுவார்.[51] அவ்வாறான தகவல்களின் படியும் மரபு வழியாகப் பேணப்படும் செய்திகளிலிருந்தும் யாழ்ப்பாண வைப வமாலையில் குறிப்பிடப்படாத தலங்காவற் பிள்ளை யார் கோவில் நிறுவப்பட்டமையும் அறியப் படுகின் றது. இக்கோவில்களுடன் கற்பகப்பிள்ளையார், மூத் தவிநாயகர், பண்டார விநாயகர், கல்வியங்காடு சிந்தாமணிப் பிள்ளையார், நாயன்மார் கட்டு அரசடிப் பிள்ளையார், நீராவியடிப் பிள்ளையார், அத்தியடிப் பிள்ளையார், கந்தர்மடம் பிள்ளையார் முதலிய விநாயகர் ஆலயங்கள் காணப்படுவதிலிருந்து புரா தன காலம் தலை நகரில் நிறுவப்பட்ட ஆலயங்க ளில் விநாயகர் ஆலயங்களே அதிகமாக அமைக்கப் பட்டன என அறியமுடியும்.

இந்தியாவிலுள்ள திருத்தலங்களின் பெயர் களைத் தாங்கி நிற்கும் விநாயகர் ஆலயங்களும் இங்குள்ளன. அங்கிருந்து விநாயகர் சிலைகள் கொண்டு வரப்பட்டதன் காரணமாக இப்பெயர்கள் ஏற்பட்டிருக்கலாம். உதாரணமாக வெயிலுகந்த விநாயகர், மண்டைதீவு திருவெண்காடு விநாயகர் முதலிய சில ஆலயங்களைக் குறிப்பிடலாம். இவ் வாறு பலதிறப்பட்ட சிந்தனைகளை வெளிப்படுத் தும் ஆலயங்கள் பலவும் பல்வேறு கால கட்டத் திற்குரியவானாகும். இவற்றுள்ளே பழைமை வாய்ந்த ஆலயங்களும் உள்ளன. முன்னரே குறிப்பிட்டவாறு போர்த்துக்கீசர் போன்றோரது படை எடுப்புக்களினால் பழைய கோயில்கள் முற்றாக அழிந்துவிட்டன. யாழ்ப்பாண இராய்ச்சியத்திலே போர்த்துக்கீசர் சார்பிலே கி.பி 1619ம் ஆண்டில் பிலிப் டி. ஒலி வெய்ரா என்னும் தளபதியினால் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்கள் அழிக்கப்பட்டன[52] என வர லாற்றாய்வாளர்கள் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.

பண்பாடு, கலாசார ஆய்வுகட்கு முக்கியத் துவமளிக்கும் தற்காலத்தில் ஆலயங்களை மையமாகக் கொண்ட பண்பாட்டு வரலாற்று ஆய்வு கட்கு யாழ்ப்பாணத்திலே அவை அடிப்படைத் தக வல்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக் கது. இவற்றிலே சைவ ஆலயங்களின் தல வர லாறுகளை அறிவது முக்கியம் பெறுகின்றது. யாழ்ப்பாண இராச்சியம் பற்றிக் கூறும் புராதன வரலாற்று நூல்கள் பலவும் கற்பனைகள், கட்டுக் கதைகள், ஐதீகங்கள் எனக்கூறிப் பலர் அவற் றினை விமர்சிக்கின்ற போதிலும் பாரம்பரியமான பண்பாட்டு மரபுகளைப் பேணுவதிலும் புராதன மரபுகளைக் காப்பாற்றுவதிலும் அவை அடிப்படைத் தகவல்களைக் கொண்டுள்ளன என்பதினை நவீன ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டே வந்துள்ளனர்.

இப் பின்னணியில் நாயன்மார் கட்டுப் பகுதியிலே அமைந்துள்ள வெயிலுகந்த பிள்ளையார் தல வரலாறும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த ஆலயமாக இன்று கருதப்படுகின்றது.

நாயன்மார்கட்டுப் பிராந்தியமானது, வரலாற்றுத் தொன்மை மிக்க சங்கிலியன் தோப்பு, இராஜ குமாரன் வளவு,யமுனா ஏரி, கிறிஸ்தவ தேவாலயம் என்பவற்றிற்கு நேர்கிழக்கே அமைந்து விளங்குகின்றது. திட்டவட்டமாக நாயன்மார்கட்டு எல்லைகளை வகுப்பதில் சிரமம் இருந்தாலும் இப்பரப்பிற்கு வடக்கே கோட்டை வாசல் கிராமமும் தெற்கிலே அரியாலையூரும் கிழக்கில் காட்டுவாச நிலப்பரப்பும் உப்புவிளையும் வயற்பரப்பும் எல்லைகளாக உள்ளதைக் காணலாம். உப்புமடம் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலுக்குரியது எனக் கருதப்படும் நான்கு சைவ நாயன்மார்களது வெண்கலச் சிலைகளும் நாயன்மார்கட்டிலே வார்க்கப்பட்டவை என்ற மரபும் இக் கிராமத்தில் வழங்கி வருகின்றது.[53] இவை மேலும் ஆய்வுக்குரியவை. அதனால் இக்கிராமம் 'நாயன்மார்கட்டு' எனப் பெயர் பெற்றது. நாயன்மார்கட்டுப் பகுதியில் அமைந்து விளங்கும் வெயிலுகந்த விநாயகராயலமும் அவை தொடர்பான மரபுகளும் அவ்வாலயத்தின் வரலாற்றுத் தொன்மையினைப் புலப்படுத்துவதாகவுமுள்ளன. யாழ்ப்பாண வைபவமாலையில் இக்கோயில் நல்லூர் இராஜதானியின் எல்லைக் கோயில்களில் ஒன்றாகக் குறிப்பிட்டாலும் கோயிலுக்குரிய இப்பெயர் கி.பி 13ம் நூற்றாண்டிலிருந்தே வழக்கில் இருந்து வந்ததா என நிறுவுதற்குரிய சான்றுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. இக் கோயிலின் புராதன வரலாற்றுப் பெயரைத் தொடர்புபடுத்தும் விடயத்தில் பல கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

'வெயிலுகந்த பிள்ளையார்' என்னும் பெயரிற்குப் பல்வேறு விளக்கங்கள் இன்று அளிக்கப்படுகின்றன. இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டதால் அந்த சிலையின் ஊர்ப் பெயரையும் சேர்த்து வெயிலுகந்த விநாயகர் என அழைக்கப்பட்டதெனவும் கருதப்படும். கரியமழை பெய்து கொண்டிருக்கும் போது கூடச் சூரியனுடைய கதிர்களில் ஒரு கற்றை இப்பிள்ளையார் மீது விழுந்து பரவிக் கொண்டிருந்தது என்ற காரணத்தினால் இப்பெயர் உருவானது என்பது கிராம மக்களிடையே காணும் ஐதீகமாகவுள்ளது. சூரியதரிசனம் எப்போதும் படக்கூடிய 'கிராதிக் கோயிலாக' இக்கோயிலின் கருவறை அமைந்திருப்பதனால் இப்பெயர் ஏற்பட்டதெனவும் கூறப்படும். எனினும் இப்பிராந்தியத்தில் மேற்கொண்ட இடப் பெயர் பற்றிய வரிசையில் மடத்து வாசல், கோட்டை வாசல், காட்டு வாசல் என்பன ஒரு தனிப் பண்பாட்டுக் குறியீடுகளாக விளங்குகின்றன. அவ்வாறெனில் இப்பிள்ளையாருக்கும் காரண இடு குறிப்பெயராக 'வாசல் உகந்தபிள்ளையார்' என்று ஏற்பட்டிருக்கலாம் எனவும் வாசல் உகந்த பிள்ளையார் என்ற சொற் பிரயோகம் காலப்போக்கில் மருகி வாசல் என்பது வாயிலாகிப் பின்னர் வெயிலாகி வெயிலுகந்த பிள்ளையார் என மருவியதெனக் கொள்வது மொழியியல் வழக்கிலும் தவறில்லை[54] என செ.கிருஸ்ணராசா என்பார் குறிப்பிடுவது கவனித்தற்குரியது. அந்த வகையிலே யாழ்ப்பாண அரசின் காவற் கடவுளில் ஒருவராக வாசல் உகந்த விநாயகர் ஆலயம் அமைந்திருந்தது என்பதனை நிலை நிறுத்திக் கொள்ள முடியும்.

ஆயினும் இப்பெயருடைய இந்த ஆலயத்தின் தொன்மையை நிலைபெறச் செய்யும் தொல்லியற் சான்றுகள் இதுவரை கிடைத்தில. ஆதலால் வாசல் உகந்த பிள்ளையார் ஆரம்பத்தில் கட்டப்பட்ட இடத்திலேதான் இன்னும் காணப்படுகின்றதென்பதிலும் வரலாற்றாசிரியர்களிடத்திலே தெளிவில்லை. நாயன்மார்கட்டுத் திருக்குளத்தின் வடதிசையிலே அமைந்த நிலப்பரப்பு 'மடத்து வாசல்' என அழைக்கப்படும். இங்கு அறுபத்து மூவர் நாயன்மார் குரு பூசை மடம் அமைந்திருந்ததனால் இப்பெயர் ஏற்பட்டதெனவும் சில மரபுகள் காணப்படுகின்றன. நாயன்மார்கட்டுத் திருக்குளத்தின் மையப் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட ஒரு கல்வெட்டு ஒன்று வரலாற்று முக்கியம் வாய்ந்த சான்று எனக் கொள்ளப்படும். இச்சாசனம் 'சிங்கையாரியனால் அமைக்கப்பெற்றது' என முடிகின்றது. இச்சாசனத்தின் காலம் கி.பி 16ம் - 17ம் நூற்றாண்டெனவும் கருதுவர்.[55] எனவே கி.பி 18ம் நூற்றாண்டில் எழுந்த யாழ்ப்பாண வைபவமாலையின் கருத்துப் படியும் இக்கோயில் சிங்கையாரியன் என்ற மன்னனால் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டதென்பதனை உணர முடியும். கால வேறுபாட்டினை அவதானிக்கும் போது தற்போதைய ஆலயத்தின் அமைவிடம் புராதன கோயில் அழிந்த பின்னர் வேறிடத்திலே கட்டப்பட்டதாகவும் கொள்ளலாம். கோட்டை வாசல் என்னும் கிராமமும் இவ்வாலயத்துடன் தொடர்புடைய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகவுள்ளது. இவ்வாலயத்துக்குத் தென்கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு காணியின் பெயர் 'கோட்டையடி' என்பதாகும். ஆலயத்திற்கு அண்மையில் உள்ள கோட்டைவாசல் என்பது நல்லூர் இராஜதானியின் கிழக்குவாசல் இருந்த பகுதியாகலாம். அதனால் இவ்வாலயம் மேற்குறித்தவாறு வாசல் உகந்த பிள்ளையார் ஆலயமாகவே பெயர் பெற்றிருக்கலாம் என்பதனை கோட்டை வாசல் என்ற ஊர்ப்பெயரும் எடுத்துக் காட்டாக கருதலாம்.

பொதுவான சில வரலாற்று ஆய்வுகளின்படி முத்திரைச் சந்தியே நான்கு வீதிகளும் சந்திக்கும் முக்கிய பகுதியாக அமைந்திருக்கலாம். வடக்கில் இருந்து வரும் போது நல்லைக் கந்தன் ஆலயமும் மேற்கு நோக்கி வெயிலுகந்த ஆலயமும் அமைந் தனவாகலாம். முத்திரைச்சந்திக்கு அண்மையாக வெய்யிலுகந்த பிள்ளையாரும் சட்டநாதர் கோயிலும் இருப்பதனைக் காணும்போது ஏறக்குறைய நான்கு ஆலயங்களும் முத்திரைச்சந்திக்குச் சமனான தூரத் திலே அமைந்திருந்தமை இவ்வுண்மையினை உணர்ந்து[56] மேலும் (வெயிலுகந்து) வாசல் உகந்த ஆலயம் செம்மணியை அண்டிய பகுதிகளில் வயல்கள் மத்தியில் உழவர்களின் காவற் தெய்வமாகச் சிறப் புற்று விளங்குகின்றதெனலாம். எனவே வரலாற்றுப் பெருமை மிக்க இந்த ஆலயமானது சிங்கைப் பர ராஜசேகரன் கட்டிய கோயிலாக இருக்கலாமோ என்ற ஐயமும்ஆய்வாளர்கடையே காணப்படுகின்றது.[57] இன்றும் சட்டநாதர் ஆலயமும் வாசல் உகந்த விநாயகர் ஆலயமும் அருகருகே அமைந்து காணப் படுவதனால் அவை பழைய இடங்களிலே கட்டப் பட்டு இருக்கலாம் என்ற சிந்தனையும் எழாமலில்லை. எனினும் இவ்வாலயம் பற்றி ஆய்வுகள் மேலும் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமானது.

## நல்லூர் சட்டநாதர் ஆலயம்

இந்துக்களது பண்பாட்டையும் நாகரிகத் தையும் புராதன காலம் தொட்டுப் பாதுகாத்து வரும் நிறுவனங்களாக இந்து ஆலயங்கள் விளங்குகின் றன. எமது ஈழநாட்டிலுள்ள ஒவ்வொரு இந்து ஆல யமும் எங்கள் மூதாதையருடைய பரம்பரைச் சொத் தும் ஈழம்வாழ் சைவத் தமிழ் மக்களின் உன்னத மான சமய விழுமியங்களையும் உலகியல் வாழ்க்கை மதிப்பீடுகளையும் கலைப் பண்பாட்டுச் சின்னங்களையும் கட்டிக்காத்து வரும் கலாசார பொக்கிசங்கள் ஆகும். ஆதலால் அவற்றின் தொன் மையான கலாசார சின்னங்களையும் பூர்விகமான வரலாறுகளையும் தேடித் தொகுத்துப் பெற்றுப் பேணிக் காப்பற்றி அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டியது சைவத் தமிழன்பர்கள் ஒவ்வொருவரினதும் இன்றியமையாத கடமையாகும். அந்த வகையிலே நல்லூர் யாழ்ப்பாண அரசின் இராஜதானியாக விளங்கிய காலத்தில் சிறப்புடன் விளங்கிய ஆலயங்களில் ஒன்றான சட்டநாதர் ஆலயத்தின் தொன்மையான வரலாற்றினை அறிந்து கொள்வதும் அவசியமாகும்.

ஈழத்தின் பழம்பெரும் சைவ ஆலயங்களின் வரலாறானது பெரும்பாலும் ஆவணப்படுத்தப்படாது ஐதீகங்களாகவும் மரபுவழிச் செய்திகளாகவும் பின் னப்பட்டு வரும் ஒன்றாகவே காணப்படுகின்றது. அவற்றினை ஆவணப்படுவதற்குரிய வகையில் தொல்லியற் சான்றுகளோ இலக்கிய வரலாற்றா தாரங்களோ மிகவும் அரியதாகவே உள்ளன. நல் லூர் சட்டநாதர் ஆலயம் பற்றிய பழைமையான வரலாற்றுக் குறிப்பினையும் யாழ்ப்பாண வைபவ மாலை போன்ற ஒரு சில பழைய நூல்களில் தான் காண முடியும். இவ்வாலயத்தின் தோற்றத் திற்கான காரணிகளை தேடியறிவதிலும் மிகவும் இக்கட்டான சூழ்நிலை உள்ளது. சட்டநாதர் ஆலய வரலாறு பற்றிய ஐதீகங்களின் படி தற்போது மந் திரிமனைக்கு வடக்கே சில ஜார் தொலைவிலே அமைந்துள்ள இக்கோயிலானது சட்டைமுனி என் றும் சித்தர் சமாதியாக விளங்கிப் பின்னர் சிவ னாலயமாகத் தோற்றம் பெற்றதெனவும் ஒருசாரர் நம்புகின்றனர்.[58] இக்கருத்தோட்டத்தினை ஆராய்ந் தால் பள்ளிப்படை ஆலயங்கள் போன்று இந்த ஆலயமும் அமைந்திருக்கலாமோ என்ற ஐயமும் உண்டாகின்றது. பள்ளிப்படை ஆலயங்கள் பெரும் பாலும் இறந்தோர் சமாதி மீது கட்டப்படும் ஆலயங் களின் வகையைச் சார்ந்தவை. முற்காலத்தில் இறந்தவர்களை துஞ்சினார், பள்ளி கொண்டார், என்ற சொற்பதங்களிலேயே பழந்தமிழ்நூல்கள் அழைக்கின்றன. இவ்வாறு சோழ மன்னர்கள் சிலரை அடக்கம் செய்த சமாதிகளிலும் இத்தகைய சிவா லயங்கள் தமிழகத்தில் காணப்படுகின்றன. விஜயா லய சோழீஸ்வரம், இராஜராஜேஸ்வரம் போன்ற ஆலயங்கள் ஒரு சிலவற்றை இவ்வாறு குறிப் பிடலாம். பொலநறுவாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஐந்தாம் சிவதேவாலயம் இத்தகையதொரு பள்ளிப்படை ஆலயம் என்பதனை அதன் உட்புறத் தில் அகன்று எடுக்கப்பட்ட ஈழத்தாழிகள் உறுதிப் படுத்துகின்றன.[59] இறந்தோர்கள் என்பவர்களை முன்னோர் அழிந்தவர்களாகக் கருதுவதில்லை. உடல் தான் அழிகின்றது. ஆத்மா அழிவதில்லை என்பது இந்துக்களின் கோட்பாடாக இருப்பதனால் இறந்தோர்கள் சக்தி படைத்தவர்களாக இருந்தால் அவர்களது ஞாபகமாக அவரது உடலை புதைத்த இடத்தில் ஒரு சமாதிக் கோவில் அமைத்து அதில் அவர்களது ஆத்மா என்னும் அழியாத அற்றல் உறைவதாகவும் நம்பி வழிபட்டு வந்தனர். ஆகை யால் சித்தர், யோகியரையும் இவ்வாறு வழிபட்டு வரும் மரபினையும் காணமுடியும். தற்போது மாவீரர் துயிலும் இல்லங்களும் இவ்வுண்மையினை புலப் படுத்துவதாகக் கொள்ளலாம். எனினும் சட்டை முனிச் சிட்டர் சமாதி தமிழகத்தில் அமைந்துள்ள தாகவே 'சித்தர் ஞானக்கோவை' முதலிய நூல் கள் குறிப்பிடும்.

ஆதலால் சட்டநாதர் சிவாலயத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் இந்த ஐதீகம் எந்தளவிற்கு உண்மையானது என்பதும் ஆய்விற்குரிய விடயமாகும். சட்டநாதர் ஆலயம் அதன் முன்னர் கட்டப்பட்ட இடத்தில் தான் இருக்கின்றதா என்பதும் தெளிவுபடுத்தப்பட வேண்டியதொரு அம்சமாகும். தமிழகத்திலே பதினெண் சித்தர்களில் ஒருவராகக் கருதப்படும் சட்டைமுனி, பாம்பாட்டி சித்தரின் குருவாக விளங்கியவர் எனவும் அவரது காலம் கி.பி 10ம்- 12ம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டதாக இருக்கலாம் எனவும் கருதுவதுண்டு[60]. இவ்வாறான ஒரு மரபு இருந்திருக்குமானால் தமிழ் நாட்டுச் சித்தரான சட்டைமுனிக்கும் இச்சிவாலயத்துக்குமுள்ள தொடர்பு யாது என அறியப்படுவதும் அவசியமானதொன்றாகும். சட்டநாதேஸ்வரர் என்ற பெயரில் இதுவரை எந்த விக்கிரகக் கலைக் கொள்கைகளும் இடம் பெற்றதாகக் குறிப்புக்களும் கிடைக்கவில்லை.[61] யாழ்ப்பாண வைபவமாலையில் சட்டநாதேஸ்வரர் என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. சிவன் இறைவன், ஈஸ்வரன், பைரவர் என பொருள்படும் குறிப்புக்களும் உள்ளன. இந்த வகையில் பைரவ மூர்த்தத்தில் ஒன்றாக சட்டநாதர் மூர்த்தமும் பேசப்படும். புராண வரலாற்று ஐதீகங்களின் படி இரண்யன் என்னும் அரக்கனைக் கொன்று அவனது எலும்பினைக் கதாயுதமாகவும் தோலினைச் சட்டையாகவும் தரித்தவராதலால் சட்டைநாதர் ஆனார் என்னும் புராதன விளக்கமும் ஒன்று உள்ளது. ஆனால் இதனை உறுதிப்படுத்தும் ஆதாரமும் விக்கிரகவியல் ஆதாரங்களோ காண்பது அரியதாகும். இத்தகைய ஐதீகங்களின் அடிப்படையில் சட்டைநாதர் என்பது சட்டைநாதேஸ்வரர் ஆகியிருக்கலாம்.

எனவே இவ்வாலயத்தின் தோற்றத்திற்கான வரலாற்றினை முழுமையாக அறிவதற்குரிய வரலாற்று ஆதாரங்களும் இதுவரை கண்டறியப்படவில்லை. யாழ்ப்பாண வைபவமாலையை ஆதாரமாகக் கொண்டே இவ்வாலயத்தின் வரலாறு பின்வருமாறு கூறப்படுகின்றது. அக்குறிப்பின் படி முன்னரே கூறியவாறு நான்கு காவற் கோயில்களில் வடதிசையில் சட்டநாதேஸ்வரர் கோயிலும் தையல் நாயகி அம்மன் கோயில், சாலை விநாயகர் கோயிலும் கட்டுவித்து வாழ்ந்தனர்[62] என அறிய முடிகின்றது. ஆகையால் பாண்டிய மன்னரினால் அனுப்பி வைக்கப்பட்ட ஆரிய சக்கரவர்த்தியானவர் கெங்கதார ஐயருடன் ஈழம் வந்து நல்லூர்ப் பகுதியில் சோதிடம் கூறும் நன் முகூர்த்தத்தில் கோயில் எழுப்பி அதன் அருகே கெங்காதர ஐயரும் அன்னபூரணி என்னும் பத்தினியும் வாசம் செய்ய அக்கிரகாரமும் உண்டாக்கி காவல் தெய்வங்கட்கு கோயில்கள் எடுப்பித்த வரலாறும் இவ்வாறு காணப்படுகின்றது.

சட்டநாதர் கோயிலானது விஜயகூழங்கைச் சக்கரவர்த்தியினால் ஸ்தாபிக்கப்பட்டது எனவும் நல்லூரை இராஜதானியாகக் கொண்டதால் மூலவர் நல்லநாதர் எனவும் அம்மன் நல்லை நாயகி எனவும் அழைக்கப்பட்டது. இவ்வாலயம் சட்டநாதர் சிவன் எனவும் அழைக்கப்பட்டது எனவும் பிறிதோர் குறிப்புமுள்ளது.[63] மேலும் நல்லூர் இராஜதானி வரலாற்றினை எடுத்துக்கூறும் கட்டிடங்களிலும் எச்சங்களிலும் ஆரம்பக் கட்டமைப்பில் நல்லூர்க் கந்தனாலயம் சட்டநாதர் சிவாலயம் போன்ற நான்கு புராதன ஆலயங்களும் பூதவராய கோயிலும் ஆரம்பக் கட்டமைப்பில் அதிக மாற்றிங்களின்றி தொல்லியற் சின்னங்களாவே காணப்படுகின்றன எனவும் அத்துடன் மந்திரிமனை, யமுனாஏரி, பூதத்தம்பி வளைவு, முத்திரை மண்டபமும் அவற்றுள் மிக முக்கியமானவையாகவும் கருதப்படும். புராதன அரண்மனை அமைந்துள்ள சங்கிலித் தோப்பினை ஊடுருவி பருத்தித்துறை வீதியின் மேற்குக்கரையில் சட்டநாதராலயம் காணப்படுகின்றது. கி.பி 1478ல் சிங்கைப் பரராஜசேகரன் அரசனானதும் சப்புமல் குமாரயாவின் படை எடுப்பால் அழிவுற்ற கட்டிடங்களைப் புனரமைத்து நல்லூர் இராஜதானியை மீண்டும் சிறப்பான நகரமாக்கினான். இவனால் இவ்வாலயமும் புதுப்பிக்கப்பட்டது என்ற கருத்தினை[64] நோக்கினால் யாழ்ப்பாண வைபவமாலை கூறும் சிங்கை யாரியச் சக்கரவர்த்தி என்பது விஜயகூழங்கைச் சக்கரவர்த்தியா அல்லது கனகசிங்கையாரியனா என்ற குழப்பமும் எழுகின்றது. யாழ்ப்பாண வைபவமாலையின் குறிப்பின்படி கொண்டால் இந்த சிவாலயத்தின் காலம் கி.பி 13ம் நூற்றாண்டாக இருக்க வேண்டும்.

இறைபக்தி மீதூரப் பெற்ற கனகசிங்கையாரியன் நல்லூர் இராஜதானியில் நாற்றிசையும் ஆலயங்களைக் கட்டுவித்தபோது இராஜதானியின் வடக்கிலே சட்டநாதர் சிவாலயம் அமைந்தது என்பது பொதுவாகப் பலரும் ஏற்றுக் கொண்ட கருத்தாகும்.[65] எனினும் இதன் மூலமூர்த்தியானது சங்கிலி மன்னனால் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டதென்ற ஐதீகமும் அப்பகுதி மக்களிடையே நிலவுகின்றது. ஒரு சமயம் சிவாலயம் போர்த்துக்கீசரால் அழிவுற்று மீண்டும் பின்வந்த

மன்னர்களால் புதுப்பிக்கப்பட்டதென்பதால் அச்சமயத்தில் லிங்கமூர்த்தியானது இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டிருக்கலாம். இக் கோயிலுடன் தொடர்புடையதாக அருகிலே ஒரு மூலையில் மீனாட்சி சொக்கநாதர் ஆலயம் அமைந்துள்ளது. ஆதியில் சட்டநாதர் ஆலயத்தில் வழிப்படப்பட்ட தட்சணாமூர்த்தி வடிவம் பின்னர் இவ் ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. ஆலயத்தின் மேற்கு வீதியில் பாலகதிர்காமக் கந்தனாலயம் அமைந்திருக்கின்றது. இம்மூன்று தேவஸ்தானங்களும் ஒரே குரு பரம்பரையினரால் பூசைகளும் வழிபாடுகளும் நிர்வாகிக்கப்பட்டு வருகின்றன. மேலும் யாழ்ப்பாண வைபவமாலை கூறும் கருத்திற்கு ஆதாரமாக முக்கியமானதொரு வரலாற்றுத் தடயம் ஒன்றினை ஆய்வாளர் காட்டியிருப்பது இச் சிவாலயம் பற்றிய ஆய்விலே புதியதொரு விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும். சட்டநாதர் சிவாலயத்தின் மணிக் கோபுரத்தில் இன்று வரை பாவனையிலுள்ள ஆலயமணியிலே பொறிக்கப்பட்டுள்ள தாமிர சாசனமானது யாழ்ப்பாண வைபவமாலையில் கொடுக்கப்பட்டுள்ள ஆலயத்தின் பெயரை உறுதி செய்வதாக விளங்குகின்றது.

**சாலிவாகன சகாப்தம் 1784 கலியப் 4963 துந்துபி வருடம் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த சட்டநாதர் கோயிலுக்கு - ம"**[65]

என்று அவ்வாசகம் அமைந்துள்ளது. போர்த்துக்கீசரின் கலையழிப்புக் கொள்கைக்கு இவ் ஆலயமும் உட்பட்டிருந்தாலும் அக்கோயிலின் புராதன கலை மரபை அடையாளம் காட்டும் சில அம்சங்களை மணிக்கூட்டுக் கோபுரத்தின் அடிப்பகுதியிலும் கோயில் உட்பிரகாரத்துக் கூரையிலும் இன்னும் காணலாம். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வின் படி இவ்வாலயத்தின் பழைய அழிபாடுகளிடையே லிங்கமும், ஆவுடையார் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவற்றுள் 15 நீளம் 13 அகலமும் உடைய சதுர வடிவமான ஆவுடையார் மிகப் பழைமையானதென அதன் அமைப்பு எடுத்துக்காட்டும். சோழருக்குப் பிற்பட்ட கா[illegible] இவை பெரும்பாலும் வட்ட வடிவிலே அமைந்த[illegible]. சதுர வடிவிலே அமைக்கும் முறை சோழர் காலத்திற்குரிய சிறப்பம்சமாகும்.[66] யாழ் கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட கி.பி 11ம் நூற்றாண்டுக்குரிய இராஜேந்திரச் சோழன் கல்வெட்டு ஒன்றும் சோழர்களது தானம் பற்றிய செய்திகளைக் குறிப்பிடும்போது 'சாத்தன் என்பான் நல்லூரில் இருந்த சிவன் ஆலயம் ஒன்றிற்கு சாவா மூவாப் பேராடுகளைத் தானம் செய்ததாக' அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.[67] இவ்வாலயம் சட்டநாதர் சிவன் கோவிலா அல்லது கைலாசநாதர் சிவன் கோவிலா என்பது தெளிவில்லாத போதிலும் கலாநிதி சி.க. சிற்றம்பலம் என்பார் அது சட்டநாதர் கோயிலாக இருக்கலாம் எனவும் கருதுவர்.[68] திருகோணமலையினை மையமாக வைத்துப் பாடப்பட்ட தட்சண கைலாச மான்மியத்தின் பதினைந்தாம் அத்தியாயம் யமுனாஏரி பற்றிய சிறப்புப் பகுதியாக அமைந்துள்ளது. அங்கு யமுனாஏரி பற்றியும் சட்டநாதர் சிவாலயம் பற்றிய குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளன. அதன் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக்களும் அங்கு விபரிக்கப்பட்டிருக்கின்றது. கி.பி 1993 - 1070ற் இடையில் ஈழம் மும்முடிச் சோழ மண்டலமாக விளங்கிய காலத்தில் பல கோயில்கள் சோழ மன்னர் பிரதானிகளால் ஈழத்தின் பல பாகங்களிலும் கட்டப்பட்டிருக்கலாம்[69] என்பதனை இவை உணர்த்துகின்றன.

தமிழகத்திலே 1ம் இராஜராஜனுடைய விருதுப் பெயர்களிலே அமைந்த சிவாலயங்களாக அருள்மொழி ஈஸ்வரம், ஜெயம் கொண்ட சோழேஸ்வரம், இராஜராஜேஸ்வரம் என்பன காணப்படுகின்றன. அவ்வாறே ஈழத்திலும் சட்டைநாததேஸ்வரர் பெயரும் 1ம் இராஜராஜனின் விருதுப் பெயர்களில் ஒன்றான ஜனநாதன் என்பதனைத் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். ஈழத்திலே சோழராட்சிக் காலம் பொலநறுவா அரசு ஜனநாதமங்கலம் எனப்பட்டது. தமிழகக் கோயில்களிலும் சட்டைநாத தேஸ்வரர் எனும் பெயரில் ஒரு தலம் உள்ளது. எனவே 'ஜனநாதஈஸ்வரம்' என்ற நாமம் ஜடைநாத ஈஸ்வரமாகிச் சட்டநாத ஈஸ்வரம் என இன்று வழங்கி வருவதாகக் கருதலாம்.[70] இக்கருதுகோளை உறுதிப்படுத்துவதாயின் அதற்கான இலக்கிய தொல்லியல் சாசன மூலாதாரங்களைத் தேடிப்பெறுதல் அவசியமாகும். மேலும் யாழ்ப்பாணம் கோட்டைக் கல்வெட்டு சாசனப்படி அங்கு கூறப்படும் சிவாலயம் பெயர் குறிப்பிடப்பட்டாலும் அக்கோயில் காலம் சோழர் காலத்தில் கிடைத்த கல்வெட்டின்படி கி.பி 11ம் நூற்றாண்டாக இருக்கவேண்டும். கைலாசநாதர் ஆலயம் 1ம் சிங்கையாரியச் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டதாகக் கருதப்படுவதால் அக்கோயிலின் காலம் கி.பி 13ம் நூற்றாண்டாகலாம் என்பதனால் சட்டநாதர் சிவாலயமே கோட்டைச் சாசனம் குறிப்பிடும் சிவாலயம் சட்டநாததேஸ்வரமாக் கொள்ளுவதற்கிடமுண்டாகின்றது.

பின்னர் செண்பகப் பெருமாள் படையெடுப்பினால் அவ்வாலயம் அழிவுற்றிருக்கலாம், கி.பி

13ம் நூற்றாண்டிலே 1ம் சிங்கையாரிய சக்கரவர்த்தியால் நாற்றிசைக் கோயில்களுள் ஒன்றாக திரும்பவும் கட்டப்பட்டிருக்கலாம் என முடிவுக்கு வருவதற்கு சட்டநாதர் ஆலயத்தின் ஈழத்திலுள்ள ஏனைய சோழர்காலக் கோயில்களுடன் ஒப்பிட்டு ஆராய்வது பொருத்தமானதாகும். அப்போது இக் கோயிலின் வரலாறு மேலும் தெளிவு பெறும். கி.பி 1477 1518 வரை யாழ்ப்பாண அரசினை ஆட்சி செய்த பரராஜசேகரச் சிங்கையாரியன் இக்கோயிலின் வளர்ச்சியில் புதிய மாற்றங்களைச் செய்தான். போர்த்துக்கேய தளபதி பிலிப் டி. ஒலிவெய்ராவின் குறிப்புக்களிலிருந்தும் அவர்களது படை எடுப்பினால் அழிக்கப்பட்ட ஆலயங்களில் இதுவுமொன்றாகும்[71] என்பதற்கான ஆதாரங்களும் காணப்படுவதனால் இக்கோயிலின் அழிபாடுகளும் ஐதீகங்களும் மேலும் ஆராயப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாக உள்ளன.

இன்றைய நல்லூர் பிரதேச எல்லைகளாக வடக்கே கோப்பாய் கிழக்கிலே சலாங்கோட்டை, நாவற்குழி தெற்கும் மேற்கும் பண்ணையாறும் கொக்குவில் கோண்டாவில் ஆகிய நகரங்களும் காணப்படுகின்றன. தனித்திறன் கொண்ட பாரம்பரியம் சைவத்தமிழ்ப் பண்பாடு யாழ்ப்பாணத்தில் காணப்பட்டதால் யாழ்ப்பாண அரசின் தோற்றத்துடன் அது மேலும் சிறப்படைந்திருந்தது. சிங்கை நகர் யாப்பாபட்டுன, நல்லூர் என்பன இந்த அரசின் இராஜதானியாக வரலாற்று நூல்கள் வேறுபட்ட தகவல்களைத் தந்திருந்தாலும் அவை தலைநகர் மாற்றங்களைக் குறிக்கும் எனவும் கருதலாம். எனினும் நல்லூரைத் தவிர வேறு ஒரு இராஜதானிக்குரிய கட்டிட அழிபாடுகள் யாழ்ப்பாணத்தில் காணப்படாமையால் போர்த்துக்கீசரால் அழிக்கப்படும் வரை நல்லூரே இராஜதானியாக விளங்கியதெனவும் கொள்ளப்படும். நல்லூர் இராஜதானியாக விளங்கிய காலத்தில் சிறப்புற்றிருந்த சட்டநாததேஸ்வரர் ஆலயம் இன்று புதுப்பொலிவுடன் பஞ்சலிங்கம் பிள்ளையார் பரிவார மூர்த்தங்கள் வள்ளி, தெய்வானை, சமேத முருகன், நவக்கிரகம், சண்டேஸ்வரர் நாயன்மார் நால்வர் என்பவை கொண்டு வழிபடப்படும் சிவாலயமாக விளங்குகின்றது. இக்கோயில் 1998 இந்து கலாசார அபிவிருத்தி அமைச்சில் பதியப்பட்ட கோயில்களில் ஒன்றாக வுள்ளது. இவ்வாலயம் மூன்று வீதிகள் கொண்ட மூர்த்தி, தல, தீர்த்தச சிறப்புடையதாக நல்லூர் கிழக்கில் பருத்தித்துறை வீதி, கிழக்கில் சிறப்புடையதாக அண்மையில் அமைந்து அருளொளி வீசும் ஆலயமாக காட்சி தருகின்றது.

## வீரமாகாளி அம்மன் கோயில்

ஈழத்திலே காணப்படும் சக்தி ஆலயங்களில் காளி அம்மன் ஆலயங்களில் அதிலும் யாழ்ப்பாணத்திலே மட்டும் பதினாறுக்கு மேற்பட்ட காளி அம்மன் ஆலயங்கள் காணப்படுகின்றன.[72] அவற்றிலே மிகப் புராதனமான காளியம்மன் ஆலயமாக நல்லூர் வண்ணை வடக்கிலே அமைந்திருக்கும் வீரமாகாளியம்மன் விளங்குகிறது. சக்தி வழிபாட்டின் மிகப் பழைமையான சுவடுகளை ஈழத்திலே மட்டுமன்றி இந்தியா தென்னாசியா ஏன் மேற்கு நாடுகளிலும் கூடச் சிறப்பாகக் காணமுடிகிறது. சக்தி வழிபாடும் அதன் முக்கியத்துவம் பற்றியும் பாரத நாட்டிலே கிடைக்கப்பெற்ற தொல்பொருட்கள் இலக்கியங்கள், நாணயங்கள், கல்வெட்டுக்கள் போன்ற வரலாற்றுச் சாசனங்கள் உறுதி செய்துள்ளன. வங்காள தேசத்திலே இன்றும் சாக்த நெறியானது பிரதான வழிபாடாக விளங்குகிறது. "தாய்மை" எனும் உயர்நிலைத் தகுதியானது இந்து நாகரிக சமுகத்திலே மேலான ஒரு தெய்வீக நிலையைப் பெற்றுள்ளது. பூரணமான அன்பு, பூரணமான தியாகம், பூரணமான பொறுமை, பூரணமான தூய்மை, எதையும் மன்னிக்கும் சுபாவம், தன்னலமறுப்பு ஆகிய உயர் மானிட மாண்புகளின் உறைவிடமாகத் தாய்மை இந்து சமயத்திலே மதிக்கப்பெற்றது. இத்தகைய அருட்குணங்களின் சக்தியினால் அன்னையை உலக அன்னையாக, தெய்வத்தாயாக வணங்கத் தலைப்பட்டனர்.

தாய்த் தெய்வ வழிபாடானது சிந்துவெளி முதல் வேத காலத்திலும் தொடர்ந்து இன்று வரையும் இயற்கை எனும் மாபெரும் சக்தியாக இயற்கை அன்னை எனும் சக்தி தத்துவமாக வழிபாட்டிற்குரியதாக இந்துப் பண்பாட்டிலே நிலை பெற்று விளங்குகிது. ஈழத்தில் காணப்படும் சச்தி வழிபாட்டினை அதன் வளர்ச்சிப் பரிமாணத்தினை அறிவதற்கு இங்கு கிடைத்துள்ள இலக்கியங்கள், தொல்லியற் சின்னங்கள், சுடுமண் படிமங்கள், செப்புத் திருமேனிகள், முத்திரை முதலியவை சிறந்த சான்றாதாரங்களாக அமைகின்றன. இலக்கிய ஆதாரங்களையும் பௌத்த சமயத்திலே எழுதப்பட்ட மகா வம்சம், தீப வம்சம் போன்றவற்றில் மறைமுகமாகக் கூறப்பட்ட சான்றுகள் ஈழத்துப் புராதன இந்து சமயம் பற்றி அறிவதற்கும் உதவுகின்றன. கி.பி. 14 ஆம் 15 ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட சிங்களத் தூது இலக்கியங்களான சந்தேச இலக்கியங்களிலும் சிறியளவிலான செய்திகளைக் காணமுடியும். 1892 ஆம் ஆண்டிலும் 1893 ஆம்

ஆண்டிலும் எச்.கி.பி. பெல் என்பவரால் எழுதப்பட்ட குறிப்புக்களில் ஈழத்தில் நிலவிய காளியம்மன் வழிபாடு பற்றிய சில தகவல்களையும் கொண்டுள்ளன. அநுராதபுரம், பொலநறுவா போன்ற இடங்களில் சிவ, விஷ்ணு ஆலயங்களுடன் காளி கோயில் இருந்ததாகவும் பெல் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.[73] பதவியாவிலுள்ள காளி கோயில் பற்றியும் அதனைப் பராமரித்து வந்த 'காளி கணம்' பற்றியும் கல்வெட்டுக் குறிப்பும் காணப்படுகின்றது.

வேதாகம முறையிலே நடைபெறுகின்ற சக்தி வழிபாடு மட்டுமன்றி கிராமிய வழிபாட்டு முறையிலும் சக்தி வழிபாடு பேணப்பட்டு வந்துள்ளது. இவ்வாறான காளி கோயிலொன்று கழுத்துறையிலுள்ளது. இவ்வாறான காளியம்மன் வழிபாடு ஈழத்தில் பல்வேறு இடங்களில் பல்வேறு பெயர்களில் வழிபடப்பட்டு வந்துள்ளது. அவற்றுள் காளி, காளிகா பரமேஸ்வரி, வீரகாளி அம்மை, ஸ்ரீ பத்ர காளி அம்மா முதலிய நாமங்கள் குறிப்பிடத்தக்கன. 'பஞ்ச கம்மாளர்' என்ற பிரிவினரே ஈழத்திலேயுள்ள பெரும்பாலான காளி கோயில்களைப் பரிபாலனம் செய்து வருகின்றனர்.[74] வட இலங்கையில் மாரியம்மன் வழிபாடும் சிறப்புற்று விளங்கும் ஒன்றாகும். பயத்திலிருந்து காப்பாற்றும் தெய்வமாகவும் வெற்றியைத் தரும் தெய்வமாகவும் மக்கள் காளிதேவியை வழிபட்டு வருகின்றனர். பராசக்தியின் எண்ணற்ற வடிவங்களில் காளி வடிவமும் ஒன்றாகும். சாந்த சொருபியான பராசக்தி துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதற்கு கோபாவேஷமாக எழுந்தருளும் நிலையில் ஸ்ரீ பத்திரகாளியாக வடிவம் கொள்வதனைப் புராதன இலக்கியங்களிலும் காணலாம்.

வட மொழியிலே காளி என்றும் காளிகா என்றும் வரும் சொற்பதங்கள் தமிழிலே காளி எனத் திரிபுபட்டது. பராசக்திக்கு அன்னியமாகக் காலம் இல்லை. அவளே கால சொரூபிணியாக விளங்கி அகிலமெங்கும் மாறுதல்களை விளைவித்து வருபவளாகும். அவளே காலமாக இருந்து கொண்டு காலனாம் மிரத்யுவை மரணத்தை முடிவு செய்வதனால் "மகாகாளி" எனவும் அழைக்கப்பட்டாள் என மகாகவி காளிதாசர் குறிப்பிட்டுள்ளமை இதனைப் புலப்படுத்தும். அன்னையானவள் பார்வதியாக இருந்தபோது மஞ்சல் நிறமாகவும் காளியாக விளங்கும் போது கறுப்பாகவும் விளங்குகிறாள். அக்கினியில் சுவாலையாகவும் உக்கிரமான ரூபமுள்ளவளாகவும் பிரளயகால ராத்திரியாகவும் சங்கார காலத்தில் விளங்குவாள். வழிபடும் பக்தர்களுக்கு அனைத்தையும் வசமாகச் செய்யும் காளி மாதா 'அஸ்டகாளி மாதாக்கள்' என எண் வகையாகக் கூறப்படுகிறாள்.[75] அவையாவன காளி, மகாகாளி, பத்திரகாளி, சண்டிகா, சாமுண்டி, பைரவி, காலாந்தரி, சர்வமதிமண்டி என்பனவாகும். இவ்வாறு ஈழத்துச் சக்தி ஆலயங்களில் காளியம்மன் ஆலயங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தனவாகும்.

யாழ்ப்பாணத்திலுள்ள சக்தி ஆலயங்களில் தனித்துவமும் பெரும் சிறப்பு வாய்ந்ததாகவும் வண்ணார்பண்ணை அருள் மிகு வீரமாகாளியம்மன் விளங்குகின்றது. இவ்வாலயம் யாழ்ப்பாண நகரின் மத்தியிலிருந்து சுமார் ஒருமைல் தூரத்தில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தின் தொன்மைக்கால வரலாற்றை நோக்கும் போது இக்கோவிலுக்கும் நல்லூர் இராஜதானியை ஆண்ட யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திக்கும் நெருங்கிய தொடர்புள்ளதென்பது புலனாகும். ஆரியச் சக்கரவர்த்திகள் பற்றியும் அவர்களது யாழ்ப்பாண வருகை பற்றியும் கூறப்படும் வரலாற்றுச் செய்திகள் பல. அவற்றுள்ளே ஐதீகங்களும், ஊகங்களும் வரலாறுகளும் கலந்து உண்மை வரலாற்றின் போக்கினை அறிய முடியாதவாறு பெரும் குழப்பத்தை உண்டுபண்ணுபவையாக மாறிவிட்டன. சோழப்பேரரசின் கலிங்கத்துப் போரின்போது சிதறியோடினர் எனவும் அவர்களில் சிலர் இராமேஸ்வரத்தில் இருந்து அங்கு பாண்டிய வம்சத்தில் மணம் புரிந்து கொண்டு அரச காரியங்களை ஆற்றிவந்தனர் எனவும் அவர்களில் ஒரு பிரதானியை யாழ்ப்பாணம் அனுப்பி நல்லூரில் அரசனாக்கினர் என்பதும் ஒரு ஐதீகமாகும்.[76] இராமேஸ்வரத்தில் இருந்து வந்தபடியால் அவர்கள் தம்மை ஆரியர் வழி வந்தோர் எனவும் ஆரியச்சக்கரவர்த்திகள் எனவும் கூறிக் கொண்டனர் எனப்படும்.

இதனைவிட இங்ஙனம் யாழ்ப்பாணத்து நல்லூரில் ஆட்சி செய்த முதல் மன்னன் சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி எனப்படுவதனால் அவன் கலிங்க மாகன் அல்லது விஜயகூழங்கைச் சக்கரவர்த்தியா என்ற குழப்பம் இன்னும் நீங்கியதாகத் தெரியவில்லை. நல்லூரில் நாற்றிசைக் கோயில்களை அமைத்த மன்னன் யார் என முடிவு செய்வதில் இத்தகைய வரலாற்றுச் சிக்கல் காணப்படுகின்றன. ஏனெனில் மதுரையில் மறைந்து வாழ்ந்த கலிங்க இளவரசன் கி.பி 1215ல் ஈழம் வந்து பொலநறுவைப் போரில் தோற்ற பின்னர் வட இலங்கை வந்து பாண்டிமழவன் என்ற பிரதானியால் முடி சூட்டப்பட்டு யாழ்ப்பாண மன்னன் ஆகினான் எனவும் கலாநிதி குணராசா கருதுவார்.[77] இம்மன்னன் சிங்கை நகரின்

பெயரைத் தனது பெயருடன் இணைத்து இராமேஸ் வரத்துப் பிராமண அரச மரபில் திருமணம் செய்து உபவீதம் அணிந்து தம்மைச் சிங்கையாரியச்சக்கர வர்த்தி என அழைத்துக் கொண்டதாகவும் கருதப் படும். இவ்வரசனே நாற்றிசைக் காவற் கோயில் களில் ஒன்றான வீரமாகாளிஅம்மன் கோயிலையும் கட்டுவித்தான் எனவும் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை யின் யாழ்ப்பாண சரித்திரம் கூறும்.[78] ஆனால் யாழ்ப்பாணத்து வைபவமாலையின் கருத்துப்படி அவ் வாறு கோயில்கள் கட்டப்பட்ட காலம் கி.பி. 948 என அறியப்படுவதால் இக்கோயிலின் காலம் கி.பி 10ம் நூற்றாண்டாகவும் அமையலாம். கலிங்கச் சக்கரவர்த்தி காலமோ கி.பி. 13ம் நூற்றாண்டாகக் கூறப்படுவதனால் வீரமாகாளி அம்மன் கோயிலின் ஆரம்பகாலத்தினை நிர்ணயிப்திலும் சிக்கல்கள் இருக்கின்றன. கலிங்கமாதனே விஜய கூழங்கைச் சக்கரவர்த்தியாவான்[79] என்ற கருத்தும் வரலாற்று அறிஞர்களிடையே காணப்படுவதும் இதற்கோர் காரணமாகும்.

தற்கால ஆய்வாளர்கள் சிலரின்கருத்துப் படி விஜயகூழங்கைச் சக்கரவர்த்தியும் கலிங்க மாக னும் இரு வேறு அரசர்கள் என்ற கருத்தும் மேலோ ங்கிக் காணப்டுகின்றது. பண்டிதர் பொ. ஜெகன்நா தன் என்பவர் வலம்புரி பத்திரிகையில் "யாழ்ப்பாணத் தமிழரசன் காலமும் வரலாறும்" பற்றித் தொடராக எழுதி வரும் விடயங்களில் இருந்து இந்தக் கருத்துப் பல ஆதாரங்களுடனும் முன்வைக்கப்பட் டுள்ளது. கலிங்கமாகன் கி.பி. 1215 இல் ஈழம் வருமுன்னரே ஈழத்து வடபகுதியில் கி.பி 948 முதல் நல்லூரில் யாழ்ப்பாண அரசு இருந்ததெனவும் அவர்கள் பராசசேகரன், சகராஜசேகரன் எனும் பட்டப் பெயரில் கொண்டிருந்தனர் என்றும் ரிஷபக் கொடியுடையவர்கள் எனவும் இராசநாயக முதலி யாரின் நூலின் மூலம் அறியலாம்[80] எனவும் கூறப்பட் டுள்ளது. எனவே முதலாம் சிங்கையாரியச்சக்கர வர்த்தி விஜயகூழங்கைச் சக்கரவர்த்தியாகவே பண்டி தர்.ஜெகன்நாதன் கருதுவார். இத்தகைய வரலாற் றுச் சிக்கல்கள் வரலாற்றாய்வாளர்களால் மேலும் தெளிவுபடுத்தப்பட வேண்டிய செய்திகளாகும். அத னால் கலாநிதி குணராசா அவர்கள் கருதுவது போல் யாழ்ப்பாண அரசு அன்னியப் படையெடுப்புக்க ளுக்காளாகி மேற்குறித்த கோயில்களும் அழிவுகட் குள்ளாகி மீளவும் அவ்வப்போது ஆட்சி புரிந்த யாழ்ப்பாண அரசர்களால் திரும்பவும் கட்டப்பட் டிருக்க வேண்டும். அதன்படி நோக்கினால் கனகசிங் கையனின் மகன் பரராஜசேகரன் புகனேகபாகுவால் அழகுபடுத்தப்பட்ட நல்லூர் இராசதானியை மேலும் புனரமைத்து நாற்றிசைக் கோயில்களையும் புனருத் தாரணம் செய்து மேற்குத் திசையில் கி.பி 1470 ஆண்டில் வீரமாகாளியம்மன் கோயிலையும் வடக் கிலே சட்டநாதர் சிவாலயத்தையும் அமைப்பித் தான்[81] எனக்கருதலாம். மிகவும் கஸ்டமான, ஆபத் தான போர் நடவடிக்கைக் காலங்களில் அக்கால மன்னர்கள் யுத்தம் செய்வதற்கு முன்னர் தமது வாளை அம்மனின் திருமுன் வைத்து ஆசி வேண்டிப் பெற்றுச் செல்வார் எனவும் அறிய முடிகிறது.

வீரமாகாளியம்மன் ஆலயமும் சிங்கையாரியச் சக்கரவர்த்தியால் மேற்றிசைக் காவலுக்காக கட்டப் பட்ட முதற் கோயில்களுள் ஒன்றாகக் கருதப் படுவதனால் இது நல்லூர் இராஜதானி எல்லைக்குள் அண்மையில் (வண்ணார் பண்ணை) இருந்ததால் நல்லூருக்குள் நுழைய முயன்ற பல போர்கள் இப்பகுதியில் நிகழ்ந்ததாக யாழ்ப்பாண வைபவ மாலையில் இருந்து அறிய முடிகிறது. 'யுத்தம் நடப்பதற்கு நல்லூர் கோட்டையின் மேற்கு வாசற் புறத்தே வீரமாகாளிஅம்மன் கோவிலுக்கு முன்னா லுள்ள வெளியையே தளமாகக் கொண்டு தமிழர் கள் வாள் முதலிய படைக்கலன்களைக் கொண்டு துப்பாக்கி ஏந்திய பறங்கி வீரர்களை எதிர்த்து நின்றனர்'[82] எனக் குறிப்பதனால் யாழ்ப்பாண மன்னர்களின் போர்க்கடவுளாக வீராமகாளி அம் மன் விளங்கியிருக்கலாம். போர்த்துக்கீசரால் தரை மட்டம் ஆக்கப்பட்ட ஆலயங்களில் இதுவும் ஒன்றாக இருக்கலாம். இன்று அவ்விடத்திலே பெரியதொரு ஆலயம் கட்டப்பட்டுள்ளதால் பழைய ஆலயத்தின் சிதைவுகளையோ, சான்றுகளையே காண முடிய வில்லை. கோயில் சுற்றாடலிலோ, சூழலிலோ அவை மறைந்தும் இருக்கலாம்.

செகராஜசேகரன் என்ற பெயரில் சங்கிலி மன் னன் அரசனாக இருந்தபோது இரு தடவைகள் போர்த்துக்கீசருடன் போர் நடந்தது. கி.பி 1560ம் ஆண்டிலே போர்த்துக்கீசரின் கடுமையான நிர்ப்பந்தம் காரணமாக வித்தியா பண்டார என்ற ஜெனரல் ஒருவன் சங்கிலிய மன்னனுக்குதவுவதற்கு வந்து ஓர்ஒப்பந்தமும் நிறைவேற்றப்பட்டது. வீரமாகாளியம் மன் ஆலயத்திலே போர்த்துக்கேயருக்கெதிராக சத்தியப்பிரமாணமும் எடுத்துக்கொண்டான். எனினும் துரதிஷ்டமாக வெடி மருந்துக் களஞ்சியத்தில் ஏற்பட்ட விபத்திலே வித்தியாபண்டார இறந்தான். அவன் நினைவாகச் சங்கிலிய மன்னன் பூதராயர் கோயில் ஒன்றைக் கட்டுவித்தான் எனவும் கூறப்ப டும். போர்த்துக்கீசருடரான முதலாவது யுத்தத்தில்

சங்கிலி மன்னன் வெற்றியடைந்த போதும் கி.பி 1620 ஆண்டில் தோல்வி அடைய நேரிட்டது. ஆக்கிரமிப்பாளர் இக் கோயிலை அழிக்க முற்பட்ட போது சிங்கம் ஒன்று மயிரைச் சிலிர்த்துக்கொண்டு நின்றது கண்டு அவர்கள் அதிசயித்து அவ்விடத்தை விட்டு அகன்றனர் எனவும் இறுதியில் யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனால் பாவிக்கப்பட்ட வீரவாள் வீரமாகாளிஅம்மன் கோவிலில் வைத்து நீண்ட காலம் பூசிக்கப்பட்டதாகவும் கூறப்படும்.[83]

போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட இக்கோயில் 1730ம் ஆண்டு தெய்வேந்திர பண்டாரம் என்பவரால் புதுப்பிக்கப்பட்டு கல்லினால் கட்டப்பட்டது. 1840ம் ஆண்டில் மீண்டும் வேலாயுதர் முத்து என்பவரின் முயற்சியினால் பொது மக்கள் மூலம் கிடைத்த பணத்திலே மீளவும் புதிதாக்கப்பட்டு முத்துராமலிங்கம் சகோதரர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. தற்போது இக்கோயிலுக்கான தோம்புகளோ, உறுதிகளோ எதுவும் கிடைக்காத நிலையில் இது ஒரு பொதுக் கோயிலாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. யுத்த அழிவுக்குப் பின்னர் கட்டப்பட்ட இவ்வாலயம் கி.பி 1892 ல் யாழ் மாவட்டத்தில் உள்ள கச்சேரியில் தொகுக்கப்பட்ட சைவக் கோயில் பதிவேட்டிலே பதியப்பட்டுள்ளது. கோயில் உறுதி பற்றிக் கூறும் போது,

> **"மேற்கூறிய கோயிலின் ஆதனத்திற்குரிய உறுதி இருப்பின் முத்துராமலிங்கம் சகோதரர் பரம் பரையினரிடம் தான் இருக்க வேண்டும். காரணம் அவர்களே இக்கோயிலின் பரிபாலகர்கள் ஆவர்"**

என்பது வரலாற்றாய்வாளர் சி.க.சிற்றம்பலம் அவர்களின் கருத்தாகும்.[84] கச்சேரிப் பதிவேட்டில் "கம்பன் புலம்" காணியில் "வீரமாகாளியம்மன் கோயில் அமைந்துள்ள காணி கம்மன் புலம் ஆகும். இது 1730ல் புனரமைக்கப்பட்டது. தெய்வேந்திர பண்டாரம் என்பவரால் இவ்வாறு கல்லினால் கட்டப்பட்டு 1840ல் வேலாயுதர் முத்து என்பவர் பொது மக்கள் செலவில் திருத்தியமைக்கப்பட்டது[85] என்பது அறியக் கிடக்கின்றது.

இக்கோயிலின் பூசகர் பரம்பரையானது 1910ம் ஆண்டிலிருந்து தான் அறிய முடிகின்றது. செல்லக் குருக்கள் என்பவரைத் தொடர்ந்து சிவப்பிரகாச மணியக் குருக்கள், இரத்தினக் குருக்கள், சின்னச் சாமிக் குருக்கள்,சோமசுந்தரக்குருக்கள், நடராசக் குருக்கள்,சண்முகஇரத்தினஐயர் எனத் தொடர்கின்றது. செல்லக்குருக்கட்கு முற்பட்ட கோயிற் பூசகர் பெயர் விபரங்கள் கிடைக்கவில்லை. தற்போது சிவபாதச்சுந்தரக் குருக்கள், ஆறுமுகக் குருக்கள் தலைமையில் தொடர்ந்து வருவோரால் பூசைகள் நடைபெறுகின்றன. இக்கோயிற் பூசகர் யாவரும் அந்தணரல்லாத மரபில் வந்த சைவக்குருமார் மரபினைச் சார்ந்தவர்களாக விளங்குகின்றனர். தற்காலத்தில் கோயில் நிர்வாகம் ஆலய பரிபாலன சபையினரால் நிர்வகிக்கப்பட்டு கோயிற் தொண்டுகளும் தொண்டர் சபையினரால் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றன.

ஆலயக் கருவறையிலே கருணாம்பிகை அம்மையார் சிலா விக்கிரக வடிவிலே எழுந்தருளியுள்ளார். இடது திருவடியை ஊன்றி வலது திருவடியை மடித்து சுகாசன மூர்த்தமாகப் பத்து திருக்கரங்களும் திரு முகத்திலே புன்முறுவலுடன் திருவடியிலே ஒளி வீசும் ஒளிச்சுடரும் கொண்டு காட்சி தரும் தாயானவளின் கலைப் படைப்பானது சோழர்காலத்துக் கலையைப் பிரதிபலிக்கின்றது. இத்திருவுருவினைப் பரராஜசேகர மன்னன் பாண்டி நாட்டுச் சிற்பி ஒருவனைக் கொண்டு திருக்கோவலூரில் உருவாக்கிக் கொண்டு வந்தான் எனவும் கூறப்படும். வீரமாகாளிஅம்மன் ஆலயத்திலே உட்பிரகாரத்துடன் சேர்த்து நான்கு பிரகாரங்கள் உண்டு. ஆலயத்தின் முன்மண்டபம் பெருமண்டபமாக பல தூண்களைக் கொண்டு விளங்குகிறது. கோபுர வாசல் இராஜகோபுரம் இன்றிப் பெரிய வாசல் கொண்டதாக சிறப்பாக வெள்ளைக் கல்லினால் கட்டப்பட்டுள்ளது. இக்கால வழக்கத்திற்கு அமைய வெள்ளிக் கவசத்தாலான கொடித்தம்பம், பலிபீடமும், பக்குவம் அடைந்த ஆன்மாவைச் சுட்டும் சிங்க வாகனமும் காணப்படுகின்றன. ஆலய அமைப்பைப் பொறுத்தவரையிலே அவை ஆகம அளவைகட்கமையக் கட்டப்படுவனவாக இருப்பினும் கோயில் அனைத்தும் ஒரே விதமான அமைப்பு, பூசைமரபு என்பவற்றைக் கொண்டனவாக அமைவதில்லை. பல்வேறு அம்சங்களில் தனிச் சிறப்புடையவனாக விளங்குவதுண்டு.

வீரமாகாளியம்மன் ஆலயத்திலே திருக்கோயிலின் அமைப்பு முறை, மூர்த்தியின் ஆசன முறை, வழிபாட்டு முறைகள் பல்வகையான தனிச்சிறப்பு அம்சங்கள் அமைந்துள்ளன. திருக்கோயிலின் திருவாயில் வடக்கு நோக்கியும் வடக்குநோக்கி அமைய வேண்டிய கோமுகைகள் மேற்கு நோக்கியுமுள்ளன. வசந்தமண்டபமும் கோயிலின் வாயிற் கேற்ப கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. பரிவாரக் கோயில்களில் சுப்பிரமணிய சுவாமி கோவில் வட மேற்குத்திசைக்குப் பதில் தென்மேற்கிலும் பிள்ளை யாருக்கு உரிய பரிவாரக்கோயில் தென்கிழக்கிலும் அதன் அருகில் நாகதம்பிரான் பரிவார ஆலயமும்

பிள்ளையாருக்கு இடப்பக்கமாக அமையாது வலப் பக்கமாகவும் மூலக்கோயிலின் அமைப்பிற்கேற்ப அமைந்துள்ளது. நவக்கிரகத்திற்கான பரிவாரக் கோயில் இங்கு இடம்பெறாத போதிலும் மேற்குப் பிரகாரத்திலே கீழ் நோக்கியவாறு சனீஸ்வரனுக்கு ஒரு பரிவாரக் கோயில் உள்ளது. கோயிலின் இரண்டாம் பிரகாரத்திலே மருத மரத்திற்கு அண்மை யில் வைரவ ஆலயம் காணப்படும். இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய வீரமாகாளி அம்மன் ஆல யத்திலே சிறப்பு பொருந்திய திருக்குள அமைப்பு இடம் பெறாது, புண்ணிய தீர்த்தத்தின் பொருட்டு கிணறு அமைத்துப் பாவிக்கப்படுவதைத் காணலாம். திருக்குளமானது முன்னர் இருந்து அழிந்ததற்கான சான்றுகள் தெளிவாகக் கிடைக்கவில்லை.

மேற்கு வீதியிலே கவர்ச்சிகரமாக அமைக்கப் பட்ட எண்கோணத் தொட்டி ஒன்றுள்ளது. இத் தொட்டியிலே செங்களநீர்ப் பூக்கள் நிறைந்து காணப்படும். இத் தொட்டியருகே அம்மனுக்குச் சிறப்புத் திருவிழா இடம் பெறும். இன்று தொட்டியில் பூக்களும் அதிகமில்லை. தேரோடும் பெருவீதியும் காணப்படுகிறது. இவ் வாலயத்தில் 1941ம் ஆண்டில்தான் முதன் முதலில் தேரோட்டத் திரு விழா நடைபெற்றது. ஆறுமுகம் எனும் சிற்பாசிரியர் தலைமையில் 28 பேர் தேர்த்திருப்பணியில் ஈடுபட்ட தாக திரு.வீ.சீவரத்தினம் அவர்கள் குறிப்பிட்டுள் ளார்.[86] திரு.வீ.சீவரத்தினம் அவர்கள் திரு.ஆறுமுகம் விநாயகரின் மைந்தனாவர். வீரமாகாளித் தாயின் அற்புதங்கள் பற்றியும் மக்கள் நினைவு கூர்வதுண்டு. வயோதிப மூதாட்டி ஒருவர் தேர் வெள்ளோட்டம் நடைபெறும் போது வெள்ளைச் சீலையுடன் வந்து 'இந்தா ஆறுமுகம் ஐந்து ரூபா' எனக் கொடுத்து மறைந்ததாகவும் திரு.சீவரெத்தினம் அவர்கள் கூறியுள்ளார். அந்தப் பணத்தைத் தற்காலம் வரை தாம் பேணிப் பாதுகாத்து வந்தனர் எனவும் அது இப்போது இற்றுப்போகும் நிலையில் உள்ளது எனவும் தெரிவித்தனர். தாள்காசு என்பதால் இவ் வாறு இருக்கலாம். இந்த நிகழ்வினைக் கோயில் பூசகர்களும் கூறுவதுண்டு

இவ்வாலயத்தில் 3.5.1979ம் ஆண்டு சித்திரைப் பூசநட்சத்திர நாளில் புனராவர்த்தன மகாகும்பா பிஷேகம் நடைபெற்றது. நித்திய நைமித்திய கிரி யைகள் யாவும் இக்கோயிலில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் இக்கோயிலில் ஒரு செப்புத் தேர் இருந்ததாகவும் அதில்தான் அம்பிகை உலா வந்ததாகவும் ஒரு ஐதீகம் உள்ளது.[87] சங்கிலிய மன்னன் வீரமும் வெற்றியும் வேண்டி வழிபட்டுவந்த வீரமாகாளியம் பிகை ஆனவள் இன்று கருணாம்பிகைத் தாயாகவும் ஆலயத்திலே வீற்றிருந்து பல்வேறு திசைகளில் உள்ள அடியவர்கள், பக்தர்களாலும் பலவாறு வழிபடப்பட்டு வருவது இன்னும் அந்த ஆலயத்தின் மகிமையை வெளிப்படுத்தி நிற்கிறது. நவராத்திரி பூசை, திருவிளக்குப் பூசை இங்கு விசேடமாக கொண்டாடபபடும் விரதகால விழாக்களாகும். வீரத்தாயாக, அம்பிகையாக ஆரியச்சக்கரவர்த்திக ளால் வழிபடப்பட்டு வந்த அம்பிகை ஆனவள் இன்று ஆலயத்தைச் சுற்றியுள்ள அம்பிகை அடியவர்களின் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்யும் அன்னை யாக அவர்களின் குல விளக்காக - குல தெய்வ மாக இருந்து அருள்பாலித்து வருவது அனைவரும் அறிந்த விடயமாகும்.

**நல்லூர் கைலாசநாதர் ஆலயம்**

"ஈஸ்வரம்" என்பது ஈஸ்வரன் உவந்து எழுந்தரு ளியிருக்கும் இடம் என்பது பொருளாகும். ஈழ நாட்டிலே கூத்தபிரான் கொண்டெழுந்தருளியிருக் கும் சிவத்தலங்கள் பலவாகும். திருக்கோணேஸ் வரம், திருக்கேதீஸ்வரம், சந்திரசேகரீஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸவரம் என்பன மூர்த்தி, தீர்த்தத், தலச்சிறப்பு என்பன மிகுதியும் கொண்டு விளங்கும் திருத்தலமாகும். இத்தகைய ஈஸ்வரங் களுடன் ஒருங்கே வைத்துப் போற்றத் தக்கதும் துதிக்கத்தக்கதும் "பூலோக கைலாசம்" என அடியவர்களால் மதிக்கப்படும் ஆலயம் நல்லூர் கைலாசநாதர் ஆலயம் ஆகும். இதுவே இன்றும் நல்லூர்ச்சிவன் கோவில் என்றும் அழைக்கப்படு கிறது. யாழ்ப்பாண அரசில் திருக்கோயில்கள் சிறந்து விளங்குமிடமாக நல்லூர் இராஜதானி விளங் கியது. யாழ்ப்பாணத்தில் விளங்கிய அரசினால் தான் நல்லூர் கைலாசநாதர் ஆலயம் கட்டப்பட்ட தென்பதில் முரண்பாடு கிடையாதென்பா பேராசிரியர் சி. பத்மநாதன். அவ்வாலயம் அரச குடும்பத்தின் வழிபாட்டுத் தேவைக்காக அமைக்கப்பட்டதுடன் நல்லூர் இராசதானியின் மிகப்பெரிய கோயில்களில் ஒன்றாகவும் இத்திருத்தலம் கருதப்படும். மிகப்பெரிய சமய நிறுவனங்களில் ஒன்றான இவ்வாலயம் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டு அதன் கட்டிட அழிபாடுகள் வேறு பணிகட்குப் பயன்படுத்தப்பட்டன. ஆகையால் இக்கோயிலின் வரலாற்றுத் தொன்மை பற்றிய செய்திகள் கட்டட நிர்மாணம் என்பன பற்றி எத்தகைய கருத்துக்களையும் உருவாக்கு வதிலும் வரலாற்றாசிரியர்கள் பெரிதும் இடர்ப் படுவார்கள்.

இத்தகையதொரு வரலாற்றுப் பின்னணியில் தான் தற்பொழுது நல்லூர்ப் பகுதியில் விளங்கும் நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத கைலாசநாதர் ஆலய வரலாறு பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. சேனாதி ராஜ முதலியார் தனது நல்லூர் வெண்பாவில் 'பிறர்புன்மை இருள் நீக்கும் பதி" எனச் சிறப்பிக்கு மளவிற்கு நல்லையம்பதி யாழ்ப்பாண அரசர் காலம் ஒரு கோயில் நகரமாகவே அமைந்திருந்தது. வர லாற்றுப் பெருமை மிக்க நல்லூர் இராஜதானியின் நாற்றிசைக் கோயில்கள் மத்தியில் நல்லூர்க் கந்த னாலயத்துடன் அதற்கு மிக அண்மையில் நெருக்க மாக அமைந்திருப்பது நல்லூர் சிவன் கோயில் என அழைக்கப்படும ஸ்ரீ கைலாசநாதர் ஆலயமாகும். எனவே நல்லூர் இராஜதானிக் கோயில்களின் வரலாற்றுடன் நல்லைக் கந்தன் ஆலயத்துடன் பக்கத்திலே சிறப்புற அமைந்திருக்கும் நல்லர் வரலாற்றுச் செய்திகளையும் இணைத்துப் பார்ப்பது பயனுள்ளதாகும்.

நல்லூர் சிவன் கோயில் இன்று அமைந்தி ருக்கும் காணி "மின்னெறிஞ்சான் வளவு" என அழைக்கப்பட்டது. இக்கோயிலின் காலம் கி.பி 1848 - 1929 எனப்படும். ஸ்ரீ கைலாசநாதபுராணம் என்னும் ஒரு நூல் இத்தலத்தின் வரலாறு பற்றிக் குறிப்பிட்டுள்ளது. சிவஸ்ரீ நா.சிவசுப்பிரமணிய சிவாச் சாரியார் 1600 விருத்தப் பாக்களுடன் பதினேழு சக்கரங்களை உண்டாக்கி இந்த நூலை உருவாக் கியுள்ளனர். இந்நூல் இக்கோயிலின் தல புராண மாக அமைகின்றது. இவ்வாலயத்தின் ஸ்தாபகராக சிவஸ்ரீ நா.வெ.கார்த்திகேயக்குருக்களால் ஒரு தரும சாதனம் இக்கோயிலுக்கு எழுதப்பட்டுள்ளது. இவை இரண்டுமே நல்லூர் சிவன் கோயில் வரலாற்றினை அறிவதற்கு ஆதாரங்களாக அமைகின்றன. இவற் றின் அடிப்படையிலே நோக்கின் தென்னாட்டின் காஞ்சிபுரத்திலிருந்து வந்து நல்லூரில் குடியேறிய அந்தணர் பரம்பரை ஒன்று வேதசிவாகம அறிவிலே மேம்பட்டு விளங்கியுள்ளது. அவ்வரிசையிலே வந்த வரே நல்லூர் சிவஸ்ரீ கா.வை.கார்த்திகேயக் குருக்க ளாவார். இவர் நல்லைக்கந்தன் ஆலய ஸ்தாபகர் களில் ஒருவரான கிருஷ்ண சுப்பையர் என்பவரது பேரனது மகன வெங்கடேச ஐயர், சுந்தரம்மா தம் பதிகளின் புதல்வராவார். இவர் கொழும்பு கொச்சிக் கடை பொன்னம்பலவாணேசர் கோயிலில் முப்பது வருடங்கள் பிரதம குருவாக விளங்கியவர். அத்துடன் அக்கோயிலின் கருங்கற் திருப்பணி, திருநெல்வேலி பரமேஸ்வரன் ஆலயநிர்மாணம் முதலியவற்றிற்கும் சேர் பொன். இராமநாதன் அவர் களுக்கு உறுதுணையாகவும் இருந்தவராவார். அவர் தனது வாழ்நாளில் பெற்ற சிவப்பேற்றின் பயனாக வும் அயரா உழைப்பின் ஆன்மீக நிறுவனச் சின்ன மாகவும் ஸ்ரீ கைலசநாதர் என்றும் நல்லூர் சிவன் கோயில் அமைந்துள்ளது.

கார்த்திகேயக் குருக்கள் என்பவர் தாம் தேடிய பொருளைச் சிவப்பணிக்கே செலவிட்டமையினையும் அவரது தவச்சிறப்பின் காரணமாகவு 'கார்த்திகேய கிருடி' எனவும் ஸ்ரீ கைலாசநாதர் புராணம் 43ம் பாடல் சிறப்பித்துள்ளது. குருக்கள் ஐயாவின் கன விலே இறைவன் வந்து இட்ட கட்டளையினை நிறைவேற்றும் ஆசையே நல்லூர் சிவாலயமாக அமையலாயிற்று என்னும் அன்னாரது எண்ணக் கருவினைக் கைலாசநாதர் புராணம் எடுத்துக் காட்டி யுள்ளது. இப்புராணத்தின் வரலாற்றுக் குறிப்பின்படி கலியுகம் 5017ம் ஆண்டு இராட்சத வருடம் ஆனி மாதம் 3ம் திகதி இவ்வாலய கும்பாபிஷேகம் இடம் பெற்றதாக அறிய முடிகிறது. இது 1915ம் ஆண்டு யூன் 27ம் திகதி எனப்படும். கிழக்கு நோக்கிய கல்வளவின் மேற்குப் பகுதியில் பூர்வ காரணாகமம் கூறும் பாலஸ்தாபன விதிப்படி (135.08.9) பாலாலயம் ஆனது கிழக்கு முகமாகவும் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்தது. அதன் பின் ஒரு வருடத்தக்குள் மூல ஆலயம் வடக்கு நோக்கி அமைக்கப்பட்டு 1976ம் ஆண்டு ஜுன் மாதம் 26ம் திகதி இத் திருக்கோவில் சிவஸ்ரீ. கார்த்திகேயக் குருக்களால் முழுமையாகக் கட்டுவிக்கப்பட்டது. இது தொடர்பாகக் கார்த்திகேய்க்குருக்களால் வெளியிடப்பட்ட தருமசாசனத்தில்

**"இத்தால் சகலருமறியும்படி யாழ்ப்பாணம். நல்லூர் வெங்கடேச ஐயர் கார்த்திகேயக் குருக்களும் பெண் சுந்தரம்மாவும் ஆகிய நாங்கள் எங்கள் ஆத்ம லாபத்திற்கும் எங்கள் சந்ததியின் வணக்கத் திற்கும் சந்ததி சந்ததியாகப் பூ சை பண்ணி இகபர இருமை உரிமைப்பலனை அடைவதற்குமாக தனி யானதொரு ஆலயம் வேண்டியிருப்பதால் எங்க ளில் முதலாம் பெயர் வழிகாரன் தனது சொந்தச் சம்பாத்தியத்தில் பொருள் கொண்டு 1916ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் திகதி நல்லூரிலுள்ள கல்வளவு எனும் காணியில் ஒரு சிவாலயத்தைக் கட்டுவித்துப் பிரதிஸ்டை பண்ணி ஸ்ரீ கமலாம்பிகா சமேத கைலா சநாத சுவாமி கோயில் அல்லது தேவஸ் தானம் என்னும் நாமகரணமும் சூட்டியிருப்பதனாலும்........."**

என நீண்டு செல்லும் இக்குறிப்பானது இக் கோயிலின் ஆரம்பகால வரலாற்றுண்மையினை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இக்கோயிலின் வளர்ச்சியை மிகச் சுருக்கமாக கூறுவதானால், இவ்வாலயத்தின் பிரதான வளர்ச்சிக் கட்டங்களை 1920ம் ஆண்டும் தொடர்ந்தும் 1988ம் ஆண்டு வரையும் திருப்பணிவேலைகள் துரிதமடைந்

தன. கார்த்திகேயக் குருக்களது மைந்தர்களில் ஒருவர் முன்னாள் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் என்பது சிறப்பாக இங்கு குறிப்பிடத்தக் கது. ஏனைய மைந்தர்கள் சிவஸ்ரீ கா. இரத்தின கைலாசநாதக் குருக்கள் தலைமையில் கைலாச நாதசுவாமி கோயில் திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்று 1988ம் ஆண்டு கும்பாபிஷேகம் நிறை வேறியது. இக் கோயிலில் ஸ்ரீ கமலாம்பிகையின் யாகபூசை வழிபாட்டினை மூத்த புதல்வரான பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் பொறுப்பேற் றுக் கொண்டதுடன் திருக்கோயிலின் தர்மகர்த்தா வாகவும் விளங்கினார். தற்போது அவரது சகோதரர் சிவஸ்ரீ இரத்தின கைலாசநாதக்குருக்களின் வழி காட்டலில் சிவஸ்ரீ கிருஸ்ணானந்தசர்மா, சிவஸ்ரீ வைத்தியநாதசர்மா என்பவர்களின் உதவியுடன் நித்திய நைமித்திய பூசைகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன. இக்கோயிலில் ஒன்பது நாட்கள் சங்கு சக்கர கொடியுடன் நடைபெறும் விசேட நவராத்திரி பூசை வழிபாடுகள் விசேடமானவை. ஈழத்திலே இக்கோயிலில் மட்டும் தான் ஐப்பசி மாசக் கடைசி வெள்ளிக்கிழமை யமசங்கார உற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது இங்கு குறிப்பிடத்தக்கது. இக் கோயிலின் முதலாவது கும்பாபிஷேகம் 1916ம் ஆண்டு நடைபெற்றது வேறு ஆதாரங்களாலும் அறியப்படும்.

புதியவரலாற்றுடன் வளர்ச்சியடைந்து வரும் திருக்கோயில் ஆதலால் இதன் பூர்வீக வரலாறு தொடர்பான ஆய்வுகள் பெரிதும் முன்னெடுக்கப்பட்ட தாகத் தெரியவில்லை. எனினும் ஈழத்துத் திருக் கோயில்களின் தொன்மையான வரலாறுகளைத் தொகுத்து வைக்கும் முயற்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை இத்தகைய ஆய்வுகளைப் பெருமளவில் ஊக்குவித்து வருவ தும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## முடிவுரை:

மேற்குறிப்பிட்ட நல்லூர் இராசதானி வர லாற்றுக்காலக் கோயில்களைத் தற்போதைய யாழ் மாவட்டம் நல்லூர் பிரதேச சபையின் கீழ் பல இந்துக் கோயில்கள் பதியப்பட்டுள்ளன. அவற்றிலே வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சிஅம்பாள் திருக் கோயில் (நாச்சிமார் கோயில்) குளக்கரை - மருதடி இராஜராஜேஸ்வரி அம்பாள் திருக்கோயில், கொக்கு வில் கிழக்கு - நந்தாவில் மனோன்மணி அம்மன் கோவில் அரியாலை சித்திவிநாயகர் கிழக்கு கோண டாவில் மேற்கு கோண்டாவில் காங்கேசன்துறை வீதி, ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில், பிறவுண் வீதி நீராவியடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில்,பண்டாரக்குளம் சித்திவிநாயகர், கச்சேரி நல்லூர் வீதி யாழ். முத்து விநாயகர் கோயில், கந்தர்மடம் வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சண்முக நாத சுவாமி கோயில், நல்லூர் நல்லைதிருஞான சம்பந்த ஆதீனம், கொக்குவில் கிழக்கு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், மஞ்சவனப்பதி முருகன் கோயில், இணுவில் கிழக்கு அருணகிரி சிவசுப்ரமணிய கோயில், கிழக்கு கோண்டாவில் ஸ்ரீ வல்லிபுரநாதர் கோயில், திருநெல்வேலி அருள் மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் கோயில். திருநெல் வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில், கலட்டி மாரியம்மன் கோவில் என்றிவ்வாறு இன்னும் பல திருக்கோயில்கள் நல்லூர் பிரதேசத்திலே முதன் மையாகக் கொண்ட கோயில்களாக அறியப்பட் டுள்ளன. இவ்வனைத்தும் தனித்தனி ஆய்வாக எடுத்து ஆராயவேண்டிய சிறப்பு வாய்ந்த திருத்தலங்களாகும்.

நல்லூர் இராஜதானியாக விளங்கிய போது தமிழ் மன்னர்களது அரசவையிலே பண்ணிசைத்து யாழ் வாசித்து அரசர்களை மகிழவைக்கும் கலைஞர் கள் பலர் இருந்தனர். அவர்கள் "பாணர்கள்" என அழைக்கப்பட்டனர். இம் மரபினர் பலர் நல்லூர்ப் பகுதியிலே குடியேறி அங்கு குளம் கட்டி விவசாயம் செய்து வந்தனர். அவர்களால் கட்டப்பட்ட குளம் பாணன் குளம் எனவும் பெயர் பெற்றிருக்கலாம். அவ்வாறே பாண குளம் என்னும் பழம் பகுதியிலே கோயில் கொண்டிருக்கும் நாச்சியம்மன் ஆலயமும் மிகப்பழைமையானது என்பது வரலாற்று மரபாகும். புவனேஸ்வரி என்னும் திருநாமம் கொண்டுள்ள இந்த அம்பிகையானவள் புராதனகாலம் வேலன் என்பாருக்கு சொந்தமான திட்டி நிலத்தடியிலே வேல மரத்தடியில் ஒரு குடிசையிலே கோயில் கொண்டி ருந்தால் வேலன்பிட்டி நாச்சியம்மன் ஆலயம் எனப் பட்டது. இன்றும் இக் கோயில் "பாணைவெட்டி அம்மன்" என அழைக்கப்படுகிறது. நல்லூர் இராஜதானியில் காணப்பட்ட குளங்களில் பாணன் குளம் போல உப்புக்குளம், தாமரைக்குளம், பண்டா ரக்குளம், ஆரியகுளம், நரியன்குண்டுக்குளம், வண் ணாங்குளம் எனப் பல குளங்கள் நகரை அழகு படுத்தியதுடன் அயற்பிரதேச மக்களின் தேவை களைப் பூர்த்தி செய்வனவாகவும் அமைந்திருந்தன.

நல்லூர் பிரதேச அமைவிடத்தின் யாழ் மாநகர சபையின் பரப்பளவானது காலத்திற்குக் காலம்

மாற்றமடைந்துள்ளது. தற்போது இதன் பரப்பளவு 20.01 கிலோ மீற்றராகவுள்ளது. நல்லூர்ப் பிரதேச மும் நிர்வாக வசதி கருதி யாழ். மாநகரசபை நிர் வாகத்தின் கீழேயே இயங்கி வருகின்றது. தற் போது நல்லூர்ப் பிரதேசத்தில் காணப்படும் இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட புராதன திருக் கோயில்களுடன் நல்லூர் பிராந்தியத்திலுள்ள மந் திரிமனை, சங்கிலியன் தோப்பு, இராசாவின் தோட் டம், பண்டாரமாளிகை, பண்டாரகுளம் போன்ற பெயர்களும், அழிந்த நிலையில் காணப்படும் கட்டி டங்களும் சிதைவுகளும் தொன்மைக் கால நல்லூர் இராஜதானியை நினைவுபடுத்துவதாகவேயுள்ளன. இத்தகைய தொன்மைச் சின்னங்கள் தொடர்ந்து பாதுகாக்கப்படாவிட்டால் புராதன யாழ்ப்பாண இராய்ச்சிய வரலாற்றுப் பதிவுகள் மண்ணை விட்டு மறைந்துவிடும் நிலை ஏற்படும். புராதன வரலாற்றுச் சின்னங்களைப் பேணும் வரலாற்றுணர்வு நமது பிரதேச மக்களிடையே அருகிக் காணப்படுவதற்கு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும் 'சர்வதேசமும் நமது சொந்தம்' என்னும் பரந்த மனப்பான்மை தான் காரணமோ தெரியவில்லை.

நல்லூர் இராஜதானியுடைய நகர அமைப்புப் புராதன கட்டிடக்கலை அமைப்புடன் பல சதுரமான வடிவிலே அமைந்ததாகவேயுள்ளதால் தமிழ் மன்னர் களும் இந்துக்களாகவே விளங்கினர் எனக் கொள்ள முடியும். இந்துக்களது புராதன கட்டிட அமைப்பும் பலவற்றில் சதுர வடிவிலே அமைந்துள்ளதால் இந்துக்களாக விளங்கிய தமிழ் மன்னர்களும் தாம் கட்டிய திருக்கோயில் அமைப்பிலும் இராஜதானி அமைப்பிலும் அம்முறைகளையே பின்பற்றினர் எனக் கொள்ளலாம். இங்கு ஆய்வுக்கு எடுக்கப்பட்ட புரா தன வரலாற்றுக் கோயில்களில் நல்லூர்க் கந்தன் ஆலயமும் தீர்த்தக் கேணியும் மிகப் பெரிய மதில் களுடன் கூடிய வளர்ச்சி கொண்ட பெருநிலப் பரப்பைக் கொண்டிருந்ததாகப் போர்த்துக்கேயரு டைய குறிப்புக்களும் கூறியுள்ளன. எனவே பண்டைய இந்துக்களைப் போன்று யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசர்களும் நல்லூரை இராஜ தானியாகக் கொண்டு ஆட்சி செய்தபோது அதனை மிகப் பெரிய திருக்கோயில் நகரமாகவும் அதேசமயம் மிகப் பெரிய கலையம்சங்களைக் கொண்டதொரு இராஜதானியாகவும் அமைக்கப்பட்டிருந்தது என்பதனையே நல்லூர் இராஜதானியில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ் மிக்க சைவக் கோயில்கள் புலப்படுத்துகின்றன என்பதில் ஐயமில்லை.

**சான்றாதாரங்கள்:**


1. யாழ்ப்பாண வைபவமாலை
   மயில்வாகனப்புலவர், குலசபாநாதன் பதிப்பு,
   கொழும்பு 1963

2. யாழ்ப்பாண வைபவ விமர்சனம்
   சுவாமி ஞானப்பிரகாசர், நல்லூர், 1928

3. யாழ்ப்பாணச் சரித்திரம்,
   ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை,
   யாழ்ப்பாணம் 1933

   யாழ்ப்பாணச் சரித்திரம் - ஆங்கிலேயர் காலம்
   செ. இராசநாயக முதலியார்,யாழ்ப்பாணம் 1935

5. யாழ்ப்பாணம் - தொன்மை வரலாறு
   பேராசிரியர்.சி.க.சிற்றம்பலம் (பதிப்பாசிரியர்)
   யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 1999

6. இலங்கையின் இந்துக் கோயில்கள் பகுதி I
   பேராசிரியர் சி. பத்மநாதன், (பதிப்பாசிரியர்)
   இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்
   வெளியீடு கொழும்பு, 1994

7. இலங்கையின் புராதன சைவாலயங்கள்:
   நல்லூர் கந்தசுவாமி கோவில்
   குலசபாநாதன் கொழும்பு, 1963.

8. நல்லை நகர் நூல்,
   கலாநிதி க. குணராசா
   யாழ்ப்பாணம், 1987

9. யாழ்ப்பாண அரச பரம்பரை
   விஜயகாலிங்கன் முதல் நரசிங்கன் வரை,
   கலாநிதி க. குணராசா,
   கொழும்பு, 2000

10. நல்லூர் இராதானி நகர அமைப்பு
    வ.ந.கிரிதரன், சென்னை, 1999

11. நாயன்மார்கட்டும் அதன் பண்பாட்டுத்
    தொன்மையும் - சில குறிப்புக்கள்,
    செ.கிருஸ்ணராசா, வரலாற்றுத்துறை,
    யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

12. தொல்லியலும் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்
செ. கிருஷ்ணராசா
பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம், 1998

13. கைலாசநாதம் - பேராசிரியர் கைலாச நாதக் குருக்கள் 75 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி பவள விழா மலர்,
பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர்,
யாழ்ப்பாணம் 2000

14. இரண்டாவது உலக இந்து மாநாட்டுச் சிறப்பு மலர், இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு, இலங்கை 2003 - கட்டுரைகள்

1. இலங்கையில் இந்து மதம் - ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்
பேராசிரியர் சி.பத்மநாதன்

2. நல்லூர் கந்தசுவாமி ஆலயம்
கலாநிதி க. குணராசா

15. கைலாச பிள்ளையார் கோவில் - ஓர் ஆய்வு
(மாணவர் வெளிக்கள ஆய்வேடு)
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 1993

16 நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் கோயில் - ஓர் ஆய்வு
(மாணவர் வெளிக்கள ஆய்வு)
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 2000

17. வண்ணை வடக்கு அருள்மிகு வீரமாகாளி அம்மன் கோயில் - ஓர் ஆய்வு
(மாணவர் வெளிக்கள ஆய்வேடு)
இந்த நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1993

18. யாழ்ப்பாண மாவட்டக் கோயில் பதிவேடு,
கச்சேரி யாழ்ப்பாணம் 1892.

19. அருள்மிகு ஸ்ரீ வெயிலுகந்த பிள்ளையார் தேவஸ்தான கும்பாபிஷேக மலர்,
பேராசிரியர் வி. சிவசாமி
யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பிரதான விநாயகர் ஆலயங்களும் வழிபாடும்,
மலராசிரியர் - க.சொக்கலிங்கம்,
யாழ்ப்பாணம், 1993

20. The Kingdom of Jaffna,
Prof. S.Pathmanathan,
Colombo - 1978

21. The Tempore and Jaffna spritual congues of ceylon,
F.de.Queyroz,
Translated By : S.G.Perera, Colombo 1930

22. யாழ்ப்பாணச் சரித்திரம் - ஒரு மீள் வாசிப்பு
கலாநிதி. க.குணராசா
யாழ்ப்பாணம் 2001

**பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை**
**எல்லா அறமுந் தரும்**

**குறள் - 296**

# புலநரிச் சிவன் கோவில்கள்

- வெள்ளவத்தை ஸ்ரீ குலசபாநாதன்

இலங்கையின் பல்வேறு திசைகளிலும் பரந்து கிடக்கும் தொல்பொருட் கலைக் கவர்ச்சியுடைய பல இடங்களுள்ளும் பொலன்னறுவையைப் போல சிற்பக்கலையும் கட்டடக்கலையும் சிறந்து விளங்கும் இடம் பிறிதொன்றுமில்லையெனலாம். இவ்விடத்திற்கு ரயில்வண்டி வழியாகவும் மோட்டார்வண்டி வழியாகவும் செல்லலாம். மோட்டார் வண்டியிற் செல்பவர்கள் கண்டிப்பாதை வழியாகவும் அநுராதபுரம் பாதை வழியாகவும் செல்லலாம். இவ்விரு இடங்களும் பழைய தலைப் பட்டினங்களாய் விளங்கியமையால் அவைகளும் பார்க்கவேண்டிய இடங்களாகும். பொலன்னறுவை கொழும்பிலிருந்து ஏறக்குறைய 160 மைல் தூரத்தில் கொழும்புக்கு வடகிழக்குத் திசையிலுள்ளது.

புலஸ்திநகரம் என்பதன் மருஉ பொலன்னறுவா எனும் சிங்களச் சொல்லென்பர் சிங்கள மொழியாராய்ச்சி வல்லுநர். புலஸ்தியர் என்பவரின் புத்திரர் விசிரவசு. இவருக்கு இயக்கர் மரபில் குபேரனும், அரக்கி மரபில் இராவணன் ஆகியோரும் மக்களாகத் தோன்றினார்கள். பொலன்னறுவாவிற் காணப்படும் அரச முனிவரின் தோற்றமமையப் பெற்ற சிலை பராக்கிரமபாகுவின் சிலையெனப் பொதுவாக நம்பப்பட்டு வந்தது. பின்னர் அது அகத்தியர் சிலையெனக் கருதப்பட்டது. கமண்டலமும் செபமாலையும் பெரு வயிறுமுள்ள குறுமுனிவரின் தோற்றம் இச்சிலையில் அமையாமையின், இது புலத்தியருடைய சிலையெனக் கொள்கின்றனர் ஒரு சாரார். அங்ஙனமாயின் பொலன்னறுவாவைத் தலைநகராக்கி ஆண்டு வந்த சிங்களவரசர்கள் பழைய பாரம்பரிய வரலாற்றைச் சார்ந்த இச் சிலையை நிறுவியிருத்தல்கூடும். இந்நகரம் சோழர் ஆளுகைக்குட்பட்ட பொழுது ஜனநாதபுரம்[1] ஜனநாத மங்கலம்[2], மும்முடிச் சோழமண்டலம்[3] எனப் பெயர் பெற்றிருந்து, பின்னர் விஜயபாகு ஆட்சிசெய்த ஞான்று விஜயராசபுரமென[4] வழங்கப்பட்டது. நிசங்க மல்லன் அரசாண்ட காலத்தில் காலிங்கபுரமெனவும்[5] அழைக்கப்பட்டது. பொலன்னறுவா புலநரியென வழங்கப்பட்டு வந்தமை அங்குள்ள சிலசாசனங்களால் நன்கு பெறப்படுகின்றது.

பொலன்னறுவா எவரால் எக்காலத்தில் அமைக்கப்பட்டதெனத் துணிந்து கூற முடியாதிருக்கின்றது. எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் இடைக்கிடை அநுராதபுரத்தரசர்களின் உறைவிடமாய்க் காணப்பட்டதெனினும் அக்காலத்தில் பொலன்னறுவாவில் பாரிய கட்டடங்கள் இருந்திருப்பதாகக் கருதவிடமில்லை. ஏழாம் அக போதியரசனின் தலைநகராகவே இவ்விடம் சரித்திராசிரியர்களால் குறிக்கப்படுகின்றது. சோழவரசர்களுட் புகழ்பெற்ற இராசராச சோழன்[6] ஆண்டகாலத்தில் (985 - 1012) இலங்கையை ஆண்ட அரசன் 5ம் மிகுந்தன் வலிமையற்றவனாதலின் இவனிடமிருந்து சிங்கள மலையாள கன்னடச்சேனைகள் கலகம் விளைத்தமையால் இவன் உறுகுணைக்கோட நேர்ந்தது. இந் நிலைமையைக் கண்ட இராசராசன் படை யெடுத்துவந்து 1001/2-ம் ஆண்டுக்கும் 1004/5-ம் ஆண்டுக்குமிடையில்[7] ஏறக்குறைய பெரும்பாகத்தைத் தன் ஆளுகைக்குள்ளாக்கினான். இது சோழராய்ச்சியத்தின் ஒரு பகுதியாகி பொலன்னறுவா ஜனநாதபுரம் என்னும் பெயர் பெற்றது. சோழர்களும் இதனையே இலங்கையில் தங்கள் தலைநகராக்கினார்கள். இராசேந்திரசோழனும்[8] (1012 - 1032) இலங்கையின் மேல் படையெடுத்து வந்து, 5ம் மிகுந்தனைச் சிறைப்பிடித்து இந்தியாவுக்கனுப்பினான். இன்னும் அதிராஜேந்திரனுடைய பெயரும் பொலன்னறுவையிலுள்ள சிலாசனம்[9] ஒன்றிற் காணப்படுகின்றது. இவன் வீரராஜேந்திர சோழனுக்குப் (1062 - 1069) பின்னும் இரண்டாம் இராஜேந்திர சோழனுக்கு (முதற் குலோத்துங்கன் 1073 - 1118) முன்னும் ஆண்டிருத்தல் கூடும். தென்னிந்திய சிலா சாசனங்களிலிலும் இவனைப் பற்றிய வரலாறு அதிகம் இல்லை. சோழ தேசத்தில் நிகழ்ந்த பிறபோர்கள் காரணமாக சோழர் இலங்கையாட்சியைக் கைநழுவவிட, முதலாம் விஜயபாகு அரசனாகி பல சமயச் சார்பான கட்டடங்களை அமைத்தான். இவனே "புத்தர் தந்த கோயிலை" (Dalada Maligawa) அமைத்தவனாகக் கருதப்படுகின்றான். பன்னிரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சிங்காசனம் ஏறிய பராக்கிரமபாகு பல கட்டடங்களையும் இவ் அரன்களையும் பொருள்களையும் அமைத்தான்.

இலங்கை மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை இலங்கையிற்றானே விளைவிக்க வேண்டும் என்னும் பெருநோக்குடன் உழைத்த இவ்வரசன் தமிழ்தொடர்பு உடையவன் என்பது சரித்திர ஆசிரியர்கள் நன்கறிந்த விடயம். நிசங்க மல்லன் (1187 - 1196) என்னும் அரசனும் பொலன்னறுவாவில் பல அழகிய கட்டிடங்களையும் அமைத்தான். அவற்றுள் "லத்த மண்டபய" என்னும் கட்டிடத்தில் தாமரைப் பூவும் தாமரைக் கொடியுமே எப்பக்கம் நோக்கினும் காட்சியளிக்ககூடிய விதத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. தாமரைப்பூவே இக்கட்டத்தின் உயிர்நாடியாக விளங்குகின்றது. பிற அரசர்கள் கட்டிய மாளிகையில் தான் இருத்தல் வீரமன்றெனக் கருதித் தனக்கென மாளிகையொன்று ஏழு மாதத்துக்குள் கட்டியவனும், சிலாசாசனம் பொறிப்பதில் பெருவிருப்புடையவனும் இவனே. இதன் விரிவினைச் "சூளவம்ச"த்திற் காண்க.

இத்தகைய தொன்மையும் பெருமையும் வாய்ந்த பொலன்னறுவாவில் பல இந்துக் கோயில்கள் இருந்தமை யாவரும் நன்கறிந்த விஷயம். இவற்றுள் இந்நகரில் மட்டும் ஏழு சிவன் கோயில்களிருந்தனவென்பதை நோக்குங்கால், இவ்விடத்திலிருந்த தமிழர்களுடைய தொகைக்கு ஒரு சான்றாகும் போலும். இலங்கையில் தமிழர்களுடைய வெற்றியைக் காட்டி நிற்பனவும் இக்கோயில்களேயாகும். அன்றியும் சிங்களவர் சைவத் தெய்வங்களை வழிபட்டு வந்தமை சரித்திரங்களில் பரக்கக் காணலாம். தம்புல்லவிலுள்ள (Dambulla Rock Temple) குன்றுக் கோயிலில் கதிர்காமத்தையோ விஷ்ணு தெய்யோ முதலிய தெய்வங்கள் வணங்கப்பட்டு வந்தமை இன்றும் காணலாம். விஜயன் தொடக்கம் பல இலங்கையரசர்கள் தென்னிந்திய சைவ அரச குடும்பங்களிற் பெண் கொண்டமை சரித்திர வாயிலாகக் கண்டறிந்த உண்மையாகும். எனவே சைவாலயங்கள் பௌத்தாலயங்களிட்கு அருகில் அமைந்திருத்தல் ஒரு வியப்பன்று. முதலாம் கஜவாகு வேந்தன் காலத்திற்றான் பத்தினி வழிபாட்டில் இலங்கை சிங்களவர் ஈடுபட்டிருந்தமையும் கண்டி பெரஹரா திருவிழாவிலும் சைவத் தெய்வங்கள் இடம்பெற்றிருந்தமையும் ஈண்டு நினைவு கூர்தற்பாலன.

பொலன்னறுவையைப் பார்க்கச் செல்பவரொருவர் அழிந்து கிடக்கும் அரச மாளிகையினையும் அதற்கணித்தாக அதே வளவுக்குள் இருக்கும் ஏனைய பல கட்டடங்களையும் முதலிற் கண்ணுறுவர். அந்த மாளிகை வளவின் வடவாயிலால் வெளியேறிச் செல்லுமிடத்து தந்தக் கோயில் எனப் பிழையாக வழங்கப்பட்டு வந்துள்ள அழகிய சிறு



கோயிலொன்றைக் காணநேரும். **Siva Dewale No. I** என எழுதப்பட்ட சிறுபலகையொன்று இதன் பெயரை விளக்கிக் காட்டுகின்றது. இக்கோயிலின் கட்டட அமைப்புத் திறனைப் புகழாதவர் இல்லை எனலாம்.[10] இக்கோயிலின் அமைப்பினை நோக்குமிடத்து இது 11-ம் அல்லது 12-ம் நூற்றாண்டினதெனத் தொல்பொருள் ஆராய்ச்சி வல்லுநர் திரு ஏ.இறீ அவர்கள் கருதுகின்றார்கள்.[11] ஆனால் இலங்கைத் தொல் பொருளாராய்ச்சிப் பகுதித் தலைவர் ஸ்ரீமான் எஸ். பரணவித்தாரன அவர்கள் இக் கட்டடம் 13-ம் நூற்றாண்டெனக் குறிப்பிட்டுள்ளார். "புத்தர் தந்தத்தை வைத்தததக்கேற்ற கோயிலைக் கட்டி நிறைவேற்றும் வரை அதனையும் ஒருக்கால் இக்கோயி லிற்றானே வைத்து வணங்கியிருத்தல் கூடும். இதனால் இக்கோயில் தந்தக்கோயில் எனும். பிழையான கொள்கை பரவிற்றுப் போலும்" என திரு.எச்.சி.பி பெல் அவர்கள் கூறுவதும் பொருத்தமான காரணமாகவே படுகின்றது. இக்கோயிலில் தூபியில்லாதிருப்பினும் கோமுகை இன்றும் காணப்படுகின்றது. 1907ல் நிலத்தின் கீழ்க் கல்லிய பொழுது பல அழகிய திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. கொழும்பு புதுமைச்சாலைக்குச் சென்று பார்ப்போர் உளத்தைக் கொள்ளை கொள்ளும் நடராசர் திருவுருவம் முதலியன இவ்விடத்திலிருந்து கொண்டு வரப்பெற்றனவாகும். இத் திருவுருவங்களின் சிறப்பினை சேர் பொன். அருணாசலம் அவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையில் கண்டின்புறுக.[12] முதலாவது சிவன் கோயில் வீதிக்குள் கைகள் ஒடிந்த அம்மன் சிலை



யொன்று இன்றும் காணப்படுகின்றது.

இக்கோயிலினின்று சிறிதுதூரம் வடதிசை நோக்கிச்

சென்றால் பிறிதோர் அழகிய சிவன்கோயிலைப் பபுலு விகாரைக்குச் சிறிது தூரத்தில் ஒரு மூலை யிற் காணலாம். பொலன்னறுவாவிலுள்ள சிவால யங்களுள் அதிகம் அழிவுறாத கோயில் இதைத் தவிர வேறில்லையெனலாம். இ∴து இரண்டாவது சிவன்கோயிலெனப் பெயரிடப்பட்டிருக்கின்றது. லிங்க மும் சக்தி பீடமும் நந்தியும் காணப்பட்டிருந்தும் இக்கோயிலையும் விஷ்ணு தேவாலயம் எனும் பிழையான பெயரால் அழைத்து வந்தமை இலங்கை யிலிருந்து தொல்பொருட் கலையாய்ச்சியாளரின்



அறிவுத் திறனை அல்லது அவர்களின் ஊக்கமற்ற ஆராய்ச்சி முறையினை ஒருவாறு காட்டுகின்ற தெனலாம். நான்கு நந்திகளை இக்கோயிலுக்கருகில் இன்றுங் காணலாம். சிவன்கோயிலில் எவ்விடத்தில் பெரும் பாலும் நந்தி வைக்கப்படவேண்டுமென்பதை அறி யாது விரும்பிய இடங்களில் வைக்கப்பட்டிருத் தலைக் கவனித்தேன். இக் கோயிலில் சாசனங்கள் இருத்தல் இதற்குப் பிறிதொரு சிறப்பளிக்கின்றது. இவற்றால் புலஸ்திபுரம் சோழராட்சிக் காலத்தில் 'ஜனநாதமங்கலம்' என்பதும், ஒரு சிலா சாசனம் அதிராஜேந்திரன் காலத்ததென்பதும் (1070 வரை) மற்றொன்று முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தென்பதும் இக்கோயிலின் பெயர் 'வானவன் மாதேவி ஈஸ்வரமுடையார்' என்பதும் பெறப்பட்டன. விஷ்ணு கோயிலும் இதற்கருகில் சுற்றுக் கோயி லாக இருந்திருத்தல் கூடும். பள்ளிக்கொண்டார் ஸ்ரீ அழகிய மணவாளர் திருவுருவங்கள் அமைக்கப் பெற்றிருந்தனவென்பது பிறிதொரு சாசனத்தால் அறியக்கிடக்கின்றது. இதனால் போலும் முழுக் கோயிலையும் விஷ்ணு தேவாலயம் எனப் பிழைபட வழங்கி வரலாயினர். இந்தச் சிவன் கோயிலின் கட்டட அமைப்புத் தென்னந்தியாவிலுள்ள 11-ம் நூற்றாண்டுக் கோயில்களையொத்துளதெனவும் பொலன்னறுவாவிலுள்ள கட்டடங்களுள் மிகவும் தொன்மை வாய்ந்ததும் முழுதும் கல்லாற் கட்டப் பட்டதும் இ∴தொன்றேயெனவும் ஸ்ரீமான் பரணவித் தான அவர்கள் கருதுகின்றார்.[13]

3-வது சிவாலயம் 'யோத எல' எனுஞ் சிறு வாய்க்காலின் வலது கரைக்குக் கிழக்கே 90 அடி தூரத்திலுள்ளது. இக் கோயிலிலிருந்து லிங்கம் கண்டெடுக்கப்படவில்லையெனினும் சக்திபீடமும் அம்மன் திருவுருவமும் இக்கோயிற் கோபுர வாயிற் கருகில் கண்டெடுக்கப்பட்டன. இது 1908ல் துப் புரவாக்கப்பட்டது.

4-வது சிவாலயம் மின்னேரியா தொப்ப வேவா றோட்டுக்கருகிலுள்ள விஷ்ணு தேவாலயத்திற்கும் காளி கோவிலுக்கும் அருகிலுள்ளது. இது 1902ல் துப்புரவாக்கப்பட்டது. இக்கோயிலைப் பற்றிய விரி வான வரலாற்றைத் தொல்பொருட் பகுதியினர் 1902-ம் ஆண்டுக்கென வெளியிட்ட அறிக்கையிற் காண்க.

5வது சிவாலயம் தொப்பவேவாவிலிருந்து அலுத்தோயாவிற்குச் செல்லும் சிறு தெருவில் கிரிவிகாரைக்குச் செல்லத் திறந்த வண்டிப் பாதைக் கருகிலுள்ளது. இது 1908ல் துப்பரவாக்கப்பட்ட பொழுது மிகவும் அழிந்த நிலைமையிற் காணப் பட்டது. எனினும் ஏனைய கோயில்களிலும் பார்க்க மிகவும் விரிவாயும் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் முதலிய பல மண்டபங்களையும் உடையதாயிருந்ததென அறியக் கிடக்கின்றது. பொலனறுவாவிலுள்ள சைவக்கோவில்களுள் இதுவே மிகவும் விரிவாகக் கட்டப்பட்டதாகும். கொழும்புப் புதுமைச் சாலையிலுள்ள திருவாசியற்ற நடராசர் திருவுருவமும் நால்வர் திருவுருவமும் சத்தமாதர் திருவுருவமும் இக்கோயிலிற் கண்டெடுக்கப்பட்டன வேயாகும். இன்னும் கோயில்களில் பூசைக்குப் பாவிக்கப்படும் உபகரணங்களும் இவ்விடத்தில் அகப்பட்டன.

6-ஆவது சிவாலயம் விஷ்ணு கோயிலுக்கும் 3-வது சிவன் கோயிலுக்குமிடையே ஓடிய யோதஎல எனும் சிறு வாய்க்காலின் இடது பாகத்தில் உளது. லிங்கமும் சக்திபீடமும் உடைந்த துண்டுகளுட் காணப்பட்டன.

7-ஆவது சிவாலயத்தின் மேற் கட்டடம் காணப் படவில்லையெனினும் அதன் அடித்தளம் மட்டும் கண்டெடுக்கப்பட்டது. இது இரண்டாவது விஷ்ணு தேவாலயத்திற்கு நேர் எதிராகவுள்ள பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ளது. இதுவும் 6-வது சிவா லயமும் 1908-ல் துப்புரவாக்கப்பட்டன. இவ்வேழு கோயில்களைப் பற்றிய விவரங்களை ஒப்பு நோக் கற் பொருட்டு தொகுத்துக் கூறுவாம்.

இக்கோயில்கள் யாவும் முற்கூறிய சோழர் ஆட்சிக்காலத்தவென ஆராய்ச்சியாளர் கொள்கின்றனர். அங்ஙனமாயின் சோழருடைய சமயப் பற்றினையும் ஆளுந்திறனையும் அவ்விடத்திருந்த தமிழர்களின் தொகையினையும் நினைவூட்டும் அடையாளப் பொருட்களாக அமைந்துள்ளனபோலும். இக் கோயில்களை ஒவ்வொரு சைவனும் போய்ப் பார்த்தல் வேண்டும்.

### அடிக்குறிப்புக்கள்

1. நிகரிலி சோழவள நாட்டு புலைநரியென ஜனனாதபுரத்து இருக்கும் இத்தேவர்

2. ........ நாட்டு ஜனநாதமங்களத்து உடையார் வானவன் மாதேவி ஈயவரமுடையாற்குத் ......
- Archaeological Survey - 1906

3. S.I.I. II Page 426

4. புலநரியான விஜயராசபுரத்து
- Arc. Survey 1911 & J.C.B.As Vol, XXIX parts I-IV

5. Epigraphica Zeylaniva Vol II No 29.

6. இராசராசனுடைய சாசனங்களிற் காணப்படும் மெய்க் கீர்த்திகளில் அவன் முரட்டொழிற் சிங்களவர் ஈழமண்டலம் கொண்ட செய்தி காணப்படுகின்றது. அவன் ஆட்சியின் எட்டாம் ஆண்டிலிருந்தே மெய்க் கீர்த்திகள் காணப்படுவதால், அவன் ஈழ மண்டலத்தை வெற்றிகொண்டது கி.பி. 993 ஆம் ஆண்டுக்கு முக்பாகவே இருத்தல்வேண்டும்.
'கங்கை கொண்ட சோழன்' (ஆசிரியர் தி.நா.சுப்பிரமணியன்) பக் 35

7. ஆசிரியர். H.W.கொட்றிங்ரன் எழுதிய 'இலங்கைச் சரித்திரம்' பக்கம் 40

8. இவன் கங்கைகொண்ட சோழன் எனும் புகழ் படைத்த வீரன்.

9. இச் சிலா சாசனம் கி.பி.1070 வரையில் எழுதப்பட்டிருத்தல் கூடுமென்பது சென்னையில் தொல்பொருட் கலைப் பகுதி உதவி அதிகாரியாயிருந்த திரு.H.கிருஷ்ணசாஸ்திரி அவர்களது கருத்து. - Arch.Survey. 1906

10. With the expectation of the 'Gal - Vihare' this striking ruin of the Saivite cult constructed entirely of gneiss - strangely for years past, and still, popularly mistermed the 'Dalada Maligawa' or 'Shrine of the Tooth Relic' the palladium of Southern Buddhism has naturally attracted the chief attention of visitors to Pollonaruva ........
In style the architecture of this handsome ruin is pronouncedly Dravidian. Not a finer example exists in Ceylon - Arch. Survey, 1977

11. Mr.A.Rea, Superintendent, Archaeoligical Department, Southern Circle, India says:-
"The Dewale (Siva Devale No. I) is generally more advanced in plan and ornate architectural detail than the other temple ( Siva Devale No.II) With its pilaster - lined walls and niches for images, it somewhat resembles the detached Subramanya shrine in the great temple at Tanjore. This temple is a Chola stucture of the 11th century, and the Subramanya shrine is ascribed by Ferguson to the 12th century. In this I think he is correct and apparently Dewale No.I is of about the same date" - Ibid. P.23.
ஆனால் சுப்பிரமணிசாமி ஆலயம் மிகவும் பிற்காலத்ததென (17 ஆம் நூற்றாண்டு வரை) "தஞ்சை ஸ்ரீ பிரஹதீஸ்வரர் - பெருவுடையார் கோயில் என்ற பெரியகோயில்" எனும் நூலாசிரியர் திரு.ஜெ.எம்.சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் கருதுகின்றார்கள். இஃது ஆராயத்தக்கது.

12. Polonnaruwa Bronzes & Siva Worship and Symbolism - J.C.B.R.A - S

படங்கள்: கலாநிதி.க.குணராசா

# நல்லூர் இராசதானி

- கலாநிதி க. குணராசா

**முன்னுரை :**

யாழ்ப்பாண இராய்ச்சியத்தின் ஆள்புலப்பரப்பு காலத்திற்குக் காலம் குறுகியும் விரிவடைந்தும் விளங்கி வந்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் கி.மு ஆயிரம் வருடங்களுக்கு முன்னரேயே மானிடக் குடியிருப்புக்கள் இருந்து வந்துள்ளன வென்பது அன்மைக்கால தொல்லியலாய்வுகள் ஐயத்திற்கு இடமின்றி நிருபித்துள்ளன. இக்குடியி ருப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் ஆட்சிப் பொறுப்பேற்று சிற்றரசர் நிலையில் தலைவர்கள் இருந்திருக் கிறார்கள். கந்தரோடை (கதிரமலை), வல்லிபுரம், காங்கேசன்துறை (ஜம்புக்கோளம்), மாவிட்டபுரம், ஊர்காவற்துறை, கச்சாய், நாகர்கோவில், இயக் கச்சி, பூநகரி, கரியாலை நாகபடுவான், குருந்தன் குளம் முதலிய பகுதிகளில் இவ்வாறான மானிடக் குடியிருப்புக்கள் இருந்துள்ளன. இவ்வாறான சிற்ற ரசுக் குடியிருப்புக்கள் அனைத்தின்மேல் ஆதிக்கம் செலுத்தும் ஆட்சியதிகாரம் வாய்ந்தவனாக அடை யாளம் காணப்படுவன் யாழ்ப்பாண அரசின் முதல் மன்னனாகக் குறிக்கப்படும் உக்கிரசிங்கனாவான். கி.பி 785 இல் ஆட்சிப் பொறுப்பேற்ற உக்கிரசிங் கன் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் இருந்த ஆள்புலம் உக்கிரசிங்கனின் இறுதிக் காலத்தில் வன்னிப்பகுதிக்கு விரிவடைந்தது. ஆரி யச் சக்கரவர்த்திகள் எனும் நாமகரணம் பூண்ட யாழ்ப்பாண மன்னர்கள் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வன்னிப்பகுதிக்கும் அப்பால் இலங்கை யின் மேற்குக் கரையோரமாக கோட்டைவரை, கிழக்குக் கரையோரமாகத் திருக்கோயில் வரை, தெற்குத் திசையில் கம்பனை வரை காலத்திற்குக் காலம் ஆள்புல விஸ்தரிப்பு இருந்துள்ளது. இந் நிலையில் நல்லூர் இராஜதானி என்ற பதம் சுட்டக் கூடிய ஆள்பரப்பு யாழ்ப்பாண இராய்ச்சியத்தின் தலைநகராக விளங்கிய நல்லூரையும் அதன் புரா தன சுற்றாடலையும் குறிப்பதாக அமையும்.

**சிங்கள ஆட்சியாளருக்கெதிரான முதல் கிளர்ச்சி**

கி.மு 3ஆம் நூற்றாண்டிலும் கி.பி 1ஆம் நூற் றாண்டிலும் வடவிலங்கையில் பெரும்பாலும் சிங்கள மன்னர்களின் ஆதிக்கம் நிலவியது. கி.மு மூன்றாம் நூற்றாண்டில் (கி.மு.259 - 210) அனுராதபுரத் திலிருந்து ஆட்சிசெய்த தேவநம்பியதீச மன்னன் வட இலங்கையைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டி ருந்தான். இந்தியாவுடனான சகல தொடர்புகளுக் கும் வடவிலங்கையின் ஜம்புகோளப் பட்டினம் பிரதான துறைமுகமாக விளங்கியது. சங்கமித்த தேரர் புனித வெள்ளரசுடன் இத்துறையினூடாகத் தான் இலங்கையிற் கால்பதித்தார். மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்குரிய சிலா விக்கிரங்கங்கள், ஆளணியினர் இத்துறையினூடாகத் தான் வந்திறங் கினர். அனுராதபுர மன்னர்களான வஸபன் (கி.பி1 ஆம் நூற்றாண்டு), மஹல்லகநாகன், கனிஸ்ட திஸ் ஸன்(கி.பி 2ஆம் நூற்றாண்டு), வெஹாரிக்கதிஸ் ஸன்(கி.பி 3ஆம் நூற்றாண்டு),அக்கபோதி, சிலா மேகவண்ணன்(கி.பி 7ஆம் நூற்றாண்டு) ஆகிய சிங்கள மன்னர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேல் ஆட்சியதிகாரம் கொண்டிருந்தனர். இரண்டாம் மகிந்தன் (777 - 797) என்ற அனுராதபுர ஆட்சியாள ரின் காலத்தில் உத்தரதேசத்து (வடவிலங்கை) முதலிகள் சிங்கள ஆட்சியாளரிடமிருந்து வடவிலங் கையை மீட்கக் கிளர்ச்சி செய்தனர். சிங்கள ஆட்சியாளனுக்கு எதிராகக் கிளர்ந்த இக்கிளர்ச்சிக் குத் தலைமை வகித்தவன் யாழ்ப்பாணத்தின் முதல் மன்னனாக இனங்காணப்படும் உக்கிரசிங்க னாவான். நெடுங்காலம் இழந்திருந்த உரிமையை மீட்கும் வகையில் போரிட்டு கி.பி 785 இல் நாக தீபத்தினைப் பெற்று கதிரமலையைத் (கந்தரோடை) தலைநகராகக் கொண்டு உத்தரதேசத்தை ஆண்டு வந்தான்.

**சிங்க(ன்)நகர்**

உக்கிரசிங்கனின் ஆட்சிக்காலத்தில் கதிரமலை யைக் கைவிட்டுப் புதியதொரு தலைநகரினைப் பல காரணங்களுக்காக உருவாக்கிக் கொள்ள

நேர்ந்தது. கந்தரோடைப் பிரதேசம் பௌத்தமத மக்களது முக்கிய பிரதேசமாக மாறியிருந்தது. ஜம்புகோள விகாரை, ஸாலிபதவிகாரை, திஸ்ஸ விகாரை என்பனவற்றோடு கந்தரோடையிலும் வல்லி புரத்திலும் பௌத்த மக்கள் பரவியிருந்தனர். உக் கிரசிங்கன் தீவிர சைவனாக விளங்கினான். யாழ்ப் பாண இராய்ச்சியத்தில் சைவம் இழிநிலையில் இருப்பது கண்டு புத்தூக்கம் அளிக்கப் பல முயற்சி கள் மேற்கொண்டான். மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலை அமைப்பித்தான். கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலைப் புனருத்தாரணம் செய்வித்தான். காசிப் பிராமணர்களையும் பெரியமனத்துளார் போன்ற சிதம்பர பிராமணர்களையும் வருவித்து குடியமர்த் தினான். இவ்வாறு உக்கிரசிங்கன் பல்வேறு முயற்சி கள் செய்தும் பௌத்த செல்வாக்கு கதிரமலை, வல்லிபுரப்பகுதிகளில் நிலை கொண்டிருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குப்பகுதி, மேற்குப் பகுதி, வடக்குப்பகுதி என்பன மக்கட் குடியிருப் புக்களைக் கொண்டிருந்தன. தென்பகுதி (இன்றைய யாழ்ப்பாணம்) மக்கள் விரும்பிக் குடியேறாத பகுதி யாக விளங்கியது. இத்தகு நிலையில் தனது தலை நகரை இடம் மாற்றுவதற்கு உக்கிர சிங்கன் விரும்பினான். யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைவிட்டு வன்னிப்பகுதியில், (பூநகரிப் பிரதேசமென புஸ்பரெத்தினம் துலக்கமாக இனங்காண்பர்) தனது புதிய தலைநகரை உக்கிரசிங்கன் என்ற அவன் பெயரைத் தாங்கி சிங்கன்நகர் (சிங்கைநகர், சிங்கநகர்) எனப்பெயரினைப் பெற்றது.

தமிழரசரின் ஆரம்பத் தலைநகர்களில் ஒன்றான சிங்கைநகர் என்பது வல்லிபுரப் பகுதியிலேயே இருந்ததென்றும் நல்லூருக்கு அருகில் இருந்த தென்றும் வரலாற்றாசிரியர்கள் கொள்வது ஏற்றதாக வில்லை. புஸ்பரெத்தினத்தின்படி பூநகரிப் பிரதேசத் தில் இருந்ததெனக் கொள்வதே பொருத்தமானது. சிங்கள நூல்களிலிருந்தும் கோட்டகம கல்வெட்டி லிருந்தும் சிங்கைநகர் அலையெறியும் கடற் கரையோரத்தில் அமைந்திருந்ததெனத் தெரிகிறது. யாழ்ப்பாணக் கடனீரேரி அன்று பொங்கு கடலா கவே விளங்கியது. இன்றைய சுண்டிக்குள மணல் தடை அன்றில்லாமல் அராபிக்கடலும் வங்காள விரிகுடாவும், யாழ்ப்பாணக் கடனீரேரி ஊடாக ஒன்றிணைந்து பொங்குகடலாக விளங்கின. கண் தெரியாத ஒரு யாழ்ப்பாடிக்கு இசைக்குப் பரிசாக தனது இராச்சியத்துக்கு வடக்கே இருந்த ஒரு மணல்வெளியைச் சிங்கைநகர் மன்னன் ஒருவன் பரிசளித்ததாகக் கூறும் சம்பவத்தின் உண்மை பொய் எவ்வளவென்பதை ஆராய்வதை விடுத்து மணல் வெளியாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணம் வடக்கேயிருந்ததென்றால் அதைப் பரிசாகத் தந்த மன்னன் இருந்தவிடம் தென் நிலப்பரப்பாக இருந்தது என்பது ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதே.

உக்கிரசிங்கனுக்குப் பின்னர் சிங்கை நகரிலி ருந்து அரசாட்சி செய்தவர்கள் வரிசையில் ஜெய துங்க பரராசசிங்கன் அடுத்த மன்னனாகின்றான். அவன் காலத்தில் பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் (815 - 862) ஆட்சியில் இலங்கை முழுவதும் அடங்கியது. பின்னர் சோழராட்சிக்குள் இலங்கை அடங்கியது. கி.பி 948 இல் வடவிலங் கையைச் சோழரால் நியமிக்கப்பட்ட புவனேகபாகு அல்லது புவனேகவாசர் என்ற அரசப்பிரதிநிதி சிங்கை நகரிலிருந்து நிர்வகித்துள்ளான். பதின் மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை சிங்கைநகர் வடவிலங்கையின் தலைநகராக இருந்துள்ளது.

**விஜயகாலிங்கச் சிங்கை ஆரியன்**

யாழ்ப்பாண இராய்ச்சியத்தின் தலைநகராக யாழ்ப்பாணம் அமைந்தமை நல்லூர் இராஜதானியின் உருவாக்கமாகியது. உக்கிரசிங்க மன்னன் கதிர மலையிலிருந்து (கந்தரோடை) தனது தலைநகரைப் பூநகரிச் சிங்கைநகருக்கு மாற்றிக் கொண்டான். யாழ்ப்பாணக் குடாநாட்டில் பௌத்தமும் சிங்கள வரும் ஆதிக்கம் பெற்றதால் இத்தலைநகர் மாற்றம் இடம் பெற்றது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் இந் நிலைமை மாறியது. அதற்குக் காரணம் உத்தர தேசத்து மன்னனாக சிங்கைநகரில் கலிங்கத்து மாகன் முடிசூடிக்கொண்ட நிகழ்ச்சியாகும். கி.பி.1215 இல் கலிங்கத்துமாகன் என்ற தமிழ் மன்னன் இலங்கையைக் கைப்பற்றி 1236 ஆம் ஆண்டுவரை இருபத்தொரு வருடங்கள் வரை பொலநறுவை யிலிருந்து ஆட்சி செலுத்தினான். இலங்கை வர லாற்றில் கலிங்கத்துமாகனின் படையெடுப்பும் ஆட்சி யும் மிகமுக்கியமான திருப்பு முனையாகக் கருதப் படக்கூடியது.

மாகன் பொலநறுவையில் தன் ஆட்சியை நிலை நிறுத்திக் கொண்டான். சிங்கள மன்னரால் தமிழ ரிடமிருந்து கைப்பற்றப்பட்டிருந்த நிலங்கள், சொத்

துக்கள் என்பனவற்றினை இவன் மீளப்பறித்து தமிழருக்குக் கொடுத்தான். தமிழர் பிரதேசங்களைச் சிங்கள ஆதிக்கத்திலிருந்து மீட்டு இராசரட்டை எனப்படும். வடபாகத்தில் குடியேறியிருந்த சிங்கள ஆக்கிரமிப்பாளர்களைத் தென்புலம் பெயர வைத்தான். கலிங்கமாகனின் ஆட்சியில் சிங்கள மக்களுக்கும் பௌத்தத்திற்கும் எதிராக நிகழ்ந்த சம்பவங்களின் எதிரொலி இராசரட்டைப் பிரதேசத்தில் மட்டுமன்றி உத்தரப் பிரதேசத்திலும் குறிப்பாக நாகபூமியிலும் (யாழ்ப்பாணக் குடாநாடு) எதிராலித்தது என ஊகிக்க இடமுண்டு. அப்பகுதிகளில் வாழ்ந்த சிங்கள மக்கள் பாதுகாப்புக் கருதி அவ்விடங்களைக் கைவிட்டுத் தென்புலம் பெயர்ந்தனர். அதனால் தான் யாழ்ப்பாண இராய்ச்சியம் தோற்றம் பெற்ற போது அல்லது பூநகரிச் சிங்கை நகரிலிருந்து தமிழர் இராச்சியம் யாழ்ப்பாணத்திற்கு இடம் மாறியபோது மக்கட்குடியேற்றங்களை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்த நேர்ந்தது.

1236 ஆம் ஆண்டு 2ஆம் பராக்கிரமபாகு எனும் சிங்களமன்னன் கலிங்கமாகனைப் பொலநறுவையில் வெற்றி கொண்டு துரத்தி விட்டான். 1242 வரை கலிங்கமாகன் கரந்துறைய நேர்ந்தது. அவ்வேளை சிங்கைநகரினை நிர்வகித்த பாண்டிமழவன் கரந்துறைந்து வாழ்ந்த கலிங்கமாகனை வலிந்து அழைத்து வந்து விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி என்ற நாமத்தோடு அரியணை அமர்த்தினான். சிங்கை நகரிலிருந்து தலைநகரை மீண்டும் நாகபூமிக்கு (யாழ்ப்பாணக் குடாநாடு) இடம் மாற்றிய பெருமை விஜயகாலிங்க ஆரியச் சக்கரவர்த்தியையே சேரும்.

வன்னிப்பிரதேசத்திலிருந்து சிங்கை நகரைப் புதியதொரு பிரதேசத்திற்கு அதாவது குடாநாட்டிற்கு இடம் மாற்றியதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. கலிங்கத்து மாகனின் படையெடுப்பால் வன்னியுட்பட்ட இராசரட்டையின் நீர்ப்பாசன நாகரிகம் அழிவுற நேர்ந்தது. பௌத்தத்தையும் சிங்கள மக்களையும் இப்பகுதியிலிருந்து அகற்றும் நோக்கோடு இந்த வீர சைவனான கலிங்கத்து மாகன் எடுத்த நடவடிக்கைகள் 1500 ஆண்டுகளாக நன்கு பயிரிடப்பட்டு வந்த பரந்த வயல் நிலங்களைக் காடு பரவ வைத்தன. நீர்ப்பாசனக்குளங்கள் கவனிப்பாரின்றி சிதிலமடைந்தன. உத்திரரட்டையிலும் இராசரட்டையிலும் காட்டு நோய்களும் மலேரியாவும் மக்களைப்பீடித்து அழிவை ஏற்படுத்தின. வெள்ளப்பெருக்கும் வறட்சியும் இப்பகுதியில் சகஜமாயின. மக்கள் செறிவாக வாழ்ந்த உலர்பிரதேசம் மக்கள் அரிதாக வாழும் பகுதியாக மாறியது. பூநகரி சிங்கைநகர் சிங்கள மன்னனின் தாக்குதலுக்கு எந்நேரத்திலும் உள்ளாகலாம் என்ற அச்சம் நிலவியது. யாழ்ப்பாணக் குடாநாடு பாதுகாப்பான பிரதேசமாகப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக தனது முன்னோர்களின் இராஜதானியை மீண்டும் சைவச் சூழலில் தாபிக்க இம்மன்னன் விரும்பியிருக்கலாம். எனவே விஜயகாலிங்கமன்னன் தலைநகரை மாற்ற எண்ணங் கொண்டான்.

**யாழ்ப்பாண நகரி**

யாழ்ப்பாண வைபமாலையின்படி விஜயகாலிங்கனின் மந்திரியாக இருந்த புவனேகபாகு புதிய தலைநகரான யாழ்ப்பாண நகரியைக் கட்டுவித்தான் என அறியப்படுகின்றது. இதனைக் கயிலாயமாலையில் வரும் ஒரு தனிச்செய்யுள் பின்வருமாறு விபரிக்கின்றது.

*இலக்கிய சகாப்த மெண்ணூற் றெழுபதா மாண்ட தெல்லை*
*அலர்பொழி மாலை மார்பனாம் புவனேகபாகு*
*நலமிகு யாழ்ப்பாண நகரி கட்டு வித்து நல்லைக்*
*குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித்தானே*

எண்ணூற்றியெழுபதாம் ஆண்டு என்பது ஆயிரமாகிய பேரெண்ணும் நூற்றியெழும் சேர்ந்த கணக்காகும். அதாவது சக வருடம் 1170 ஆம் ஆண்டாகும். சகவருடம் 1170 என்றால் அது கி.பி 1248 ஆம் ஆண்டாகும் என்பது நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற வரலாற்றாசிரியர்கள் கணிப்பாகும். இக்குறித்த ஆண்டிற்கு முன் யாழ்ப்பாணநகரி இருந்தது என்பதற்கு எதுவித சான்றுமில்லை. 1242 ஆம் ஆண்டு சிங்கை நகரில் சிம்மாசனமேறிய விஜயகாலிங்க மன்னன் யாழ்ப்பாண நகரியை உருவாக்கி அங்கு தனது இராஜதானியை அமைத்துக் கொண்டான்.

விஜயகாலிங்கமன்னன் தான் புதிதாகக் கட்டுவித்த யாழ்ப்பாண நகரிலும் சுற்றாடலிலும் ஆலயங்கள் பலவற்றினை நிறுவியுள்ளான். 'அவன் தன் வழிபாட்டிற்காகக் கயிலாயநாதர் கோயிலைக் கட்டுவித்தான். கயிலாயநாதருக்கும் உமையவளுக்கும் என இருவேறான உயர்ந்த கோயில்களையும்,

இவற்றோடு மூன்று சபைகள், பரிவாரத் தேவர்களுக் கான மாடங்கள், உக்கிரண சாலை, யாகசாலை, சுற்றுப்பிரகாரம், தேரோடும்வீதி, மடம், அன்னசத் திரம் முதலியவற்றினை அமைப்பித்தான் எனக் கயிலாயமாலை கூறுகின்றது. இம்மன்னன் காலத் தில் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் வன்னியிலும் மக்கட் குடியேற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

**நல்லூர் இராஜதானி**

யாழ்ப்பாணநகரி அமைக்கப்பட்ட காலத்தில் நல்லூர் என்ற ஒரு தலைநகர் இருக்கவில்லை. 'நல்லைக்குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரி வித்தானே' என்று வருவதிலிருந்து அக்கால வேளையில் நல்லூர் இங்கிருந்ததாகக் கொள்ள முடியாது. பூநகரிப் பிரதேசத்திலிருந்து இருக்கும் நல்லூரில் கோயில் கொண்டு குலவிய கந்த வேளுக்கு யாழ்ப்பாண நகரில் கோயில் கட்டுவித் தான் என்பதே சரியான விளக்கமாகும். பிற்காலத் தில் இக்கோயில் நல்லூர்க் கந்தசாமி கோயிலென வழங்கப்பட்டதால் அக்கோயில் அமைந்த இடம் நல்லூராயிற்று. பதினைந்தாம் நூற்றாண்டிலே நல் லூர் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராகியது. அக்காலத்தின் பின்னரே நல்லூர் இராஜதானி என்ற பெயர் பொருத்தமுடையதாகிறது.

விஜயகாலிங்க ஆரியசக்கரவர்த்திக்கும் 1440 இல் அரசகட்டில் ஏறிய கனகசூரியசிங்கை ஆரி யனுக்கும் இடையில் யாழ்ப்பாண இராச்சியத்தை சாவகமன்னன் சந்திரபானு, குலசேகரச் சிங்கை ஆரியன், குலோத்துங்க சிங்கை ஆரியன், விக்கிரம சிங்கை ஆரியன்,வரோதய சிங்கைஆரியன், மார்த் தாண்டசிங்கை ஆரியன், ஜயவீரசிங்கைஆரியன், குணவீரசிங்கைஆரியன் என எட்டுமன்னர்கள் ஒருவர் பின்னொருவராக ஆண்டிறந்தனர். 1440 ஆம் ஆண்டு குணவீரசிங்கை ஆரியனின் மகனான கனக சூரியசிங்கைஆரியன்(செகராசசேகரன் 6) யாழ்ப் பாண இராச்சியத்தின் மன்னனாகினான். ஆரியச்சக் கிர வர்த்திகள் கட்டிக் காத்த வடவிலங்கையின் விலைமதிப்பில்லாத சுதந்திரத்தை தென்னிலங்கை மன்னனிடம் கனகசூரியசிங்கை ஆரியன் பறி கொடுத்தான்.

கனகசூரியசிங்கைஆரியன் வடவிலங்கையை ஆண்ட வேளையில் தென்னிலங்கையில் கோட்டை அரசனாக ஆறாம் பராக்கிரமபாகு என்பான் விளங்கி னான். அவன் தனது வளர்ப்புப் புத்திரனும் சேனாதிபதியுமான சப்புமல்குமரய(செண்பகப் பெரு மாள்) என்பானைப் பெரும்படையுடன் யாழ்ப்பாணத் தைக் கைப்பற்ற அனுப்பினான். அவன் யாழ்ப்பாண நகரியுட் புகுந்து மாட மாளிகைகள், நல்லூர்க் கந்தசாமி கோயிலுட்படப் பல கோயில்களையும் இடிப்பித்தழித்தான். யாழ்ப்பாண நகரி இச் சிங்களப் படையெடுப்பால் சிதைந்து போனது. கனகசூரிய சிங்கைஆரியன் தன்னிரு புதல்வர்களுடன் இந்தியா விற்கோடித்தப்பினான். சப்புமல் குமரய நல்லூரிலிந்து பதினேழு வருடங்கள் ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு என்ற சிம்மாசனப் பெயரோடு அரசாண்டான். இந்தி யாவிற் கரந்துறைந்த கனகசூரியனும் அவனது இரு புதல்வர்களும் பெரும்படையுடன் வந்து யாழ்ப்பாணத்தினை மீட்டுக்கொண்டனர். கனக சூரியன் இழந்த மணிமுடியை மீண்டும் தரித்துக் கொண்டான். அவன் பின் அவனது மூத்த மகனான பரராசசேகரன் கிபி1478 இல் சிங்கைப்பரராசசேகரன் என்ற நாமத்தோடு மன்னனானான்.

நல்லூர் இராஜதானியைச் செப்பமிட்ட மன்னன் இவனே. சிங்களப்படையெடுப்பால் அழிவுற்ற கோயி ல்களையும் ஏனைய கட்டமைப்புக்களையும் புனருத் தாரணம் செய்வித்தும் சில்விடத்துப் புதிதாகக் கட்டுவித்தும் இராஜதானியை உருவாக்கினான். இவ்விராஜதானியை யாழ்ப்பாண வைபவமாலை பின்வருமாறு வருணித்துள்ளது. நாலு மதிலும் எழுப்பி வாசலும் ஒழுங்கா விடுவித்து மாடமாளிகையும் கூட கோபுரங்களையும் பூ ங்காவையும் பூ ங்காவன நடுவில் ஸ்நானமண்டபமும் முப்படைக்கூபகமும் உண்டாக்கி அக்கூபத்தில் யமுனா நதித்தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிட்டு நீதிமண்டபம், யானைப்பந்தி, குதிரைலாயம், சேனாவீரரிருப்பிடம் முதலியன கட்டுவித்துக் கீழ்த்திசை வெய்யிலுகந்த பிள்ளையார் கோயிலையும், மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன் கோயிலையும், தென்திசைக்கு கைலாய பிள்ளையார் கோயிலையும், வடதிசைக்குச் சட்டநாதர் கோயில், தையல்நாயகி அம்மன் கோயில், சாலைவிநாயகர் கோயிலையும் அமைப்பித்தனர். போர்த்துக்கேய ஆவ ணங்களிலிருந்து பலமான கோட்டை ஒன்று நல் லூரில் இருந்ததாக அறியலாம். அதனை அவர்கள் இடித்தழித்தனர் எனவும் அறிய முடிகிறது.

சிங்கைப் பரராசசேகரன் காலத்தில் நல்லூர் இராஜதானி நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தினைச்

சுற்றி அமைந்திருந்தது. திக்கெல்லாம் ஆலயங்கள் நிறுவப்பட்டிருந்தன. சட்டநாதர்கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோயில், கைலாசபிள்ளையார் கோயில், வீரமாகாளியம்மன் கோயில் முதலானவை அமைந்திருந்தன. முத்திரைச் சந்திப்பகுதியில் முன்னர் அமைந்திருந்த புராதன நல்லூர்க் கந்தசுவாமி கோயிலையும் அரண்மனையையும் அண்மி அமைக்கப்பட்டிருக்கும் 'ப' கர வடிவ யமுனா ஏரி (கூபகம்) அம்மன்னனின் மிக முக்கியமான கட்டமைப்பாகும்.

நல்லூர் இராஜதானியின் இருப்பினை இன்று உறுதிப்படுத்தும் தொல்பொருட் சின்னங்களாக விளங்குவன யமுனாரி, மந்திரி மனை, பூதத்தம்பி வளைவு, முத்திரை மண்டபம் என்பனவாம். அவற்றோடு சங்கிலித்தோப்பு, பண்டாரவளைவு, இராசாவின் தோட்டம், பண்டாரக்குளம், அரசகேசரி வளவு, என்பனவும் ஆங்காங்கு காணப்படும் கட்டிட அழிவுகளின் எச்சங்களும் அக்கால நல்லூர் இராஜதானியை நினைவு கூர வைக்கின்றன. வரலாற்றுக் கால ஆலயங்கள் கம்பீரமாகப் புதுப்பொலிவோடு மிளிர்கின்றன. சிங்கைப் பரராசசேகரனுக்கு பின்னர் யாழ்ப்பாண இராய்ச்சியத்தின் மன்னனாக அரசவரன்முறையை மீறி முடி புனைந்தவன் சங்கிலி செகராசசேகரனாவான். அவனுடைய மந்திரியாக அமைந்தவன் அவனின் மூத்த சகோதரன் பரநிருப சிங்கனாவான். அவன் வாழ்ந்த மாளிகைதான் இன்றைய மந்திரி மனையாகும். இவைதான் தமிழ்மக்களின், சுதந்திர யாழ்ப்பாண இராய்ச்சியத்தின் தலைநகராக விளங்கிய நல்லூர் இராஜதானியை நினைவு படுத்திக் கொண்டிருக்கின்றன.

# அருள் வேண்டினோம்

- வைசப்புலவர் இராசையா ஸ்ரீதரன்

தொன்று தொட்டு நிலவிடும் தோகைமயில் முருகன்

மன்று னெட்டும் மாண்பினை எடுத்துரைக்க முடியுமோ?

குன்று தோறாடி வரும் குமரனருள் வேண்டியே

நின்று நாம் தொழுகின்றோம் நிகருனக்கு வேறுண்டோ?

# ஈழத்துத் திருப்புகழ் – ஒரு குறிப்புரை

- பேராசிரியர் வி. சிவசாமி

தமிழிலே முருகப் பெருமானைப் பற்றிய பக்திப் பாடல்களிலே திருப்புகழ் மிகச்சிறப்பு வாய்ந்தது ஆகும். சைவசமய மரபிலே வழிபாட்டின்போது கூறப்படும் பஞ்சபுராணங்களான தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், ஆகியவற்றுடன் ஆறாவதாகத் திருப்புகழ் இடம் பெற்றுள்ளது. முன்னைய ஐந்தும் சிவபிரானையே சிறப்பித்துக் கூறுவன. பின்னையது முருகப்பெருமானையே சிறப்பித்துக் கூறும். ஒரு சில திருப்புகழ்கள் பிள்ளையார் பற்றியும் உள்ளன. இவையெல்லாம் இறைவனின் சிறப்பியல்புகளை விபரிப்பன. அவரின் புகழை எடுத்துக்கூறுவன. அவருக்குரிய வாடாத பக்திமான்களாக விளங்குகின்றன. இவற்றுள் திருப்புகழ் முருகப்பெருமான் பல்வேறு திருவிளையாடல்களையும் வீர தீரச் செயல்களையும் அடியார்க்கு எளிதில் அவர் அருள் பாலிக்கும் பாங்கு முதலியன வற்றைப் புகழ்ந்து கூறும். இறைவனின் புகழைக் கூறுவதால் திருப்புகழ் எனப்படும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருப்புகழை இயற்றியவர் கி.பி 15ம் நூற்றாண்டிலே தமிழகத்திலே வாழ்ந்த சிறந்த புலவர்களில் ஒருவரான அருணகிரிநாதர். இவர் வாழ்ந்த காலத்திலே முருகவழிபாடு சிறப்பாக நிலவிற்று. முற்பட்ட காலச் சைவ நாயன்மார்கள் எவ்வாறு தமிழகத்திலுள்ள ஊர்கள் தோறும் சென்று அவ்விடங்களிலுள்ள சிவத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானைப் பற்றிப் பக்திச் சுவை ததும்பும் இனிய இசையோடு கூடிய செந்தமிழ்ப் பாடல்களாகிய தேவாரம், திருவாசகம் ஆகியவற்றைப் பாடி மக்களுக்குத் தெய்வ(சிவ) பக்தியையும் செந்தமிழ் உணர்வினையும் நாட்டுப்பற்றையும் ஊட்டி விழித்தெழச் செய்தார்களோ அது போலவே அருணகிரிநாதரும் பல முருக தலங்களுக்கும் சிவதலங்களுக்கும் சென்று அவ்விடங்களில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானைப் பற்றிச் சிறப்பித்துச் சிறந்த கந்தப் பாடல்களையும் பாடி மக்களைக் குறிப்பாக முருக பக்தியிலீடுபடச் செய்துள்ளார். இலக்கிய கலாநிதி வ.சு செங்கல்வராயபிள்ளை அருணகிரிநாதர் பாடியுள்ள இருநூறு திருத்தலங்கள் பற்றித் தாம் எழுதியுள்ள அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும் என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார்.

இத்திருத்தலங்களில் ஒருசில ஆந்திரதேசத்திலும், மூன்று இலங்கையிலுமுள்ளன. ஏனையவை தமிழகத்தில் உள்ளன. இச்சிறு கட்டுரையிலே இலங்கையிலுள்ள மூன்று தலங்கள் பற்றிய திருப்புகழ் பற்றி சுருக்கமாகக் கூறப்படும்.

இதற்கு முன்னோடியாகத் திருப்புகழ், அதன் ஆசிரியர் அருணகிரிநாதர் பற்றிச் சிறிது கூற வேண்டியது அவசிமாகும். ஏற்கனவே குறிப்பிட்டவாறு தேவாரம், திருவாசகம் போல இதுவும் பக்திச்சுவைமிக்கது. இசை நயமும் பொருள் நயமும் மிக்கது. இதிலுள்ள கந்தஇசை இணையற்றதாகும். அதாவது லயம், தாளம் சிறப்பானவை. ஓசை நயமும் மிக்கவை. சைவசமய பௌராணியாக மரபுகளும் ஐதீகங்களும் இவற்றில் இடம் பெறுகின்றன. இவர் சுமார் மூவாயிரம் திருப்புகழ் பாடியதாக அறியப்படுகின்றது. அவற்றை விடக் கந்தரந்தாதி, கந்தரநுபூதி, கந்தரலங்காரம், வேல் விருத்தம், மயில் விருத்தம், திருப்புயவகுப்பு முதலியனவற்றையும் இயற்றியுள்ளார். இவருடைய வாழ்க்கை வரலாறு பற்றிய நம்பகமான செய்திகள் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன. இவர் வாழ்க்கையின் முற்பகுதியில் விலை மாதரின் சிற்றின்பத்திலே மிகவும் ஈடுபாட்டு மனமுடைந்து தற்கொலை செய்ய முயற்சித்த போது முருகப் பெருமானின் திருவருளால் காப்பாற்றப்பட்டுப் பின்னர் அவர் புகழையே பாடி அவரையே புகலிடமாகக் கொண்டு வாழ்ந்தார் என மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. இவருடைய திருப்புகழிலே இக்கருத்திற்குச் சான்றுள்ளது. பல பாடல்களின் முற்பகுதியிலே தாம் சிற்றின்பத்திலே திளைத்துத் தடுமாறியதும் பின்னர் முருகன் தன்னைக் காப்பாற்றியதாகவும் கூறுகின்றார். சில பாடல்களிலே இறைவன் குருவடிவாக வந்து தன்னை ஆட்கொண்டதாக மணிவாசகர் போலக் கூறுகின்றார். அவருடைய - முருகனுடைய திருவடிகளைத் தேடிச் செல்பவராகவும், அத்திருவடிகளே தமக்குப் புகலிடம் அவற்

றைக் காட்ட வேண்டும் எனவும் அவர் உள்ளமுருகிப் பாடியுள்ளார். எந்த நூலிலும் அல்லது ஆக்க இலக்கியத்திலும் நூலாசிரியன் அல்லது புலவனின் மனப்பாங்கு எவ்வாறாயினும் பிரதிபலிக்கும் என்பது பொதுவான உண்மையாகும்.

இலங்கையிலுள்ள மூன்று புகழ் பெற்ற முருக தலங்கள் பற்றி இவர் திருப்புகழ் பாடியுள்ளார். அவற்றினுள்ளே தொன்மை வாய்ந்த முருக தலமான கதிர்காமம் பற்றி 30 திருப்புகழும், திருகோணமலையிலிருந்த முருகன் கோவில் பற்றி இரண்டு திருப்புகழ்களும் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பற்றி ஒன்றும் கிடைத்துள்ளன. கந்தவனம் பற்றியும் ஒன்று உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இத்திருப்பாடல்கள் கூறும் குறிப்பாக மூன்று திருத்தலங்கள் பற்றி முதலிலே கூறலாம். திருத் தலங்கள் பற்றி பாடல்களில் அவை பற்றிய தனிச் சிறப்புக்களும், ஐதீகங்களும் இடம்பெறும். அதே வேளையில் அனைத்துக்கும் பொதுவான பண்புகள் குறிப்பாகப் பாடல்கள் வருணிக்கும் தலைவன் இங்கு முருகன் பற்றியவற்றிலே இடம்பெறும்.

கதிர்காமம் தென்னிலங்கையிலே மாணிக்க கங்கையாற்றங் கரைக்கு அருகில் உள்ள மலைப்பிரதேசத்திலுள்ளது. முருகன் சிறப்பாகக் குறிஞ்சி நிலத்தெய்வம். எனவே அந்நிலத்தின் இயற்கை வனப்பு முதலியனவும் இடம்பெறும். அப்பிரதேசத்திலே நெடுங்காலமாக வாழும் இலங்கையின் ஆதிக் குடிகளாகிய வேடர் குலவேந்தனின் மகள் வள்ளி நாயகி முருகனின் அன்பிற்குரிய ஒரு சக்தி. எனவே முருகன், வள்ளி காதல் மற்றும் தொடர்புகள் முதலியன கதிர்காமத் திருப்புகழில் நன்கு இடம் பெற்றமையில் வியப்பில்லை. கதிர்காமம் இன்று கூடுதலாகச் சிங்கள பௌத்தர்களின் ஆதிக்கத்திற் குட்பட்டிருப்பினும் அங்கு தொடர்ந்து இடம் பெறும் முருகவழிபாடு, பழந்தமிழர் மத்தியில் நிலவிய வழிபாடு முறைகளை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. இலங்கையின் எப்பகுதியிலுள்ள இந்துக்களும் கதிர்காமக்கந்தனில் பொதுவாக ஈடுபாடுள்ளவர்களாக உள்ளனர். முற்காலத்தில் போல இன்று பொதுவாகச் சுதந்திரமாகச் செல்ல முடியாத காரணத்தினால் இலங்கையின் குறிப்பாகக் கிழக்கு, வடக்குப் பகுதிகளில் சின்னக் கதிர்காமம் என்ற பெயரில் புதிய ஆலயங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் தொண்டைமானாற்றிலுள்ள செல்வச்சந்நிதி பழைமை வாய்ந்த முருக தலமாகும். தென்கோடியிலுள்ள கதிர்காமம் போன்று இலங்கையின் வடகோடியிலே செல்வச்சந்நிதி விளங்குகின்றது. வழிபாட்டு முறைகளில் இரண்டுக்குமிடையிலே சில ஒற்றுமையுண்டு.

அருணாகிரிநாதர் பாடியுள்ள திருகோணமலை முருகத்தலம் எதுவென்பது தெளிவில்லை. ஒரு வேளை போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டிருக்கலாம். அல்லது புகழ்பெற்ற திருக்கோணேஸ்வர ஆலயத்தினைச் சேர்ந்த முருகன் ஆலயமாக இருந்திருக்கலாம். இது பற்றிப் பின்னர் கூறப்படும்.

அவர் கூறும் யாழ்ப்பாணப் பட்டின முருகன் ஆலயம் முன்னாள் நல்லூர் கந்தசுவாமி கோவில் என்பதில் ஐயமில்லை. பழைய நல்லூர் ஆலயம் ஒரு பெரிய கோவிலாக இருந்ததெனவும் ஒரு கட்டத்திலே போர்த்துக்கீசால் வீரரின் பாசறையாக இருந்ததெனவும் இதனை அழித்துத் தரைமட்டமாக்கிய போர்த்துக்கீசரின் ஆவணங்கள் குறிப்பிட்டுள்ளன. மேலும் பழைய தலைநகரான நல்லூரைச் சுற்றிக் கோட்டையிருந்ததாகவும் அறியப்படுகின்றது. இதனை இது பற்றித் திருப்புகழும் உறுதிப்படுத்துகின்றது. யாழ்ப்பாணம் யாழ்ப்பாணாயன் பட்டினம் எனவும் அழைக்கப்பட்டது.

பொதுவாக, ஏற்கனவே குறிப்பிட்டவாறு ஏனைய திருப்புகழ் பாடல்களிற் போலன்றி இத்தலங்கள் பற்றிய பாடல்களிலே ஒரு குறிப்பிட்ட தொகைப் பாடல்களின் முற்பகுதியிலே தான், இவர் விலை மாதரின் சிற்றின்பத்திலே திளைத்துப் பின் கவலைப்படுவதையும் பின்னர் தமது துயர் துடைக்குமாறு வேண்டுவதையும் பார்க்கலாம். எடுத்துக் காட்டாக,

**கருகியே மெத்த விடலாம் வைத்த**
**கலகவா ளொத்த விழிமானார்**
**கடினபோ கத்த புளகவாருற்ற**
**களபமார் செப்பு முலைமீதே**
**உருகியான் மெத்தமயவனாகிப்பு**
**ன்னுரைகளே செப்பி யழியாதுன்**
**உபயபாதத்தி னருளையே செப்பு**
**முரிய ஞானத்தை யருள்வாயே** (27)

என்பதனைக் குறிப்பிடலாம்.

கதிர்காமத்தின் இயற்கைக்வளம்,

**"மணிதரளம் விசி அணியருவிச்சூழ**
**மருவு கதிர்காமப் பெருமான்"** (11)
**"கரிய யுகத்திரட்பலவின் மீதிற்சுளைக்**
**கனிகள் பீறிப்புசித் தமாரடிக்**

**கதலி சூதத் தினிற் பயிலுமீழத்தினிற்**
**கதிர்காமக் கிரிகப் பெருமாளே** (06)

போன்றவற்றிலே காணலாம். இலங்கையின் பெயர்களிலொன்றான ஈழம் என்ற சொல்லினை அருணகிரிநாதர் மேற்குறிப்பிட்டதிலும் "ஈழ கதிர் காமம் வாழ்தேவர் பெருமாளே" (2021) போன்ற வற்றிலும் பயன்படுத்தியுள்ளமை உற்று நோக்கற் பாலது.

கதிர்காமம் பற்றிய அடைமொழிகளும் குறிப் பிடத்தக்கன. "தோமில் (குற்றமற்ற) கதிர்காமம்(10) சிவஞானசுத்த கதிர்காமப்பெருமாளே (26)" கதிர் காம மூதூரிலிளையோனே(16,17) போன்றவற்றிலே கதிர்காமத்தின் தொன்மையும் சைவசமயச் சிறப்பும் நன்கு தென்படுகின்றன. முருகப்பெருமான் என்றும் இளையவன். ஆனால் அவன் இருக்கும் கதிர்கா மமோ பழைமை வாய்ந்ததலம். இறைவனுக்கு மூப்பு இல்லை. எனவே அவன் தொடக்கமற்று என்றும் இளமையாக உள்ளவன். அவன் வீற்றிருக் கும் திருத்தலமும் தொன்மையானதே.

முருகப்பெருமான் கதிர்காமத்திலே கருணை மலையாக விளங்குகின்றான். "ஞானகருணை மேரு வேயீழக்கதிர்காமம் வாழ்தேவர் பெருமாளே" (19,21) "கருணை மேரு" எனும் சிறப்புச் சொற்றொடர் மேலும் பல பாடல்களில் வருகின்றது. மேலும் பொன் மயமானது மலைகளிற் சிறந்தது என்று கூறப்படும். இறைவனே கருணையின் வடிவமாக விளங்கி அனைவருக்கும் அருள்பாலிக்கின்றான்.

திருகோணமலை பற்றிய திருப்புகழிலே அத் திருத்தலம் "நிலைக்கு நான்மறை தவத்தான பூசுரர், திருகோணமலை தலத்தாரு கோபுரநிலைக் கள வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே" என வருணிக்கப்படுகின்றது. இவ்வருணனை திருகோண மலையிலுள்ள திருக்கோணேஸ்வர ஆலயத்திலி ருந்த முருகப் பெருமானையோ அல்லது திருகோ ணேஸ்வரப் பெருமானையோ இவர் பாடுகிறார் போல வும் தென்படுகின்றது. ஏனெனில் சிதம்பரம் நடராஜர் திருக்கோயில் பற்றிய திருப்புகழ் பாடல்கள் உள் ளன. அவருக்கு சிவபிரானும் முருகனும் ஒரே தெய்வமாகக் காட்சியளித்தனர். யாழ்ப்பாணாயன் பட்டின (நல்லூர்) முருகனைப் பற்றிய திருப்புகழ்

**"ஏற்போர் தாம் வசத்திச்சையின் மகிழ்வோடு**
**வாய்ப்பாய் வீசும் பொற்பிரபை நெடுமதின்**
**யாழ்ப்பாணாயன் பட்டின மருவிய பெருமாளே"**

என முடியும் பகுதியிலே ஏற்கனவே குறிப் பிட்டவாறு மதிலாலே சூழப்பட்டுள்ள பழைய தமிழ் மன்னரின் தலைநகராகிய நல்லூரை இது குறிக் கின்றது.

முருகப்பெருமான் தந்தைக்குப் பிரணவோப தேசம் செய்த பெருமைக்குரியவர். அப்பெருமான் தன்மீது கருணைகூர்ந்து குருவடிவாக வந்து தன் னையும் ஆட்கொண்டமையும் அருணகிரிநாதர் விய ந்து கூறுகின்றார். தந்தைக்கு குருவான முருகனை

**அரவு பிறைவாரி விரவு சடைவேணி**
**அமலர் குருநாதப் பெருமான் காண் (01)** எனவும்,

**அதிர வீசியாடும் வெற்றி விடையிலேறு மீசர்கற்க**
**அரிய ஞான வாசகத்தையருள் வோனே** எனவும்,

தமக்குப் அப்பெருமான் குருவாக வந்து ஆட்கொண்டருள் புரியும் மாற்றத்தினை

**இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்**
**பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே** எனவும் கூறியிருப்பன மனங்கொள்ளற்பாலன.

கதிர்காமத்திலே கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் முருகப்பெருமான் நாதப் பேரொளியின் சிறந்த நற்குணங்களின் வடிவம். இச்சா சக்தி, கிரியா சக்தி யாகிய வள்ளி, தெய்வநாயகி, ஆகி யோரின் மணாளனாக வேலினைத் திருக்கரத்திலே தாங்கியுள்ளான்.

பேரொளி வடிவானவன், சிவஞானத்தின் வடிவ மான இளமையான இறைவன் குற்றமற்ற கதிர் காமத்தில் எழுந்தருளியுள்ளான் என்ற கருத்துப்பட

**நாதவெளியே நற்குணசீலா!**
**நாரியிருவோரைப் புணர்வேலா!**
**சோதி சிவஞானக் குமரேசா!**
**தோமில் கதிர்காமப் பெருமாளே**

என அவர் கூறியுள்ளார்.

முருகப்பெருமான் சிவபெருமான் உமாதேவியார் ஆகியோரின் திருமகன் என்பதையும் திருமாலின் மருகன் என்பதையும் வள்ளி, தெய்வநாயகி மணா ளன் என்பதையும் அவர் இத்திருப் பாடல்களிலே சிறப்பிக்கின்றார். எனினும் சக்திகளிலே வள்ளி நாயகி பற்றிய குறிப்புக்களே கூடுதலாக வந்துள் ளன. கதிர்காமத்தலம் வள்ளி நாயகியுடன் நெருங் கிய தொடர்புடையதால் இவ்வாறு அவருக்கு முக் கியத்துவம் அளிக்கப்படுகின்றது எனலாம்.

அப்பெருமானுடைய வீரதீரச்செயல்கள் பிர மாதமாகக் கூறப்பட்டுள்ளன. அவர் தாரகன் குறிப் பாக சூரன் முதலிய அசுர மன்னர்களை வென்று தேவர்களைச் சிறை மீட்டு அவர்களுக்கு அருள் பாலித்தமை

**அரிய லோக மீது சுற்றி யகரர் லோக மீட்டித்து**
**அமரர் லோகம் வாழ வைத்த பெருமாளே (10)** எனவும்

**அடல் கெடாதசூர் கோடி மடிய வாதை வேலெவி**
**யமர் செய்வீர வீராறு புயவேனே (14)** எனவும்

கூறப்படுவதால் அறியப்படும். தேவர்களுக்கு இவ் வாறு திருவருள் பாலித்தமை யால் பலபாடல்களிலே "தேவர்பெருமாளே" என அவர் சிறப்பிக்கப்படுகின்றார். அதே வேளையில் அனைவருக்கும் அவர் திருவ ருள் பாலிப்பவர் என்ற கருத்தும் பல பாடல்களிலே வருகின்றது. ஏற்கனவே குறிப்பிட்டவாறு அவர் "கருணைமேரு" ஆவர் என்றும் பக்தர் பக்கத்தில் ஆபத்பாந்தவனாக விளங்குபவர்

**முருகனே! பத்தரருகனே! முத்தி**
**முதல்வனே எனவும் பச்சைமயில் வீரா (06) எனவும்**
**முருகனே பக்தரருகனே (27)** எனவும்

வருவனவற்றால் மேற்குறிப்பிட்ட கருத்துப் புலப் படும். அப்பெருமான் மிகச் சிறந்த குருநாதனுமாவர் என்பது "மிக்க குருநாதர் பெருமான் காண்" என்ப தனாலும் உணரப்படும். பக்தர் பெருமானாகவும் குருநாதர் பெருமானாகவும் அவர் திகழ்கிறார்.

அப்பெருமான் அனைத்திற்கும் அப்பாற்பட்டவர். சரியை, கிரியை, யோகம், ஞானத்திற்கும் மேலானவர்.

**சரியையாளர்க்கு மக்கிரயையாளர்க்கு நற்**
நற் சகலயோகர்க்கு ... ரிதாய
சமயபேதத்தவர்க்கனு கொனாமெய்ப்பொருட்
டருபராசத்தியிற் பரமான
**துரிய மேலற்புதப் பரமஞானத் தனிச்**
சுடர் வியாபித்த நற்பதி நீடு
**துகளில் சாயுச்சியக் கதியையீறற்றசொற்**
சுகசொரூபத்தையுற் றடைவேனோ? .....

எனவரும் பகுதி ... முருகப்பெருமானின் மிக மேலான பரத்து ...னைக் கூறி, அவரளிக்கும் சாயுச்சிய முத்தியை "எப்போது தாம் அடைவன்" என அருணகிரிநாதர் எதிர்பார்க்கின்றார். இப்பேர்ப் பட்ட சிறப்புள்ள இறைவனிடத்து

**எதிரிலாத பக்திதனை மேவி**
**இனிய** தாள்நினைப்பை **யிருபோதும்**
**இதயவாரிக் குளுறவாகி**
**எனதுளே சிறக்க அருள்வாயே (02)**

என இணையற்ற பக்தியும் இறைவனின் திருத் தாள் நினைவும் இதயத்துள் புகுந்து சிறக்க அருள் புரியுமாறு இரங்கிக் கூறுகிறார். பக்தர்கள் என்றும் விரும்புவது இறைவனின் திருப்பாதங்களே. ஏனெ னில் திருவருள் நல்குவது அவையே. நடராஜப் பெருமானின் தூக்கிய திருவடியே அருளுதலைச் செய்வதாகும். **நின்னிற் சிறந்தவை நின்தாளி ணைகள்** எனச் சங்ககாலப் புலவன் ஒருவன் இறைவனின் திருமாலின் திருவடிகளைச் சிறப்பித்துள்ளான்.

முருகப்பெருமான் மயிலின்மீது வரும் அழகிய அருங்காட்சி அருணகிரிநாதரை நன்கு கவர்ந்துள் ளது. **கலாபசித்திர மயில்வீரா (10) பச்சை மயில் வீரா(08)** மரகத மயின்மிசை (03) போன்றவை இவ்வகையிற் குறிப்பிடற்பாலன.

முருகப்பெருமான் தன்னை இடையறாது நினைக்கும் அன்பரின் உள்ளத்திலே பச்சைமயில் மீது இவர்ந்து விளையாடுகிறான் - திருவிளையா டல் புரிகிறான் - இலங்குகின்றான் என்பது

**மருவுமடியார்கள் மனதில் விளையாடு**
**மரகதமயூ ரப் பெருமாள் காண்**
என்பதால் அறியப்படும்.

அப்பெருமான் வைதாரையும் வாழவைப்பான். அறியாமையாலோ அறிந்தோ தன்னை நல்ல வார்த் தைகளாலே போற்றுவோருக்கு மட்டுமன்றி தகாத வார்த்தை பேசுவோருக்கும் இரங்கி அருள்புரிவான் என்பது **இதமொழி பகரினும்** மதமொழி பகரினும் **ஏழைக்கு இரங்கும் பெருமாளே** எனக் கூறியி ருப்பதாலே புலப்படும். **மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே** என இராமலிங்க சுவாமி ...ள் ...வைதிராளை... போற்றியுள்ளமை மேற் குறிப் பிட்டவற்றுடன் ஒப்பிடற்பாலது.

க...ிரக... ம் பற்றிய பாடல்களில்,மருவறா வெற்றி மல... தொ...**டாவிற்கை வலிசெயா நிற்குமனாதலும்** எனத் தொடங்கும் பாடலில் நாயக நாயகி பாவம் நயம் படக் கூறப்படுகின்றது. இங்கு அருணகிரிநாதர் நாயகியாகவும் முருகப் பெருமான் நாயகனாகவும் பாவனை செய்யப்பட்டுள்ளார். இறைவன் ஆன்மா தொடர்புகளை விளக்கும் பாவங்களில் நாயக நாயகியாக பாவமும் ஒன்றாகும்.

திருகோணமலைத் திருப்புகழ் ஒன்றிலே முருக னைத்தேடி அவன் புகழ்பாடும் தன்னை அப்பெ ருமான் நாய் போன்றவனாகிய தனக்கு அவரின்

அருட்பார்வையளித்து அவரின் திருவடியின் கீழி ருக்கும் வண்ணம் அருள்பாலிக்குமாறு அருணகிரி முருகனை வேண்டுகிறார். அத்திருப் பாடல் "நினை த்த காரியம்" அநுகூலமே புரி பெருமாளே" என முடிவடைகின்றது. எனவே நிச்சயமாக திருவருள் கிடைக்கும்.

திருகோணமலை பற்றிய பிறிதொரு செய்யுள் முடிவிலே (32) அறங்களை வளர்த்து வாழ்ந்த (தாயாகிய) பார்வதி மகிழ்ச்சியடைய அழகிய வள்ளி, தெய்வானை அம்மையாருடன் சோலைகள் நிறைந்த திருகோணமலை எனும் தலத்தில் உலா வும் பெருமாளே" என்னும் பொருள்படக் கூறப் படுகின்றது.

நல்லூர் பற்றிய திருப்புகழின் முற்பகுதியிலே சிற்றின்பத்திலே திளைத்துப் கெட்டுப்போன தமக்கு உலகப் பற்றறுத்து இனிமேலாவது மெய்ஞா னத்தை அருளிக்காக்குமாறு "கேட்டேனை உனது மெய்வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அரு ளாயே" என உள்ளமுருகி அவர் முருகப் பெரு மானை வேண்டுவதைக் காணலாம். தொடர்ந்து சிவபெருமானின் வாம பாகத்தைத் தனதாக்கிக் கொண்டு பல்வேறு திருக்கோயில்களில் உலகி லேற்படும் துன்பங்களை நீக்கி அருள்பாலிக்கும் அம்பிகையின் செல்வப் புதல்வன் முருகன் எனப் புலவர் கூறுகிறார். தாய்போலத் திருக்குமரனும் திருவருள் பாலிப்பான் என்பது தெளிவு. இதைத் தொடர்ந்து முருகப் பெருமான் தன்னை முறைப்படி வழிபட்ட துறவிகளுக்கு ஞானஉபதேசம் செய்த சிறந்த ஞானகுருவாகியமையையும் தமிழலக்கண ஆராய்ச்சியில் ஈடுபட்ட அகத்தியர் முதலியோ ருக்குத் தமிழறிவை அருளிச் செய்தமையையும் விதந்து

**எத்தா நாளும் தர்ப்பண செபமோடு**
**நீத்தார் ஞானம் பற்றிய குருபர**
**யாப்பாராயுஞ் சொற்றமிழருடரு முருகோனே**

என அருணகிரிநாதர் புகழுகின்றார். தமிழோடும் தமிழகத்தோடும் மிகவும் ஒன்றுபட்ட தெய்வமாக முருகன் விளங்குவதை அவர் இங்கு சுட்டிக் காட்டி யுள்ளார். யாழ்ப்பாணம் மிக நீண்டகாலச் சைவத் தமிழ்ப் பாரம்பரியமுள்ள பிரதேசமே என்பதையும் இங்கு அருணகிரிநாதர் சுட்டிக்காட்டுகின்றார் என லாம். தொடர்ந்து தம்மை விரும்பி வேண்டுவோர் வேண்டுவதை மகிழ்ச்சியோடு முருகப்பெருமான் வாரி வழங்குகின்றார். அத்தகைய மிகச் சிறப்பு வாய்ந்த முருகப்பெருமான், பொன்போல ஒளிவீசும் உயர்ந்த மதில் சூழ்ந்த யாழ்ப்பாணப் பட்டினத்திலே (நல்லூரிலே) வீற்றிருந்து அருள்பாலிக்கிறார் எனக் கூறப்படுகிறது. கோட்டை சூழ்ந்த நல்லூர் பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பல சிறப்புக்கள் வாய்ந்தனவாக ஈழநாட்டுத் திருப்புகழ்ப் பாடல்கள் விளங்குகின்றன. இவற்றில் ஒருசிலவே இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள் ளது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் பற் றிய தேவாரப்பதிகங்கள் போல இத்திருத்தலங்கள் பற்றிய திருப்புகழ்ப் பாடல்களையும் ஈழத்துச் சைவமக்கள் நன்கு போற்றிப் பாராயணம் செய்தல் சாலவும் நன்று.

அருணகிரிநாதர் தாம் பாடியுள்ள இத்திருத் தலங்களை நேரிலே தரிசித்து வணங்கிய பின்னரே இவற்றை இயற்றினார் என்று பொதுவாகக் கொள் ளலாம். அதற்கு அகச் சான்றுகளாக அவ்வத் திருத்தலங்கள் பற்றிய சில நம்பகமான தகவல் களும் உள்ளன. மேலும் அவர் வாழ்ந்த காலத்தில் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையில் நெருங் கிய சமய, பண்பாட்டு உறவுகள் நிலவின என்பதும் குறிப்பிடற்பாலது.

இக்கட்டுரையிலே மேற்கோள்களாகத் தரப் பட்டுள்ள கதிர்காமத்திருப்புகழ் எண்கள் கந்தர லங்காரம், கந்தரனுபூதி, ஈழத்துத் திருப்புகழ் என் னும் தலைப்பிலே யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக்கழகம் (1970) வெளியிட்ட நூலில் உள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

---

**நீதி உயர்ந்தமதி கல்வி, அன்பு**
**நிறைய உடையவர்கள் மேலோர்**

**- மகாகவி பாரதியார்**

# சுப்பிரமணிய பராக்கிரமம்

- கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

தமிழர் வழிபாட்டு மரபில் முருகவழிபாடு தொன்மையானது. சங்ககாலம் தொடக்கம் இன்று வரை மக்களால் பின்பற்றப்படுவது. கன்னித்தமிழ் நாட்டிலே கந்தன் பெருமையை அறிந்தவர், அதனைப் பிறநாடுகளிலும் அறியச் செய்துள்ளனர். முருகவழிபாடு பற்றிய செய்திகள் தொல் காப்பியம், சங்க இலக்கியம், கந்தபுராணம், தேவாரத் திரு முறைகள், பிரபந்தங்கள் எனப் பல நூல்களில் பரவலாகப் பேசப்பட்டுள்ளன. வான்மீகம், பாரதம் போன்ற வடமொழிக் காவியங்களிலும் முருகன் பெருமை பேசப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. வாய்மொழியிலும் கூட 'சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை சுப்பிரமணியத்திற்கு மிஞ்சிய தெய்வமு மில்லை' என்ற கூற்றும் உண்டு. எனவே முருகன் பற்றிய தகவல்களை உரைநடையிலே எழுத வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. செய்யுளிலே கூறப்பட்டுள்ளவற்றை மக்களின் தேவைகருதி உரைநடையிலே தொகுத்துத்தரும் பணியைத் தமிழ் வல்லார் பலர் ஆற்றியுள்ளனர்.

ஈழத்திலே கிறிஸ்தவசமயம் பரவிச் செல்வாக்குப் பெற்ற காலகட்டத்தில் தமிழர் வழிபாட்டு மரபு பற்றிய விளக்கங்கள் வேண்டப்பட்டன. இந்து சமயக் கடவுளர்கள் பற்றிய தத்துவங்களை மக்கள் தெளிவாக உணர்ந்து தமது வழிபாட்டைப் பேண வேண்டியவராயினர். இப்பணியை முன்னெடுத்துச் சென்றவர் நாவலர். அவர் தமது காலத்தில் உரை நடை மரபையும் அச்சுவாகன வாய்ப்பையும் பயன் படுத்தி இந்துசமயம் பற்றிய நூல்களை வெளியிட்டார். அந்த நூல்கள் இன்றுவரை பயனுள்ளதாக விளங்குகின்றன. சைவத்தையும் தமிழ் மொழியையும் தமது இருகண்களெனக் கருதி நாவலர் பணி செய்தார். அவர் வழிநின்று பணிசெய்த தமிழ்ப் புலமைச் சான்றோர்கள் பலர் உளர். அத்தகைய சான்றோர்களில் யாழ்ப்பாணத்து மேலைப் புலோலியைச் சேர்ந்த நா. கதிரைவேற்பிள்ளையும் ஒருவர் ஆவார். ஈழத்தில் தமிழ்மொழியைக் கற்றுத் தமிழ் நாட்டிலே சென்று தமிழ்த்தொண்டாற்றிய இவர் ஒரு முருகபக்தர். முருகன் பெருமையையும் அருள் திறத்தையும் நன்கு உணர்ந்தவர். அவருடைய இருமொழிப் புலமை முருகன் பற்றிய தகவல் களைத் தேடித் தொகுப்பதற்கு வாய்ப்பாகவிருந் தது. வடமொழி நூல்களிலும் தமிழ்மொழி நூல்களி லும் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளையெல்லாம் ஒரு சேரத் திரட்டி முருகன் பெருமைபேசும் நூல் ஒன்றை உரைநடையிலே எழுதினார். செய்யுட் புலமையுடையோராய் இருந்தபோதும் பிற்காலத் தமிழ்மொழியின் செல்நெறியினை நன்குணர்ந்து "சுப்பிரமணிய பராக்கிரமம்" என்னும் நூலை எழுதியுள்ளார். நூலின் தேவையை அவரே பின்வருமாறு நூலில் விளக்கியுள்ளார்.

**இத்தகைய சிறப்பினையுடைய பரமநாதனாங் குகக்கடவுளார் கலியுகத்திலே விசேட பிரத்தியக்க தெய்வமாகவிருந்து அன்பர்க்கருள் புரிதலால் கலியுகவரதர் எனவும் காரணப் பெயருற்றார். தமிழ் நாட்டகத்தார் பெரும்பாலும் அவரைத் தொழலும் அவர் புகழ் பேசலும் கேட்டலும் செய்துய்கின்றார். தலிற் பாவயுகமாகிய இக்கலிகாலத்தே யிருமையின்பமும் எளிதிற் பெறவேண்டியோர் வேண்டியார் வேண்டுவனவெல்லாமீயும் இக்கலியுக வரதர்த்தொழுதல் அவசியமாம். அங்ஙனந் தொழுவார்க்கும் அன்பு வேண்டும். அவ்வன்பும் அவரது மெய்ப்புகழ்களாகிய பராக் கிரமங்களைச் செவ்வனே யறிதலாவதி கரித்து நிலையுறும் ஆகவான் அளவிறந்து விளங்குஞ் சுப்பிரமணிய பராக்கிர மங்களையெல்லாம் எடுத்துரைத்தலும் உரைத்தவழி யுணர் தலுஞ் சிற்றறிவினோர்க்கியலாதென்பது யாவருமுணர்ந்த தொன்றே. அவற்றுளொரு சிறிது உரையிற் போந்தவற் றினின்றியமையாத பராக்கிரமங்களையெடுத்து வகுக்கின் உலகிற்குப் பரோபகாரமா மென்று என்மனம் பன்னாட் சிந்தித்துத் கொண்டமைக்கியைய.**

**காஞ்சிபுரம் ஜமிந்தாரும் திருவேகம்பநாத சுவாமியாலய தர்மகர்த்தரும் வேளாண் குலப் பிரபுவும் பரோபகாரசீலரும் பன்னிரு திருமுறைத் திருவருட் பாக்களை அவ்வாலயத்தரசு வாக்களினாரோ கணிப்பித்து உலகின் கணுள்ள வுண்மைச் சைவத்திருக் கூட்டத்தினர் யாவரு முவகைக் கடலிற்றிளைக்கும்படி மிக்க விமரிசையாக மகோற்சவம் செய்வித்த வரும் ஸ்ரீ சித்தாந்த சிவநேசத் திருக்கூட்டம் என்னுஞ் சபைத் தலைவரும் கொடை முதலியவற்றால் திக்கெல்லாம் புகழ் விளங்கப்**

பெற்றாரும் வித்தியா விநோதரும் ஆகிய ஸ்ரீமத்.கா. முத்துப்பராய முதலியார் அவர்கள் பெரிதும் விரும்பிப் பன்முறை வேண்டியதனானே திடங்கொண்டு வழிபடு கடவுளாயிருக்கும் அவ்வேத வானுங் கல்வி கேள்விகளிற் சிறிதுமில்லாதேன் நாணமின்றி யியற்றுவான் புக்கேன்."

நூல் இயற்றுவதற்கு ஊக்கம் தந்த புரவலர் பணியை நூலாசிரியர் நூலிலே உரைத்திருப்பது எதிர்காலத்து நூலாக்கம் செய்வோருக்கு வழிகாட்டுவதாயுள்ளது. இன்னும் நூலாசிரியர் தமது நூலுக்கு தகவல் நூல்களைப் பற்றியும் ஒரு கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஏனைய நூல்களில் ஓதப்பட்டவை களையும் முரணாவன நீக்கி ஒருவாறியைத்தும் பின் நிகழப்பறீஇ ஆன்றோரானுரைக்கப் பெற்று வழங்கி வருஞ் சரிதங்களையுஞ் சேர்த்துஞ் 'சுப்பிரமணிய பராக்கிரமம்' என்னும் பெயரால் ஈதியற்றினாம்.

எனவே இந்நூல் ஒரு தகவல் களஞ்சியம் என்பதை எல்லோராலும் உணரமுடிகிறது. நூல் ஒரே காலத்தில் எழுதப்படவில்லை. சமயம் வாய்த்த போது எழுதியதாக அவரது 'உபோற்காதம்' என அமைந்த நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளமை மனங் கொள்ளத்தக்கது. நூலாசிரியருடைய தகுதிப்பாட்டை அவர் பெற்றுள்ள பட்டங்கள் உறுதி செய்கின்றன. அத்துவித சித்தாந்த மகோத்தாரணர், ஆரணி நகரசமஸ்தான வித்துவான், மதுரைத் தமிழ்ச்சங்கப்புலவர், மாயாவாததுமிளகோளரி, சைவசித்தாந்த மகாசரபம் என அவை குறிப்பிடப் பட்டுள்ளன. இவை நூலாசிரியருடைய வடமொழிப் புலமையையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. சிறப்பு நிலையில் நூலாசிரியர் பெற்ற 'சதாவதானி' என்ற பட்டம் அவருடைய முழுமையான ஆளுமை ஆற்றலை விளக்கி நிற்கிறது.

**நூலமைப்பு**

இந்நூலின் அமைப்பு சற்று வேறுபட்டதாயுள்ளது. முதலில் உரைநடையிலே பதிப்புரை அமைந்துள்ளது. தமிழ்நாட்டிலே சென்னையில் நூல் பதிப்பிக்கப்பட்ட செய்தியை அது உறுதி செய்கிறது. பதிப்புரை இந்நூலின் அக்காலத் தேவையையும் விளக்கிக் கூறுகிறது.

**எல்லா நூல்களையும் பெற்றுக் கற்றுணர முடியாதவர்க்கு எளிமையில் பயின்றறிய உரைநடைவகையில் முருகனது மாண்பை விளக்கமுற வரைந்துள்ள இந்நூல் வெளிவர வேண்டுவதின் இன்றியமையாமையை உணர்ந்து வரைந்துதவிய ஆசிரியர்** ....என அது குறிப்பிடுவது ஆசிரியரின் காலமறிந்த சமயப்பணியை எடுத்துரைப்பதாக உள்ளது.

அடுத்து நூலின் முகவுரை 'உபோற்காதம்' என ஆசிரியரால் பெயரிடப்பட்டுள்ளது. ஆசிரியரது உரைநடைப் பாங்கையும் நூலாக்கத்திற்கான காரணத்தையும் இப்பகுதி உள்ளடக்கி நிற்கிறது. நூலின் பொருளடக்கத்தையும் நூலில் அடக்கப் படாத எழுத வேண்டிய விடங்களையும் இங்கு நூலாசிரியர் எடுத்துக் கூறியுள்ளார்.

பொருளடக்கத்தில் 88 மூர்த்திகளாக முருகன் மாண்பு உரைக்கப்படுகிறது. அடுத்து இந்நூலில் எடுத்தாளப்பெற்றுள்ள நூல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வடமொழி நூல்கள், தமிழ்நூல்கள் என அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன. அது நூல்கள் பற்றிய தேட்டத்தை மேற்கொள்வோருக்குப் பயன்படும். முருக வழிபாடு பற்றிய ஆய்வினை மேற்கொள்வோர் அறியவேண்டிய தகவலாகவும் இது அமைகிறது. அவை வருமாறு.

வடமொழி நூல்கள்

| | |
|---|---|
| 1. இருக்குவேதம் | 2. யசுர்வேதம் |
| 3. சாமவேதம் | 4. அதர்வணவேதம் |
| 5. சுவேதாச்சுவதரம் | 6. இராமரகசியம் |
| 7. ஈசாவாசியம் | 8. மந்திரம் |
| 9. சாந்தோக்கியம் | 10. மகம் |
| 11. யோகதர்சனம் | 12. முக்திகம் |
| 13. சரபம் | 14. அதர்வசிரம் |
| 15. கூடாருணிகம் | 16. அதர்வசிகை |
| 17. பிரச்சினம் | 18. சரஸ்வதிரகசியம் |
| 19. காண்வாசகை | 20. மைத்திராயணம் |
| 21. முண்டகச்சாகை | 22. புருடசூக்தம் |
| 23. வாதுளம் | 24. அசிதம் |
| 25. சந்தானம் | 26. காமிகம் |
| 27. சுவாயம்புகம் | 28. சூக்குமம் |
| 29. கிரணம் | ‛. பாரமேசுரம் |
| 31. பௌட்கரம் | ɔ2. மதங்கம் |
| 33. சிந்தியம் | 34. இரௌரவம் |
| 35. காரணம் | 36. சிவஞானபோதம் |
| 37. நிசுவாசகாரிகை | 38. குமாரதந்திரம் |
| 39. விராகமம் | 40. மிருகேந்திரம் |
| 41. இலிங்கமிர்தம் | 42. ஐந்திரவியாகரணம் |

43. சித்தாந்தபோதம் 44. மகிம்நஸ்தவம்
45. ஸ்காந்தசம்பவம் 46. ஸ்கந்தவகரி
47. கந்தகாவோந்தரம் 48. சங்கரசங்கிதை
49. சூதசங்கிதை 50. ஆவாஸ்யமகாத்மியம்
51. வருணபத்ததி 52. சோமசம்புபத்ததி
53. காலோத்தரம் 54. வாமனபுராணம்
55. மற்சபுராணம் 56. வராகபுராணம்
57. கூர்மபுராணம் 58. விம்பம்
59. மகுடம் 60. தக்ஷணகைலாசமான்மியம்
61. பிரமகைவர்த்தபுராணம்62. விண்டுபுராணம்
63. பிரமாண்டபுராணம் 64. சைவபுராணம்
65. சாரதாதிலகம் 66. சிகரிணிமாலை
67. மகாபாரதம் 68. சப்தார்த்தநிர்ணயம்
69. வாயுசங்கிதை 70. உபதேசகாண்டம்
71. கந்தஸ்தவம் 72. வேங்கடகுகஸ்தவாருபணம்
73. இலிங்கசோபனம் 74. ஆயுர்வேதம்
75. கிரியாவிவரணம் 76. சதாசிவருபம்
77. பிரமோத்தரகாண்டம் 78. கேசவாதிநாம
79. சிவபரந்துவ நிருபணம்.

தமிழ் நூல்கள்

1. திருவாசகத்திருவருட்பா
2. திருமந்திரம்
3. திருமுருகாற்றுப்படை
4. பதினோராந்திருமுறை
5. பெரியபுராணதிருவருட்பா
6. சிவஞானபோதம் மாபாடியம்
7. சிவஞானசித்தியார் 8. சிவப்பிரகாசம்
9. சிவஞானதீபம் 10. சிந்தாந்தபோதம்
11. துகளறு போதம் 12. கந்தபுராணம்
13. சூதசங்கிதை 14. கூர்மபுராணம்
15. சிவரகசியம் 16. பாகவதம்
17. காஞ்சிப்புராணம் 18. பார்க்கவபுராணம்
19. வேம்பத்தூரர் திருவிளையாடல்
20. திருப்பரங்கிரிப்புராணம்
21. பிரேமோத்தரகாண்டம்
22. திருச்செந்தூர்ப்புராணம்
23. வாசிட்டலிங்கபுராணம்
24. திருக்காளத்திபுராணம்
25. சீகாளத்திபுராணம் 26. செவ்வந்திப்புராணம்
27. பழநித்திலப்புராணம் 28. கருவூர்ப்புராணம்
29. கடம்பவனபுராணம் 30. சிவகங்கைப்புராணம்
31. திருக்கோழிலிப்புராணம்
32. பட்டினத்துப்பிள்ளையார்புராணம்
33. திருப்பேரூர்ப்புராணம் 34. புலவர்புராணம்
35. திருப்புகழ் 36. வீரசோழியம்
37. இறையனாரகப்பொருள்
38. தணிகைப்புராணம்
39. திருவிளையாடற்புராணம்
40. நாடகநூல் 41. சீவகசிந்தாமணி
42. இசைநுணுக்கம்
43. சுத்தானந்தப்பிரகாசபாதம்
44. பரதசேனாபதியம் 45. குணநூல்
46. பட்டினப்பாலை 47. பரிபாடல்
48. பத்துப்பாட்டு 49.தொல்காப்பியம்
50. மணிமேகலை 51. சிலப்பதிகாரம்
52. திவாகரம்
53. பூதத்தாரவையடக்கியல்
54. கயாகரணம் 55. குமாரதரிசனம்
56. இராமாயணம் 57. கதிர்காமப்புராணம்
58. கதிர்காமமான்மியம் 59. பிங்கவத்தை
60. திருக்குறள் 61. சிறுபாணாற்றுப்படை
62. கதிர்காமக்கோவை
63. திருப்போரூர்தலவெண்பா
64. தனிப்பாடல் 65. நல்வழி
66. சௌந்தரியலகிரி 67. முருகன் முறையீடு
68. தீர்த்தமாலை 68. கதிர்காமக்கலம்பகம்
69. மருட்பாமறுப்பு 70. சுப்பிரமணியகோவை
71. பிள்ளைத்தமிழ் 72. நச்சினார்க்கினியருரை
73. அடியார்க்குநல்லார் உரை
74. யோகதரிசனம் 75. கருவூர்மான்மியம்
76. செந்தமிழ் நாவலர் சரிதம்
77. தொண்டை மண்டலசதகம்
78. கந்தபுராணசுருக்கம் 79. திருவள்ளுவமாலை.

இந்நூல்கள் யாவும் நூலாசிரியர் காலத்தில் கிடைத்துள்ளன. ஆனால் தற்போது யாவும் இவற்றுள் பல நூல்கள் பயன்பாட்டில் அருகிவிட்டன. மேலும் நூலாசிரியர் தமிழகத்தில் வாழ்ந்தமையால் நூல்களைப் பெற்றுச் செய்திகளைத் தொகுப்பதும் எளிதாயிருந்தது. இன்றைய தலை முறையினரும் எதிர்காலத் தலைமுறையினரும் இவ்விரு மொழி நூல்கள் பற்றிக் கேள்வியுறுவதற்கு மட்டுமெனினும் இந்நூல் பற்றிய குறிப்புப் பயன்படக்கூடும். நூலாசிரியரது வாசிப்புத் திறனையும் இந்நூல் தொகுப்பு சான்று பகர்ந்து நிற்கிறது. சுப்பிரமணிய பராக்கிரமத்தில் கூறப்படாத விடயங்களைத் தேடுவதற்கும் இந்நூல்கள் பற்றிய தகவல் பெரிதும் பயன்படும். தமிழ்ப்புலமையும் வடமொழிப் புலமையும் ஆசிரியருக்கு இருந்ததையும் இந்நூல்களே சான்று பகர்கின்றன.

நூலமைப்பில் காப்பு, கடவுள் வணக்கம், குகனடியார் வணக்கம், அவையடக்கம், ஆர்வமொழி

என்னும் பகுதிகள் பொருள் அடக்கத்திற்குப் பின்னே அமைக்கப்பட்டுள்ளன. ஆசிரியரது செய்யுட் புலமையை இப்பகுதிகள் புலப்படுத்துகின்றன. வெண்பா, கவித்தாழிசை, ஆசிரிய விருத்தம், கொச்சகக்கலிப்பா, கட்டளைக் கலித்துறை என்னும் பாவகைகளைப் பயன்படுத்தியுள்ளமை இதற்குச் சான்றாகும். மரபான அமைப்பு நிலையுடன் கந்தன் படைக்கலம் வேலாயுதத்தையும் கொடியையும் வணங்குவதுடன் அடியார்களையும் வணங்கிப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவையடக்கத்திற்கும் ஒரு புதிய விளக்கம் கொடுத்துள்ளார்.

அவையடக்கம் என்பதனை அவையை அடக்குதல் என இரண்டன்றொகையாகக் கொள்க. அதாவது சபையிலுள்ளாரடங்குமாற்றல் இனியவாகச் சொல்லியவரைப்புகழ்தல் "அவையடக்கியலே யரிறபத் தெரியின் வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென் றெல்லா மாந்தர்க்கும் வழி மொழிந்தன்ரே" என்றது தொல்காப்பியவிதி. அதனை 'திரைத்த விரிக்கிற் நிரைப்பினா வாய்போல்" என்பது உம் பூதத்தாரவையடக்கியற் செய்யுளானுந்தெரிக" என அவர் தரும் குறிப்பு நோக்குதற்குரியது.

ஆர்வமொழி என்னும் பகுதியில் வழிபாட்டின் தன்மையும் பயனும் கூறி மக்களைச் சமய நெறிப் படுத்தியுள்ளார். ஐம்பொறிகளாலும் ஐம்புலன்களாலும் வழிபாடு செய்யும் முறைமையைக் கூறியுள்ளார். இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே என்ற நாவலரது கோட்பாட்டையே நூலாசிரியரும் பின்பற்றியுள்ளார்.

"காதல்கூர்மெய்ப் புதல்வரோடுங் கிளைஞரொடுங்
கடிமனைவாழ்
மாதரொடுந் தோழமையர் யாவரொடு மனமகிழ்ந்து
தீதின் ஞானப் பொருளென்னுந் தேனருந்தி
யருட்குமர
நாதன்றனது சீர்பாடி யாடியுய்ம்மி னமரங்காள்."

என உலகியல் வாழ்வு நிலையிலேயே இறை வழிபாடு செய்து பயன்பெறும்படி அறிவுறுத்துகிறார். மனித வாழ்வியலில் வழிபாடு ஒரு நெறிப்படுத்தலாக அமையும் என்பதையும் உணர்த்துகிறார். உலக இன்பங்களை அனுபவிக்கும் நிலையிலே முருக வழிபாடு மேலும் பயன்தரும் என்ற நம்பிக்கையை ஊட்டி நல்வழிப்படுத்துகிறார். உலகத்தவர் மேல் வைத்த அன்பினால் தான் அடைந்த இறையனுபவத்தையும் இன்பத்தையும் எல்லோரும் அடைய வேண்டும் என்ற இலக்கோடு நூலாசிரியர் தமது நூலை ஆக்கியுள்ளார். முருகன் பற்றிய முழுமையான அறிவினை யாவரும் பெற வேண்டுமென விரும்பினார்.

### நூல் உள்ளடக்கம்

இந் நூலில் முருகன் பற்றிய தகவல்கள் 88 மூர்த்தி நிலையில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. அவை இன்றைய தலைமுறையினருக்குப் பெரிதும் பயன்படும். திருக்கோயில்களில் வழிபடும் திருவுருவங்கள் பற்றிய விளக்கம் எல்லோருக்கும் தேவை. குறிப்பாக இளந்தலைமுறையினர் இது பற்றிய முழுமையான தெளிவைப் பெறவேண்டும். அதற்குச் சுப்பிரமணிய பராக்கிரமம் சிறந்ததொரு தகவல் களஞ்சியமாக விளங்குகிறது. நூலை முழுமையாகப் படிக்கும் வாய்ப்பு அற்றவர் பயன்கருதி இங்கு சில குறிப்புத் தரப்படுகின்றது. 88 மூர்த்தி நிலைகளின் சுருக்கமான விளக்கமாக அவை வரையப்பட்டுள்ளன.

1. ஓம் சத்திமான் மூர்த்தி : (சிவஞான சித்தியார், துகளறுபோதம், சிவப்பிரகாசம், சிந்தாந்தபோதம்) சிவபெருமானே பிரபஞ்சங்களைப் படைத்தும் காத்தும் அழித்தும் மறைத்தும் அருளியும் விளையாடும் சத்திமான். அத்தகைய சத்திகளையுடைய முருகனும் சத்திமான் மூர்த்தி யாவார்.
2. ஓம் ஞான சத்திதர மூர்த்தி (கந்தபுராணம், குமாரதந்திரம், தணிகைப்புராணம், அகத்தியப் படலம்) பராசக்தி என்னும் ஞானசக்தியைக் கொண்டு ஆன்மாக்களின் பந்தங்களை யறுத்துத் தமது திருவடிப் பேற்றை அளித்தருளத் திருவுருவங் கொண்ட பரமாரியன் இச்சை, ஞானம், கிரியை என்னும் இவை மூன்றிவை போலக் கிளை கொண்டு பவக்கடலைச் சுவற்றும் ஞானசக்தியாம் வேலாயுதத்தை வலத்திருக் கரத்தில் தரித்து தாமரை மலர்போலும் இடத் திருக் கரத்தைத் தமது குறங்கில் வைத்து ஒரு திருமுகமும் இருவிழிகளும் உடையராய் கோடிச் சூரியப் பிரகாச மொருங்கு சேர்ந்த ஒளியுடையராய் தேவர்களும் வித்தியாதரர்களும் சூழ்ந்து சேவிப்ப வீற்றிருந்தருள்வார். ஞானசக்தியைத் தரித்தமையால் ஞானசக்திதர மூர்த்தியானார்.
3. தாரகாந்தகமூர்த்தி (சிவரகசியம், குமாரதந்திரம், தணிகைப்புராணம், பழனித்

தலபுராணம், கூர்மபுராணம்) முருகன் பெரும் படைகளோடு சென்று தாரகனுடன் பத்துநாள் பொருது சுக்கிரவாரத்து இரவிலே கொன்று விட்டுணு முதலிய தேவர்களை முன்போல் இருத்திக் குமார சிகரத்தின் கண் எழுந்தரு ளினார். தாரகனுக்கு அழிவைச் செய்தமையால் தாரகாந்தக மூர்த்தி எனப்பெயர் பெற்றார்.

4. வராகோன்மத்த பங்கமூர்த்தி : (சங்கரசங்கிதை, கந்தபுராணம், இரணியன்வதைப் படலம்) திருமாலாகிய வராகத்தின் வெறித்தன்மையாகிய அகங்காரத்தை அடக்கியமையால் வராகோன் மத்த பங்கமூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

5. கூர்ம பங்கமூர்த்தி : (கூர்மபுராணம், கதிர் காமக்கோவை) கூர்மவடிவங்கொண்டு கடலைக் கலக்கி உலகிற்குத் துன்பம் செய்த விட்டுணு வின் அகங்காரத்தை அடக்கியமையால் கூர்ம பங்க மூர்த்தி எனப்பெயர் பெற்றார். கூர்மத்தின் ஓட்டினைத் திருமேனியில் தரித்துள்ளார்.

6. புலிங்கமூர்த்தி : (கந்தபுராணம்) பரமசிவன் தன் நெற்றிக்கண்ணினின்றும் பொறி களாகத் தோன்றியமையால் சுப்பிரமணியக் கட வுள் புலிங்கமூர்த்தி (சிவதேசகமூர்த்தி) ஆயினார்.

7. சரவணோற்பவமூர்த்தி : (சாமவேதம், யசுர்வேதம், கந்தபுராணம், குமாரதந்திரம்) நாணற்புல் செறிந்த நீரையுடைய பொய்கையில் உற்பவித்தமையால் இப்பெயரைப் பெற்றார்.

8. சகலலோககுருமூர்த்தி : (கிருஷ்ண யசுர்வேதம், திருச்செந்தூர்ப் புராணம்) சகல லோகத்திற்கும் குருவாய் எழுந்தருளியிருந்து அருள்புரிவதால் இப்பெயரைப் பெற்றார்.

9. கார்த்திகேய மூர்த்தி : (கந்தபுராணம், குமாரதந்திரம், தணிகைப்புராணம்) கார்த்திகைப் பெண்கள் வளர்த்தமையால் இப்பெயர் பெற்றார்.

10. அகணரூடமூர்த்தி : (யசுர்வேதம், கந்தபுராணம்) அக்கினிபூ என்று வேதங்களால் புகழப்பட்ட முருகன் அக்கினி தேவனைப் போலவே ஆட்டுக் கடாவாகனமுடையவர். அதனால் வேதங்கள் அவரை 'அஜன்' என்று அழைக்கின்றன. அருண மாகிய (அஜமாகிய) கடாவினேறிச் செலுத்துங் காரணத்தாற் கந்தக்கடவுள் அருணாரூட மூர்த்தி யெனப் பெயர் பெற்றார்.

11. பிரமசாத்தமூர்த்தி : (பிரச்சினோபநிடதம், யசுர் வேதம், குமாரதந்திரம், தணிகைப் புராணம்) சுப்பிரமணியர் பிரமனைத் தண்டித்து சிறை வைத்தமையால் இப்பெயர் பெற்றார். இம்மூர்த்தி ஒருதிருமுகமும் நான்கு திருக்கரங்களும் வரதம், கமண்டலம் என்ற இரண்டும் இடத்திருக்கரங் களிற் பொருந்தும் அபயம், அக்கடவம் வலத் திருக்கரத்தில் பொருந்தும்.

12. சிருட்டிகர்த்தத்துவ மூர்த்தி : (கிருஷ்ண யசுர் வேதம், இருக்குவேதம், தணிகைப் புராணம்) பிரமன் தொழிலைச் செய்தமையால் இப்பெயர் பெற்றார்.

13. பிரமகாராக்கிருக விமோசனமூர்த்தி : (காஞ்சிப் புராணம், கந்தபுராணம்) பிரமனைக் காராக்கிருகம் என்னுஞ் சிறைச்சாலையிலிருந்து சிவபிரான் வேண்ட விடுதலை செய்தமையால் இப்பெயர் பெற்றார்.

14. பரமசிவ குருமூர்த்தி : (அதர்வவேதம்) லோக குருவாகிய சிவபெருமானுக்குக் குருவாக வீற்றி ருந்து பிரணவப்பொருளை உபதேசித்ததால் இப் பெயர் பெற்றார்.

15. சீகரமூர்த்தி : (பிரமோத்தரகாண்டம், திருச்செந்தூர் புராணம்) சீகரன் வேண்டுகோளுக்கு இணங்கி சீகரமூர்த்தி எனத்தலத்தில் எழுந்தருளியிருந்தார்.

16. குகசுவாமி மூர்த்தி : (இராமாயணம், திருச் செந்தூர்புராணம்) குகன் என்னும் வேடர் தலைவனுக்கு அருள்புரிந்தமையால் இப்பெயர். இதனை ஆனந்தநாயகமூர்த்தி என்வும் கூறுவர்.

17. ஞானதேசியமூர்த்தி : (சாமவேத வசனங்கள், யசுர்வேதம், சிவஞானபோதம், சிவப்பிரகாசம், சிவகங்கைப்புராணம், திருக்கோளிலிப் புராணம்) ஆதிசைவ முனியாகிய கௌசிகனார்க்கு ஞானத் தினியல்புகளையெல்லாம் தேசிகனாக நின்று உபதேசித்தமையால் இப்பெயர் பெற்றார்.

18. அத்துவாமூர்த்தி : (பௌஷ்கராகமம், சுவாயம் புவஆகமம், கிரணஆகமம், மகுடாகமம், அசிநா கமம்) அத்துவாக்களைத் தமக்கு வடிவாகக் கொண்டு ஆறுமுகமூர்த்தியாக ஆன்மாக்களை முத்தியிற் சேர்த்தலால் இப்பெயர் பெற்றார்.

19. வியாக்கிராசுர சங்காரமூர்த்தி : (சாம வேதம், வாசிட்டலைங்கபுராணம்) தேவர்களுக்குத் துன்பம் செய்த மகாவீரன் ஆகிய வியாக்கராசுரனைச் சங்கரித்துத் தேவர்களைக் காத்தமையால் இப் பெயர் பெற்றார்.

20. கயாரூடமூர்த்தி : (யசுர்வேதம், இருக்குவேதம், குமார்தந்திரம், தணிகைப் புராணம், திருமுரு காற்றுப்படை, பரிபாடல்) வாமனராகிய யானை யின் மீது ஏறும் மூர்த்தியாய் விளங்கலிற் சுப்பிர மணியக் கடவுள் கயாரூடமூர்த்தி எனப்பெயர் பெற்றார்.

21.மாதங்காரிமூர்த்தி : (வாதுளாகமம், மிருகேந் திராகமம், பிரமாண்டபுராணம்) யானையை அழித்து வணிகரைக் காத்தருளியமையால் மாதங்காரிமூர்த்தி ஆயினார்.

22.யாகரக்ஷகமூர்த்தி : (அசிதாகமம், சந்தான ஆகமம், குமாரதரிசனம், பதினோராந்திருமுறை) முனிவர் செய்யும் வேள்விகளையும் அந்தணர் செய்யும் மகங்களையும் யாதொரு இடையூறும் வராமல் காத்தும் காசிப முனிவர் செய்த யாகத்தை அழிக்கவந்த அசுரர்களைக் கொன் றும் அவர் யாகத்தைப் பரிபாலித்தமையால் சுப்பிரமணியக்கடவுள் யாகரக்ஷகமூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

23.புட்பசத்திரமூர்த்தி : (சிறுபாணாற்றுப்படை, குமார தரிசனம்) நல்லியக்கோடன் என்னும் அரசனது அன்பின் மேலீட்டால் அவனுடைய பகைவரை அழித்தற்கு கேணிப் புஷ்பத்தை வேலாக்கிக் காத்தமையால் புட்ப சத்திர மூர்த்தி எனப்பெயர் பெற்றார்.

24.பத்திரசத்திமூர்த்தி : (சாமவேதம், கதிர்காம மான்மியம், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் உரை) அன்பர் துன்பம் நீங்கும்படி அருள்சுரந்து வெற்றிலையை வேலாக்கிய தால் பத்திர சத்திமூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

25.பிரணவாசலமூர்த்தி : (திருப்போரூர்ப் புராணம், திருப்போரூர்த்தல வெண்பா) தந்தையாராகிய சிவபெருமான் வேதங்களை மலையாக்கி யமர மைந்தராகிய தாம் வேதங்களுக்கும் உபநிடதங் களுக்கும் மந்திரங்களுக்கும் ஏனைய உலகங்க ளுக்கும் முதலாகிய பிரணவத்தை மலைவடி வாக்கி வீற்றிருந்தருளலால் இப்பெயர் பெற்றார்.

26.இலிங்கதலேச்சுரமூர்த்தி : (இலிங்காமிர்தம்) முத்தியுபாயமாகிய சக்தி, கலை, சதாக்கியம், இலிங்கம், அறுதலம் என்பவற்றால் நூற்றொரு தலங்களையும் கொடுத்துத் திருவடிப்பேறுதவும் ஈச்சுரராய் விளங்கலின் இலிங்கதலேச்சர மூர்த்தியாயினார்.

27.முட்டை நாமக்குமாரமூர்த்தி : (பட்டினத்துப் பிள்ளையார் புராணம், புலவர் புராணம்) 'குஞ்சி னைப்பாடேன்' என்று இழித்த புலவரைப் பொய் யாகும் மொழியாக்க வேடவடிவு கொண்டு முட் டையென்னும் பெயர் சொல்லிப் பாடுவித்து ஆட் கொண்டமையால் முட்டை நாமக் குமாரமூர்த்தி என்று உலகம் கூறும்.

28.சகத்திரான்ம பரிபாலனமூர்த்தி : (மக்மநஸ்தவம், ஆதித்தியபுராணம், திருப்பரங்கிரிப்புராணம், திருக்காளத்தி புராணம்) பூதங்களால் அடைக் கப்பட்ட ஆயிரவரை மலைக்குகையைப் பிளந்து காத்து அருளினமையால் சுப்பிரமணியக்கடவுள் சகத்திரான்ம பரிபாலனமூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

29.வரதராசமூர்த்தி : (சிவஞானபோதம், சந்தான ஆகமம் ஆதித்தியபுராணம், திருச்செந்தூர்ப் புராணம்) பிரமன், விஷ்ணு, உருத்திரன் வடிவ மாக மூன்று திருமுகம், ஆறு திருக்கரங்கள், இருதிருவடியான கோலத்துடன் இருப்பவர். முனிவர்கள் வேண்டிக் கொண்டதற்கு இணங்க வரதராசமூர்த்தியானார்.

30.பஞ்சாயுத பிரதானமூர்த்தி : (அதர்வண வேதம், தணிகைப்புராணம்) நாராயணருக்குச் சிறந்த ஐந்து ஆயுதங்களைக் கொடுத்தருளியமையால் பஞ்சாயுதப் பிரதான மூர்த்தியாயினார்.

31.சதுர்முகசாபாரிமூர்த்தி : (திருமுருகாற்றுப் படை, விம்பாகமம்) சதுர்முகனாகிய பிரமனது சாபத்தை அரித்தமையால் (அழித்தமையால்) சதுர்முக சாபாரி மூர்த்தியாயினர்.

32.யோகாசாரிய மூர்த்தி : (திருமந்திரம், யோக தரிசனம்) யோகசாதனங்களையெல்லாம் உணர்த் தியருளும் மூர்த்தியாக விளங்கலால் யோகா சாரிய மூர்த்தியாயினர்.

33.குழந்தை வேலப்பமூர்த்தி : (பழநித்தல புராணம், சுவணடுத்தச்சருக்கம்) சுவண குத்தனும் மனை வியும் உய்யும் பொருட்டுக் குழந்தை வேலப்ப மூர்த்தியாய் வந்தருளியமையால் குழந்தை வேலப்பமூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

34.கோரநிருதாரிமூர்த்தி : (கந்தபுராணம், கந்தவிரதப் படலம்) மெய்யன்பனான பகீரதற்காக மகாபல முடைய கோரன் என்னும் நிருதனைக்கொன்று காத்தருளி னமையால் கோரநிருதாரி மூர்த்தி யாயினர்.

35.இரும்பாசுர சிக்ஷாரக்ஷகமூர்த்தி : (பழநித்தல புராணம், மலைகள் பழநியடைந்த சருக்கம்) இடும்பாசுரனைத் தண்டித்து மலையைக் காக்கும் பெருவரம் அளித்து இரட்சித்தமையால் இடும்பா சுர சிக்ஷாரக்ஷகமூர்த்தியாயினர்.

36.சர்வலோகக்ஷணப்பிரதக்ஷணமூர்த்தி : (பழநித்தல புராணம், திருவாவினன் குடிச்சருக்கம்) சர்வலோ கத்தையும் ஒரு கணத்துள் வலம்வந்து சர்வவியா பகத்துவ சர்வாந்தர்யாமித்துவ சர்வபூதேச சர்வ விசுவருப மூர்த்தி தாமென்பதை விளக்கியரு ளலால் இப்பெயர் பெற்றார்.

37. தண்டதரக்குமாரமூர்த்தி : (சாந்தோக்கிய யோப நிடதம், பழநித்தலபுராணம்) பழநியில் தண்டாயு தபாணி என்ற பெயர் பெற்றார். அதனால் தண்டதரக் குமாரமூர்த்தியாயினர்

38. புராணபாலன கிருபாமூர்த்தி : (திருச்செந்தூர்ப் புராணம், தணிகைப் புராணம்) புராணத்தைப் பாடுதற்கும் வழங்குதற்கும் கிருபை காட்டிய மூர்த்தியாதலால் இப்பெயர் பெற்றார்.

39. இந்திரபோகானுக்கிரகமூர்த்தி : (தணிகைப் புராணம்) இந்திரனுக்குப் போகப்பொருள்களை யெல்லாம் அளித்து விண்ணுலகை நிறுத்தி யமையால் இப்பெயர் பெற்றார்.

40. நாகவாதனாநிவாரணமூர்த்தி : (கந்தலகரி (மொழிபெயர்ப்பு) தணிகைப்புராணம்) வாசுகி நாகத்தின் உடல்வாதனையையும் கிலேசத்தை யும் நீக்கியருளினமையால் இப்பெயர் பெற்றார்.

41. போகமோக்ஷாநுக்கிரகமூர்த்தி : (திருச்செந்தூர்ப்புரா ணம்) பிரமனுக்கு அளவிறந்த போகங்களையும் முத்தியையும் அளித்தருளியதால் இப்பெயரைப் பெற்றார்.

42. பரமைசுவரியமூர்த்தி : (ஸ்கந்தபுராணம் - சங்கர சங்கிதை) புவனேஸ்வரியாகிய பார்வதி தேவிக்கு சிவபெருமான் குகக்கடவுளின் மேலாம் ஐசுவரி யங்களைத் தொகுத்துக் கூறியருளியமையால் சுப்பிரமணியப்பெருமான் இப்பெயர் பெற்றார்.

43. சேனாபதிமூர்த்தி : (சங்கரசங்கிதை, குமாரதந் திரம், தணிகைப்புராணம்) சேனைகளுக்குத் தலைமைவகித்து எழுந்தருளலால் இப்பெயர் பெற்றார். இது சோடச மகாமூர்த்தங்களில் ஒன்றாகும்.

44. சண்முகமூர்த்தி : (கந்தபுராணம், தணிகைப் புராணம்) ஆறுதிருமுகங்களும் வேல், அம்பு, வாள், சக்கரம்,பாசம், அபயம் இவை பொருந்திய வலத்திருக்கரங்கள் ஆறும் வச்சிரம், வில், கேடகம், துவசம், அங்குசம், வரதம் என்பன அமைந்த இடத்திருக்கரங்கள் ஆறும், மயில் வாகனமும் வள்ளியம்மையார், தெய்வானை அம்மையார் என்ற இரு சக்திகளும் முறையே வலப்பாலும் இடப்பாலும் வீற்றிருக்க கட்டழகுக்கு எல்லாம் உறைவிடமாக விளங்கும் திருமேனியு டைய மூர்த்தியே இது. இது சோடச மகா மூர்த்தங்களில் ஒன்றாகும்.

45. புரோகிதமூர்த்தி : (கடம்பவனபுராணம், வேம்பத் தூரார்செய்த திருவிளையாடற் புராணம்) இறைவனும் இறைவியும் திருமணம் செய்யும் நாளில் புரோகிதராயிருந்து விவாகச் சடங்குகளை முடித்தலிற் புரோகித மூர்த்தி எனப்பெயர் பெற்றார்.

46. கலாவிநோதமூர்த்தி : (செந்தமிழ்நாவலர் சரிதை) தெய்வப்புலமை ஔவைப்பிராட்டியாருடன் கலா விநோதஞ் செய்து அருளினமையால் இப்பெயர் பெற்றார்

47. இலீலாமூர்த்தி : (கந்தபுராணம், திருவிளையாடற் புராணம்) தேவர்கள், மனிதர்கள் முதலிய யாவரும் அஞ்சித் தத்தம் உள்ளமும் உடம்பும் தளர்தலின்றிச் சிதைவுறாவண்ணம் எண்ணில் லாத திருவிளையாடல்களைச் செய்தமையால் இப்பெயர் பெற்றார்.

48. தேவதண்டரக்ஷாமூர்த்தி : (சங்கர சங்கிதை, கந்தபுராணம்) தேவர்களைத் தண்டித்து இரட்சித்தமையால் இப்பெயர் பெற்றார்.

49. தாரகாசுர சங்காரமூர்த்தி : (ஸ்கந்த புராணம், சிவரகசியகாண்டம்) தாரகன் என்னும் அசுரனைக் கொன்றமையால் இப்பெயர் பெற்றார்.

50. சந்திரநடனமூர்த்தி : (சிலப்பதிகாரம், கடலாடு காதை) சத்திரத்தையே திரையாகக் கொண்டு குமாரக்கடவுள் நடித்தமையால் இப்பெயர் பெற்றார்.

51. துடிக்கூத்தமூர்த்தி : (மதிவாணர் நாடகத் தமிழ் நூல், குணநூல், சிலப்பதிகாரம்) துடியென்னுங் கருவியைத்தட்டி கடல்நடுவே துலாமதி வளர் பக்கத்து ஆறாம் நாளில் நடனம் செய்தமையால் இப்பெயர் பெற்றார்.

52. வித்வமூர்த்தி : (தொண்டை மண்டலச் சதகம், கந்தபுராணச் சருக்கம், அபுயுக்தர் வாக்கு) வித்வக் கோலங் கொண்டு வருவதால் இப்பெயர் பெற்றார்

53. மாதிருகாமந்திரரூபமூர்த்தி : (காமிகாகமம், வாதுளாகமம், பௌட்கராகமம்) மாதிருகா மந்திரங்களை உருவமாகக் கொள்ளலால் வரைபக எறிந்த சரவணக் கடவுள் இப்பெயர் பெற்றார்.

54. குகப்பரப்பிரமமூர்த்தி : (சங்கரசங்கிதை - சிவர கசியகாண்டம்) உயிர்களின் குகைகள் தோறும் விளங்கியும். உபாசிக்கப்பட்டுமிருத்தலால் இப்பெ யர் பெற்றார்.

55. சந்தான வரதமூர்த்தி : (திருச்செந்தூர்ப் புராணம்) சந்தானம் வேண்டினவர்க்கு மகிழ்வுடன் அளித்த லால் இப்பெயர் பெற்றார்.

56. காமாசாரதேவமூர்த்தி : (திருச்செந்தூர்ப் புராணம்) தெய்வயானையம்மையாரோடும் வள்ளியம்மை

யாரோடும் கூடியிருந்து காமஞ் சிறிதுமில்லாத கடவுளாயிருந்தும் உலகர் பொருட்டாக களவுக்கும் கற்புக்கும் உரிய தகையணங் குறுத்தல், புலவி, புணர்ச்சி விதும்பல் முதலிய துறைகளையெல்லாம் காட்டி காமநூலிற் கூறிய ஆசாரங்களையெல்லாம் கொண்டு திருவிளையாடல் செய்தமையால் இப்பெயர் பெற்றார்.

57. கிரவுஞ்ச பேதமூர்த்தி : கந்தபுராணம், குமார தந்திரம், சங்கரசங்கிதை, தணிகைப் புராணம் கிரவுஞ்சமலையாக நின்ற தாரகனை வேலாயுதத்தால் பொடிப் பொடியா அழித்து அருளியமையால் இப்பெயர் பெற்றார்.

58. முருகமூர்த்தி : கதிர்காமக்கலம்பகம்
இடையறாது முருகா என்றுரைத்த முருகம்மையார்க்கு முருகக் கடவுள் தோன்றிக் கரத்தையுமொன்றச் செய்து கணவனுக்குத் தமது லோகத்தையருளிய காரணத்தால் முருகமூர்த்தியாயினர்.

59. பாலசுப்பிரமணியமூர்த்தி : (குமாரதந்திரம், தணிகைப்புராணம்) தாம் உபதேசித்து அருள்கின்ற பேரறிவு எக்காலத்தும் முதிராத பேரின் பத்தையளிக்குமென்னும் உணர்ச்சியைக் கொடுத்தலானும் பாலசுப்பிரமணிய மூர்த்தியாய் விளங்குவர்.

60. பிரபந்த தாரதம்மிய நிர்ணயமூர்த்தி : ஸ்கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம்திருவள்ளுவமாலை) குமாரக்கடவுள் வசியர் செய்த தவப்பேறு காரணமாகவும் செந்தமிழ்ப் பரமசாரியன கலால் தீந்தமிழ் நூலாங் களவியலின் மெய்யுரை தெரிக்கு நிமித்த மாகவும் ஐயப்பாட்டைக் குழவியாய்த் தோன்றிச் சங்கப் பலகையினெழுந்தருளியிருத்தலாற் பிரபந்த தாரதம்மிய நிர்ணய மூர்த்தியாயினர்.

61. உக்கிரவர்மமூர்த்தி : (ஸ்காந்தபுராணம், திருவிளையாடற்புராணம்) உக்கிரவருமன் என்ற பெயரில் அரசுபுரிந்து பதினெண் வகையுறுதிச் சுற்றமும் கொண்டு நின்றமையால் இப்பெயர் பெற்றார்.

62. வாருணோக்கிரமர்த்தனமூர்த்தி : ஆலாஸ்யம காமியம், திருவிளையாடற் புராணம், வருணனது உக்கிரத்தையடக்கி உலகைக் காத்தமையால் இப்பெயர் பெற்றார்.

63. பாகசாதன கருவபங்கமூர்த்தி : (ஸ்காந்த புராணம், திருவிளையாடற்புராணம்) பாகசாதனாகிய இந்திரனது அகங்காரத்தைப் போக்கியருளினமையால் இப்பெயரைப் பெற்றார்.

64. சுவணாசலதண்டவமூர்த்தி : (திருவிளையாடற் புராணம் சுவணாசலம்) என்னும் மேருமலையின் கர்வத்தையொழித்துத் தண்டித்தமையால் இப்பெயர் பெற்றார்.

65. சகலகலாவல்லபமூர்த்தி : (தனிப்பாடல் மகா தேவியால் சகலகலாவல்லபன் என விளக்கப் பட்டதால் இப்பெயர் பெற்றார்.

66. அபிடேக குமாரமூர்த்தி : திருச்செந்தூர்ப் புராணம் அபிடேகத்தை ஏற்றுத் துன்பங்களை நீக்குவதால் இப்பெயர் பெற்றார்.

67. சீடாதிப மூர்த்தி : (வராகபுராணம்)
மாணவர்க்கெல்லாம் தலைமைபெற்ற ஆசிரியராகலான் இப்பெயர் பெற்றார்.

68. குமாரப்பிரமசாரிமூர்த்தி : (திருச்செந்தூர்ப் புராணம்) பிரமசாரி வடிவங்கொண்டு பூசைகள் முதலாய விதிகளையெல்லாம் உணர்த்துவதால் இப்பெயர் பெற்றார்.

69. வல்லிகல்யாணமூர்த்தி : (குமாரதந்திரம், தணிகைப்புராணம்) வல்லியாகிய வள்ளியம்மையாருடன் மணக்கோலங் கொண்ட அழகராய் இருந்தமையால் இப்பெயர் பெற்றார்.

70. நடனநாதமூர்த்தி : திருச்செந்தூர்ப்புராணம் அறுபத்துநான்கு திருவிளையாடலையும் நடித்துக் காட்டியருளியமையால் இப்பெயர் பெற்றார்.

71. பராசரகுமாரரோபதேசமூர்த்தி : (ஸ்காந்த புராணம் - சங்கரசங்கிதை) பாசம் மலம் என்பவற்றிற்கும் பதி சிவம் என்ப வற்றிற்கும் பசு, சீவன் என்பவற்றிற்கும் உள்ள வேறுபாடுகளும் இலக்கணங்களும் பிறவுமுபதேசித்து நிட்டைகைகூடச் செய்து அத்துவித முத்தியும் அருளியமையால் இப்பெயர் பெற்றார்.

72. திரி சுதந்திரா பேதமூர்த்தி : மூன்று உலகிலும் சஞ்சரிக்கும் முனிவர்களுடன் அபேதமாய் நின்று அருள் செய்தமையால் இப்பெயர் பெற்றார்.

73. சர்வவிபுத்துவமூர்த்தி : ஈஸாவாஸ்யோப நிடதம், கந்தபுராணம், திருச்செந்தூர்ப் புராணம். வீரவாகு தேவர்க்கு எவ்விடத்தும் தாம் விபுத்துவ முடையவராய் விளங்குங் கோலம் காட்டலால் சர்வவிபுத்துவ மூர்த்தியாயினர்.

74. தேவவாகனதானமூர்த்தி : (சிவரகசிய கண்டம் - உபதேசகாண்டம்) தேவர்கட்குரிய வாகனங்களைப் படைத்துக் கொடுத்தமையால் இப்பெயர் பெற்றார்.

75.மாவிட்டபுரக்காங்கேயமூர்த்தி (திருச்செந்தூர்ப் புராணம், தீர்த்தமாலை) அங்கசுந்தரியின் குதிரை முகத்தை நீக்கியருளியமையால் இப்பெயர் பெற்றார்.

76.மதுகாவலமூர்த்தி: மது என்னும் அரசற்கு வேண்டும் வரமளித்து இராவணனையும் அழைப்பித்து அரசு அளித்து தம் உலகுங் கொடுத்து காத்தமையால் இப்பெயர் பெற்றார்.

77.அகிலலோகநடனமூர்த்தி : (சங்கிர சங்கிதை - சிவரகசியகண்டம்) குமாரக்கடவுள் கூத் தாடியருள உலகமெல்லாம் ஆடினமையால் இப்பெயர் பெற்றார்.

78.இராமமூர்த்தி : (அதர்வணவேதம், திருச்செந் தூர்ப்புராணம்) தசரராமருக்கு தெளிவூட்ட தரிசனங் காட்டியமையால் இப்பெயர் பெற்றார்.

79.கதிர்காமமூர்த்தி : (கந்தபுராணம்) ஏமகூடம் என்னும் கதிர்காமத்தலத்தில் சோதி வடிவராய் வீற்றிருந்து போக பேரின்பங்களை அருளு வதால் இப்பெயர் பெற்றார்.

80.சிங்கமுகாசுரவதமூர்த்தி : (ஸ்காந்த புராணம்) சிங்கமுகாசுரனை வதைத்தமையால் இப்பெயர் பெற்றார்.

81.சூரசங்காரமூர்த்தி : (ஸ்காந்தபுராணம்) சூரனைச் சங்கரித்தமையால் இப்பெயர் பெற்றார்.

82.விசுவரூபமூர்த்தி : (வேதவசனம், சங்கரசங்கிதை, கந்தபுராணம்) விசுவரூபங்காட்டியமையால் இப்பெயர் பெற்றார்.

83.அசுரபுரதகனமூர்த்தி : (சங்கிரசங்கிதை, கந்த புராணம்) அளவிறந்த அவுணருடல்களைத் திரு விழிகளாலும புன்முறுவலாலும் எரித்தழித்த மையால் அசுரபுரதகன மூர்த்தி எனப்பெயர் பெற்றார்.

84.அகடி தகடனா சாமர்த்திய மூர்த்தி: (சங்கிர சங்கிதை, கந்தபுராணம்) சூரன் வலியை அடக் கியதால் இப்பெயர் பெற்றார்.

85.தேவசேனாபதிமூர்த்தி : (குமாரதந்திரம், கந்த புராணம், தணிகைப்புராணம்) பத்துத்திருக் கரங்கள் விளங்க அருள் புரியும் மூர்த்தம்

86.சர்வபலப்பிரதானமூர்த்தி : (வாமனபுராணம், மற்ச புராணம், அம்சுகாமாசல வைபவம், தக்கிண கைலாச புராணம்,கந்தபுராணம், புதுச்சந்நிதிக் கந்தர்சதகம்) ஞானசக்தி ரூபமாயிருந்து அன்பர் எண்ணிய சர்வபலங்களையும் அருளிய மையால் இப்பெயரைப் பெற்றார்.

87.பதங்காபவர்க்கமூர்த்தி : (சங்கிரசங்கிதை) மயில், சேவல் என்னும் இரு பதங்களுக் கும் முத்திய ளித்தமையால் இப்பெயரைப் பெற்றார்.

88.வள்ளிபரிணயமூர்த்தி : (சங்கிரசங்கிதை) வள்ளி நாயகியைத் திருமணம் செய்தமையால் இப்பெயர் பெற்றார்.

நூலின் உள்ளடக்கம் ஈழத்து முருகவழிபாட் டினைப் பற்றி அறிவதற்குப் பல தகவல்களைத் தருவதாக உள்ளது. நூலாசிரியரது காலத்தில் ஈழத்து வழிபாட்டிலே புராணபடன மரபு சிறப்புப் பெற்றிருந்தது. சிறப்பாக முருகன் கோவில்களில் கந்தபுராணம் படிக்கப்பட்டுப் பயனும் கூறப்பட்டது. மக்கள் வழிபடும் தெய்வத்தின் அருளாற்றலைத் தெளிவாக உணர்வதற்கு இது பெரிதும் உதவியது. குறிப்பாகப் பெண்களுக்கு அறிவூட்டுகின்ற ஒரு வாய்ப்பையும் அளித்தது. முருகவழிபாடு சிறப்பாக யாழ்ப்பாணத்திலே பேணப்பட்டமைக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. ஏறக்குறைய மூன்றுமாதங் கள் கந்தபுராணப்படிப்பு நடைபெறும். அதனை நாள்தோறும் காப்புக்கட்டிய பெண்கள் கேட்டு அறிவு பெற்றனர். இதனால் கந்தபுராண கலாச்சாரம் என்ற சிறப்பான ஆசாரமுறைமை ஒன்றும் யாழ்ப்பாணத் தில் அக்காலத்தில் நிலவியது.

முருகவழிபாட்டின் பண்பையும் பயனையும் விளக் கும் நூலாகவும் இந்நூல் அமைந்துள்ளது. குழந் தைப்பேற்றிற்காக முருகனை வழிபடும் மரபு இன்று வரை நிலைத்துள்ளது. சந்தான வரதமூர்த்தியா கிய முருகனை ஓராண்டு காலம் வழிபட்ட அதிதி என்பாள் பன்னிரு புதல்வரைப்பெற்றாள். அவளு டைய நோன்பு பற்றிய தகவலை இந்நூல் வருமாறு தந்துள்ளது.

> "அதிதி சீரலைவாய் என்னும் சீரியதலம் சென்று கார்த் திகை மாதப் பௌர்ணமியிலே தொடங்கி கந்தபுட் கரணி முதலிய தீர்த்தங்களிலே மூழ்கி விரதம் முற்ற வேண்டும் என்று சங்கற்பம் செய்து இருபத்திநான்கு தீர்த்தங்களிலும் ஆடிப் பன்னிருமுறை வலம் வந்து பன்னிரு கண்ணராகிய வேளின் திருவடிகளைப் பன்னிருதரம் வணங்கி மேலே சக்கரவடிவமும் கீழே சூலவடிவமும் நடுவே வேலாயுத வடிவமும் எழுதி சோடச உபசாரத்தால் பூ சித்து சமுத்திர தீர்த்தத்துள் மூழ்கி கும்ப,தும்ப,விம்பங்கள் என்னும் மூன்றிடத்தும் குமாரவேட்கு அருச்சனை புரிந்து பன்னிரு பிரா மணர்க்கு அன்னம் அளித்து பன்னிருமாதப் பூ ர ணையிலும் இவ்வாறியற்றி ஓராண்டு நோன்பு கொண்டாள்."

இன்று கந்தசஷ்டி விரதம் பிள்ளைப் பேற்றிற்காக அநுட்டிக்கப்படுகின்ற வழக்கம் உண்டு. அது இந்த

அதிதியினுடைய நோன்பின் அடிப்படையாகவே தோன்றியிருக்க வேண்டும்.

முருகனுடைய திருவுருவம் பற்றிய விளக்கங்கள் இந்நூலிலே தெளிவாகத் தரப்பட்டுள்ளன. பழநியிலே வீற்றிருக்கும் முருகன் இறைவனால் பழனி என அழைக்கப்பட்டதால் அப்பெயர் பெற்றான். தந்தையின் கரத்திருந்த பழத்தைப் பெறமுடியாமல் கோபமுற்று மயிலை விடுத்து மகுடம், குண்டலம், பொன்னாடை முதலிய ஆபரணங்களையெல்லாம் கழற்றி எறிந்து கேதனம் வச்சிரம், அங்குசம், விசிகம், வேல், பங்கயம், கண்டாமணி, மழு, வில், வாள், தோமரம் என்னும் ஆயுதங்களை வீசி தண்டமொன்று கையில் ஏந்தி கௌபீனதாரியாய் திருவாவிநன்குடி சென்று சிவகிரியில் அமர்ந்தான்.

முருகனை அங்கு சென்று உமாதேவி யாரும் இறைவனும் சந்தித்தனர். அவர்கள் முருகனைச் சமாதானப்படுத்தி பழநீ என விளக்கினார். இச்சந்தர்ப்பத்தில் முருகனுடைய தோற்றம் பற்றி இறைவன் விளக்குகிறார்.

> மைந்த யாமும் சக்தியும் நீயேயன்றோ? அது எம்முடைய ஐந்து முகமும் தேவியின் ஒரு முகமும் சேர்ந்து நினக்கு ஆறுமுகங்கள் இருப்பதனால் அறிதி எம்மைக் குறித்துச் செய்யும் வழிபாடும் நின் அன்னையைக் குறித்துச் செய்யும் பூ சனையும் நினக்கேயாம் எம்மிருவரையும் பூ சை செய்தடையும் பலன் நின்னைப் பூ சை செய்வதனால் உண்டாகும். நின்னைப் பூ சித்தவர் எம்மிருவரையும் பூ சித்தவராகின்றனர்.

இந்தவிளக்கம் முருக வழிபாட்டாளர்களையும் சிவவழிபாட்டாளர்களையும் இணைக்கின்றது. வழிபாட்டுநிலையில் முரண்பாடு தோற்றாவண்ணம் ஒரு முகப்படுத்துகின்றது. பழநித் தலபுராணச் செய்யுளை நூலாசிரியர் இதற்குச் சான்று காட்டுகிறார்.

> "சேயதிருவா வினன்குடியிற் சென்றாங் குன்று தொறு
> நின்றான் ஈசனுருகி மடியினில்வைத் தென்றுமினையோ
> யறிவுடையை தேசுதருமம் வானுதற்கண் மணிநீ
> சிறுவனோபெரியை வாசநறுமென் கனியுமொரு கனியோ
> மதுர் மொழிவாயாற் பேசவரிய மறைஞானப் பிள்ளை
> பழநீ யெனப்புகன்றார் கூறுடையாளுங் குன்றாக் குணப்
> பெருங்குன்று ஞானப் பேறுடை பழநீயென்னப் பெயரது
> மருவி யெங்களாமுகவன் வைகு நகரமு மன்றுதொட்டு
> வீறுதொல் பழநீ யென்றே விளம்பின வுலக மூன்றும்"

இதனால் முருகவழிபாட்டுத்தலம் சிறப்புப்பெயர் பெற்றதையும் அறியமுடி கின்றது. இதேபோன்று ஈழத்து முருகதலத்தின் சிறப்பும் நூலாசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ளது. திருச்செந்தூர்ப் புராணத்தை வென்றிமாலைக் கவிராசர் என்ற சிறப்புப் பட்டம் பெற்ற புலவர் சந்நிதானத்திலே அதனை அரங்கேற்றம் செய்யப்புகும் போது அவ்வூரில் உள்ள பிராமணர்கள் நிந்தித்துத் தடுத்தனர். அதனால் மனம் வருந்திய கவிராசர் அதைக்கடலிலே எறிந்துவிட்டார். அப்பிரதி இலங்கையின் வடபாகத்திலேயுள்ள உபயகதிர்காமம் என்னும் புதுச்சந்நிதித் தலத்திற்கு அணித்தான பனைமுனையைச் சென்றடைந்தது. பனையோலையில் வரையப்பட்ட நூலடைந்த முனையாகலாற் பனைமுனையெனப் பெயர் பெற்றது. புராணமுனையென்றும் வழங்குவதுண்டு. அதனைச் சுப்பிரமணிய சுவாமியின் தொண்டராய் கந்தபுராண பாராயணராய் அந்நூலைப் பனைஓலையில் எழுதிப் பல திருமுறைகளாக்கி ஒவ்வோர் ஆலயத்திற்கும் வழங்கிவருதலையே தொழிலாகவுடையவராய் நம் வமிச பரம்பரையில் வந்த முருகதாசர் சுப்பிரமணியப்பெருமான் சொப்பனத்திலறிந்தாங்கு அவண் சென்ற காலை திருச்செந்தூர்ப்புராணத் திருமுறை கடற் கரையினடைதல் கண்டு ஆறுமுகக் கடவுளின் திருவருளிருந்தவாறென்னையென வியந்து துதித்து பூம்பல்லக்கில் வைத்து வாத்தியங்கள் பல முழங்கிக் கொண்டு சென்று பூசித்துவந்தார். அதன் பிரதிகள் பற்பல எழுதித் திருச்செந்தூர் முதலிய சுப்பிரமணிய தலங்களுக்கு அனுப்புவித்தார். தினந்தோறும் அதனைப் பாராயணம் செய்துவருவார்.

இவ்வாறு நூலாசிரியர் தரும் தகவல் ஈழத்திலே புராணபடனம் ஒரு கற்பித்தல் நெறியாக இருந்ததையும் உணர்த்துகிறது. பிரதிகள் தயாரித்து அனுப்பும் செம்மையான பணியிலே ஈழத்தவர் ஈடுபட்டமை வழிபாட்டு மரபிலே அவர் செய்த சிறந்த பங்களிப்பாக உள்ளது. முருகவழிபாடு ஈழத்தில் இன்று வரை சிறப்புடன் நிலைபெற்றிருப்பதற்கும் இதுவே காரணமெனலாம்.

முருகனது வழிபாட்டுத்தலங்களில் ஈழத்துக் கதிர்காமம் சிறப்புடையது. முருகன் கதிர்காம மூர்த்தியாக உறையும் தலமே கதிர்காமம். இத்தலத்தின் சூழலை நூலாசிரியர் விளக்கியுள்ளார். முன்னர் வாயுவினால் பறித்து எறியப்பட்ட கொடுமுடி மூன்றனுள் ஈழம் ஒன்றெனக் குறிப்பிட்டுள்ளார். இதற்குத் தக்கிண கயிலை, பொன்னகரம் என்ற பெயர்களும் வழங்கப்பட்டன. சூரபன்மன், இராவணன், குபேரன், மது, உக்கிரவழுதி, விபீடணன்,

தொண்டை மானிளந்திரையன், நல்லியக் கோடன், குளக்கோடன், உக்கிரசோழன், வாலசிங்கன், சிங் கையாரியன், அரசகேசரி, பரராசசேகரன், செகராச சேகரன் ஊடைவரால் ஆளப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

> இத்தலம் இலங்கை சூரபன்மன்றன் மகேந்திரபுரிக்கு வடக்கேயுள்ளது. எவ்வாறெனிற் கூறுவதும் இந்து சமுத்திரமெனவிப்போது வழங்கப்படும். மகேந்திரக் கடலின் நடுவே எண்பதினாயிரம் யோசனை அகலமும் நூறு யோசனை விஸ்தீரண முடையதோர் நகரைச் செய்வித்து அதன் எட்டுத்திக்குகளிலும் ஏமபுரம், தேவ புரம், இலங்காபுரம், நீலபுரம், சுவேதபுரம் முதலிய நகரங் களையும் புரிவித்து அவற்றிற் கசானன் (யானை முகன்) துரங்காசியன் (குதிரை முகன்), யாளிவத்திரன் (யாளிமுகன்), பல்லூகவத்திரன் (கரடி முகன்), வியாக் கிராணன் (புலிமுகன்), வராகதுண்டன் (பன்றிமுகன்), சிங்கவத்திரன் (சிங்க முகன்), கவயாசிகன் (காட்டுப் பசுமுகன்) என்னும் வீரர்களைக் காவல் வைத்தா னென்று கந்தபுராணம் கூறல் காண்க.

மேற்காட்டிய நூலாசிரியரது குறிப்பு பழைய வரலாற்று நிலையை ஆராயத் தூண்டுகிறது. கதிர்காமத்தலத்திற்கு வழங்கப்பட்ட பெயர்களையும் நூலாசிரியர் வருமாறு குறிப்பிடுகிறார்.

> நக்கிலைகந்தபுரி, ஏமகூடம், அம்சுகாமம், கதிரை, கதிர் காமம், பூ லோககந்தபுரி, கோட்டம், வன்னி மங்கலம், காசிகாப்பு, வரபுரி, பஞ்சமூர்த்திவாசல், சகலதேவோ பாசிதம், கதிர்கேணி, சகலசித்திரம், அகத்தியப்பிரியம், சிதாகாசம், குகத்தலம், தகராலயம், பிரமசித்து, மகத்து, விசித்ரம், ககனம், பரிசுத்தம், அற்புதம், பாசறை, அம்பலம், பாலியோமம், இரண்யகோசம், அந்தராகாசம், அவ்வியத்தமூர்த்தபுரி.

ஏறக்குறைய 30 பெயர்களால் இத்தலம் அழைக்கப்பட்டுள்ளது. இன்னும் இத்தலத்தில் உறையும் முருகன் தோற்றத்தையும் வருமாறு காட்டியுள்ளார்.

> "ஆறுதிருமுகங்களும் பதினெட்டுத்திருக் கண்களும் ஆறுதிரு முடிகளும் குண்டல நிரைகளும் அழகிய கடப்பமாலையணிந்த திருமார்பும் வலத்திருக் கரங்களிலே கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல், அபயம் என்பனவும் இடத்திருக்கரங்களில் தாமரை, கண்டாமணி, மழு, தண்டு, வில், வரதம் என்பனவும் அமைந்த பன்னிருதிருப்புயங்களும் கொண்டு கோடி சூரியப்பிரகாசம் போன்ற திருமேனியுடையராய் வேகமூர்த்தியாய் நவவீரர்களும், இலக்கங்கணாதிபர் களும் இரண்டாயிர பூ தவெள்ளங்களும் தேவர், முனி வர், கின்னரர் முதலாய பதினெண்கணத் தவரும் போற்றி வணங்கி ஏவல்புரிய வீற்றிருந்தருளினர்."

முருகன் போர்த்தெய்வமாக, அருட்தெய்வமாக, அழகுத்தெய்வமாக, அறிவுத்தெய்வமாக இன்று வழிபடப்படுகிறான். சுப்பிரமணிய பராக்கிரமம் இவ்வழிபாட்டு நடைமுறைகளையும் நம்பிக்கை களையும் நன்கு விளக்கும் ஒரு சிறந்த தகவல் களஞ்சியமாக அமைந்துள்ளது. வடமொழிப்புராணப் பதிவுகளையும் தமிழ்மொழி இலக்கியப்பதிவு களையும் நூலாசிரியர் நன்கு அறிந்தவராதலால் தகவல் தொகுப்பில் ஒழுங்கு நிலை பேணப்பட்டது. முருகன் மலைத்தெய்வமாக மலையோடு தொடர்புற் றிருப்பதைப் பல செய்திகளோடு ஆசிரியர் விளக்கி யுள்ளார். ஈழத்திலே முருகவழிபாடு சிறப்புற்றிருப பதற்கான காரணத்தை நூலைப் படிக்கும் போது அறியமுடிகின்றது.

நூலில் ஒரு செய்தி குறிப்பிடப்படாமை கவனத் திற்குரியது. ஈழத்திலே தொண்டைமானாற்றிலே அமைந்துள்ள சந்நிதி பற்றிய தகவல் இல்லை. புதுச்சந்நிதி என்னும் ஆலயம் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. ஆனால் இன்று கதிர்காமத் தலத்திற்கும் தொண்டைமானாற்றுச் சந்நிதிக்கும் வழிபாட்டு நிலையில் தொடர்புண்டு. மேலும் முருகன் கோவிலிலே வேல் வைத்து வழிபடும் மரபு யாழ்ப்பா ணத்தில் சிறப்பாயுள்ளது. முருகனது வேலாயுதம் சிறப்பான படைக்கலம். ஆதனால் அதனை வழி படுவது மக்களுக்கு ஒரு பாதுகாப்பு உணர் வையூட்டியதுபோலும். இவ்விடயம் விரிவாக ஆரா யப்பட வேண்டியது.

சுப்பிரமணிய பராக்கிரமம் தமிழ் ஆவணநூல் களில் ஒரு சிறப்பான ஆக்கமாகத் திகழ்கிறது. தமிழர் கடவுளாகப் போற்றப்படும் முருகன் வடநாட் டிலே வழிபாட்டுத்தலங்களில் வீற்றிருக்கும் நிலை குறைவு பட தென்னாட்டிலே மலிந்திருப்பதும் ஆசிரி யர் குறிப்பிடும் இன்னோர் ஆய்வுக் குறிப்பாகும். தமிழ்நாட்டிலே முருகவழிபாடு சிறப்புற நடைபெற்ற போதும் ஈழத்தில் முருகன் பற்றிய தலபுராண வரலாறுகள் பெரிதும் அறியப்படாதவையாக இருக் கின்றன. அதனையே சுப்பிரமணிய பராக்கிரமம் ஆவணப்படுத்தியுள்ளது. எனவே இந்நூல் எதிர் காலத் தலைமுறையினருக்கு உலகெங்கும் வாழும் தமிழர்க்குச் சிறந்ததொரு தகவல் களஞ்சியமாகப் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

# முருக வழிபாட்டில் மரபுகளும் சம்பிரதாயங்களும்

ஸ்ரீமதி மங்கயர்க்கரசி திருச்சிற்றம்பலம்

முருகவழிபாடு மிகவும் தொன்மையானது. முருக வழிபாடு தமிழ் மக்களால் நீண்ட காலமாகக் கைக் கொள்ளப்பட்டதென்பதை இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள முருக ஆலயங்கள் மூலம் அறிய முடிகிறது. மலையும் மலை சார்ந்த இடமும் முருகப் பெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கும் இடங்களாக விளங்குகின்றன. இதே சமயம் சாதாரணமான இடங்களிலும் முருகன் ஆலயங்கள் இருப்பதைக் காணமுடிகிறது. இந்தியாவிலே ஆறுபடை வீடுகள் மிகவும் புகழ்பெற்ற முருகன் ஆலயங்களாகும். ஆகம விதிகளுக்கேற்பக் கட்டப்பெற்று ஆகம விதிக்கு ஏற்ப அபிஷேகம், பூசை, வருடாந்த உற்சவம் நடைபெறுகின்றன. கோவில்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தொன்மையும் வரலாற்றுப் பெருமையும் வாய்ந்த ஆலயமாக விளங்குகின்றது. ஆகம விதிகளுக்கு அமையாது பக்தி பரவச நிலையில் மக்கள் பெருந்தொகையாகக் கூடி வழிபடும் ஆலயங்கள் சந்நிதி, கதிர்காமம் என்பன. ஆகமங்கள் இறைவன் நூல் எனவும் சமயம் சார்ந்த பிரமாண நூல் எனவும் போற்றப்படுகின்றன. ஆகமங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் பற்றிக் கூறுவதோடு மக்களது ஆன்மீக வாழ்வு சிறப்பாக அமைய உதவுகின்றன. ஆலயங்கள் அமைக்கப்படுவதன் நோக்கம் மக்கள் சீரிய நெறி வாழ்ந்து இறைவனை வழிபட்டு மும்மலங்களிலிருந்தும் விடுதலை பெற்று வாழவேண்டும் என்பது ஆகம நியதியாகும். யாழ்ப்பாண மக்கள் மத்தியிலும் வெளி நாடுகளில் வாழும் தமிழ் மக்களிடையே நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவம் ஆரம்பமாகி விட்டால் அவர்கள் எல்லோரும் முருக சிந்தனையுடன் வாழ்வார்கள். விரதம் அனுஷ்டிக்கவும் தவறமாட்டார்கள். இதே சமயம் பெரும்பாலும் கிராமப் புறங்களிலே ஆகம விதிகளுக்கு அமையாத பல பிரபல்யமான ஆலயங்கள் உள. தொண்டைமனாறு செல்வச்சந்நிதி, கதிர்காமம் என்பன ஏராளமான மக்களால் பக்திப் பரவசத்துடன் வழிபடப்படும் ஆலயங்களாகும். ஆனால் அவை ஆகம முறைக்கு அமைந்திருப்பவை அல்ல. நல்லூர் கந்தசுவாமி கோவில் ஒருமடாலயக் கோயிலாக விளங்கி ஏராளமான பத்தர்களைக் கவரும் காரணம் கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் ஆகிய சித்தர்கள் உலாவிய இடமாகும். அவர்கள் அங்கு தங்கித் தவம் செய்துவந்த காரணத்தால் அவர்களுடைய உள்ளத்திலிருந்து எழுகின்ற சிந்தனாசக்தி அக்கோவிலுக்கு அளப்பரும் சக்தியை ஏற்படுத்துகின்றது. இந்தியாவில் பழனி முருகன் ஆலயத்தில் போகர் என்ற சித்தரும் யாழ்ப்பாணத்தில் சன்னதியில் ஐராவசு என்ற சித்தரும் வாழ்ந்து அருட்பிரவாகம் ஏற்படச் செய்து விட்டனர்.

தற்பொழுது முருகன் ஆலயங்களில் ஆகம விதிக்குட்பட்ட கோவில்களாக இருந்தாலும் இதற்கு மாறாக அமைக்கப்பெற்ற கோயில்களானாலும் கட்டிட அமைப்பில், வெளித் தோற்றத்தில், பரிவார மூர்த்திகளின் அமைப்பில் பெருமளவு வித்தியாசம் இல்லை எனலாம். ஆனால் பூசை முறைகளில் வேறு வேறு முறைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. மேலும் ஆலயம் அமைந்துள்ள சூழல், அங்கு வாழும் மக்களின் தொழில், கலாசாரம், பொருளாதாரம், சீதோஷ்ண நிலைக்கேற்ப ஆலய உற்சவங்கள் பூசை, அபிஷேகம் என்பன் வேறுபடுகின்றன.

முருக வழிபாட்டில் கிராமப்புற மக்களால் பக்தி பூர்வமாகக் கைக் கொள்ளப்படும் முறைகள் பற்றி ஆராய்வோம். முருகப் பெருமான் கையில் வேலேந்தியபடி காட்சியளிக்கின்றார். கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தில் "திருக்கைவேல் போற்றி போற்றி" எனப்பாடியமை வேலின் மகிமையை உணர்த்தியது. ஆறுகள், மலைகள் மலைச்சாரல்கள் ஆகிய இடங்களில் வேலை வைத்து மக்கள் வழிபட்டனர் என்பதற்கு தொல்பொருள் ஆராய்ச்சியும் இலக்கியமும் சான்று பகர்கின்றன. அன்று முதல் பாரதியார் காலம் வரை வேலைப்பற்றி பாடல்கள் முருகபக்தர்களிடையே பிரபல்யம் பெற்றிருந்தன.

குரவைக் கூத்தாடும் பொழுது செந்நிறப்பட்டாலும் செந்நிறப் பூக்களாலும் அலங்கரிக்கப்பெற்ற வேலைக் கையிலேந்தி ஆடி முருகன் அருளைப் பெற்றனர். வேலை ஏந்தி ஆடிய காரணத்தால் வேலன் என்று அழைத்தனர். முருகப் பெருமானு டைய திருக்கை வேல் என்று அழைத்தனர். முருகப் பெருமானுடைய திருக்கைவேல் பற்றி கந்தபுராணம், கந்தரங்காரம், கந்தரநுபூதி, திருப்புகழ் ஆகிய நூல்களில் கூறப்படுபவவை என்றும் சிந் திக்கப்பாலன.

வையிற் கதிர்வடி வேலோனை - கந்தரலங்காரம்
தனிவழிக்குத்துணை வடிவேலுஞ்செங்கோடன் மயூ ரமுமே
- கந்தரங்காரம்
வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட தீரவேல்
- திருமருகாற்றுப்படை வெண்பா

இறைவன் ஒளிமயமானவர் முருகப் பெருமானும் பிரம்மாய் நின்ற சோதி பிழம்பதோர் மேனியாக, கருணையுள்ள ஆறுமுகங்களுடனும் பன்னிரு கரங்களுடனும் திருமுருகன் உதயமானான் என்பது கந்தபுராணச் செய்தி நல்ல மங்களகரமான நிகழ்ச்சி கிளெல்லாம் ஒளியேற்றி ஆரம்பிக்கப்படுகின்றன. தீப்பூசை ஆலயங்களில் பக்தி பரவசமாக மேற் கொள்ளப்படுகின்றன. ஆழமான சமய அறிவு இல் லாத நிலையில் சமய இலக்கியங்களைக் கற்காத நிலையில் மக்கள் பக்தி, நம்பிக்கை, தமக்கு ஏற்பட்ட அனுபவம் காரணமாக வழிபாட்டு முறைக ளைத் தங்கள் சிற்றறிவுக்கு ஏற்ப மேற்கொண்டனர். மேலும் கனவிலே முருகப் பெருமான் தோன்றி இவ்வாறு செய் எனத் திருவாய் மலர்ந்தருளியதா கவும் அதிக நம்பிக்கையுடனும், பக்தியுடனும் வழி பாடு செய்தனர். கற்பூரம் வெண்மையானது தூய்மை யானது, நறுமணம் மிக்கது மட்டுமல்ல எரித்தலின் எதுவும் எஞ்சுவதில்லை. ஆகவே கற்பூர ஒளி முருகப் பெருமானுடன் இரண்டறக் கலந்துவிட்டது என்ற நம்பிக்கையுடன் முருக பக்தர்கள் கற்பூரச் சட்டி ஏந்தி முருகப் பெருமான் வீதிவலம் வரும் போது தமது நேர்த்தியை நிறைவு செய்கின்றனர்.

அடுத்ததாக திருக்கார்த்திகை முருகப் பெருமா னுக்கு மிகவும் உகந்த புனித தினமாக விளங்கு கின்றது. அன்று ஆலயங்களில் அபிஷேகம், பூசை நடைபெற்ற பின் சொக்கப்பானை எரிக்கப்படும். மிக உயரமான கோபுரம் போன்ற அமைப்பை மூங்கில் தடிகளாலும் காய்ந்த தென்னோலை, பனையோலை என்பவற்றால் அமைத்து சுவாமியை எழுந்தருளச் செய்து அதனை எரிப்பதனால் ஏற்படும் ஒளியை வணங்கும் மரபு இன்றும் நிலவுகிறது. வேட்டுவ மன்னனான நம்பிராசாவின் புதல்வி வள்ளி தினைப் புலம் காக்க அங்கு அனுப்பப்பட்டாள். அவளுடை தூய பக்தியை அறிவதற்கு முருகப் பெருமான் விருத்தனாகிய சிவனடியார் வேடம் தாங்கி தினைப் புலத்திற்கு எழுந்தருளினார். அங்கு வந்த நம்பிராசன் தனது புதல்விக்கு நல்ல துணை கிடைத்து விட்டது என மகிழ்ந்து அவ்விடம் விட்டு நீங்கினார். விருத்தரா கிய சிவனடியார் பசியால், தாகத்தால், மோகத்தால் தவிப்பவர் போல நடிக்க வள்ளிநாயகியாரும் தேனும் தினைமாவும் கொடுத்து அவரின் பசியை யும் தாகத்தையும் தீர்த்தார். வேடுவர்கள் வாழு கின்ற பிரதேசங்களில் தினைமாவும் தேனும் ஏராள மாகக் கிடைப்பதால் அவர்களுடைய வழிபாட்டு முறை சுற்றுச் சுழலுக்கு ஏற்ப அமைந்திருந்தது. எனவே அடியார்கள் தேனையும் தினைமாவையும் பிசைந்து அகல்விளக்குப் போல உருவாக்கி நெய் விட்டு விளக்கேற்றி வணங்கும் மரபு இன்று வரை, நிலைத்திருக்கின்றது. இதனை மாவிளக்கு என அழைக்கிறார்கள். நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திலும், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திலும் திருக்கார்த்திகை தினத்தன்று அடியார்கள் மாவிளக்கு ஏற்றி வழிபடுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆடல், பாடல், பல்வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தி பாடி வணங்குதல், காவடியாட்டம் என்பன முருகவழிபாட்டில் முக்கிய இடம் பெற்றுள் ளன. பெண் ஒருவர் காதல் காரணமாக வாடி பல மாற்றங்களுக்கு உட்பட்டிருந்தால் தாயும் செவிலித் தாயும் குறமகள் ஒருவரை அழைத்து குறி சொல் லும் வழக்கம் இலக்கியங்களில் உள. குறமகள் அலங்காரமாக புடவை கட்டி குன்றிமணி பாசிமணி மாலை அணிந்து விபூதி, சந்தனம், குங்குமம், அணிந்து ஒரு கூடையும் மாத்திரைக் கோலும் தாங்கித் தன் தெய்வம், ஊர், தான் யார் என்பதை யும் எடுத்துக் கூறிக் குறியும் சொல்லிச் செல்வாள். அவளை குறத்தி எனவும் அழைப்பர். குறமகள் முருகப் பெருமானை நினைத்து வணங்கி முருகப் பெருமான் தன் முன் காட்சியளித்ததும் அவனருள் பெற்றுக் குறி சொல்வதாக ஒரு மரவு முற்காலத் தில் நிலவியது.

திருப்பரங்குன்றம் ஆறுபடை வீடுகளில் ஒன்று மட்டுமல்ல, ஆடல், பாடல் பல இசைக் கருவிகளு டன் இணைத்து வழிபாடு நடைபெற்ற ஓர் ஆலயமாக விளங்குகிறது. அங்கு அடியார்கள் மரபுவழி வழிபாடு செய்ததனால் மலையும் அடிவாரமும் பக்தி நிறைந்த

ஒரு புனித இடமாக விளங்கியது என்பதை பரி பாடலில் உள்ள சில வரிகள்,

**தேம்படு மலர்குழை பூ ந்துகில வடிமணி**
**ஏந்திலை சுமந்து சாந்தம் விரைஇ**
**விடையரை அசைத்த வேலன் கடிமரம்**
**பரவினர் உரையோடு பண்ணிய விசையினர்**

எனக் கூறுகிறது. யாழினது இனிய ஓசையும், குழலின் நாதமும், முழவின் ஒலியும், வண்டின் ரீங்காரமும், தும்பி பறந்து ஊதும் இசையும், விறலியர் பாடி ஆடும் காட்சியும் வண்ணமயிலின் ஆட்டமும் திருப்பரங் குன்றத்தை ஒரு தெய்வ உலகமாகக் காட்சியளிக்கச் செய்கின்றன. எளிமையான வாழ்க்கையும் உயர்ந்த நல்லெண்ணமும் கொண்ட கிராமப்புற மக்கள் நல்லறிவு படைத்த சான்றோர் போல முருகப் பெருமானிடம் பின்வருமாறு வேண்டுகின்றனர்.

**யாஅம் இரப்பவை**
**பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால் அருளும்**
**அன்பும் அறனும் மூன்றும்**
**உருளினார்க் கடம்பின் ஒலிதரா ரேயே**

முருகவழிபாட்டில் நீண்ட காலமாகப் பாடியாடி தமது பாபச் சுமையை முருகன் ஆலயத்தில் இறக்கித் திருவருள் பெறும் வழக்கம் ஒன்று உளது. பாற்காவடி, பன்னீர்க் காவடி செடிக்காவல், பூக்காவடி, பறைவைக்காவடி என்பன முருகன் ஆலயங்களில் பிரபல்யம் பெற்று விளங்குகின்றன. காவடி ஆடி ஏராளமான பக்தர்கள் மாவிட்டபுரம், சந்நிதி, நல்லூர், கதிர்காமம் ஆகிய பிரசித்தி பெற்ற ஆலயங்களில் முருகனருள் பெறுவதை நாம் காண முடிகிறது. ஆனால் இன்று முருகனாலயங்களில் மட்டுமல்ல அதிகமான அம்மன் ஆலயங்கள், சிவாலங்களிலும் நேர்த்திக்கடனாக காவடியாடி இறைவனை வழங்கும் மரபு காணப்படுகின்றது.

திருக்கைலாய மலையில் சிவகிரி, சக்திகிரி ஆகிய இருமலைகள் இருந்தன. அகத்தியர் தென்னாட்டில் பொதிகை மலைக்கு வந்த பொழுது ஒரு நீளமான தண்டை எடுத்து இருமலைகளையும் இருபக்கங்களிலும் கட்டிக்கொண்டு வருமாறு இடும்பாசுரனுக்குக் கட்டளையிட அவனும் அவ்வாறு செய்தான். வரும் வழியில் களைப்படைந்து கீழேயிறக்கி வைத்தான். அப்பொழுது சிவகிரியின் மீது முருகப் பெருமான் தோன்ற இருவருக்குமிடையே போர் நடந்தது. அப்பொழுது இடும்பன் இறக்க இடும்பியின் வேண்டுதலுக்கு ஏற்ப அவன் உயிர் பெற்று எழுந்தான். இடும்பன் சந்நிதியில் வாயில் காப்போனாக வரம் பெற்ற இடும்பன் தன்னைப் போலக் காவடி எடுத்து வணங்கும் அடியார்களுக்கு முருகனருள் பாலிக்க வேண்டுமெனவும் வரம் பெற்றான்.

முருக வழிபாட்டு மரபுகளும் சம்பிரதாயங்களும் பெரும்பாலும் சாதாரண கல்வியறிவுடைய மக்களிடையே நம்பிக்கை காரணமாக கிராமப்புறங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. அவர்களுடைய பக்தி, அர்ப்பணிப்பு, பணிவு, அடக்கம் என்பன போற்றுதற்குரியன.

நல்லூர் கந்தசுவாமி கோவில் பக்தர்கள், சித்தர்கள், அருளாளர்கள், ஆகியோரால் வழிபடப் பெற்றது மட்டுமல்ல சாதாரண மக்களாலும் பக்தியுடன் கந்தா, முருகா, கடம்பா, வேலவா என அழைத்து வழிபடப்பெற்ற இடமாகும். ஆண்கள் அங்கப் பிரதிஷ்டை செய்து வழிபடும் காட்சி மனதை உருக்குவதாக அமைகிறது. விடியற் காலையில் ஐந்து மணிக்கு வெளிவீதியில் அங்கபிரதிஷ்டை செய்பவர்கள் பெருந் தொகையினர் ஆவர். அவர்கள் உற்சவ காலங்களில் தினமும் விடியற் காலையில் முறையாகத் தமது நேர்த்திக்கடனை செய்யத் தவறவில்லை. சிவயோக நற்சிந்தனைப் பாடல்கள் நல்லூர் கந்தசுவாமி கோயில் மகிமை பற்றிக் கூறியதை பின்வரும் பாடல் விளக்குகின்றது.

**எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்குதல்**
**இடர்கள் எல்லாம் போமே**
**அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்தஇடம்**
**அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு**

மக்கள் வாழ்வு வளம் பெற நோய், துன்பம் கடன் நீங்க எம்மைப் பிடித்துள்ள குற்றம் வறுமை நீங்கி நல்லருள் பெற நல்லூரானை வணங்க வேண்டும். நேரம் தவறாது நடைபெறும் பூசை கோயிலின் தூன்மையும் புனிதத் தன்மையும் சுவாமி எழுந்தருளி வீதி வலம் வரும் போது வேல் மற்றும் வள்ளி தெய்வயானையின் அலங்காரம், வாகனங்களின் அழகு, நாதஸ்வரத்தின் இனிய இசை, பஜனைக் கோஷ்டியின் பக்திபிரகாரம் என்பன அடியார்களை மெய்மறந்து முருகப் பெருமானை வணங்கி ஆன்மீகத்தில் ஈடுபாடு கொள்ளச்செய்கிறது. நாம் மட்டுமல்ல நாம் வாழும் நாடு யுத்தம் இன்றி சுதந்திரமாகவும் சாந்தியும் சமாதானமும் பெற்று எல்லோரும் இன்புற்றிருக்க நல்லூரானை

நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு - அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்

என யோகர் சுவாமிகள் நற்சிந்தனைப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். மரபு வழியாகக் கைகொள்ளப்பட்ட வழிபாட்டு முறைகள் இன்று அடியார்களால் மட்டுமல்ல கதிர்காமத்தில் சிங்கள மக்களாலும் கைக் கொள்ளப்படுகிறது. சந்நிதி, கதிர்காமம் மட்டக் களப்பில் உள்ள சில ஆலயங்களில் மரபுகளும் சம்பிரதாயங்களும் இன்றும் கடைப்பிடிக்கப்படுகின்றன. கதிர்காமத்திலும், சந்நிதியிலும் வாய்கட்டி மெளன நிலையில் பூசைகள் நடைபெறுகின்றன. நல்லூரைப் போல மட்டக்களப்பில் மண்டூர் கந்த சுவாமி கோயில்,சித்தாண்டிக் கந்தசுவாமி கோயில், உகந்தமலை முருகன் ஆலயம் ஆகிய ஆலயங்களில் வேல் கர்ப்பக்கிரகத்தில் அமைக்கப்பெற்று மிக நம்பிக்கையுடன் அடியார்கள் வழிபாடு செய்கின்றனர். எல்லோரையும் கவரும் உடுக்கு அடிக்க ஆடும் கரகாட்டம் இன்று அருகி வருகின்றது.

எனவே

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப் போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் - நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பபான் எழில் மருகன்
தேறிவிடும் சிந்தை தெளி.

என்ற பாடலுக்கேற்ப வணங்கி நல்லூரான் அருள் பெறுவோமாக.

# நல்லைக்குமரன் மலர் ஆய்வு செய்தோர்

| | | |
|---|---|---|
| 1. | நல்லைக்குமரன் மலர் 1993 | ~ திரு. காரைமயில்நாதன் ~ |
| 2. | நல்லைக்குமரன் மலர் 1994 | ~பேராசிரியர். ப.கோபாலகிருஷ்ணஐயர்~ |
| 3. | நல்லைக்குமரன் மலர் 1995 | ~ பேராசிரியர். குமாரவடிவேல் ~ |
| 4. | நல்லைக்குமரன் மலர் 1996 | ~ சிவஸ்ரீ சுந்தரமூர்த்திக்குருக்கள் ~ |
| 5. | நல்லைக்குமரன் மலர் 1997 | ~ கலாநிதி எஸ். சிவலிங்கராசா ~ |
| 6 | நல்லைக்குமரன் மலர் 1998 | ~ திரு. கே. சி. வேலாயுதம் ~ |
| 7 | நல்லைக்குமரன் மலர் 1999 | ~ பேராசிரியர் அ. சண்முகதாஸ் ~ |
| 8 | நல்லைக்குமரன் மலர் 2000 | ~ கலாநிதி மா. வேதநாதன் ~ |
| 9. | நல்லைக்குமரன் மலர் 2001 | ~ திருமதி நாச்சியார் செல்வநாயகம் ~ |
| 10 | நல்லைக்குமரன் மலர் 2002 | ~ கலாநிதி கலைவாணி இராமநாதன்~ |
| 11. | நல்லைக்குமரன் மலர் 2003 | ~ கலாநிதி செ. திருநாவுக்கரசு ~ |
| 12. | நல்லைக்குமரன மலர் 2004 | ~ திரு. க. சிவராமலிங்கம் ~ |

# நல்லூர் முருகன் அலங்காரச் சித்திரத் தேர் – அமைப்பும் வரலாறும்

திரு வேலுப்பிள்ளை அம்பிகைபாகன்

இலங்கையின் தலைசிறந்ததும் அழகிய லாம்சம் நிறைந்ததுமாகிய தேர்களில் ஒன்றாக விளங்கும் நல்லைக் குமரன் தேர் பற்றிய இக் கட்டுரை அதன் தேர் அமைப்புப் பாரம்பரியம், வர லாறு, ஏற்கனவே இருந்து பருப்பொருள் எச்சமாகத் தன்னுரு மாற்றியிருக்கும் பண்பு பற்றி முதற் பகுதியிலும் அதனடியாகத் தோற்றம் பெற்ற புதிய சித்திரத் தேரின் அமைவும் கலைத்திறனும் பற்றி இரண்டாவது பகுதியிலும் ஆய்வு செய்வதாகும்.

சமய, கலை, பண்பாட்டு ஒடுக்க முறையி லிருந்து ஒல்லாந்த அரசு சற்று விலகிய நிலையில் சிறிது சுதந்திரமளிக்க இவை மறுமலர்ச்சியுறத் தொடங்கும் நிலையைப் பதினெட்டாம் நூற்றாண்டின் மத்திய பகுதிகளிலே கண்டு கொள்ள முடிகிற போதிலும் அதன் **'ஆரம்ப நிலையின் உச்சக்காலம்'** என்று 1775- 1790 ஆண்டுக் காலப் பகுதியே அமைகின்றது. மாவிட்டபுரம், கந்தசுவாமி, வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன், நயினாதீவு நாகபூசணி, நல்லூர் கந்தசுவாமி போன்ற ஆலயங்கள் மறு மலர்ச்சி அடையும் கால கட்டமாக 1775-1790கள் அமைய இக்காலம் ஈழத்து இந்து சமய, கலை, பண்பாடு வரலாற்றில் முக்கிய திருப்பமாக அமை வதுடன் முக்கியத்துவம் பெறுவதாகும்.

யாழ்ப்பாணத்துத் தேர்க்கலை வரலாற்றில் கலை மறுமலர்ச்சிக் காலகட்டத்தில் முதலாவது தேர் என்று உறுதிப்படுத்தக்கூடிய நிலையில் நல் லூர் கந்தசுவாமி தேர் அமைவது குறிப்பிடத்தக் கது. இது நல்லூர் கந்தசுவாமிக்கென்று வடிவமைக் கப்பெற்றதல்லவென்று கூறும் மரவுவழிச் செய்தி ஒன்று யாழ்- வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத் துடன் அதனைத் தொடர்புபடுத்துவது கவனத்திற் குரியதாகும். வைத்தியலிங்கசெட்டியரால் நிர்மாணிக் கப் பெற்ற இவ்வைத்தீஸ்வரன் ஆலயத்திற்காக பருத்தித்துறையில் இருந்து யாழ் வீதியால் இழுத்து வரப்பட்டபோது நல்லூர் முருகன் ஆலயத்தில் இத்தேர் தானாகவே (கி.பி1787- 1790) நின்றதா கவும் அப்பால் ஓரடி கூட நகரமுடியாத நிலையில் அது முருகனுக்கே அன்பளிப்புச் செய்யப்பட்டதாக வும் தெரிவிப்பது ஆய்வுக்குரியதாகும். சப்பறத்துக் குரிய நிகழ்வுகள், தேருடன் கலந்து விட்ட பண்பு வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான அறங்கா வலகர்களால் இவ்வாய்வாளருக்கு நேரில் எடுத்து ரைக்கப்பட்டுள்ளமையும் இங்கே கருத்திற்குரியதாகும்.

இத்தேரின் ஸ்தபதி பற்றிய சரியான தகவல் கள் கிடையாவிட்டாலும் கூட செவிவழிச் செய்திக ளின் அடிப்படையில் பருத்தித்துறையைச் சேர்ந்த சிற்பக்குழுவினர் இதனை வடிவமைத்ததாகச் சிலர் கூறுவர். ஆயினும் இது ஏற்கத்தக்கதல்ல என்பதில் ஐயமேதுமில்லை. தேர், ஆலயம் உட்பட இந்து சமய கலையமைப்புக்கள் யாவும் மறுமலர்ச்சியுறும். இக்காலம் யாழ்ப்பாணத்தில் தேர் நிர்மாணிப்பில் பயிற்சி பெற்ற ஸ்தபதி ஒருவர் இருந்திருப்பார் என்று கொள்வது சற்றும் பொருத்தமற்றதொன்றே. முற்கூறிய மரபுச் செய்தியின்படி இத்தேர் பருத்தித் துறையிலிருந்து அவ்வீதி வழியாக இழுத்து வரப் பட்டதாயின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பருத் தித்துறை ஸ்தபதியின் சிற்பாலயத்திலிருந்தே கொண்டு வரப்பட்டதாயிருக்கவேண்டும். வைத்தீஸ் வரன் ஆலயத்தை எடுப்பித்த செட்டியார் தஞ்சை மஹாராஸ்டிர அரசின் ஆஸ்தான ஸ்தபதி கண் ணாயிர ஸ்தபதியை வரவழைத்தே அதைச் சிறப்புற அமைத்தவர். அதே போன்று தேர்க் கலைஞர்களும் தமிழகத்திலிருந்தே அவரால் அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சொல்வது பொருத்தமாகாது. **'பருத்தித்துறை'** என்பதை நாம் சற்று உற்று நோக் கின் அது ஒரு சிறந்த துறைமுகமாக விளங்கியதை அறியலாம். ஆகவே இந்தியாவிலிருந்து கடல் மூலம் இங்கே கொண்டுவரப்பட்ட தேர் உதிரிப் பாகங்கள் துறைமுகத்திற்கருகில் ஏதோவோர் இடத்தில் தேராகிய நிலையில் 'பரு- யாழ்' வீதியால் இழுத்து வரப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஆகவே இந்திய ஸ்தபதியால் அவரது கலைக்

குழுவால் வடிவமைக்கப்பெற்ற இத்தேரில் யாழ்ப் பாணக் கலைஞர்களும் இக்காலத்தில் போன்று பங்கு கொள்ள அவர்களின் சந்ததியினர் தேர் அமைப்பினை ஈழத்தவர்க்கு மாற்றும் முயற்சியில் இறங்கினர் என்று தற்காலிகமாகக் கூறுதல் பொருத் தமுடையதொன்றாகும். இத்தேர் சிவனுக்காக வடிவ மைக்கப்பட்டது என்பதைவிட முருகனுக்காகச் சிறப் பாக ஆகம மரபு பிறழ்ந்த மடாலய வேலனுக்காக வடிவமைக்கப்பெற்றது என்பதே பொருத்தமாகின் றது. இதனை இத்தேர் அமைப்பு உறுதிப்படுத்தும்.

எண்கோண வடிவிலமைந்த திராவிட மரபுத் தேராகிய இது மேல் விமானத்துடன் கூடிய முதலா வது தேர் என்ற பெருமையையும் இக்காலத்தில் பெற்றதாகும். ஆயின் இவ்விமானம் முதல் நிர்மாணத் தின் போதே செய்யப் பெற்றதா அல்லது சிறிது காலத்தின் பின்னர் மீளச் சேர்க்கப் பெற்றதா என்று சரியாக கூறமுடியாது. உபபீடத்தில் முகபத் திர இரட்டைப்பஞ்சாங்க உப முறிப்புக்கள் மீட்கப் பட்ட கமலாகார வடிவிலமையும் பண்டிகையுடன் இது காணப்படுகிறது. குதிரை, யாளி, குதிரையும் வீரரும் போன்ற அலங்காரச் சிற்ப விலங்குருவ சிற்பங்கள் காணப்படுகின்ற போதிலும் சிற்பம் என்று சிறப்பித்துப் பேசப்படும் விக்கிரக சிற்பங்கள் ஒன்றும் அமையவில்லை. மொத்தத்தில் இத் தேர் சிவனுக் குரியது அல்ல என்பது முதலில் நிரூபமாகின்றது. ஏனெனில் வண்ணை வைத்திஸ்வரன் ஆலயத் தினை ஆகம மரபிற்கமைய தமிழக ஸ்தபதியை வரவழைத்துச் சிறப்புற நிறைவேற்றிய வைத்தி யலிங்கச் செட்டியார் இத்தகைய சிவன் பெருமை பேசும் சிற்பங்களற்ற சாதாரண அலங்காரத் தேரினை விரும்பியிருக்கமாட்டார் என்று உறுதியாக கூறலாம். ஆகவே இத்தேர் பற்றிய செவி வழிச் செய்திகள் ஆதாரமற்ற நிலையில் வந்துள்ளமை தெளிவாகின்றது என்பது உண்மையாகும்.

எண்கோண மரபு, மேல் விமானம் ஆகிய அம்சங்கள் இத்தேரினை ஈழத்து ஸ்தபதி வடிவ மைத்ததான மனப்பிரமையைப் பிற்காலத்தில் ஏற் படுத்தியிருக்க வேண்டும். இக்கால யாழ்ப்பாணத் தேர்க்கலை வரலாற்றில் இவ் எண்கோண மரபே பெரு வழக்கில் அமைவதும் இதனை மேலும் பல ருக்கு நம்ப வைத்துள்ளது எனலாம். இவை ஆதா ரம் ஏதுமற்ற வெறும் நல்லூர் முருகன் தேர் பற்றிய காலத்தால் முந்திய வரலாற்றுக் குறிப்பாக அமைவதும் இலங்கை அமெரிக்க மிசனைச் சேர்ந்த அமெரிக்கராகிய திருமதி மிறன் வின்ஸ்லோவின் நினைவுக் குறிப்பாகும். 'சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தேரின் முன் நடனமும் பிரதிஸ்டையும் நடைபெற்றது என்று நல்லூர்த் தேர் திருவிழாவையே பதிவு செய்கின்ற போதிலும் தேர் அமைப்புப் பற்றிய சிறு பொறியையும் குறிப்பிடுவது முக்கியத்துவம் பெற்றதாகும். இவரது இக்குறிப்பு 1823-ம் ஆண்டிற் பதிவு பெற்றும் 1835-ம் ஆண்டில் அச்சேறியும் இருப்பது இத்தேரின் கால நிர்ணயத்துக்கு ஓரளவு உதவி செய்வதாகும். இத்தேர் வண்ணை வைத்தீஸ் வரன் ஆலயத்தின் நிர்மாண காலத்தை ஒட்டிய காலப்பகுதியில் வடிவமைக்கப் பெற்றதாயிருக்க வேண்டும் என்றும் மேற்கூறிய செவி வழிச் செய்தி யையும் ஓரளவு ஆதாரமாகக் கொண்டு ஊகித்தல் பொருத்தமாகின்றது.

இத்தேர் இன்றைய நிலையில் 1960-ன் ஆரம் பத்திலேயே சிதைவடைந்த நிலையில் அதே உருவ அமைப்பினைத் தழுவியதாக புதிய தேர் 1964-ம் ஆண்டில் வடிவமைக்கப்பெற்றமை குறிப்பி டத்தக்கதாகும். முற்றாகச் சேதமடைந்த பின்னர் இதன் போதியலில் சில பகுதிகளும் அலங்கார உருவச் சிற்பங்களும் ஆலய மணி மண்டபத்தில் அலங்கரிக்கப் பெற்றுள்ளமை இன்று அதன் பருப் பொருள் எச்சம் பேணப்படும் நிகழ்வாக அமைவதாகும்.

தேர் அமைப்பில் ஒரு கவர்திறன் மிக்க உரு வாம்சத்தினை இலாவகமாக நீர்வேலியில் (1963) கையாண்ட திருவிடைமருதூர் இரா. கோவிந்தராஜு ஸ்தபதியால் நிர்மாணிக்கப்பெற்ற நல்லூர் கந்த சுவாமி தேர் ஒரு குறிப்பிடத் தகுந்த முயற்சியாகும். யாழ்ப்பாணத்திலுள்ள இந்து ஆலயங்களில் பொரு ளாதார பலம் நிறைந்த இவ்வாலயம் சிற்பத்தேர் ஒன்றினை அமைக்க விரும்பாமைக்கு அதுவரை காலமும் இங்கே பயன்பாட்டில் இருந்து வந்த அலங்காரச் சிற்பத்தேரின் கவர்ச்சிகர உருவ மைப்பே காரணியாக அமைந்திருக்கவேண்டும். ஆகவே தான் 'புதிய தேர் உருவத்திலும் அமைப் பிலும் பழைய தேரை ஒத்ததாயிருக்க வேண்டும். என்று அறங்காவலர் குகஸ்ரீ 'சண்முகதாஸ் மாப் பாண முதலியார்' விரும்பியதற்கமைய புதிய தேரின் அமைப்பு முறையைத் தழுவி உருவாக வேண் டியதாயிற்று.

இத் தேர் வடிவமைப்பில் ஸ்தபதி கோவிந்த ராஜாவின் சிற்பக் குழுவில் இ. அருணாசலம், நா. சோமு, ஆர். ரஜேந்திரன், ஆர். சீனிவாசன் ஆகிய இந்தியக் கலைஞர்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

பலரும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவர்களில் இந்தியக் கலைஞர்கள் சிற்பிகளாகவும் யாழ்ப்பாணக் கலைஞர்கள் பெரும்பாலும் தேர்க் கட்டுமான உதவிக் கலைஞர்களாகவும் அமைபவர்கள் ஆவர்.

திராவிட எண்கோண மரபில் திரிதள விமானத்துடன் காணப்படும் இத்தேர் பழைய தேரின் மாதிரி என்றும் கொள்ளப்படுவது பொருத்தமாகப்படவில்லை. அது தவறும் கூட. தேர்களின் பொது தன்மை அடிப்படையில் இவற்றுக்கிடையிலான ஒற்றுமை அமைகிறது என்று கொள்வதும் புதிய தேர் ஸ்தபதி கோவிந்தராஜுவிற்கே உரிய பல உள்ளார்ந்த சிறப்பம்சம் உடையது என்று கொள்வதும் பொருத்தமாகின்றது.

பழைய தேரின் பொது அமைப்பிலிருந்து புதிய தேர் வேறுபடும் அம்சங்களை ஆராய்தல் அவசியமாகின்றது. மடாலயத்துக்குரிய தேராக இது அமைய ஆகம மரபிலமையும் சண்முகர் எழுந்தருளும் சிங்காசனம் அதன் கீழுள்ள தேவாசனம் என்னும் தளங்கள் சிற்ப இலக்கண மரபில் இதில் அமைகின்றன. இவ்விரு போக்குகளும் பழைய தேரில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தேவாசனத்தில் விதிமுறையில் இடம் பெறுகின்றமை ஆகம மரபின் இணைவினை இத் தேரில் தோற்றிவிப்பதாகும். அதே வேளையில் தேர் அமைப்பு ஆகம மரவு பிறழ்ந்த முருகனுக்கு அல்லது தெய்வத்திற்கு அமைக்கப்பெற்றது போன்ற நிலையில் விலங்குருவ அலங்காரச் சிற்பங்களைப் பெற்று பழைய தேரின் பொது அமைப்பு முறையினை ஏற்பதும் மனங் கொள்ளத்தக்கதாகும்.

உபபீடத்தில் நான்கு கோணங்களிலும் பூதங்கள் பெரிய உருவில் முழுச்சிற்பமாக இடம்பெறுகின்றன. இவை சிற்பச் செழுமைமிக்கவையாகும். மேல் விமானத்தில் முதற்றளத்தில் முருகனின் வாகனமாகிய மயிலும் கொடியாகிய சேவலும் பெரிய அளவில் முழுச்சிற்பங்களாக அமையும் புதிய மரபு இங்கே தோற்றம் பெறுவது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். விமானத்தின் 'கொடுங்கை' எனப்படும் தளத்திலமையும் எழுதக வரிச் சட்டங்கள் யாவும் பித்தளைத் தகடுகளால் மூடப்பட்டு மேலலங்காரம் பெற்றுள்ளமை இத்தேரின் சிறப்பினை மேலும் உயர்த்துவதாகும். தேரோடும் வேளையில் சூரிய ஒளிக்கதிர்கள் படும்போது தேர் தகதகவென்று ஒளிவீசும் தன்மை வழிபடு பக்த - தெய்வ உறவு நிலையில் ஓர் ஈர்ப்பினை, கவர்திறனை ஏற்படுத்துகின்றமை கவனத்திற்குரியதாகும்.

முகப்புக் குதிரைகள், பிரம்மா ஆகிய சாரத்திய அம்சம் இடம்பெறாமை காரணமாக தேரிற் கவர் திறன் ஏதும் குறைவதாக எண்ணுவதற்கும் இடமில்லை. ஏனெனில் 'தேரோட்டம்' என்னும் நடைமுறையில் யாழ்ப்பாணத்துத் தேர்களை நோக்கும் போது அதிகளவு கவர்திறனுடைய என்ற பெருமை பெறும் தேர் இது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். இது பற்றி 'அனுபவித்துணர்ந்த' அறிஞர் ஒருவர்.

**"நல்லூரிலே ஆறுமுகப் பெருமான் தேரிலமர்ந்து வீதிவலம் வரும் காட்சியை அழகுக்கெல்லாம் அழகு என்று கூடக் கூறலாம். அந்தக் காட்சியைக் காணும் வாய்ப்பினைப் பெற்ற எவரும் வைத்த கண் எடுக்க விரும்புவதுமில்லை. பார்த்தது போதுமென மனம் நிறைந்து திரும்புவதுமில்லை. அத்தகைய கவர்ச்சி உண்டு. அத்தேருக்கும் அத்தேரில் எழுந்தருளி வீதிவலம் வரும் ஆறுமுகப் பெருமானுக்கும்"**

என்று குறிப்பிடுவது "தேரின் கவர்திறன்" பற்றிய அனுபவ மதிப்பீடு என்றே கொள்ளத்தக்கதாகும்.

சுருங்கச் சொல்வதாயின் ஆகம மரபு பிறழ்ந்த நல்லூர் மடாலய முருகனுக்குரிய தேராகவும் சிற்ப மரபிற்கிணங்க இரு மரபுகளின் சங்கமமாகவும் இத்தேர் அமைவதுடன் கவர்திறன் மிக்க அழகிய லம்சம் நிறைந்ததாகவும் காணப்படுகிறது என்று கூறின் அதுமிகையில்லை.

### அடிக்குறிப்புக்கள்

01. யாழ்ப்பாணத்து சிற்பக் கலைஞர் வட்டத்தில் மட்டுமன்றி பொதுவாகவும் அறியப்பட்ட இவ் ஐதீகம், இரு ஆலயங்களைத் தொடர்புபடுத்தும் வகையிலும் கால நிர்ணயத்தைப் பொறுத்தளவிலும் முக்கியத்துவம் பெறுவதாகும். -ஆ-ர்-
02. கந்தையா குணராசா 'நல்லை நகர் நூல்' யாழ்ப்பாணம், 1989 பக். 52
03. பருப்பொருள் எச்சங்களின் வழிச் சென்று தேரின் அமைப்பினை உருவாக்கத்தக்க வகையிலுள்ள புராதனத் தேர், நல்லைக் குமரன் பழைய தேர் மட்டுமே என்பதும் யாழ்- தேர் கலை வரலாற்றிலேயே விதித்துரைக்கப்பட வேண்டியதாகும். -ஆ-ர்-
04. குல. சபாநாதன், 'இலங்கையின் புராதன சைவாலயங்கள் : நல்லூர் கந்தசுவாமி நல்லூர், 1971 பக்: 182
05. கி.லக்சுமண ஐயர் 'தேர் மகிமை' ஸ்ரீ துர்க்காதேவி சித்திரத் தேர்ச் சிறப்பு மலர், தெல்லிப்பழை, 1978 பக்: 72

# முருகன் திருவருளை நிலைநாட்டிக் கந்தசஷ்டி நோற்கும் யாழ்ப்பாணத்துப் பெண்களின் பக்தி மேம்பாடு

- வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

சைவக்கலாசாரம், பக்தியுணர்ச்சி, சிவனை வழிபடும் சைவாசார சீலம் என்பன இலக்கிய வரலாற்றின் படி காரைக் காலம்மையாரின் காலத்தி லிருந்தே கூர்மையடைகிறது. சிவனுணர்ச்சியும், சிவக்குடும்பத்தின் வழிபாடும் இன்றும் உலகளாவிய ரீதியிலே நிகழ்கின்றன. தத்துவ நோக்கு,வழிபாட்டு நோக்கு, சமய நோக்கு, சமுதாய நோக்கு, பண் பாட்டு நோக்கு, அநுபூதி நோக்கு எனப் பல்வேறு பட்ட அணுகுமுறைகளினூடே இந்துப் பண்பாட்டு வளர்ச்சி வரலாறுகள் இன்று ஆய்வு செய்யப்படு கின்றன. கலைமாண்பும், தெய்விக நடைமுறை களும் இன்று நுண்மையாகவே பரம்பல் செய்யப்படு கின்றன. மானுடவியலாளர்களும், சமூகவிய லறிஞர்களும் இன்று மிகவும் பெரிதாகவே சமுதா யத்தின் பெரும் பண்பாட்டம்சங்களை முன்மொழிந்து வருவதனை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இத்தகு சிந்தனை மரபில் யாழ்ப்பாணத்து நல்லூர் முருகன் திருவருளோடும் கந்தசஷ்டி விரதத்தோடும் இணைத்து யாழ்ப்பாணத்து பெண்களின் வைராக் கியமான பக்தி மேம்பாடு பற்றிச் சிந்திப்பது ஒரு புதுமையான முயற்சி என்றே நம்புகிறேன்.

உலகில் பெண்களின் வரலாறு இன்று பெரிதாகவே பேசப்பட்டு வருகிறது. பெண்ணிலை வாதிகள் கிளர்ந்தெழுந்து அறிவாற்றல் நிலையி லும், அடிமைத்தளையறுப்பு நிலையிலும், ஆண் வர்க்க மேலாதிக்க உணர்ச்சிக்கு எதிரான நிலையி லும் பெரும் மகத்தான போராட்டங்களையும் தீர்மா னங்களையும் ஆவேசக் கணைகளையும் தொடுத்து வரும் இன்றைய அறிவியற் சூழ்நிலையிலே இவை யனைத்துக்கும் எதிர் முரணானதோர் பார்வை வீச்சுடன் இக்கட்டுரையிலிடம் பெறும் சிந்தனைக் கருத்துக்கள் அமைவது தவிர்க்க இயலாததொன்றாகும்.

முருகனின் உற்பத்தி என்பது ஒன்று. அது கந்தபுராணத்தினூடே உலகு அறியும் தெய்வீகப் புராண தத்துவம். தாயுடன் சம்பந்தப்படாத யோனி வாய்ப் பிறவாத தனிமுதல் முருகன் சிவனுடைய நெற்றிக் கண்ணினூடே சரவணத்தில் உதித்தவன் முருகன். முருகனை அனைவரும் விரும்புவர். குழந்தை, குமரன், தேவசேனாதிபதி, தண்டாயுத பாணி, பழநியப்பன் என்னும் தன்மைகளைக் காணலாம். ஆனால் இன்றைய பெண்களின் 'வாழ்முதல்' எனத் திகழ்பவன் முருகனே. அதுவும் யாழ்ப்பாணத்துப் பெண்களின் கனவிலும், நனவிலும் என்றும் எப்பொழுதும், தூய நினைப்புடன் பரவப் படுபவன் முருகக்கடவுள் என்பது முற்றிலும் உண்மை. 'முருகன்' என்னும் 'ஊற்று' அறிவறியும் நாள் முதலாகவே யாழ்ப்பாணத்துப் பெண்களி டத்துக் குடிகொண்டு விடுகிறது. பண்பாடு, வழிபாடு, சிந்தனை, வாழ்வு, மறுமலர்ச்சி, கலாசாரம், பக்தி, விருந்தோம்பல், கலை, இலக்கியம், மருத்துவம், அநுட்டானம், விரதம் என்று அனைத்திலும் யாழ்ப் பாணத்துப் பெண்களின் ஈடுபாடும், விருப்பும் முருக னுடன் தொடர்புறுவதாகவே அமையும். இப்பண்பாட் டின் பேறுகளே இன்று உலகையே வியக்கவைத் துள்ளன. தெய்வழிபாட்டின் மேன்மை என்பது அத்யந்த வைராக்ய பக்தி நிலையிலேயே பெரிதும் உணரப்படும். அந்த வகையிலே யாழ்ப்பாணத்துப் பெண்களின் கந்தசஷ்டி விரத அனுட்டானம் - நோன்பிருத்தல் இங்கு பிரதானமானதொன்றாகிறது. தொல்சீர்க் கலாசார மரபின் தொடர்ச்சி இன்றும் முருகன் நினைப்புடன் பேணப்படுவது காணத் தக்கது. யாழ்ப்பாணத்துப் பெண்களிடத்து நிலவும் மிகப்பெரிய பண்பாடு கந்தசஷ்டி விரதம் இருத்தலாகும். 6 தினங்கள் முருகப் பெருமானை எண்ணி விரதமனுட்டித்துப் பயன்பெறும் பெருவழக்

காறு இன்றும் உள்ளது. தனிப்பெரும் தன்மையுடன் 'உலகம் உய்ய' அவதரித்தவன் முருகன். அப்பெருமானையே எப்பொழுதும் மனத்திருத்தித் துதித்து வழிபட்டு வாழும் மனத்தினராய் இருப்பவர்களே யாழ்ப்பாணத்துப் பெண்கள். இவ்வாறு குறிப்பிட்டுரைக்கும்பொழுது பிரதேசத்துக்கெனக் குறுக்காது, 'பெண்கள் உலகெங்கும் பரந்து வாழும் நோக்குநிலை' யிலேயே சிந்திப்பது அவசியமாகும். உணர்வு நலன், விரதத்தின் பயன், மன எண்ணங்களின் செயல் வேகம் என்பன இந்நோக்கிலே அதிமுதன்மை பெறுகின்ற தத்துவார்த்த நோக்கிலே பார்க்குமிடத்து 'குடும்பத்தின் நல்வாழ்வுக்குப் பெண்களே ஆன்மீக நாட்டத்துடன் வழிபடல் வேண்டும்' என்னும் சைவசித்தாந்த கொள்கை இன்றும் யாழ்ப்பாணத்துப் பெண்களிடத்தே வேரூன்றிக் கிடக்கும் அம்சம் என்பது சமயத்தின்பாற் பண்பாட்டு நோக்கிலே, சமய ஞானத்துடன் கூடிய கல்வி மரபு பெண்களின் நரம்புத்துடிப்பில் கருவூன்ற கலாசாரமாகவே மரபார்ந்த நிலையில் பேணப்படுவதும் நோக்கற்பாலது. சமூகவியலடிப்படையில் திட சிந்தனையும், கட்டுறுதியும், மேன்மையும் ஆன்மீக வளர்ச்சிக்கு சமுதாயத்தைச் சிருட்டிக்கும் பெரு நோக்கில் தொழிற்படும் மேன்மை கருதத்தக்கது. 'அடிமைத்தனம்' பற்றிய எண்ணக்கரு இன்று படித்த, கல்வியறிவு கொண்ட பெண்களிடத்தே தளம்பல் நிலையிலேயே நோக்கப்படுகிறது. ஆராய்ச்சி வேகமும், தன் முனைப்பும், அதிகாரமும், அரசியல் முன்னேற்றமும் இவர்களைப் பாதித்துள்ளமையையும் இவ்விடத்திற் சுட்டுவது அவசியம். ஆணின ஆதிக்கத்துக்கு எதிரான கோஷமும், சொல் வேகமும் சமுதாயத்தில் பல்வேறுபட்ட குழப்பங்களை உண்டு பண்ணி விட்டன. இச் சூழ்நிலையிலேயே யாழ்ப்பாணத்துப் பெண்களின் மன எண்ணத்தில் இன்றும் ஆழமான வாழ்வுச் சுவையுடன் காணப்படும் கந்தசஷ்டி நோற்கு மனநலன் துணிந்து நோக்கிப் பாராட்டி வாழ்த்தத்தக்கது.

மனம் பொறிவழி போகாது வாழ்வதற்கு உறுதுணையாகவமைவது கந்தசஷ்டி என்பது யாழ்ப்பாணத்துப் பெண்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை. அறிவுண்டான காலம் முதலாகவே கந்தசஷ்டி விரதம் அனுட்டிக்கும் வழக்கம் மிகத் தொன்மையானது. உயிர்வர்க்கங்களின் பிணைப்பு, ஈர்ப்பு, மனமொன்றிப்பு, கவர்ச்சி, குடும்பம், மகப்பேறு, இல்லறம் அனைத்தையும் நல்க வல்லது 'கந்தசஷ்டி' எனும் கொள்கை இன்றும் வலுவாகவுள்ளமையை யாழ்ப்பாணத்துப் பெண்களின் விரதமனுட்டான நடைமுறைகளிலிருந்து அறியலாம்.

'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்பது முதுமொழி. யாழ்ப்பாணத்துப் பெண்களின் 'சஷ்டிப்பக்தி' ஆன்மீக மயமானது. விரமிருந்து திருமணம் முடித்துக் குழந்தைப் பேறு எய்துதல் ஒரு நீடித்த நடைமுறை. இப்பண்பு ஏனைய மதத்துப் பெண்களிடத்தே இருப்பதாகக் குறிப்பேதும் இல்லை. பெரும்பாலான உலக மதங்களின் கொள்கை 'துறவு' பேணுவதும் 'தவம்' மேற்கொள்வதும் போதிப்பதும் என்றதுடன் உள்ளன. 'மண்ணில் நல்லவண்ணம் வாழப் பெண்ணினல்லாளொடும் இருந்த கடவுள் சிவன்' ஒருவனேயாம். ஆகவே சிவன், சிலை தொடர்பே மகோன்னதமானது என்பதனையும் காணத் தவறக்கூடாது.

'சற்புத்திரப்பேறு' ஏன்? என்ற வினா எழுவது தவிர்க்கவியலாததொன்றாகும். 'அந்தணர் வேள்வியும், மனக்கட்டுப்பாடும் சாதனைகள்' செய்யும் என்பதே வேதவழக்காறு. புராண, இதிகாச, திருமுறை வழக்காறு. எனவே சாதனைகளை ஈட்டுவதற்குத் 'தவப்பேறு' அவசியம். அதன் வழிதான் பெரும் நிறுவுகைகள் நிகழமுடியும் என்னும் மரபார்ந்த நம்பிக்கை இன்றும் யாழ்ப்பாணத்துப் பெண்களிடமுண்டு. 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' என்னும் 'விதி' இன்றும் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு மரபில் உண்டு.

'குடும்பம்' என்னும் அலகின் 'ஒழுங்கு' இன்றும் கந்தசஷ்டியினாலேயே பேணப்படுகிறது. எதிரும் புதிருமான கருத்துக்களும், கொள்கைகளும், நாத்திகவாதமும், ஆயுதக் கலாசாரமும் எத்துணை மேலோங்கினாலும் நீண்டதொரு ஆன்மீக வரலாறு கொண்ட விரதமாகக் 'கந்தசஷ்டி விரதம்' அமைகின்றமையை அனுமதித்தேயாகவேண்டும்.

கந்தனெனும் முருகனின் தத்துவாக்கம் உலகிலே மிகவும் அதிசயமும் அற்புதமும் வாய்ந்தது. 'நடை, உடை, பாவனை என்பார்கள் யாழ்ப்பாணத்துப் பெண்களின் மன எண்ணங்களும், சொல் வேகமும் இப்பின்னணியுடன் இணைத்துப் பொருத்தி நோக்கி இன்புறத்தக்கது. 'அன்பர் பணி

செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்ப் நிலை தானே வந்தெய்தும் பராபரமே' என்பார் தாயுமானவர். மணிவாசகர் 'எங்கெங்கை நின் அன்பர் அல்லார் தோள்சேரற்க' என்று தானே பாடியுள்ளார். அதனாலே 'பெண்மை நலன்' என்றும் என்றென்றும் 'அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்த சொன்னபரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம் இன்னவகையேல் எமக்கெங்கோன் நல்குதியே என்ன குறையுமிலோம் ஏலோர் எம்பாவாய்' என்ற திருவெம்பாவைப் பெண்களின் குறிக்கோளாகவே நிறைவுறுகிறது. 'என்ன குறையு மிலோம்' என்ற திண்ணம் ஏற்படுவதற்கு யாழ்ப்பாணத்துப் பெண்கள் கந்தசஷ்டி நோன்பிருப்பர் என்பது தான் முடிவு.

இன்னும் இந்துப் பண்பாட்டுத் திருமணத் தொடர்புகளும், சடங்குகளும், வழமைகளும் இத் தொடர்பில் பெரிதும் ஆழமாகவே ஆராயத்தக்கன. ஒருவனுக்கு ஒருத்தி எனும் வாழ்க்கை முறைமை கந்தசஷ்டியுடன் இணைந்தேயுள்ளது. முருகப் பெருமானின் 'இருசக்திகள்' என்னும் தத்துவம் திருமண வழக்காறேயன்றிப் பெண்களிருவரை முருகன் கொண்டுள்ளான் என்ற மானுடச் சிற்றின்ப நோக்கல்ல. திருமணத்தின் இருவகை கற்புமணம், களவு மணம் இவையே முருகனின் வள்ளி, தெய்வானைத் தத்துவம். இந்துமதக் கடவுளர்களெவையும் பெண் ணின்பத்தை விரும்புவனவல்லவே என்ற கருத்து வலியுறுத்தப்படவேண்டும். மாறாத அளவற்ற கரு ணையினையுடைய சிவன் ஆன்மா வர்க்கங்கள னைத்தும் போகத்தையனுபவித்து வாழவேண் டும் என்ற பரங் கருணையினாலேயே உமையோடும் விடையேறி அருளுகிறான் எனும் 'பிரபஞ்ச அனுக் கிரகத் தன்மையினை மிகவுயர் கடவுள் கொள்கை யாகக் கொண்ட தத்துவம் 'சைவ சித்தாந்தத் தத்துவம் என்பதனை அழுத்தி வலியுறுத்தல் நங்கடன். 'மடவாந்தன் னோடும் உடனாய் வரும் பரமன்', 'ஏழை பங்காளன்', 'நங்கடம்பனைப் பெற்ற வள் பங்கினன்', 'உமை பாதியோர் கூறுடையான் அர்த்தநாரீஸ்வரர்.

ஆகவே, முருகன் நினைப்புடன் ஆண்டு தோறும் கந்தசஷ்டி விரதமனுஷ்டிக்கும் யாழ்ப்பா ணத்துப் பெண்மையின் பெருமையினை எண்ணி வியத்தல் தகும். தவமும் பணிவும் உண்டாவ தற்குக் கந்தசஷ்டி காலாகும்.

## நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
## பார்த்திப வருஷம் மஹோற்சவ விஷேட தினங்கள் – 2005

| | | |
|---|---|---|
| 10.08.2005 | கொடியேற்றம் | 1ம் திருவிழா |
| 19.08.2005 | மஞ்சம் | 10ம் திருவிழா |
| 26.08.2005 | கார்த்திகை | 17ம் திருவிழா |
| 29.08.2005 | சந்தானகோபாலர் | 20ம் திருவிழா |
| 29.08.2005 | கைலாசவாகனம் | 20ம் திருவிழா |
| 30.08.2005 | கஜவல்லி மஹாவல்லி | 21ம் திருவிழா |
| 30.08.2005 | வேல்விமானம் | 21ம் திருவிழா |
| 31.08.2005 | தெண்டாயுதபாணி | 22ம் திருவிழா |
| 31.08.2005 | ஒருமுகத்திருவிழா | 22ம் திருவிழா |
| 01.09.2005 | சப்பறம் | 23ம் திருவிழா |
| 02.09.2005 | தேர் | 24ம் திருவிழா |
| 03.09.2005 | தீர்த்தம் | 25ம் திருவிழா |
| 04.09.2005 | பூங்காவனம் | 26ம் திருவிழா |
| 05.09.2005 | வைரவர் உற்சவம் | 27ம் திருவிழா |

# இந்திய நாட்டுத் தமிழகக் கொடைக் கானலில் சேர் பொன் இராமநாதன் அமைத்த குறிஞ்சி ஆண்டவர் கோயில்

- திரு ப. கணேசலிங்கம்

கி.பி பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முதற்காலப் பகுதியிலும் இலங்கையின் அரசியல், சட்ட, சமூக, சமய பண்பாட்டு வரலாற்றிலே மிக் முக்கியமான முத்திரையினைப் பதித்தவர்களில் சேர்.பொன்.இராமநாதன் (1851-1930) முதலிடம் வகிக்கிறார்.

இலங்கை நாட்டவர்கள் காலத்திற்குக் காலம் தத்தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவ தற்காக கடல் மார்க்கமாகத் தமிழகத்திற்கு வந்து, இங்குள்ள திருத்தலங்கள் தோறும் தலயாத்திரை மேற்கொண்டு திரும்புவது மரபாகும். இம்மரபுக் கிணங்க இராமநாதனின் தந்தையார் அ.பொன்ன ம்பலமுதலியார் 1850ஆம் ஆண்டு மே மாதத்திலே தமது குடும்பத்தினரோடு தென்னிந்தியாவுக்கு தல யாத்திரை மேற்கொண்டு இராமேசுவரத் திருத்தலத் தினைத் தரிசனம் செய்தார். இராமேசுவரனின் அருள் வேண்டிப் பெற்ற குழந்தை என்ற காரணத்தால் 16.04.1851இல் பிறந்த குழந்தைக்கு இராமநாதன் என்ற நாமத்தைச் சூட்டினார். எனத் தெரிகின்றது.

சைவ சமயப் பண்பாட்டு மரபினை நாவலரின் காலத்திலும் இவருக்குப் பின்னரும் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும், உலகளாவிய ரீதியிலும் போற்றி வளர்ப்பதில் முன்னின்று உழைத்த பெருமகனாக சேர்.பொன்.இராமநாதன் விளங்குகின்றார். இராம நாதனும், இவரது தமையனாரான குமாரசுவாமி (1849-1906) ஆகிய இருவரும் நீர்க்கப்பலேறிச் சென்று தமிழ் நாட்டுச் சென்னையிலே தமது பட்டப் படிப்பை மேற்கொண்டார்கள். உலக அனுபவமோ, உறவினர் நண்பர் கூட்டமோ இன்றிக் கூண்டுக் கிளிகளாய் வளர்ந்த சிறுவர்கள் இருவர், தமது எதிர்கால நல்வாழ்வை நோக்கிப் பரந்த உலகிலே அடியெடுத்து வைத்த அற்புதமான நிகழ்ச்சி இது. இந்த நிகழ்ச்சி இளம் இராமநாதரின் உள்ளத்திலே தன்னம்பிக்கையையும், பொறுப்புணர்ச்சியையும் ஆழமாக வேரூன்றிவிட்டது.

தமிழறிஞரும் நீதிபதியும் பண்டைய நூல்களின் பதிப்பாசிரியருமாகிய ராவ்பகதூர் சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்களின் மேற்பார்வையிலே சகோதரர் இருவரது சென்னை வாசமும் கல்வியும் நன்முறை யிலே நடந்து வந்தன.[2] இராமநாதன் சென்னை, இராசதானிக் கல்லூரியிற் கல்வி கற்ற காலத்திலே கல்லூரிக் கல்வியிலும், அதிகமாகத் தமது பொது அறிவினை விருத்தி செய்து கொண்டார். ஆங்கில நவீனங்கள் வாசிப்பிலே அவரின் பெரும்பொழுது கழிந்தது. உடற்பயிற்சி நிலையம் ஒன்றிலே உறுப் பினராகித் தம் உடலை வலிவும் வனப்பும் பொருந் தியதாய் அவர் ஆக்கிக் கொண்டார்.

சென்னை வாழ்க்கையால், அவரின் ஆன்மீக சிந்தனைகளும் நெறிப்படலாயின. தமிழரின் சமய, மொழிப் பண்பாட்டு நெறிகளை நன்கு அறிந்து கொள்ளவும், பிற்காலத்திலே அவற்றினை அமெரிக்க மக்களுக்குத் தெளிவுற எடுத்துரைக்கவும் சென்னை வாழ்க்கையே அவருக்கு பெரிதும் உதவிற்றென லாம். குறிப்பாக "தஞ்சாவூரைச் சேர்ந்த அருட்பரா னந்தரின் (இலக்கணம் இராமசாமிப் பிள்ளையின் தொடர்பினால் இவரின் சமய வாழ்விலே புதிய திருப்பம் ஏற்பட்டதாக அறிய முடிகின்றது.[3] இராம நாதனின் ஆளுமையையும் அறிவாற்றல்களையும் உருவாக்கியவர்களுட் குறிப்பிடத் தகுந்தோர் நால்வராவர். இராணி கலைக்கழகத்தின் அதிபராய் விளங்கிய கலாநிதி பாக்கு றொப்றபோக், ராவ்பக

தூர் சி.வை.தாமோதரம்பிள்ளை, சேர். முத்துக்குமார சுவாமி, சேர். ரிச்சாட் மோகன் என்பவர்களே அச்சான்றோர்கள்.[4]

சேர்பொன்.இராமநாதன் அவர்கள் சைவப் பண்பாட்டினை இலங்கையிலும் தமிழகத்திலும் பேணி வளர்ப்பதில் பெரும் ஆர்வமுடையவராக விளங்கினார். சேர்பொன்.இராமநாதன் தமிழகத்தில் ஆற்றிய சைவப்பணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். அவையாவன: 1) குறிஞ்சி ஆண்டவருக்கு கொடைக்கானலில் கோயில் ஸ்தாபித்தமை 2)சைவ சித்தாந்த மாநாட்டுக்குத் தலைமை வகித்தமை 3) இந்திய நவீன சீர்திருத்தச் சிந்தனையாளர்களுக்கு இணையாக சைவ சமயப்பணிகள் ஆற்றியமை 4) தமிழகக் கோயில்களில் ஏற்பட்ட நிர்வாகச் சட்டப்பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தமை 5) இவரது சைவசமய, தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதப் புலமைகள் இந்திய நாட்டு அறிஞர்களால் பாராட்டப்படல் 6) மயிலாப்பூர் திருவள்ளுவர் மகா சபைத் தலைவராகக் கடமை வகித்தல் ஆகிய இன்னோரன்ன பணிகளைக் குறிப்பிடலாம்.

சேர்பொன்.இராமநாதன் அவர்களைக் கவர்ந்த இடங்களுள் தமிழ் நாட்டுத் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் எனும் ஊரும் ஒன்றாகும். திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள ஊர்களாக, பழனி, கொடைக்கானல், நிலக்கோட்டை, ஒட்டன் சத்திரம், வேடசந்தூர், ஆத்தூர், சாணார்பட்டி, குஜிலியாம்பரம், தொப்பம்பட்டி, நத்தம், ரெட்டிசத்திரம், வத்தலகுண்டு, வடமதுரை ஆகியன அமைந்து விளங்குகின்றன. சென்னையில் இருந்து 409 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது கொடைக்கானல். இந்தியாவின் மிக அழகான கோடை வாழிடங்களில் மிக முக்கியமானது கொடைக்கானல். மேற்கு மலைத் தொடரில் 7 ஆயிரம் அடி உயரத்தில் கொடைக்கானல் உள்ளது. ஆண்டுதோறும் ஏராளமான சுற்றுலாபயணிகள் இங்கு வந்து செல்கின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்திலே இரண்டே இரண்டு முருகவழிபாட்டு ஸ்தலங்கள் அமைந்துள்ளன. முருகனின் ஆறுபடை வீட்டுத் தலங்களுள் ஒன்றான பழனியிலமைந்துள்ள ஸ்ரீதண்டாயுதபாணி கோயில், மற்றது கொடைக்கானலில் அமைந்துள்ள குறிஞ்சி ஆண்டவர் கோயில் என்பனவாகும்.

சேர்பொன்.இராமநாதன் அவர்கள் தமிழகத்தில் ஆற்றிய பணிகளுள் முக்கியமானது, குறிஞ்சி நிலக்கடவுளாகிய முருகப் பெருமானுக்குக் கொடைக் கானலில் கோயில் அமைத்தமையாகும். இப்பணியை இனிது நிறைவேற்ற இவரது இரண்டாவது மனைவியான லீலாவதி இராமநாதன் பக்க பலமாக இருந்தார் என்பதை அறிய முடிகின்றது.

சேர்பொன்.இராமநாதன் அவர்கள் தமிழ் நாடெங்கும் தலயாத்திரை செய்யும் போதெல்லாம் சில நாட்கள் கொடைக்கானலில் தங்கியிருந்து அமைதி காணல் வழக்கமாயிருந்தது. அங்கே இவர், தியானத்திலிருப்பதில் பெருமளவில் மனோலயம் உண்டென்று உணர்ந்தார். மனதுக்கினிய மலை நாடாய அங்கே மலைக்கும் மலை நாட்டுக்கும் உரிய தெய்வமாய் முருகப் பெருமானுக்கு ஓரழகிய ஆலயம் அமைத்தல் வேண்டும் என்று உறுதியாக விரும்பினார். கொடைக்கானலில் இருந்தவாறே பழநியை நோக்கி வணங்கவும் வாய்ப்பு உள்ளது என்று கண்டார். எனவே அக்காலத்திலேயே திருக்கோயில் எடுப்பதற்கு வசதியான ஒரு நிலப்பரப்பை விலைக்குப் பெற்றிருந்தார்.[5]

சேர்பொன்.இராமநாதன் சகலாகம பண்டிதர். இவர் சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டிடக்கலை, மருத்துவக்கலை, வானநூற்கலை, இசைக்கலை, நாடகக் கலை, நகரமைப்புக் கலை, சமையற்கலை, வணிகக்கலை, ஆட்சிக்கலை என வரும் பல கலையாகமங்களில் நல்ல பயிற்சியுள்ளவர். இயற்கையழகை அனுபவித்து இதயம் பூரிப்பவர். இத்தகைய புகழ் பூத்த குறிஞ்சி நிலத்திலே குறிஞ்சி நிலத் தெய்வமாய செவ்வேளுக்குத், திருக்கோயிலமைக்க எண்ணியிருந்த இராமநாதன் அவர்களின் கருத்தை நிறைவு செய்தவர் அவர்தம் இரண்டாம் மனைவியாராய சீமாட்டி லீலாவதி அம்மையாராவார்.[6]

சைவக் கோயிலில்லாத அந்தப் பகுதியில் அம்மையார் தமது சொந்தப் பணங்கொண்டு அற்புதமான கோயிலைக் கட்டிக் குறிஞ்சியாண்டவர் கோயில் எனப் பெயரிட்டுக் குழந்தை வேலாயுத சுவாமியையும் அங்கே எழுந்தருளச் செய்துள்ளார். அன்றித் திருக்கோயில் பரிபாலனத்துக்கு வேண்டிய நிவந்தங்களையும் தாராளமாக அளித்துள்ளார். திருக்கோயிலைச் சேர்ந்த நந்தவனத்திலே நல்ல

இனத்து குறிஞ்சிச் செடியையும் உண்டாக்கியுள்ளார். நான்காயிரம் சதுர அடி நிலப்பரப்பில் அமைந்த இத்திருக்கோயிலை பழநியாண்டவரின் சபையார் 1971 ஆம் ஆண்டில் கையேற்று மேலும் திருத்தங்கள் செய்துள்ளார்கள். அங்கே 1981 ஆம் ஆண்டில் குறிஞ்சி பூப்பது கண்டு குதூகலமடைந்துள்ளார்கள்.[7]

குறிஞ்சியாண்டவர் கோயிலில் விநாயகருக்கும் நவக் கிரகங்களுக்கும், வள்ளி தேவயானை சமேத சுப்பிரமணியப் பெருமானுக்கும் கோட்டங்கள் அமைந்துள்ளன. அங்கே நாள்தோறும் காலை ஏழுமணி தொடக்கம் பன்னிரண்டு மணி வரையும் பின்னர் மாலை ஐந்துமணி தொடக்கம் ஏழுமணி வரையும் பூசைகள் நடைபெறுகின்றன. 06.05.1936 ஆம் நாளிலே லீலாவதி அம்மையார் கும்பாபிடேகம் செய்தபோது பொறிக்கப்பெற்ற கல்வெட்டு, இருபதாம் நூற்றாண்டு சிலாசனத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இதனைப் பாடிப் பொறித்தவர் இவரின் மருகர் சு. நடேசபிள்ளை B.A., B.L., FRES, M.SC. அவர்களாவர்.

“பொன்னும் மணியும் பொலிவுறு இலங்கை
மன்னு ஈழமண்டலத் தமிழ்க் குலம்
செய்த தவத்தில் தோன்றிய செம்மல்
பூவுல கெங்கும் பொன்றாப் பெரும்புகழ்
மேவிய சீர்த்தி மேலோன் இராம
நாதன் என்னும் ஞானச் செல்வன்
பழுத்த அன்பில் பழநிக் குன்றினை
வழுத்திய தவத்தில் வழிபட் டருள்பெறக்
கருதி அன்னோன் காதல் தேவி
திருவுடை ஆங்கிலக் குலத்திடை
யுதித்துப்
பழவினைப் பண்பால் பரசிவ நெறிபுகும்,
விழுமிய லீலா வதியெனும் விமலை
விண்ணனை யாரும் வியக்கும்
வியன்மலை
தன்னின் மேகம் தவழும் சோலை
கவின்பெறு காட்சிக் கொடைக் கானலில்
சிவனருள் குமரன் சின்மய குருபரன்
இகத்தும் பரத்தும் எமக்கோ
ருயிர்த்துணை
அகத்தும் புறத்தும் இலகுசெஞ் சோதி
அன்பர்கட் கிரங்கும் அறுமுகத் தெய்வம்
குன்றுதோ றாடும் குறிஞ்சி ஆண்டவன்
கோயில் கொண்டருள குன்றெல்லாம்
குறிஞ்சி
பூத்துப் பிரசவம் பொங்கிய ஆண்டினில்
அத்தி வாரம் அடிப்படை கோலி
சித்திரச் சிற்பம் சிறந்து பிறங்க
செப்பும் கலிஐ யாயிரத் தொருசேர்
முப்பத் தெட்டாண் டாகிய தாதுவில்
சித்திரா பவுரணை சீர்திகழ் நாளில்
இத்திரு ஆலயம் அமைத்தனள்
சக்திதுன் பாதம் சந்ததம் அருள்கவே.”[8]

சுருங்கக் கூறின் சேர்பொன்.இராமநாதன் அவர்களது சைவப்பணிகள் உலகெங்கும் பரவியிருந்தது. குறிப்பாக இலங்கையிலும் தமிழகத்திலும் மிகச் சிறப்படைந்திருந்தது. இப்பெரியாரைச் சைவ உலகுக்கு அறிமுகம் செய்த வகையில் தமிழகத்திற்கும் பெரும் பங்குண்டு. தமிழகத்தின் சைவ சமய வளர்ச்சியிலும் அதிக அக்கறை கொண்டு இராமநாதன் உழைத்தவர். இவரது சைவப் பணிக்கெல்லாம் முன்னோடியாக இருந்தவர்கள் இவரது பெற்றோர்களும் இவரது குடும்பச் சூழலும், நாவலர் பெருமானின் ஆசியும் வழிகாட்டலுமே என்றால் அது மிகையாகாது.

### அடிக்குறிப்புக்கள்

1. சொக்கன், **சேர்பொன்னம்பலம்** இராமநாதன், **வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்**, பரமேஸ்வரக் கல்லூரி இயக்குநர் சபை வெளியீடு, யாழ்ப்பாணம், 1976, பக் - 13.
2. சொக்கன், சேர் பொன்னம்பலம் இராமநாதன் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், 1976, பக் - 17.
3. Vythilingam - ***The Life of Sir Pon. Ramanathan***, Vol-1, Chunnakam, 1971, பக் 328 - 330
4. சொக்கன், **சேர் பொன்னம்பலம்** இராமநாதன் **வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்**, 1976, பக்- 18.
5. குலரத்தினம் க.சி. **வள்ளல் கௌரவ.சேர் பொன்.இராமநாதன்**, யாழ்ப்பாணம், (கையெழுத்துப் பிரதிகள் அச்சிடப்படவில்லை)
6. குலரத்தினம். க.சி, மே. கூ. நூல் (பக்கம் 225)
7. குலரத்தினம் க.சி, மே. கூ நூல் (பக்கம்225)
8. குலரத்தினம் க.சி. மே. கூ நூல் (பக்கம்226).

# நல்லூர்க் கந்தசுவாமி உற்சவங்கள்

– திரு வை. ஜெகதீஸ்வரசர்மா

யாழ்ப்பாணத்தில் தமிழ் மன்னர்களினது உறை விடமாகவும், பழம் பெருமை வாய்ந்ததும், யாழ்ப் பாணத்தின் தலைநகருமாகிய நல்லூரில் கோயில் கொண்டருளியிருக்கும் கந்தனே நல்லூர்க் கந்தன்.

வந்த வினையையும், வருகின்ற வினையையும் தீர்க்கும் நல்லைக்கந்தன் தம் அடியார்கள் வேண்டு வதை வேண்டியவாறே ஈன்றருளும் இயல்புடைய வனாகையால் கந்தனை நாடி வரும் அடியார்கள் எண்ணிலடங்கா.

நல்லூர்க்கந்தசுவாமி கோவில் தற்பொழுது இரகுநாத மாப்பாண முதலியாரின் வழித் தோன்ற லாகிய குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் நிர்வா கத்தின் கீழ் சிறப்புடன் தினசரிஆறுகால நேரப்பூசை நடைபெற்று வருகின்றது. அதிகாலை 5 மணிக்கு உதயகாலப் பூசையும், பகல் 10 மணிக்கு பகற் பூசையும், பகல் 12 மணிக்கு உச்சிக்காலப் பூசை யும், மாலை 4 மணிக்கு சாயரட்சைப் பூசையும், மாலை 4.30 மணிக்கு இரண்டாம் காலப் பூசையும், மாலை 5.00 மணிக்கு அர்த்தசாமப் பூசையும் நடை பெறுகின்றது. திருவிழாக் காலங்களில் பூசை களில் மாற்றங்கள் செய்யப்படும்.

இக்கோவிலின் வருடாந்த மகோற்சவம் ஆவணி மாத அமாவாசைக்குத் தீர்த்தம் நடைபெறக் கூடியதாக இருபத்தியாறு தினங்கள் நடைபெறுகின் றது. 1-ந் திருவிழா கொடியேற்றமாகும். கொடியேற்றம் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். முற்பகல் 8.00 மணிக்கு பூசையும், அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபபூசையும் நடைபெறும். பின்னர் முருகப்பெருமானும் வள்ளியம்மையும் தெய்வயானை அம்மன் சகிதமாக தம்ப (கொடிமரம்) மண்டபத்தை அடைந்து அங்கு கொடியேற்றத்துக் கான கிரிகைகள் நடை பெற்று முற்பகல் 10.00 கொடியேற்றம் நடைபெறும்.

(பஞ்சாங்க நேரத்தின் படி)

### கொடித்திரை வழங்கல்

கந்தனின் திருவிழாவிற்கு கொடித்திரை (கொடிச்சீலை) வழங்கும் அரும்பெரும் பேற்றைப் பெற்றவர்கள் திருநெல்வேலியைச் சார்ந்த செங்குந்த மரபினர். இவர்கள் தொன்றுதொட்டுக் கிட்டத்தட்ட ஏழு, எட்டுத் தலைமுறையாக இத்தொண்டைச் செய்து வருகின்றனர். இதற்கென அக்காலத்தில் கொடித் தேர் மடமும், தேரும் திரு. வைரவநாதர் வல்லிபுரச்சாமியாரால் நிர்மாணிக்கப்பட்டது. இன்றைக் கும் இம்மடத்திலிருந்தே கொடித் திரை தேரில் கொண்டு செல்லப்படுகின்றது. அன்றைய காலப் பழைய தேர் பழுதடையவே சாமியாரின் வழித் தோன்றலாகிய சி.கணபதிப்பிள்ளை என்பவரின் ஊக்கத்தாலும், அண்டைய அடியார்களின் உதவி யாலும் புதிய சித்திரத்தேர் ஆக்கப்பட்டு, தற் பொழுது கொடித்திரை அதன் மூலமாக வழங்கப் படுகின்றது. தற்பொழுது இந்தச் செயற்கரிய திருத் தொண்டை கணபதிப் பிள்ளை குருநாதன் அவர்கள் செய்து வருகின்றார்.

கொடியேற்றத்திற்கு முதலாம் நாள் மாலை கொடித்திரை தேர் மடத்திற்கு மேளவாத்திய சகிதமாக எடுத்துக் கொண்டு வரப்படும். மடத்தில் கோவில் கொண்டருளியிருக்கும் முருகனுக்கும், கொடித்திரைக்கும் விசேட பூசைகள் நடைபெற்று, கொடித்திரை தேரில் புடைசூழ நல்லூர்க்கந்தசுவாமி கோவிலுக்குக் கொண்டு செல்லப்படும். அங்கு பிரதம குருக்களிடம் கையளிக்கப்படும்.

### கொடியேற்றம்

பகல் 8.00 மணிக்கு பூசையும், அதனைத் தொடர்ந்து வசந்தமண்டபப் பூசையும் நடைபெறும். வசந்தமண்டபப் பூசை முடியவே முருகப்பெருமான் வெள்ளி மயில் வாகனத்திலும் வள்ளி தெய் வயானை வெள்ளி அன்ன வாகனத்திலும் எழுந்

தருளி ஸ்தம்ப மண்டபத்தையடைந்து அங்கு அடியார்களுக்குக் காட்சி அளித்துக் கொண்டிருப்பார். அங்கு கோவில் காவலரவர்கள் அழைக்கப்பட்டுச் சங்கற்பம் செய்யப்படும். பின்னர் வேத சிவாகம முறைப்படி பிரதான குருக்கள் ஆற்ற வேண்டிய கிரிகைகள், பூசைகள் ஆற்றப்பட்டு பக்தர்களின் அரோகரா, முருகா என்ற பக்தி கோஷத்துடனும், மங்கள வாத்தியங்களின் ஒலியுடனும், வேத ஆசீர்வாதங்களுடனும் முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்ற விழா முருகப்பெருமானுக்கு நடைபெறும்.

## மஞ்சம் 10ம் திருவிழா

10ஆம் திருவிழாவாகிய மஞ்சத் திருவிழா இரவு 6.00 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் வள்ளி, தெய்வானை சமேதரராக முத்துக்குமாரசுவாமிப் பெருமான் மஞ்சத்தில் எழுந்தருளி வீதிவலம் வருவார். பகல் சிறிய கைலாச வாகனத்தில் முருகன் உள்வீதி வலம் வருவான்.

## கார்த்திகைத் திருவிழா

கார்த்திகைத் திருவிழா 17ஆம் திருவிழாவாக அல்லது பதினெட்டாம் திருவிழாவாக வரும். அதாவது கார்த்திகை நட்சத்திரத் தினத்தில் நடைபெறும் உற்சவமாகும். இரவு 7.00 மணியளவில் நடைபெறும் உற்சவ மாகிய இத்தினத்தில் முத்துச் சப்பறத்தில் (முக்கூட்டுச் சப்பறத்தில்) வள்ளி, தெய்வானை சமேதரராக முத்துக்குமார சுவாமிப் பெருமான் எழுந்தருளி காட்சியளித்துக் கொண்டு வீதி வலம் வருவார்.

## கைலாச வாகனம்

கார்த்திகைத் திருவிழாவிற்கும், தெண்டாயுதபாணித் திருவிழாவிற்கும் இடையில் நடைபெறும் திருவிழா கைலாசவாகனத் திருவிழாவாகும். கைலாசவாகனம், இராவணன் கைலாச மலையைத் தோளினாலே தூக்கிய வண்ணம் அமைக்கப்பட்டது. பத்துத் தலைகளுடன் இராவணன் இருக்கும் காட்சியும், முனிவர்கள், ரிஷிகள் முதலானோரின் உருவங்களும் கைலாச வாகனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கைலாச வாகனத்தில் முருகன்(வேல்) வள்ளி, தெய்வானை சமேதரராக வீதி வலம் வருவார்.

## மாம்பழத் திருவிழா

மாம்பழத் திருவிழா 22ம் திருவிழாவாகும். காலை 7.00 மணிக்கு நடைபெறும் விழாவாகும். தெண்டாயுதபாணிப் பெருமான் தங்கமயில் வாகனத்திலும், விநாயகப் பெருமான் வெள்ளி மூஷிக (எலி) வாகனத்திலும் எழுந்தருளி வலம் வருவார்கள். வீது வலம் வந்து கோவில் வாசலை அடைந்ததும் விநாயகப் பெருமானின் திருக்கரத்தில் மாம்பழம் கொடுக்கப்படும். தெண்டாயுதபாணிப் பெருமான் காவியுடை, ருத்திராட்சம் அணிந்து ஆண்டியாகக் காட்சியளிப்பார். மாங்கனி பெற்ற விநாயகப் பெருமான் கோவிலினுள்ளே செல்ல, தெண்டாயுதபாணிப் பெருமான் திருக்குள மண்டபத்திலுள்ள தனது திருக்கோவிலை அடைவார்.

## மாம்பழத் திருவிழாவின் மகிமை

கலகம் விளைவிக்கும் நாரதரால் மாங்கனி யொன்று சிவபெருமானுக்குக் கிடைக்கப்பெற்றது. அதை விநாயகரும், முருகனும் விரும்பவே "உலகை யார் முதலில் வலம் வருகின்றனரோ அவருக்கே இப்பழம் உரியது" என்று பணித்தார். முருகப்பெருமான் மயில் வாகனத்திலேறிப் பறந்து செல்ல, விநாயகப்பெருமான் தாய், தந்தையரை மூன்று முறை வலம் வந்தார். பிள்ளையாருக்கே மாம்பழத்தைச் சிவபெருமான் கொடுத்தார். முருகன் களைத்துச் சிறிது நேரங் கழித்து வரவே, விநாயகர் மாங்கனி உண்பதைக் கண்டு சினங்கொண்டு, காரணங்கேட்க, காரணத்தை எம்பெருமான் கூறவே, அவர் கோபங் கொண்டவராக ஆண்டியானார்.

சிவபெருமான் முருகனது கோபத்தைத் தணித்து "முருகா நீ என்றும் பழம். பழம் நீ அப்பா" என்று கூறினார். இதனால் முருகனுக்குப் 'பழனி ஆண்டவன்' என்னும் நாமம் வழங்கலாயிற்று.

மாம்பழத் திருவிழாவன்று இரவு குதிரை வாகனத் திருவிழாவாகும். முருகப்பெருமான் நடுவிலே பெரிய இளஞ் சிவப்பு நிறக் குதிரையையும், வள்ளி, தெய்வானை அம்மன்மார்கள் மும்மூன்று குதிரைகளிலும் எழுந்தருளி வீதி வலம் வருவார்கள்.

## சப்பறத் திருவிழா

23ஆம் திருவிழா சப்பறத் திருவிழா வாகும். இத்தினத்தில் பகல் முருகன், வள்ளி, தெய்வானை

சமேதரராக ஒரே சாத்துப் படியில் பச்சை மயில் வாகனத்தில் எழுந்தருளி உள்வீதி வலம் வருவார். இரவு வேல் சாத்துப்படி மிகவும் பெரிய சாத்துப் படியாக அலங்காரம் செய்யப்படும். பெரிய படல் சப்பறத்தில் முருகன் வீதி வலம் வருவார். சப்பறத் திருவிழாவைக் கைலாயக் காட்சியென்றும் அதை ஒவ்வொருவரும் கட்டாயம் பார்த்துத் தரிசிக்க வேண்டுமென்றுங் கூறுவார்கள்.

## தேர்த் திருவிழா

24ஆம் திருவிழா தேர்த் திருவிழாவாகும். சண் முகப்பெருமான், வள்ளி, தெய்வானை சமேதரராகப் பட்டு வஸ்திரங்களினாலும், தங்க ஆபரணங்களினா லும், அலங்காரமாகவும், அழகாகவும் அலங்கரிக்கப் பட்டு மலர் மாலைகளும், மருக்கொழுந்து மாலை களும் அழகுக்கு அழகு செய்ய, வசந்த மண்ட பத்தில் வெள்ளியினாலமைக்கப்பட்ட சிங்காச னத்தில் எழுந்தருளியிருப்பார்.

அதிகாலை வசந்தமண்டபப் பூசை நடை பெற்று சண்முகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராகத் திருக்கோபுர வாசலை அடைந்து தேருக்கு எழுந்தருளிச் செல்வார். சண்முகப்பெரு மான் தேரிலே அடியார் புடைசூழ ஆனந்தக் காட்சி யுடன் அரோகரா என்ற ஒலியுடன் வீதி வலம் வருவார்.

தேர் மண்டபத்தை அடைந்ததும் சண்முகப் பெருமான் பச்சை ஆபரணங்களும், பச்சைப் பட்டு வஸ்திரங்களும், பச்சை மலர் மாலைகளும் அணிந்து பச்சைப் பசேலென்று காட்சியளிப்பார். மண்டபத்தில் விசேட பூசைகள், ஆராதனைகள் நடைபெற்று தேர் மண்டபத்தினின்றும் எழுந்தருளிச் செல்வார்.

சண்முகப்பெருமான் பச்சை வண்ணனாகப் பக்தர்கள் புடைசூழப் பக்தர்களின் இச்சையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் அந்த காலை வெய்யி லின் ஒளியில் மரகதத்தைப் போன்று தனியழகுடன் அந்த அழகன் முருகன் ஆடியாடி வரும் அழகான காட்சி கல் நெஞ்சத்தையும் உருக வைக்கும் கண் கொள்ளாக்காட்சியாக இருக்கும். இவ்வண் ணம் சண்முகப்பெருமான் ஆலயத்தை அடைவான்.

## தீர்த்தத் திருவிழா

25ஆம் திருவிழா தீர்த்தத் திருவிழாவாகும். அன்று பகல் பூசை அதிகாலை நடைபெறும். அதனை தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் கொடித் தம்பபூசையும் நடைபெறும். அன்றைய தினம் வெள்ளி மூஷிக வாகனத்தில் விநாயகப் பெருமானும், வெள்ளி மயில் வாகனத்தில் தெய் வானை அம்மனும், தங்கமயில் வாகனத்தில் முரு கப்பெருமானும், வெள்ளிஅன்ன வாகனத்தில் வள்ளியம்மனும், வெள்ளிரிஷப (இடபம்) வாகனத் தில் சண்டேசுவர மூர்த்தியும் எழுந்தருளித் பூங்கா மண்டபத்தை அடைந்து, அங்கு திருபூங்காகுளத்தில் அஸ்திர தேவருக்கு விசேட அபிஷேகம், பூசைகள் நடைபெற்று தீர்த்தம் பஞ்சமூர்த்திகளுக்கும் அளிக்க ப்படும். பின்னர் பஞ்சமூர்த்திகளுடன் அடியார்கள் புடைசூழ வீதி வலம் வந்து கோவிலையடைவர். மாலை கொடியிறக்கம் நடைபெறும். முருகன், வள்ளி, தெய்வானை ஒருங்கேயும் வீதிவலம் வருவார்கள். அதைத் தொடர்ந்து சண்டேசுவர மூர்த்தி வீதி வலம் வருவார்.

## பூங்காவனத் திருவிழா

26ம் திருவிழா பூங்காவனத் திருவிழாவாகும். மாலை வள்ளியம்மைக்கும், தெய்வானை அம்ம னுக்கும், முத்துக் குமாரசுவாமிக்கும் திருக்கல் யாணம் நடைபெறும். வள்ளியம்மை மாலை பூங்கா வனத்தில் தவம் இருக்க எழுந்தருளிச் செல்வார். பின்னர் விநாயகப்பெருமானும், முத்துக்குமார சுவாமிப் பெருமானும் பூங்காவனத்திற்குச் சென்று அங்கு முருகன் வள்ளியம்மைக்கு மாலை சூட்டி விசேட பூசைகள் நடைபெற்று வள்ளியையும் அழைத்துக் கொண்டு மூவரும் கோபுர வாசலைய டைய கோபுரவாசல் கதவு அடைக்கப்பட்டு உள்ளே தெய்வானை அம்மன் எழுந்தருளியி ருப்பார். கோவில் ஓதுவார் அவர்களால் தெய்வானை அம்மன் கேள்வி கேட்பது போல் பாடல்கள் பாடிப் பின்னர் கதவு திறக்கப்படும். வள்ளி, தெய்வ யானையுடன் முருகனுக்கு மண்டபத்தில் திருக்கல்யாணம் நடைபெறும். திருக்கல்யாணம் முடிந்த பின்பு சுவாமிகள் எழுந்தருளி வீதிவலம் வருவார்கள்.

## விசேஷ அமைப்புக்கள்

திருவிழாக் காலத்தில் நாட்டின் பல பாகங் களிலிருந்தும் எண்ணற்ற அடியார்கள் நல்லைக் கந்தனை நாடித் திரண்டு வருகிறார்கள். அவர்க ளுக்கு எதுவித இடையூறுகளும் ஏற்படா வண்ணம் கோவிலுக் கண்மையில் கோவிலை நோக்கி வரும்

பிரதான பாதைகளில் வாகனப் போக்குவரத்துத் தடைகளை விதித்து வருகின்றனர். சுகாதார வசதிகள், பாதுகாப்பு வசதிகள் முதலியவற்றை யாழ்ப்பாணம் மாநகரசபை செய்து வருகின்றது. மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு மாநகர உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொது அமைப்புக்கள் மக்கள் கூட்டத்தைக் கண்காணித்து ஆவன செய்து வருகின்றனர்.

தினந்தோறும் அடியார்கள் நல்லைக் கந்தனை நாடி வருகின்றபடியால் அவர்கள் தங்கள் விரதத்தைச் செலுத்தும் வகையில் அர்ச்சனைகளை இலகுவாகச் செய்யும் வண்ணம் ஆங்காங்கே ஒவ்வொரு சந்நிதானங்களுக்கும் வேண்டிய அர்ச்சகர்களை நியமித்து அடியார்களுக்கு வேண்டிய வசதிகளை நல்லூர்க் காவலரவர்கள் செய்துள்ளார்கள். இங்கு நடைபெறும் பூசைகளெல்லாம் காலந் தவறாமல் குறிப்பிட்ட நேரத்தில் நடைபெற்று வருகின்றது இதனால் அடியார்கள் அந்தந்த நேரங்களில் பூசைகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இங்ஙனம் எல்லா வசதிகளும் ஒருங்கே கொண்டதாய் அமைந்துள்ள நல்லைக்கந்தன் தினமும் எண்ணற்ற அடியார்களைத் தன்வசம் அழைத்து அருள்பாலிக்கின்றான். அந்த நல்லைக் கந்தனின் சிறப்புத்தான் என்னே?

## நல்லைக் காவலரின் சிறப்பு

தற்போதைய நல்லூர்க் காவலர் இ.குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள். இவர் கோவிலுக்காக அளப்பரிய தொண்டுக்களைச் செய்து வருகின்றார், செய்வித்துமிருக்கின்றார். விழாக் காலத்தில் எண்ணற்ற அடியார்கள் வருவதால் அவர்களின் இடநெருக்கடியைத் தவிர்க்கும் வண்ணம் கோவிலின் தெற்கு வீதியை அகலமாக்கியும், வசந்த மண்டபத்தையும் புதுப்பித்தும் அதற்கு நேராகவுள்ள தென்புற வீதியில் பெரிய வாசலையும் முத்துக்குமார சுவாமி கோவிலுக்கு நேரே ஒரு வாசலையும் அமைத்திருக்கின்றார். இதனால் அடியார்கள் வெளியில் நின்றும் பூசையைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஆறுமுகசுவாமி வாசலுக்கு ஒரு மூன்று மாடக் கோபுரத்தையும் அமைத்துள்ளார். கோவிலின் முன்புறம் இருந்த பழைய கொட்டகையும், மடம் முதலியனவற்றை அகற்றி அடியார்கள் எங்கு நின்றாலும் முருகன் வெளியில் வரும் காட்சியைக் காணக்கூடியதாக வசதிகள் செய்துள்ளார். தற்பொழுது கோவிலின் இராச கோபுரம் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. முன்புற மண்டபமும் புதிதாக அழகிய சிற்ப வேலைகளுடன் அமைக்கப்பட்டு இருக்கின்றது. அத்துடன் தற்போது நவீன மயப் படுத்தப்பட்ட மடப்பள்ளி மண்டபம் அமைக்கப் பட்டது ஒரு சிறப்பான அம்சமாகும். இப்படிப் பல தரப்பட்ட தொண்டுகளைச் செய்து முருகன் ஆலயத்தை மென்மேலும் சிறப்புற நடாத்தி வருகின்றார். இவருக்கும், இவர் குடும்பத்தினருக்கும் கந்தன் கருணை என்றென்றும் உரிமையுடையதாகும்.

ஒவ்வொரு மாதமும் முதல் நாள் சங்கிராந்தி தீர்த்தமும், கார்த்திகை உற்சவமும், சஷ்டி உற்சவமும் நடை பெறுகின்றது, சித்திரை மாதம் தொடக்கம் கந்தபுராணம் இங்கு படிக்கப்படுகின்றது.

கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை தினத்தில் கைலாச வாகனமும், வருடப் பிறப்பன்று மஞ்சமும் இழுக்கப்படும். ஐப்பசி மாதத்தில் கந்த சஷ்டித் திருவிழா நடைபெறுகின்றது. 6ஆம் நாள் சூரசங்கார உற்சவமும், மறுநாள் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும். கார்த்திகைச் சோமவாரங்களில் மாலையில் விசேட பூசையும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

நவராத்திரி காலத்தில் காலையிலும் மாலையிலும் மாலையில் வசந்தமண்டபத்தில் கும்பபூசை விசேடமாக நடைபெறும். திருவெம்பாவைக் காலத்தில் உதயத்தில் முருகப்பெருமானுக்கு விசேட பூசைகள் நடைபெற்று இறுதியில் திருவாதிரையன்று உற்சவம் காலை நடைபெறும். நவராத்திரிக் கடைசி நாளன்று மானம்பூ உற்சவம் காலை நடைபெறும்.

இவ்வண்ணம் இத்தனை சிறப்புக்களும் கொண்ட நல்லைக்கந்தன் எல்லோரும் வேண்டியதை வேண்டியவாறே ஈன்று அடியார்கள் மனதில் நிலையான இடத்தைப் பெற்றுக் கொண்டான்.

(நன்றி:- ஒளி 1972)

# ஓராண்டுப் பயணத்தில்...

- திரு இ.இரத்தினசிங்கம்

அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வருடாந்த மகோற்சவம் என்ற காரணத்தால் இயல்பாகவே யாழ்ப்பாண மாநகரசபை நல்லூர் உற்சவ ஏற்பாடுகளை மிக நீண்டகாலமாக ஆலய அறங்காவலரின் ஆலோசனையுடன் சிறப்பாக செயற்படுத்தி வருவது கண்கூடு.

மாநகரசபையின் வழமையான சேவைகளுடன் நல்லூரானின் மகோற்சவ ஏற்பாடுகள் ஆரம்பத்தில் நல்லூரை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதாயினும் சைவசமய விவகாரக்குழு தோற்றம் பெற்று படிப்படியாக தனது பணியை பரவலாக்கி தற்பொழுது யாழ் குடா நாடு முழுவதும் வியாபிப்பதற்கு முருகனின் திருவருளே காரணம் என்றால் வியப்பில்லை.




கடந்த 09.09.2004 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நல்லைக் குமரன் மலர் (12) வெளியீட்டு விழா நல்லை ஆதீன மண்டபத்தில் குழுவின் தலைவர் கலாநிதி க.குணராசா அவர்களின் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. நல்லைக் குமரன் மலரின் இடம்பெற்றிருந்த ஆக்கங்களின் அருமை பெருமைகளையும், நிறை குறைகளையும். ஆய்வு செய்து யா/இந்துக்கல்லூரி முன்னாள் உப அதிபர் திரு.க.சிவராமலிங்கம் அவர்கள் உரையாற்றினார்.

2003ம் ஆண்டு எமது குழுவினால் நடாத்தப்பட்ட 05 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த 20.11.2004 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் ஏறத்தாழ 1000 மாணவர்களுக்கு மேல் தோற்றியுள்ளமை எமது குழுவின் அர்த்தமுள்ள பணிக்குக் கிடைத்த அரிய வெற்றியாகும் என்றே கருதுகிறேன்

2004ம் ஆண்டுக்கான 05 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டிக்கான பரீட்சை வழமை போன்று வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் தீவகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 5 நிலையங்களில் கடந்த 26.12.2005 ஆம் திகதி நடாத்தப்பெற்று அதன் பெறுபேறுகள் விரைவில் வெளியாகவுள்ளன.

ஓய்வு பெற்றமை மற்றும் இடமாற்றம் போன்ற காரணங்களினால் நிர்வாக சபை உறுப்பினர் மற்றும் தலைவர் பதவிகளை விட்டகன்ற பின்வருவோரது அரிய பணிகளைக் கௌரவித்து குழுவின் சார்பாக நினைவுக் கேடயம் வழங்கித் தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

1. திரு. இ. இராமலிங்கம், தலைவர்.
2. திரு. க. கிருஷ்ணகுமார், நிர்வாக சபை உறுப்பினர்

எமது குழுவினது பணிகளையொத்த செயற்பாட்டினை முன்னெடுத்து வந்த இணை நிறுவனமான சைவ பரிபாலன சபையின் தலைவராகவும், பரீட்சைச் செயலாளராகவும் அரும் பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற சைவப்புலவர் திரு.வ.கந்தசாமி அவர்களது சேவையைக் கௌரவித்து குழுவின் சார்பாக பிரியாவிடை வைபவம் ஒன்று 08.04.2005 ஆம் திகதி சிறப்பாக நடாத்தப் பெற்றதோடு நினைவுக் கேடயமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.



இரண்டாவது கட்டமாக ஒப்பீட்டு ரீதியில் வருமானங்குன்றிய வறிய குடும்பங்களைச் சேர்ந்த பின்வரும் 06 மாணவர்களுக்கு 2005 ஆண்டு முதல் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை ரூபா 500 பெறுமதியான பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந் நடைமுறையை எதிர்காலத்தில் விரிவாக்குவது பற்றி அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்பட்டு சாதகமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

01. செல்வி மதுரா கணேசலிங்கம், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி
02. செல்வன் பத்மராஜா றோகீசன், யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம்
03. செல்வன் ரவிந்திரகுமார் டிலாஞ்சன், யா. நல்லூர் சென் பெனடிக்ற் றோ. க. பாடசாலை
04 செல்வி அர்ச்சனா குணரட்ணம், யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
05. செல்வி துவாரகா கோபால், யாழ் கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
06. செல்வி நிஷாந்தினி நடராசா, யாழ் கொழும்புத்துறை இந்த மகா வித்தியாலயம்

நல்லைக்குமரன் மலர் 13 ஆவது வெளியீடு வழமை போலன்றிச் சற்று மாறுபாடானதாகவும், அழகாகவும் அமைந்திருப்பதற்கு வரலாற்று ஆசிரியரும், முது பெரும்எழுத்தாளரும், அச்சிடும் கலையில் போதிய அனுபவமும் கொண்ட கலாநிதி.க.குணராசா அவர்கள் குழுவின் தலைவராகப் பணியாற்றுவதே பிரதான காரணமாகும்.

மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஆலயங்களினது படங்களும் அவைகள் பற்றிய சிறு முக்கிய குறிப்புக்களும் இம்மலரில் இடம்பெற்றிருப்பது சிறப்பானதொரு அம்சமாகும். சைவசமய விவகாரக்குழுவினது பணி மென் மேலும் வளர்ந்து ஒழுக்கமும் அமைதியும் பேணும் சமுதாயம் ஒன்று உருவாகி நாட்டில் சமாதானமும் சாந்தியும் நிலவவேண்டுமென நல்லைக் கந்தனின் தாள் பணிந்து இறைஞ்சுகின்றேன்.

# நல்லைக்குமரா.......

- திரு. சு. சோமசுந்தரம்

நல்லூரானின் வருடாந்த மஹோற்சவ காலங்களில் இடையறாது முகிழ்ந்து, முல்லையென நறுமணம் பரப்பி பலரதும் பாராட்டுக்களைப் பெற்று மக்கள் மத்தியில் நீங்கா இடம் பெற்று வெளிவரும் நல்லைக் குமரன் மலரினை வெளியிட்டுப் பெருமிதம் கொள்ளும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவின் பொருளாளராகத் தொடர்ந்து இவ்வருடமும் பணியாற்றக் கிடைத்தமை குமரன் திருவுளம் என்றே கருதுகிறேன்.

1993 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வெளிவரும் மலரின் வரிசையிலே இது 13 ஆவது மலர். இம்முறை நாடறிந்த மூத்த எழுத்தாளரும், சிறந்த நிர்வாகியும் காலத்தாலழியாத வரலாற்றாசிரியருமான கலாநிதி. க. குணராசா அவர்களின் தலைமையில் எமது குழுவின் செயற்பாடுகள் மறுமலர்ச்சி அடைந்துள்ளன என்றால் அது மிகையானதல்ல. இதுவரை காலமும் மலர்ந்த மலர்களிடையே இம்மலர் மகுடத்தாமரை. மலரின் வருகைக்கு பல விதத்திலும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் காலத்தால் பதிவு செய்யப்படவேண்டிய - அருகிய நிலையிலுள்ள வரலாற்றுக் கட்டுரைகளை மறு பிரசுரம் செய்வதற்காகத் தொகுத்து வழங்கியும் மலரில் இடம்பெறும் படங்களைத் தானே படம் பிடித்து வழங்கியும் மலரை மெருகூட்டிய பெருமை எமது தலைவரையே சாரும்.

எமது குழுவின் முதுகெலும்பாகவும் குழுவின் இயக்கத்திற்கு உயிர் மூச்சாகவும் இருந்து அனைவரையும் அன்பால் அரவணைத்து இனிய உளவாக எளியன பேசிக் குழுவின் அனைத்துச் செயற்பாடுகளையும் திறம்பட இயக்குகின்ற எமது குழுவின் செயலாளர் திரு. இ. இரத்தினசிங்கம் என்றும் போற்றுதலுக்குரியவர். அவரின்றி குழு இல்லை என்றே கூறலாம். மலர் வெளியீடாயினும் சரி சமய அறிவுப் போட்டியாயினும் சரி நேர காலத்துடன் முன்னேற்பாடுகளை ஆரம்பித்து எல்லோரையும் வழிநடாத்தும் அவரின் தனிப்பாங்கு வியந்து பாராட்டுதற்குரியது.

வறிய நிலையிலிருக்கும் கல்வி ஆர்வமிக்க மாநகர சபை எல்லைக்குள் உள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக நிதியுதவி வழங்கும் புனிதப் பணியை இவ்வாண்டு ஆரம்பித்துள்ளோம். அத்துடன் கடந்த ஆண்டு இன, மத, பால், வயது வேறுபாடின்றி உலகையே உலுக்கியெடுத்த கடலலையின் கோரத்தாண்டவத்திற்கு நிர்க்கதியானவர்களுக்கான சுனாமி நிவாரணப் பணியில் நாமும் காத்திரமான பங்களிப்பு நல்கியுள்ளோம்.

மேலும் இவ்வருடம் மலரின் வருகைக்கு பல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உறவுகளுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள். கடந்த காலத்தில் சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டிச் சாதனை படைத்து நிலைத்து நிற்கும் நிலையைத் தந்த நல்லூரானை உள்ளம் கசிந்து ஊனுருகி உயிர் பற்றிப் பணிகின்றேன்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானர்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனந்தும் காளா மணிவிளக்கே. -திருமந்திரம்-

# யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு – 2005



முன்வரிசை இடமிருந்து வலம்:-

திரு. இ. இரத்தினசிங்கம் (செயலாளர்) — கலாநிதி க. குணராசா (தலைவர்) — திரு. த. கனகசபை (விளம்பர அநுசரணையாளர்) — திரு. ந. விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்)

பின்வரிசை இடமிருந்து வலம்:-

திரு. நா. இரகுமார் (நிர்வாக சபை உறுப்பினர்) — திரு. து சோமசுந்தரம் (பொருளாளர்) — திரு. து. இராஜன் நிர்வாக சபை உறுப்பினர் — செல்வி கு. சிவநந்தினி (நிர்வாக சபை உறுப்பினர்) — திரு. ஞா. மோகன சுந்தரம் (நிர்வாக சபை உறுப்பினர்)

வருகைதராதோர்:- திரு. க. முகுந்தன் (நிர்வாக சபை உறுப்பினர்)

# நல்லைக் குமரன் மலர் - 2005





## மணங்கமழ பங்களித்த உங்களுக்கு எங்கள்
## உளங் கனிந்த நன்றிகள்

2005 ஆம் ஆண்டின் நல்லைக் குமரனின்
பதின்மூன்றாவது மலருக்கு ஆசிச் செய்திகளையும்
வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய ஆதீன முதல்வர்களுக்கும்
மற்றும் சைவப் பெரியோர்களுக்கும் ஆர்வமுடன் தமது ஆக்கங்களைத்
தந்துதவிய அறிஞர் பெருமக்களுக்கும் மலருக்கு விளம்பரங்களைப்
பெற்றுத் தந்த அனுசரணையாளருக்கும் எமது குழுவின் தற்போதைய
தலைவரது அனுபவத்தின் வெளிப்பாடாக இம் மலரில் வெளிவரும்
"மாநகர ஆலயங்கள்" எனும் தலைப்பிலான கட்டுரையில் இடம் பெற்றிருக்கும்
ஆலயங்களின் முகப்புத் தோற்றங்களைத் தாமே முன் நின்று அழகாக படம்
எடுத்த உதவியதோடு இம் மலரில் உள்ள ஆக்கங்கள் பலவற்றிற்குரிய
படங்களை தாமே வழங்கி உதவிய குழுவின் தலைவருக்கு விசேடமாக
நன்றி தெரிவிப்பது எமது தலையாய கடமை ஆகும். மலரை அழகுற
அச்சிட்டுத் தந்துதவிய **மதி கலர்ஸ்** அச்சகத்தாருக்கும்
மலர் மணங்கமழ பங்களித்த அன்புள்ளங்கள்
அனைவருக்கும் எமது உளங் கனிந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்ளுவதோடு நல்லைக் குமரனின் அருட்கடாட்சம்
அனைவருக்கும் கிடைக்க அவன் தாள் பணிந்து இறைஞ்சுகின்றோம்.





சைவசமய விவகாரக் குழு,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
29.08.2005.



# நல்லைக்குமரன்

## மலர் - 2005











யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற
சைவசமய விவகாரக்குழு

அச்சமைப்பு:- மதி கலர்ஸ் நல்லூர். 07/7 2 524

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 11 2330195.